சி. ஞானப்பிரகாசம்

தமிழக உள்ளாட்சி நிருவாகம்

UG
2943

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தமிழக உள்ளாட்சி நிருவாகம்

சி. ஞானப்பிரகாசம்

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பதிப்புரிமை
பதிப்புத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021

பதிப்பு எண் : 93 விலை : ரூ. 17-00

பதிப்பு விவரங்கள் :

1) ஆசிரியர் : டாக்டர் சி. ஞானப்பிரகாசம், விரிவுரையாளர், அரசியல் துறை, அஞ்சல்வழிக் கல்வித்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

(Dr. C. Gnanapragasam, Lecturer, Department of Political Science ICC & CE, Madurai Kamaraj University)

2) தலைப்பு : தமிழக உள்ளாட்சி நிருவாகம் (Local Government in Tamil Nadu)

3) பதிப்பு :

அ) இடம் : மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (Madurai Kamaraj University, Madurai-21)

ஆ) பதிப்பித்தோர் : பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
(Publications Division, Madurai Kamaraj University, Madurai - 21)

இ) ஆண்டு : 1986 — முதற் பதிப்பு

4) மொத்த பக்கங்கள் : 8 + 360

5) பொருள் : உள்ளாட்சி நிருவாகம்

6) அச்சும் அமைப்பும் : மணியம் பிரஸ், மதுரை-9.

அணிந்துரை

டாக்டர். சி. அ. பெருமாள், M.A., M.P.A., (S. calif) L. L. B., Ph. D.,

பேராசிரியர், துறைத் தலைவர்
அரசியல், ஆட்சியியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600005.

உள்ளாட்சி நிறுவனங்கள் தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் மக்களது வாழ்க்கையோடு இணைந்துள்ள ஓர் அம்சம் என்பதை நாம் நடைமுறையிலேயே காணலாம். இதற்குரிய தக்க ஆதாரங்கள் சங்ககால இலக்கியங்களிலும் சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களின் ஆட்சிமுறைகளிலும் காணப்படுகின்றன. உள்ளாட்சிகள் வாழ்க்கையோடு இணைந்துவிட்டவைகளாய் இருப்பதால் இவற்றைப் பற்றி நாம் அதிகமாக ஆராய்வது கிடையாது. அதே நேரத்தில் அந்த அம்சம் உண்மையிலேயே இணைந்து இருக்கிறதா? இல்லையா? என்று கூடத் தெரியாமல் இருப்பது மக்களாட்சிக்கு ஊறு. மக்களாட்சி மாண்புற வேண்டுமானால் மக்கள் தங்களது கடமைகளைச் சீராகச் செய்ய வேண்டும். அரசியல், நிருவாகம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதோடு அவற்றின் பங்கேற்புப் பணிகளையும் முறையாகச் செய்ய வேண்டும். மக்கள் தங்கள் அதிகாரங்களை எளிமையாகப் புரிந்து கொள்ளவும், அந்த அதிகாரங்களைத் தங்களது ஒட்டுமொத்த மேம்பாட்டிற்குப் பயன்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புக்கள் உதவுகின்றன. தவிர, அதிகாரங்களை ஆணவத்திற்கும், ஆக்கிரமிப்பிற்கும் உட்படுத்தாமல் மக்கள் தங்களது கட்டுக்கோப்பிற்குள் வைத்துக் கையாளக் கூடிய நிறுவனங்கள் இவை. இவை தான் அதிகாரப்பரவலின் விளைவுகள், இதற்காகத் தான் நம்மு-

டைய தலைவர்கள் குறிப்பாக மகாத்மா காந்தி அடிகள், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றோர் பாடுபட்டனர். இந்திய அரசியலமைப்பில் எல்லாக் கிராமங்களிலும் ஊராட்சிகள் அமைக்கப்பட வேண்டு மென்பது நமது அரசின் நெறிக் கொள்கைகளில் ஒன்றாகும். மக்கள் உள்ளாட்சி அமைப்புக்களில் விழிப்புணர்வோடு பங்கேற்றுச் செயல்பட்டால் தான் இந்நிறுவனங்களால் நன்மை செய்ய முடியும் என்பது கண்கூடு.

உள்ளாட்சி அமைப்புக்களின் தேவையைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்துவதும் ஒருவகையில் மக்களை உள்ளாட்சியில் பங்கேற்கத் தூண்டுமென்ற நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவை தோன்றிய முறை, வளர்ச்சி, செயல்படும் முறை, செயல்படுத்தும் பணிகள், அவை மாநில அரசாங்கத்தோடு எம்மாதிரியாக ஒத்துழைத்துச் செயல்படுகின்றன என்பன பற்றித் தெளிவாக விளக்குகின்றது இந்நூல். டாக்டர். சி ஞானப்பிரகாசம் இளைய தலைமுறையினருள் சிறந்த ஓர் அறிஞர். இவர் சில சிறந்த நூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளார். இப்போதும் அவரது முயற்சி எதிர்பார்த்த பயன் அளிக்கும் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை. அவரது முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

சென்னை, சி. அ. பெருமாள்
14.4.1986.

அணிந்துரை

டாக்டர். சி. அ. பெருமாள், M.A., M.P.A., (S. calif)
L. L. B, Ph. D.,

பேராசிரியர், துறைத் தலைவர்
அரசியல், ஆட்சியியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600005.

உள்ளாட்சி நிறுவனங்கள் தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் மக்களது வாழ்க்கையோடு இணைந்துள்ள ஓர் அம்சம் என்பதை நாம் நடைமுறையிலேயே காணலாம். இதற்குரிய தக்க ஆதாரங்கள் சங்ககால இலக்கியங்களிலும் சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களின் ஆட்சிமுறைகளிலும் காணப்படுகின்றன. உள்ளாட்சிகள் வாழ்க்கையோடு இணைந்துவிட்டவைகளாய் இருப்பதால் இவற்றைப் பற்றி நாம் அதிகமாக ஆராய்வது கிடையாது. அதே நேரத்தில் அந்த அம்சம் உண்மையிலேயே இணைந்து இருக்கிறதா? இல்லையா? என்று கூடத் தெரியாமல் இருப்பது மக்களாட்சிக்கு ஊறு. மக்களாட்சி மாண்புற வேண்டுமானால் மக்கள் தங்களது கடமைகளைச் சீராகச் செய்ய வேண்டும். அரசியல், நிருவாகம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதோடு அவற்றின் பங்கேற்புப் பணிகளையும் முறையாகச் செய்ய வேண்டும். மக்கள் தங்கள் அதிகாரங்களை எளிமையாகப் புரிந்து கொள்ளவும், அந்த அதிகாரங்களைத் தங்களது ஒட்டுமொத்த மேம்பாட்டிற்குப் பயன்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புக்கள் உதவுகின்றன. தவிர, அதிகாரங்களை ஆணவத்திற்கும், ஆக்கிரமிப்பிற்கும் உட்படுத்தாமல் மக்கள் தங்களது கட்டுக்கோப்பிற்குள் வைத்துக் கையாளக் கூடிய நிறுவனங்கள் இவை. இவை தான் அதிகாரப்பரவலின் விளைவுகள், இதற்காகத் தான் நம்மு-

டைய தலைவர்கள் குறிப்பாக மகாத்மா காந்தி அடிகள், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றோர் பாடுபட்டனர். இந்திய அரசியலமைப்பில் எல்லாக் கிராமங்களிலும் ஊராட்சிகள் அமைக்கப்பட வேண்டு மென்பது நமது அரசின் நெறிக் கொள்கைகளில் ஒன்றாகும். மக்கள் உள்ளாட்சி அமைப்புக்களில் விழிப்புணர்வோடு பங்கேற்றுச் செயல்பட்டால் தான் இந்நிறுவனங்களால் நன்மை செய்ய முடியும் என்பது கண்கூடு.

உள்ளாட்சி அமைப்புக்களின் தேவையைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்துவதும் ஒருவகையில் மக்களை உள்ளாட்சியில் பங்கேற்கத் தூண்டுமென்ற நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவை தோன்றிய முறை, வளர்ச்சி, செயல்படும் முறை, செயல்படுத்தும் பணிகள், அவை மாநில அரசாங்கத்தோடு எம்மாதிரியாக ஒத்துழைத்துச் செயல்படுகின்றன என்பன பற்றித் தெளிவாக விளக்குகின்றது இந்நூல். டாக்டர். சி ஞானப்பிரகாசம் இளைய தலைமுறையினருள் சிறந்த ஓர் அறிஞர். இவர் சில சிறந்த நூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளார். இப்போதும் அவரது முயற்சி எதிர்பார்த்த பயன் அளிக்கும் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை. அவரது முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

சென்னை, சி. அ. பெருமாள்
14.4.1986.

முன்னுரை

உள்ளாட்சி நிருவாகத்தைப் பற்றிப் பல நூல்கள் இருந்தாலும், தமிழக உள்ளாட்சி நிருவாகத்தைப் பற்றிய நூல்கள் அதிகமாக இல்லாததால் இந்நூலாக்கம் மேற்கொள்ளப்பட்டது. அரசியல் பாடத்தில் பட்டமேற்படிப்பும், இளங்கலையும் படிக்கும் மாணவர்களுக்கு இதுபோன்ற நூல்கள் அரிதாக இருப்பதால், அவர்களுக்கு உதவுமாறும், பொது மக்களும் உள்ளாட்சி நிருவாகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வகையிலும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்குமென்பதோடு, ஆய்வாளர் உள்ளிட்டு அனைவருக்கும் இந்நூல் பயன்படுமென்பது திண்ணம்.

இந்நூலைப் பதிப்பித்த மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறைக்கு ஆசிரியர் முதற்கண் நன்றி தெரிவிக்கின்றார். சென்னைப் பல்கலைக்கழக அரசியல், ஆட்சியியல் துறைத் தலைவரும் பேராசிரியருமான டாக்டர். சி. அ. பெருமாள் அவர்கள் இந்நூல் எழுத வழிகாட்டி ஊக்குவித்ததோடு அணிந்துரை வழங்கியும் உதவியுள்ளார். இவ்வுதவிகளுக்கு ஆசிரியர் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளார். இந்நூல் எழுத உதவி செய்த உள்ளாட்சி நிருவாக வல்லுநர், அரசியல் துறை விரிவுரையாளர் டாக்டர் தி. கல்யாணி அவர்கள் கருத்துக்களை கூறி, செம்மைப்படுத்தியதற்கு நன்றி. இந்நூலின் படியினைத்திருத்தி வெளிவர உதவிய தமிழ் இணைப் பேராசிரியர் டாக்டர். இரா. மோகன் அவர்களுக்கும் மணியம் அச்சகத்தாருக்கும் ஆசிரியர் நன்றி நவில்கின்றார்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

1.	ஊராட்சிகளின் வளர்ச்சி	1
2.	நகராட்சிகளின் வளர்ச்சி	11
3.	உள்ளாட்சி வாரியங்களின் வளர்ச்சி	19
4.	சென்னை மாநகராட்சியின் வரலாறு	40
5.	உள்ளாட்சிகள் அமைப்பு : ஊராட்சிகள்	65
6.	ஊராட்சி ஒன்றியங்கள்	78
7.	நகராட்சி அமைப்பு	86
8.	மாவட்ட வளர்ச்சி மன்றம்	99
9.	மாநகராட்சி	103
10.	பிற மாநிலங்களின் ஊராட்சி அமைப்பு	124
11.	பிற மாநிலங்களின் மாவட்ட அமைப்பு	136
12.	ஊராட்சித் தேர்தல் சீர்திருத்தங்கள்	143
13.	சமுதாய வளர்ச்சி	169
14.	சென்னை நகர அரசியல்	203
15.	தலைமை	213
16.	மேயர் தேர்தலும் மரபுகளும்	231
17.	உள்ளாட்சியில் குழுக்கள் செயல்படும் விதம்	270
18.	மேயர், ஆணையாளர் மற்றும் நிலைக்குழு	281
19	உள்ளாட்சிப் பணிகள்	293
20.	உள்ளாட்சிப் பணியாளர் குழாம் நிருவாகம்	309
21.	உள்ளாட்சி நிதி	326
22.	உள்ளாட்சி மீதான மாநில அரசாங்கக் கட்டுப்பாடுகள்	334
23.	நிறைவுரை	341

பிற்சேர்க்கை

அசோக் மேத்தா குழு அறிக்கை	349
தமிழக உள்ளாட்சித் தேர்தல்	356

1

ஊராட்சிகளின் வளர்ச்சி

தமிழகத்தின் ஊராட்சி நிருவாகமானது செம்மையாக நடைபெற்று வந்துள்ளதென்பதைச் சங்ககால நூல்கள் தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. 'மன்றம்', 'பொதியில்' ஆகிய சொற்கள் ஊராட்சி மன்றங்களைக் குறிப்பிடுவனவாக அமைந்துள்ளன. இம் மன்றமானது மாமரத்தடியிலும் பலாமரத்தடியிலும் மற்றும் ஊரின் நடுவிலேயும் நடைபெற்று வந்ததாகச் சங்கநூல்கள் தெரிவிக்கின்றன. மேலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவர் இருந்தார். இத்தலைவருக்கு உதவியாக ஊரவைகள் செயல்பட்டன. இவை போன்ற ஊரவைகள்தாம் இன்றைய அளவில் ஊராட்சி மன்றங்களாகச் செயல்பட்டு வருகின்றன. ஊரவை ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்படக் கூடியதாக இருந்தது. ஆனால் இன்று ஊராட்சி மன்றங்கள் பல கிராமங்களுக்குப் பொதுவாகவும் அமையப் பெற்றுள்ளன. உள்ளாட்சி நிருவாகமானது சீரிய முறையில் பல்லவர், சோழர், பாண்டியர்கள் காலத்தில் பின்பற்றப்பட்டது. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஆட்சி செலுத்திய போதும்கூட, ஊராட்சிகளின் சிறப்புத் தன்மையை அவை 'கிராமக் குடியரசு'களென விவரிக்கப் பட்டுள்ளதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. ஆங்கிலேய ஆட்சியில் ஊராட்சிகளுக்கு 1909 ஆம் ஆண்டு வரையிலும் சிறப்பான மதிப்பு அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இருப்பினும் உள்ளாட்சி வாரியங்களின் (Local Boards) அதிகாரத்திற்குட்பட்டு கிராம வாரியங்கள் (Rural Boards) செயல்பட்டன. பல கிராமங்கள் இணைந்து,

ஒன்றிய வாரியங்களாகச் (Union of Panchayat's) செயல்பட்டன. இவைதாம் பின்னர் முறைமையற்ற (informal) ஊராட்சிகளாக மதிக்கப்பட்டு, இன்றைய சட்டரீதியான ஊராட்சிகளாக (statutory) மலர்ந்துள்ளன.

இந்திய உள்ளாட்சி வளர்ச்சிக்கு ரிப்பன் பிரபுவின் கருத்துக் களும் ஊக்குவிப்பும் சிறப்பான துணை என்பதை அறிவோம். 1882ஆம் ஆண்டில் உள்ளாட்சி வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் எண்ணத்தில், அதிகாரிகளும், அதிகாரிகளல்லாதவர்களும் கொண்ட ஒரு குழுவை அரசாங்கம் அமைத்தது. இக்குழுவின் பரிந்துரையின் விளைவாக 1884ஆம் ஆண்டு உள்ளாட்சி வாரியச்சட்டமானது இயற்றப்பட்டது. இச்சட்டமானது கிராமத்தை ஒரு அடிப்படை அலகாக அங்கீகரித்து, நிருவாகம் செயல்பட வழிவகுத்தது. இது 3000மும் அதற்கு மேம் பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்திலும் கிராம ஒன்றியம் அமைத்துச் செயல்பட அதிகாரம் அளித்தது. 3000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் ஊராட்சி அமைக்க இச்சட்டம் அதிகாரம் அளித்தது. எனினும் இச்சட்டத்தில் வரிவிதிக்கும் அதி காரம் மிகவும் குறைவாக இருந்ததோடு, மிகுதியான கட்டுப்பாடு களையும் அரசாங்கம் வரையறுத்தது. கிராம ஒன்றியங்களும் அப் போது சிறப்பாகச் செயல்படவில்லை. ஏனெனில் கிராம ஒன்றி யங்களுக்கிடையே பலவித தகராறுகள் இருந்து வந்தன. கிராம ஒன்றிய அதிகார வரையறை எல்லையும் சரியாக நிருணயிக்கப் படாததால், கிராம ஒன்றியங்களுக்கிடையே பூசல்கள் இருந்தன. கிராம ஒன்றியங்கள் வரிவிதிப்பதற்குத் தயங்காமல், மிகுதியான அள வில் அவற்றின் அதிகாரத்திற்கேற்றவாறு வரிகள் விதித்தன. ஆனால் கிராம ஒன்றியங்கள் மக்களுக்குத் தேவையான வசதிகளை அதிகம் செய்யவில்லை. கிராம ஒன்றியங்கள் வரிவசூலிக்கும் செயலாண்மையாகவே இருந்த காரணத்தாலும், மக்களுக்கு வேண் டிய கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளைச் செய்யாத காரணத் தாலும் மக்கள் வரிகள் கட்டத் தயங்கினர். எனவே இந்த கிராம ஒன்றியங்கள் தொடர்ந்து செயல்படுமா? என்பது கேள்விக் குறி யாயிற்று.

பின்னர் அதிகாரப்பரவல் அரசுரிமை ஆணையத்தை 1909ஆம் ஆண்டு அரசாங்கம் ஏற்படுத்தியது. இந்த ஆணையம்தான் முதன்

முதலாக ஊராட்சிகளுக்கு முக்கியமளித்தது. இந்த ஆணையத்தின் பரிந்துரைகள் பற்றிச் சிறிது காண்போம். உள்ளூர் விவகாரங்களை நிருவகிப்பதற்குக் கிராமங்களில் கிராம ஊராட்சிகள் ஏற்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை கூறியது. கிராம ஊராட்சிகளின் தலைவர்கள், அக்கிராமங்களின் தலைவர்களாகப் பதவியின் தன்மையில் (ex-officio) இருக்க வேண்டும். மற்ற உறுப்பினர்கள் கிராம மக்களால் முறைமையில்லாத முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனவும் கூறியது. ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை சிறிய அளவில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். தவிர்க்கமுடியாத காரணத்தினால் மட்டுமே பல கிராமங்கள் ஒரு ஊராட்சியில் இருக்க வேண்டுமெனவும் பரிந்துரை கூறியது. ஊராட்சியின் பணிகள் சூழ்நிலைக் கேற்றவாறு, நடைமுறைக்கொத்த வகையில் தீர்மானிக்க வேண்டும். கீழ்கண்ட பணிகள் பொதுவாகச் செய்யக்கூடிய ஊராட்சிச் செயல்களாகும். அவை:

1. சிறிய குற்றவியல், அரசுத்துறைப்பிரிவு வழக்குகளை விசாரித்தல்
2. சிறு கிராம வேலைகளை நிறைவேற்றல்
3. கிராமப் பள்ளிகள், வீடுகள் ஆகியவற்றைக் கட்டுதல், பராமரித்தல், கிராமப்பள்ளிகளை மேல்நிருவாகம் செய்யக் குறைந்த அளவு பொதுமக்கள் கட்டுப்பாடுகள் விதித்தல்
4. சில குறிப்பிட்ட ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, அவ் ஊராட்சிகள் எரிபொருள், தீவனம் போன்றவற்றை மேல் நிருவகித்தல்.

ஊராட்சிகள் வரிவிதிக்காமல், வெற்றிகரமாகச் செயல்பட இயலாததால், கிராமப்புற வாரியங்கள் விதிக்கும் நிலவரியின் செஸ்ஸில் ஒரு பகுதியைக் கிராமங்கள் பெற வழி செய்யவேண்டும். கிராமங்களில் நடைபெறவிருக்கும் சிறப்புப் பணிகளுக்குச் சிறப்பு உதவித்தொகைகள் கொடுக்கவேண்டும் என ஆணையம் கூறியது. கிராமக் கால்நடைப் பட்டிகள், சந்தைகள் போன்றவற்றை மேல்நிருவாகம் செய்வதில் கிடைக்கும் நிதியும், சிறுவழக்குகளின் கட்டணங்களும் ஒருங்கே கிராம நிதியாகத் திரட்டவேண்டும். இந்த நிதியைப் பொதுவான வகையில் நிருவகிக்கவேண்டும். கட்டாயமான தணிக்கை வேண்டியதில்லை. கிராமங்களில் இந்தவித ஊராட்சி ஏற்படுத்தி

விட்டால், இயங்கிவரும் சுகாதாரக்குழு போன்ற செயற்கையான அமைப்புக்கள் தேவையில்லை. புதிய ஊராட்சிகள் ஏற்படுத்தவும், ஊராட்சியின் அதிகாரங்களைக் கூட்டவும், குறைக்கவும், ஊராட்சிகளைக் கலைக்கவும், கண்காணிக்கவும் மாவட்ட அதிகாரிகள் அதிகாரம் பெற்று இருக்கவேண்டும். ஊராட்சியின் கிராம அதிகாரிகள் குறைந்த வருமானம் உள்ளவர்களாக இருப்பதால், கையூட்டிற்கு இலக்காகின்றனர்; இது நீக்கப்படவேண்டும் என்பன 1909 ஆம் ஆண்டு அதிகாரப்பரவல் குறித்த அரசுரிமை ஆணையத்தின் முக்கிய பரிந்துரைகளாகும். இது ஹாப்ஹவுஸ் என்பவர் தலைமையில் நியமிக்கப்பட்டது. இந்த ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயலாக்கும்படியாக 1915ஆம் ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 3000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் ஒன்றியங்கள் ஏற்படுத்தலாமெனக் கூறியது. 3000க்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் முறைமையில்லா ஊராட்சிகள் ஏற்படுத்தலாமெனக் கூறியது. இவ்வாறு சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னரும், கிராம ஒன்றியங்களின் எண்ணிக்கையானது மிகுதியாக அதிகரிக்கவில்லை. 1916-17ஆம் ஆண்டில் கிராம ஒன்றியங்களின் எண்ணிக்கையானது 464 ஆக இருந்தது. இது 1920-21ஆம் ஆண்டில் 527ஆக உயர்ந்தது. ஆனால் கிராம ஒன்றியங்களின் அதிகாரங்கள் கட்டுப்பட்டேதான் இருந்தன. மாகாண அரசாங்கமும், உள்ளாட்சி வாரியமும் கிராம ஒன்றியங்களுக்கு நிதிவசதி அளிக்கவில்லை. எனவேதான் கிராம ஒன்றியங்கள் சரியாகச் செயல்படவில்லை.

பின்னர் மான்டேகு ஜேம்ஸ்போர்டின் 1919ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்தால் உள்ளாட்சியானது மாகாண அரசாங்கத்தின் பொறுப்பிற்கு வந்தது. 1919ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்களின் வகையில் 1920ஆம் ஆண்டு சென்னை கிராம ஊராட்சிச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தினால் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையானது மிகுதியாக அதிகரிக்கவில்லை. இருப்பினும் 1924-25ம் ஆண்டின் இறுதியில் ஊராட்சியின் எண்ணிக்கையானது 579ஆக உயர்ந்தது. இந்த நேரத்தில் ஊராட்சிகளின் தலைமைப்பதிவாளர் என்ற பதவியை அரசாங்கம் உருவாக்கி, முதன்முதல் ஊராட்சிகளின்

தலைமைப் பதிவாளராகத் திரு. கோபாலசாமி அய்யங்கார் நியமிக்கப் பட்டார். இவரது முயற்சியின் மூலமாக ஊராட்சிகளின் எண்ணிக் கையானது மிகுதியாக அதிகரித்தது. ஊராட்சிகளைக் கண்காணிக் கவும், ஆய்வு செய்யவும் தலைமைப் பதிவாளர் அதிகாரம் பெற்றிருந் தார். தவறாகச் செயல்படுகின்ற ஊராட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் நீக்க இவர் அதிகாரம் பெற்றிருந்தாலும், அவ்வதிகாரத்தைப் பயன்படுத்துவதை அரசாங்கம் விரும்பவில்லை. இவரது காலத்தை ஊராட்சிகளின் பொற்காலமென்றும் வருணிப்பர். ஏனெனில் 1924-25ம் ஆண்டில் 579 ஆக இருந்த ஊராட்சிகள் 1931-32ம் ஆண்டில் 4,479 ஆக உயர்ந்தன. வாக்களிக்கும் வயது வரம்பு 25 வயதாக 1920ம் ஆண்டுச்சட்டம் வரையறுத்தது. ஊராட்சி உறுப்பினர்களின் குறைந்த எண்ணிக்கை 7 ஆகவும் உயர்ந்த அளவு 15 ஆகவும் நிருணயிக்கப்பட்டன. சிறுபான்மை யோர்களுக்கு ஊராட்சியில் இடம் ஒதுக்கவில்லை. இதே மாதிரியாக கிராம அதிகாரிகளும் பதவியின் தன்மையில் உறுப்பினர்களாக இருக்க வழி செய்யப்படவில்லை. இதனால் ஏராளமான ஊராட்சிகள் அவற்றின் கூட்டங்களைக் கூடச் சரியாக நடத்தவில்லை. பல ஊராட்சிகள் பணியாளர்களைக் கூடக் கொண்டிருக்கவில்லை. சில ஊராட்சிகளில் ஊராட்சித் தலைவர்களே ஊராட்சிப் பணிகளைச் செய்தார்கள்.

அரசாங்கம் மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் சாலைகள், கிணறு, குளம் ஆகியன அமைக்கும் செலவில் பாதியை மானியமாகக் கொடுத்து, மக்களை ஊக்குவித்தது. இது 1925-26 லிருந்து ஆய்வாளர்கள் மூலம் செய்யப்பட்டது. 1920ம் ஆண்டுச்சட்டத் தினால் ஊராட்சிகளுக்கு ஏராளமான பணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் அவற்றைச் செய்வதற்குப் போதிய நிதி வசதி வழங்கப்பட வில்லை. ஏராளமான வரி வருவாய்கள் வழங்கப்படவேண்டுமெனக் கருத்துரைக்கப்பட்டாலும், கட்டாயமாக வரி வசூலிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆகவே ஊராட்சிகள் நிதிவசதி பெற்றிருக்க வில்லை. ஊராட்சிகளின் தலைமைப் பதிவாளர் ஊராட்சிகளைக் கண் காணித்தும் கட்டுப்படுத்தியும் வந்தார். ஊராட்சிகள் 1925-26 லிருந்து ஆய்வாளர்களால் மானியமளித்துச் செயல்கள் செய்ததால் ஏராளமான ஒழுங்கீனங்களும், கையாடல்களும் ஏற்பட்டன என்பதைத் தணிக்கை அறிக்கைகள் வெளியிட்டன. தவிர, தேர்தல்கள் நடைபெற்றதால்

மோதல்களும் ஏற்பட்டன; ஊராட்சியின் நிதிநிலையும் நலிவுற்றது. இந்நிலையில் சென்னை உள்ளாட்சி வாரியச் சட்டமானது 1930 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இது ஊராட்சியில் பல மாற்றங்களைச் செய்தது. ஊராட்சிகளின் தலைமைப் பதிவாளர் பதவி நீக்கப்பட்டது. அந்த இடத்தில் உள்ளாட்சி வாரிய, நகராட்சி மன்றங்களின் ஆய்வாளர் என ஒரு பதவி உருவாக்கப்பட்டது. இவருக்கு உதவியாக நான்கு துணை ஆணையாளர்கள் நியமிக்கப் பட்டனர். இதுதவிர்த்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அதிகாரி நியமிக்கப்பட்டார். ஊராட்சி அதிகாரிகளுக்குக் கீழ் துணை ஊராட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் உள்ளாட்சியைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தி வந்தனர். பின்னர் 1930ஆம் ஆண்டு உள்ளாட்சி வாரியச்சட்டத்தின்கீழ் 1930ம் ஆண்டு ஊராட்சிகளின் நிருவாகம் கொண்டுவரப்பட்டது.

1930ம் ஆண்டுச் சட்டம், ஊராட்சிகளின் பணிகளில் ஏதும் மாறுதல் செய்யவில்லை. தேர்தல் தகுதிகளிலும் மாற்றம் எதுவும் செய்யவில்லை. சட்டமன்ற, உள்ளாட்சி வாரியங்களில் போட்டியிட நிருணயித்த தகுதிகள் ஊராட்சிக்கும் பொருந்தக் கூடியதாகவே இருந்தன. ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையானது குறைந்தது 7 ஆகவும், உயர்ந்த அளவு 15 ஆகவும் இருந்தது. இவை 8 மற்றும் 16 ஆக உயர்த்தப்பட்டன. சிறுபான்மையோர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யச் சட்டம் வழிவகுத்தது. கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்டோர்கள் ஆகியோர்களுக்கு ஊராட்சியில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டன. ஊராட்சி திருப்திகரமாகச் செயல்பட வில்லையேல், ஊராட்சியைத் தள்ளிவைக்கக் (Supersede) கூடிய ஓர் அம்சமும் புதிதாகச் சேர்க்கப்பட்டது. தள்ளி வைக்கக்கூடிய கால அளவானது ஓராண்டும் அதற்கு மேற்பட்டும் எனவும் நிருணயிக்கப் பட்டது.

ஊராட்சிகளுக்குச் சிறிது அதிகமான வருவாயினங்களை 1930ஆம் ஆண்டுச் சட்டம் வழங்கியது. நிலத்தீர்வையானது ஆறில் ஒரு பங்கு ஊராட்சிக்கு அளிக்கப்பட்டது. பின்னர் வட்டவாரியங்கள் (Taluk boards) 1934ஆம் ஆண்டு கலைக்கப்பெற்றதால் நிலத்தீர்வையில் ஐந்தில் ஒரு பங்கு ஊராட்சிக்கென ஒதுக்கப்பட்டது. இது தவிர்த்து, வீட்டு வரி, விற்பனைவரி, தொழில்வரி, பயணியர்வரி (Pilgrim tax), விழா வரி

(festival tax), வண்டி நிலையவரி, சந்தைவரி, ஊர்தி நிலையவரி, மீன்பிடிப்பு வாடகைவரி, அபராதங்கள் முதலிய பல வரி வாய்ப்புக்கள் ஊராட்சிக்கு வழங்கப்பட்டன. கேளிக்கை வரி, முத்திரைத் தீர்வை, பதிவு மிகு வரி, உதவித்தொகைகள் ஆகிய வருவாய்களும் பின்னர் வழங்கப்பட்டன. உள்ளாட்சி வாரியத்தின் வருமானமானது மாவட்ட வாரியத்திலிருந்தும் ஊராட்சியிலிருந்தும் வரக்கூடியதாயிற்று. இது தவிர, வரிவிதிப்பில்லா வருவாய்களும் இருத்தன.

மாவட்ட வாரியங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி வாரியம் மற்றும் நகராட்சி மன்றங்களின் ஆய்வாளர்கள், மாவட்ட ஊராட்சி அதிகாரிகள் ஆகியோர் கிராம ஊராட்சிகளைக் கண்காணித்தும், கட்டுப்படுத்தியும் வந்தனர். ஆனால் நடைமுறையில் ஊராட்சிகள் சீராகக் கண்காணிக்கப்பட்டு வந்தன என்று கூற முடியாது. ஏனெனில் மாவட்ட வாரியம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகிய இருவரும் சேர்ந்து கண்காணிப்புச் செய்ததால், கட்டுப்பாடு செய்ததைவிடக் குழப்பம் அதிகமாயிற்று. இந்தவித இரட்டைக் கட்டுப்பாட்டிற்கு அதிகார வரையறை எல்லை சரியாக நிருணயிக்கவில்லை. ஊராட்சிகளின் வரவுசெலவுத் திட்டங்கள் எதுவும் இந்தக் கண்காணிப்பாளர்களால் சீராகப் பரிசீலிக்கப்படவில்லை. ஒவ்வொரு ஊராட்சியும் ஏராளமான தொகைகளைச் செலவழிக்காமல், அப்படியே எஞ்சிய தொகையாகக் காட்டின. ஊராட்சியின் பணிகள் எதுவும் ஒழுங்காக நடைபெறவில்லை. எனவே ஊராட்சி நிருவாகம் சீர்குலைந்தது. ஏனெனில் மாவட்ட ஊராட்சி அதிகாரி மிகுதியான பணி கொண்டவராக, அனைத்து ஊராட்சிகளையும் கண்காணிப்புச் செய்ய இயலாமலும் இருந்தார். இவருக்கு உதவியாக ஒன்று அல்லது இரண்டு ஊராட்சி அதிகாரிகளே இருந்ததால், இவர்களாலும் ஒழுங்காகக் கண்காணிக்க முடியவில்லை. ஒரு வருடத்தில் அனைத்து ஊராட்சிகளையும் கண்காணிப்புச் செய்வதென்பதும் இயலாத செயலாகவே இருந்தது. எனவே ஊராட்சியைச் சீராகக் கண்காணிக்க இரட்டைக் கட்டுப்பாடு முறையை நீக்கல், அதிகமான கண்காணிப்புப் பணியாளர்களை நியமித்தல் போன்றவற்றின் மூலம் தான் செய்யமுடியும் என்ற கருத்துக்கள் நிலவின.

பெரிய ஊராட்சிகளை உள்ளாட்சித் தணிக்கைத்துறை தணிக்கை செய்தது. சிறிய ஊராட்சிகளைப் பொறுத்தவரை, மாவட்ட ஊராட்சி அதிகாரிகள் தணிக்கை செய்தனர். ஆனால் ஊராட்சிகள்

தணிக்கையாளர்களின் பரிந்துரைகளைச் செயலாக்குவதற்கு ஆர்வம் காட்டவில்லை.

ஊராட்சிகள்மீது அரசாங்கத்தின் கட்டுப்பாடும், கண்காணிப்பும் தொடர்ந்து அதிகமாகவே இருந்துள்ளன. ஊராட்சிகள் அவற்றின் வரவு செலவுத் திட்டப்பிரதிகளை மாவட்ட வாரியத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், உள்ளாட்சி வாரிய ஆய்வாளருக்கும் அனுப்ப வேண்டும். மாவட்ட வாரியமும், மாவட்ட ஊராட்சி அலுவலரும் ஊராட்சிகளின் பல்வேறு வருவாய்களையும் செலவினங்களையும் சீராகப் பரிசீலனை செய்து வந்துள்ளனர். மாவட்ட ஊராட்சி அலுவலரும் துணைஊராட்சி அலுவலர்களும் ஊராட்சி வளர்ச்சி குறித்த அறிக்கையை உள்ளாட்சி வாரியங்களின் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். ஊராட்சிக் கூட்டங்களின் நடவடிக்கைகள் அனைத்தையும் பதிவு செய்து, மாவட்ட வாரியத்திற்குத் தெரிவிக்க வேண்டும். ஊராட்சிகள் சீராகச் செயல்படவில்லையேல் ஊராட்சிகளை ஓராண்டிற்குத் தள்ளிப் போடலாம். தேவையானால் ஓராண்டிற்கு மேலாக மற்றுமொரு ஆறுமாதங்களுக்கும் தள்ளிப் போடலாம். அச்சமயங்களில் ஊராட்சிகளின் நிருவாகமானது தனி அதிகாரிகளின் மூலமாக நிருவகிக்கப்படும். ஊராட்சிகளில் முறையான தணிக்கை முறை 1938ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இதனால் 1939 ஆம் ஆண்டில் 83 ஊராட்சிகள் கலைக்கப்பட்டன. பின்னர் ஊராட்சிகளின் எண்ணிக்கையானது 7000 ஆக உயர்ந்தது.

ஊராட்சி நிருவாகத்தைச் செம்மைப்படுத்தும் எண்ணத்தில் 1941 ஆம் ஆண்டு ஒரு சட்டவரைவு (Bill) தயாரிக்கப்பட்டது. இதில் கீழ்க்கண்ட பலவித அம்சங்கள் நிறைந்திருந்தன. அவை:

1) கிராமத் தலைவரை ஊராட்சியில் பதவியின் தன்மையில் உறுப்பினராக்கலாமா? அவரையே ஊராட்சித் தலைவராகவும் நியமிக்கலாமா?

2) பெரிய ஊராட்சிகளுக்கு முழு நேரச் செயலாக்க அதிகாரிகளையும், சிறிய நகராட்சிகளுக்குக் கிராமக் கர்ணத்தைப் பகுதி நேரச் செயலாக்க அதிகாரியாகவும் நியமிக்கலாமா?

3. மாவட்ட ஆட்சித்தலைவர் ஊராட்சிகளைக் கண்காணிப்பும் கட்டுப்பாடும் செய்யலாமா? அவருக்கு மேலாக வருவாய் வாரியம் ஒருங்கிணைப்புப் பாலமாகச் செயல்படலாமா?

4. நிலத்தீர்வைமீது கூடுதலாக மூன்று பைசாக்கள் விதிக்கலாமா? வீட்டுவரியைக் கட்டாய வரியாக்கலாமா?

5. நியமன ஊராட்சி ஏற்படுத்தலாமா?

மேற்கண்ட 5 அம்சங்கள் சட்ட வரைவில் இடம்பெற்று இருந்தன. இவற்றை ஆராய ஒரு குழுவானது நியமிக்கப்பட்டது. இக்குழு சீராக சட்டவரைவை ஆய்ந்து, கீழ்க்கண்ட பரிந்துரைகளை செய்தது. அவை:

1. ஊராட்சி நிருவாகத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் விலகிச் செல்லவேண்டும்.

2. வருவாய் வாரியம் ஊராட்சிக்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. ஊராட்சியில் தலைமைப்பதிவாளர் பதவியை உருவாக்கலாம்.

3. எல்லாக் கிராமங்களிலும் ஐந்தாண்டிற்குள் கட்டாயமாக ஊராட்சிகள் ஏற்படுத்த வேண்டும்.

4. ஊராட்சி நிருவாகத்திலிருந்து கிராம அதிகாரிகள் விலகிச்செல்ல வேண்டும், ஊராட்சித் தலைவர் இல்லாத நேரங்களில் தற்காலிகமாகக் கிராமத்தலைவர் தற்காலிக ஊராட்சித் தலைவராகச் செயல்படலாம்.

5. 21 வயது நிரம்பிய ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கவேண்டும். ஊராட்சியைப் பல பிரிவுகளாகப் பிரித்து, வாக்கெடுப்பு மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

6. ரூ 5000மும் அதற்கு மேற்பட்ட வருமானமும் உள்ள ஊராட்சிகள் மட்டுமே முழுநேர ஊதியம்பெறும் செயலாக்க அதிகாரிகளைக் கொண்டிருக்கவேண்டும்.

7 வீட்டுவரி, வாகனவரி ஆகியவை கட்டாய வரியாக இருக்க வேண்டும். முன்மொழியப்பட்ட மூன்று பைசா நிலத்தீர்வை மீது விதிப்பது விருப்ப வரியாகவே இருக்கவேண்டும்.

8. நியமன ஊராட்சியை உருவாக்கக் கூடாது.

சென்னை உள்ளாட்சி வாரியங்களின் 1920ஆம் ஆண்டுச் சட்டமானது அரசின் வரைவைச் சட்டமாக்கத் திருத்தப்படவேண்டியதாகியது. அதன்படி 1943ம் ஆண்டு XIX சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் பெரிய ஊராட்சிகள் அனைத்திலும் முழுநேரச் செயலாக்க அதிகாரிகள் நியமிக்க வழி வகுத்தது. அதன் பின்னர் 1946 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னை கிராம ஊராட்சிகளின் சட்டமானது மேற்படி சட்டவரைவில் சில மாற்றங்களைச் செய்தது. முதலாவது மாற்றமானது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊராட்சிகளை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். 1941ஆம் ஆண்டுச் சட்டவரைவில், மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் ஊராட்சிக்கும் தொடர்பு இல்லாமல் செய்ய வேண்டும் என்றும், கண்காணிப்பும், கட்டுப்பாடும் ஊராட்சிகளின் தலைமைப்பதிவாளர் செய்யவேண்டுமெனவும் கூறியிருந்தது. கிராமத் தலைவரைப் பதவியின் தன்மையில் உறுப்பினராக்குவதும், தற்காலிகத் தலைவராகத் தலைவர் இல்லாத சமயங்களில் செய்யலா, மென்பதுவும் நீக்கப்பட்டன. முழுநேரச் செயலாக்க அதிகாரிகள் ஊராட்சிகளுக்கு நியமிக்கப்படவேண்டுமென்பது புதிய சட்டத்தில் இடம் பெற்றது. ஆனால் இச்சட்டமானது செயலாக்கப்பட்டதெனக் கூற முடியாது. ஏனெனில் காங்கிரசு அரசாங்கம் இதனைக்கொண்டுவர வேண்டுமென முழுமையாக முயற்சி செய்தும் இயலவில்லை. மேலும் 1939ஆம் ஆண்டிற்குப் பின்னர் தேர்தல்களும் நடைபெறவில்லை.

1947ம் ஆண்டில் எடுத்த கணிப்பின்படி, சென்னை உள்ளாட்சி வாரியங்களின் 1930ம் ஆண்டுச் சட்டம்தான் ஊராட்சிகளை நிருவகித்துள்ளது. ஆனால் சில பழைமையான ஊராட்சிகள் மட்டும் தாம் செயல்பட்டு வந்தன. மற்ற ஊராட்சிகள் செயல்படவே இல்லை. தேர்தல்களும் நடக்கவில்லை. ஆகவே இச்சட்டத்தினால் அதிகப் பயன்பாடு கிடைத்ததெனக் கூறமுடியாது. ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து, 1946ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது. அப்போது சட்டமன்றம் கலைக்கப்பட்ட காரணத்தால், இச்சட்டம் செயலுக்கு வரவில்லை. பின்னர் 1950 ஆம் ஆண்டு இச்சட்டம் செயலுக்கு வந்தது. அதுதான் இன்றைய ஊராட்சிகளின் சட்டமாகும்,

2

நகராட்சிகளின் வளர்ச்சி

தமிழகத்தில் நகராட்சி நிருவாகமானது 1842ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. பொதுமக்கள் தாங்களே வரிகள் விதித்து, அவற்றை வசூலித்து, அவர்களது பொதுச் சுகாதாரம் மற்றும் பிற வசதிகளைச் செம்மையாகச் செய்து கொள்ள 1842ஆம் ஆண்டுச்சட்டம் வசதி செய்து கொடுத்தது. இதனைப் பொதுமக்கள் அவ்வளவாக வரவேற்காவிட்டாலும், எதிர்க்கவில்லை. முதன்முதல் நகராட்சி சேலத்தில் 1842ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இதற்குப் பின்னர் 1842ஆம் ஆண்டுச் சட்டத்தில் வரையறுத்திருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, புதிய சட்டம் 1850ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. நகராட்சிகளை ஏற்படுத்தி அவற்றை மக்களே நடத்த வேண்டுமென்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. வரி விதிப்பது, வரிகள் போன்றவற்றை மக்கள்தாம் முடிவு செய்ய வேண்டுமென அரசாங்கம் கூறியது. நகராட்சிகளை மாவட்டங்களில் ஏற்படுத்த லாமா? அவற்றை மக்கள் வரவேற்கிறார்களா? என்ற கருத்தை அறியும்படி மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு ஆணை பிறப்பித்து, அறிக்கைகள் தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டது அரசாங்கம். நகராட்சிகளை அமைக்க ஏராளமான எதிர்ப்புக்கள் உள்ளதெனப் பெரும்பான்மையான மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகள் கூறின. திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் மக்கள் பொதுவாக விரும்பினாலும், சட்டத்தைச் செயல்படுத்தும்போது

ஏராளமான எதிர்ப்புகளும் கலவரங்களும் தோன்றின. வேலூரில்1854 ஆம் ஆண்டு நகராட்சி அமைக்க முயன்றபோது மக்கள் கொந்தளிக்கத் தொடங்கவே சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க இராணுவம் தேவைப் பட்டது.

நகராட்சிகளை அமைக்க மக்கள் விரும்பவில்லையென்பதற்குப் பல காரணங்கள் இருந்தன. மக்கள் அரசாங்கத்தில் அதிருப்தி கொண்ட நேரத்தில், இம்முயற்சியை சந்தேகக் கண்ணோடு பார்த் தனர். மேலும் நகரங்களில் மக்களால் நடத்தப்பெற்றுவந்த நகராண்மை அமைப்புக்களுக்கு அதிக முக்கியத்துவத்தை அரசாங்கம் இயற்கையாகவே கொடுக்கவில்லை. அரசாங்கமே சில நிர்வாகி களைத் (ஆணையாளர்கள்) தேர்ந்தெடுத்து நியமித்ததால் மக்களிடை யே உள்ள ஒற்றுமையும் சிதறலாயிற்று. இச்சூழ்நிலையில் பணிகளைச் செம்மையாகச் செய்யும்வண்ணம் 1865ம் ஆண்டில் நகர வளர்ச்சி சட்டம் இயற்றப்பட்டது. காவல் செலவுகளை நகராட்சிகளிடமிருந்து பெறவே அரசாங்கம் இச்சட்டத்தைக் கொண்டு வந்தது. காவல் செலவுகள் முழுவதையும் நகராட்சியானது ஏற்றுக்கொண்டால் அதிகச் சிரமம் ஏற்படுமென்று, 25விழுக்காடு மானியத்தை அளிக்க அரசாங்கம் ஒத்துக்கொண்டது. தெரு விளக்கிடல், தீயணைப்பு, குடிநீர் போன்ற வற்றிற்குத் தனியே நிதிகள் திரட்ட நகராட்சிகள் அதிகாரம் பெற்றன. ஆனால் நகராட்சிகள் திரட்டவேண்டிய நிதியின் அளவை அரசாங்கமே வரையறை செய்தது. அக்குறிப்பிட்ட நிதியை நகராட்சி கள் வசூலிக்கவேண்டும் என்று அரசாங்கம் கட்டாயப்படுத்தியது. ஆகவே நகராட்சிகள் தன்னிச்சையாகச் செயல்படக்கூடிய அதி காரங்கள் குறைந்து அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் அதிகரித் தன. மதுரை நகராட்சி இந்நேரத்தில், 1866ஆம் ஆண்டு நவம்பர் மாதம்அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் சுமார் 41 நகராட்சிகள் 1867, 1868 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் குடிநீர், தெரு விளக்கு, சுகாதாரம் போன்ற பணிகளில் ஆர்வம் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நேரத்தில் நிதியானது மாநிலங்களுக்கும் பகிர்ந் தளிக்கவேண்டுமென்ற மாயோ பிரபுவின் தீர்மானத்தால், போதுமான நிதிஆதாரங்கள் நகராட்சிகளுக்குக் கிட்டியது. 1860ம் ஆண்டிலிருந்தே சாலைகள், போக்குவரத்துக்கள் போன்றவற்றைச் செம்மையாகச் செய்யமுடியவில்லை என்ற குற்றச்சாட்டிற்குப் பதிலிறுக்கும் வகையில்

அப்போதிருந்த குறைந்த அளவு வருமானத்தால் செம்மையாகக் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சாலைகள் போன்ற பணிகளைச் செம்மையாகச் செய்ய முடியுமென்பதை உணர்த்தியது மாயோ பிரபுவின் தீர்மானம். இரண்டாவதாக, இந்தியர்களும் ஐரோப்பியர்களும் இதற்குமுன் இல்லாத வகையில் நகராட்சி நடவடிக்கைகளில் அதிகமான அக்கறை எடுத்தார்கள். நகராட்சிகளின் வருமானம் அதிகரித்தது.

மாயோ பிரபுவின் 1870 ஆண்டுத் தீர்மானமானது ஓரளவு வெற்றி பெற்றதாயினும் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெற்றதெனக் கூற முடியாது. இருப்பினும் உள்ளூர் வரிகள், நிலுவை போன்றவற்றால் வருமானம் அதிகரித்தது. வருமானத்தை மேல் நிருவாகம் செய்யும் பொறுப்பினைச் சில மாநிலங்கள் உள்ளாட்சியிடமே ஒப்படைத்தன. நகராட்சிகள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டு, கல்வி, போக்குவரத்து, கிராமப்புறச் சுகாதாரம் போன்றவற்றை நடத்தும் பொறுப்புக்களைப் பெற்றன, ஏராளமான மாநிலங்களில் உள்ளாட்சி நிறுவனங்கள் பல்வேறு மாதிரியாக இருந்ததால் சமத்துவமின்மை ஏற்படலாயிற்று. இவ்வாறாக மாயோவின் தீர்மானமானது செயலுக்கு வந்தது. இதற்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கவை ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்கள் எனலாம். உள்ளாட்சி நிறுவனங்களின் அடிப்படை உரிமைச் சாசனமென ரிப்பன் பிரபுவின் தீர்மானம் கருதப்பட்டு வருகின்றது.

தற்கால இந்தியாவில் ரிப்பன் பிரபு உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை எனக் கருதப்பட்டு வருகிறார். மக்களாட்சி மற்றும் சுதந்திரம் ஆகிய கோட்பாடுகள் மலர்ந்த பின்னர், மக்கள் நிருவாகத்தில் பங்கு கேட்க முனைந்தனர். ரிப்பன் பிரபுவும் அவர்களது கோரிக்கைகளை நிராகரிக்க விரும்பவில்லை. இருப்பினும், மத்திய, மாநில அரசாங்கங்களில் பங்கு பெறுவதற்குரிய பக்குவத்தை இன்னும் இந்தியர்கள் பெறவில்லை என்ற காரணத்திற்காக, உள்ளாட்சி நிறுவனங்களின் மூலமாகப் பயிற்சி அளித்து இந்தியர்களைப் பக்குவப் படுத்தவேண்டுமென அவர் எண்ணினார். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் உள்ளாட்சி நிறுவனங்களை நிருவகிக்க வேண்டுமென்றும், உள்ளாட்சிகள் உண்மையான அதிகாரம் வாய்ந்தவையாக இருக்கவேண்டுமெனவும் தீர்மானித்து அரசாங்கம் உள்ளாட்சியைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் குறைக்கவும் எண்ணினார். எனவேதான் 1882ஆம் ஆண்டுத் தீர்மானம்

அரசாங்க நிருவாகிகளின் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த ஆரம்பம்தான் உள்ளாட்சி அமைப்புக்களில் மக்களாட்சி பலப்பட வழிகோலியது. இதற்குப்பின்னர் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் இதனைச் சார்ந்து இருப்பதால், இதுதான் அவற்றிற்கெல்லாம் அடிப்படையெனக் கருதப்படுகிறது.

சென்னை மாநிலத்தில் ரிப்பன் பிரபுவின் தீர்மானத்திற்கு ஏற்ப, ஒரு குழுவானது 1882ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக் குழுவின் பரிந்துரையின்படி, சென்னை மாவட்ட நகராட்சிகளின் நான்காவது சட்டம் 1884ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது இச் சட்டம் நிறைவேறியதும், 1871 ஆம் ஆண்டு நகர வளர்ச்சிச் சட்டம் முடிந்தது. 'நகராட்சி' என்ற சொல்லை முதன்முதலாக 1884ஆம் ஆண்டுச் சட்டம் பயன்படுத்தியது. இதற்கு முன்னதாக நகர வளர்ச்சிச் சட்டம் என்று தான் அழைக்கப்பட்டது. இதேபோல், நகர்மன்றம், நகர்மன்ற உறுப்பினர்கள் என்ற சொற்களும், ஆணையம் மற்றும் ஆணையாளர்கள் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப் பட்டன. இச்சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர், நகராட்சிகளின் தலைவராக இருப்பது நீக்கப்பட்டது. நகராட்சித் தலைவர்கள் நியமனம் செய்யப்படலாம் அல்லது அரசாங்கம் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கலாமெனக் கருதினால், அரசாங்கத்தின் அனுமதியோடு மன்றம் தேர்ந்தெடுக்கலாம் எனவும், மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 12க்குக் குறைவாக இல்லாமலும், அதில் $\frac{2}{3}$ பங்கு உறுப்பினர்கள் வரிசெலுத்தும் மக்களால் தேர்ந்தெடுக்க வேண்டுமெனவும் கூறியது. மதுரை மாநகராட்சியில் 24 உறுப்பினர்கள் கொண்டதாக மன்றம் அமைந்தது. அதில் 18 உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது தவிர்த்து, நகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் சிறப்புரிமை 1885ஆம் ஆண்டு மதுரை நகராட்சிக்கு அளிக்கப்பட்டது. எனவே 1885ஆம் ஆண்டிலிருந்து மதுரை நகராட்சி தனது தலைவரைத் தேர்ந்தெடுத்து வந்துள்ளது.

உள்ளாட்சி வளர்ச்சிக்காக அரசுரிமை ஆணையம் நியமிக்கப் பட்டது. இது நகராட்சிகளையும் ஆய்ந்தது. இது தனது அறிக்கையில் நகராட்சிகள் குறித்துக் கூறிய பரிந்துரைகளாவன: சிறிய நகராட்சிகள் நகராட்சிப் பணிகளைச் செய்யக்கூடிய தகுதிகள் நிறையப் பெற்றவை

களாக இல்லை. ஆகவே இந்நகராட்சிகளை (Union of Panchayats) ஊராட்சிகளின் ஒன்றியம் மாதிரியாக அமைத்து, அவற்றை நகர ஊராட்சிகள் என அழைக்கலாமெனக் கூறியுள்ளது. உள்ளாட்சி வாரியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போல் நகராட்சிகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அரசாங்கத்திடமிருந்து முறையாக நிரந்தர உதவித்தொகைகள் நகராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தவில்லை. எனினும் குடிநீர், கழிவுநீர் அகற்றல் போன்ற பெரிய திட்டங்களுக்கு அரசாங்கம் உதவிகளைச் செய்யவேண்டும். சில நகராட்சிகள் நிதியில் நலிந்த நிலையில் உள்ளதால், அவற்றின் பொதுநோக்கங்களை நிறைவேற்ற மானியங்களை அரசாங்கம் அளிக்கவேண்டும். நகராட்சியின் எல்லைக்குள் வரிவிதிக்க முழு அதிகாரம் கொண்டிருக்கவேண்டும். நகராட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மிகுதியாக இருக்கவேண்டும்; இவர்கள் தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்தல்களில் அரசாங்க அதிகாரிகள் போட்டியிடக் கூடாது. நியமனம் தேவைப்பட்டால் மட்டுமே அதிகாரிகளை நியமிக்க வேண்டும். ஆட்சித்துறையைக் கவனித்துக் கொள்ள முழு நேர நியமன அதிகாரி நியமிக்கப்படவேண்டும். இவர் நகராட்சி மன்றக் கட்டுப்பாட்டிற்குள்ளும், நிலைக்குழுக்களின் கட்டுப்பாட்டிற்குள்ளும் நின்று செயல்படவேண்டும். இவை சில முக்கியமான பரிந்துரைகளாகும்.

அதிகாரப் பரவல் மீதான அரசுரிமை ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயலாக்க அரசாங்கம் மிகுந்த காலத்தை எடுத்துக் கொண்டது. 1909 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட அறிக்கையினை 1915 ஆம் ஆண்டில்தான் அரசாங்கம் ஆய்வுக்கு எடுத்துத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானமானது அனைவரையும் அதிருப்திக்குள்ளாக்கியது ஏனெனில் முக்கியமான பரிந்துரைகள் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. நகராட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மிகுதியாக இருக்கவேண்டுமென்ற பரிந்துரையும், தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற பரிந்துரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இருப்பினும் அவற்றைச் செயல்படுத்த மிகவும் கவனம் தேவையென அரசாங்கம் எச்சரித்தது. எனவே இத்தீர்மானம் சென்னை மாநிலத்தில் படித்தவர்களிடம்

நல்லாதரவு பெறவில்லை. இத்தீர்மானம் முன்னேற்றத்தைக் கருதி எடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது. இதற்கிடையே முதல் உலகப் போர் தோன்றியதால், மக்களிடையே புதுவிதக் கருத்துக்கள் தோன்றலாயின. சுயராஜ்யம் மற்றும் உள்முறை ஆட்சி (Home Rule) போன்ற கோரிக்கைகள் மக்களிடையே ஆழமாக வேரூன்ற தொடங்கி விட்டன. ஆங்கிலேய அரசாங்கமும் இச்சூழ் நிலையை உணர்ந்தது. பொறுப்புள்ள அரசாங்கம் ஏற்படுத்தி, அதனை மக்களே முழுமையாக ஏற்று நடத்தவேண்டும் என்ற எண்ணத்தால் ஆங்கிலேய அரசாங்கம் - 1918ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

மாவட்ட நகராட்சிகளின் சட்டவரைவை ஆராய 1916ம் ஆண்டு ஒரு தனி அதிகாரியைச் சென்னை அரசாங்கம் நியமித்தது. என்னென்ன சீர்திருத்தங்கள் கொண்டு வரலாமென்பதை அறிந்து, சட்டவரைவு உருவாக்கும்படி அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்; பின்னர் நகராட்சி யில் அதிகாரிகளையும், பொதுமக்களையும் கொண்ட ஒரு குழுவினால் அச்சட்டவரைவை ஆராயும்படி கேட்டுக்கொள்ளப் பட்டது. இச் சட்டவரைவு 1915ஆம் ஆண்டுத் தீர்மானத்தின்படி வரைய முயற் சிக்கப்பட்டாலும், 1918ஆம் ஆண்டுத் தீர்மானமும் வெளிவந்து விட்டபடியால், 1918 ஆம் ஆண்டுத் தீர்மானத்திற்கேற்றபடியும் சட்டவரைவு வரையப்பட்டது. இதன் விளைவாகச் சென்னை மாவட்ட நகராட்சிகளின் 5வது பிரிவு 1920ஆம் ஆண்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையையும், நகராட்சியின் அதிகாரத்தையும் அதிகப் படுத்தியது. தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாமல் இருக்க வேண்டுமெனக் கூறியது. ஏனைய ஒரு பங்கு உறுப்பினர்கள் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படக் கூடியவர்கள் ஆவர். நகராட்சி மன்றத்தின் கூடுதல் உறுப்பினர் எண்ணிக்கை 36 ஆக நிருணயிக்கப்பட்டது. இது, ஒரு இலட்சம் மக்களுக்கு மிகுதியாக இருக்கக் கூடிய நகரங்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதெனவும் கூறியது. இச்சட்டம் நகராட்சி மன்றம் சொத்துவரி, கம்பெனிகள் மீதான வரி, தொழில் வரி, வாகன வரி, மற்றும் பிற வரிகள் விதிக்க அதிகாரமளித்தது. வரி

மாற்றம் செய்யும் அதிகாரத்தை நகராட்சி மன்றம் பெற்றது. நகராட்சி நிதிகளைத் தணிக்கை செய்யத் தணிக்கையாளர்களை அரசாங்கம் நியமித்தது. இவ்வாறாகப் பல அதிகாரங்களை இச்சட்டம் நகராட்சிகளுக்கு வழங்கியது. உள்ளாட்சி அரசாங்கத்திற்குப் பொறுப்பாக ஓர் அமைச்சர் சட்டமன்றத்தில் இடம்பெற்றார். மாநில அரசியலும் உள்ளாட்சி அரசியலும் ஒன்று சேர்ந்ததால் உள்ளாட்சி அமைச்சர் கண்டனத்திற்குள்ளானர். பின்னர் இச்சட்டம் 1930-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. இதன்படி நியமன முறை நீக்கப்பட்டது. சிறுபான்மை இனங்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. வரி செலுத்துவோர் அனைவரும் வாக்குரிமையைப் பயன்படுத்தும் வகையில் சட்டம் திருத்தப்பட்டது.

உள்ளாட்சியினால் மக்கள் நிருவாகப் பயிற்சியையும் சிறப்பாகச் செயல்படும் தன்மையையும் பெற்றுள்ளனர் என்பதை அனைத்து நாடுகளும் மெய்ப்பித்துள்ளன. உள்ளாட்சியில் நகரங்கள் மாறுபட்டு, வித்தியாசமாக, ஒவ்வொரு நகரமும் தனிப்பட்ட சிக்கல்களைக் கொண்டு விளங்குவதால், அந்நகரங்களை நிருவகிக்கத் தன்னிச்சை அதிகாரங்கள் நகராட்சிகளுக்கு வழங்க வேண்டுமென்பது இன்று ஏற்கப்பட்டுள்ள கருத்தாகும். ஆனால் இந்தியாவில் 1930-ஆம் ஆண்டுச் சட்டத்திருத்தம் நகராட்சிகளது அதிகாரத்தைப் பறித்தது. நகராட்சிகள் 1933-ஆம் ஆண்டு வரையிலும் அனுபவித்து வந்த சிறிய அதிகாரங்கள் கூடப் பறிக்கப்பட்டதென அனைத்து நகராட்சிகளும், நகராட்சித் தலைவர்களும் அதிருப்தி கொண்டனர். நகராட்சிகள் அதிக அதிகாரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் 1930-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தம் பேரிடியாயிற்று. எனவே இந்த அதிருப்தியைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கைகள் எடுத்தால் தான் நகராட்சி நிருவாகம் செம்மையாகுமென்ற நிலை உருவானது.

நகராட்சிகள் அவற்றின் பணியாளர்களை நியமித்துக் கொள்ளும் அதிகாரத்தை 1933-ஆம் ஆண்டிற்கு முன்னரே கொண்டிருந்தன. இந்தப் பணியாளர்களில் சுகாதார அதிகாரி மட்டும் இடம் பெறவில்லை. சுகாதார அதிகாரியை அரசாங்கம் நியமனம் செய்தது. நகராட்சியின் செயலாக்கத் தலைமை அதிகாரியாக நகராட்சித் தலைவர் விளங்கி வந்தார். 1933-ஆம் ஆண்டுசெய்த மாற்றத்தினால்,

நகராட்சித் தலைவரிடமிருந்து செயலாக்கத் தலைமை அதிகாரம் பறிக்கப்பட்டது. செயலாக்கத் தலைமை அதிகாரம் புதிதாக உருவான ஆணையாளர் பதவியில் அமைந்தது. ஆணையாளரை அரசாங்கம் நியமனம் செய்தது. இதனால் 17 ஆண்டுகளாக நடைபெற்று வந்த முறையானது மாற்றப்பட்டது. இதற்கு மக்கள், குறிப்பாக நகராட்சி கள், பலத்த எதிர்ப்புத் தெரிவித்தன. நகராட்சித் தலைவர் நகராட்சி மன்றத் தலைவராகவும், முழுநேர ஆணையாளர் செயலாக்க அதிகாரியாகவும் செயல்பட்டனர். இந்த முறைதான் இன்று செயலில் உள்ளது.

3

உள்ளாட்சி வாரியங்களின் வளர்ச்சி

உள்ளாட்சி வாரியங்கள் தமிழகத்தில் குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்துள்ளன. இன்றைய நாளில் செயல்பட்டு வருகின்ற வாரியங்களிலிருந்து உள்ளாட்சி வாரியங்கள் வித்தியாசமானவையாகும். உள்ளாட்சி நிருவாக அமைப்புக்கள்தான் இவ்வாரியங்களாகும். வரிகள் விதித்து அவற்றை வசூலித்து உள்ளாட்சிப் பணிகளைச் செய்த அமைப்புக்கள்தான் இந்த வாரியங்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, அதாவது சென்னை மாகாணத்தில், 1871-ஆம் ஆண்டுக்கு முன்னரே இரண்டு விதமான வரிகள் வசூலிக்கப்பட்டன. அவை, ஒன்று கல்வி வரி; மற்றொன்று சாலை வரி (செஸ்). 1863-ஆம் ஆண்டுக் கல்விச்சட்டமும், 1866-ஆம் ஆண்டு மாவட்டச் சாலைகளின் செஸ் சட்டமும் கல்வி, சாலை வரிகளை விதிக்க அதிகாரம் கொடுத்துள்ளன. கல்வி வரியை வசூலித்துப் பள்ளிகளை நிருவகிப்பதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு இருந்தது இக்குழுவில் பள்ளி ஆய்வாளர், துணை ஆய்வாளர் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் இடம் பெற்றனர். உள்ளூர் பிரமுகர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பொது மக்களுடன் கலந்து ஆலோசித்து நியமனம் செய்தார். இக்குழுவில் முதன்முதலாக அதிகாரிகளும் அதிகாரிகளல்லாத பொதுமக்களும் இடம் பெற்றனர். ஆனால் பள்ளிகளையும் கல்வியையும் நிருவகிப்பதற்கு கிராம மக்கள் அதிகமாக முன்வரவில்லை. ஆகவே அதிகாரிகளல்லாத பொதுமக்கள் பிரதிநிதிகளை நியமிக்கத் தகுதியுள்ள நபர்கள் கிடைக்கவில்லை. மேலும் கல்வி கற்பது அதிகச் செலவு பிடித்ததாக அன்று இருந்ததால், மக்களும்

கல்வியில் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதனால் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஐந்தாண்டிற்கு ஒருமுறை பள்ளிகள் தேவையா? இல்லையா? என்ற பொது வாக்கெடுப்பில் பள்ளிகள் தேவையில்லை என்றுகூட ஏராளமான இடங்களில் பொதுமக்கள் வாக்களித்தனர். எனவேதான் கல்வியானது 1871-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உள் ளாட்சி வாரியத்தில் சேர்க்கப்பட்டது.

சாலை செஸ்ஸை நிருவகித்த முறையானது கல்வி முறையை நிருவகித்ததிலிருந்து வேறுபட்ட முறையாகும். சாலை செஸ்ஸை நிருவகிக்கத் தனி அமைப்பு உருவாக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித்தலைவரே சாலை செஸ்ஸை நிர்வகித்து வந்தார். இவர் பொறியியலாரின் ஆலோசனையோடு சாலை செஸ்ஸை நிருவகித்து வந்தார். இவர் எந்தப் பகுதிகளில் சாலை போடவேண்டுமென் பதையும், ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நிதி ஒதுக்கவேண்டும் என்பதையும் முடிவு செய்தார். சாலைகள் போடுவதற்கென செஸ் வசூலிக்கப்பட்டதால் சாலைகள் உள்ளாட்சிக்குட்பட்டதாக அமைந்தன. ஆனால் இதனை நிருவகிக்கும் நிருவாகத்தில் மக்கள் பிரதிநிதிகள் இடம்பெறவே இல்லை. அரசாங்கம் சாலை நிருவாகத்தைக் கவனிக்க ஒரு பிரதிநிதியை நியமனம் செய்தது இந்த நியமனப் பிரதிநிதிதான் சாலைகளுக்கு முழுப்பொறுப்பு வாய்ந்தவர். உள்ளாட்சியில் வெளிமனிதர் அதாவது அரசாங் கப் பிரதிநிதிதான் முழுப்பொறுப்பு வாய்ந்தவராக இருந்த தாலும், மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சியில் பங்கு பெறாமல் இருந்ததாலும் உள்ளாட்சிப் பணிகள் செம்மையாகச் செய்யப்பட வில்லை.

கல்வி வளர்ச்சிக்கு மக்கள் முழு ஒத்துழைப்புத் தராததாலும், சாலை செஸ்ஸை மத்திய அரசாங்க அதிகாரியின் மூலம் செயல் படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டதாலும் இவ்விரு அமைப்புக்களிலி ருந்து வித்தியாசமான ஓர் அமைப்பை உருவாக்கி நிருவகிக்க அரசாங்கம் எண்ணியது. இந்த அமைப்புத்தான் உள்ளாட்சி வாரி யமாகும். இதில் அதிகாரிகளும், பொதுமக்கள் பிரதிநிதிகளும் இடம் பெற்று இருந்தனர். இந்த அமைப்பு கொள்கைகளை உருவாக்கித் தீர்மானங்களை நிறைவேற்றியது. இத்தீர்மானங்களை ஒரு செயலாக்க அதிகாரி செயல்படுத்தினார்.

தமிழகத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 1871-ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதிச்சட்டத்தின்கீழ் ஒரு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாரியத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி அடிப்படையில் (ex-officio) உறுப்பினர். தவிர, பிற அதிகாரிகள், அதிகாரி களல்லாத பொதுமக்கள் ஆகியோரும் பிரதிநிதித்துவம் பெற்றனர். அதிகாரி களல்லாத பொதுமக்கள் பிரதிநிதிகளை ஆளுநர் குழு (Governor-in-Council) நியமனம் செய்தது. வாரியங்களில் பிரதிநிதித்துவம் பெறும் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் ஆளுநர் குழுவே முடிவு செய்தது. வாரியங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றுக்குக் குறையாது, அல்லது 50 விழுக்காட்டிற்குக் குறையாது, அதிகாரி களல்லாத மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றனர். இப்பொதுமக்கள் பிரதிநிதிகள் பெரும்பாலும் நிலக்கிழார்களாக, பெரிய தனவந்தர் களாக, வியாபாரிகளாக இருந்தனர். ஆகவே அந்தந்த வட்டாரங் களில் உள்ள செல்வாக்குப் பெற்ற நபர்கள் வாரியங்களில் நியமிக்கப் பட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் வாரியத்தின் தலைவராக இருந்தார். வாரியத்தின் உதவித் தலைவராக ஆளுநர் குழு வாரிய உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தது. இச்சட்டம் 13 ஆண்டுகள் செயலில் இருந்தது. இதன் விளைவாக, மாகாணம் 30 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த 30 வட்டாரங்களின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 774. இதில் 408 உறுப்பினர்கள் அதாவது 52.9 விழுக்காடு அதிகாரிகளல்லாத பொது மக்கள் பிரதிநிதிகள் வாரியங்களில் இடம்பெற்றனர்.

உள்ளாட்சி வாரியங்களில் 47.1 விழுக்காடு அதிகாரிகள் உறுப்பினர்களாக இருந்தனர். அதிகாரிகள் அன்று ஓரிடம் விட்டு ஓரிடம் சென்று பணிகளாற்றிய காரணத்தால், வாரியக் கூட்டங் களில் சரிவரக் கலந்து கொள்ள முடியவில்லை. இதே போல், மக்கள் பிரதிநிதிகளும் மிகுதியான தூரம் பயணம் செய்து கூட்டங் களில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. இதனால் மக்களுக்கும் செலவுகள் மிகுதியானது. இவ்வாறு அதிகாரிகளும் மக்கள் பிரதி நிதிகளும் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலவில்லை. ஆகவே அரசாங்கம் உறுப்பினர்களுக்கு பயணப்படி கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. இதன் மூலம் உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் அவர்களின் செலவுகளைக் குறைக்கவும் அரசாங்கம் துணை செய்தது.

இந்நிலையில் அரசாங்க கவனமாகச் சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டியதிருந்தது. தலைமை ஆளுநர் மன்றம் மாநில அரசாங்கங்களுக்குச் சில பொதுவழிகாட்டல்களைத் தெரிவித்தது. இவ்வழிகாட்டல்கள் உண்மையான உள்ளாட்சி அரசாங்கங்களை உருவாக்க வழியமைத்தன. இந்த வழிகாட்டல்கள் இரண்டு பாகங்களைக் கொண்டவை. முதல் பாகத்தில், உள்ளாட்சி வாரியங்கள் அமைப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது பாகமானது, அரசாங்கம் உள்ளாட்சிகள் மீது எவ்வளவு தூரம் கட்டுப்பாடு விதிக்க-வேண்டும் என்பதைப் பற்றிக் கூறியுள்ளது. எந்தெந்தக் கட்டுப்பாட்டு அதிகாரங்களை அரசாங்கம் தன்னிடத்தே கொண்டிருந்தால், திறமையாகச் செயல்பட முடியும் என்பது குறித்து இரண்டாவது பாகம் விளக்கியுள்ளது. அப்போது உள்ளாட்சி வாரியங்கள் அமைப்பதில் சில சிரமங்கள் தோன்றின. இந்தியா முழுமைக்கும் ஒரே வகைத்தான ஒழுங்கு முறையின் மூலமாக வாரியங்கள் அமைப்பதில் சிக்கல்கள் இருந்தன. ஏனெனில் இந்தியா பல்வேறு வித்தியாசங்கள் கொண்ட பல பாகங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக, பஞ்சாப் மாநிலம் சென்னை, வங்காளம் மற்றும் பர்மா ஆகியவற்றைக் காட்டிலும் வித்தியாசமானதாகும். எனவே சூழ்நிலைக்கேற்றவாறு உள்ளாட்சிகளை அமைத்தால்தான் வெற்றிகரமாகச் செயல்படமுடியும் என்பது உணரப்பட்டது. மேலும் உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியானது அரும்புகின்ற பருவத்தில் இருந்ததால், பல்வேறுபட்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி, எது சிறந்த முறையெனத் தெரிந்து கொள்வது அவசியமாயிற்று. ஏனெனில் வெறுமனே வழிகாட்டல்களுக்குத் தக்கவாறு உள்ளாட்சி அமையவேண்டுமென்பது கட்டாயமில்லை. மக்களின் பழக்கவழக்கங்கள், சிந்தனை, எண்ணங்கள் போன்றவை இடத்திற்கு இடம் மாறுபட்டு உள்ளன. அம்மக்களுக்கேற்ற உள்ளாட்சியை அமைக்க வேண்டும். இதற்காகப் பல்வேறு செயல்முறைகளைச் சோதனைகளாக நடத்திய பின்னர், சிறந்த முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். இருப்பினும் சில அடிப்படைக் கொள்கைகள் எல்லா உள்ளாட்சிகளுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது. ஓரிடத்தில் ஒரு முறைமையானது சிறப்பாகவும், நன்றாகவும் செயல்படுகிறதென்றால், அது மற்ற இடங்களுக்கும் பொருத்தமாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. அரசாங்க வழிகாட்டலில் மாநிலத்தின் ஒவ்வொரு நகரிலும் நகராட்சி அரசாங்

கங்கள் ஏற்படுத்துவதை இந்திய அரசாங்கம் விரும்பியது. இதே போல், உள்ளாட்சி அமைப்புக்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அமைக்க மாநில அரசாங்கங்கள் தீவிர அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் இந்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டது. வரிசைக் கிரமமான உள்ளாட்சி வாரியங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் சூழ்நிலைக்கேற்றவாறு அமைத்து, மக்கள் பிரதிநிதிகள் குறிப் பிட்ட பணிகளை, வரையறுக்கப்பட்டுள்ள நிதியின் மூலமாகச் செய்ய வேண்டும் என விளக்கியது. ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் பரந்த அளவு வரையறை எல்லை கொண்டதாக இல்லாமல், மேலாண்மை செய்யக்கூடிய வகையில் அளவாக இருக்கவேண்டுமென்பதிலும் தலைமை ஆளுநர் மன்றம் கவனம் செலுத்தியது. மேலும் இவ்வழி காட்டல் வெற்றி பெற உள்ளூர் மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், அவர்களது அறிவைப் பயன்படுத்தி அனை வரது ஒத்துழைப்பையும் பெறவேண்டியது அவசியமெனவும் வலியுறுத் தியது. ஏனெனில் அன்று மாவட்டக் குழுக்களின் கூட்டத்திற்குத் தலைமை நிலையங்களில் வசிக்கும் உறுப்பினர்கள் கூடக் கலந்து கொள்ளாத ஒரு நிலைதான் இருந்ததென்பதை அனுபவங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மேலும் கலந்துகொண்ட உறுப்பினர்கள் கூட, மாவட்டத்தின் புறப்பகுதி விஷயங்களில் ஆர்வமில்லாதவர்களாக இருந்தனர். இதன் விளைவாக, மாவட்டத் தலைமையிடங்களுக்கு அதிகமான முக்கியத்துவம் வழங்கப்பட்டது. தலைமையிடத் தேவைகள் எளிதாகக் கவனிக்கப்பட்டன. உள்ளாட்சி அதிகாரம் முழுவதும் மாவட்ட அதிகாரிகளிடமே உறைந்தது. மாவட்டக் குழு வெறு மனே மாவட்ட அதிகாரியின் பிரேரணைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளக்கூடிய அமைப்பாக மாறியது. எனவே உள்ளாட்சியில் நிரு வாக அமைப்பின் சிறிய அமைப்பானது தாலுகா அல்லது வட்ட மாக இருக்கவேண்டும் என்றும், இந்த எல்லையானது உச்ச உயர் எல்லையாக ஒவ்வொரு உள்ளாட்சிக்கும் இருக்கவேண்டும் எனவும் கூறியது. இதை விடக் குறைந்த அளவில் சிறு சிறு உள்ளாட்சி வாரியங்கள் அமைப்பதில் தவறோ எதிர்ப்போ ஏதுமில்லை எனவும், வட்டத்தை விடக் குறைந்த அளவு வரையறை எல்லையைக் கொண்ட உள்ளாட்சி வாரியங்கள் தேவையானால் அமைக்கலாம் என்றும் கூறியது இது. சில மாநிலங்களில் தன்னிச்சையாகச் செயல்படுகின்ற மாவட்ட மன்றங்களிடம் இத் துணை வாரியங்கள் விடப்பட்டன. ஒவ்வொரு வாரியத்தின் பிரதி நிதியும் மாவட்ட மன்றங்களுக்குத் தங்களது பிரதிநிதிகளை அனுப்

பின. மாவட்ட மன்றங்களில் பொதுவான விஷயங்கள், மாவட்ட நிதி ஒதுக்கீடு, நிலவரி (cess) விதித்தல் ஆகிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. சில மாநிலங்களில் உள்ளாட்சி வாரியங்களை மாவட்ட வாரியங்கள் கட்டுப்படுத்தின. ஆனால் எந்த மாதிரியான முறைமை செயல்பட்டு வந்தாலும், உள்ளாட்சி அரசாங்கங்கள் குறுகிய அதிகார எல்லையுடன், அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் செயல்படவேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையுடன் இருக்க வேண்டுமெனத் தலைமை ஆளுநர் மன்றம் விரும்பியது. நகராட்சிக் குழுக்கள் நகர் எல்லைக்குள்ளாக அமைந்து, உள்ளாட்சி வாரியங்களில் இடம் பெற்றதென்பது உண்மை. மாவட்ட வாரியங்களுக்கும் நகராட்சி வாரியங்களுக்குமிடையே உள்ள தொடர்புகள், நகரத்தில் அமைவதற்கேற்றவாறு பொருத்தமாக எல்லைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். இன்னும் சில மாநிலங்கள் பொதுச் சிக்கல்களை விவாதிக்கக் கிராமப்புற வாரியங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கியுள்ளன. மேலும் சில மாநிலங்களில் நகர வாரியங்கள் தங்களுடைய பிரதிநிதிகளை மாவட்ட வாரியம், மாவட்ட மன்றம் ஆகியவற்றிற்கும் அனுப்பி வைத்தன.

எனவே உள்ளாட்சி வாரியங்கள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற வாரியங்கள் இரண்டுமே, ஏராளமான மக்கள் பிரதிநிதிகள் மூலம் எல்லா இடங்களிலும் செயல்பட்டு வந்துள்ளன. அலுவலக உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டது. தேர்தல் முறை பின்பற்றப்படாத இடங்களில் மட்டும் அலுவலக உறுப்பினர்கள் உள்ளூர் எதிர்ப்புக்கள் இல்லையேல், மிகுதியாக இருக்கலாமெனவும் வரையறுக்கப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளெனத் தலைமை ஆளுநர் மன்றம் முடிவு செய்தது. இவர்கள் நியமனம் செய்யப்பட்டாலும், நியமனம் செய்யப்படாமல், தேர்ந்து எடுக்கப்பட்டாலும் இவர்களது பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் உறுப்பினர்கள் பதவி விலகி உடனே அக்காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். உறுப்பினர்கள் தங்களது பதவிக்காலத்திற்குப் பின்னர் மறுபடியும் உறுப்பினராக வரத் தகுதி படைத்திருந்தனர். இதற்கிடையே உள்ளாட்சியில் சுழற்சி முறை கொண்டு வந்ததால் நலமென ஆளுநர் மன்றம் விவாதித்தது. மேலும் இம்முறையைக் கொண்டு வருவதற்கு உரிய அதிகாரங்களனைத்தையும் உள்ளாட்சியிடமே விட்டது.

வாரிய உறுப்பினர்களைக் கூடிய மட்டும் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்க அரசாங்கம் விரும்பியது. எல்லா இடங்களிலும் இம்முறையைக் கொண்டுவரக் கட்டாயப்படுத்தவில்லை. எனினும் உள்ளூர் சூழ்நிலைகள் தேர்தல் முறையைக் கொண்டுவர உகந்ததாயிருந்தால் தேர்தல் முறையைக் கொண்டுவரலாமென அரசாங்கம் கூறியது. முதலில் பெரிய நகரங்களில் தேர்தல் முறையைச் செயல்படுத்தி படிப்படியாகச் சிறிய நகராட்சிகள், பின்தங்கிய கிராமப்புறங்கள் ஆகியவற்றிற்கும் கொண்டுவரவேண்டுமென அரசாங்கம் கருத்துரைத்தது. இம்முறைக்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கினால், இம்முறையை எவ்வித இடையூறுமின்றிச் செயல்படுத்தலாமென அரசாங்கம் நம்பியது. இம்முறையைச் செயல்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்டத்தின் சூழ்நிலைக்கேற்பத் தேர்தல் தகுதிகளை நிருணயிக்க அம் மாவட்ட துணைக் கோட்ட அதிகாரிகள் அதிகாரம் பெற்றனர். இவர்கள் உள்ளாட்சி அரசாங்கத்திடமிருந்து அறிவுறுத்தல்கள்பெற்று, உள்ளாட்சி வாரியங்களின் தேர்தலில் நிற்கத் தகுதியானவர்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். துணைக்கோட்ட அதிகாரி அவரது காவல்வரையறைக்குட்பட்ட எல்லைக்குள் வசிக்கும் எல்லா மக்களையும் ஓரிடத்தில், குறிப்பிட்ட தேதியில், குறித்த நேரத்தில் கூடச் செய்து, அவர்களிடம் அரசாங்கத்தின் நோக்கங்கள், கடமைகள் ஆகியவற்றை விளக்கவேண்டும். பின்னர் அரசாங்கத்தின் நோக்கங்களை மக்கள் ஏற்றுக்கொள்கின்றனரா என்பதையும், தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை, அதிகார வரையறை ஆகியவற்றைக் கொஞ்சகாலங்களுக்கு மக்களுக்கு உணர்த்த வேண்டும். பின்னர் மக்கள் சில காலங்களில் உள்ளாட்சி வாரியங்களை ஆட்சி செலுத்தும் அறிவினைப் பெற்று, பொறுப்புக்களை உணர்ந்து ஆட்சி செலுத்தும் நிலையில், அரசாங்கம் உள்ளாட்சி விஷயங்களில் குறுக்கீடு செய்யாது என்பதும் கூறப்பட்டது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பயமின்றி, வரையறுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி ஆட்சியை நடத்த வழி செய்யப்பட்டது. தேர்தல் முறையை நடைமுறைப்படுத்த ஏராளமான விருப்ப அதிகாரங்களைத் தலைமை ஆளுநர் மன்றம் உள்ளாட்சிகளுக்குக் கொடுக்கவும் எண்ணியது. ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் முறையை வகுக்கப் பல சோதனைகள் நடத்தவேண்டுமெனவும் கூறியது. சாதாரண வாக்கு, திரள்வாக்கு (Cumulative Vote) வார்டுகளிலிருந்து தேர்ந்து எடுக்கும் முறை, மொத்தமாக நகரத்திலிருந்து தேர்ந்து எடுத்தல்,

இனங்களின் மூலமாகத் தேர்ந்தெடுத்தல் போன்ற பல்வேறு சோதனைகள் நடத்தலாம் எனவும், ஐரோப்பாவில் இல்லாத சில புதிய முறைகள் இந்தியாவிற்குப் பொருத்தமாகத் திகழலாம் எனவும் வழி காட்டியது. ஆகவே வேறுபட்ட மக்கள் தொகைக்கு ஏற்ப, உள்ளூர் சிறப்புத்தன்மை, சூழ்நிலை ஆகியவற்றிற்கு ஏற்ற வாறு தேர்வுமுறையை உள்ளாட்சிகள் அமைத்துக் கொள்ள வேண்டும் என விளக்கியது. மாநில அரசாங்கங்கள் தங்களுடைய மாவட்ட அதிகாரிகளின் மூலமாக, தேர்தல் முறையைக் கொண்டுவர பிரமுகர் களின் கருத்தறிய முயன்றன.

பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள மக்களுக்கு உள்ளாட்சி பற்றிய பயிற்சி கொடுக்கவேண்டுமென்ற பிரச்சனை அரசாங்கத்திற்குப் பெரிய சிக்கலாக இருந்து வந்துள்ளது. இதுவரையிலும் பயிற்சி கொடுக்கும் முயற்சிகளனைத்தும் தோல்வியைத்தான் தழுவியுள்ளன. மேலும் இதுவரையிலும் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையானது தேர்தல்களில் பதிவான வாக்காளர்களை வைத்துப் பார்த்தால் மிக மிகக் குறைவானதாகவே இருந்தது. இருப்பினும் உள்ளாட்சியில் மக் களது ஆதரவும், பங்கேற்பும் ஏற்படும் வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனத் தலைமை ஆளுநர் மன்றம் கருத்துத் தெரி வித்தது. மக்கள் உள்ளாட்சி வாரியங்களில் பணியாற்ற ஊக்குவிக் கும் வண்ணம் கௌரவப் பட்டங்கள் கொடுக்கவேண்டுமெனவும், இப் பட்டங்களை உறுப்பினர்கள் அஞ்சல் தொடர்புகளில் போட்டுக் கொள்ளலாம் எனவும் கூறியது. உதாரணமாக இராய் பகதூர் இராவ் பகதூர், கான் பகதூர் போன்றவை சில கௌரவப் பட்டங் களாகும் இதுவரையிலும் கூறப்பட்டவை உள்ளாட்சிகள் அமைப் பது குறித்த வழிகாட்டல்கள் ஆகும்.

அரசாங்கம் உள்ளாட்சி வாரியங்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவேண்டும் என்பது அவசியமானது. ஆனால் எந்த மாதிரியான கட்டுப்பாடுகளை விதிப்பது என்பது சிக்கலான ஒன்று. உள்ளாட்சிகளை வெளிப்படையாகக் கட்டுப்பாடு செய்ய லாமே தவிர, அவற்றின் அன்றாட நடைமுறைகளில் குறுக்கீடு செய்து, கட்டுப்பாடு விதிக்கக் கூடாது என்பது தலைமை ஆளுநர் மன்றத்தின் கருத்தாகும். அரசாங்கம் உள்ளாட்சி களின் சட்டங்களை மாற்றி கட்டுப்பாடு விதிக்கலா மெனினும், அவற்றை அதிகாரத்தனப் படுத்தக் கூடாது.

அரசாங்கம் இரண்டு கட்டுப்பாடு அதிகாரங்களை வைத்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் அனுமதியைச் சில குறிப்பிட்ட செயல்களுக்குக் கட்டாயம் பெற்றாக வேண்டும். ஏனெனில் அச்செயல்கள் பொதுவான முன்னேற்றத்திற்கும், பாதுகாப்பிற்கும் அவசியமானவை. சில சட்டங்கள் அரசாங்கம் அனுமதி பெற்ற பின்னர்தான் செயல்பாட்டிற்கு வரவேண்டும். ஏனெனில் சட்டத்திற்கு உயிரூட்டுவதே அரசாங்கமாக இருந்தால்தான், அரசாங்கத்திற்கு மதிப்பும், மரியாதையும்; இல்லையேல் உள்ளாட்சி அமைப்புக்கள், தன்னாட்சி அமைப்புக்களாக மாறிவிடலாம் கடன்கள் திரட்ட, புதுவரிகள் விதிக்க, பொது அமைதியைப் பாதிக்கும் மதப் பிரச்சனை போன்றவற்றிற்கு, பிறவற்றிற்கு அரசாங்கத்தின் அனுமதி பெற்றாக வேண்டும். இவ்வாறு அரசாங்கத்தின் அனுமதி பெறக்கூடிய விஷயங்கள் ஆரம்ப காலத்தில் அதிகமாகவே இருந்தாலும், நாளடைவில், நடைமுறையில் குறைந்து விடுமெனவும் தலைமை ஆளுநர் மன்றம் கூறியது இரண்டாவதாக, ஒரு குறிப்பிட்ட விவகாரத்தைப் பற்றி உள்ளாட்சி வாரியத்தின் நடவடிக்கைகளைத் தள்ளுபடி செய்ய, அவசியமான கடமைகளைச் செய்வதிலிருந்து தவறியிருந்தாலோ அல்லது செய்யத் தவறினாலோ, உள்ளாட்சி அமைப்பைத் தற்காலிகமாக நீக்கம் செய்ய, உள்ளாட்சிப் பணிகளைத் திருப்திகரமாகச் செய்யும் வண்ணம் தனி அதிகாரிகளை நியமனம் செய்தல், செயல்படுத்தல் ஆகியன அரசாங்கத்தின் அதிகாரங்களாக இருக்கவேண்டும். இவ்வாறு உள்ளாட்சி அமைப்புக்களைக் கலைப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும். இவ்வாறு உள்ளாட்சி அரசாங்கங்களைக் கலைக்க உயர் அரசாங்கம் கொண்டிருக்கும் அதிகாரமானது, இங்கிலாந்து நாட்டின் சட்டங்களில் தெளிவாக இருந்தது. உயர் அரசாங்கங்கள் பொதுப்படையாக உள்ளாட்சி அரசாங்கங்களைக் கவனித்துக் கொண்டு, கடமைகள் செய்யத் தவறினால் அவற்றை உணர்த்தவும், தவறுகள் செய்ய ஆரம்பித்தால் அவற்றைத் தண்டிக்கவும் வேண்டும்.

உள்ளாட்சி வாரியங்களின் நடவடிக்கைகளில் அதிகாரிகள் குறுக்கிடாமல், உள்ளாட்சிச் செயல்களைக் கண்காணிப்பும், கட்டுப்பாடும் செய்யவேண்டும். இந்த அதிகாரிகள் நகரச் செயலாக்க அதிகாரிகளாக இருப்பதுடன், உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்து வந்தனர். இவர்கள் பதவியின்

அடிப்படையில் தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்ததால் சீரான வழிகாட்டுக்களைத் தந்தனர். உள்ளாட்சி நடவடிக்கைகளில் நடைமுறையில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் இவர்களுக்கு இருந்தது. ஆனால் இவர்களால் உள்ளாட்சிப் பயிற்சியினைக் கொடுக்க முடியவில்லை என்பது தெரியலாயிற்று. மேலும் அதிகாரிகள் உள்ளாட்சிகளில் தலைவராக இருந்ததால், மக்கள் பிரதிநிதிகள் நிருவாகத்தில் கலந்து கொள்ள ஆர்வம் காட்டவில்லை. மக்களும் அதிகாரமில்லாத அமைப்புக்களில் அவர்களது நேரத்தைச் செலவழிக்கவும் விரும்பவில்லை. மேலும் மக்கள் பிரதிநிதிகள் தன்னிச்சையாகவும், விருப்பமாகவும், ஆர்வமாகவும் செயல்பட்டதால் மோதல்கள் ஏற்பட்டன. எனவே இந்த விவகாரம் மிகவும் கவனமாக ஆராயப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி வாரியங்களில் தலைவராக நியமிக்கப்படுவதை தலைமை ஆளுநர் மன்றம் விரும்பியது. அவ்வாறு தகுதியான மக்கள் தலைவர் இல்லையேல் அதிகாரிகளே அப்பதவிகளில் அமர்ந்து கொள்ளலாம் எனக் கூறியது. இருப்பினும் அதிகாரிகள் தலைவராக இருந்தாலும், நடவடிக்கைகளை முடிவு செய்யும் வாக்குரிமை (Casting Vote) கிடையாது என வரையறுத்தது. எனவே மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் ஓரளவிற்கு அதிகமானது. உள்ளாட்சி அரசாங்கத்தின் அனுமதியோடு தான் தலைவர்களது நியமனங்கள் அனுமதிக்கப்பட்டன உள்ளாட்சி அரசாங்கங்கள் தலைவர்களை எப்பொழுதுமே நியமனம் செய்யவில்லை. உள்ளாட்சி வாரியங்கள் கூடுமானவரையில் தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கொடுப்பதில் தலைமை ஆளுநர் மன்றம் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, அது செயலாக்கத்தை உள்ளாட்சி அரசாங்கத்தின் விருப்ப அதிகாரத்திற்கு விட்டு விட்டது. மேலும் கொள்கைகளுக்கு உடனே செயலாக்கம் கொடுக்கும்படி உள்ளாட்சி அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டது. உள்ளாட்சி வேலைகளைச் செய்வதற்குப் பொறியியலர் போன்றவர்களைக் கொடுத்து உதவவும் உயர் அரசாங்கம் கூறியது.

அரசாங்கம் கிராம ஊராட்சிகள், வட்ட வாரியங்கள், மாவட்ட வாரியங்கள் ஆகிய அனைத்திற்கும் ஒரே மாதிரியான கொள்கையையும் கட்டுப்பாட்டையும் வைத்திருந்தது. ஊராட்சிகள், வட்ட வாரியங்கள், மாவட்ட வாரியங்கள் போன்றவை அமைப்பில், செயல்களில் வித்தியாசமாக இருந்த போதிலும் ஒரே,

மாதிரியான கட்டுப்பாடு அனைத்திற்கும் பொருத்தமானதாக அமைய வில்லை. முழுவதும் மக்கள் பிரதிநிதிகளையே கொண்டு உள்ளாட்சிவாரியங்கள் 1930-ஆம் ஆண்டில்அமைக்கப்பட்ட பின்னரும் கூடத் தன்னிச்சையாகச் செயல்படுமா என்ற கேள்வி எழுந்தது. ஏனெனில் அரசாங்கம் அப்போது மிகுதியான கட்டுப்பாட்டு அதிகாரத்தைத் தன்னிடத்தே வைத்திருந்தது.

ரிப்பன் பிரபுவின் 1882-ஆம் ஆண்டுத் தீர்மானமானது, உள்ளாட்சி வளர்ச்சியின் ஓர் திருப்புமுனை என்பதை அறிவோம். இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு 1884-ஆம் ஆண்டு உள்ளாட்சி வாரியங்களின் சட்டமியற்றப்பட்டது. இந்தச் சட்டமானது அரசாங்க அதிகாரிகளின் பலத்த எதிர்ப்புக்களுக்கிடையே நிறைவேற்றப் பட்டது. எனவே இதனைச் செயல்படுத்த அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தியது. உள்ளாட்சி வாரியங்களின் உறுப்பினர்களை நியமிப்பது தேர்ந்தெடுப்பது ஆகியன ஆளுநர் மன்றத்தின் விருப்ப அதிகாரத் திற்கு விடப்பட்டன. ஆகவே தேர்தல் முறையைப் புகுத்த வேண்டு மென்பது கட்டாயப்படுத்தப் படவில்லை. ரிப்பன் பிரபுவின் கொள் கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன எனினும், அவற்றைச் செயல் படுத்தும் முடிவான அதிகாரம் மாநில அரசாங்கத்திடம் இருந்தது. மாநில அரசாங்கம் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு செயல்பட்டதால் உள்ளாட்சி அரசாங்கத்தின் நோக்கங்களை உண்மையாக உணர்ந்து செயல்படுத்தவில்லை. ஆனால் எப்போது, எங்கு தேர்தல் முறையை செயல்படுத்தலாமென்பதை முடிவு செய்யக்கூடிய அதிகாரம் ஆளுநர் மன்றத்திடம் இருந்தாலும், தேர்தல் முறையை விரும்புகின்ற உள்ளாட்சி வாரியங்களின் எண்ணத்தை ஆளுநர் மன்றம் எப்போதும் புறக்கணித்ததில்லை.

மாவட்ட வாரியங்கள்

உள்ளாட்சி வாரியங்களின் 1884-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மூன்றுவிதப் படிநிலை உள்ளாட்சி அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை மாவட்ட வாரியங்கள், வட்ட வாரியங்கள், ஒன்றிய ஊராட்சி கள் என்பனவாகும். மாவட்ட வாரியங்களுக்குக் குறைந்த பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆகும். இவர்கள் அலுவலக உறுப்பினர்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஆவர். ஆனால் அலுவலக உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மொத்த எண்ணிக்

கையில் நான்கில் ஒரு பங்கிற்கு மேலாக இருக்கக் கூடாது. இவர்களை ஆளுநர் மன்றம் நியமனம் செய்தது. வருவாய் அதிகாரி ஒவ்வொரு கோட்டத்திலும் பதவியின் அடிப்படையில் உறுப்பினராக இருந்தார். மற்ற உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்கள் நியமனமாகவும் தேர்தல் மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவற்றில் வட்ட வாரியத்தின் உறுப்பினர்கள் சிலரும் உண்டு, வாரியத்தின் தலைவர் பொதுவாக அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவராகவே இருந்தார். ஆனால் தலைவரை மாவட்ட வாரியமும் தேர்ந்தெடுக்க வழிசெய்யப்பட்டு இருந்தது. இதன்படி மாவட்ட வாரியம் ஆளுநர் மன்றத்தின் அனுமதியைப் பெற்றுத் தனது தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர் சட்டத் திருத்தத்தால் ஆளுநர் மன்றமே மாவட்ட வாரியத் தலைவரை நியமனம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றது. ஆனால் தலைவர் மாவட்ட வாரிய உறுப்பினர்களில் ஒருவராக இருக்கவேண்டும் என்பதும் வரையறுக்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு வாரியமும் ஒரு துணைத்தலைவரையும் கொண்டு இருந்தது. அரசாங்க அனுமதியோடு மாவட்ட வாரியங்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படியாகவோ அல்லது அரசாங்கம் அத்தலைவரை நியமிக்கக் கூடியதாகவோ அமைந்தது.

வட்ட வாரியங்கள்

வட்ட வாரியங்கள் மாவட்ட வாரியத்தைப் போல் அமைக்கப்பட்டன. இவற்றில் குறைந்த பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 ஆகும். இதில் அலுவலக உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பங்கும், மக்கள் பிரதிநிதிகள் மூன்றில் இரண்டு பங்கும் இருக்க வேண்டுமெனச் சட்டம் வரையறுத்தது. வட்ட வாரிய உறுப்பினர்கள் அரசாங்க நியமனமாகவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். வட்ட ஊராட்சியின் உறுப்பினர்களும், வரிசெலுத்துவோர்களும் வாக்காளர்கள். இவர்கள், வட்ட வாரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். எல்லா வருவாய்க் கோட்ட அதிகாரிகளும் பதவியின் அடிப்படையில் வட்ட வாரியங்களில் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். ஆனால் வாரியத் தலைவரை நியமனம் செய்யவோ, தேர்ந்தெடுக்கவோ எந்த வித அம்சமும் சட்டத்தில் இடம்பெறவில்லை இவர்களை ஆளுநரே நியமித்தார். இதேமாதிரியாக உதவித் தலைவரையும் நியமனம் செய்யவும் தேர்ந்தெடுக்கவும் வழிசெய்யப்பட்டது. இவ்வாறாக வட்ட வாரியங்கள் அமைந்து இருந்தன.

ஒன்றிய ஊராட்சிகள்

வட்ட வாரியங்களுக்கு அடுத்த படிநிலை ஒன்றிய ஊராட்சிகளாகும். இவற்றில் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது குறைந்த பட்சம் ஐந்தாக நிருணயிக்கப்பட்டது. கிராமத் தலைவர் பதவியின் அடிப்படையில் உறுப்பினரானார். மற்ற உறுப்பினர்களை ஆளுநர் மன்றம் நியமனம் செய்தது. சில உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனர். ஒன்றிய ஊராட்சித் தலைவரை ஆளுநர் மன்றம் நியமித்தது. அரசாங்கத்தின் அனுமதியோடு சில ஊராட்சிகள் தங்களது தலைவரைத் தேர்ந்தெடுத்தன. சில உள்ளாட்சி அமைப்புக்களில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வசதி செய்யும் பொறுப்பு ஆளுநர் மன்றத்தின் விருப்ப அதிகாரத்தில் ஒன்றாக அமைந்தது என்பதை அறிவோம். ஆளுநர் மன்றமானது இந்த விருப்ப அதிகாரத்தைத் தாராளமாகப் பயன்படுத்தவில்லை; மிகவும் குறைந்த அளவில் தான் இந்த விருப்ப அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே தேர்தல் முறை செயலாக்க ஆணைகளின் மூலம் புகுத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புக்களில் பாதிக்குக் குறையாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கச் செயலாக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வட்ட வாரிய உறுப்பினர்களாக இருந்ததால் எதிர்பார்த்த அளவு இம்முறை வெற்றி பெறவில்லை. ஏனெனில் வட்ட வாரிய உறுப்பினர்கள் ஏற்கனவே அரசாங்கத்தின் நியமன உறுப்பினர்களாவர். ஆகவே இது உண்மையான தேர்தலாக நடைமுறையில் இருக்கவில்லை. அடுத்ததாக வாரியங்களுக்கு உதவித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வசதி செய்யும் அம்சமும் சட்டத்தில் அதிகமாக வலியுறுத்தப்படவில்லை. எனவே இந்திய அரசாங்கம் வாரியங்களின் உதவித்தலைவர்கள் தேர்தெடுக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. இதற்குச் சட்டமன்றத்திற்குள்ளும், வெளியிலுமாக ஏராளமான ஆதரவுகள் கிடைத்தன. 1898 - 1899-ஆம் ஆண்டில் ஆறு வட்ட வாரியங்கள் உதவித் தலைவரைத் தேர்ந்தெடுத்தன. எனவே 1898 - ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல் முறையைக் கொண்டுவரவேண்டுமென மிகுதியாக வலியுறுத்தினர். மேலும் 1870 - 71-ஆம் ஆண்டிலிருந்தே ஆங்கிலக் கல்விமுறை இந்தியாவில் பரவியதால், மக்களாட்சி பற்றிய மேல்நாட்டு எண்ணங்கள் மக்கள் மத்தியில் வேரூன்ற ஆரம்பித்து விட்டன. இதற்கிடையே

நகராட்சிகளில் தேர்தல் முறை புகுத்தப்பட்டு, செயல்பட ஆரம்பித்தது. எனவே கிராமப்புற மக்களும் தேர்தல் பற்றி விழிப்படைந்தனர், ஊராட்சிகளுக்குத் தேர்தல் முறையைக் கொண்டுவர ஆர்வம் காட்டினர். உள்ளூர் தேர்தல் முறைகள், மேலை நாட்டுத் தேர்தல் முறையால் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தன. எனவே மேலை நாட்டுத் தேர்தல் முறை ஒன்றின் மூலம்தான் இந்திய மக்கள் நிருவாகத்தில் சீராகப் பங்கு பெற இயலும் என்ற முடிவிற்கு வந்தது அரசாங்கம். 1871-ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கம் உள்ளாட்சியில் உறுப்பினர்களை நியமனம் செய்தாலும் போதுமான வெற்றி பெறவில்லை. ஏனெனில் திறமையானவர்கள் நிருவாகத்தில் பங்கு பெற முன்வரவில்லை. மேலும் தகுதியில்லாதவர்களுக்கு வாக்குரிமை கொடுத்தது வெற்றி பெற இயலாமல் போனதற்கு மற்றுமொரு காரணமாகும். எனவே தகுதி அடிப்படையில் வாக்குரிமை நிருணயித்து, படிப்படியாக எல்லா மக்களும் வாக்குரிமை பெறவேண்டும் என்ற நிலை மக்களிடையே நிலவியது. மேலும் உள்ளாட்சி வாரியங்களில் மக்கள் பிரதிநிதிகளை ஆளுநர் மன்றம் தலைவர்களாக நியமிக்க விருப்ப அதிகாரம் பெற்றது. இது ஒரு முக்கியமான மாற்றமெனலாம்.

ரிப்பன் பிரபுவின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட தேர்தல் முறையில் மாநில அரசாங்கங்கள் போதுமான கவனம் செலுத்தியதா? என்று ஆராய்ந்தால் நிச்சயமாக எதிர்மறையான பதில்தான் வரும். ஆயினும் 1909 ஆம் ஆண்டு அதிகாரம் பரவல் மீதான அரசுரிமை ஆணையமானது தேர்தல் முறையைப் பற்றி ஆராய்ந்து, அறிக்கையைச் சமர்ப்பித்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் கிராம ஊராட்சி அமைக்கப்பட வேண்டுமென அது பரிந்துரை வழங்கியது. வட்ட வாரியங்கள் மற்றும் மாவட்ட வாரியங்கள் போன்றவற்றில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக இருக்க வேண்டுமெனவும் கூறியது. ஊராட்சிகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்யும் முறையை வன்மையாக அவ்வாணையம் கண்டித்தது. ஏனெனில் இவ்வாறு நியமனம் செய்யப்படுவதால், கிராம மக்கள் கிராம விவகாரங்களில் அக்கறையும், ஆர்வமும் செலுத்துவது தடுக்கப்படுவதாக உள்ளது என்று கருதியது. ஏனெனில் அரசாங்கத்தின் துணை அதிகாரிகள் நிருவாகத்தில் குறுக்கீடு செய்வது மக்களது ஆர்வத்தைக் குறைக்கிறது என்றும், அதிகாரிகள்தான் நியமனத்திற்குப் பொறுப்பானவர்களாக இருந்ததால்,

இவ்விதமாகக் குற்றம் சாட்டப்பட்டது. அந்தக் கிராமங்களின் கிராமத் தலைவர்கள் திறமையாக இருப்பார்களேயானால் ஊராட்சித் தலைவர்களாக நியமிக்கலாமென ஆணையம் பரிந்துரைந்தது. வட்ட, மாவட்ட வாரியங்கள் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்பதை ஆணையம் விரும்பவில்லை. ஏனெனில் உள்ளாட்சி வாரியங்களில் சிறுபான்மையினர்களான முஸ்லீம் போன்றவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டிய திருப்பதாலும், ஒரு பிரிவினர் வாரியங்களில் ஆதிக்கம் செலுத்துவதைத் தவிர்க்கவும் ஆணையம் அவ்வாறு கருதியது. மேலும் அதிகாரிகளின் அனுபவங்கள் கொள்கை உருவாக்கலில் இடம்பெற்றால்தான் செம்மையாக உள்ளாட்சிகளை நிருவகிக்க முடியும் என்ற கருத்தை அழுத்தம் திருத்தமாக ஆணையம் கொண்டிருந்தது. ஆகவே இந் நோக்கங்களை நிறைவேற்ற அரசாங்கம் உறுப்பினர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கவேண்டுமெனக் கூறியது. மேலும் மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள் பற்றி அச்சமயத்தில் விவாதம் நடைபெற்றுக் கொண்டு வந்த காரணத்தால், முஸ்லீம் களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற மிண்டோ-மார்லி கருத்தானது ஆணையத்திலும் ஓரளவு செல்வாக்குப் பெறலாயிற்று.

மாவட்ட வாரியத்தைப் பொறுத்த அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர்ந்து வாரியத்தின் தலைவராக இருக்கவேண்டுமென ஆணையம் கருத்துத் தெரிவித்தது. இதே மாதிரியாக வட்ட வாரியங்களில் கோட்ட அதிகாரிகள் தலைவராக நீடிக்கும்படிக் கூறியது. இக்கருத்தானது ரிப்பன் பிரபுவின் தீர்மானத்திற்கு நேர் எதிர்மாறானதாகும். மக்கள் அனைவரும் வாரியத்தின் தலைவர் தங்களில் ஒருவராக இருக்கவேண்டுமென்ற கருத்து நிலவி வந்த சமயத்தில், இங்ஙனம் ஆணையம் கருத்துத் தெரிவித்தது இக்கட்டான நிலையாகும். மாவட்ட ஆட்சித் தலைவரை, மாவட்ட வாரியத்தின் தலைவர் பதவியிலிருந்து எடுத்துவிட்டால், மாவட்ட ஆட்சித் தலைவரின் பணியானது வெறுமனே வரிவசூலிக்கக் கூடியதாகி விடுமென்றும், மக்களின் தொடர்பு குறையுமெனவும் ஆணையம் அஞ்சியது. மாவட்ட ஆட்சித்தலைவரின் விரிவான அறிவு, அனுபவம் வாரியத்தின் நிருவாகத்தில் பயன்படுத்தப்படாமல் போய்விடலாமென எண்ணியது. தவிர, மக்கள் பிரதிநிதிகளிடம் முழுப் பொறுப்பையும் வழங்க ஆணையம் விரும்பவில்லை.

அரசுரிமை ஆணையத்தின் பரிந்துரைகள் ரிப்பன் பிரபுவின் தீர்மானத்தைப் போல் சிறப்பானவையாகக் கருத முடியாது. இப்பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு ஆறு ஆண்டுகள் ஆனது. பின்னர் 1915-ஆம் ஆண்டு அரசாங்கம் ஒரு தீர்மானத்தை வெளியிட்டது. அத்தீர்மானம் உள்ளாட்சி வளர்ச்சி பற்றி ஊக்குவிக்காததால் மக்களிடம் அதிருப்தி ஏற்பட்டது. இப்பரிந்துரைகளின் மீது முடிவெடுக்கும் அதிகாரத்தை அந்தந்த மாநிலங்களிடம் கொடுத்தது மத்திய அரசாங்கம். ஆனால் சென்னை அரசாங்கத்தில் மட்டும், உள்ளாட்சி சிறப்பானதாக இருந்ததால் இத்தீர்மானம் குறித்து அதிகமான அக்கறை காட்டவில்லை. ஏனெனில் ஏற்கனவே மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சியில் அதிகம் இடம் பெற்றிருந்தனர். மேலும் உள்ளாட்சியின் அன்றாடப் பணி குறித்துக் கூட உறுப்பினர்கள் ஆளுநர் மன்றத்தில் கேள்வி கேட்டனர். ஆளுநரின் செயலாக்க மன்றத்தில் ஓர் இந்தியர் இடம் பெற்றிருந்ததால் உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பானவராகத் திகழ்ந்தார்.

1912 - 1913-ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிய வாரியங்கள் சில தங்களது உறுப்பினர்களையும், தலைவர்களையும் தேர்ந்தெடுத்தன. பிறகு வட்ட வாரியங்களில் தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக 1917-18-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்காகப் பெருகியது. பின்னர் வட்ட வாரியத் தலைவரைத் தேர்ந்தெடுக்க நான்கு வட்ட வாரியங்களுக்கு 1911-ஆம் ஆண்டு அனுமதி வழங்கியது. சில வட்ட வாரியங்களில் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதன்முதலாக 1912-ஆம் ஆண்டு இம்முறை நடைமுறைக்கு வந்தது. 1919 - 20 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 98 வட்ட வாரியங்களில் 64 வட்ட வாரியத் தலைவர்கள் மக்கள் பிரதிநிதி தலைவர்களாவர். இதில் 13 மக்கள் பிரதிநிதிகளைத் தலைவர்களாக அவர்களே தேர்ந்தெடுத்தனர். மற்ற மக்கள் பிரதிநிதிகளை அரசாங்கம் தலைவர்களாக நியமித்தது. இதே மாதிரியாக வாரியங்களின் உதவித் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து நியமனம் செய்யப்பட்டனர் இவ்வாறாக உள்ளாட்சி வாரியங்களில் மக்கள் பிரதிநிதிகளின் ஆதிக்கம் படிப்படியாகப் பெருகியது.

1917-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 17-ஆம் தேதி உள்ளாட்சி குறித்து அரசாங்கம் ஒரு பிரகடனத்தை (declaration) வெளியிட்டது. இப்பிரகடனத்தைத் தொடர்ந்து 1918-ஆம் ஆண்டுத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது. உள்ளாட்சி அரசாங்க வளர்ச்சியில் ஒரு முக்கியமான இடத்தை இந்தப் பிரகடனமும் தீர்மானமும் பெற்றுள்ளன. இதன் முக்கிய அம்சங்கள்:-

1. உள்ளாட்சி வாரியங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கையானது பெரும்பான்மையாக இருக்க வேண்டும். அலுவலக உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. சிறுபான்மையினர்களை நியமிப்பதற்கு மட்டுமே நியமன முறைமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. அதிகாரிகளில் சிலர் உறுப்பினர்களாக நியமிக்கப்படலாம் ஆனால் அவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கக்கூடாது.

4. வரி செலுத்துவோர்களுக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குரிமை அளிக்க வேண்டும்.

5. வாரியத் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். இவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.

6. செயலாக்கப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு வாரியத் தலைவர்களிடம் இருக்கக்கூடாது. செயலாக்கப் பணிகளைச் செய்வதற்கெனத் தனி அதிகாரிகளை நியமிக்கவேண்டும்.

உள்ளாட்சி வாரியங்களின் சட்டம் இதைத் தொடர்ந்து அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. இதில் உள்ள சிறப்பு அம்சங்கள் வருமாறு :-

1. உள்ளாட்சி வாரியங்களில் அலுவலக உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவரும், கோட்ட அதிகாரிகளும் பதவியின் அடிப்படையில் உறுப்பினர்களாக விளங்கினர் கிராமத் தலைவர்களைத் தவிர பிற அரசாங்க அதிகாரிகள் தேர்தலில்

போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு முழுமையாக மக்களின் பிரதிநிதித்துவம் ஏற்பட இச்சட்டம் வழியமைத்தது.

2. உள்ளாட்சி வாரியத்தில் நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க இச்சட்டம் வழிவகுத்தது. ஆனால் இந்த விகிதாச்சார முறையை ஏற்படுத்தும் அதிகாரம் மாநில அரசாங்கங்களிடம் இல்லாமல் அந்தந்த வாரியங்கள் முடிவு செய்யும்படியாகச் செய்தது. சிறுபான்மையோர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு வசதியாக, தேர்ந்தெடுக்கும் முறையை முழுமையாக ஆதரிக்கவில்லை. இதனால் சில இடங்களை சிறுபான்மையோர்களுக்கு ஒதுக்கி அவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வசதி செய்தனர். இருப்பினும் மாநில அரசாங்கமானது மாவட்ட வாரியங்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தைத் தன்னிடத்தே தக்க வைத்துக் கொண்டது. மேலும் புதிய அரசியலமைப்பின்படி (Transferred Subject) மாற்றப்பட்ட வரிசையின் கீழ் மாநிலங்களில் உள்ளாட்சி அமைந்ததால், அமைச்சரின் கட்டுப்பாட்டிற்குள் நின்று செயல்படக் கூடியதாக உள்ளாட்சி மாறியது. எனவே உறுப்பினர்களை அமைச்சர்களே நியமித்தனரே தவிர, அதிகாரிகள் நியமிக்கவில்லை. இச்சட்டம் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை ஒன்றிய ஊராட்சிகளுக்கு வழங்கியது. வட்ட வாரியங்களைப் பொறுத்த அளவில் பொதுவாகத் தேர்தல் மூலம் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் சில தவிர்க்கமுடியாத காரணங்களில் மட்டும் மாநில அரசாங்கம் தலைவர்களை நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. மாவட்ட வாரியங்களின் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கவேண்டுமென வரையறுக்கப்பட்டது. வட்டவாரியம் மற்றும் மாவட்ட வாரியத்தின் உதவித் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டது. எனவே 1920-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி உள்ளாட்சி வாரியங்களில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதில் உண்மையான முயற்சியை எடுத்தது எனலாம். பின்னர் இதே ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கிராம ஊராட்சிகளின் சட்டம் ஊராட்சி உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட வழிசெய்தது. வாக்குரிமையைப் பலரும் பெறும் படியாக வாக்குரிமைத் தகுதியைத் தளர்த்திச் சட்டம் இயற்றப்பட்டது நிலவரி, நில·

வாடகை ரூபாய் பத்து ஆண்டிற்குக் கட்டுகின்றவர்கள், வருமானவரி தொழில் வரி, கம்பெனிகள் வரி பேன்ற வரிகள் செலுத்துகின்ற அனைவரும் வட்ட வாரியத்தின் வாக்காளர்களாகப் பதிவு செய்யப் படும் தகுதி பெற்றனர். ஒன்றிய ஊராட்சிகளில் ஆண்டிற்கு மூன்று ரூபாய் வாடகை செலுத்துகின்றவர்களும் வாக்காளர்களாகப் பதிவு செய்யத் தகுதி பெற்றனர். கிராம ஊராட்சிகளில், 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வாக்காளர்களானார்கள். மாவட்ட வாரியத்தைத் தவிர்த்து மற்றவாரியங்கள் எல்லாம், உறுப்பினர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்தன. மாவட்ட வாரியத்திற்கு மட்டும் உறுப் பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு வட்ட வாரியமும் ஒரு குறிப்பிட்ட அளவு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, மாவட்ட வாரியத்திற்கு அனுப்பி வைத்தது. மாவட்ட வாரியங்களின் பணிகளும் வட்ட வாரியங்களின் பணிகளும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டாலும், தேர்தல் முறையானது மறைமுகமாகவே இருந் தது. ஏனெனில் சில பொதுப் பணிகளைச் செய்வதற்கு, மாவட்ட, வட்ட வாரியங்களின் ஒருங்கிணைப்பு அவசியமானதாக இருந்தது.

மாநிலங்களில் இரட்டையாட்சி புகுத்தப்பட்டதால் உள்ளாட்சி வாரியங்களின் சட்டமும் 1920-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மாற்றப் பட்ட வரிசையில் உள்ள விவகாரங்களுக்கு அமைச்சர்கள் பொறுப் பேற்றனர். சட்ட மன்றத்தில் பெரும்பான்மையுள்ள அரசியல் கட்சி களின் தலைவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர் இவ்வாறாக அரசியலானது உள்ளாட்சி அமைப்பில் கலந்தது. அரசியல் இதுவரை யிலும் உள்ளாட்சி விவகாரங்களில் பங்கேற்கவில்லை. முக்கியமாக, பிரச்சனையானது அதிகாரிகள் அல்லது அலுவலக உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் என்பன போன்றுதான் இருந்தது. இச்சீர்திருத் தத்தின் விளைவாக, ஆளும்கட்சியினர், எதிர்க்கட்சியினர் என்ற பாகுபாடு ஏற்படலாயிற்று.

பின்னர் உள்ளாட்சி வாரியங்களுக்கும் மாநில சட்டமன்ற அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மாவட்ட வாரியத் தலைவர் மாவட்டத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றவராக இருந்த காரணத்தால், சட்டமன்றத்திற்கு எளிதாகத் தேர்ந்தெடுக்கப்படலா யினர். ஏராளமான மாவட்ட வாரியத் தலைவர்கள் சட்டமன்ற உறுப் பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே இவர்களே யாரை அமைச்சராக நியமிக்கலாம், எவ்வளவு காலம் பதவி வகிக்க வேண்

டும் என்பனவற்றையெல்லாம் முடிவு செய்ய ஆரம்பித்தனர். எனவே அமைச்சராக வேண்டுமென விரும்புகின்றவர்கள் மாவட்ட வாரியத் தலைவர்களின் ஆதரவைத் தேடலாயினர். மற்றும் மாநில அரசாங்க மானது மாவட்ட வாரியங்களுக்கு உறுப்பினர்கள், தலைவர்கள் போன்ற நியமனங்கள் செய்யப்படுகின்றபொழுது, மேற்படி ஆதர வும் ஓரளவு பயன்படுத்தப்பட்டது. இவற்றின் காரணமாக அர சாங்கத்திற்கும் மாவட்ட வாரியங்களுக்குமிடையே ஒரு பரஸ்பர ஒற்றுமை ஏற்பட்டது. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து செல்லக் கூடியதாக இருப்பதால், ஒவ்வொன்றும் தங்களால் இயன்ற அளவு நன்மைகளை அல்லது ஆதாயங்களைப் பெறுவதில் தீவிர ஆர்வம் எடுத்துக் கொண்டன. ஆளுங்கட்சியானது அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்த இம்முறை வழிவகுத்ததால், எதிர்க்கட்சிகள் இந்த முறையை எதிர்த்தன.

இரட்டையாட்சி மாநிலங்களில் கொண்டுவரப்பட்ட காரணத் தால், உள்ளாட்சி வாரியங்களில் அரசியல் கட்சிகள் செல்வாக்குப் பெற்றன. மேலும் நியமனம் செய்யப்படுகின்ற சிறுபான்மையோர் களான முஸ்லீம்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள் மற்றும் தாழ்த்தப் பட்ட மக்கள் அனைவரும் நியமனம் செய்கின்ற முறையை ஆதரித் தனர். ஏனெனில் இவர்களது பிரதிநிதித்துவம் தேர்தல் மூலமாகப் பெறுவது என்றால் எளிதான செயலல்ல. ஆகவே இதற்கு அவர்கள் தங்களது ஆதரவைத் தந்தனர். இருப்பினும் நியமனமுறை செயல் படுவதைத் தீவிரமாக எதிர்க்கவும் செய்தனர். மேலும் மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி அதிகமாக இருந்ததால் நியமன முறையை எதிர்த்தனர். தேர்தல்களில் கடுமையான போட்டி ஏற்பட்டதால் உள்ளாட்சியில் வீணான மோதல்கள், பொறாமை போன்றவைகள் அதிகரித்தன. மேலும் வட்ட வாரிய உறுப்பினர்களின் நியமனங் களுக்கு மாவட்ட வாரிய உறுப்பினர்கள் பரிந்துரை செய்தனர். இப் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளவில்லையேல், மோதல் ஏற்படுமென அஞ்சி, அவற்றை ஏற்றுக் கொண்டனர். மொத்தத்தில் அதிகாரத் துஷ்பிரயோகம் மலிந்தது.

மேற்கூறிய சூழ்நிலை நிலவிக் கொண்டு வந்த காரணத்தால் நியமன முறை 1930-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அகற்றப்பட்டது. சிறுபான்மையோர்களின் நலன், இடங்கள் ஒதுக்கீடு ஆகியன செய்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருப்பினும் மாவட்ட

வாரியங்கள் தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றிருந்தன. 1922-23-ஆம் ஆண்டுகளில் இரண்டு வாரியங்கள் மட்டுமே தலைவரைத் தேர்ந்தெடுத்தன. இது 1925-26-இல் 15 ஆக உயர்ந்தது. 1928-29-இல் மொத்த மாவட்ட வாரியங்கள் 21 ஆகும். 1928-29-இல் மொத்தமுள்ள 129 வட்ட வாரியங்களில் 122 வாரியங்கள் தங்களது தலைவர்களைத் தேர்ந்தெடுத்தன. இவ்வாறு உள்ளாட்சி வாரியங்கள் வளர்ந்து வந்துள்ளன.

4

சென்னை மாநகராட்சியின் வரலாறு

தென்னிந்தியாவில் பழைமை வாய்ந்த முக்கிய நகரங்களில் முன்னணியில் நிற்கக் கூடியது சென்னை மாநகரமென்றால் மிகையாகாது. இந்நகர் பல சிறப்புப் பண்புகளைக் கொண்டிருக் கிறது. அச் சிறப்புப் பண்புகளில் ஒன்று மாநகராட்சி நிருவாகமாகும். இந்தியாவிலேயே முதன்முதலாக மாநகராட்சி ஏற்படுத்தி, உள்ளாட்சி நிருவாகத்திற்கு வித்திட்டது சென்னை மாநகராட்சியாகும். 16-ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சென்னையானது ஒரு சிறு மீன் பிடிக்கும் கிராமமாக இருந்தது. அப்போது கிராம அரசாங்க முறை நிருவாகமே சென்னையில் நடந்து வந்துள்ளது. கிராமத்தலைவர், கணக்கர் மற்றும் தலையாரி, காவல்காரன் ஆகியோர் கிராம அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகளாவர். கிராமத்தின் ஒட்டுமொத்த செயல்களுக்கும் கிராமத்தலைவர் பொறுப்பு வாய்ந்தவராவார். கிராம வரவு, செலவுக் கணக்குகளைக் கணக்கர் பராமரித்து வந்தார். கிராமத்தின் ஒழுங்கையும் அமைதியையும் பராமரிக்கும் பொறுப்பைத் தலையாரியும், காவல்காரனும் மேற்கொண்டிருந்தனர். கிராமத்தின் மக்கள்தொகை அதிகமாக இல்லாத காரணத்தினாலும், பிரச்சனைகள் அதிகமாக இல்லாததாலும் இந்த அதிகாரிகளே நிருவாகத்தை நன்றாகக் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்தனர்.

இந்தியாவில் ஐரோப்பியர்களின் வியாபார ஆதிக்கம் 15-ஆம் நூற்றாண்டிலிருந்து பரவ ஆரம்பித்தது என்பதை அறிவோம். மசூலிப்பட்டினத்திலும், அர்மகன் (Armagon) ஆகிய இடத்திலும் வியாபாரம் செய்து வந்த ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் தடைப்பட ஆரம்பித்தது. இவ்விடங்களில் உள்ள மக்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கொதித்து எழுந்தனர். ஆங்கிலேயர்களைத் தாக்கவும்

முற்பட்டனர். இதனால் பிரச்சனைகள் அதிகமாயின. ஆங்கிலேயர்கள் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையையும் உணர ஆரம்பிக்கவே புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார்கள். இவ்வாறு புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முதலாவது கண்டு பிடிக்கப்பட்ட இடமே சென்னை ஆகும். முதன்முதல் வியாபார இடம் 1620-ஆம் ஆண்டு சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. இன்றைய சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டுவதற்குரிய இடத்தை பிரான்சிஸ் டே (Francis Day) என்பவருக்கு விஜயநகர அரசர் ரெங்க ராயர் என்பவர் 1639-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வழங்கினார். வெங்கடாத்ரி, அய்யப்பா ஆகிய இரண்டு சகோதரர்களில், மூத்த சகோதரரிடமிருந்து 1639-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் தங்களது வியா பாரக் கம்பெனியைச் சென்னையில் அமைக்க அனுமதிபெற்றனர் என ஆங்கிலேயக்கம்பெனிப் பதிவேடுகள் கூறுகின்றன. ஆங்கிலேயர்களின் வியாபார வளர்ச்சியானது இந்தக்கடற்கரைப் பகுதியில் மிகுந்த இலாபகரமாகத் திகழ்ந்தது. இதைக் கண்ணுற்ற இந்திய வியாபாரி களும், கைவினைஞர்களும் சென்னைக்கு வருவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். ஆங்கிலேயர்களும், இந்தியர்களுக்கு வசதியாக வீடுகளைக் கட்டிக் குடியேறும் வகையில் உற்சாகப்படுத்தினார்கள் ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்கு 30 ஆண்டுகளுக்கு இறக்குமதி வரியிலிருந்து விதிவிலக்கு அளித்து, வீடுகள் கட்டி நிரந்தரமாகக் குடியேறும் வகையில் வசதி செய்து கொடுத்தார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியில் கிட்டத்தட்ட 20 முதல் 30 பணியாளர்களும் மற்றும் படைவீரர்களுமாகக் குறைந்த எண்ணிக்கையில்தான் ஐரோப்பியர்கள் சென்னையில் வசித்து வந்தனர். இவர்கள் சாந்தோமில் வசித்து வந்த போர்ச்சுக்கீசியர்களை வரவழைத்து, சென்னையில் அவர்களை வீடுகள் கட்டும்படி ஊக்குவித்தனர். ஆங்கிலேயர்களின் பாது காப்பின் கீழ் போர்ச்சுக்கீசியர்களும் வாழ மிகவும் விரும்பினார்கள். ஆரம்பகாலத்தில் சென்னையின் அதிவேக வளர்ச்சிக்குக் கீழ்க்கண்ட காரணங்கள் முக்கியமானவை எனலாம். அவை :

1. பல்வேறு இடங்களில் அமைதியில்லாமல் போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்த காரணத்தால், மக்கள் நிம்மதியாக, அமைதியுடன் வாழ்வதற்குப் போதிய பாதுகாப்புக்களைச் சென்னை யிலுள்ள கோட்டை அளிக்க முன்வந்தது.

2. ஆங்கிலேயர்களின் தொடர்பால், இந்திய வியாபாரிகளும் கைவினைஞர்களும் வியாபாரத்தினால் மிகுந்த பயன்கிட்டுமென எண்ணினர்.

இந்த இருகாரணங்களால், கோட்டையைச் சுற்றிலுமாகப் பல்வேறு பகுதிகளிலுள்ளவர்கள் குடியேற ஆரம்பித்தனர். இதன் விளைவாக இன்றைய தற்காலச் சென்னை நகரம் ஏற்பட்டது. கோட்டையைச் சுற்றிலும் இருந்த பல்வேறு கிராமங்கள் இத்துடன் இணைக்கப்பட்டன.

சென்னையில் நீதி வழங்கும் பணி ஆரம்ப காலத்தில் உள்ளூர் நீதிபதிகளிடமே இருந்தது. மக்களுடைய தன்மைகளை அறிந்து, சூழ்நிலைக்கேற்றவாறு நீதி வழங்கவும், நீதியைத் தவறுதலாகப் பயன்படுத்தக்கூடாது என்பதிலும் மக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவே, நீதி வழங்கும் பணி இந்தியர்களிடமே விடப்பட்டது. எனினும் சில நாட்களுக்குள் அரசாங்கம் நீதி வழங்கும் முறைக்குக் கட்டுப்பாடு விதித்தது. அதன்படி ஆங்கிலேயப் பிரதிநிதியின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் இந்திய நீதிபதிகளினால் நீதி வழங்கப்பட்டது. ஆனால் கண்ணப்பர் செய்த தவறின் பொருட்டு இந்திய நீதிபதிகள் நீதிவழங்கும் முறை பறிக்கப்பட்டது. கண்ணப்பர் என்ற இந்தியப் பிராமணர், முதல் அதிகாரியாகவும், நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். நகரத்தின் சிறிய வழக்குகளையும் குற்றங்களை யும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்று இருந்தார். இவர் மீது சாட்டப்பட்ட கையூட்டு, இலஞ்சம் ஆகிய குற்றங்களினால், கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். விசாரணையில் கண்ணப்பர் குற்றவாளியென நிரூபிக்கப்படவே, ஐரோப்பியர்கள் நீதிபதிகளாக 1648-ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கப்படலாயினர். பின்னர் இந்திய நீதிமன்றங்களில் ஆங்கிலேயர்கள் தலைமை தாங்க முற்பட்டனர். ஆங்கிலேயர்கள் உள்ளூர் பழக்க வழக்கங்கள், நடத்தைகள் ஆகிய வற்றை அதிகமாகத் தெரிந்து கொள்ளாமலேயே தலைமை தாங்க முற்பட்டுவிட்டதால், ஆங்கிலேய நீதிபதிகளிடம் ஆணவம் தலை தூக்கியது. ஆங்கிலேயர்கள் தங்களது நோக்கங்களை ஈடேற்ற அனைத்துப் பிரிவுகளிலும் அவர்களே தலைமைப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்ற எண்ணம் உதித்தது.

இதற்கிடையே புனித ஜார்ஜ் கோட்டை மாநிலமாக மாற்றப் பட்டு அதற்கு ஆங்கிலேயப் பிரதிநிதி ஒருவர் தலைவராக நிய மிக்கப்பட்டார். இத்தலைவருக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப் பட்டன எல்லாக் கோட்டைகளும், வியாபார இடங்களும் தலைவரின் கீழ் இருக்கும் வகையில் 1661-ஆம் ஆண்டுச் சாசனம் வரையறுத்தது. ஆளுநர்களையும் மற்றும் பிற அதிகாரிகளையும் நியமனம் செய்யும் அதிகாரத்தையும் தலைவர் கொண்டிருந்தார். கிழக்கிந்தியக் கம்பெனி யானது பாக்ஸ் கிராப்ட் (Foxcraft) என்பவரைச் சென்னைக்கு முதல் ஆளுநராக நியமனம் செய்தது. ஆளுநருக்கும் அவரது குழுவிற்கும் முழு அதிகாரத்தையும் கிழக்கிந்தியக் கம்பெனி வழங்கியது. அரசுத்துறை வழக்குகள் மட்டுமல்ல, குற்றவியல் வழக்குகள் ஆகியவற்றை விசாரிக்கும் பொறுப்பு, அதிகாரம் ஆகியவற்றை ஆளுநர்கள் பெற்றதுடன், தேவைப்பட்டால் அவசர காலச் சட்டங்கள் பிறப்பிக்கவும் அதிகாரம் பெற்று இருந்தனர்.

பின்னர் 1678-ஆம் ஆண்டு ஆளுநர் பதவிக்கு ஸ்டிரியான்சாம் மாஸ்டர் (Streynsham Master) என்பவர் வந்தார். இவர் வங்காளத்தி லுள்ள கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமைப் பிரதிநிதியாக 1676-ஆம் ஆண்டிலிருந்து 1681-ஆம் ஆண்டு வரையிலும் இருந்துள்ளார். இவர் நகராட்சி நோக்கங்களுக்காகச் சில குறிப்பிட்ட அடிப்படை அமைப்புக்களை ஏற்படுத்த முற்பட்டார். நகராட்சி நோக்கங்களைச் செயலாக்க வீட்டுவரி விதிக்க வேண்டுமென முன்னறிவித்து, வீட்டு வரியை வசூலிக்க உதவியாளராகச் சிலரை நியமனம் செய்தார். துப்புர வாளர்கள் என்பது இவர்களது பதவியின் பெயராகும். ஆனால் இன்று வரி வசூலிப்பவர்களைத்தான் துப்புரவாளர்கள் என்று அப்போது அழைக்கப்பட்டார்கள். ஸ்டிரியான்சாம் மாஸ்டர் முன்மொழிந்த வீட்டுவரியானது அனைவராலும் வெறுக்கப்பட்டதோடன்றி, இந்தியர் கள் தீவிரமாக அதை எதிர்க்க ஆரம்பித்தனர். ஏனெனில் இந்தியர்கள் அங்குக் குடியேறிய 40 ஆண்டுகளில் இந்த மாதிரியான வரிகள் விதிக்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினர். தெருச்சுத்தம், சுகாதாரம் போன்றவைகள் பொதுப்படையாக நகராட்சியினால் கவனிக்கப்படாமல், தனிமனிதர்களால் ஒவ்வொருவரும் அவர்களுக் கேற்ற முறையில் அப்பணிகளைச் செய்து வந்துள்ளனர். இதனால் ஸ்டிரியான்சாம் மாஸ்டர் அவருடைய திட்டத்தைக் கைவிடும்படி

யாகிவிட்டது. இருப்பினும் அவர் தம்முடைய திட்டத்தை மறைமுகமாக மற்ற வழிகளில் செயலாக்கம் கொடுத்தார். நெல் மற்றும் சாராயம் போன்றவற்றின் மீது தீர்வை விதித்தார். புகையிலை மீதான தீர்வையின் அளவை அதிகரித்தார். இவ்விருவிதத் தீர்வைகளினால் கிடைத்த பணத்தை வைத்து, தெருச் சுகாதாரத்தைப் பராமரித்தார். இவ்வாறாக, வரியைத் தீர்வையின் மூலமாக ஈடு கட்டியதன் விளைவாக, இந்திய மக்கள் வரியைச் செலுத்தத் தயாரா-யினர். இவர் 1687 - ஆம்ஆண்டு அரசாங்கத்திற்கு அனுப்பிய அறிக்கையே இவரது முதல் அறிக்கையாகும். இவ்வறிக்கையில், இந்தியர்கள் கம்பெனி விதிக்கின்ற ஆறு பென்சு (Six pence) வரியை அதிகார பூர்வமாக விதிப்பதைக் காட்டிலும், ஐந்து ஷில்லிங்ஸ் வரியை அவர்களே தாராளமாகப் பொது நன்மைக்குத் தருவதற்குத் தயாராக உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் 1687-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் தேதி அவசர நிலையை உத்தேசித்து போர்க்காலச் சட்டம் சென்னையில் பிரகடனம் செய்யப்பட்டது. இந்தப்போர்க்காலச் சட்டமானது இரண்டாம் ஜேம்ஸ் அரசரின் சாசனத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டதாகும். ஒரு நாட்டிலிருந்து தப்பிச் செல்லக்கூடியவர்களுக்காகவும், கொள்ளைக்காரர்களைத் தண்டிக்கும் வகையிலும் 1688-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் போர்க்கால நீதிமன்றம் அமைக்கப்பட்டது. கொள்ளைக்காரர்களைத் தண்டிக்கும் நீதிமன்றத்திற்கு ஆளுநர் தலைமை தாங்கி நடத்தினார்.

இச் சூழ்நிலையில் சென்னை நகரில் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப நன்றாக ஆட்சி செய்யவும், வியாபாரத்தை அதிகரிக்கவும், சிறிய விஷயங்களைத் தெள்ளத் தெளிய, விரைவாகத் தீர்மானித்து முடிவு செய்யவும் மாநகராட்சி தேவைப்பட்டது. சென்னை மாநகராட்சி ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் ஜோஸ்யா சயில்டு (Mr.Josiah child) என்பவர் ஆவார். இவரது முயற்சியால்தான் மாநகராட்சி ஏற்பட்டது. இவருக்கு மாநகராட்சி சென்னையில் அமைக்க வேண்டுமென்ற கருத்தை உணரச் செய்தவர்கள் டச்சுக்காரர்கள் என்றால் பொருந்தும். ஏனெனில் ஜோஸ்யா சயில்டு டச்சு அரசாங்கம் போல ஓர் அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென நீண்ட காலமாகவே எண்ணி வந்துள்ளார். ஆனால் அவ்வரசாங்கமானது, இங்கிலாந்தின் பாரம்பரியக் கருத்திற்கேற்ப ஒழுங்கு செய்து மாநகராட்சியை அமைத்தார்.

ஆனால் இவ்வளவு முயற்சியும் செய்த பின்னரும் கூட, சென்னை மாநகராட்சியை அரசு முறையான சாசனத்தால் ஏற்படுத்த இயலவில்லை. ஏனெனில் ஜோஸ்யா சயில்டுக்கு ஏராளமான எதிர்ப்புகள் இருந்ததால், கம்பெனியின் சாசனத்தால் ஏற்படுத்தியது. கம்பெனியின் சாசனத்தால் ஏற்படுத்துவதற்குரிய காரணங்கள் தனிப்பட்ட விரோதங்கள் போன்றவைகள் என அப்போதைய ஆளுநர் யேல் (Yale) என்பவருக்கு இவர் விளக்கம் அளித்துள்ளார்.

இவ்வாறாகச் சென்னை மாநகராட்சியை ஏற்படுத்த பெரும் பங்கு ஏற்றவர் சயில்டு என்றாலும், மாநகராட்சியானது ஆங்கிலேயர்களின் நன்மைக்காகத்தான் என்பதையும் கூறியுள்ளார். இங்கிலாந்திற்கு அனுப்பிய முதல் அறிக்கையில் சயில்டின் கருத்துறை விளக்கப்பட்டுள்ளது. அது, "ஐரோப்பியர்களுடன் இந்தியர்களுக்கும் நகர நிருவாகத்தில் பங்கு கொடுத்து சிறப்புரிமைகளும், நன்மைகளும் நம்முடைய சாசனத்தால் வழங்கினால் இந்தியர்கள் இதன் மூலம் மகிழ்ச்சியடைவார்கள். நாம் இதைப் பயன்படுத்தி, அவர்களது ஒத்துழைப்பைப் பெற்று நம்முடைய ஆட்சியை வலுப்பெறச் செய்யலாமென" சயில்டு கூறியுள்ளார். ஆகவே இந்தியர்களின் ஆதரவைப் பெறுகின்ற செயல் எண்ணத்தில் மாநகராட்சி தோற்றுவிக்கப்பட்டது. சென்னை நகரின் வளர்ச்சியைப் பராமரிக்க, சுத்தமாக, சுகாதாரமாகப் பல்வேறு அவசியத் தேவைகளை நிறைவேற்ற, பல்வேறு வசதிகள் மக்களுக்கு அளிப்பதற்காகவும்தான் மாநகராட்சி ஏற்பட்டது. இதற்குச் சான்று ஸ்டிரியான் சாம் மாஸ்டரே 1661-ஆம் ஆண்டு மாநகராட்சித் திட்டத்தை முயற்சித்து தோல்வி கண்ட சம்பவம் விளக்குகிறது.

சென்னையில் மாநகராட்சி அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் 1688-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ஆம் தேதி தொடங்கின. 1688-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ஆம் தேதி சென்னை மாநகராட்சி 1687ஆம்ஆண்டுச் சாசனத்தின்கீழ் அமைக்கப்பட்டது இம்மாநகராட்சி இங்கிலாந்திலுள்ள போர்ட்ஸ் மவுத் மாநகராட்சி (Portsmouth Corporation) யின் மாதிரியாக அமைக்கப்பட்டது சென்னை மாநகராட்சியில் ஒரு தலைவர், 12 நகராட்சி நியமன உறுப்பினர்கள் (aldermen) மற்றும் 60க்கு மேற்பட்ட நகரவை உறுப்பினர்கள் (Burgesses) ஆகியோர் கொண்டதாக அமைக்கப்பட்டது. நத்தானியல் ஹிக்கின்சன் (Mr. Nathaniel Higginson) என்னும் ஆளுநர் மன்ற உறுப்

பினர் முதல் மாநகராட்சித் தலைவராக நியமனம் செய்யப்பட்டார். மூன்று மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் முறையே போர்ச்சுக்கீசியர், ஆங்கிலேயர், இந்தியர் மற்றும் யூதர் (Jewish) ஆகிய இனப்பிரிவுகளிலிருந்து நியமனம் செய்யப்பட்டார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களில் சிலரை மாநகராட்சித் தலைவரும் மாநகராட்சி மன்றமும் சேர்ந்து நியமன உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். 12 மாநகராட்சி நியமன உறுப்பினர்கள், 29 வியாபாரிகள் ஆகியோரை நகரவை உறுப்பினர்களாகச் சாசனமே நியமனம் செய்தது. மாநகராட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும் மாநகராட்சி நியமன உறுப்பினர் நியமனம் செய்யப் படுகின்ற முறை பற்றியும், நகரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்ற முறை பற்றியும் சாசனமே தெளிவாக வரையறுத்தது.

மாநகராட்சித் தலைவர், மூன்று மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் ஆகியோர்களால், மேயர் முறை மன்றம் (Mayors Court) அமைக்கப்பட்டது. மேயர் முறை மன்றமானது குறிப்பிட்ட அளவு (பகோடா) மதிப்பிற்குக் குறையாத அரசுத்துறை மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் வாய்ந்ததாகத் திகழ்ந்தது. மூன்று ரூபாய்களுக்கு இணையான ஒரு தங்க நாணயம் பகோடா ஆகும். தண்டனை விதிக்கவும் இம்முறை மன்றம் அதிகாரம் பெற்று இருந்தது. எனவே ஆரம்ப காலத்தில் மாநகராட்சியின் செயலானது நகராட்சிச் செயல்களோடு, நீதி நிருவாகத்தையும் செய்தது. இவ்விரு செயல்களும் 1691-ஆம் ஆண்டு சர் ஜான்பிக்ஸ் (Sir John Biggs) என்ற நாவாய் நீதிமன்றப் பதிவாளர் இறக்கும் வரையிலும் மேயர் முறை மன்றத்தால் செய்யப்பட்டன. நாவாய் முறை மன்றமானது (Admiralty Court) மேயர் முறை மன்றத்திற்கு உயர்ந்த நீதி மன்றம், மேயர் முறை மன்றம் நாவாய் துறை முறை மன்றத்தின் கீழ் இயங்கிக் கொண்டு வந்த நீதி மன்றம், பின்னர் மேயர் முறை மன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் அதிகார வரைமுறை சம்பந்தப் பட்ட வகையில் மோதல்களும், தகராறுகளும் ஏற்படவே, சிக்கல்கள் அதிகரித்தன.

இதனால் மாநகராட்சி 1726ம் ஆண்டு மற்றொரு சாசனத்தின் கீழ் திருத்தி அமைக்கப்பட்டது. மாநகராட்சியின் பெயரானது சென்னை மேயர், மாநகராட்சி நியமனத்தவர்களென'' (Mayor

and Alderman of Madraspatam) பெயர் மாற்றப்பட்டது. மாநகராட்சி திருத்தியமைக்கப்பட்டதன் காரணம் யாதெனில், நீதி நிர்வாகத்தை திறம்பட, விரைவாக, செய்யக்கூடிய தகுதிபெற்ற திறமை வாய்ந்தவர்களை நியமனம் செய்யவும், அரசுத்துறை. குற்றவியல், தூக்கு தண்டனைகள் போன்றவைகள் விதிக்கவேண் மென்பதற்காகவும் திருத்தி அமைக்கப்பட்டது. இம்மாநகராட்சியில் மேயருடன் ஒன்பது மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் இருந்தனர். இந்த ஒன்பது பேர்களில் மேயருடன் சேர்த்து ஏழுபேர்கள் ஆங்கிலேயர்களாக இருக்க வேண்டுமெனச் சாசனம் வரையறுத்திருந்தது. மேயர் ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சி நியமன உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநகராட்சி நியமன உறுப்பினர்களாக நகரப் பிரமுகர்கள் ஆயுள் காலத்திற்கு தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். இந்த 1726-ஆம் வருடச் சாசனமானது ஷெரிப் என்ற பதவியை மாநகராட்சியில் ஏற்படுத்தியது. ஷெரிப்பை ஆளுநர் குழு நியமனம் செய்தது. மேயர் முறை மன்றம் வழங்கும் தீர்ப்புக்களை செயலாக்கம் செய்வது இவருடைய கடமையாக ஆக்கப்பட்டது. இம் மாநகராட்சி முறை பிரான்சுக்காரர்கள் சென்னையைக் கைப்பற்றும் வரையில் 1746-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நீடித்தது. பின்னர் பிரான்சின் கையில் சென்னை சிக்குண்டு, அதன்பிடியில் 1749-ஆம் ஆண்டு வரை இருந்தது. இதற்குள் மாநகராட்சி முறைமையானது அழிவுபடவே, ஆங்கிலேய முறைமையைக் காப்பாற்றவும், அதிலுள்ள தீங்குகளைக் களையவும் புதிய சாசனம் 1753-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இதுவே அரசானது கம்பெனிக்கு நேரடியாக வழங்கிய கடைசிச் சாசனம் ஆகும். அதற்குப் பின்னர் நேரடித்தொடர்புகள் நீக்கப்பட்டன. இச்சாசனமானது மேயரைத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்தது.

இதற்குள் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த, அதன் இலாபங்கள், செயல் நடவடிக்கைகள் போன்றவற்றை ஆராய ஆங்கிலேய அரசாங்கம் முற்பட்டது. இதன் விளைவாக 1773-ஆம் ஆண்டில் பாராளுமன்றம் ஒழுங்கு முறைச் சட்டத்தை நிறைவேற்றியது. இவ்வொழுங்கு முறைச் சட்டத்தினால் கிழக்கிந்தியக் கம்பெனி ஆங்கில அரசாட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இதற்குமுன் கிழக்கிந்தியக் கம்பெனி, 1729-ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. வீட்டு வாடகையின் வருடாந்-

தரத் தொகையில் $\frac{1}{20}$ பாகம் குடியிருப்பவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டுமென்ற தீர்மானத்தையும் இயற்றியது. இவ்வாறு வீட்டு வரியானது, வீடுகளின் தரத்திற்கேற்ப, மதிப்பிற்குத்தக்கவாறு வசூல் செய்யும் முறை அமைக்கப்பட்டது நகரைச் சுத்தம் செய்யும் பணி நில அளவையாளர்கள் (Surveyors) என்ற அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. நகரத்தின் பாதுகாப்பும் பராமரிப்பும் கலெக்டர்கள் (collectors) என்னும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இவர்கள் இவ்வேலையை ஒப்பந்தத்தின் மூலமாகச் செய்தனர்,

எனவே உண்மையான நகராட்சி நிர்வாகமானது 1729-ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இச்சட்டமானது சென்னை, பம்பாய், கல்கத்தா, ஆகிய மூன்று நகரங்களுக்கும் பொருந்தக் கூடியதாக அமைந்தது. அந்நகரங்களில் ஒழுங்கான நிர்வாகம் நடைபெறுவதற்கு உண்டான வழிவகைகளும் செய்யப்பட்டன. அமைதி நேர்மையாளர்களை (Justices of peace) ஏற்படுத்தி அவர்களிடம் நகர நிர்வாகத்தை ஒப்படைக்கும் வண்ணம் 1792-ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டம் வழிவகுத்தது. தெருக்களைக் கூட்டி சுகாதாரப் படுத்துதல், வரிகளை வசூலித்தல், போதை தரும் பானங்களை விற்பதற்கு அனுமதிவழங்கல் ஆகிய அதிகாரங்கள் கொண்டவர்களாக அமைதி நேர்மையாளர்கள் இருந்தனர். எனவே புதிய இம்முறையானது இதுவரையிலும் இயங்கிக்கொண்டுவந்த மாநகராட்சி முறைக்கு முற்றிலும் வேறுபட்டதாகும். இப் புதியமுறையில் மாநகராட்சி செயல்கள் மட்டுமே செய்யப்பட்டன. பின்னர் நகராட்சியை சீர்படுத்தும் எண்ணத்தில் 1798-ஆம் ஆண்டு ஒருகுழுவை அரசாங்கம் அமைத்தது. இக்குழு சந்தைகள், போக்குவரத்துக்கள் குறித்த ஒழுங்கு விதிகள் வரையறுக்க, ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள் பெற பரிந்துரை செய்தது. மேலும் சுங்கவரிகளின் வருமானத்தில் ஒரு பகுதியை நகராட்சியின் நோக்கங்களுக்காகவும் செலவிட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது. இதற்கிடையே 1978 ஆம்ஆண்டு புதிய பதிவாளரின் முறைமன்றம் (Records courts) ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியது. பதிவாளரின் முறை மன்றம் ஏற்படுத்தியதிலிருந்து புதிய நீதி முறையானது வளரத்தொடங்கியது. பழைய மேயர் முறை மன்றமானது இப் புதிய பதிவாளரின் முறை மன்றத்திற்குள்ளேயே இணைக்கப்பட்டது. எனவே நீதி வழங்கத் தனி நீதித்துறையும், நகராட்சிச் செயல்கள்

செய்யத் தனி அமைப்புமாக இரண்டு தனித்தனி அமைப்புக்கள் செயல்பட ஆரம்பித்தன. இதற்கு முன்னர் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து இருந்தன. ஆகவே இரண்டையும் தனித்தனியாகப் பிரிக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் மாநகராட்சி விவகாரங்களைக் கவனிப்பதற்கு அமைதி நேர்மையாளர்கள் முழு அதிகாரம் பெற்று இருந்தார்கள், உள்ளூர் செயலாட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் (Local Executive Council) அமைதி நேர்மையாளர்களது செயல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கி நடத்தி வந்தார். பின்னர் அரசாங்கமானது மூத்த அரசு அதிகாரி ஒருவரைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வேண்டுமென வலியுறுத்தியது. அமைதி நேர்மையாளர்களின் எண்ணிக்கை ஒரே அளவு எண்ணிக்கையாக இல்லாமல், நேரத்திற்கு நேரம் மாறிக்கொண்டே இருந்தது. 1808-ஆம் ஆண்டில் அமைதி நேர்மையாளர்களின் எண்ணிக்கை ஐந்தாக இருந்தது. பின்னர் இது 1818-ஆம் ஆண்டில் ஆறாகவும், சில சமயங்களில் ஏழாகவும் இருந்து வந்தன. அமைதி நேர்மையாளர்களின் எண்ணிக்கையானது பத்தாக 1821 - ஆம் ஆண்டில் உயர்ந்தது. பின்னர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. கூட்டங்களை நடத்த அப்போது ஒழுங்கு விதிகள், குறைவெண் போன்றவை வரையறுக்கப்படாமல் இருந்தன. கூட்டங்களை நடத்துவதற்கு ஒழுங்கு விதிகள் வரையறுக்கப்படாமலிருந்ததால், கூட்டம் எல்லா முறையிலும் எல்லா நேரத்திலும் நடைபெற்று வந்துள்ளது. கூட்டம் நடத்தக் குறைவெண் (quorum) இருக்குமாயின், அமைதி நேர்மையாளர்களின் எண்ணிக்கையை ஓரளவிற்கு நாம் ஊகித்தறிய முடியும். அமைதி நேர்மையாளர்களின் எண்ணிக்கை இரண்டாக 1825-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31-ஆம் தேதி கூட்டத்தில் இருந்துள்ளது. இது தவிர, ஒரே ஒரு அமைதி உறுப்பினரே வருகை தந்து, கூட்டத்தை நடத்தியும் உள்ளார். இதுவரையிலும் அமைதி நேர்மையாளர்களின் நிருவாகத்தில் யாரும் தலையீடு செய்யவில்லை. அவர்கள் முழு அதிகாரத்தையும் அனுபவித்து வந்துள்ளனர்.

நகராட்சிப்பணிகளை ஒருவரும், இருவருமாகச் செய்தால் பணிகளைத் திறமையாகச் செய்ய முடியாது என்பதால், திறமையாகப் பணிகளைச் செய்ய மாற்றுமுறை தேடப்பட்டது.

அம்முறை எப்படி இருக்க வேண்டும், எப்படி இருந்தால் சிறப்பாகச் செய்ய முடியுமென்பதெல்லாம் ஆராயப்பட்டன. அரசாங்கமும் நேரடியாக நகராட்சி நிருவாகத்தில் தலையிட்டு ஒழுங்குபடுத்த முயற்சித்தது. இதனால் வீட்டு வரிகள் விதிக்க மதிப்பாய்வு செய்யும் அமைதி நேர்மையாளரின் அதிகாரம் குறைக்கப்பட்டது. வரிகள் விதிக்க மதிப்பாய்வு செய்வது சரிதானா? என்பதைத் தெளிவு படுத்தும் வகையில் வரிவிதிப்பிற்கு ஆளுநர் குழு தனது அங்கிகாரத்தையும் ஒப்புதலையும் அளித்தது. இவ்வாறு அரசாங்கம் வரிகள் விதிப்பதை ஒழுங்குபடுத்தியதால் அமைதி நேர்மையாளர்களின் அதிகாரம் குறைந்தது. எனவே அமைதி நேர்மையாளர்கள் அரசாங்கத்திற்குக் கீழ் இயங்கும்படியாயிற்று. அமைதி நேர்மையாளர்கள் விதித்த வரியில், மதிப்பீட்டில் திருப்தி ஏற்படவில்லையென்றால், அரசாங்கம் அவற்றை மாற்றும்படிக் கேட்டுக்கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. அரசாங்கம் கூறியவற்றையே பெரும்பாலும் அமைதி நேர்மையாளர்கள் ஏற்றுக் கொண்டனர் என்பதில் ஐயமில்லை. வரிகள் விதிக்க மதிப்பாய்வதில் பொதுமக்களுக்கும் அதிகாரம் வழங்கினால், பொருத்தமாகவும், உண்மையாகவும் மதிப்பீடுகளைச் செய்யமுடியுமென உணரப்பட்டது. இதன் விளைவாக, 1841-ஆம் ஆண்டு வரி விதிப்பதற்கு மதிப்பீடு செய்யும் அதிகாரம் மக்களுக்கு ஓரளவு வழங்கப்பட்டது. வரி செலுத்துவோர்களின் மதிப்பாய்வு, வரி வசூல் நிதியை மேல்நிர்வாகம் செய்தல் ஆகியவற்றைச் செய்ய 1814-ஆம் ஆண்டுச் சட்டம் அனுமதித்தது.

சென்னை மாநகராட்சி நிருவாகமானது 1793-ஆம் ஆண்டிலிருந்து 1856-ஆம் ஆண்டு வரையிலும் அமைதி நேர்மையாளர்களினால் நடத்தப்பட்டது. அமைதி நேர்மையாளர்கள் தங்களுக்கு உதவியாகச் சில அலுவலர்களை நியமித்து நிருவாகம் செய்தனர். 'அமைதி எழுத்தர்' (clerk of peace) என்ற ஓர் அதிகாரி முக்கியமான அதிகாரியாவார். இவர் அமைதி நேர்மையாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் தலைமை அமைச்சகப் பணியாளராகத் திகழ்ந்தார். அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளக் கூடியவராக இவர் இருந்ததால், மதிப்பாய்வு, வரி வசூல் ஆகியவற்றைக் கண்காணிக்கும் அதிகாரியாகவும் இவர் செயல்

பட்டார். இவருடைய ஊதியமானது ரூ. 150 ஆகும். இவரை யடுத்து, மதிப்பீட்டாளரும் அரசுத்துறைப் பொறியியலாரும் அமைதி நேர்மையாளர்களுக்குக் கீழ் செயல்பட்டனர். இவ்வாறு அமைதி நேர்மையாளர்கள் நேரடியாகக் கவனிக்கும் கடமைக ளோடு, பல்வேறு அதிகாரிகளைக் கண்காணிக்கும் பொறுப்பை யும் கொண்டிருந்தனர்.

அமைதி நேர்மையாளர்கள் ஆற்றிய பணி சிறப்பானதாகும். இவர்களது காலத்தில்தான் பொதுப்பணிக்கென அதிகமான செலவுகள் செய்யப்பட்டன. தெருச்சுத்தம், தெரு விளக்கிடல், சாலைகள் அமைத்தல், தெருச் சுகாதாரம், வடிகால், குடிநீர் வசதி மற்றும் பிற நகராட்சிப் பணிகள் இவர்கள் காலத்தில் அதிகமாகச் செய்யப்பட்டன. இப் பணிகள் அனைத்தும் மிகுந்த செலவு பிடிக்கக் கூடிய பணிகளாக இருந்தன. ஆனால், அமைதி நேர்மை யாளர்கள் வசூலித்த வரியானது மிகவும் அதிகமாக இருந்ததால் மேற்குறித்த பணிகளை நிறைவேற்ற முடிந்தது. தவிர, பணத்தை மீதப்படுத்தவும் முடிந்தது. நகராட்சி நிதியில் இருப்புத்தொகை யாக ரூ. 2, 60, 000 செலவு செய்யாமல் அமைதி நேர்மையாளர் கள் மீதம் வைத்துவிட்டுச் சென்றனர். பின்னர் அமைதி நேர் மையாளர்கள் 1856-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் அகற்றப்பட்டு விட்டனர். அவர்களுக்குப் பதிலாக நகராட்சி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள் மாநில நகரங்களை வளப்படுத்தவும் பாதுகாக் கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க 1856-ஆம் ஆண்டுச் சட்டம் வழிவகுத்தது. அமைதி நேர்மையாளர்களுக்குப் பதிலாக மூன்று ஆணையாளர்கள், நகராட்சி ஆணையாளர்கள் என்ற பெயரில் நியமனம் செய்யப்பட்டு, கூட்டாக அவர்கள் செயல்படும்படியும் செய்யப்பட்டது. ஆகவே, கூட்டுத்தன்மையில் செயல்பட்டால்தான் நகரப்பணிகளைச் செம்மையாகச் செய்ய முடியுமென்றும், தனிநபர்களால் செய்ய இயலாது என்ற கார-ணத்தை முன்னிட்டும், ஆரம்ப முதலே கூட்டு அமைப்புக்கள் அமைப்பதில் கவனம் செலுத்தியது அரசாங்கம்.

இன்றைய மாநகராட்சி முறையானது 1856-ஆம் ஆண்டில் உருவானதாகும். சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று

நகரங்களுக்கும் ஒரே மாதிரியான கொள்கையை அரசாங்கம் இதுவரையிலும் கடைப்பிடித்தது. இம்முறையினால் வெற்றிபெற இயலவில்லையாதலால், ஒவ்வொரு நகரத்தையும் அதன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கொள்கைகள் அமைத்து நிருவகிக்க வேண்டுமென்பதையொட்டி 1856-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1856 - ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி நிருவாகம் மூன்று ஆணையாளர்களிடம் விடப்பட்டது. இம்மூன்று ஆணையாளர்களையும் அரசாங்கம் நியமனம் செய்தது. இவர்களுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டது. நகரைப் பாதுகாப்பதும், வளர்ச்சியடையச் செய்வதும் இம்மூவரின் முக்கிய கடமைகளாக வரையறுக்கப்பட்டன. இச்சட்டம் கடமைகளை மட்டும் வரையறுத்த தோடு, நிலவரி மற்றும் வீட்டு வரிகளை உயர்த்தவும் மற்றும் பிற வரிகளையும் விதித்தது. 5 முதல் 7½ விழுக்காடு வரையிலும் நிலவரியும், வீட்டுவரியும் விதிக்கும் வகையில் அதிகமான வரி விதிக்க ஏற்பாடு செய்தது. சென்னை நகரின் மூன்று மைல்கள் சுற்றளவிலுள்ள குதிரைகள், மாட்டுவண்டிகள், மற்ற வாகனங்கள் போன்றவற்றிற்கும் வரி விதிக்கவும் வழி செய்யப்பட்டது.

சர். சார்லஸ் டிரிவில்யன் (Sir. Charles Trevelyan) என்பவர் சென்னை ஆளுநராக 1859-60-இல் இருந்தார். இவர் முதன் முறையாக மாநகராட்சியைப் பரந்த நோக்குடனும், விசாலமான தன்மையிலும் அமைக்க வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார். இவர் அப்பொழுது பணியாற்றிய அலுவலர், ஆணையர்களை உடனே நீக்கிவிட்டு, நகரத்தின் முக்கிய பிரச்சனைகளாகக் குடிநீர் வசதி, கழிவு நீரகற்றல் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றை மக்கள் பிரதிநிதிகளே கவனித்துக்கொள்ளும்படி செய்தார். மக்கள் பிரதிநிதிகள் அவர்களுக்குரிய பிரச்சனைகளென எண்ணி, அவைகளுக்குத் தீர்வு காண்பதில் அதிக அக்கறை எடுப்பார்கள் என்பது அவருடைய கருத்து. மேலும் ஊதியத்திற்காக உழைக்கும் அலுவலர், ஆணையர்கள் ஆகியோர்களைக் காட்டிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது அவர்களுடைய கடமையென்பதில்தான் கவனம் செலுத்துவார்களே தவிர, உண்மையான ஆர்வத்துடன் பிரச்சனைகளை அணுகமாட்டார்களென்பது உண்மை. எனவே நகரைப் பல பகுதிகளாகப் பிரிக்கவேண்டுமென்ற கருத்தையும் இவர் வெளியிட்டார்.

இங்ஙனம் நகர் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டால் எளிதாக அவைகளை நிருவகிக்க முடியுமென எண்ணினார். ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனவும், இவர்களுடன் அரசாங்கமும் சில நியமன உறுப்பினர்களை நியமித்து, நிருவாகத்தை இவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார். இவ்வாறு அமைக்கப்பட்டால் நகருக்குத் தேவையான அவசியப் பணிகளான குடிநீர்வசதி, தெருச் சுத்தம், சுகாதாரம், வடிகால், தெரு விளக்குகள், பாதைகள் மற்றும் பிற பொதுப் பணிகளையும், நகராட்சிப் பணிகளையும் செம்மையாகவும், சிறப்பாகவும் செய்ய முடியுமென நம்பினார்.

சர். சார்லஸ் டிரிவில்யனின் கருத்தைப் பிரதிபலிக்கும் தன்மையில் 1865-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேறியது. இச் சட்டத்தில் மூன்று கௌரவ ஆணையாளர்களை ஏற்கனவே உள்ள மூன்று ஆணையாளர்களுக்கு உதவியாக நியமனம் செய்யலாமென்ற அம்சம் இடம் பெற்றது. இது வரி விதிக்கும் அதிகாரத்தையும் மாநகராட்சிக்கு வழங்கியது. எனவே மாநகராட்சியானது வீட்டு வரியையும், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரியையும் உயர்த்தியது. வாகனங்கள் மற்றும் மிருகங்கள் போன்றவற்றிற்கு அனுமதிப் பட்டயங்கள் பெற வேண்டுமென ஆணை விதிக்கப்பட்டது. வியாபாரங்களுக்கும் தொழில்களுக்கும் அனுமதிகள் வழங்கத் தொகைகள் வசூலிக்கப்பட்டன. மாநகராட்சி எல்லைக்குள் நுழையும் மாட்டு வண்டிகள், விலங்குகள் மற்றும் பிற வாகனங்கள் மீது சுங்கவரிகள் உயர்த்தப்பட்டு, வசூல் செய்யப்பட்டன. இவ்வாறாக 1865-ஆம் ஆண்டுச் சட்டமானது, வரி செலுத்துவோர்களே நிருவாகத்தில் பங்கு பெறவேண்டுமென்பதையும், மாநகர்ப் பணிகளுக்குப் போதுமான பணவசதிகள் தேவைப்படக்கூடியதாக இருக்கவே, போதுமான நிதி பெறுவதற்கும் இச்சட்டம் வசதியளித்துள்ளது என்பதை அறியலாம்.

சென்னை நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் 1866-ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. கார்டிலியர் நதியில் (Corteliar river) ஓர் அணைக்கட்டு கட்டவேண்டுமென்ற தீர்மானமும் தீர்மானிக்கப்பட்டது. இது சென்னைக்கு

வடமேற்கில் 17 மைல் தொலைவில் இருக்கின்ற நதியாகும். இந்த அணைக்கட்டில் நீரைத் தேக்கிப் பின்னர் அதனை நகருக்குப் பங்கீடு செய்யலாமெனத் தீர்மானம் நிறைவேற்றி, அரசாங்கம் செயல்படத் தொடங்கியது. இந்தத் திட்டமானது 1872-ஆம் ஆண்டு நிறைவேறியது. இத்திட்டத்தினால் நகரின் தண்ணீர்ப் பற்றாக்குறை நீங்கியதோடு, ஆண்டு முழுவதும் மக்களுக்குக் குடிநீர் கிடைக்கும் வகையில் நிரந்தர வசதி செய்யப்பட்டது. இத்திட்டம் அமைவதற்கு முன்னர், நகரின் குடிநீர் வசதியானது சென்னை நகருக்குள்ளேயே அமைந்து இருந்தது. ஜார்ஜ் டவுண் (George Town) என்ற பகுதிக்கு வடக்கே உள்ள ஏழுகிணறு என்ற பகுதியிலும், சிறிய டிரிவிலியன் நீர்த்தொட்டியிலிருந்தும் தண்ணீர் வசதி செய்யப்பட்டு இருந்தது. ஏழுகிணறு பகுதியில் அமைந்துள்ள ஏழுகிணறு மற்றும் டிரிவிலியன் நீர்த் தொட்டித் தண்ணீர் ஆகியன, சென்னை நகருக்குப் பற்றாக் குறையாகவே இருந்ததால் கார்டிலியர் நதியில், அணைகட்டி குடிநீர் வசதி செய்யவேண்டிய அவசியமேற்பட்டது.

மாநகர் நிருவாகத்தில் மக்களுக்குப் பங்கு அளித்ததோடு, அவர்களுக்கு அதிகமான பங்கினை வழங்கத் தயாராக இருந்தது அரசாங்கம். மாநகர் மன்றத்தில் கௌரவ ஆணையாளராக மக்கள் பிரதிநிதிகள் திகழ்ந்த காரணத்தால், எளிதில் மக்களது ஆதரவைப் பெற்று மக்களது ஒத்துழைப்போடு குறைந்த செலவில் பணிகள் செய்யப்பட வழி ஏற்பட்டது. பின்னர் மக்களுக்கு அதிகமான அளவில் பிரதிநிதித்துவம் வழங்க 1867-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி, மாநகர் நிருவாகமானது ஒரு தலைவரிடமும் மற்றும் 32 கௌரவ ஆணையாளர்களிடமும் விடப்பட்டது. தலைவரை அரசாங்கமே நியமனம் செய்தது. அவருக்கு ஊதியமும் வழங்கப்பட்டது. 32 கௌரவ ஆணையாளர்கள், வரி செலுத்தும் பொது மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை ஆளுநர் குழு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆளுநர் குழுவானது சிலரை ஏற்றுக்கொள்ள மறுத்தால், வேறு சிலரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எனவே கௌரவ உறுப்பினர்களாயி

னும் சரி, அரசாங்கத்தின் ஆதரவோடுதான் பணியாற்ற வேண்டு மென்ற கட்டாயத்தின் கீழ் நகராட்சிச் செயல்கள் செய்யப்பட் டன. இச் சட்டமானது நகரை எட்டு நகர்வட்டங்களாகப் பிரிக்கவேண்டுமெனவும், ஒவ்வொரு நகர் வட்டத்திலிருந்து நான்கு பிரதிநிதிகள் அதாவது 4 கௌரவ ஆணையாளர்கள் தேர்ந் தெடுக்கப்படுவதற்கும் வழிவகை செய்தது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்காக மக்கள் தொகையைப் பதிவு செய்ய அமைப்புக்கள் அமைக்கப்பட்டன. இச்சட்டமானது எந்தெந்தக் காரியங்களுக்கு, செயல்களுக்கு மாநகர் நிதி செலவிடப்பட வேண்டுமென்பதைத் தெளிவாக வரையறுத்தது. மாநகராட்சி இதுவரை செலவழித்துப் பராமரித்து வந்த காவல் பணி மாநகர்ப் பணியிலிருந்து நீக்கப்பட்டது. பின்னர் மாநக ராட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், எல்டன் மாயோ (Elton Mayo) அவர்களின் தீர்மானமும், சாமுவேல் லாய்ங் (Samuel Laing) அவர்களின் நிதிநிலை அறிக்கைகளும், உள் ளாட்சி நிதி பெருக வழியமைத்தன. (எல்டன் மாயோ என்பவர் 1869-1872-ஆம் ஆண்டு வரையிலும் தலைமை ஆளுநராக இருந்தார். 1861-1862-ஆம் ஆண்டில் நிதி உறுப்பினராக சாமு வேல் லேயங் இருந்தார்.) ஏராளமான நிதி அதிகாரங்கள் முதன்முதலாக எல்டன் மாயோ அவர்களின் தீர்மானத்தால் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டன. இதே மாதிரியாக சாமுவேல் லேயங் என்பவரின் ஆண்டு நிதிநிலை அறிக்கையாலும் அவர் சமர்ப் பித்த பல்வேறு விளக்கங்களாலும் மாநிலங்களுக்கு அதிக நிதி தேவைப்படக் கூடியதென்பதை உணர்ந்து கூடுதலாக நிதிகள் வழங்கப்பட்டன.

மாநகராட்சி, ஏராளமான பணிகள் செய்யக்கூடிய வகை யில் சூழ்நிலையானது மாறிக்கொண்டே வந்தது. இதற்கேற்ற வகையில் 1871-ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட் டது. இந்தச் சட்டத்தின்படி மாநகராட்சிகளுக்கெனச் சில குறிப் பிட்ட மருத்துவமனைகளையும், நோய்த்தடுப்பு நிலையங்களை யும், ஆரம்பப் பள்ளிகளையும் நடத்தும் பொறுப்பு வழங்கப்பட் டது. ஆரம்பப் பள்ளிகள், மருத்துவ மனைகள் போன்றவைகள் மாநகராட்சியின் முக்கியப் பணிகளாகச் செய்யப்பட்டன. மேலும் இச்சட்டமானது மக்கள் பிரதிநிதிகளை அதாவது ஆணையாள களை மக்களே தேர்ந்தெடுக்கலாமென்ற தேர்வு முறையை யும் புகுத்தியது. ஆனால் இச்செயலுக்கு ஆளுநர் குழு அனுமதியளிக்காததால், பல்லாண்டுகள் வரையிலும் செயலக்

கப்படவில்லை. மேலும் அப்போது சென்னை நகரைச் சுற்றிப் பார்த்த பேராசிரியர் பேட்ரிக் கீடுஸ் (Prof. Patric Geddes) சென்னை மாநிலத்தில் உள்ள நகரங்களைப் பற்றி ஆராய்ந்து, அறிக்கையை 1914—15-ஆம் ஆண்டில் சமர்ப்பித்தார். அதில் சென்னை நகர் மிகுதியான மக்கள் தொகை கொண்ட. தனித்தனியான பல கிராமங்களைக் கொண்ட இணைந்த நகரம் என்று கூறியுள்ளார், இதனை அவர் ஆங்கிலத்தில் 'கன்னூர்பேசன்' (Connurbation) என்று விவரித்துள்ளார்.

ஆங்கிலப் பாராளுமன்றச் சட்டமானது 1871-ஆம் ஆண்டிலிருந்து 1878-ஆம் ஆண்டிற்குள் அதிகமான அதிகாரத்தை மாநகராட்சிக்கு வழங்கியது. மாநகராட்சியிலுள்ள 32 ஆணையாளர்களில் 16 ஆணையாளர்களை மக்கள் தேர்ந்தெடுக்கவும், மற்ற 16 ஆணையாளர்களை அரசாங்கம் நியமிக்கவும் இச் சட்டம் வசதி அளித்தது. மேலும் இரண்டு புதிய அதிகாரிகளாக இரு துணைத்தலைவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். ஆட்சித்துறை அதிகாரமானது தலைவரிடமும், துணைத்தலைவர்களிடமும் இணைந்து செயல்படும் வகையில் சட்டம் அங்கீகாரம் கொடுத்தது. தண்ணீர் வரி மற்றும் தெருவிளக்கு வரி ஆகியவைகள் உயர்த்தப்பட்டன. பின்னர் இச்சட்டமானது 1879-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. இதன்படி சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தொழில் செய்வோர்களுக்கெல்லாம் தொழில் வரி விதிக்கப்பட்டது

ரிப்பன் பிரபுவின் சேவையானது இந்திய உள்ளாட்சி வளர்ச்சியில் ஒரு மகுடமாக அமைந்துள்ளதெனலாம். இவர் இந்தியர்களுக்கு நிருவாகத்தில் அதிகப் பங்கு கொடுக்கவேண்டுமென்பதை இங்கிலாந்து பராளுமன்றத்தில் முன்னரே கூறியுள்ளார். பின்னர் ரிப்பன் பிரபு இந்தியாவில் தலைமை ஆளுநராக வந்தபின், இந்திய நிருவாகத்தில் குறிப்பாக உள்ளாட்சியில் அதிகப் பங்கு கொடுத்துள்ளார். இவர் உள்ளாட்சி முறையின் மூலமாக இந்தியர்களுக்குக் கல்வி புகட்டவேண்டுமென்பதை அறிந்து செயல்பட்டார். இவருடைய 1882-ஆம் ஆண்டுத் தீர்மானமானது உரிமைகளின் மகாசாசனமாகத் திகழ்கிறது. இத்தீர்மானத்தில் இவர் இந்தியர்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம்

வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். இத்தீர்மானத்தின் அடிப்படையில் 1884-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமானது நகராட்சியில் மக்களாட்சியைப் புகுத்தியது. மேலும் தேர்ந்தெடுக்கப்படும் ஆணையாளர்களின் எண்ணிக்கையை 16-லிருந்து 24-ஆக அதிகரித்தது. அரசாங்க நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கையை 16-லிருந்து 8-ஆகக் குறைத்தது. இந்த 8 நியமன உறுப்பினர்களும் ஒவ்வொரு நகர வட்டத்திலிருந்தும் நியமனம் செய்யப்படக் கூடியவர்களாக இருந்தனர். இச்சட்டத்தின்கீழ் நிலைக்குழு ஒன்றும் (Standing Committee) ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவானது ஆணையாளர்களின் முதல் கூட்டத்தின்போது தேர்ந்தெடுக்கப்பட்டது. இச்சட்டம் கொண்டு வரப்பட்டதன் முக்கிய நோக்கம் யாதெனில் தொற்றுநோய்களையும், அபாயகர நோய்களையும் தடுக்கும் வகையில், சுகாதார ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்காகும். இவ்வாறாக மக்களின் பிரதிநிதிகள் 3/4 பாகம் நிரப்பப்படவும், நிலைக்குழு மற்றும் மாநகராட்சியின் செயல்கள் நன்றாகச் செயலாக்கம் பெறவும் 1884-ஆம் ஆண்டுச் சட்டமானது பலவகைகளிலும், பல்வேறு தன்மைகளிலும் சிறப்பானதென்பதை அறியலாம்.

பின்னர் 1892-ஆம் ஆண்டுச் சட்டம் மாநகராட்சி நிருவாகத்தில் சில மாற்றங்களைச் செய்தது. இரண்டு துணைத்தலைவர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாக மூன்று அதிகாரிகள் முறையே வருவாய் அதிகாரி சுகாதார அதிகாரி மற்றும் பொறியியலர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இதற்கு அடுத்ததாக 1904-ஆம் ஆண்டுச் சட்டமானது மேலும் சில மாற்றங்களைச் செய்தது. இச்சட்டம் ஆணையாளர்களின் எண்ணிக்கையை 36- ஆக உயர்த்தியது. ஆனால் கர்ஜன் பிரபு இந்தியர்களுக்கு நிருவாகத்தில் அதிகப் பங்கு கொடுக்கக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டவராவார். எனவே இவருடைய கொள்கை சென்னை மாநகராட்சியையும் பாதித்தது. சென்னை மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 24-லிருந்து 20-ஆகக் குறைக்கப்பட்டது. நிறுவன வகைப்பிரதிநிதிகள் மாநகராட்சியில் சேர்த்துக் கொள்ள இச்சட்டம் அனுமதித்தது. சென்னை வணிக அவை (Madras Chamber of Commerce), விற்பனை

அவை (Madras Chamber of Trades Association) ஆகியவற்றின் பிரதிநிதிகள் மாநக ராட்சியில் இடம் பெற்றனர். இவர்கள் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டார்கள். தண்ணீர் வரி, தண்ணீர் மற்றும் வடிகால் வரியென மாற்றப்பட்டது. இதற் கென 4 விழுக்காடு வரி வசூலித்ததற்கு மாறாக $6\frac{1}{2}$ விழுக்காடு வசூலிக்கும்படி செய்யப்பட்டது. பின்னர் இச்சட்டமானது 1907-ஆம் ஆண்டு திருத்தத்திற்குள்ளாகியது. இந்தத் திருத்திய 1907-ஆம் ஆண்டுச் சட்டமானது, மாநகராட்சியின் சிறப்புத்திட்டங் களுக்குச் சிறப்புப் பொறியியலரை நியமனம் செய்யும் அதி காரத்தை உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு வழங்கியது. உள்ளாட்சி நிருவாகத்தைச் சீரமைப்பதற்காக அரசுரிமை ஆணையமானது அதிகாரப்பரவல் குறித்து ஆராய 1911-ஆம் ஆண்டு அமைக் பட்டது. மாநகராட்சியின் சார்பில் திரு. ஆசீர்வாத நாடாரும், திரு. சிவசண்முகம்பிள்ளை அவர்களும் ஆணையத்தின் முன்னர் சாட்சியமளித்து, ஏராளமான கருத்துக்களையும் பரிந்துரைகளை யும் செய்தனர். இவர்கள், மாநகராட்சித் தலைவர் தேர்ந்தெ டுக்கப்பட வேண்டுமென்றும், மாநகராட்சித் தலைவர் பொதுமக் கள் பிரதிநிதியாக இருக்கவேண்டுமெனவும், மாநில அரசாங்கத் தின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவேண்டுமென்றும், அதிகமான நிதி மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண் டார்கள்.

இன்று வானளவாக நிற்கும் சென்னை மாநகராட்சிக் கட்டிடமானது 1913-ஆம் ஆண்டு கட்டப்பட்டு, ஹார்டிங் பிர புவினால் திறந்து வைக்கப்பட்டது. இவர் தலைமை ஆளுநராக 1910-16 வரை இருந்தார். இக்கட்டிடமானது மாநகராட்சி ஆரம்பிக்கப்பட்டு வெகுகாலம் ஆகிறது என்ற பழைமையைக் காட்டவும், மதிப்பும் மரியாதையும் காட்டுவதற்குப் பொருத்தமாகவும் திகழ்கிறது. அரசுரிமை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்பச் சென்னை நகராட்சிச் சட்டமானது 1919-ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்டது. இதுவரையிலும் இருந்துவந்த ஆணையாளர்கள் என்ற பதவிப் பெயரானது மாநகராட்சி உறுப்பினர்களென (Councillors) மாற்றப்பட்டது. நகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 30-லிருந்து 36- ஆக உயர்த்தப்பட்டது. புதிதாக ஆணையாளர் என்ற பதவி உருவாக்கப்பட்டது. நிலைக்

குழுவின் எண்ணிக்கையானது ஒன்றிலிருந்து நான்காக உயர்த்தப் பட்டது. நகரானது 30 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாக உருவாக்கப்பட்ட ஆணையாளர் பதவி முழுச்செயலாக்க அதிகாரத்தையும் பெற்றது. 1919-ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் பின்னர், மாநகராட்சித் தலைவர் மாநகராட்சி மன்றங்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் அதிகாரத்தை மட்டுமே உடையவராய் இருந்தார். தலைவர் மாநகராட்சி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவராக மாறினார். அதற்குப் பின்னர் 1933-ஆம் ஆண்டில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின் விளைவாக, தலைவர் என்ற பெயரானது மேயர் (மாநகராட்சித் தலைவர்) என்று பெயர் மாற்றப்பட்டது. மாநகராட்சி மன்றத்திற்குப் பெண் உறுப்பினர்களை நியமனம் செய்யவும், தேர்ந்தெடுக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது

1935-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின்படி. 1936-ஆம் ஆண்டுச் சட்டமானது 1935-ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் அம்சங்களை உள்ளடக்கி, நிறைவேற்றப்பட்டது, வாக்காளர்களாக ஆவதற்குரிய தகுதிகள் குறைக்கப்பட்டதாலும், வாக்காளர்களின் எண்ணிக்கையானது அதிகரிக்கப்பட்டதாலும், நிருவாகத்தில் மக்கள் யாவரும் பங்கு பெற இச்சட்டம் இடம் கொடுத்தது. இச்சட்டமானது வாக்காளர் பட்டியல் தயாரிக்க வசதி செய்தது. நிலைக்குழுக்களின் எண்ணிக்கையானது அதிகரித்தது. மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 - லிருந்து 60 - ஆக உயர்த்தப்பட்டது. தாழ்த்தப்பட்ட இனத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் 1938 - ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பின்னர் எல்லா இடங்களுக்கும் ஒரே நேரத்தில், மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கும் முறை 1939-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. இதற்கு முன்னர் ஆண்டுக்கொரு முறை $\frac{1}{3}$ பகுதியினர்கள் தேர்ந்தெடுக்கும் முறையானது நடைபெற்று வந்தது.

சென்னை மாநிலத்திலும், இந்தியாவிலும் மக்கள் தொகை பெருகியது. 1871-ஆம் ஆண்டிலிருந்து 1931-ஆம் ஆண்டுவரை சென்னையில் மக்கள் தொகைப் பெருக்கமானது இயற்கையாக ஏற்படாமல், ஏராளமானவர்கள் வெளியிடங்களிலிருந்து குடியேறி

யதன் விளைவாக ஏற்பட்டது. 1923, 1945 ஆகிய இரு ஆண்டுகளில் சென்னை மாநகராட்சியின் எல்லை விரிவடைந்தது. மாம்பலம் நகர் வளர்ச்சித் திட்டம் 1923-ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டது. நகரிலுள்ள நெருக்கடியைக் குறைக்கவும், மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவும் இத்திட்டம் அமைக்கப்பட்டது, இத்திட்டத்திற்கு 503 சதுரமைல் பரப்புள்ள நிலங்கள் வாங்கப்பட்டு, அது மாநகராட்சி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் மற்றொரு வளர்ச்சித் திட்டம் 1945-ஆம் ஆண்டு தீட்டப் பட்டது. இவ்வளர்ச்சித் திட்டம் குறைந்த விலையில் வீடுகட்டு வதற்கு நிலங்கள் கிடைக்கவும், பக்கத்துக் கிராமங்களிலிருந்து பரவுகின்ற தொற்று நோய்களையும் மற்றும் பிற நோய் களையும் கட்டுப்படுத்தவும், நகரின் சுகாதாரத்தைக் கட்டிக் காக்கவும் வரையப்பட்டது. இத்திட்டத்தினால் சைதாப்பேட்டை நகராட்சி, செம்பியம், அமைந்தகரை கிராம வாரியங்கள் மற்றும் 15 வருவாய் கிராமப்புறங்கள் ஆகியவைகள் நகரத்தோடு இணைக்கப்பட்டன. இந்த இணைப்பானது 1946-ஆம் வருடம் 1-ஆம் தேதி செய்யப்பட்டது. இதன் மூலம் 12,584 சதுர ஏக்கர்கள் அல்லது 12.97 சதுர மைல்கள் நகரத்தோடு இணைந்தன.

பின்னர் 1947-ஆம் ஆண்டு நிறைவேறிய சென்னை மாநகராட்சிச் சட்டத்தின்படி, நகரத்தின் பிரிவுகள் 40-லிருந்து 50-ஆக உயர்த்தப்பட்டன. மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 65-லிருந்து 85-ஆக உயர்த்தப் பட்டது. அதில் 5 அரசாங்க மாநகராட்சி நியமன உறுப்பினர் களும் இடம் பெற்றார்கள். உறுப்பினர்களுக்கு இடங்கள் முறையே கீழ்க்கண்டவாறு மாநகராட்சி மன்றத்தில் ஒதுக்கப் பட்டன. அவை:

தாழ்த்தப்பட்ட பிரிவினர் ...	5
முஸ்லீம்கள் ...	4
இந்திய கிறிஸ்தவர் ...	2
பெண்கள் ...	1

மாநகராட்சியின் அதிகார வரையறை எல்லையும், மக்கள் தொகையும் பெருகிக்கொண்டே வந்தன. தேர்தல் முறை மட்டும் மாற்றம் ஏதும் பெறாது அப்படியே இருந்து வந்தது. இந்தியாவில் வயது வந்தவர்கள் அனைவருக்கும்

வாக்குரிமை அளிக்கப்பட்டு விட்டபோதிலும் மாநகராட்சியைப் பொறுத்தவரை தேர்தல் முறை மாற்றப்படாமல் அப்படியே இருந்தது. எனவே தேர்தலில் அனைத்து மக்களுக்கும் பிரதி நிதித்துவம் வழங்க மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கிடையே சென்னை நகரானது 50 பிரிவுகள் அல்லது வார்டிலிருந்து 100 நகர் வட்டங்களாக 1958-ஆம் சட்டத்தின்கீழ் பிரிக்கப்பட்டது. நகரமானது 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் 10 பகுதிகளை (வார்டுகளை) உள்ளடக்கி இருந்தது. ஒவ்வொரு பிரிவும் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு இணையாக அமைக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 10 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இவர்கள் ஒவ் வொரு பிரிவிலும் ஒருவராக, பத்து பிரிவுகளி லிருந்து 10 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொழிலாளர் களுக்குத் தனியான இடம் ஒதுக்கீடு இச்சட்டத்தின் மூலம் தள்ளு படி செய்யப்பட்டது. இதே மாதிரியாக ஐந்து மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் நியமனம் செய்வதும் தள்ளுபடி செய் யப்பட்டது.

மாநகராட்சி நிருவாகத்தைச் சீரமைக்கவும், செம்மைப்படுத் தவும் அரசாங்கம் ஓர் உயர் மட்டக் குழுவை 1956-ஆம் ஆண்டு நியமனம் செய்தது. இக்குழு மாநகராட்சியின் பல் வேறு செயலாக்கப் பிரிவுகளையும், நிருவாகப் பிரிவுகளையும் பகுத்து, ஆராய்ந்த பின்னர் 1958-ஆம் ஆண்டு தன் அறிக் கையைச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையின்படி அரசாங்கமானது சீர்திருத்த வெள்ளைத்தாள் ஒன்றை வெளியிட்டது. இக்குழு வானது மாநகராட்சியின் நிருவாகத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென்பதை முக்கியமாகப் பரிந்துரைத்தது. நிலைக்குழு விற்குப் பதிலாகப் பரவலாக அமைந்து செயல்படும் குழு முறையைப் பரிந்துரை செய்தது இப்பரிந்துரையை ஏற்று புதிய முறை ஒன்று கொண்டுவரப்பட்டது. இப்புதிய முறை யானது 1971-ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து செயல் பட்டது. பின்னர் மறுபடியும் பழைய நிலைக்குழு முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது. ஏனெனில் புதிய முறையால் ஏராளமான பிரச்சனைகள் எழுந்துகொண்டே வந்தன. அப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது சிக்கலிலும் சிக்கலாக இருந்ததால், புதுமுறை கைவிடப்பட்டது.

1967-ஆம் ஆண்டில் நான்காவது பொதுத்தேர்தல்கள் இந்தியா முழுவதும் நடைபெற்றன. அப்பொழுது சென்னை மாநகரில் சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையானது 10-லிருந்து 12-ஆக உயர்ந்தது. எனவே மாநகராட்சி 1967-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக் கையும் 100-லிருந்து 120-ஆகக் கூடியது. இதில் தாழ்த்தப் பட்ட வகுப்பினர்களுக்கு 12 இடங்கள் ஒதுக்கப்பட்டன. பெண் களுக்கு 6 இடங்கள் உறுதி செய்து தரப்பட்டன. தேர்தல்களில் 6 பெண்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையெனில், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களே மற்ற 6 பெண்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றார்கள். மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமானது அதிகரிக்கப்பட வேண்டுமெனப் பெரும்பாலா னோர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1971-ஆம் ஆண்டு ஐந்து ஆண்டுகளாக மாற்றப்பட்டது. சென்னை மாநகராட்சி உறுப்பினர்-களின் பதவிக்காலமானது மேலும் ஓராண்டுக் காலம், அதாவது நவம்பர் மாதம் 1-ஆம் நாள் 1973 வரையிலும் நீட்டப்பட்டது. 1969-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 1972-ஆம் ஆண்டில் பதவி-யிலிருந்து நீங்கிவிட வேண்டும் என்பது முறை. ஏனெனில், அவர்கள் மூன்றாண்டுகளுக்கு மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். 1973-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பிறகு மாநகராட்சி மன்றத்தின் பதவிக்காலம் நீட்டப்படாததன் கார ணத்தால், மாநகராட்சி மன்றம் கலைய வேண்டியதாகிவிட்டது. மாநகராட்சி மன்றச் செயல்களைச் செய்வதற்கு மாநில அர சாங்கம் மாநகராட்சி நிருவாகத்தைக் கவனிக்கத் தனி அதிகாரி களை நியமிக்க வகைசெய்யும் வண்ணம் 1973-ஆம் ஆண்டுச் சட்டம் திருத்தப்பட்டது. அதன்படி தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு, கடமைகளைச் செய்யலானார். இதற்குள்ளாக, மாநகராட்சியில் பெருப் ஊழல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு மஸ்டர்ரோல் என்று பெயர். ரூ.1.26 கோடிக்கு போலி ஆஜர் பதிவுகள் தயாரித்து மாநகராட்சிப் பணம் கை யாடப்பட்டிருந்தது. இதில் 3 முன்னாள் மாநகராட்சித் தலைவர் கள், 31 முன்னாள் மாநகராட்சி உறுப்பினர்கள் உட்பட 107 பேர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதிகாரிகளும் இதில் ஈடுபட்டு உள்ளனர். மஸ்டர்ரோல் என்பது, தினமும் வேலை செய்தவர்கள் என்று பொய்யான பதிவேடுகள் தயாரித்து,

இலட்சத்திற்கு மேலான பணத்தைக் கையாடல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் பழைய மாநகராட்சித் தலைவர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் போன்றோர் ஈடுபட்டு உள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதற்கிடையே, நகராட்சியின் பகுதிகள் அல்லது வார்டுகள் 120 - லிருந்து 150 - ஆக உயர்த்தப்பட்டது. வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டே வந்திருந்தாலும், தேர்தல்கள் நடத்தவில்லை.

சென்னை மாநகராட்சியானது நிருவாகத்திற்கும், சாலைகள், பொதுச்சுகாதாரம், கல்வி ஆகிய பொதுப்பணிகளுக்கும் ஏறக்குறைய ஆண்டு தோறும் ரூ. 33 இலட்சங்கள் செலவு செய்து வருகின்றது. இருப்பினும் மாநகராட்சியானது திருப்தி தரும் வகையில், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்படவில்லை என்றும், மாநகராட்சியின் திறமையை வளர்க்கச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற கருத்தும் மக்களிடையே பரவி வருகிறது. இதனால் மாநகராட்சியின் திறமையை வளர்க்கவும், நிருவாகச் சீர்திருத்தங்கள் செய்வதற்காகவும் 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசாங்கம் ஓர் உயர்மட்டக் குழுவை நியமனம் செய்தது. அதில்

1. திரு A. N. சட்டநாதன் (தலைவர்)
2. திரு M. S. அப்துல் காதர்
3. திரு P. சிவலிங்கம்
4. திரு V. T. டைட்டஸ்
5. திரு டாக்டர் M. நாராயணன்

ஆகியோர் இடம் பெற்றனர். இக்குழு 1977 டிசம்பர் மாத இறுதியில் அறிக்கையைச் சமர்ப்பிக்குபடி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது 1977-ஆம் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தது. பின்னர் ஜனவரி மாதம் 25-ஆம் தேதி 1978-ஆம் ஆண்டு, உள்ளாட்சித்துறை அமைச்சரின் தலைமையின் கீழ் ஓர் உயர்மட்டக் கூட்டத்தில், நகர எல்லையை விரிவுபடுத்தும் முடிவு எடுக்கப்பட்டது. இம்முடிவுப்படி,

செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்திருக்கும் 10 நகரஊராட்சிகளும், இரண்டு கிராம ஊராட்சிகளும் நகராட்சி எல்லையில் சேர்க்கப்பட வேண்டியதாயிற்று. இந்த 12 ஊராட்சிகளும் மாநகராட்சியுடன் இணைந்த பின்னர், மாநகராட்சியின் பரப்பானது 43.5 சதுர கிலோ மீட்டராக மாறும். மக்கள் தொகைப் பெருக்கமானது 1, 09, 827 அதிகரிக்கும். தற்போது மாநகராட்சியின் எல்லையானது 129 சதுர கி. மீட்டர்கள் 120 நகர் வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 12 ஊராட்சிகளை இணைத்த பின்னர் 150 வார்டுகளாகப் பிரிக்கப்படும். அதற்குப் பின்னர் மாநகராட்சியின் தனி அதிகாரியின் பதவிக் காலம் டிசம்பர் 1, 1977 - ஆம் ஆண்டிலிருந்து ஓராண்டு வரைக்கும் அதிகமாக நீட்டப்பட்டுள்ளது. இது மாநகராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதற்கு வசதி செய்யப்பட வேண்டுமென்பதற்காகவேயாகும். 1984-ஆம் ஆண்டுவரையிலும் தனி அதிகாரிதான் மாநகராட்சியை நிருவகித்து வருகிறார்.

5

உள்ளாட்சிகள் அமைப்பு: ஊராட்சிகள்

உள்ளாட்சி நிருவாகத்தில் அடிப்படை அலகாக அமைக்கப்பட்டுள்ளது ஊராட்சியாகும். ஊராட்சிகள் அனைத்தும் அரசாங்கத்தால் அமைக்கப்படுகின்றன. இந்த மாதிரியாக அமைக்கப்படாமல், மக்களே கிராமங்களில் ஊராட்சிகள் அமைத்துள்ளனர். இவ்வூராட்சிகள், இன்றும் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சிகளிலிருந்து இவற்றைப் பிரித்துக் காட்டுவதற்காகக் கிராம அவைகள் என்று இவை சொல்லப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரண்டு வகை ஊராட்சிகள் உள்ளன. இவை முதல்வகை ஊராட்சி, இரண்டாம்வகை ஊராட்சியென்பனவாகும். தற்போது ஊராட்சிகள் கிராம ஊராட்சிகள், நகர ஊராட்சிகள் என இரண்டுவகை ஊராட்சிகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. இவ்வூராட்சிகள் மக்கள் தொகை, வருமானம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து, வகைப்படுத்தப்படுகின்றன. இந்த இருவகை ஊராட்சிகளைத் தவிர்த்து நகரியங்கள் (Townships) உள்ளன. அரசாங்கம் தனியான சில தன்மைகளை வரையறுத்து, இந்த நகரியங்களை அமைக்கின்றது. மக்கள் தொகை ஐயாயிரத்துக்குக் குறையாமலும், ஆண்டு வருமானம் பத்தாயிரம் ரூபாய்களுக்குக் குறையாமலும் இருக்கும் ஒவ்வொரு வருவாய்க் கிராமத்தையோ. கிராமங்களையோ, நகர் ஊராட்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. பிற ஊராட்சிகள் கிராம ஊராட்சிகள் என்று பிரிக்கப்பட்டுள்ளன. கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகை ஐந்நூறுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். சட்டமன்றம் தனியான ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதன்மூலம் ஒரு கிராமத்தை, தொழில்துறை,

தொழிலாளர் குடியிருப்பு, ஆரோக்கிய வாசஸ்தலம் ஆகியவற்றை நகரியங்களாக அறிவிக்கின்றது. ஒரு தனித்தன்மையான நோக்கத்திற்காக, அரசாங்கத்தின் மூலம் நகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

அதிகார எல்லை

வருவாய் கிராமம் ஒன்றிலோ அதில் ஒரு பகுதியையோ, அல்லது அதைவிடப் பெரிதாகவோ இருக்கக்கூடிய பகுதிகளில் ஊராட்சிகள் அமைக்கலாமென்று 1950-க்கு முன்னர் உள்ள சட்டம் வரையறை செய்தது. எனவே ஊராட்சிகளின் அதிகார வரையறை எல்லை சிறிதும் பெரிதுமாக இருந்தன. பின்னர் 1950-ஆம் ஆண்டுச் சட்டம் ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஓர் ஊராட்சி கட்டாயமாக அமைக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தியது. இதற்காக வருவாய் கிராமம் முழுவதுமோ, வருவாய் கிராமம் பிரிந்தோ, ஏராளமான வருவாய் கிராமங்கள் இணைந்தோ இவ் ஊராட்சிகள் அமைக்கலாமெனக் கூறியது. இதற்குச் சிற்றூர்கள் (hamlets) விதி விலக்கு. ஆனால் குறைந்த பட்ச மக்கள் தொகையானது 500 ஆக இருக்க வேண்டுமென்பதில் மாற்றமேதும் செய்யவில்லை. இருப்பினும் நடைமுறையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, உயர்ந்த அளவு குறைந்த பட்ச மக்கள் தொகை 1000 என வரையறுக்க வேண்டுமென முன்மொழியப்பட்டது. ஆகவே, மக்கள் தொகை 500-லிருந்து 1000 வரையிலும் இருந்தால், சட்டத்துவ ஊராட்சிகள் அமைக்கத் தடையேதுமில்லை. ஆனால் நடைமுறை வசதிக்காக இக்கிராமங்கள் அரசாங்கத்தின் விசேஷ அனுமதியைப் பெற்ற பின்னர்த்தான் ஊராட்சிகள் அமைக்க வேண்டுமெனவும் முன்மொழியப்பட்டது.

ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை

ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகப்பட்சம் 15-ஆகவும், குறைந்த பட்சம் 5-ஆகவும் 1950-ஆம் ஆண்டுச் சட்டம் வரையறுத்தது. முதல் வகுப்பு ஊராட்சிகள் 5 வார்டுகளாகவும், இரண்டாம் வகுப்பு ஊராட்சிகள் 2 வார்டுகளாகவும் பிரிக்கப்பட வேண்டுமெனவும் சட்டம் கூறியது. மக்கள் தொகையானது 1000மும் அதற்கு மேலும் இருந்தால் 5 வார்டுகளாகப் பிரிக்கலாமெனக் கூறியுள்ளது. மேலும் இரண்டாம் வகுப்பு ஊராட்சிகளில் உறுப்பினர்கள் பலர் தேர்ந்தெடுக்க வசதியாக வார்டுகள் ஏற்படுத்த

வேண்டுமென வலியுறுத்தியது. ஒவ்வொரு வார்டிலும் குறைந்த பட்சம் 100 வாக்காளர்கள் இருக்கும் வகையிலும், வார்டுகள் குறுகலாக, செம்மையாக அமையும் படியும் நிருணயிக்க முன் மொழியப்பட்டன. இரண்டாம் வகுப்பு ஊராட்சிகளில் உறுப்பினர் களின் எண்ணிக்கை கீழ்க்கண்ட விதமாக அமைக்கப்பட வேண்டு மெனக் குழு கூறியுள்ளது:

மக்கள் தொகை			உறுப்பினர்களின் எண்ணிக்கை
500க்கு மேலும் 700க்குக் கீழும்			5
700	,, 900	,,	6
900	,, 1,100	,,	7
1,100	,, 1,300	,,	8
1,300	,, 1,500	,,	9
1,500	,, 1,700	,,	10
1,700	,, 1,900	,,	11
1,900	,, 2,100	,,	12
2,100	,, 2,300	,,	13
2,300	,, 2,500	,,	14
2,500க்கு மேல்			15

இவர்கள் வார்டுகளிலுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக் கேற்ப விகிதாச்சார முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒரே வார்டில் 5 உறுப்பினர்களுக்கு மேல் தேர்ந்தெடுக் கப்படக்கூடாது. ஊராட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை முன்கூறியபடி அமைத்தால், ஊராட்சியில் கூட்டுறவும், பிரிவுத் தன்மை நீங்கவும் அதிகமான வாய்ப்பு உள்ளது. ஏனெனில் ஓர் ஊராட்சியில் 2000 மக்கள் தொகை இருந்தால், 12 உறுப்பினர் கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 2000 மக்கள் தொகையுள்ள கிராமமானது ஏறக்குறைய 400 குடும்பங்களைக் கொண்டதா கவே இருக்கும். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் 30 அல்லது 40 குடும்பங்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால், போட்டி அதிகமாக இருக்க வாய்ப்பில்லை. 30 அல்லது 40 குடும்பங்களின் ஒற்றுமையுடன், அவர்களுக்குள் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட

வழியுண்டு. எனவே பெரும்பாலும் உறுப்பினர்கள் போட்டியில்லா மலே தேர்ந்தெடுக்கப்பட்டனர். வட மதுரை ஊராட்சி ஒன்றியத் தில் புதிதாக நிறுவப்பட்ட 30 ஊராட்சிகளுக்குத் தேர்தல்நடத்தப் பட்டதில், ஒற்றுமையும், நல்லெண்ணமும்தான் அதிகமாகப் பிரதிபலித்தன. இரண்டு ஊராட்சிகளைத் தவிர்த்து, மற்ற ஊராட்சிகளில் தேர்தல் போட்டியில்லாமல் நடைபெற்றது. அந்த இரண்டு ஊராட்சிகளிலும்கூடக் கடுமையான போட்டி என்று கூறு வதிற்கில்லை. அங்கும் அமைதியாகவே தேர்தல் நடைபெற்றுள்ளது.

வகைப்படுத்தல்

ஊராட்சிகள், வருமானத்தின் அடிப்படையில் மூன்றுபடி நிலை களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை மூன்றும் பெரிய ஊராட்சிகளில் அடங்கக் கூடியனவாகும். இவை தவிர்த்து, சிறிய ஊராட்சிகளும் உண்டு அவை :

ஆண்டு வருமானம்	படிநிலை
ரூ. 20,000 முதல் 30,000 வரை	முதல் படிநிலை ஊராட்சி
ரூ. 10,000 முதல் 20,000 வரை	இரண்டாம் படிநிலை ஊராட்சி
ரூ. 5,000 முதல் 10,000 வரை	மூன்றாம் படிநிலை ஊராட்சி
ரூ. 5000-க்குக்கீழ்	சிறிய ஊராட்சி

இந்த ஊராட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது 8 முதல் 16 வரையாகும். இந்த உறுப்பினர்கள் ஊராட்சியின் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு நிருணயிக்கப்படவில்லை ஏனெனில் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மக்கள் தொகைக் கேற்ப வித்தியாசம் கொண்டதாக இருந்தாலும், சில ஊராட்சிகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், சில ஊராட்சிகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும் இருந்தன. இவை ஒருமித்த வகையில் பிரிக்கப்படவில்லை. உதாரணமாக ஓர் ஊராட்சியில் 13,053 மக்கள் தொகை தான் இதில் 16 உறுப்பினர்கள் இருந்தனர். மற்றொரு ஊராட்சியில் 36,000 பேர் இருந்தனர். ஆனால் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது அதே 16 தான் இது முதல் படிநிலை ஊராட்சியில் காணப்படும் வித்தியாசம். இதே மாதிரியாக மற்ற படிநிலை ஊராட்சிகளிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வித்தியாசமாகவே இருந்தது.

ஊராட்சிகளில் சிறுபான்மையோர்களுக்கு இடங்கள் ஒதுக்கப் பட்டன. சிறுபான்மையோர் பட்டியலில் கிறிஸ்தவர்கள், முஸ்லீம் கள், பின்தங்கியோர் ஆகியோர் இருந்தாலும், எல்லா சிறுபான் மையோர்களுக்கும் கட்டாயமாக ஊராட்சியில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டது. சிறுபான்மை மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. எனவே, சிறுபான்மையோர்களுக்குத் தக்க வீதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பதவியின் அடிப்படையில் (ex-officio) ஊராட்சியில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் கூட சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் இல்லவே இல்லை. இருப்பினும் 1941-ஆம் ஆண்டில் உருவாக் கிய வரைவில் பதவியின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென ஆலோசிக்கப்பட்டாலும், பின்னர் கைவிடப்பட்டது. 1946-ஆம் ஆண்டில் கொண்டுவந்த சட்டத்தில் பதவியின் அடிப்படைப் பிரதிநிதித்துவம் இடம் பெறவில்லை. பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்பதுவும் இதில் இடம் பெறவில்லை. அப்போது பெண்களும் அதிகமாக அக்கறை காட்டவில்லை. பின்னர் மிகுதியான பெண்கள் ஆர்வம் காட்டி யதால் பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது.

1957-58-ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 267 முதல் வகுப்பு ஊராட்சிகளும், 7,210 இரண்டாம் வகுப்பு ஊராட்சிகளும் இருந்தன. இரண்டாம் வகுப்பு ஊராட்சிகள் 1953-54-ஆம் ஆண்டிற்குப் பிறகு சிறப்பான முன்னேற்றத்தை அடைந்துள்ளன. ஊராட்சி அமைப்பது குறித்த சட்டம் திருத்தப் பட்டு, வருவாய்க் கிராமங்களைப் பிரித்தும், குழுக்களாக அமைத் தும் ஊராட்சிகள் அமைக்கப்படலாமெனக் கொண்டுவரப்பட்டது. இதனால் சென்னை மாகாணத்தில் தெலுங்கு பேசப்படாத பகுதி களில் 1951-52-இல் 4,309 ஊராட்சிகள் இருந்தன. இது 1953 54-இல் 4,334 ஆகவும், 1955-56-இல் 6,063 ஆகவும், 1956-57-இல் 6,984 ஆகவும், 1957-58-இல் 7,210 ஆகவும் உயர்ந்தது.

ஊராட்சியில் பெரும்பாலும் தேர்தல்கள் வாக்குச்சீட்டுக்களின் மூலமாகவே நடைபெற்றுள்ளன. சில ஊராட்சிகளில் ஊராட்சி உறுப்பினர்கள், மக்கள் தங்களது கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆதரவைத் தெரிவித்ததன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இம்முறை சிறிய ஊராட்சிகளில் பெரும்பாலும் நடைபெற்றுள்ளது. ஊராட்சியில் அனைத்துப் பகுதி மக்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர். நியாயமான பிரதிநிதித்துவம் (fair representation) என்பது நடைமுறையில் இருந்துள்ளது. ஏனெனில், ஊராட்சியின் அதிகார எல்லையில் அமைந்துள்ள சிறிய கிராமங்கள் கூட ஊராட்சியில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. ஊராட்சியில் உறுப்பினர் பதவி காலியாகிவிட்டால், மாவட்ட ஊராட்சி அதிகாரிக்குத் தெரியப்படுத்தி, அவர் புதிய தேர்தல் மூலம் காலியிடங்களை நிரப்புவார்.

பொதுவாக ஊராட்சியானது ஒவ்வொரு கிராமத்திற்கு ஒன்றென்ற அடிப்படையில்தான் அமைக்கப்பட்டது. ஆனால் பல கிராமங்கள் கொண்ட ஊராட்சிகளும் இருந்தன. இன்றும் இம்மாதிரி ஊராட்சிகள் உள்ளன. ஊராட்சித் தலைவர், ஊராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே கிராமத்தில் பிரிவும், பூசலும் தேர்தலின்போது பொதுவாக நடைபெற்று வந்துள்ளன. ஊராட்சி உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவேண்டுமென்பதற்கும் ஆதரவு இருந்துள்ளது என்பதை 1941-ஆம் ஆண்டுச் சட்ட வரைவு நமக்கு விளக்குகிறது. ஆனால் நியமன உறுப்பினர்கள் ஊராட்சியை ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை நிருவகிக்கலாமெனச் சட்டம் கூறினாலும், நடைமுறையில் நிருவகித்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் ஊராட்சி சரியாக இயங்கவில்லையேல் கலைக்கப்பட்டது.

தற்போது 300-க்கு மேற்பட்ட முதல் வகுப்பு ஊராட்சிகள் உள்ளன. இவை பெருப்பாலும் முன்னர் இயங்கிவந்த ஒன்றிய ஊராட்சிகள் (Union Panchayats) ஆகும். இவை நகரத்தன்மை கொண்டு விளங்குகின்ற காரணத்தால் நகராட்சிகளோடு ஒப்பீடு செய்து கொள்ளவும் முடிகின்றது. மக்கள் தொகை, வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் இவற்றைக் கணக்கிட்டால் சிறிய அளவு நகராட்சிகள் மாதிரி உள்ளன. நகராட்சி நகரத்தன்மை பெற்றுள்ளது. ஆனால் முதல்வகுப்பு ஊராட்சிகள் சில நகரத்தன்மைகளை மட்டும் கொண்டுள்ளன. இரத்தினசபாபதி முதலியாரின் குழு ஊராட்சிகள் தானாகவே நகராட்சியாக மாறவேண்டுமென்ற ஒரு கருத்தை வெளியிட்டது. இக்குழு முதல்வகுப்பு ஊராட்சிகள் 20,000 பேர்களுக்கு மிகுதியாக இருந்தால், அவை தானாகவே நகராட்சிகளென மாற்றப்படவேண்டுமெனக் கூறியது. ஆனால் இக்

கருத்திற்குப் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட காரணத்தால், செயலாக்கப்படவில்லை. தொழிற்சாலை, தொழிலாளர்கள், நிறுவன வகைக் குடியிருப்புக்களென அரசாங்கம் அங்கீகரிக்கப் பட்டுள்ள பகுதிகளில் நகரியங்கள் அமைக்கலாமெனத் தீர்மானிக் கப்பட்டது. இந்த நகரியங்கள் அருகிலுள்ள பகுதியில் அமைக்கப் பட்டஅமைப்பிலிருந்து பெரிதும் வித்தியாசமானவையாகும். சென்னை ஊராட்சிச் சட்டத்தில் நகரியம் அமைப்பது குறித்த அம்சம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்நகரியங்கள் ஊராட்சிச் சட்டம் அல்லது நகராட்சிச் சட்டம் ஆகியவற்றை வைத்துத்தான் செயல்-படுமென்றாலும், அந்தந்த இடத்தின் சூழ்நிலைக்கேற்ப தேவை-களைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படக் கூடியனவாகும்.

ஊராட்சி நிருவாகம் ஊராட்சி மன்றத்தால் நடத்தப்படு கின்றது. ஊராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் மக்களால் நேரடி யாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஊராட்சி மன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையை அரசாங்கம்தான் முடிவு செய்கின்றது. இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மக்கள் தொகை அடிப் படையில் நிருணயம் செய்யப்படுகின்றது ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்த பட்சம் ஐந்தாகவும், உயர்ந்தபட்சம் பதி னைந்துக்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென வரையறுக்கப் பட்டுள்ளது. ஊராட்சி மன்றத்திற்குக் கூட்டு நியமனம் (Co-option) மூலமாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவம் பெற ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமம் அல்லது நகர ஊராட்சிகளின் மக்கள் தொகைக்கேற்ப இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த இடங்கள் மூன்றுக்கு மிகாமல் இருக்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. தவிர, ஊராட்சி மன்றத் தில் பெண் உறுப்பினர்கள் எவரும் இடம் பெறவில்லையேல், ஊராட்சி மன்றம் பெண் உறுப்பினர் ஒருவரைக் கூட்டு நியமனம் மூலமாகத் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக ஊராட்சி மன்றம் மக்களின் பொதுநலனைக் கருதுவதோடு, தாழ்த் தப்பட்டோர்கள், பெண்கள் ஆகியோர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இடங்கள் ஒதுக்கீடு செய்து செயல்பட்டு வருகின்றன.

பதவிக் காலம்

ஊராட்சி மன்றத்தின் பதவிக்காலம் முதலில் மூன்று ஆண்டுகளாக நிருணயிக்கப்பட்டு இருந்தது. ஆனால் ஆண்டுதோறும் ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்ற காரணத்தாலும், அடிக்கடி தேர்தல்கள் நடத்துவதால் மக்கள் மத்தியில் போட்டியும் பொறாமையும் தோன்றி, மக்களது அமைதியைக் கெடுத்ததாலும், தேர்தல்கள் குறுகிய காலத்திற்கொருமுறை நடத்துவதால் அரசாங்கத்தின் செலவும் அதிகரிக்கவே, பதவிக் காலத்தை நீட்டவேண்டுமென அனைவரும் விருப்பம் தெரிவித்தனர். இதன் காரணமாக, 1970-ஆம் ஆண்டு செய்த திருத்தத்தின் விளைவாக, பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகக் கூடியது.

ஊராட்சியின் கூட்டங்களுக்குத் தலைவர் தலைமை தாங்குகிறார். அவர் வந்திராவிடில் துணைத்தலைவர் தலைமை தாங்க வேண்டும். அவ்விருவரும் வராவிட்டால் அந்தச் சமயத்திற்காக ஊராட்சியிலுள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தலைமை தாங்க வேண்டும். தலைவர் ஊராட்சியின் கூட்டங்களில் ஒழுங்கு குலையாமல், தவறு நேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் கூட்டங்களில் ஏற்படும் ஒழுங்கைப் பற்றியும், அங்கு எழும் எல்லாப் பிரச்சினை பற்றியும் அவர் தீர்ப்புக் கூறவேண்டும். ஒழுங்குப் பிரச்சினை பற்றியும் அவர் தீர்ப்பு கூறவேண்டும். ஒழுங்கு முறையைப் பற்றிய எந்தப் பிரச்சினை குறித்தும் கூட்டத்தில் பேச்சோ, விவாதமோ கூடாது. ஒழுங்கு முறையைப் பற்றிய எந்தப் பிரச்சினையைக் குறித்தும் தலைவர் செய்யும் முடிவே இறுதியானது. குறிப்பிட்ட ஒரு சமயத்தில் தலைமை தாங்குபவர், துணைத் தலைவராயினும் சரி, உறுப்பினராயினும் சரி, அவர் தலைமை தாங்கும் வரையில் தலைவருக்குள்ள அதிகாரம் யாவும் அவருக்கும் உண்டு. ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளுக்கு ஒரு நகலையும், அக்கூட்டம் முடிந்து 48 மணி நேரத்திற்குள் கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர் எவரிடத்திலாவது வரப்பெற்ற கருத்து வேற்றுமைக் குறிப்புகளையும் சம்பந்தப்பட்ட ஊராட்சித்தலைவர் கூட்டம் நடந்த மூன்று நாட்களுக்குள் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும். எனினும் அத்தகைய குறிப்புகளைப் பொதுவாக அல்லது குறிப்பிட்ட

வகைப்பட்டவைகளை இதன் பொருட்டுத் தம்மிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள எந்த அதிகாரிக்கும் அனுப்புமாறு ஆய்வாளர் கட்டளையிடலாம்.

தலைவரைத் தானே தீர்மானம் கொண்டு வருவதன் மூலம் நீக்கலாம்; அல்லது ஊராட்சியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களால் குற்றச்சாட்டு அறிக்கை அடங்கிய எழுத்து மூலமான முறையீடு, ஊராட்சியின் ஏதாவது இரண்டு உறுப்பினர்களால் ஆய்வாளரிடம் நேரடியாக அளிக்கப்பட வேண்டும். அக்குற்றச் சாட்டுகளில் ஊராட்சித் தலைவர் சட்டத்தின் ஏற்பாடுகளை. பிறப்பிக்கப்பட்ட விதிகள், துணைச்சட்டங்கள், சட்டதிட்டங்கள் போன்றவற்றை வேண்டுமென்றே நிறைவேற்றாது விட்டுவிட்டார் அல்லது மறுக்கிறார், அதிகாரங்களைத் தவறாக, துஷ்பிரயோகப்படுத்தினார் என ஆய்வாளர் கருதினால், எழுத்து வடிவில் தவறுதல்கள் சம்பந்தமாய் விளக்கம் தெரிவிக்கும்படி ஊராட்சித் தலைவரை அவர் கேட்கலாம். தலைவரது விளக்கம் திருப்திகரமானது என ஆய்வாளர் கருதினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடலாம். முன் விளக்கம் கிடைக்கவில்லையென்றாலும் விளக்கம் திருப்திகரமானதாயில்லை என்று தாம் கருதினாலும், ஆய்வாளர் தலைவரைப் பதவியிலிருந்து விலக்கத் தமது ஆலோசனையை வட்டாட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும். பின்னர் வட்டாட்சித்தலைவர் ஊராட்சித் தலைவரைப் பதவியிலிருந்து விலக்குவதற்கான ஆலோசனையை ஆராய்வதற்காக ஊராட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டும். தலைவருக்கும் ஊராட்சியின் எல்லா உறுப்பினர்களுக்கும் கூட்டத் தேதிக்கு ஏழு முழு நாட்களுக்கு முன்பாகவாவது கூட்ட நகலை வட்டாட்சித் தலைவர் சேர்ப்பிக்க வேண்டும். இக்கூட்டத்திற்கு வட்டாட்சித் தலைவர் தலைமை வகிக்க வேண்டும். அவரைத் தவிர வேறு யாரும் அங்கே தலைமை வகிக்கக்கூடாது. கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரைமணி நேரத்திற்குள் வட்டாட்சித் தலைவர் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வராவிட்டால் வட்டாட்சித் தலைவர் நியமிக்கிற இன்னொரு நேரத்திற்கு இக் கூட்டம் ஒத்திவைக்கப்படும். இந்த நேரத்தைக் குறித்து வட்டாட்சித் தலைவர் உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். கூட்டத்தில் தலைமை வகிக்க வட்டாட்சித்

தலைவருக்கு முடியவில்லையென்றால் அவர் அதற்கான காரணங்களை எழுதி வைத்துவிட்டு, தாம் நியமிக்கக் கூடிய இன்னொரு காலத்திற்குக் கூட்டத்தை ஒத்திவைக்கலாம். அவ்வாறு நியமிக்கிற தேதி, கூட்டப்பட்ட கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு மேற்படக்கூடாது. ஒத்திவைத்த கூட்டத்திற்கான காலத்தைப் பற்றிக் குறைந்தது ஏழு முழு நாட்களுக்கு முன் உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் அறிவிப்பு அனுப்ப வேண்டும். தலைவரை விலக்குவதற்கான யோசனையை ஆராய்வதற்கென்று கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒத்திவைக்கக் கூடாது. அதற்கெனக் கூட்டப்பட்ட கூட்டம் ஆரம்பமானதும், வட்டாட்சித் தலைவர், ஆய்வாளர் அனுப்பிய அறிவிப்பையும், ஊராட்சித் தலைவர் விளக்கம் ஏதேனும் அனுப்பியிருந்தால் அதையும் ஊராட்சிமன்றத்தில் படித்துக்காட்ட வேண்டும். இவற்றை ஆராய்வதற்கென்றே தம்மால் இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது என்றும் கூறவேண்டும். வட்டாட்சித் தலைவர் இந்த அறிவிப்பின் அல்லது விளக்கத்தின் நன்மைகளைப் பற்றிப் பேசக் கூடாது. கூட்டத்தில் அவருக்கு வாக்களிக்க உரிமையும் இல்லை. ஆய்வாளர் அனுப்பிய யோசனையை ஏற்றுக்கொண்டோ, நிராகரித்தோ ஊராட்சி மன்றம் முடிவு செய்யும். அம்முடிவை கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் முறையே எழுதி வைக்க வேண்டும். அந்த நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஒன்றை கூட்டம் முடிந்தவுடன் வட்டாட்சித் தலைவர் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அந்த யோசனையை ஊராட்சி மன்றம் அக்கூட்டத்தில் ஏற்றுக் கொண்டிருந்தால், ஊராட்சித் தலைவர் பதவியிலிருந்து விளம்பரம் மூலமாக ஆய்வாளர் நீக்கி விடலாம், இவ்வாறு விலக்கப்பட்டவர் ஓராண்டு முடிவதற்குள் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு தகுதிபெறமாட்டார். இவ்வாறாகத் தலைவரைப் பதவியிருந்து நீக்குவதற்கு வரையறை செய்யப்பட்டு உள்ளது.

ஊராட்சி உறுப்பினர்கள் மக்கள் விரும்பும் பணிகளையும், மக்களது தேவைகளையும் உணர்ந்து செயல்படக் கூடியவர்கள். ஊராட்சி நிருவாகத்தில் அதிக அக்கறை கொண்டவர்கள். ஊராட்சி வேலைகள் செய்யும் பொழுது ஏற்படுகின்ற தடைகளையும் ஊராட்சியின் சொத்துக்கள் அழிக்கப்படும்போது இவ்விஷயங்களை ஊராட்சி உறுப்பினர் சம்பந்தப்பட்ட நிருவாக அதிகாரி அல்லது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். பொதுச் சொத்துக்கள்

அழிக்கப்படும்போது அனைவருமே தடுக்க வேண்டுமென்பது ஒவ்வொருவரின் கடமை என்றாலும் ஊராட்சிப் பிரதிநிதிகள் மிகவும் விழிப்பாகச் செயல்பட வேண்டுமென்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஊராட்சிப் பணிகள் குறித்து உறுப்பினர் தீர்மானம் கொண்டு வரலாம். ஊராட்சிப் பணிகள் செய்யாமல் இருந்தால், அதற்குரிய விவரங்களைக் கேட்க, ஒவ்வொரு உறுப்பினரும் உரிமை பெற்றுள்ளனர். ஊராட்சி அலுவலகத்தில் நடைபெறுகின்ற செயல்களை, அதாவது ஆவணங்களைப் பார்வையிடவும் ஊராட்சி உறுப்பினர்கள் அதிகாரம் கொண்டுள்ளனர். ஆனால் ஆவணங்களைப் பார்ப்பதற்கு, ஆணையாளர் எழுத்து மூலமாகக் காரணங்களைக் காட்டி பார்வையிட முடியாமல் தடுக்கவும் செய்யலாம். பொதுவாக ஆவணங்களைப் பார்க்க உறுப்பினர்கள் உரிமை பெற்றவர்களெனினும், பொது நன்மையைக் கருதி, பொது நன்மைக்குப் பங்கம் விளைவிக்குமென எண்ணினால் ஆணையாளர் பார்வையிடுவதைத் தடுத்துவிடுவார். ஊராட்சி உறுப்பினர்கள், தலைவர், துணைத்தலைவர் போன்றோர்கள் மக்களுக்காகப் பணியாற்றுகின்றவர்களேயாயினும், அவர்களது பணிக்கு ஈடாக ஊதியம் ஏதும் பெறக் கூடாது, வழங்கவும் கூடாது எனக் கண்டிப்பாக வரையறுக்கப்பட்டுள்ளது. இன்றைய அளவில் ஊராட்சிகள் மிகவும் சிறியதாகவே அமைந்து கொண்டே வருகின்ற காரணத்தால், ஊதியம் வழங்கி உறுப்பினர்களின் ஒற்றுமையையும் மக்களின் ஒற்றுமையையும் குலைத்து விடக்கூடாது.

ஊராட்சிக் கூட்டங்கள் கூடுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் உறுப்பினர்களின் வருகை திருப்திகரமாக இருந்ததெனக் கூறமுடியாது. ஏனெனில் 50 விழுக்காடு வருகைதான் பெரும்பாலும் இருந்து வந்துள்ளது. சில ஊராட்சிகள் அரிதாகவே கூட்டங்களைக் கூட்டின. பல மாதங்களாகக் கூட்டம் கூட்டாமலும் இருந்து வந்துள்ளன சில ஊராட்சிகள். பெரிய ஊராட்சிகளின் நிலையே இந்த மாதிரியாக இருந்தால், சிறிய ஊராட்சிகள் எப்படியிருக்குமென நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடியும். ஊராட்சிகள் திருப்திகரமாகச் செயல்படவில்லையேல், தள்ளிவைக்கப்படும். ஊராட்சிகள், கிராமப்பிரிவு, பிரிவினை அரசியல், கூட்டங்களைப் பகிஷ்காரம் செய்தல், வரி விதிப்பிற்கு எதிர்ப்புச் செய்தல், நிய

மனங்களில் சொந்தக்காரர்களை நியமித்தல், அரசாங்க நிதியைத் தவறாகப் பயன்படுத்துதல், அதிகாரிகளைப் பணியாற்றவிடாது தடுத்தல் போன்றவற்றால்தான் ஊராட்சிகள் கலைக்கப்பட்டுள்ள தாக அறிய முடிகிறது. ஊராட்சிகள் கலைக்கப்பட்டு, அதிகாரிகளை நியமித்து அவர்களின்மூலம் நிருவகிக்கப்பட்டன.

ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் தவறாது வருகை தரவேண்டும். தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கள் கொண்ட கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் வருகை தரவில்லை யேல் பதவி நீக்கமும் செய்யப்படுகின்றனர். கூட்டங்களுக்கு ஊராட்சித் தலைவர் தலைமை தாங்கி நடத்துகிறார். ஊராட்சியின் கவனத்திற்கு வரும் ஒரு பிரச்சனையில் உறுப்பினர் எவராவது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பணசம்பந்தமுடைய அக்கறை கொண்டவர்களாக இருந்தால், அவ்உறுப்பினர்கள் அப்பிரச்சனையில் வாக்களிக்கவும், அந்த விவாதத்தில் கலந்து கொள்ளவும் கூடாது. உறுப்பினர் மறுப்பு தெரிவித்தால், கூட்டத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

நகரியங்களை நிருவகிக்க நகரியக் குழுக்களை அரசாங்கம் நியமிக்கின்றது. நகரியப்பணிகள் ஊராட்சிகள் செய்யும் பணிகள் போல் அமைக்கப்படுகின்றன. எனவே அப்பேர்ப்பட்ட சமயங்களில் ஊராட்சியின் சட்டம் நகரியங்களுக்கும் பொருந்தும். நகரியக்குழுக் களின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய முறை, யார்யார் நகரியத்தில் இடம் பெறவேண்டும் என்பது பற்றியும், நகரியக்குழுவின் தலைவர், தலைவருக்கும் உறுப்பினர்களுக்குமுள்ள தொடர்புகள், தலைவர் நியமனம் செய்யப் பட வேண்டுமா அல்லது தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா என்பதை யும் அரசாங்கமே நிருணயிக்கின்றது. மேலும் உறுப்பினர்கள், தலைவர் ஆகியோர்களின் பதவிக்காலம், நகரியத்தின் வரையறை நிபந்தனைகள், கடமைகள் மற்றும் நகரியத்திற்குரிய நடைமுறை கள் போன்றவற்றையும் அரசாங்கமே நியமனம் செய்கின்றது. எனவே, நகரிய நிருவாகத்தைப் பொறுத்தவரை அதனைத் தனித் தன்மையோடு செயல்பட வைக்க அரசாங்கம் முழு அதிகாரத்தை யும் கொண்டுள்ளது உள்ளாட்சிகளில் நகரியம் தனித்தன்மை பெற்றது.

இந்தியாவில் ஒவ்வொரு ஊராட்சியிலும் சராசரி மக்கள் தொகை 1914 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 65 விழுக்காடு ஊராட்சிகள்தான் இந்த மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. தவிர 179 ஊராட்சிகளில் வரையறுக்கப்பட்டுள்ள 500 பேர்களுக்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் ஒரு கிராமத்திற்கு ஒரு ஊராட்சி என்று இருந்தால், கிராமத்தை அடிப்படை அலகாக எடுத்துக் கொள்ளலாம். அதற்குக் கிராமங்கள் போதுமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கவில்லை. எனவேதான் ஒரு ஊராட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் அடங்கியுள்ளன. 8 கிராமங்கள், 10 கிராமங்கள் எனப் பல கிராமங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஊராட்சிகளும் தமிழகத்தில் உள்ளன. சாதாரணமாக ஒவ்வொரு ஊராட்சியும் நான்கு அல்லது ஐந்து கிராமங்களைக் கொண்டுள்ளன. ஆகவே ஓர் ஊராட்சி எவ்வளவு மக்கள் தொகையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பல காலமாகக் கேட்கப்பட்டு வரும் கேள்வி. இந்தியாவைப் பொறுத்தவரை 1000 மக்கள் தொகையாக ஒவ்வொரு கிராமமும் இருக்க வேண்டுமாயின் 36.8 விழுக்காடு அதாவது, 1,66,286 கிராமங்கள் 1000க்கு குறைவான மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 4,51,623 ஆகும்.

தமிழகத்தில் கிராம ஊராட்சிகள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரின் உதவியாளர்களின் கண்காணிப்பில் செயல்படுகின்றன. அவர்கள்தான் அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பாளர்கள். தமிழக ஊராட்சி வளர்ச்சி இயக்குநரகம் ஊராட்சி ஒன்றிய நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றது.

6

ஊராட்சி ஒன்றியங்கள்

இந்திய அரசியலமைப்பின் 40-ஆவது பிரிவு செம்மையாகச் செயல்பட வேண்டுமாயின், கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அமைக்கப்பட வேண்டுமென்பது உறுதி. இதனால் மாவட்ட வாரியங்கள் நீக்கப்பட வேண்டுமென்பதுவும் அவசியமான ஒன்றாக மாறியது. 19-ஆம் நூற்றாண்டின் மத்திய காலம் வரையிலும் உள்ளாட்சி வாரியங்கள் என்பது தெரியாமலிருந்ததாயினும், புதிதாக அமைக்கப்பட்ட உள்ளாட்சி வாரியங்கள் குறுகிய காலத்தில் அழிக்கப்படவேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டன. ஏனெனில் மாவட்ட வாரியங்கள் பெரிய அளவு பரப்பளவுடையதாக, நிருவகிக்கச் சிக்கல் நிறைந்ததாக இருந்ததால், அவற்றில் போதுமான கவனம் செலுத்த இயலவில்லை. தவிர, மாவட்ட வாரியங்களின் வேலையும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வந்ததால், வாரியங்கள் செம்மையாகச் செயல்படவும் முடியவில்லை. ஆரம்பக்கல்வியை மட்டுமே எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், ஆரம்பக்கல்வியை வளர்ப்பதற்கு மாவட்ட வாரியங்கள் போதுமான கவனம் செலுத்தக்கூடிய நிலையில் இல்லாமலிருந்ததைக் காணலாம். மேலும் அதிகாரங்கள் மிகுதியாக வாரியங்களில் குவிந்து இருந்த காரணத்தால், பணிகள் செய்யப்படுவது குறித்து மோதல்கள் ஏற்படலாயின. அதிக அதிகாரங்கள், மிகுதியான பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்ததால், ஆணவமும் உள்ளாட்சி வாரியங்களில் அதிகரித்து விட்டது. மக்களின் பிரதிநிதிகள் ஆர்வத்தோடு நிருவாகத்தில் பங்கேற்க, நிருவாகம் சீராக அமைய, அதிகார வரையறை எல்லை சிறியதாக, அளவானதாக இருக்க வேண்டுமென்பது முடிபு.

வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்ததால் மாவட்ட வாரியங்களை நீக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மாவட்ட வாரியங்களின் பணிகள் ஊராட்சிகளில் அமையும்படி மாற்றி அமைக்கப்பட்டது. மாவட்ட வாரியங்கள் ஊராட்சியின் அருகாமையில் வரலாயின. ஊராட்சி ஒன்றியங்களில் பங்குபெற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்காக அதிகரித்தது. இதனால் நிருவாகத்தைச் செயல்படுத்தும் தலைமைப்பண்பினை அனைத்துப் பிரதிநிதிகளும் பெற்றனர். ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சியும் பெருகலாயிற்று. ஏனெனில் ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்ட வாரியங்களைக் காட்டிலும் சிறியன, ஒரு மாவட்டத்தில் பல ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டன. எனவே ஊராட்சி ஒன்றியத்தின் அதிகார வரையறை எல்லை சிறியதாகவும், அளவானதாகவும் அமையலாயிற்று. ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகள் மக்களைப் பற்றியும், ஊராட்சிகளின் வளங்கள், மூலப்பொருட்கள், தேவைகள் போன்றவற்றைத் தெரிந்தவர்களாக இருந்ததால், மக்களின் குறைகளைக் களையும் வண்ணமும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வண்ணமும், ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகள் செயல்பட்டதால், பணிகளின் வளர்ச்சி பெருகலாயிற்று.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் ஒவ்வொரு ஊராட்சியின் பிரதிநிதியும் உறுப்பினராக இருப்பர். ஊராட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றியத்தில் உறுப்பினர் ஆவார். எனவே ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருந்ததால் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு எளிதாகக் கிடைக்கலாயின, ஊராட்சியும் ஊராட்சி ஒன்றியமும் பரஸ்பரமாகவும், ஒற்றுமையுடனும் செயல்பட ஆரம்பித்தன. மாவட்ட வாரியங்கள் செயல்பட்ட காலத்தில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் மாவட்ட வாரியத்திற்கும் நெருக்கமான தொடர்பு கிடையாது. எனவே ஊராட்சி ஒன்றிய முறை சிறந்த முறையாகச் செயல்படுத்தப்பட்டது. மேலும் மாவட்ட வாரியத்தின் செயல்திறன் குறைய ஆரம்பித்ததால், மாற்று முறையின் மூலமாகச் செயல் திறனைக் காப்பாற்றி, பணிகளையும் சிறப்பாகச் செய்யலாம் என்பதற்காக மாவட்ட வாரிய முறைமை கைவிடப்பட்டது என்று கூறலாம். மேலும் மாவட்ட வாரியங்கள் செயல்படுவதற்கு நிதிவசதியும் போதுமானதாக இல்லை மாவட்ட அளவில் பணியாற்றுவதற்குத் திறமைகொண்ட பயிற்சி பெற்ற பணியாளர்

களும் கிடைக்கவில்லை. ஆகவே பணியாளர்களின் திறமையை முழுவதும் பயன்படுத்தவும், போதுமான அளவு நிதிவசதி அளித்துச் செயல்படவும் ஊராட்சி ஒன்றிய முறை சிறந்த முறையாகக் கருதப்படுகிறது.

தன்னிச்சையான அரசாங்கம் உள்ளாட்சியில் செயல்பட வேண்டுமாயின், ஊராட்சி ஒன்றியங்கள்தான் மக்களாட்சியின் அடிப்படை என பல்வந்தராய் குழுவின் செயல்திட்ட ஆய்வுக்குழு கூறுகின்றது. ஏனெனில் ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரியதாகவும் இல்லாமல், சிறியதாகவும் இல்லாமல் நடுத்தரமாக அமையக் கூடியதாகும். ஊராட்சி ஒன்றியங்களை ஏற்படுத்தச் சட்டமன்றத்தில் அனைத்துத் தரப்பு உறுப்பினர்களும் ஆதரவு தந்தனர். மாவட்ட வாரியங்களை நீக்குவதையும் எல்லா உறுப்பினர்களும் ஆதரித்தனர். 1957-ஆம் ஆண்டு டிசம்பர் 1, 2 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநில ஊராட்சி ஒன்றிய மாநாடு மாவட்ட வாரியங்கள் நீக்கப்பட்டதை வரவேற்றது. எனவே 1958-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் தேதி மாவட்ட வாரியங்கள் கலைக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் நவம்பர் 1, 1958-ஆம் ஆண்டிலிருந்து செயலாக்கத்திற்கு வந்தன.

தேசியப் பணி விரிவாக்கத் திட்டத்தின்கீழ் வளர்ச்சி வட்டாரங்களை ஊராட்சி ஒன்றியங்களாக அமைக்க, வளர்ச்சி வட்டாரம் அடிப்படையாக ஆக்கப்பட்டது. ஏனெனில் இது இரண்டு காரணங்களில் பொருத்தமானது. ஒன்று வட்டார வளர்ச்சி அதிகாரிகள், கிராம மட்டப் பணியாளர்கள், விரிவாக்கப் பணிகளின் அதிகாரிகள் ஆகியோர் வட்டார அளவில் பெறுகின்ற அனுபவம் சிறந்ததாகவும் சிறப்பானதாகவும் இருந்தது. வட்டார அளவில் பணிபுரியக்கூடிய இந்த அதிகாரிகள் அவ் வட்டாரத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகளுடன் கலந்து, கூட்டாக, ஒத்துழைத்துச் செயல்பட முடியும் என அனுபவங்கள் உணர்த்தின. அதாவது ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படுவதற்கு முன்னர், மக்கள் பிரதிநிதிகளாலான வட்டார ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டன. வட்டார வளர்ச்சிப் பணிகள், தேசிய விரிவாக்கப்பணிகள் போன்றவை தொடர்ந்து, நிரந்தரமாகச் செயல்பட வேண்டுமென இந்திய அரசாங்கம் தெரிவித்தது. எனவே அப்பணிகள் நிரந்தரமாக்கப்படுகின்ற காரணத்தால், தொடர்ந்து

செலவுகளை ஈடுகட்ட ஓர் அமைப்பு தேவைப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்கள் அவ்வட்டாரத்தில் நிறுவப்பட்டால், இக்குறையைத் தீர்க்கவும், தொடர்ந்து செலவுகளைச் சரிக்கட்டவும் முடியும் எனவும் தேசிய விரிவாக்கப் பணியில் பணியாற்றுகின்ற திறமைமிகுந்த பணியாளர்களை நிரந்தரமாக ஊராட்சி ஒன்றியத்திற்கும் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற காரணத்திற்காகவும், ஊராட்சி ஒன்றியங்கள் வட்டார அளவில் அமைக்கப்பட்டன. மேலும் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் அனைத்தையும் ஒருங்கே இணைத்தால், ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் தொடர்ந்த ஒற்றுமையும், ஒருங்கிணைப்பும் ஏற்படும். ஊராட்சி ஒன்றியம் பரந்த அளவில் அமைக்கப்பெற்றால், ஏராளமான ஊராட்சிகளை ஒன்றாக இணைக்க வேண்டும். அப்போது முன்னர் இயங்கிய மாவட்ட வாரியங்களுக்கு ஒப்பாகவே அமைந்துவிடும். நெருக்க மான தொடர்புகள் அறுந்துவிடும். ஆகவே வட்டார அளவில் வளர்ச்சி வட்டாரங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் அமையச் சிறந்த அடிப்படைக் காரணங்களாக இருந்தன.

திட்ட ஆணையத்தால் அமைக்கப்பட்ட ஆய்வு செயல்திட்டக் குழுவின் துணைக் குழுவும் ஊராட்சி ஒன்றியங்கள் அமைப்பதற்கும், மாவட்ட வாரியங்கள் நீக்கப்படுவதற்கும் ஆதரவு தெரிவித்தது.

ஊராட்சி ஒன்றியம் கீழ்க்கண்ட நான்கு வகை உறுப்பினர் களைக் கொண்டதாக அமைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது. அவை:

1. ஊராட்சிப் பிரதிநிதிகள்
2. கூட்டு நியமன உறுப்பினர்கள், ஒதுக்கீடு உறுப்பினர்கள்
3 மாவட்ட வாரியப் பிரதிநிதிகள்
4. அலுவல் அடிப்படையில் உறுப்பினர்கள்

ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஓர் உறுப்பினரைப் பிரதி நிதியாக அனுப்பவேண்டும். கிராம ஊராட்சியின் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரை இருந்தால், அது ஒரு பிரதிநிதியை மட்டும் அனுப்பவேண்டும். 3000க்கு மேலான தொகையைக் கொண்ட கிராமங்கள் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பவேண்டும். இவ் உறுப்பினர்கள் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டால் நல மானது என்று கருதியது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தாழ்த்தப்பட்ட உறுப்பினர் இடம் பெற வேண்டும். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வில்லையேல், கூட்டு நியமனம் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மாவட்ட வாரியத்திற்கு வட்டாரங்களிலிருந்து தேர்ந்தெடுக் கப்படுகின்றவர்கள், ஊராட்சி ஒன்றியத்திலும் உறுப்பினராக இருக்க வேண்டும்.

வட்டாரத்திற்குட்பட்ட தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர், வட்டார வளர்ச்சி அதிகாரி ஆகியோர் அலுவல் அடிப்படையில் உறுப்பினர்களாக இருப்பர்.

ஊராட்சிக்கு மேலாக உள்ளாட்சி நிருவாகத்தில் இடம் பெறுவது ஊராட்சி ஒன்றியம் ஆகும். இது மற்ற மாநிலங்களில் அமையப்பெற்று உள்ள ஊராட்சி சமிதிகளுக்கு ஒப்பானதாகும். சமுதாய வளர்ச்சி, தேசிய விரிவாக்கப் பணிகள் ஆகிய திட்டச் செயல்களினால் ஒரு வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் ஊராட்சி ஒன்றியம் அமைக்கலாமென முடிவு செய்யப்பட்டது. ஏனெனில் சமுதாய வளர்ச்சிப்பணிக்கும், ஊராட்சிகளின் பொதுவான அமைப் பாகவும் ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது. ஊராட்சி ஒன்றியத் திற்கு ஒரு மன்றம் உள்ளது. இதுதான் ஊராட்சி ஒன்றியத்தின் நிருவாகத்தைச் செயல்படுத்திக் கொண்டு வருகின்றது. ஊராட்சி ஒன்றியத்திற்கு, ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்ய அதிகாரம் இல்லை. எனினும் ஊராட்சி ஒன்றியத்தில் எதாவது ஒரு பகுதியில் ஊராட்சி இல்லையெனில், அப்படி இல்லாதவரையில் ஊராட்சி ஒன்றியமே வரி விதித்தல் உட்பட எல்லா அதிகாரங்களை யும் செயல்படுத்தும். எல்லாக் கடமைகளையும் ஊராட்சி ஒன்றியம் செய்கின்றது. இவ்வாறு ஊராட்சிகளுக்குப் பொதுவாக நின்று செயல்படக்கூடியதாக இது உள்ளது. ஊராட்சி ஒன்றியம் ஊராட்சிப் பணிகளில் தலையீடு செய்யாது. எனினும் ஊராட்சி அமையா மலிருந்தால் இது தானாகவே ஊராட்சிப் பணிகளை ஏற்று, பொறுப் பாகச் செயல்படுத்தும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தில், ஒன்றியத் திலுள்ள அனைத்து ஊராட்சித் தலைவர்களும் உறுப்பினர்களாவர். நகரியத்தின் பிரதிநிதியாக ஒரு மக்கள் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப் படுகிறார். ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடி வகுப்பினர் ஆகியோர்களுக்கு மூன்று இடங்கள் ஒதுக்கப்

படுகின்றன. இதே மாதிரியாக மூன்று பெண் உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர் இப்பிரிவினர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் இடம் பெறவில்லையேல், அவர்கள் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளாக வரும் தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் சட்ட மன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் போன்றோர் ஊராட்சி ஒன்றிய மன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்கின்றனர். ஆனால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்கள் இந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளின் தலைவர்களாகவும் நகரியங்களின் உறுப்பினர்களாகவும் இருந்தால் தான், ஊராட்சி ஒன்றியத்தில் உறுப்பினர்களாக இருக்க முடியும். ஊராட்சித் தலைவர், நகரிய உறுப்பினர் ஆகியோர் பதவிகளிலிருந்து விலகினால், ஊராட்சி ஒன்றிய மன்றத்திலிருந்தும் விலகி விடுவார்கள். ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களுக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர் தலைமை தாங்கி நடத்துகிறார். ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்கள் ஊராட்சிகள் சம்பந்தமான தீர்மானங்களைக் கொண்டு வரவும் ஊராட்சி ஒன்றிய நிருவாகச் செயல் முறைகள் குறித்து கேள்விகள் கேட்கவும் உரிமை பெற்றுள்ளனர். இவ்வாறாக ஊராட்சி ஒன்றியச் செயல்களில் அக்கறை எடுத்துப் பங்கேற்றாலும், ஊதியம் வழங்குவது கிடையாது. இவ்வாறாக, ஊராட்சி ஒன்றிய மன்றம் தனது அதிகார வரையறைக்குட்பட்ட பணிகளைச் செய்து வருகின்றது.

ஊராட்சி ஒன்றியம் போன்ற அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால் சில நன்மைகளும், தீமைகளும் உள்ளன. அவைகளில் சில ஊராட்சி அரசு நிறுவனங்கள் மூன்று படிவரிசையாக அமைக்கப்பட்டு இருப்பதால், இவைகளின் மொத்தத் தொடர்ச்சி ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை மறைமுகமாகத் தேர்ந்தெடுப்பதன் மூலமாகக் காக்கப்படுகிறது. செயல்கள் அனைத்தும் ஒருங்கே மொத்தமாக ஒருங்கிணைந்து செய்ய வழி கொடுக்கிறது. கிராம ஊராட்சிகள் திறமையாகச் செயல்படும் வண்ணமும், குழப்பமின்றியும், நோக்கங்களை நிறைவேற்றவும், வளர்க்கவும் இம்முறை பயன்படுகிறது. உயர்மட்ட அமைப்புகளின் செயல்முறைகள் எளிதாக்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியம்

போன்ற உயர்மட்ட அமைப்பு, ஊராட்சி உறுப்பினர்களைக் கொண்டிருப்பதால் ஊராட்சி ஒன்றிய முடிவுகள் அனைத்தும், ஊராட்சி உறுப்பினர்களின் கருத்துக்களாகும். மறைமுகமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால், தேர்தல் செலவு குறைகிறது. பொதுத் தேர்தல் போல் இல்லாது, மிகவும் அதிகமான செலவுமில்லாமல், ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாகத் தேர்தலை நடத்த முடிகிறது தேர்தல்கள் தான் மக்களாட்சியின் எண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடியன என்பது உண்மை. இருப்பினும் ஊராட்சி அரசு நிறுவனங்களில் அரசியல் கட்சி அடிப்படையில் தேர்தல் நடத்தினால், நிச்சயமாக உள்ளூர்ப் பிரச்சினைகள் எதையுமே தெரியாமல், தேர்தல் தேசிய அளவு இலட்சியத்துவ நோக்கில்தான் நடைபெறும். இதனால் உள்ளூர்ப் பிரச்சினைகளுக்குப் போதுமான கவனம் செலுத்தப்பட மாட்டாது. மேலும் ஊராட்சி அரசு நிறுவனங்கள் குறுகிய பரப்பில் செயல்படுவதால் போட்டி, பொறாமைகளைத் தவிர்க்கப் போட்டியின்றி ஒரே முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதே விரும்பத்தக்கது.

ஊராட்சி ஒன்றிய அமைப்பிற்கு, நேரடியாகத் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதால், ஊராட்சி ஒன்றியம் சிறந்த அமைப்பாகத் திகழ்கின்றது. மக்கள் எண்ணங்களைப் பிரதிபலித்து, பரிகாரம் தேடக்கூடிய அமைப்பாக இது விளங்குகின்றது. இந்த அமைப்பிற்குத் திறமையானவர்களும், தகுதி வாய்ந்தவர்களுமே வரக்கூடிய அளவில் அமையும். மக்கள்தான் இதற்குப் பொறுப்பாக இருக்கின்றனர். மக்கள் திறமைமிகுந்தவர்களைத்தான் தேர்ந்தெடுப்பர். உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால், இவ்வமைப்பு தன்னிச்சையாக இயங்கும் தன்மையைப் பெற வழியுண்டு. மக்கள்தான் இவர்களுக்கு எஜமானர்களே தவிர, மற்ற எவரும் இந்த அமைப்பில் செல்வாக்குப் பெற முடியாது. மக்களாட்சியின் உண்மை நோக்கை அடையக்கூடிய நிறுவனமாக இது திகழும். அரசியல் உள்ளாட்சியில் ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல. எனினும், தேசிய அளவில் கட்சிகளின் அடிப்படையே உள்ளாட்சிகளாகத்தான் திகழ்ந்து வருகின்றன என்பது தெளிவாக விளங்குகிறது. எனவே ஊராட்சி ஒன்றியத்திற்கு நேரடியாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் பல நன்மைகள் இருப்பினும், தேர்தல் குறைபாடுகள் அனைத்து நன்மைகளையும் எடுத்து விடுகிறது. தேர்தலின் போது கிராமப்புறங்களில் எண்ணற்ற வீடுகளும், வைக்கோல் போர்களும்

தீயிற்கு இரையாவது கண்கூடாக நடந்து வருகின்ற விஷயம், இனச் சார்பு பல பிரிவுகளை ஏற்படுத்தி, குழப்பத்தை விளைவிக்கின்றது.

தமிழகத்தில் ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் அறிவிப்பு ஜனவரி 24, 29, 1982ல் செய்யப்பட்டது எல்லா அரசியல் கட்சிகளும் தங்களது பலத்தைக் காட்ட முன்வந்தன. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வழிசெய்யப்பட்டதால், அரசியல் கட்சிகள் தீவிரமாகத் தேர்தலில் ஈடுபட்டன. சட்டமன்ற உறுப்பினர்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். 27 சட்ட மன்ற உறுப்பினர்களில் அ.தி.மு.க. 17. தி.மு.க. 6, காங்கிரஸ் (I) 3, சி.பி.ஐ (எம்) 1 எனப் பல்வேறு கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்தனர். ஆனால் தேர்தல் ஒத்திவைக்கப் பட்டுவிட்டது. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களில் பெண்கள், சிறுபான்மையோர் ஆகியோர்களுக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கீடு செய்யப்பட்டதால் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

7

நகராட்சி அமைப்பு

நகராட்சி அமைப்பது பற்றி 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விளக்குகின்றது. எந்த நகரத்தையும், கிராமத்தையும், சிறுபிரிவு இடங்களையும், சந்தை மற்றும் பிற உள்ளூர் இடங்களையும் அவை சார்ந்த குழுவாக, ஒன்றோடொன்று அருகாமையில் இணைக்கப்பட்டு இருந்தாலும், அவைகளை நகராட்சியாக மாநில அரசாங்கம் உருவாக்கலாம் என பிரிவு 4 (1) வில் 1920-ஆம் ஆண்டுச் சட்டம் கூறுகிறது. ஊராட்சிகளை நகராட்சியாக மாற்றுவது குறித்து ஒழுங்குமுறையோ, வரையறையோ ஏதும் நிருணயிக்கப்படவில்லை. 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டம், எல்லாக் கிராமங்களிலும் ஊராட்சிகள் அமைக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. இந்த ஊராட்சிகளில் ஆண்டு வருமானம் ரூ. 10,000 மும் அதற்கு மேலாகவும் இருந்தால், அவை நகர ஊராட்சிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. இந்த நகர ஊராட்சிகள் மறுபடியும் மூன்று படிநிலைகளாக மேலும் வகைப்படுத்தப்படுகின்றன. அவை:

1. ஆண்டு வருமானம் ரூ. 40,000மும் அதற்குக் குறைவாகவும் இருக்க நேரிட்டால், ஊராட்சிகள் இரண்டாம் படிநிலை அந்தஸ்தைப் பெறுகின்றன.
2. ஆண்டு வருமானம் ரூ. 40,000க்கு மேலாகவும், ஒரு இலட்சத்திற்குக் குறைவாகவும் உள்ள ஊராட்சிகள் முதல்படிநிலை ஊராட்சி அந்தஸ்தைப் பெறுகின்றன.
3. ஒரு இலட்சமும் அதற்கு மேலாகவும் ஆண்டு வருமானம் வரக்கூடிய ஊராட்சிகள், தேர்வுப் படிநிலை ஊராட்சிகள் அந்தஸ்து பெறுகின்றன.

தேர்வுப்படிநிலை ஊராட்சிகள் சில குறிப்பிட்ட முறைகளைக் கையாண்டு, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றம் ஆகிய வற்றோடு கலந்தாலோசித்து, நகராட்சிகளாக மாற்றப்படுகின்றன. ஊராட்சிகள் நகராட்சிகளாக மாறுவதற்குரிய தகுதிகளை அடையப் பெற்றதும், அவற்றை நகராட்சிகளாக மாற்ற வேண்டுமென்ற கட்டாயம் பற்றி 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தில் அம்சங்கள் ஏதும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை

தமிழ் நாட்டின் மக்கள் தொகை 49,199,168 என 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கூறுகின்றது. இதில் நகரத்தில் வாழ்கின்ற மக்கள் தொகையின் எண்ணிக்கை 12,464,834 ஆகும். இது மொத்த மக்கள் தொகையில் 30.26 விழுக்காடு ஆகும். இது இந்தியாவில் நகரங்களில் வாழும் மொத்த மக்கள் தொகை விழுக்காட்டை விட அதிகமாகும். பொதுவாக இந்தியாவில் நகரங்களில் வாழும் மக்கள் தொகையின் அளவு 19.91 விழுக்காடு ஆகும். இம்மாநிலத்தில் 5893.5 சதுர கி. மீ. பரப்பு நகரத்தில் வாழக்கூடிய மக்கள் பயன்படுத்துகின்ற அளவாகும். இது மாநில மொத்தப் பரப்பளவில் 4.53 விழுக்காடு ஆகும். இந்தியாவில் 1.33 விழுக்காடு தான் நகரப்பரப்பைப் பயன்படுத்துகின்றவர்களாகும். நகரப் பரப்புக்களில் ஒரு சதுர கி. மீட்டருக்கு 2115 பேர்கள் உள்ளனர் என்ற மக்கள் தொகை நெருக்கத்தைக் கூறியுள்ளது. நகர ஊராட்சிகள் 5000 பேர்களுக்கு மேலாக மக்கள் தொகை இருக்குமாயின், அவை நகராண்மை (Urban) என்று தீர்மானிக்கப்பட வேண்டுமென 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கூறுகிறது. இந்த மாதிரியாக 439 நகரங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. ஆனால் 103 நகராட்சிகளும், நகரியங்களும்தான் உள்ளன. எல்லா நகரங்களும் நகராட்சியாகவோ, நகரியங்களாகவோ மாற்றப் படவில்லை.

நகராண்மை நகரங்களில் (Urban Centres) 1921-ஆம் ஆண்டு 6.25 விழுக்காடு மக்கள் வாழ்ந்தனர். இது 15.5 விழுக்காடாக 1971-ஆம் ஆண்டு பெருகியது. 1921-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையிலும் பெருகிய மக்கள் தொகை பற்றிக் காண்போம்:

வருடம்	மாநில மக்கள் தொகை (இலட்சக் கணக்கில்)	நகராண்மை நகரில் வாழும் மக்கள் தொகை	விழுக்காடு
1921	216 28	13.83	6.25
1931	234.72	17.47	7.25
1941	262.67	22.66	8.50
1951	301.19	31.09	10.33
1961	336 86	48.83	14.50
1971	411.99	63.59	15.50

நகரங்களில் வாழ்கின்ற மக்கள் தொகையின் அளவு மொத்த மக்கள் தொகையில் 30. 26 விழுக்காடாகும். ஆனால் நகராண்மை நகரங்களில் 15.50 விழுக்காடு மக்கள்தான் வசித்து வந்துள்ளனர்.

தமிழ் நாட்டில் நகராட்சிகளின் எண்ணிக்கை 1866ல் 18 ஆக இருந்தது. தற்போது 106 ஆக உள்ளது. விவரம் வருமாறு.

வருடம்	நகராட்சிகளின் எண்ணிக்கை
1866	18
1876	21
1886	29
1896	31
1906	31
1916	37
1926	45
1936	47
1946	49
1956	61
1966	88
1974	101
1977	103
1984	106

தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகள் பல படிநிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை:

1. சிறப்புப் படிநிலை :- வருட வருமானம் ரூ. 75 இலட்சங்களும் அதற்கு மேலும் எல்லாக் கணக்குகளிலும் வரக்கூடியதாகவும் ரூ 50 இலட்சங்கள் பொது நிதிக்கணக்குகளிலும் இருக்க வேண்டும்.

2. தேர்வுப் படிநிலை :- வருட வருமானம் ரூ. 50 இலட்சங்கள் எல்லாக் கணக்குகளிலும் இருக்கும்படியாகவும் ரூ. 25 இலட்சங்கள் பொதுநிதிக் கணக்குகளிலும் இருக்க வேண்டும்.

3. முதல் படிநிலை :- எல்லாக் கணக்குகளிலும் வருட வருமானம் ரூ. 15 இலட்சங்களும், பொது நிதிக்கணக்குகளில் ரூ. 10 இலட்சமும் இருக்க வேண்டும்.

4. இரண்டாவது படிநிலை :- எல்லாக் கணக்குகளிலும் வருட வருமானம் ஏழரை இலட்சங்களும், பொதுநிதிக் கணக்கில் ரூ. 5 இலட்சமும் இருக்க வேண்டும்.

5. மூன்றாவது படிநிலை:- வருட வருமானம் ரூபாய் மூன்று இலட்சங்களுக்கு மிகுந்து, அனைத்துக் கணக்குகளிலும் இருப்பதுடன், ரூபாய் இரண்டு இலட்சம் பொதுநிதிக் கணக்கிலும் இருக்க வேண்டும்.

நகராண்மை நகரியங்களும் மூன்று படிநிலைகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. அவை :

1. தேர்வுப் படிநிலை :- ரூபாய் 10 இலட்சங்களுக்கு மிகுந்த வருட வருமானம் கொண்டு, சாதாரண பொதுநிதிக் கணக்கில் இடம் பெறுவது.

2. முதல்படிநிலை ; சாதாரணப் பொது நிதிக்கணக்கின்கீழ் ஆண்டு வருமானம் ரூ. 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சத்திற்குள் இருக்கக்கூடியது.

3. இரண்டாம் படிநிலை :- சாதாரணப் பொதுநிதிக் கணக்கின்கீழ் வருட வருமானம் ரூ. 5 இலட்சமும் அதற்குக் கீழாக உள்ளவைகளும் ஆகும்.

நகராட்சிகளை வகைப்படுத்தி, தரம்பிரிப்பது முதலில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது. மூன்று வருடங்களின் சராசரி ஆண்டு வருமானத்தைக் கணக்கிட்டு, வகைப் படுத்தப்பட்டது. இம்முறை 1963-ஆம் ஆண்டு வரையிலும் பின்பற்றப் பட்டது. பின்னர் அரசாங்கம் வருமானத்துடன், மக்கள் தொகையையும் கணக்கிட்டு வகைப்படுத்த வேண்டுமென ஆணை பிறப்பித்தது. ஆனால் இம்முறை நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. பொதுக் கணக்கில் வரக்கூடிய வரவுகளை மட்டுமே வைத்துத்தான் கணக்கிடவேண்டுமென மறுபடியும் ஆணை பிறப்பித்தது. இதன் படி நகராட்சிகள் வகைப்படுத்தப்பட்ட முறையைப் பற்றிக் காணலாம்.

நகராட்சிகளின் படிநிலை	பொதுக்கணக்கில் மூன்று ஆண்டுகள் வந்த பொது ஆண்டு வருமானம்
சிறப்புப் படிநிலை	ரூ. 50 இலட்சத்திற்கு மேல்
தேர்வுப் படிநிலை	ரூ 25 ”
முதல் படிநிலை	ரூ. 10 ”
இரண்டாம் படிநிலை	ரூ 5 ”
மூன்றாம் படிநிலை	ரூ 2 ”

இவ்வாறு நகராட்சிகள் படிநிலைப்படுத்தப்பட்டதும், ஏராளமான குற்றச்சாட்டுக்கள் மக்களிடையே எழுந்தன. ஏனெனில் நகராட்சியின் வேலை நிதிவகைச் செயல்முறைகளைப் பொறுத்துத் தான் அமையக்கூடியதென்பது உண்மை. ஆனால் இது பொதுக் கணக்கில் மட்டுமே பயன்படுத்தக்கூடியது மட்டுமில்லாமல் துணைக்கணக்குகளான கல்வி, குடிநீர் வசதி மற்றும் விளக்கேற்றல் போன்ற பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே இந்த துணைக்கணக்குகள் மீதும் கவனம் செலுத்தி நகராட்சிகள் வகைப் படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது. நிதிவகை, நிருவாக வகைப் பொறுப்புக்கள் குடிமைப் பணிகளைச் செய்ய வசதி செய்யவும், தொழில் நுணுக்கப்பணிகளின் தேவைகளையும் மனத்தில் கொண்டு, வரிசைப்படுத்தினால்தான் செம்மையாக அமையும். இவற்றை நன்றாக அரசு ஆராய்ந்து, கீழ்க்கண்ட முறையில் 1974-ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது. இதன்படி இரண்டு கணக்குகள் உருவாகியுள்ளன. அவை பொதுக் கணக்குகள் மற்றும் எல்லாக் கணக்குகள் என்பனவாகும்.

நகராட்சிப் படிநிலை	பொதுக்கணக்கில் வருமானம்	எல்லாக் கணக்குகளிலும் மொத்த வருமானம்
சிறப்புப் படிநிலை	ரூ. 50 இலட்சங்கள்	ரூ. 75 இலட்சங்கள்
தேர்வுப் படிநிலை	ரூ. 25 ,,	ரூ. 50 ,,
முதல் படிநிலை	ரூ. 10 ,,	ரூ. 15 ,,
இரண்டாம் படிநிலை	ரூ. 5 ,,	ரூ. 7 ,,
மூன்றாம் படிநிலை	ரூ. 2 ,,	ரூ. 3 ,,

இந்த வகைப்படுத்தலில் நிதிவகைப் பொறுப்புடன், நிருவாகப் பொறுப்பினையையும் மனத்தில் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மொத்த வருமானம் எல்லாக் கணக்குகளை மட்டுமே வைத்து வகைப்படுத்தவேண்டுமெனக் கூறியுள்ளது. அவை :

நகராட்சிப் படிநிலை	மொத்த வருமானம் எல்லாக் கணக்குகளிலும்
சிறப்புப் படிநிலை	ரூ. 75 இலட்சங்கள்
தேர்வுப் படிநிலை	ரூ. 40 ,,
முதல் படிநிலை	ரூ. 15 ,,
இரண்டாம் படிநிலை	ரூ. 7 ,,
மூன்றாம் படிநிலை	ரூ. 3 ,,

நகராட்சி அமைப்பது குறித்த விஷயத்தில், ஊராட்சி நகராட்சியாகச் சட்டத்தின்படி மாற வாய்ப்பில்லை. அரசாங்கம் தான் தீர்மானித்து, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட வளர்ச்சி மன்றம் போன்றவற்றின் கருத்துக்களை அறிந்து முடிவு எடுக்கிறது. தற்போது 439 நகர்ப்புற (Urban) நகரங்கள் உள்ளன. இதில் 8 நகரியங்களைச் சேர்த்து 106 நகரங்கள்தான் நகராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. எனவே ஊராட்சிகள் தேவையான தகுதிகளைப் பெற்றவுடன், நகராட்சிகளாக அறிவிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாக இருக்கவேண்டுமெனச் சட்டத்திருத்தம் செய்யப்படவேண்டும்.

தற்போது நகராண்மை நகரியங்கள் 8 தான் உள்ளன. இவை குற்றாலம், பவானிசாகர், மேட்டூர் ஆகியவை சிறப்பு சட்டமியற்றி உருவாக்கப்பட்டன. இது தவிர்த்து ஏற்கனவே ஐந்து நகரியங்கள்

1920-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டிருந்தன. நகரியங்கள் 1975ஆம் ஆண்டு வரையிலும் எந்தவித வகைப்படுத்தலும் செய்யபடாமல், 1975ஆம் ஆண்டு வகைப்படுத்தப்பட்டன.

படிநிலை	நிதி வகை வரம்பு
இரண்டாம் படிநிலை	ரூ. 5 இலட்சங்களும் அதற்குக்கீழும்
முதல் படிநிலை	ரூ. 5 இலட்சத்திற்கு மேல் 10 இலட்சத்திற்கு மிகாமல்
தேர்வுப் படிநிலை	ரூ. 10 இலட்சத்திற்கு மேலாக

இந்திய அரசியலமைப்பில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற அம்சமுள்ளது. இதன்படி பாராளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றிற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதுபோல், உள்ளாட்சிகளுக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற கருத்து நிலவியது. உள்ளாட்சிகளுக்குத் தனியான வரையறைகள் நிருணயித்து வாக்குரிமையைத் தடுப்பது இயலாத விஷயமாயிற்று. மேலும் சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகின்ற பொழுது, உள்ளாட்சிகளுக்கும் சேர்த்து வாக்காளர் பட்டியல் தயாரித்தால் செலவு குறையும், சிக்கனமாகவும் இருக்கும். சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்களிப்பது போல் உள்ளாட்சிகளுக்கும் வாக்களிப்பது திருப்தியைக் கொடுக்கும். எனவே உள்ளாட்சிகளுக்குக் குறிப்பாக நகராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் முறை கொண்டு வரப்பட்டது. இதே மாதிரியாக நகராட்சித் தேர்தலுக்குப் போட்டியிடுபவர்களுக்குக் கூடுதல் தகுதிகள் அல்லது சிறப்புத் தகுதிகள் ஏதும் நிருணயிக்கப்படவும் இல்லை. வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கின்ற அனைவரும், தேர்தலுக்கும் நிற்கத் தகுதிபெற்றவர்கள் என்பது முடிவாகி விட்டது. எனவே தேர்தலுக்கு முக்கியமாகத் தேவைப்படக் கூடியது வாக்காளர் பட்டியல். இதை வைத்துத்தான் தேர்தல் நடத்த வேண்டும். இதிலுள்ளவர்கள் தான் தேர்தலில் நிற்கவும் முடியும் என்ற நிலை ஏற்பட்டது. மேலும் நகராட்சித் தேர்தலுக்கு, நகராட்சிச் சந்தைகள், வண்டி நிலையங்கள், பஸ்நிலையம், இறைச்சிக் கொட்டில்கள் போன்றவற்றிற்கு உரிமம் பெற்றவர்கள் நிற்கத் தகுதியில்லாதவர்கள் எனச் செய்யலாமா? என ஆலோசிக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது.

நகராட்சியைப் பல வார்டுகளாகப் பிரித்து அவற்றிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை தற்போது பின் பற்றப்பட்டு வருகின்றது. இதனை வார்டு முறைமை என்று அழைப்பார்கள். ஒவ்வொரு வார்டிலிருந்தும் ஓர் உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுத்தால் நலமெனப்பட்டது ஏனெனில் பல உறுப்பினர்களை ஒரே வார்டிலிருந்து தேர்ந்தெடுப்பதால், ஏராளமான சீர்கேடுகள் தேர்தல் முறையில் நடைபெற வழி கோலியுள்ளன. எனவே பல உறுப்பினர்களை ஒரே வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கும் முறையை முழுவதுமாக நீக்கிட வேண்டுமென்ற கருத்து நிலவியது. ஏனெனில் ஒவ்வொரு வாக்காளருக்கும் வார்டைப் பொறுத்து தேர்ந்தெடுக்க வேண்டிய பிரதிநிதிகளைப் பொறுத்து பல வாக்குகள் அளிக்கப்படுகின்றன. இதில் வாக்காளர் தங்களுக்குப் பிடித்தமான முதலிரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுக்க வாக்குகளைப் பயன்படுத்துகின்றனர். பல சமயங்களில் எல்லா வாக்குகளையும் அளிக்க விரும்புவதில்லை. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினரின் மரியாதையும், மதிப்பும் ஒரு வார்டிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரைக் காட்டிலும் அதிகமாக உள்ளன. இது தவிர்க்கப்பட வேண்டிய விஷயமாகையால், பல உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்ற முறைமை கைவிடப்பட்டது. எனவே வார்டுகளை அதிகரித்து, ஓர் உறுப்பினர் ஒரு வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கும் முறை கொண்டு வரப்பட்டது. இதற்காகப் புதிய வார்டுகள் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்கம் இது பற்றிக் கவனமான அறிவுறுத்தல், வரையறை செய்துள்ளது.

வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு இருந்தாலும், இனச்சார்பு வேறுபாடு அகற்றப்பட்டாலும், தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேறும் படியாக நகராட்சியில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. தாழ்த்தப்பட்டோர்கள் அதிகமாக இருக்கின்ற வார்டை, ஒதுக்கப்பட்ட வார்டாகக் கருதி, தாழ்த்தப்பட்டோர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கும் படியாகச் செய்யப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் 1958-ஆம் ஆண்டு வரையிலும் இருந்து வந்த நகராட்சி நியமன உறுப்பினர் (aldermen) நகராட்சிகளிலும் இடம்பெறவேண்டுமென 1958-ஆம் ஆண்டு வலியுறுத்தியது. அனுபவம் பெற்றவர்களையும், அறிவு முதிர்ந்தவர்களையும் நகராட்சியில் நியமன உறுப்பினர்களாக ஆக்குவதால், நகராட்சி மன்றத்தில்

ஒற்றுமையும், மரியாதை, மதிப்பு ஆகியவையும் உயரக்கூடுமென மக்கள் உணர்ந்தனர். இதனால் நகராட்சி மன்றமும் செம்மையாகச் செயல்படவும், திறன் அதிகரிக்கவும் முடியும். நகராட்சி மன்றக் கூட்டங்களின் நடவடிக்கையில் அறிவுள்ளவர்களின் கலப்பால், பங்கேற்பால் பணிகள் திறமையாகச் செய்யமுடியும் என்பது உண்மை. மக்களுக்கு முதன் முதலாக வாக்குரிமை அளிக்கப்பட்ட பொழுது, ஆர்வமாகவும், அக்கறையாகவும் வாக்குரிமையைப் பயன்படுத்தினார்கள். ஆனால் அறியாமையினால் மக்கள் சில தவறான வழிகளையும் தேர்ந்தெடுக்கவும் வழியுண்டு. அத்தவறுகளைக் களைகின்ற முறையைப் பற்றிச் சிந்தித்தனர். மேலும் நிருவாகம் பற்றி அதிகமாகத் தெரியாத பெரும்பாலோர் இருக்கின்ற பொழுது, சிறுபான்மையான அறிவு மிகுந்தவர்களை மன்றத்தில் இடம்பெறச் செய்தால், மக்களாட்சியைப் புறக்கணித்ததாகக் கூற-முடியாது. நகராட்சி நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. நகராட்சி மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் எட்டில் ஒரு பங்கினர் தான் இவர்களாவர். எனவே இவர்கள் மேலாதிக்கம் ஏதும் செய்ய முடியாது. அதே நேரத்தில் நாம் மற்றொன்று பற்றியும் சிந்திக்க வேண்டும். நகராட்சி நியமன உறுப்பினர் என்ற பெயரில், தேர்தலில் தோல்வியடைந்த உறுப்பினர்கள் நகராட்சி மன்றத்தில் இடம் பெறக்கூடாது. தோல்வி அடைந்தவர்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள். அவர்களை மன்றத்தில் இடம்பெறச் செய்வதால், மக்களை அவமதித்ததற்கு ஒப்பாகும். எனவே தோல்வியடைந்தவர்கள் மன்றத்தில் இடம் பெற முடியாதபடி கட்டுப்பாடு செய்ய வேண்டும். பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அரசாங்க அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள், முன்னாள் நகராட்சித் தலைவர்கள், நகராட்சி உதவித்தலைவர்கள், முன்னாள் நகராட்சி உறுப்பினர்கள் ஆகியோர் நகராட்சி நியமன உறுப்பினர்களாகச் செய்யலாமென்ற முடிவிற்கு வந்தனர். ஆனால் இவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்தால் தான் இவர்கள் நியமிக்கத் தகுதி வாய்ந்தவர்களாவர்.

பெண்களுக்கு நகராட்சி மன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. பெண்கள் நகராட்சியில் ஆர்வத்தோடு செயல்பட ஊக்குவிப்புச் செய்தல் வேண்டும். எனவே, நகராட்சி நியமன உறுப்பினர்களில் ஒருவர் பெண்ணாக இருக்கவேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

நகராட்சி	உறுப்பினர் எண்ணிக்கை	ஒரு இடத்திற்குரிய வாக்குகள்
20,000 மக்கள் தொகைக்கு மிகாமல்	16	625
20,000 விருந்து 30,000க்கு மிகாமல்	20	625
30,000 ,, 40,000 ,,	24	730
40,000 ,, 50,000 ,,	28	805
50,000 ,, 1,00,000 ,, ,,	32-36	1050
1,00,000 ,, 2,00,000 ,, ,,	36-40	1562
2,00,000 க்கு மேல்	40-48	

இவ்வாறு நகராட்சி மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. இதில் 600 முதல் 800 வாக்குகள் கொண்ட சிறிய நகராட்சிகளுச்கு ஒரு இடம் வீதமும், 1000 முதல் 1500 வரையுள்ள பெரிய நகராட்சிகளுக்கு இரு இடம் வீதமும் நிருணயம் செய்யப்பட்டன. இந்த எண்ணிக்கை நிருணயம் செய்கின்ற பொழுது, மக்கள் தொகையில் 50 விழுக்காடு மக்கள்தான் வாக்குகளைப்பதிவு செய்வர் என்பதை மனதில் கொண்டு நிருணயம் செய்யவேண்டும்.

வரிகளின் மூலமாக ரூ. 20 இலட்சம் திரட்டும் 3,50,000 பேர்கள் கொண்ட நகராட்சிகளை, மாநகராட்சியாக மாற்றலாம்.

இதேபோல் 20 000 பேர்கள் கொண்ட ஊராட்சிகள் தாங்களாகவே நகராட்சியாக மாற்ற வேண்டுமெனவும் நகராட்சிகளின் நிதிக்குழு பரிந்துரைத்தது.

நகராட்சி மன்றங்களின் அமைப்பு குறித்து தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு 7 (1) கூறுவதைக் காண்போம் :-

நகராட்சிகளின் மக்கள் தொகை	நகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
20,000 பேர்களுக்குக் குறைவில்லாமல் இருந்தால்	16
20,000 விருந்து 30,000 க்கு மிகாமல் இருந்தால்	20
30,000 விருந்து 40,000 க்கு மிகாமல் இருந்தால்	24
40,000 விருந்து 50,000 க்கு மிகாமல் இருந்தால்	28
50,000 விருந்து 1,00,000 க்கு மிகாமல் இருந்தால்	32
1,00,000 க்கு மிகாமல் இருந்தால்	36

பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் குறிப்பிட்ட இட ஒதுக்கீடு செய்ய மாநில அரசாங்கம் அதிகாரம் கொண்டுள்ளது. அந்தக் கொள்கைகள் சில:

1. நகராட்சி மக்கள் தொகையில், முந்தைய கணக்கெடுப்பின்படி பாதிக்குமேல் ஓர் இனத்தவர் இல்லையாயின், ஓர் இடமும் அந்த இனத்திற்கு ஒதுக்கீடு செய்யக்கூடாது.

2. நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பெண்களுக்கு நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமல் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

3. நகராட்சிகளை வார்டுகளாகப் பிரித்து, அரசாங்கம் அவற்றைப் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்வதென அறிவிக்க அதிகாரம் கொண்டுள்ளது.

4. இரட்டை உறுப்பினர் தேர்தல் வார்டுகள் நீக்கப்பட்டு, வரக்கூடிய தேர்தலில் ஓர் உறுப்பினர் மட்டுமே ஒரு வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கும் வண்ணம் செய்யப்படுகிறது.

கீழ்க்கண்ட பட்டியலில், நகராட்சிகளில் எத்தனை சாதாரண தேர்தல்கள் நடைபெற்றுள்ளன, எத்தனை வார்டுகள், மன்றங்களின் உறுப்பினர் மொத்த எண்ணிக்கை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் எவ்வளவு என்பது பற்றியும் காண்போம்.

வருடம்	நகராட்சிகளின் எண்ணிக்கை	வார்டுகளின் எண்ணிக்கை	மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கை	ஒதுக்கீடு செய்யப் பட்ட இடங்கள் பெண்கள்	ஒதுக்கீடு செய்யப் பட்ட இடங்கள் தாழ்த்தப் பட்டோர்
1952	48		2354		
1957	59	1512	1512		
1964	64	1418	1608	60	130
1969	88	1760	1978	58	160

'நகராட்சியின் தலைவர், மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பதவியின் அடிப்படையில் இவர் மன்றம் அமைக்கின்ற அனைத்துக் குழுக்களிலும் உறுப்பினர் ஆவார், உதவித் தலைவர் தேர்தலுக்கு இவர்தான் வசதி செய்து தருகிறார். மன்றக் கூட்டங்களைக் கூட்டுவதும் மற்றும்பிற சட்டத்தில் கூறப்பட்ட அனைத்துச் செயல்களையும் செய்யக் கூடியவராவார்.

ஆட்சித்துறை அதிகாரம் கொண்டவராத் தலைவர் 1955-ஆம் ஆண்டு வரை திகழ்ந்து வந்துள்ளார். பின்னர் 1955-ஆம் ஆண்டு செய்யப்பட்ட தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்திருத்தத்தினால், இந்த அதிகாரம் பறிக்கப்பட்டது. அரசாங்கம் இந்த அதிகாரத்தை ஆணையாளரிடம் ஒப்படைத்தது. இவர் மாநில அரசாங்கத்தால், மாநில அரசாங்கப்பணியிலிருந்து நியமனம் செய்யப்படக்கூடியவர். நகராட்சிகளிடமிருந்து ஆணையாளரின் ஊதியம் பிற செலவுகளை மாநில அரசாங்கம் பெற்றுக் கொள்ளும்.

1.	திண்டுக்கல்	தேர்வு நிலை
2.	திருப்பத்தூர்	முதல் நிலை
3.	கோபி செட்டிபாளையம்	,,
4.	ஸ்ரீ ரங்கம்	,,
5.	சத்தியமங்கலம்	இரண்டாம் நிலை
6.	தென்காசி	இரண்டாம் நிலை

1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து மேட்டுப்பாளையம் நகராட்சியாக முதல்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது.

1977-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்திலுள்ள சின்னமனூர் நகர ஊராட்சியும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கி நகர ஊராட்சியும் புதிதாக மூன்றாம் நிலை நகராட்சிகளாக அமைக்கப்பட்டன. மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் நகர ஊராட்சியும், 1978 ஜனவரி மாதம் முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு நகராட்சிகள் உயர்த்தப்பட்டன,

தற்போது 8 நகரியங்கள் உட்பட, 106 நகராட்சிகள் உள்ளன. அவை :

சிறப்புத்தர நகராட்சிகள்		7
தேர்வுநிலை		11
முதல் நிலை	"	29
இரண்டாம் நிலை	"	32
மூன்றாம் நிலை	"	19
		98

8

மாவட்ட வளர்ச்சி மன்றம்

நாட்டின் வளர்ச்சிப்பணிகள் அனைத்தையும் தேசிய அளவில் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக நிறைவேற்ற வேண்டுமென அரசாங்கம் முடிவு செய்தது. ஆகவே அரசாங்கத் துறைகள், செயலாண்மைகள், உள்ளாட்சிகள் ஆகியவை தங்களது வரையறை எல்லைக்குள் அமையப்பட்ட வளர்ச்சிப்பணிகளை நிறைவேற்றவேண்டிய சூழ்நிலைக்குள்ளாயின. இவை தனித்தனியாகச் செயல்படுமேயாயின், மொத்த வளர்ச்சியைப் பற்றி முடிவு செய்வது கடினம். வளர்ச்சிப்பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைப்புச் செய்யவேண்டியதும் அவசியமானதாகும். மேலும் வளர்ச்சிப்பணிகளைச் செய்வதில் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் வகையில் அமைப்புக்கள் ஏற்படுத்த வேண்டும். மக்களது ஒத்துழைப்பு, உதவி ஆகியவற்றை வைத்துத்தான் வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்கு வேண்டிய ஆலோசனை, செய்திகள் போன்றவற்றைப் பெற முடியும். மாவட்ட திட்ட வாரியம், வட்டார ஆலோசனைக் குழுக்கள், பிற ஆலோசனை அமைப்புக்கள் அரசாங்கம் வரையறுத்த நோக்கங்களை அடைவதற்காகவே செயல்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த அமைப்புக்கள் செயல்படுகின்றபோது ஒரே வேலையை இருமுறை பார்ப்பது, செய்த வேலையையே மாறி, மாறிச் செய்து, நேரத்தையும், பணத்தையும் வீணாக்குவது தடுக்கப்படவேண்டும். எனவே அரசாங்கம் வேலை சீராக நடைபெறவும், இரட்டிப்பைத் தடுக்கவும், ஒருங்கிணைப்பு ஏற்படவும் திட்டமிட்டுச் செயல்பட முயற்சிக்கவேண்டும். ஒவ்வொரு நகராட்சிக்கும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்ட அளவில்

அமைந்துள்ள அனைத்திற்கும் தனியான பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.

தற்போதுள்ள மாவட்டங்கள் அளவில் பெரிதாகவும், பரந்த அளவு கொண்டதாகவும் இருக்கின்றன. 30 இலட்சம் மக்களுக்கு மேலான மக்கள் தொகையைக் கொண்டதாகக் கூட சில மாவட்டங்கள் திகழ்கின்றன. சென்னை மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டமும் மற்றைய மாநிலங்களிலுள்ள மாவட்டங்களைக் காட்டிலும், நிருவாகச் செலவுகளைப் பொறுத்தமட்டில் இரண்டு மடங்குகள் பெரிதாக உள்ளன. வட்டாரம்தான் பொதுவாக, வசதியான அமைப்பென முடிவிற்கு வரப்பட்டதால், உயர்மட்ட அமைப்பாக மாவட்டம் திகழ்ந்து, அதன் எல்லை வரையறையைத் தீர்மானிக்க வேண்டும். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்தையும், நிருவாக வசதியை முன்னிட்டு அனைத்துப் பணிகளுக்கும் பொருத்தமாகவும், வசதியாகவும் இரண்டாகப் பிரிக்கவேண்டுமெனக் கோரிக்கை எழுப்பப்பட்டது. இந்த அடிப்படையில் மாவட்டங்களைப் பிரிப்பதற்குச் சிறிது காலங்கள் எடுக்குமென்றாலும், பின்னர் அதனைச் செயல்படுத்துவதற்கும் மிகுதியான காலங்கள்கூடத் தேவைப்படலாம். ஆனால் அதைப்பற்றியெல்லாம் ஆலோசித்துக் கொண்டிருக்கின்ற நேரமல்ல இது. ஏனெனில் வளர்ச்சிப்பணிகள் அதிகரித்துக் கொண்டே வருகின்ற காரணத்தால், சிறிய அளவான மாவட்டங்கள் அத்தியாவசியத் தேவையாக இருக்கின்றன இதனால் நிருவாகத்திற்காக சிறிய அளவு மாவட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அந்த சிறிய அளவு மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டால், முன்னர் கூறிய தனியான பிரதிநிதித்துவம் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒவ்வொரு நகராட்சிக்கும் வழங்கப்படவேண்டுமெனவும் முடிவு செய்தது அரசாங்கம். எனவே மாவட்டங்களைப் பொது நன்மையைக் கருதி, இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்பது முடிவாகியதோடு, அம்முடிவு செயல்படுத்தும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட வளர்ச்சி மன்றம் கீழ்க்கண்ட வகையாக இருக்க வேண்டுமென வெள்ளைத்தாள் முன்மொழிந்துள்ளது. அவையாவன,

1, மாவட்ட ஆட்சித்தலைவர்: இவர் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராகவும் இருக்கக்கூடியவராவார்.

2. வளர்ச்சி மாவட்டத்திற்குள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மன்றத்தின் உறுப்பினர்களாவர்.

3 நகராட்சித் தலைவர்கள் இம்மன்ற உறுப்பினராவர்.

4 மாவட்ட வாரிய உறுப்பினர், அத்தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டு இருந்தால் மட்டுமே உறுப்பினராவர்.

5. திட்டமிடல், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகியன சம்பந்தப்பட்ட பணிகளில் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் அனைவரும் உறுப்பினர்களாவர்.

மாவட்ட வளர்ச்சி மன்றம் ஏராளமான வளர்ச்சிப் பணிகளைச் செய்யும் வகையில் மிகுதியான கடமைகளைக் கொண்டதாக அமைந்து உள்ளது. எனவே மாவட்ட வளர்ச்சி மன்றமானது ஒவ்வொரு பணியைப் பற்றியும் தீர்க்கமாக விவாதித்து, முடிவிற்கு வரக் கூடுமேயானால் மிகுதியான நேரம் வீணாகும். நேரம் மிகுதியகா எடுத்துக் கொண்டாலும் பணிகள் அனைத்திலும் போதுமான கவனம் செலுத்தப்படுவது இயலாத காரியம். மேலும் அவசரமாக முடிவுகள் எடுப்பதால், பணிகள் சீராகச் செயல்பட முடியாது. எனவே மன்றமானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் கூட்ட வேண்டுமென்றும், கூட்டமும் ஒரு நாளுக்கு மேல் நடைபெறாமல் இருக்க வேண்டுமெனவும் கருத்து தெரிவிக்கப் பட்டது. அத்துடன் வேலைகளை நிரந்தரமாகச் செய்வதற்கு நிலைக்குழுக்கள் ஏற்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது. இக்குழுக்களில் அந்தந்தச் செயலுக்கேற்ப துறைகளின் அதிகாரிகளும் இடம் பெறக்கூடிய வகையில் அமைந்தன. இக்குழுக்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து, அறிவுரை கூறுகின்ற வகையில் அமைந்தன. இதனால் மன்றத்தின் நேரமானது வீணாகாமல் சீராகப் பயன்படுத்தப்பட்டது. மேலும் மன்றத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு, அவர்களையும் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமெனவும் எண்ணப்பட்டது. நிலைக்குழுக்கள் கீழ்க்கண்ட ஐந்து செயல்களுக்காக அமைக்கலாமென உத்தேசிக்கப் பட்டது:

1) உணவு மற்றும் விவசாயம்

2) தொழிற்சாலைகள் மற்றும் பணியாட்கள்

3) பொதுப்பணிகள்

4) கல்வி

5) சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு

ஒவ்வொரு அலுவலரல்லாத பொதுமக்கள் பிரதிநிதிக்கும் ஒரு நிலைக்குழு ஒதுக்கப்பட்டது. ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களை ஒருவரிடம் ஒப்படைக்கக் கூடாது. அலுவலக உறுப்பினர்கள் அரசாங்க ஆணையால் நியமிக்கப்பட்டனர். மற்ற அலுவலரல்லாத பொதுமக்கள் பிரதிநிதிகளையும் அரசாங்கம் நியமனம் செய்ய உரிமை பெற்றிருந்தது. ஆனால் இவர்களின் எண்ணிக்கையானது மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் அனைத்து நகராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அமையப் பெறுவதால், பிரச்சனைகள் சுமுகமாக விவாதிக்கப்பட்டு, முடிவுகள் எடுக்கலாம். ஒற்றுமையுடன் பணிகள் செய்யலாம். அதே நேரத்தில் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் இருப்பதால், மாநில அளவில், தேசிய அளவில் பிரச்சனைகள் குறித்து ஆராய்வதற்கு வசதியான இடம் ஏற்பட்டது. இவ்வாறாக மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

9

மாநகராட்சி

சென்னை மாநகர் தோன்றி 300 வருடங்களுக்கு மேலானதால் பல்வேறு சூழ்நிலைகளைச் சந்தித்து உள்ளது சென்னை மாநகராட்சி. இது செயல்பட்ட விதத்தை வைத்து நான்குவகைகளாக பிரிக்கப்படுகின்றது. முதன்முதலாக நிருவாகம் மேயரின் முறை மன்றமாகும் (Mayors Court). இது 1688-ஆம் ஆண்டு தொடங்கி 1801-ஆம் ஆண்டு வரையிலுமாகச் செயல்பட்டு வந்துள்ளது. இரண்டாவது அமைதி நேர்மையாளர்களின் (Justices of peace) ஆட்சிக் காலமாகும். இது 1792-ஆம் ஆண்டிலிருந்து 1856-ஆம் ஆண்டு முடியும் வரையில் இயங்கியுள்ளது மூன்றாவது, வளர்ச்சிநிலை 1856-ஆம் ஆண்டிலிருந்து 1919 ஆம் ஆண்டு வரையிலுமாக வரையறுக்கப் பட்டுள்ளது. கடைசியாக தற்போதுள்ள முறையாகும். இது 1919-ஆம் ஆண்டிலிருந்து இன்றும் நிலவிக் கொண்டுவரும் முறையாகும். இந்த நான்கு காலகட்டத்திலும் மாநகராட்சி மன்றத்தின் செயல்கள் குறைவானதாக, அரசாங்கம் வரையறுக்கின்ற செயல்களை மட்டுமே செய்யவல்லதாக இருந்து வந்துள்ளது. அரசாங்கம் மாநகராட்சி மன்றத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தைக் கொண்டு இருந்தது. செயல்கள் ஒழுங்காகச் செய்யப்படவில்லையெனில், அரசாங்கமே அச்செயல்களைச் செய்வதற்கும் பொறுப்புப் பெற்று இருந்தது. இதே மாதிரியாக, மேயர், அனைத்து வகைகளிலும் மாநகர் மன்றத்தைத் தலைமைதாங்கி நடத்திச் செல்லும் அதிகாரத்தைக் கொண்டு இருந்தார்.

முதன்முதலாக மேயரின் முறைமன்றமானது 1687-ஆம் ஆண்டுச் சாசனத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. இம்மன்றத்தில் மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் (aldermen), மாநகரவைக் குழு (Burgesses)

உறுப்பினர்களையும் கட்டாயமாகப் பணிபுரியச் சாசனம் வலியுறுத்தியது. அவர்களை மிரட்டியும், பயமுறுத்தியும் பணிபுரிய வைத்தது அரசாங்கம். இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வியாபாரத்திற்காகவும், விற்பனைக்காகவும் வந்ததால் எல்லா வெளிநாட்டவர்களையும், மதப்பிரிவினர்களையும் மாநகராட்சியில் ஈடுபடுத்த சாசனம் வரையறுத்துள்ளது. மாநகராட்சியின் வரையறை எல்லைக்குள் வசிக்கின்ற மக்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, மாநகராட்சியும், மாநகரவைக் குழு உறுப்பினர்களும் கலப்புத்தன்மை கொண்டு இருக்க வேண்டுமெனக் கூறியது. இவ்வாறு மேயர் முறை மன்றத்திற்கு நியமிக்கப்படுகின்றவர்களை, மக்கள் ஏற்க மறுத்தால், அவர்கள் மீது தண்டனையாக 5 பகோடாக்கள் அதாவது ரூ. 15 கட்டவேண்டுமெனவும் கூறியுள்ளது. இரண்டாவதாக, ஆங்கிலேயர்கள் தங்களது பிரதிநிதிகளை அதிகமாக மாநகராட்சியில் இருக்கவேண்டுமென்பதில் ஆர்வமும், அக்கறையும் காட்டினார்கள். இதன் பயனாக, ஆங்கிலேயர்களைத் தவிர்த்து, 3 மாநகராட்சி நியமான உறுப்பினர்கள் முதன்முதல் மாநகராட்சியில் இடம் பெற்றனர். ஆனால் திருத்தியமைக்கப்பட்ட மாநகராட்யில் 1726ஆம் ஆண்டுச் சாசனமானது, 7 மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் ஆங்கிலேயர்களாக இருக்கவேண்டுமெனக் கூறியது. மேயருடன் சேர்த்து ஏழுபேர்கள் என்பதால், மேயர் கட்டாயமாக ஆங்கிலேயராகத்தான் இருக்க வேண்டுமென்பது முடிவு. இவ்வாறு திறந்தவெளி மாநகராட்சியாக அமைக்கப்பட்ட மாநகராட்சி சிறிது காலத்திற்குள்ளேயே மூடிய மாநகராட்சியாக, ஆங்கிலேயர்கள் தான் மேயராக வரக்கூடியவரானார்கள்.

இரண்டாவதாக மாநகராட்சியின் முழுப் பணிகளையும் செய்யும் பொறுப்பு அமைதி நேர்மையாளர்களிடம் விட்டதால், அவர்கள் அனைவரையும் அரசாங்கமே நியமனம் செய்தது. அதற்குப் பின்னர் மாநகராட்சியில் அலுவலர் அல்லாதப் பொதுமக்கள் பிரதிநிதிகள் (non-official) இடம் பெற்றனர். இவர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது. இதற்கிடையே வாக்குரிமை பெற்றவர்களின் எண்ணிக்கையும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் போல் உயர்ந்து கொண்டே வந்தது. வாக்குரிமை அளிப்பதற்கு சொத்து, கல்வி

ஆகிய தகுதிகள் வரையறுக்கப்பட்ட காரணத்தினால், பல்வேறு பிரிவு மக்கள் மாநகராட்சியில் பங்கு பெற வழியில்லாமல் போய்விட்டது. இத்தகுதிகள் தளர்த்தப்படுவதால், மாநகராட்சியில் மக்களின் பங்கேற்பானது மிகுதியாயிற்று.

மேயரின் முறைமன்றம் மாதத்திற்கு இருமுறை கூடிப் பணியாற்றியது. சென்னை முதல் மேயர், திரு. நத்தானியல் ஹிக்கின்சன் தம்முடைய வேலைப்பளுவின் காரணமாக, மேயர் முறை மன்றத்தைத் தொடர்ந்து ஒழுங்காகக் கூட்ட முடியவில்லை என்பதற்காகத் தம்முடைய மேயர் பதவியை இராஜினாமாச் செய்தார். எனவே, மேயர் முறைமன்றமானது மாதத்திற்கு இருமுறை கூடிக்கொண்டே வந்துள்ளது. இது மேயர் முறைமன்றம் நீக்கப்பட்ட 1798-ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்தது. பின்னர் அமைதி நேர்மையாளர்களின் ஆட்சிக் காலத்தில், கூட்டம் கூட வேண்டிய ஒழுங்கு முறைகள், குறைந்த பட்சஎண்ணிக்கை இருந்தால் தான் கூட்டம் நடத்துவது போன்ற குறைவெண் ஒழுங்குமுறைகள் வரையறுக்கப்படவில்லை. கூட்டத்திற்குத் தலைமையாளர் ஒருவர் உண்டு. வருகை தரும் உறுப்பினர்கள் மூன்றாகவோ, நான்காகவோ, ஐந்தாகவோ மற்றும் எத்தனை உறுப்பினர்களாயினும் பரவாயில்லை. சில சமயங்களில் ஒரு உறுப்பினர் மட்டுமே கலந்து கடமையாற்றியுள்ளார் என்பதை அறியும்போது, ஒருவரே தலைவராகவும், மன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார் என்பதை அறியலாம். பின்னர் 1858-ஆம் ஆண்டுச்சட்டம் மூன்று ஆணையாளர்கள் கொண்ட அமைப்பை ஏற்படுத்தியது. மூவரில் ஒருவர் தலைவராகச் செயல்பட்டார். மூவரையும் அரசாங்கம் நியமனம் செய்தது. ஊதியமும் இவர்களுக்கு நிருணயிக்கப்பட்டது. இந்த மூன்று ஆணையாளர்களுக்கு உதவியாக மற்றும் மூன்று கௌரவ ஆணையாளர்கள் 1865-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டார்கள். இந்த கௌரவஆணையாளர்கள் மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் மூன்று வருடங்கள் பதவியில் நீடிக்கத் தகுதி பெற்றவர்கள். இவர்களைத் தவறான நடத்தை போன்றவைகளை வைத்து, பதவி நீக்கம் செய்யலாம். இரண்டு வருடங்கள் சென்ற பின்னர், 6 ஆணையாளர்களுக்குப் பதிலாக அதிகமான அளவில் 32 கௌரவ ஆணையாளர்கள் நியமிக்கப் பட்டார்கள். இவர்

களனைவரையும் அரசாங்கம் நியமனம் செய்தது. சிறிது காலத்திற்குப் பின்னர், மக்களின் பிரதிநிதித்துவம் மாநகராட்சியில் சேர்க்கப் பட்டதையொட்டி, பாதி ஆணையாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சென்னையில் தேர்தல்முறையானது ரிப்பன்பிரபு செய்த சீர்திருத்தங்களுக்கு முன்னரே உள்ளதென்பதைத் தெரிந்தால் இதன் முக்கியத்துவத்தை உணரமுடியும். ரிப்பன்பிரபு செய்த சீர்திருத்தத்தின் விளைவாகத் தேர்ந்தெடுக்கும் ஆணையாளர்களின் விகிதாச்சாரமானது 3/4 ஆக உயர்ந்தது என்பதுதான். ஆணையாளர்கள் குறிப்பிட்ட சொத்தும், கல்வித் தகுதியும் பெற்றிருக்க வேண்டுமென உயர்ந்த அளவுத் தகுதிகள் நிருணயிக்கப்பட்டு இருந்தன. ஒரு வேட்பாளர் தேர்வு பெறுவதற்குக் கட்டாயமாக 20 வாக்குகள் பெறவேண்டுமெனவும் வரையறுத்திருந்தது. வேட்பாளர்கள் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும் என வரையறுக்கப்பட்டது. அவை:

1) ஆணாக இருக்க வேண்டும்.

2) 25 வயது நிறைந்தவராக இருக்க வேண்டும்.

3) ஆங்கிலமொழி தெரிந்து இருக்க வேண்டும்.

4) சென்னை நகரிலோ அல்லது அதன் இரண்டு மைல் சுற்றளவிற்குள்ளாவது வசிக்கின்றவராக இருக்க வேண்டும்.

5) வருடத்திற்கு ரூ. 10 வாடகை செலுத்துபவராக இருக்க வேண்டும்.

இதே மாதிரியாக வாக்காளர்களின் தகுதியும் உயர்ந்த அளவிலேயே வரையறுக்கப்பட்டு இருந்தது அவை:

1) ஆணாக இருக்க வேண்டும்.

2) 21 வயது நிறைந்தவராக இருக்க வேண்டும்.

3) 25 ரூபாய் வரிகள் கட்டியிருக்க வேண்டும்.

4) பட்டதாரியாக இருக்க வேண்டும்.

இது தவிர்த்து, பதிவு செய்யப்பட்டுள்ள கம்பெனிகள் ரூ. 25 வரிகள் கட்டியிருக்குமாயின், அவைகளுக்கும் வாக்குக்கள் கொடுக்கப்பட்டன.

இவ்வாறாக வேட்பாளராயினும் சரி, வாக்காளராக இருந்தாலும் சரி, குறைந்த பட்ச கல்வித்தகுதிகளிலும், போதுமான அளவு வரிகட்டியவராக இருந்தால்தான், பொறுப்பாகவும், சிறப்பாகவும் உள்ளாட்சியில் செயல்பட எண்ணுவர், செயல்பட முடியும் என்பது அன்றைய நாள் நம்பிக்கை. தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஆணையாளர்களின் கடமைகள் வருமாறு:

1) வரவு செலவுத்திட்டத்தையும், துணை வரவுசெலவுத்திட்டத்தையும் நிறைவேற்றுதல்.

2) நிலைக்குழு வழங்கும் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து, மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவுத் தொகைகளைக் கூட்டுவதும், குறைப்பதுவும் இவர்கள் கடமையாகும்.

3) ஆண்டு நிருவாக அறிக்கையைத் தீர்மானித்து, ஏற்றுக்கொள்வதும், தள்ளுபடி செய்வதும்.

4) மாதம் 400 ரூபாய்க்கு மிகாமல் சம்பளம் பெறக்கூடிய புதிய நகராட்சிப் பதவி ஏற்படுத்தும் பிரேரணைகளைப் பரிசீலித்து, ஏற்பதும் தள்ளுபடி செய்வதும் இவர்கள் கடமை.

5) மாநகராட்சி வேலைகளைச் செய்வதற்குக் கடன்கள் அதிகமாகப் பெறுவதற்கு அனுமதி அளிப்பது.

6) ஆளுநர் குழுவிலிருந்து வரக்கூடிய ஆணைகள், குறிப்புக்கள் ஆகியவற்றின் மீது கருத்துக்கள் கூறுவது.

7) குறிப்பிட்ட காலத்திற்கொரு முறையாக வரவுகளையும் செலவுகளையும் கணித்து, வேலை எவ்வளவு நடைபெற்று உள்ளது என்பதை அறிந்து தீர்மானங்கள் நிறைவேற்றுவது. தீர்மானம் தேவையென இவர்கள் கருதினால் நிறைவேற்றலாம்.

8) மாநகராட்சி வேலைகள் செயல் படுத்தும் பொழுது செய்யாமல் விடப்பட்ட செயல்கள் குறித்தும், பொதுச் சொத்துக்கள் வீணாவது குறித்தும், செயலாக்க வழிகளில் சிறந்த வழிகள் குறித்தும், ஆணையாளர்கள் விரும்பினால், தலைவரின் பார் வைக்குக் கொண்டு வரலாம்.

9) மாநகராட்சி நிதிகள் சம்பந்தப்பட்ட பொதுக் கேள்விகளைக் கேட்கலாம். அல்லது மாநகராட்சி செயல்பட விரும்பும் புதிய நோக்கங்கள் குறித்துக் கேள்விகள் எழுப்பலாம்.

10) சட்டத்திற்கு ஏற்றவகையில், மாநகராட்சி நிலங்களை ஒதுக் கீடு செய்வதும், பொது நோக்கங்களுக்காக நிலங்கள் ஆர் ஜிதம் செய்வதும்,

11) துணைச்சட்டங்கள் இயற்றவும், மாற்றவும், திருத்தவும் அதி காரங்கள் கொண்டவர்கள். ஆனால் எல்லாத் துணைச் சட்டங் களும் ஆளுநர் குழுவின் அனுமதியைப் பெறவேண்டும்.

மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 4,00,000த்தில் 3627 பேர்கள் மட்டுமே வாக்குரிமைகள் பெற்றவர்களாக இருந்த தால் வாக்குரிமைத் தகுதிகளைத் தளர்த்தலாமா என 1887-ஆம் ஆண்டு அரசாங்கம் பரிசீலனை செய்தது. இதற்கு அடுத்த ஆண்டில் 3811 வாக்களார்கள் தேர்தலில் கலந்து கொண்டனர். இருப்பினும் சட்டத்தின் ஒன்பதாவது பிரிவைத் திருத்த வேண்டுமென எண்ணப் பட்டது. மாவட்ட நகராட்சிகளோடு சென்னை மாநகராட்சியை ஒப்பிட்டால், தேர்தல் முறைமை சென்னையில் வெற்றி பெற்ற தென்று சொல்ல முடியாது. மாவட்ட நகராட்சிகளில் மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் வாக்குரிமைகளைப் பயன் படுத்தினார்கள். இது சென்னையைக் காட்டிலும் மிகவும் அதிக மானதாகும். 25.4 விழுக்காடு மக்கள் மட்டுமே 1890-ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்களித்தனர். இது மொத்த மக்கள் தொகையில் 1.04 விழுக்காடு ஆகும். இவ்வாறு மிகவும் மோசமான வகையில் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் 1892-ஆம் ஆண்டுச் சட்டம் சில மாற்றங்களைச் செய்தது. மாநகர்த் தலைவர் பதவியின் தன்மையில் ஆணை

யாளருக்குரிய அதிகாரங்கள் பெற்றவரானார். ஆணையாளர்கள் மாநகராட்சியின் பதிவுகளைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் தலைவரிடம் அனுமதிபெற்ற பின்னர்தான் பதிவுகளைப் பார்க்க வேண்டும். மாநகராட்சியின் வேலை நேரங்களில் மட்டுமே பார்க்கவேண்டும். ஆனால் சில சூழ்நிலைகளில், தலைவர் பதிவுகளைப் பார்க்க அனுமதிக்காமலும் இருக்க அதிகாரம் பெற்றிருந்தார். தலைவர் பொது நன்மையைக் கருதி, பதிவுகளைப் பார்க்க மறுக்கலாம்.

வங்காள மாநகராட்சிச் சட்டம் 1899ன்படி, சென்னை மாநகராட்சி 1904-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. வணிகக் கழகம், வியாபாரச் சங்கம், துறைமுகப் பொறுப்புக்கழகம் (Port Trust) இரயில்வே ஆகிய பெரிய வணிக அமைப்புக்கள் சென்னை மாநகர்மன்றத்தில் போதுமான பிரதிநிதித்துவம் பெறவில்லை என்பதற்காக இச்சட்டம் கொண்டுவரப்பட்டது சென்னை நகரில் மக்கள் தொகைப் பெருக்கம் 12.6 விழுக்காட்டில் அதாவது 56,823 பேர்கள் அதிகமானதால் 4.52,518 லிருந்து 5,09,346 ஆக மாறியது. இதற்கேற்ற வகையில் 32 ஆக இருந்த ஆணையாளர்களின் எண்ணிக்கையும் 36 ஆக உயர்ந்தது ஆனால் தேர்ந்தெடுக்கப்படும் ஆணையாளர்களின் எண்ணிக்கை 24லிருந்து 20 ஆகக் குறைந்தது. இது கர்ஜன்பிரபு இந்தியர்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாது என்ற கொள்கையினால் ஏற்பட்ட விளைவாகும். எனவே சென்னை வணிகக்கழகம், சென்னை வியாபாரச் சங்கம் மற்றும் பிற பொது நிறுவனங்களுடன், உள்ளாட்சி அரசாங்கம் 8 ஆணையாளர்களை நியமிக்க அதிகாரம் பெற்றது. இருப்பினும் பொதுமக்கள் வாக்குரிமைத்தகுதிகள் தளர்த்தப்பட்டன. ஆண்டிற்கு ரூ. 25 வாடகை செலுத்த வேண்டுமென்ற தகுதி ரூ.20 எனக் குறைக்கப் பட்டது. இதனால் ஏராளமான மக்கள் வாக்காளர்களானார்கள் 1906 ஆம் ஆண்டில் மட்டுமே 9175 வாக்காளர்கள் அதிகமாகி உள்ளனர். அதிகாரப் பரவல் மீதாக அமைக்கப்பட்ட அரசுரிமை ஆணையம் தேர்ந்தெடுக்கப்படும் ஆணையாளர்கள் அதிகமாக்க வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளது. சென்னை

மகாஜன சபையும், அரசாங்கத்திற்கு சமர்ப்பித்துள்ள நினைவூட்டுக் குறிப்பில் (Memorandum) வாக்குரிமைகள் விரிவுபடுத்த வேண்டுமென 1916-ஆம் ஆண்டு கேட்டுக் கொண்டது. எனவே தான், தேர்வுத் திருத்தக்குழு 1918-ஆம் ஆண்டில், மாநகராட்சி மன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 37 லிருந்து 50ஆக அதிகரிக்க வேண்டுமென முன்மொழிந்தது. மாநகராட்சி மன்றம் 50 உறுப்பினர்களைக் கொண்டதாகக் கீழ்க்கண்டவகையில் இருக்க வேண்டும் என்றும் கூறியது. அவை,

1. ஒவ்வொரு வார்டிலுமிருந்து ஒருவராக 30 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
2. சென்னை வணிகக் கழகம் மூன்று உறுப்பினர்களையும், சென்னை வர்த்தக சங்கம் மூன்று உறுப்பினர்களையும், இரண்டு உறுப்பினர்கள் தென்னிந்திய வணிகக் கழகத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
3. மூன்று உறுப்பினர்கள் அரசாங்க வழிகாட்டுதலின்படி தேர்வோ அல்லது நியமனமோ செய்யப்படலாம். சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் ஆங்கிலோ-இந்தியச் சங்கத்திலிருந்து உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென அரசாங்கம் வழிகாட்டி உள்ளது.
4. முஸ்லீம்கள் மற்றும் பிற இனத்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதற்காக, 9 பேர்களைச் சிறப்பாக அரசாங்கம் நியமனம் செய்தது.

சொத்துரிமைத் தகுதியானது ஏராளமான மக்களுக்கு வாக்குரிமை வழங்கத் தடைக்கல்லாக இருந்து வந்தது. சொத்துரிமைத் தகுதியைக் குறைக்கும் வகையில் வாடகை ரூ 20 ஆக இருந்ததை ரூ. 5ஆக 1919-ஆம் ஆண்டுச் சட்டம் வரையறுத்தது. இதனால் மிகுதியானவர்கள் வாக்குரிமை பெற்றனர். 1920-ஆம் ஆண்டில் புதிதாகத் தயார் செய்த வாக்காளர் பட்டியலில் 1 விழுக்காடான வாக்காளர்கள் 5.5 விழுக்காடாக உயர்ந்தனர். ஆங்கிலேய முறைப்படி ஆண்டுக்கொருமுறை தேர்தல் நடத்த ஆரம்பித்தனர். மாநகராட்சியில் பதவிக்காலம் உறுப்பினர்களுக்கு மூன்று ஆண்டுகள் ஆகும். இதில் $\frac{1}{3}$ பகுதியினர் ஆண்டுதோறும் பதவியிலிருந்து விலக விலகப்பட்ட இடங்கள் தேர்தலின் மூலமாக நிரப்பப்பட்டன.

பெண்களும் தேர்தலில் போட்டியிடலாம் என 1923-ஆம் ஆண்டில் சட்டம் திருத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1924-ஆம் ஆண்டு மாநகராட்சி உறுப்பினர் பதவிக்கு முதல் பெண்மணி திருமதி. ஹானன் அஞ்சலோ போட்டியிட்டாராயினும், வெற்றிபெற முடியவில்லை. வாக்குரிமைத் தகுதியில் 10ரூபாய் தொழில்வரி கட்டி, வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் முறை தொடர்ந்து வந்தது. ஆனால் இதற்குப் பதிலாக 10 ரூபாய் வாடகை கட்டியிருந்தாலும் வாக்குரிமை பெறத் தகுதியுள்ளவராக 1925-ஆம் ஆண்டில் சட்டம் கொண்டுவரப்பட்டது. மாநில சட்டசபைகளைப் போல், தேர்தலில் இனச்சார்புப் பிரதிநிதித்துவம் மாநகராட்சித் தேர்தலுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென அக்டோபர் மாதம் 8-ஆம் தேதி, 1927-ஆம் வருடம் மாநகர் மன்றம் பரிந்துரை செய்தது. முஸ்லீம்களுக்கும், இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் தனித்தனித் தொகுதிகள் கொடுக்க வேண்டுமென மாநகர் மன்றம் கேட்டுக் கொண்டது. வாக்குரிமைத் தகுதிகளை தளர்த்தி வாக்குரிமைகளை அதிகமாக மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதைச் சென்னை அரசாங்கம் சட்டத்துவ ஆணையத்திடம் (1930) நினைவூட்டு மூலமாகக் கூறியுள்ளது. 1936-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி திருத்தச் சட்டம் ஏராளமான மாற்றங்களைச்செய்தது வார்டுகளையும்,வாக்குரிமைத் தகுதிகளையும் மாற்றி அமைத்தது சென்னை மாநகராட்சி நிருவாகத்தில் அனைத்துமக்களும் பங்கேற்கும் வகையில் மக்களுக்கும் வாக்குரிமைகள் எளிதாகக் கிடைக்கின்ற வகையில் தடைகள் எல்லாவற்றையும் நீக்கியது இது நியமன முறையை நீக்கம் செய்தது. இருப்பினும் உள்ளாட்சி அரசாங்கம் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மூவரை ஒரே நேரத்தில் நியமனம் செய்ய அதிகாரம் பெற்று இருந்தது. தேர்தல் வார்டுகளும், உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன. தேர்தல் வரர்டுகள் 30 லிருந்து 40 ஆகவும், உறுப்பினர்கள் 50 லிருந்து 60 ஆகவும் உயர்த்தப்பட்டனர். உறுப்பினர்களின் பதவிக்காலமானது 3 ஆண்டுகள். இதில் $\frac{1}{3}$ பகுதியினர் சுழற்சி முறையில் ஆண்டுதோறும், பதவி விலகி, காலியிடங்கள் நிரப்பப்பட்டன இம்மன்றத்தில் சிறுபான்மையோர்களுக்கு இடம் ஒதுக்க வசதி செய்யப்பட்டது. 5 மாநகராட்சி நியமன உறுப்பினர்

களில் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டுமெனக் கூறியது சட்டம்.

மாநகர் மன்றத்தின் அதிகாரங்கள் :

1) சென்னைநகரின் நிருவாகம் மாநகராட்சி மன்றத்தில் அமைந்து இருக்கும்.

2) மாநகராட்சி அதிகாரம் சம்பந்தமாகவும், அதன் செயல்கள் சம்பந்தப்பட்ட முறையிலும் ஏதாவது சந்தேகங்கள் எழுந்தால் மேயர் அரசாங்கத்திடம் கலந்து கொள்ளவேண்டும். ஆளுநர் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

3) வரவு செலவுகளின் நிதிநிலை அறிக்கைகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கணித்து, வேலை செய்யப்பட்டுள்ள விவர அறிக்கைகளையும் அறிந்து தேவைப்பட்டால் தீர்மானம் நிறைவேற்றலாம்.

4) மாநகராட்சி மன்றத் தீர்மானங்களை நிலைக்குழுவும் ஆணையாளரும் சேர்ந்து செயலாக்கம் கொடுக்கவேண்டும். மாநகராட்சி மன்றத் தீர்மானங்களை ஆளுநர் குழு முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியோ தள்ளுபடி செய்தால், செயலாக்க இயலாது.

5) மாநகராட்சிப் பணிகள் செய்யாமல் விடப்பட்டால், பொதுச் சொத்தானது வீணாகிக்கொண்டு இருந்தால், புதிய பணிகள் சில இடங்களுக்குத் தேவைப்பட்டால், புதிய செயலாக்க முறைகள் தெரிந்தால், மேயரின் கவனத்திற்கும், பொறுப்பான அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டுவரலாம்.

6) மாநகராட்சி நிருவாக ஒழுங்கு சம்பந்தப்பட்ட வகைகளில் மேயரைக் குறுக்கீடு செய்து கேள்விகள் கேட்கலாம்.

7) மாநகராட்சியின் வேலை நேரங்களில், ஆணையாளருக்குத் தெரிவித்துவிட்டு மாநகராட்சிப் பதிவுகளைப் பார்க்க உறுப்பினர்கள் அதிகாரம் கொண்டவர்கள். ஆணையாளர் உறுப்பினர்களைப்

பதிவுகளைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டால், உறுப்பினர் கள் மேயரிடம் முறையீடு செய்யவேண்டும். மேயரின் முடிவே இறுதியானது.

8) மாநகர் மன்றமும், நிலைக்குழுவும் ஆணையாளரிடம் எந்த நேரமும் கீழ்க்கண்ட செய்திகளைக் கேட்கலாம் :-

அ) எந்த பதிவையும், கடிதத்தையும், திட்டத்தையும் மற்றும் பிற சாசனங்களைக் காட்டும்படி கேட்கலாம்.

ஆ) மாநகராட்சி நிருவாகம் சம்பந்தப்பட்ட எந்த விவர அறிக்கையையும், திட்டத்தையும், மதிப்பீட்டையும், கணக்குகள் அல்லது புள்ளி விவரங்கள் போன்றவைகளையும் கேட் கலாம்.

இ) ஆணையாளரிடமிருந்து அறிக்கையோ அல்லது வேறு எந்த துணை அதிகாரிகளிடமிருந்து அறிக்கைகளையோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

பொதுவாக பொது நலனிற்குத் தீங்கு விளைவிக்காத அனைத்து அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டு விடும்.

9) எந்த நேரத்திலும் நிலைக்குழுவின் செயல் நடவடிக்கைக் குறிப் பின் சுருக்கத்தையோ அல்லது வேறு குழுக்களின் செயல் நடவடிக்கைச் சுருக்கத்தையோ கேட்க மன்றம் அதிகாரம் பெற்று உள்ளது. விவர அறிக்கை, குறிப்புக்கள், கணக்குகள் மற்றும் பிற குழு சம்பந்தப்பட்டவைகள் கேட்கப்படும்.

1933-ஆம் ஆண்டிற்குப் பின்னர் மன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 65ஆக உயர்ந்தது. இவர்கள் கீழ்க்கண்ட வரிசையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:

(1 40 வார்டுகளிலுமிருந்து ஒருவராகப் பொது இடங்கள் 40.

2) தாழ்த்தப்பட்ட இனத்திற்கு 3.

3) தொழிலாளர்களுக்கு 2.

4) சென்னை வணிகக்கழகம், சென்னை வியாபார சங்கம் போன்ற வற்றிற்கு 6.

5) ஐந்து உறுப்பினர்கள் கீழ்க்கண்ட அமைப்புக்களிடமிருந்து ஒரு வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

அ) தென்னிந்திய வணிகக் கழகம்

ஆ) ஆந்திரா வணிகக் கழகம்

இ) நாட்டுக் கொட்டை நகரத்தார் சங்கம்

ஈ) தென்னிந்திய தோல் பதனீடு சங்கம்

உ) ஜவுளி வியாபாரிகளின் சங்கம்

6) ஆங்கிலோ - இந்திய சங்கத்திலிருந்து ஒருவர்.

7) துறைமுகக் கட்டளையாளர்களிடமிருந்து ஒருவர்.

8) தென்னிந்திய ரெயில்வேயிலிருந்து ஒருவர் நியமனம் செய்யப்பட்டார்.

9) ஓர் உறுப்பினர் சென்னைப் பல்கலைக் கழகச் 'செனட்' சபை யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

10) ஐந்து மாநகராட்சி நியமன உறுப்பினர்களில் ஒருவர் பெண்ணாக இருக்கவேண்டும். இவர்களை உறுப்பினர்களே தேர்ந்தெடுத்தனர்.

இது தவிர, உள்ளாட்சி அரசாங்கமானது சிறப்புத் தேர்ச்சியும், அறிவும், அனுபவமும் வாய்ந்த சிறப்பு உறுப்பினர்களை நியமனம் செய்தது. இது ஒரே நேரத்தில் மூன்றுக்கு மிகாமல் இருக்கவேண்டும்,

ஆண்டுக்கொரு முறையாகத் தேர்தல் மூலம் $\frac{1}{3}$ உறுப்பினர்கள் நிரப்பப்பட்டு வந்த சுழற்சி முறையானது 1939-ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்தின்படி நீக்கப்பட்டது. தேர்தல் மூன்று வருடங்களுக்கு ஒரு முறையென்ற முறை கொண்டுவரப்பட்டது. 1940-ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்த மாதிரித் தேர்தல் நடைபெற்றது. உலகப் போர் நடைபெற்றதாலும் பிற காரணங்களாலும் தேர்தல் தொடர்ந்து தள்ளி போடப்பட்டது. பின்னர் 1948-ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றது சென்னை நகரத்தின் வார்டுகள் 40லிருந்து 50ஆகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 65 லிருந்து 85 ஆகவும் 1947-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் மாற்றப்பட்டது. தாழ்த்தப்பட்ட இனத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இரண்டு இடங்கள் ஒவ்வொன்றிற்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டன. இனச் சார்பு ஒதுக்கீடு இடங்கள் கீழ்க்கண்ட வகையில் ஒதுக்கப்பட்டன.

முஸ்லீம்கள்	4
இந்திய கிறிஸ்தவர்கள்	1
ஆங்கிலோ - இந்தியர்	1
பெண்கள்	4

சென்னை வணிகக் கழகத்திற்கும், வியாபாரச் சங்கத்திற்கும் அளிக்கப்பட்ட நிறுவன வகைப் பிரதிநிதித்துவம் மூன்றிலிருந்து ஒன்றாகக் குறைக்கப்பட்டது. ஆங்கிலோ - இந்திய சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு இடம் நீக்கப்பட்டது. ஆனால் ஆங்கிலோ—இந்தியர்களுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. தென்னிந்திய இரயில்வேயும், சென்னை, தென்னிந்திய மகாராட்டா இரயில்வே கம்பெனியை அரசாங்கம் எடுத்துக் கொண்டதால், அதற்கு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டது. பின்னர் 12 வருடங்கள் கழித்து 1948 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது.

நிறுவன வகைப் பிரதிநிதித்துவமும், மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் பதவியும் 1958-ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி நீக்கப்

பட்டது. இச்சட்டம் சென்னை நகரை 100 வார்டுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வழி செய்தது. இதில் இடங்கள் ஒதுக்கீடு செய்யும் முறையும் இருந்தது 100 வார்டுகளை 120 ஆக தமிழ்நாடு சட்டம் 1967-ஆம் ஆண்டு பிரித்தது இதில் 12 இடங்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர்களுக்கும், 6 இடங்கள் பெண்களுக்கும் ஒதுக்கப்பட்டன. இம்முறை இன்றும் உள்ளது. தற்போது 150 ஆக மாநகராட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி தவிர, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளும், திருநெல்வேலி, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் மாநகராட்சி அமைக்க மாநில அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மாநகர்மன்றம் செயல்படும் முறை

மாநகர் மன்றம் பல்வேறு நேரங்களில்பல்வேறு பெயர்களுடன், பல்வேறு தன்மைகளோடு விளங்கியுள்ளது. ஆனால் மாநகர் மன்றக் கூட்டங்களுக்கு எப்பொழுதுமே மேயர்தான் தலைமை தாங்கி நடத்திச் சென்று உள்ளார். இருப்பினும் கூட்டங்களை நடத்த, கூட்டங்கள் பற்றிய ஒழுங்கு முறைகள் போன்றவை முதலில் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை. கூட்டங்கள் நடத்துவதற்கு அடிப்படையான ஒழுங்கு விதிகள், ஒழுங்கு முறைகள் வகுக்கப் பட வேண்டுமென்றும், அவைகள் பொருத்தமாகப் பின்பற்றப் படவும் வேண்டுமெனப் பின்னர் உணரப்பட்டது. மேயரின் முறை மன்றம் மாதத்திற்கு இருமுறை கூடிக் கொண்டேதான் வந்துள்ளது. மேயர் முறை மன்றத் தலைவர், மேயரானவர் அதிகமான அதிகாரங்கள் பெற்று இருந்தார் என்பதிலும் சந்தேகமில்லை. இருப்பினும் அமைதி நேர்மையாளர்கள் ஆட்சிக் காலத்தின்பொழுது ஒழுங்கு முறையே இல்லாமல், வரையறை இல்லாமல் போய்விட்டதென்பதை, ஓர் உறுப்பினரே மன்ற நடவடிக்கைகளைக் கவனித்ததிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே முதன் முதலாக கூட்டங்கள் பற்றிய ஒழுங்கு முறைகளை 1878-ஆம் ஆண்டுச்சட்டம் தெளிவாக வரையறுத்தது. மாநகராட்சி மன்றக் கூட்டங்களுக்கு மட்டுமல்ல, எந்த ஒழுங்குமுறைச் செயல்களைச் செய்யவேண்டுமாயினும், அடிப்படையான சில ஒழுங்குமுறைகள் அத்தியாவசியமானதென்பதை அனைவரும் உணர்ந்தனர். ஒழுங்குமுறைகளினால் தனிப்பட்டவர்கள் செல்வாக்குப் பெறுவதைத் தவிர்க்

கவும் நடவடிக்கைகள் பொதுநோக்காக, பொதுமக்களுக்காக, பாரபட்சமின்றிச் செயல்படுவதற்கும், மற்றும் பணிகளைத் திட்ட மிட்டு, தெளிவாகவும், பொருத்தமாகவும் செய்வதற்கு வரை யறைகள், ஒழுங்குமுறைகள் தேவையானது.

கூட்டங்கள் நடத்துதல் பற்றிய விதிமுறைகள், ஒழுங்கு முறைகள் போன்றவை 1878-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் வரைய றுக்கப்பட்டன. ஆண்டுதோறும் 12 பொதுக்கூட்டங்களைத் தலைவர் நடத்தினார். தலைவர் கூட்டம் கூடும் தேதிக்கு ஆறுநாட்கள் முன்னரே ஆணையாளர்களுக்குத் தெரியப்படுத்தினார். கூட்டம் நடைபெறுவது உள்ளூர்ப் பத்திரிகைகளிலும் மற்றும் அரசாங்கப் பதிவுத்தாள்களிலும் விளம்பரம் செய்யப்பட்டன. 10 ஆணையாளர்களின் வேண்டுகோள்களின் பேரில் சிறப்புக் கூட்டங்களைத் தலைவர் கூட்ட சட்டம் அனுமதித்தது ஆனால் ஆறு நாட்களுக்கு முன்னரே ஆணையாளர்களுக்குத் தெரியப்படுத்தி, பத்திரிகைகள், அரசாங்கப் பதிவுத்தாள் ஆகியவற்றிலும் விளம்பரம் கொடுக்கவேண்டும். சாதாரணக் கூட்டம் நடத்த குறைந்த பட்ச எண்ணிக்கை 7 ஆகவும், சிறப்புக் கூட்டங்களுக்கு 10 ஆகவும் நிருணயிக்கப்பட்டு இருந்தது. பெரும்பான்மையின் முடிவுப்படியே தீர்மானங்கள், முடிவுகள் எடுக்கப்பட்டன. பெரும்பான்மையில்லா மல் இருபக்கங்களிலும் சமமான உறுப்பினர்கள் இருக்க நேரிடும் சமயங்களில், தலைவர் தனது முடிவு வாக்கைப் (Casting Vote) பதிவு செய்து, முடிவுகளை எடுத்தார். கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் குறிப்புப்பதிவுகள் செய்யப்பட்டன. தலைவர் 15 நாட்களுக்கு மிகாமல் கூட்டத்தைத் தள்ளிப்போட அதிகாரம் கொண்டவராவார். தலைவர், தேங்கியிருக்கும் செயல்களைச் செய்து முடிக்க ஒத்திவைப்புக் கூட்டங்களைக் கூட்டினார். ஒத்தி வைப்புக் கூட்டங்கள் என்பது கூட்டங்கள் ஒத்திவைப்பதைக் குறிக்காமல், பொதுவாகக் கூடுகின்ற கூட்டங்களைத் தவிர்த்து (சட்டத்தில் வரையறுத்துள்ள) கூட்டப்படும் அனைத்துக் கூட்டங்களும் ஒத்தி வைப்புக் கூட்டங்கள் என்று அழைக்கப் பட்டன எனவே ஒத்தி வைப்புக் கூட்டங்கள் தள்ளி வைக்கப்பட்ட கூட்டங்களெனப் பொருள் கொள்ளவேண்டாம். கூட்டங்கள் அனைத்திலும் குறிப்

புப்பதிவுகள் செய்யப்பட்டன. 1878-ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ், மாநகராட்சி மன்றம் திறந்த வெளி முறைமையில் செயல்பட்டு வந்துள்ளது. ஒவ்வொரு இரண்டு மாதமும் கூட்டம் கூட்டி அக் கூட்டத்தில் வரவுகளையும் செலவுகளையும் பரிசீலனை செய்து, எவ்வளவு தூரம் செயல்கள் செம்மையாகச் செய்யப்படுகின்றன என்பது ஆராயப்பட்டன. இக்கூட்டங்கள் பிப்ரவரி, ஏப்ரல், ஜூன், ஆகஸ்ட், அக்டோபர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் கூட்டப் பட்டன. செயல் நடவடிக்கைகள் அனைத்தும் அரசுப் பதிவுத்தாளில் வெளியிடப்பட்டன. குறிப்புப் பதிவுகளை எல்லா ஆணையாளர் களும் பார்ப்பதற்கு உரிமை பெற்று இருந்தனர். குறிப்புப்பதிவு கள் மக்களுக்கும் விற்கப் பெற்றன. தலைவர் கொடுத்திருக்கும் அறிக்கையில் உள்ள விஷயங்கள் அல்லது செயல்கள் மட்டுமே சாதாரணக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டன. ஆணையாளர்கள் விவாதிக்க விரும்பும் விஷயங்கள் குறித்து மூன்று நாட்களுக்கு முன்னரே தெரிவித்தால் அவ்விஷயங்கள் விவாதத்திற்கு வரும். இவ்வாறாக தலைவர் வரையும் செயல்கள் பொதுவான விஷய மாக இருப்பதால், அனைத்துக் கூட்டங்களிலும் விவாதிக்கப்படக் கூடிய சாதாரண செயலாகவே இருந்தது.

1904-ஆம் ஆண்டுச் சட்டம் கூட்டங்கள் தள்ளிப்போடுவது குறித்துச் சில மாற்றங்களைச் செய்தது. கூட்டமானது ஒரு முறைக்கு மேலாகத் தள்ளிப்போடப்பட்டால், தள்ளிப்போட்ட கூட்டம் 50 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டுமெனக் கூறியது. கூட்டங் களுக்குத் தேதி நிருணயம் போன்றவற்றிலும் மாறுதல் செய்யப் பட்டது. பிற ஒழுங்கு விதிகள் மாற்றமில்லாமல் 1919-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து செயல்பட்டன.

மேயர் கூட்டத் தேதியையும், நேரத்தையும் நிருணயிக்க அதி காரம் பெற்றவர். ஆறு நாட்களுக்கு முன்னரே அறிவிப்பு கொடுத்தபின்னர் கூட்டத்தைக் கூட்டினார். கூட்டத்திற்குக் குறைந்த பட்ச உறுப்பினர்கள் (குறைவெண்) இருந்தால், கூட்டத்தை நடத்து வார். குறைந்த பட்ச உறுப்பினர்கள் வருகை தந்துள்ளனரா என்பதை நிருணயிக்கும் விருப்ப அதிகாரம் பெற்றவரும் இவரே. குறைந்தபட்ச உறுப்பினர்கள் இல்லையெனில், கூட்டத்தைத் தள்ளிப் போடலாம். கூட்டம் நடைபெறுகின்ற சமயங்களில் குறைவெண்

இல்லையெனில், கூட்டத்தைத் தள்ளிப்போடும் அதிகாரம் மேயரின் விருப்ப அதிகாரத்தைப் பொறுத்ததாகும். மாநகராட்சி மன்றத்தில் அனைத்து உறுப்பினர்களும் மேயரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கக் கூடியவர்கள் மேயர் தான் ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தைக் கொண்டவர். கூட்டச் செயல் நடவடிக்கைகளைத் (Agenda) தயாரிக்க மேயர் அதிகாரம் பெற்றதோடு, அவர்தான் அதனைத் தயாரித்தார். அது, கீழ்க்கண்ட வரிசையில் அமையும்:

1) 'இடைவினா'க் கேள்விகள்.

2) முதல்முறையாக மாநகராட்சி மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள். இவை மீது சமர்ப்பிக்கப்பட்ட அன்றே விவாதம் நடைபெறாது.

3) குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

4) மேயர் அவசரமான செயல்களெனக் கொண்டு வரும் விஷயங்கள், அலுவலகச் செயல்கள் மற்றும் பிற.

5) செயல்நடவடிக்கை வரிசையில் மாற்றம் வேண்டி முன்மொழிவுகள் ஏதாவது இருப்பின் கொண்டு வரலாம்

6) நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகளைத் தாக்சல் செய்தல்.

7) குழுக்களின் செயல் நடவடிக்கைகள்

8) தீர்மானங்கள்

மாநகராட்சி மன்றத்தின் செயல்முறைகள் வரிசை அமைக்கப்பட்டாலும், மேயர் அவசரமான விஷயங்களைக் கொண்டு வரும் பொழுது, வரிசைகள் புறக்கணிக்கப்பட்டன.

மாநகராட்சி மன்றத்தில் பேச்சுரிமை இருந்தாலும் யார் முதலில் பேச வேண்டுமென்று கேள்விக்குப் பதிலை மேயர்தான் கூற வேண்டும். மேயர் பேசவேண்டிய உறுப்பினர்களை அழைத்-

தால்தான், உறுப்பினர்கள் பேசவேண்டும் ஒழுங்குப் பிரச்சனைகளி குறித்துத் தீர்மானிப்பது மேயர் மட்டுமே ஒழுங்குப்பிரச்சனை குறித்து மேயரின் முடிவே இறுதியானதாகும். இருப்பினும் உறுப்பினர்கள் ஓர் ஒழுங்குப் பிரச்சனையின் முடிவு பொருத்தமில்லாதெனக் கருதி னால், உடனே அதுபற்றி பிரச்சனையைக் கிளப்பாமல், அடுத்த கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்து முறியடிக்கலாம். ஆனால் பின்னர் செய்த திருத்தத்தால், மேயரின் முடிவே இறுதியானதா கப்பட்டது. ஒழுங்குப் பிரச்சனைகளுக்குப் பின்னர், அதுபற்றிய விவாதங்கள் நடைபெற அனுமதிக்கப்படுவது கிடையாது ஒழுங்குப் பிரச்சனைகள் குறித்து உறுப்பினர் கோரலாம். உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சனைக்குரிய காரணங்களை விளக்கவேண்டும். மேயர் தான் ஒழுங்குப் பிரச்சனையை அனுமதிக்கலாமா? என்பதை முடிவு செய்யவேண்டும். மேயர் மன்றத்தில் ஒழுங்கையும் சட்டத்தையும் பராமரிக்க வேண்டியவராதலால் ஒழுங்குப் பிரச்சனை குறித்து முடிவுகளைச் செயலாக்கவும் அதிகாரம் பெற்று இருந்தார். உறுப் பினர்கள் மீறமுடியாதபடி செய்யப்பட்டது,

மாநகராட்சி மன்றத்தில் கேட்கவிருக்கும் கேள்விகளை அனுமதிப்பது மேயரின் கடமையாகும். கேள்விகள் பொதுவான வகையில், மாநகராட்சி நிருவாகம் சம்பந்தப்பட்ட வகையில் உள்ள செய்திகளையும், உண்மைகளையும் பெறும் வகையில் அமையவேண்டும். ஒழுங்கு முறைகளுக்கு மீறியதாகவும், கேள்வி களின்பதில்கள் பொதுநன்மையைப் பாதிக்கும் அளவில் இருந்தால் அத்தகைய கேள்விகள் அனுமதிக்கப் படுவதில்லை. உறுப்பினர் களைத் தாக்கும் வகையிலும், குறைகூறும் வகையிலும் அமைகின்ற கேள்விகளை மேயர் அனுமதிக்கமாட்டார்.

மன்றத்தில் முடிவு செய்யப்பட வேண்டிய விஷயங்களை மேயர் கேள்விகளாகக் கேட்பார். அக்கேள்விகளுக்குப் பதில் பெறும் வகையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டன. பெரும்பான்மை வாக்குக் களின்படி முடிவுகள் எடுக்கப்பட்டன. கேள்வி கேட்கப் படுகின்ற பொழுது, சாதகமாக எத்தனை பேர்கள் ஆதரவு தருகின்றார்கள் என்பதைக் கையைத் தூக்குவதை வைத்து, மேயர் எண்ணி முடிவு செய்யவேண்டும். இதே மாதிரியாக, கேள்விக்குப் பாதகமான

ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கையையும் அறிந்து, பெரும் பான்மைப்படி முடிவு செய்யப்பட்டன. ஒரே கேள்வியை, விஷயத்தை இரண்டு தடவைகள் பேச உறுப்பினர் முற்பட்டால் ஒழுங்கு குறித்துக் கட்டுப்படுத்தப்படுவர். முறையான கேள்விகள் அனைத்தும் மாற்றமின்றி அப்படியே மன்றத்தின் முன் மேயர் வைப்பார்.

மாநகராட்சி நிருவாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வர உரிமை பெற்றவர்கள். தீர்மானங்களை அனுமதிக்கும் அதிகாரம் மேயருடையது. சட்டத்தின் அம்சங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் புறம்பாகத் தீர்மானங்கள் இருந்தால், அவற்றை மேயர் அனுமதிப்பதில்லை. எனவே அனுமதி வழங்கும் அதிகாரம் மேயருடையதாகும். ஒவ்வாரு தீர்மானமும் முன் மொழியப்பட்டதுடன், ஆமோதிக்கப்படவும் வேண்டும். ஆமோதிக்கப்படாத தீர்மானங்களின் மீது விவாதமோ, அதுபற்றியே கேள்விகளோ அனுமதிக்கப்படுவதில்லை. முன்மொழியப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் கேள்விகள் வகையாக அனுமதி பெறப்படும். மேயர் இது அனுமதிக்கப் படுமா? என்ற ஒரு கேள்வி கேட்பாரேயாயின், அதற்குப் பெரும்பான்மையினர் 'ஆம்' என்றால் நிறைவேறலாம். 'இல்லை' என்ற பதில் வந்தால் நிறைவேறாது. முன்மொழிவுகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வரலாம். அவைகள்,

1) சில வார்த்தைகளை எடுத்து விட,

2) சில வார்த்தைகளைச் சேர்க்க,

3) சில வார்த்தைகளை நீக்கிவிட்டு, மாற்றாகப் பிற வார்த்தைகள் சேர்க்க

4) சில வார்த்தைகளை அதிகமாகச் சேர்க்க

இவைபோன்ற நான்கு விதங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்படலாம். இத்திருத்தங்கள் பொருத்தமாக இருந்தால், மேயர் திருத்தங்கள் ஏற்றுக் கொண்டு, அனுமதி வழங்குவார் மேயர் திருத்தங்களை பொருத்தமற்றவைகளாக, தேவைப்படாதவைகள் என எண்ணினால். திருத்தங்கள் கொண்டுவர அனுமதி மறுக்கப் படும்.

மேயர் தீர்மானங்கள் கொண்டுவரும் செயல் முறையில் சில திருத்தங்கள் 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தில் கொண்டு வரப் பட்டன. மேயரோ, தலைமை தாங்கும் ஆணையாளரோ தீர் மானங்களை முன்மொழிய, ஏற்றுக் கொள்ள, அதன் மீது வாக்களிக்க உரிமை பெற்று இருந்தார். ஆனால் இத்தீர்மானங் கள் கொண்டு வருகின்ற பொழுது, மேயர் பதவியை விட்டு விலகி, தலைமையை மற்றொருவரிடம் கொடுத்து விடவேண்டும். அதற்குப்பின்னர் தான் மேயர் தீர்மானங்களை முன்மொழிய, ஏற்றுக்கொள்ள, பேச, வாக்களிக்க உரிமை பெற்றவராவார். உறுப்பினர்களின் ஒழுங்கு நடத்தையானது தவறானது எனக் கருதினால், மேயர் உறுப்பினரைக் கூட்டத்திலிருக்து நீக்கி, வெளியேற்றலாம். அங்ஙனம் கூட்டத்தை விட்டுச் சென்றவர் அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது. அந்த உறுப்பினர் ஏற்காது மறுத்தால், இரண்டாவது முறையும் மேயர் கட்டளையைப் பிறப்பித்து உறுப்பினரை மன்றத்திலிருந்து வெளி யேற்றலாம். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் ஒரு மாதத் திற்கு மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது. மன்றத்தில் அமைதியில்லாமல், சட்டம் ஒழுங்கு குலைய நேரிட் டால், கூட்டத்தைத் தள்ளுபடி செய்யலாம். மேயர் உறுப்பி னர்களைப் போல் அனைத்து அதிகாரங்கள் கொண்டவர்களாயி னும், அவர்களைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்கு படுத்தவும் உரிமை பெற்றவர்கள் என்பதை இந்த அதிகாரத்தின் மூலமாகத் தெரிந்து கொண்டோம்.

வரவு செலவுத் திட்டமாயினும் சரி, துணை வரவு செலவுத் திட்டமாயினும் சரி கூட்டத்தில் கீழ்க்கண்ட வகையில் சமர்ப்பிக்கப் பட்டு, நிறைவேறும். வரவு செலவுத்திட்டத்தில் உள்ள ஒவ்வொரு செலவினத்தையும், வரவினத்தையும் பற்றிய விவரங்களை மேயர் கேள்விகளாக வைப்பார். இது வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு பகுதியாக உள்ளதென விளக்கம் கொடுப்பார். உறுப்பினர்கள் திருத்தங்கள் கொண்டுவர விரும்பினால் கொண்டு வரலாமெனக் கூறுவார். இக்கேள்விகளின் பதில்களை வைத்து வரவினத்தில் சேர்க்கப்பட வேண்டுமா அல்லது செலவினத்தில் சேர்க்கப்பட வேண்டுமா என்பது பற்றி மேயரே முடிவு செய்வார்,

சட்டம், ஒழுங்கை மாநகர் மன்றத்தில் பராமரிப்பதும், மன்றக் கூட்டங்களை நடத்துவதும் பார்வையாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் காலரிகளைக் கட்டுப்படுத்தி நிருவாகம் செய்வதும் ஆகியவை மேயரின் கடமையாகும். கூட்டங்களைக் கூட்டுவது, தள்ளிப்போடுவது தற்காலிக நீக்கம் செய்வது ஆகிய அதிகாரங்கள் மேயரிடம் இருந்தன. கூட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதும் மேயரின் கடமைதான் சட்டத்தின் நியதிகள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றிற்கேற்பக் கூட்டங்களை நடத்துவது மேயரின் கடமையாகும். எல்லா அரசியல் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக்குப் பிறகுதான், கூட்டங்கள் தள்ளிவைப்பதற்கு உண்டான முன்மொழிவுகள் கொண்டு வருவது ஒரு பழக்கமாக இருக்கிறது. இது ஒரு பழக்கம் மட்டும்தான். இது சட்டப்படியான நியதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் போல் செயல்படக் கூடியதல்ல என்பதையும் அறியலாம். ஆகவே மேயர்தான் நகர்மன்ற நடவடிக்கைகளுக்குக் காவலர், முதல்வர், முன்னோடி.

கூட்டங்கள் நடைபெறுவதை வைத்தும், கூட்டத்திற்கு வருகை தந்தவர்களைக் கணக்கிட்டும் மாநகராட்சியின் திறமையை முழுவதும் கணக்கிட முடியாவிட்டாலும், ஓரளவிற்குத் திறமையைக் கணிப்பதற்கு வழியுள்ளதென்பதை அறியலாம். மேயர் (தலைவர்) செயலாக்கம் மற்றும் கூட்டத்தலைமை மற்றும் சட்டமாக்கமாகிய அதிகாரங்கள் தம்மிடத்தே இருந்த சமயத்தில், 1891-ஆம் ஆண்டு குறைந்த எண்ணிக்கையில் 16 கூட்டங்களும் 1903-ஆம் ஆண்டில் 33 கூட்டங்களும் நடத்தப்பட்டன. 1885-ஆம் ஆண்டிலிருந்து 1919-ஆம் ஆண்டு வரையிலும் சராசரியாக 34 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. 22.2 விழுக்காடு சராசரி வருகையாகவும் 4.7 விழுக்காடு ஒத்திவைப்புக் கூட்டங்களுக்கு வருகையும் வந்துள்ளது. பின்னர் 1919-ஆம் ஆண்டிலிருந்து 1933-ஆம் ஆண்டு வரையிலும் 55.1 சராசரிக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. 31.5 சராசரி வருகையும், 23.2 ஒத்திவைப்புக் கூட்டங்களுக்கு வருகையும் பதிவாகி உள்ளது. பின்னர் 1933-ஆம் ஆண்டிலிருந்து 1973-ஆம் ஆண்டு வரை 61 கூட்டங்கள் சராசரியாகவும், 63 விழுக்காடு வருகையும், 28 விழுக்காடு ஒத்திவைப்புக் கூட்டங்களுக்கும் வருகைகள் பதிவாகி உள்ளது. எனவே கூட்டங்களும், வருகையும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டதையொட்டி, மாநகர நிருவாகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதென்பதை அறிந்து கொள்ளலாம்.

10

பிற மாநிலங்களின் ஊராட்சி அமைப்பு

ஊராட்சி அரசு நிறுவனங்கள் மூன்று படிநிலையைக் கொண்டதாக இருக்க வேண்டுமெனப் பல்வந்தராய் மேத்தா குழு பரிந்துரைத்துள்ளது அந்தப் பரிந்துரையின் கீழ் மூன்றுபடி நிலை கொண்ட ஊராட்சி அமைப்புக்கள் இன்று பெரும்பாலான மாநிலங்களில் உள்ளதைக் கூறலாம். ஆனால் அந்த அமைப்புக்களின் பெயர்கள், அமைப்பு முறைகள், வரையறை எல்லைகள் போன்றவை வித்தியாசமாக உள்ளன முதலில் அந்த மூன்றுபடி நிலையானது எம் மாநிலங்களில் எந்த வகையில் அமைந்து உள்ளது என்பதைக் காண்போம்.

மூன்று படிநிலை முறையை பல்வந்தராய் மேத்தா குழு பரிந்துரைத்த பின்னும், அதனை ஏற்றுக்கொள்ளாமல் இரண்டு படி நிலை முறையும், ஒரே வரிசை கொண்ட அமைப்பும் இன்னும் இருந்து வருகின்றன. மூன்று படிநிலையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தும் மாநிலங்கள் கீழ்வருவனவாகும். அவை ஆந்திரப் பிரதேசம், பீகார், குஜராத், ஹிமாசலப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, பஞ்சாப், இராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசப், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் ஆகும். இரட்டைப் படிநிலையைத் தாங்கியுள்ள மாநிலங்கள் முறையே அஸ்ஸாம், ஹரியானா, ஜம்மு மற்றும் காஷ்மீர், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகியவைகளாகும். இது தவிர்த்து, கேரள மாநிலத்தில் ஒரே ஒரு படிநிலையை மட்டுமே தாங்கியுள்ளது, இவ்வாறாக ஊராட்சி அரசு

நிறுவனங்களின் அமைப்பானது மூன்று படிநிலையாகவும், இரண்டு படிநிலையாகவும், ஒரே படிநிலையாகவும் உள்ளன என்பதை அறியலாம்.

ஊராட்சி அரசு அணுகுமுறையின் அடிப்படை கிராமங்கள். கிராம அமைப்புக்களைப் பொறுத்தவரை கிராம ஊராட்சியை அனைத்து மாநிலங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஊராட்சி தனியான ஒரு கிராமத்திலேயோ, ஒன்றிற்கு மேற்பட்ட கிராமங்களிலோ அமைக்கப்படுகின்றது. எனவே ஊராட்சியின் ஆட்சி செலுத்தும் அதிகார வரையறை எல்லை வித்தியாசமாக உள்ளது. கிராம ஊராட்சியின் பெயரானது சில மாநிலங்களில் வித்தியாசமாக உள்ளது. பீகாரில் கிராம ஊராட்சியின் செயலாக்கக் குழுவாகவும், குஜராத்தில் நகர ஊராட்சி அல்லது கிராம ஊராட்சி எனவும், கர்நாடகத்திலும் இதே மாதிரியாகக் கிராம அல்லது நகர ஊராட்சி எனவும், கேரளாவிலும், இராஜஸ்தானிலும் வெறுமனே ஊராட்சி என மட்டுமே பெயர் கொண்டுள்ளது தமிழ்நாட்டிலும் கிராம அல்லது நகர ஊராட்சிகள் எனப் பெயர் கெண்டுள்ளது. திரிபுரா மாநிலத்தில் கியான் ஊராட்சி (Gaon Panchayat) என்று பெயர் கொண்டுள்ளது. இவ்வாறு அடிப்படை அமைப்பானது பல்வேறு பெயர்கள் தாங்கியுள்ளது.

கிராமங்களை நிருவகிக்கும் அடிப்படை அமைப்பிற்கு மேலாக இடைப்பட்ட படிநிலையை ஊராட்சி சமிதி என்று பொதுவாகச் சொல்லலாம். ஆனால் இதுவும் பல்வேறு பெயர்கள் தாங்கி, பல்வேறு பரப்புக்களுக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. ஊராட்சி சமிதி என ஆந்திரா, பீகார், ஹரியானா, ஹிமாசலப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒரிஸ்ஸா. பஞ்சாப், இராஜஸ்தான், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் அழைக்கின்றன. இதற்குப் பொதுவான அதிகார வரையறை எல்லை வட்டார அளவாகும். அஸ்ஸாம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் அவ்வமைப்பு நீக்கப்பட்டுள்ளது. வட்ட ஊராட்சிகள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் வட்டார ஊராட்சி வாரியமாகவும், கர்நாடக மாநிலத்தில் வட்ட வளர்ச்சி வாரியமாகவும் உள்ளது. வட்டாரம் தான் இவற்றின் அதிகார எல்லை. மத்தியப்பிரதேசத்தில் ஜனபாத ஊராட்சி (Janapada Panchayat) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியம்

என்று அழைக்கப்பட்டு வருகிறது. இவற்றின் அதிகார வரையறையானது வட்டார அளவாகும். உத்திரப்பிரதேசத்தில் ஷேத்திரா சமிதி (Kshetra Samiti) வட்டார அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அரசு நிறுவனங்களின் உயரமைப்பாக, உயர்படி நிலையில் இடம்பெறக் கூடியது ஜில்லா அமைப்பாகும் (Zilla Parishad). இந்த உயர்மட்ட அமைப்பும் பல்வேறாகத்தான், ஒவ்வொரு மாநிலங்களிலும் வித்தியாசமாக அழைக்கப்படுகின்றது. ஜில்லா அமைப்பு என ஆந்திரப் பிரதேசப், ஹிமாசலப் பிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அழைக்கப்படுகின்றது. இம் மாநிலங்களில் அதிகார வரையறை எல்லை மாவட்டங்களின் வருவாய்ப் பிரிவாகும். ஒவ்வொரு மாவட்டமும் வருவாயை முன்னிட்டு தனித்தனியாகப் பிரித்து, நிருவகிக்கப்படுகின்றன. இதனைச் சாதாரணமாக வருவாய் மாவட்டமெனக் கூறுவர். ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் இந்த ஜில்லா அமைப்பிற்கு ஒரு வரையறை எல்லையாகும். அஸ்ஸாமில் மொகும்பா அமைப்பு (Mohkuma Parishad) என்று பெயர். பீகாரில் 8 மாவட்டங்களில் மட்டுமே ஜில்லா அமைப்புக்கள் உள்ளன இவற்றிற்கு வருவாய் மாவட்டம் எல்லை. குஜராத்தில் மாவட்ட ஊராட்சிகள், கர்நாடக மாநிலத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல்படுகின்றன. ஒரிஸ்ஸாவில் இந்த மாதிரியான அமைப்பு 1968-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீக்கப்பட்டு விட்டது. தமிழ்நாட்டில் வருவாய் மாவட்டத்திற்குப் பதிலாக, வளர்ச்சி மாவட்டம் உள்ளது. மாவட்ட வளர்ச்சி மன்றம் உச்ச அமைப்பாகச் செயல்படுகின்றது.

ஊராட்சி சமிதிகள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்போம். ஆந்திரப் பிரதேசத்தில், வட்டாரத்திலுள்ள நகரக்குழுக்களும், எல்லா ஊராட்சிகளின் தலைவர்களும் அவ்வட்டார சட்டமன்ற உறுப்பினரையும், சட்டமன்ற மேலவை உறுப்பினரையும் கொண்டதாக அமைக்கப்படுகின்றது. சட்டமன்ற, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு வாக்குகள் அளிக்கும் உரிமையும் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் ஊராட்சியின் எந்தப் பதவிகளிலும் இருக்கத் தகுதி பெற்றவர்களல்லர். ஊராட்சி

கள் இல்லாமலிருந்தால், அப்பிரிவுகளுக்கு நியமனம் செய்யப்படுவதுண்டு. மாவட்ட ஆட்சித்தலைவர் இப்பிரிவுகளுக்கு ஒருவராக நியமனம் செய்கின்றார். இச்சமிதியில், பெண்களுக்கு இரண்டு இடங்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஓர் இடமும், பழங்குடி வகுப்பினருக்கு ஓர் இடமும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர்த்து, கிராமப்புற வளர்ச்சியில் ஆர்வமுள்ள இரண்டு உறுப்பினர்களும் இடம்பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்தில், ஊராட்சி சமிதியானது பல்வேறு ஆர்வக் குழுக்களையும், வேறுபட்ட உறுப்பினர்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இச்சமிதியில் கீழ்க்கண்ட வகை உறுப்பினர்கள் இடம்பெறுகிறார்கள். அவர்கள்,

1) வட்டாரத்திலுள்ள கிராம ஊராட்சியின் முக்கியஸ்தர்கள் (Mukhiyas)

2) நகராட்சிகளின் தலைவர்களும் விலக்களிக்கப்பட்ட பரப்புக் குழுக்களின் (Notified Committees) துணைத் தலைவர்கள்.

3) ஒன்றிய வாரியங்களின் தலைவர்கள்

4) கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மூன்று பிரதிநிதிகள்

5) கரும்புச் சாகுபடியாளர்களின் சங்கத்திலிருந்து ஒரு பிரதிநிதி

6) பல்வேறு நோக்கச் சங்கங்கள், கரும்புச் சாகுபடியாளர்களின் சங்கத்தைத் தவிர்த்து பிற கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஒரு பிரதிநிதி

7) அவ்வட்டாரத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆகியோர் இணை உறுப்பினர்களாகச் (associate members) செயல்படுவர்.

இந்தச் சமிதியில், இரண்டு இடங்கள் பெண்களுக்கும், இரண்டு இடங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், இரண்டு இடங்கள் பழங்குடி வகுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினரைத் தவிர்த்து இரண்டு

இடங்கள் பொதுவாக நிரப்பப்படுகின்றன. அவ்வட்டாரத்தில் பொது வாழ்வில் ஆர்வமும், அக்கறையும் கொண்டு, கிராமப் புற வளர்ச்சியில் அறிவும், நிருவாகத்தில் அனுபவமும் நிறையப் பெற்ற இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

குஜராத் மாநிலத்தில் வட்ட ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் உள்ளன என்பதை அறிவோம். வட்ட ஊராட்சி சமிதிக்கு இணையான அமைப்பாகும். இதில் வட்ட ஊராட்சிகளின் வாக்காளர்களிடமிருந்து பதினைந்திலிருந்து முப்பத்தி ஒன்று வரையிலுமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இவ்வாறு நேரடித் தேர்தல் புகுத்தப்பட்டுள்ளது சிறப்பான ஒன்று எனலாம். கிராம ஊராட்சிகளின் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப் படுகின்ற உறுப்பினர்கள் இதில் இடம் பெறுவர். இவர்களின் எண்ணிக்கையானது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காகும். மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம், மாவட்டக் கூட்டுறவு வங்கி, வட்டக் கூட்டுறவு வாங்கல், விற்பனை ஒன்றியம், விவசாய உற்பத்தி விற்பனைக் குழு ஆகிய அமைப்புக்களிலிருந்து ஒரு பிரதிநிதியாக ஒவ்வொன்றிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். வட்டார சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி மற்றும் மமல்தார் (Mamaltdar) ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர். மகல்பாரி (Mahalbari) என்பவர்கள் இணை உறுப்பினர்களாக இருப்பார்.

பெண்களுக்கு இரண்டிலிருந்து மூன்று இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி வகுப்பினர்களுக்கும் அவர்களது மக்கள் தொகைக்கேற்ற வகையில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சிறப்புத் தன்மை கொண்டுள்ள திறமையாளர்களை நியமிக்க வகை செய்யும் அம்சம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்ததாக ஹரியானா மாநிலத்தைப் பற்றிக் காணலாம். ஊராட்சி சமிதிக்கு, 16 உறுப்பினர்கள் வட்டாரத்திலுள்ள உபதலைவர்கள் (Panches) மற்றும் தலைவர்கள் (Sarpanches) ஆகியோர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கூட்டுறவு சங்கங்களின் சார்பாக ஓர் உறுப்பினர் பிரதிநிதித்துவம் பெறுகிறார். பதவியின் அடிப்படையில்

ஊராட்சி அதிகாரிகள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், துணைக்கோட்ட அதிகாரிகள் (Sub-Divisional officer) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இரண்டு இடங்கள் பெண்களுக்கும், நான்கு இடங்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஹிமாசலப் பிரதேச ஊராட்சி சமிதியில் 20 உறுப்பினர்கள் வரையிலும் வட்டாரத்திலுள்ள உபதலைவர்கள், கிராம ஊராட்சிகளின் உயர்தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் முக்கியமானவர்கள் உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் இணை உறுப்பினர்களாக உள்ளனர். பதவியின் அடிப்படையில் துணைக் கோட்ட அதிகாரி உறுப்பினராக உள்ளார். கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பெண்களுக்கு இரண்டு இடங்களும், நான்கு இடங்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கர்நாடக மாநிலத்தில், வட்டத்திலுள்ள வாக்காளர்களால் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக 15-19 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் இடம் பெறுகிறார்கள். பெண்களுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் அவர்களின் மக்கள் தொகைக்கேற்ப விகிதாச்சார முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது தவிர்த்து, சிறப்புத் தகுதி கொண்டவர்கள் இடம் பெற சட்டத்தில் அம்சம் ஏதும் இல்லை.

மத்திய பிரதேசத்தில் ஜன்பாதா ஊராட்சி உள்ளது (Jan pada Panchayat). இதற்கு, கிராம ஊராட்சியின் உபதலைவர்களிலிருந்து 15 முதல் 30 வரையிலும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வட்டாரத்திலுள்ள மாநகர, நகராட்சி, விலக்களிக்கப்பட்ட பகுதிக்குழு ஆகியவற்றிலிருந்து, ஒருவர் வீதம் ஒவ்வொன்றிலுமிருந்து நியமிக்கப்படுகிறார்கள். உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்கள் இணை உறுப்பினராகச் செயல்படுகிறார்கள். கூட்டுறவு

நிறுவனங்களிலிருந்து ஒருவர் பிரதிநிதித்துவம் பெறுகிறார் இரண்டு இடங்கள் பெண்களுக்கும், ஒவ்வொரு இடம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், பழங்குடி வகுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மகாராஷ்டிராவில், ஜில்லா அமைப்பிற்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரப் பிரிவின் பிரதிநிதிகள், ஜில்லா அமைப்பிற்கு நியமிக்கப்பட்ட கூட்டுநியமன உறுப்பினர்கள் ஆகியோர் இதில் இடம் பெறுகிறார்கள் வட்டாரத்திலிருந்து தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும். கூட்டுநியமன உறுப்பினர்களும் இதில் உறுப்பினராக உள்ளனர் என்பது இதன் சிறப்பு அம்சம். வட்டாரத்தின் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் இதில் இடம் பெறுகிறார்கள். கூட்டுறவுகள் விவசாயம் சம்பந்தப்பட்ட செயலைச் செய்கின்ற தலைவரும் விவசாயப் பொருள்கள் வாங்கல் மற்றும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தலைவரும் மட்டும்தான் உறுப்பினராக முடியும். பெண்களுக்கு ஓர் இடமும். தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒன்றிலிருந்து இரண்டு இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஒரிஸ்ஸாவில், எல்லா ஊராட்சிகளின் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், விலக்களிக்கப்பட்ட பகுதி மன்ற உறுப்பினரும், வட்டார வளர்ச்சி அதிகாரியுடன், வருவாய்த்துறை, வளர்ச்சித் துறை ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு அதிகாரியும் உறுப்பினராக இருக்கின்றனர். பெண்களுக்கு ஓர் இடமும், தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பினருக்கு ஓர் இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநில ஊராட்சி சமிதியில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள்.

1) 16 உறுப்பினர்கள் உபதலைவர்கள் (Panches) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

2) உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்களும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் இணை உறுப்பினர்களாக உள்ளனர்,

3) துணைக்கோட்ட அதிகாரி அல்லது வட்டார வளர்ச்சி அதிகாரி பதவியின் அடிப்படையில் உறுப்பினர்,

4) கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இரண்டு உறுப்பினர்களும், விற்பனைக் குழுக்களிலிருந்து ஒரு பிரதிநிதியும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இதில் பெண்களுக்கு இரண்டு இடங்களும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு நான்கு இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர்த்து, பிற்பட்ட வகுப்பினருக்கும் ஓர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு வகையில் பிரதிநிதித்துவம் கொடுப்பது பஞ்சாப் மாநிலத்தின் சிறப்புத் தன்மையாகும்.

இராஜஸ்தான் மாநிலத்தின் ஊராட்சி சமிதியின் அமைப்பைப் பற்றிக் காண்போம். இது வேறுபட்ட பல்வேறு சக்திகளின் பிரதிநிதித்துவம் கொண்டதாக அமைந்துள்ளது. ஊராட்சி அரசு நிறுவனங்களின் மீதாக அதிகக் கவனம் செலுத்தக்கூடியது இராஜஸ்தான் மாநிலமாகும். இனி ஊராட்சி சமிதியின் அமைப்பு பற்றிக் காண்போம். அவை,

1. எல்லா ஊராட்சிகளின் தலைவர்கள் (Sarpanches.)

2. உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குரிமையுடன் கூடிய உறுப்பினர் பதவி கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் பதவிகளை அடையத் தகுதியில்லை,

3. துணைக்கோட்ட அதிகாரி இணை உறுப்பினர்.

4 தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள். கிராமங்களின் மக்கள் தொகைக்கேற்ப கிராம சபைகளின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

5. ஒவ்வொரு பிரதிநிதியும் கீழ்க்கண்ட சங்கங்களின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அ. கூட்டுறவுச் சங்கங்களின் பணிச்சங்கம்.

ஆ. கூட்டுறவுச் சங்கங்களின் பணிச்சங்கத்தைத் தவிர்த்து, மற்றைய கூட்டுறவு சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்

இ, விற்பனைக் கூட்டுறவு சங்கங்களிலிருந்து, இவர் இணை உறுப்பினராக இருக்கிறார்.

இதில் பெண்களுக்கு இரண்டு இடங்களும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு இரண்டு இடங்களும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் எங்ஙனம் ஊராட்சி ஒன்றியம் அமையப் பட்டுள்ளது என்பதைப் பார்ப்போம். ஒவ்வொரு ஊராட்சியின் தலைவரும், நகர்ப்பிரிவின் அதிகாரிகளல்லாத உறுப்பினரும் இதில் உறுப்பினர்கள். உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்களும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் இணை உறுப்பினராகச் செயல்படுகிறார் கள். இதில் பெண்களுக்கு மூன்று இடங்களும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு, ஒவ்வொரு வகுப்பிற்கும் மூன்று இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்கு மூன்று இடங்கள் ஒதுக்கி முக்கியத்துவம் அளித்துள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

உத்திரப்பிரதேசத்திலுள்ள ஷேத்ர சமிதியின் அமைப்பு, ஊராட்சி சமிதிக்கு இணையான அமைப்பாகும். அதில்,

1. கியான் (Gaon Sabhas) சபைகளின் முக்கியமானவர்கள் (Pradhans)

2. நகரப்பரப்பு மற்றும் விலக்களிக்கப்பட்ட பரப்புக் குழுக்களின் தலைவர்

3. கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் இரண்டிலிருந்து ஐந்து வரையிலும் உறுப்பினர்கள்

4. உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் வாக்குரிமையுடன் கூடிய உறுப்பினர்களாவர். இவர்கள் பிற பதவிகளை அடைய முடியாது.

இதில் பெண்களுக்கு 5 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு அதிக எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் வழங்கப் பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு 8 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர்த்து, திட்டமிடல், வளச்சித்துறை ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட 2 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கு வங்காள ஊராட்சி சமிதியில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் இடம்பெறுகிறார்கள். அவர்கள்,

1. வட்டாரத்திற்குள் அமைந்த கிராமங்களில் மக்கள் தொலகயின் படி மூன்று உறுப்பினர்களுக்கு மிகாமல் ஒவ்வொரு கிராமத்திலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

2. கிராம ஊராட்சிகளின் முக்கியஸ்தர்கள் (Pradhans) அனைவரும் உறுப்பினர்கள்.

3. பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்குரிமையுடன் கூடிய உறுப்பினர்கள், ஆனால் அவர்கள் எந்தப் பதவியையும் அடைய முடியாது

பெண்களுக்கு இரண்டு இடங்களும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு இரண்டு இடங்களும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

இவ்வாறு ஊராட்சியின் அரசு நிருவாகத்தில், இடைமட்ட அமைப்பு பல்வேறு பெயர்களோடு, வித்தியாசமான வகையில் அமைந்து, செயல்பட்டு வருகின்றது.

ஊராட்சி அரசு நிறுவனங்களின் பதவிக் காலமும் மாநிலங்களுக்கிடையே வித்தியாசமாகவே இருக்கின்றன, இதில் முதலில், கிராம ஊராட்சிகளின் பதவிக் காலங்கள் குறித்துக் காண்போம். ஐந்தாண்டுகள் பதவிக் காலமாக உள்ளதை மிகுதியான மாநிலங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. ஐந்து ஆண்டுகள் பதவிக் காலங்கள்கொண்ட மாநிலங்கள்: ஆந்திரப்பிரதேசம், குஜராத், ஹரியானா, ஹிமாசலப் பிரதேசம், ஜம்மு, காஷ்மீர், கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், இராஜஸ்தான், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம் ஆகியவைகளாகும். நான்கு ஆண்டுகள் பதவிக்காலம் உள்ள மாநிலங்கள் அஸ்ஸாம், கர்நாடகம், மேற்கு வங்காளம் ஆகியவைகளாகும். பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக, பீகார், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்கள் கொண்டிருக்கின்றன, கிராம ஊராட்சியில்உள்ள பதவிக்காலம், அதற்கு உயர்ந்த படிநிலைகளில் அமையப்பெற்றுள்ள அமைப்புகளைப்போல் பதவிக் காலம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் கிராம ஊராட்சியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளெனில், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட வளர்ச்சி மன்றம் ஆகியவற்றின் பதவிக்காலங்களும் இணையாக ஐந்து ஆண்டுகள்தான். இருப்பினும் சில மாநிலங்கள் இரு வகையான பதவிக்காலங்களை கொண்டுள்ளன. கிராம ஊராட்சிக்கு ஒரு மாதிரியாகவும், ஊராட்சி சமிதி மற்றும் ஜில்லா அமைப்பு ஆகியவற்றிற்கு மற்றொரு மாதிரியாகவும் உள்ளது. உதாரணமாக ஹரியானாவில் ஊராட்சிக்கு 5 ஆண்டுகளும், ஊராட்சி சமிதிக்கு மூன்று ஆண்டுகளும் வரையறுக்கப்பட்டுள்ளன இதே மாதிரியாக, மகாராஷ்டிராவில் கிராம ஊராட்சிகளுக்கு 5 ஆண்டுகளும், ஊராட்சி சமிதி, ஜில்லா அமைப்பிற்கு 6 ஆண்டுகளும் ஒரிஸ்ஸாவில் ஊராட்சிக்கு மூன்று ஆண்டுகளும், ஊராட்சி சமிதிக்கு 5 ஆண்டுகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சியில் உறுப்பினர்களின் எண்ணிக்கையும், ஊராட்சிகளின் பரப்பும் வித்தியாசமாக உள்ளன. இந்தியாவில் பல்வேறு மொழிகள் பேசப்படுவதோடு மட்டுமின்றி, பல்வேறுவகை நிலப்பரப்புக்களையும் கொண்டு இருப்பதால், நிலப்பரப்புக்கள் தனித்தனியான தன்மைகளைக் கொண்டு இருப்பதாலும், அவை வித்தியாசப்படுகின்றன, எனவே ஊராட்சிகளின் அதிகார வரையறை எல்லைப் பரப்பானது வித்தியாசமாக இருக்கின்றன. இது தவிர்த்து, ஒரு கிராமமே தனியாகப் ஊராட்சியாகப் பரிணமிக்கப்

பட்டுள்ளது. சில ஊராட்சிகள் பல்வேறு நெருங்கிய இணைந்த கிராமங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. எனவே இத் தன்மையாலும் வித்தியாசப்படுகிறது. இதில் ஊராட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை பல்வேறு மாநிலங்களில் உள்ளதைக் காண்போம்.

மாநிலம்	ஊராட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை
ஆந்திரா	7லிருந்து 19 வரை
அஸ்ஸாம்	15 வரை
பீகார்	9
குஜராத்	7லிருந்து 15 வரை
ஹரியானா	5லிருந்து 9 வரை
ஹிமாசலப்பிரதேசம்	7லிருந்து 11 வரை
ஜம்மு, காஷ்மீர்	7லிருந்து 11 வரை
கேரளா	8லிருந்து 15 வரை
கர்நாடகம்.	11லிருந்து 19 வரை
மத்தியப்பிரதேசம்	10லிருந்து 15 வரை
மகாராஷ்டிரா	7லிருந்து 15 வரை
ஒரிஸ்ஸா	11லிருந்து 25 வரை
பஞ்சாப்	5லிருந்து 11 வரை
இராஜஸ்தான்	5லிருந்து 20 வரை
தமிழ்நாடு	5லிருந்து 15 வரை
உத்திரப்பிரதேசம்	7லிருந்து 15வரை
மேற்கு வங்காளம்	7லிருந்து 15வரை

11

பிற மாநிலங்களில் மாவட்ட அமைப்பு

மாவட்ட அமைப்பு பற்றி இனி ஆராய்வோம். ஆந்திரப் பிரதேசத்தின் மாவட்ட அமைப்பு கீழ்க்கண்ட வகையில் அமைந்துள்ளது. ஊராட்சி சமிதிகளின் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவைஉறுப்பினர்கள் ஆகியோர்உள்ளனர். இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் இணை உறுப்பினர்களாக உள்ளனர். பெண்களுக்கு இரண்டு இடங்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஓர் இடமும், பழங்குடி வகுப்பினருக்கு ஓர் இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர்த்து, கிராமப்புற வளர்ச்சியில் ஆர்வமுள்ள இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மோகுமா (Mohkuma Parishad) அமைப்பு என்பது அஸ்ஸாமில் மாவட்ட அமைப்பிற்கு இணையான அமைப்பாகும். கிராம ஊராட்சிகளிலிருந்து ஓர் உறுப்பினர் கிராம மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப் படுகிறார். நகராட்சி, நகரக்குழு, ஆரம்பக் கல்வி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவற்றிலிருந்து ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர்கள் பாராளுமன்ற. சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக் கூடாது. பதவியின் அடிப்படையில் அரசாங்க அதிகாரிகள் உறுப்பினர்களாக நேரத்திற்கு நேரம் நியமிக்கப்படுகிறார்கள். தேயிலைத்

மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள்	கிராம ஊராட்சிகள்	கிராம ஊராட்சியில் உள்ளடக்கிய கிராமங்கள்	ஊராட்சியில் உள்ள கிராமங்கள்	மக்கள் தொகை (லட்சக் கணக்கில்)
1) ஆந்திரப்பிரதேசம்	16,045	1.82	29,131	368.60
2) அஸ்ஸாம்	663	9.76	19,733	129.11
3) பீகார்	11,445	7 00	77,949	507.19
4) குஜராத்	12,663	1.48	18,697	195.35
5) ஹரியானா	5,165	1.33	6,690	82.64
6) ஹிமாசலப்பிரதேசம்	2,033	8.32	16,916	32.18
7) ஜம்மு, காஷ்மீர்	1,482	5.01	7,424	37.92
8) கர்நாடகம்	8,162	3 46	29,117	225.00
9) கேரளா	974	1.37	1,334	188.99
10) மத்தியபிரதேசம்	15 274	4.70	71,787	331 04
11) மகாராஷ்டிரா	23,930	1.46	35,778	851 22
12) மணிப்பூர்	221	2 63	581	6 00
13) ஒரிஸ்ஸா	3,830	13.28	50,854	201 20
14) பஞ்சாப்	9,432	1 29	12,188	103.34
15) இராஜஸ்தான்	7,297	4.91	35,795	212 00
16) சிக்கிம்	215	1.88	405	1.90
17) தமிழ்நாடு	12,628	1.32	16,621	321.00
18) திரிபுரா	689	1.26	871	14.00
19) உத்திரப்பிரதேசம்	72,853	1.55	1,12,624	759.53
20) மேற்கு வங்காளம்	19,662	2.1	41,392	328.68
21) மேகலாயா }				
22) நாகலாந்து }				

அ. பாஸ்டர் மாவட்டத்தில் (Bastar Dist) 949 கிராமசபைகள் உள்ளன. இதில் 3757 கிராமங்கள் கொண்டதாக, 14.59 இலட்ச மக்கள் வாழ்கின்றனர்.

	மாநிலங்கள்	மாவட்டங்கள்	வட்டாரங்கள்	ஊராட்சி சமிதிகள்	ஜில்லா அமைப்புக்கள்	ஜில்லா அமைப்பில் அமைந்துள்ள ஊராட்சி சமிதிகள்
1)	ஆந்திரப்பிரதேசம்	21	324	324	21	15
2)	அஸ்ஸாம்	10	130	...	20 (அ)	...
3)	பீகார்	31	587	214	8	27
4)	குஜராத்	19	218	182	19	10
5)	ஹரியானா	11	87	87	...	...
6)	ஹிமாசலப்பிரதேசம்	12	69	69	12	6
7)	ஜம்மு, காஷ்மீர்	10	73	...	...	...
8)	கர்நாடகம்	19	175	175 (ஆ)	19	9
9)	கேரளா	11	144	...	...	...
10)	மத்தியப்பிரதேசம்	45	458	390	...	...
11)	மகாராஷ்டிரா	26	343	296	25	12
12)	மணிப்பூர்	6	14	...	...	...
13)	மேகலாயா	5	...	...	...	...
14)	நாகலாந்து	7	...	...	...	...
15)	ஒரிஸ்ஸா	13	314	314	...	...
16)	பஞ்சாப்	12	118	117	12	10
17)	இராஜஸ்தான்	26	232	232	26	9
18)	சிக்கிம்	4	...	...	...	...
19)	தமிழ்நாடு	15	374	374	24 (இ)	16
20)	திரிபுரா	3	17	...	...	...
21)	உத்திரப்பிரதேசம்	56	876	876	55	16
22)	மேற்கு வங்காளம்	15	325	325	15	22

தோட்டப் பகுதிகளிலிருந்தும் உறுப்பினர்களை அரசாங்கம் நியமனம் செய்கிறது. இதில் பெண்களுக்கு ஓர் இடமும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒவ்வொரு இடமுமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

பீகார் மாவட்ட அமைப்பில், ஊராட்சி சமிதியின் அனைத்து முக்கியஸ்தர்களும் இடம் பெறுகிறார்கள். உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் இணை உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நகராட்சிகள் மற்றும் விலக்களிக்கப்பட்ட பகுதி குழுக்களின் உறுப்பினர்களடங்கிய வாக்காளர்களால் மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேல்நிருவாகக் குழுக்களின் உறுப்பினர்களால் இரண்டு பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இரண்டு இடங்கள் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒவ்வொரு இடமாக இரண்டு இடங்களும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

குஜராத்தில் மாவட்ட ஊராட்சி என்பது மாவட்ட அமைப்பிற்குச் சமமான அமைப்பாகும்: வட்ட ஊராட்சியின் தலைவர்கள், தலைவர்கள் இல்லையேல் உதவித்தலைவர்கள். வட்ட ஊராட்சியின் தகுதி பெற்ற வாக்காளர்களால், அவர்களில் 31 லிருந்து 51 உறுப்பினர்கள் வரையிலும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சிகளின் தலைவர்கள் போன்றோர் இணை உறுப்பினர்களாக உள்ளனர். மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம், மாவட்டக் கூட்டுறவு வாங்கல் மற்றும் விற்பனை ஒன்றியம் ஆகியவற்றிருந்து ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுகிறார். பெண்களுக்கு மூன்றிலிருந்து ஐந்து இடங்கள் வரையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பினர்களுக்கு அவர்களின் மக்கள் தொகைக்கேற்ப விகிதாச்சார பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஹிமாசலப் பிரதேச மாவட்ட அமைப்பில், ஒவ்வொரு ஊராட்சி சமிதியிலிருந்து ஒரு பிரதிநிதியும், ஒவ்வொரு ஊராட்சி சமிதியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களைக்கொண்டும், துணை ஆணையாளர்களைக் கொண்டும் உள்ளது. இதில் இரண்டு

இடங்கள் பெண்களுக்கும், 2 இடங்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கர்நாடக மாநிலத்தில், துணை ஆணையாளர் தலைவராக மாவட்ட அமைப்பில் விளங்குகிறார். உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் வாக்குரிமையுடன் கூடிய உறுப்பினர்களாவர். வட்ட வாரியங்களின் தலைவர்களும், 15 பேர்களுக்கு மிகாமல் அரசாங்கத்தால் நியமனம் செய்யும் அதிகாரிகள் உள்ளனர். பெண்களுக்கு ஓர் இடமும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர் களுக்கு ஓர் இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மகாராஷ்டிராவில், மாவட்ட அமைப்பில் மாவட்டத் தேர்தல் பிரிவுகளிலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 40 முதல் 60 உறுப்பினர்களையும். ஊராட்சி சமிதியின் தலைவர்கள் பதவியின் அடிப்படையில் உறுப்பினர்களாகவும், ஐந்து கூட்டுக் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் இணை உறுப்பினர்களாகவும் உள்ளனர். கடன் வசதி செய்தல், நில வளர்ச்சி, சந்தை. தொழில் மற்றும் கூட்டுறவுப் பயிற்சி, மற்றும் கல்வி ஆகிய ஐந்து கூட்டுறவுகளிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பெண்களுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர்களுக்கு அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்பப் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகின்றன.

பஞ்சாப் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள விதமானது ஊராட்சி மற்றும் மாவட்ட அளவில் ஊராட்சி சமிதியில் கூட்டு நியமனம் செய்யப்பட்டவர்களில் 3 உறுப்பினர்கள், எல்லா ஊராட்சி சமிதியின் தலைவர்களும், துணைஆணையாளர் மற்றும் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் போன்றோர் இணை உறுப்பினர்களாகச் செயலாற்றுகின்றனர். பெண்களுக்கு நான்கு இடங்களும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு ஊராட்சி சமிதிகளிலிருந்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஓர் உறுப்பினர் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இரண்டு இடங்கள் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இராஜஸ்தான் மாநில மாவட்ட அமைப்பு கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டதாக உள்ளது. அவர்கள்,

1. எல்லா ஊராட்சி சமிதிகளின் முக்கியமானவர்கள் (Pradhans)

2 உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்குரிமையுடன் மட்டுமல்ல, பதவிகள் வகிக்கவும் தகுதி பெற்றவர்கள்

3. மாவட்ட வளர்ச்சி அதிகாரி இணை உறுப்பினராவார்.

4. மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் இணை உறுப்பினர்.

5. மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவர் இணை உறுப்பினர்

6. ஜில்லா அமைப்பில் உறுப்பினர் இல்லாத முக்கியஸ்தர் கூடுதல் உறுப்பினராவார்.

இரண்டு இடங்கள் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒவ்வொரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பது தமிழ்நாட்டில் மாவட்ட அமைப்பிற்கு ஒத்த அமைப்பாகும், மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட வளர்ச்சி மன்றத் தலைவராவார், உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் வாக்குரிமையுடன் கூடிய உறுப்பினர்களாவர். ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களும், நகராட்சி மன்றத்தின் தலைவர்களும் இதில் உறுப்பினர்கள். திட்டமிடல் மற்றும் வளர்ச்சி ஆகிய துறைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அரசாங்கம் நியமனம் செய்கின்றது.

உத்திரப்பிரதேச மாவட்ட அமைப்பில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள். அவர்கள்,

1. ஷேத்திர அமைப்பின் (kshetra Samitis) முக்கியஸ்தர்கள்

2. அரசாங்கம் குறிப்பிட்டுள்ளபடி, ஷேத்திர அமைப்பின் உறுப்பினர்கள் தங்களுக்குள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்,

3. நகராட்சி வாரியங்களின் தலைவர்கள்

4. கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்டக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர்கள் அல்லது நிருவாகிகள்

5. அ) மாவட்டக் கூட்டுறவுக் கூட்டின் (Federation) இயக்குநர் வாரிய உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆ) கூட்டுறவு சங்கங்களிலிருந்து ஒரு பிரதிநிதி

இ) கரும்பு சாகுபடி இணையத்திலிருந்து ஒரு பிரதிநிதி

6. சமூக கலாச்சார, கல்விச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களில் மூன்று பேர்களை மாநில அரசாங்கம் தேர்ந்தெடுக்கின்றது.

7. உள்ளூர் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும், வாக்குரிமை கொண்ட உறுப்பினர்களாவர். ஆனால் அவர்கள் வேறு எந்தப் பதவி வகிக்கவும் தகுதி கிடையாது.

பெண்களுக்கு மூன்றிலிருந்து ஐந்து இடங்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு மூன்றிலிருந்து 10 வரையிலும் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்கு வங்காளத்தில், மாவட்டத்திலுள்ள ஊராட்சி சமிதியின் (Sabhapattis) ஒவ்வொரு வட்டாரத்திலும் மாவட்டத்திற்குள் இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்குரிமை கொண்ட உறுப்பினர்கள் ஆவர். ஆனால் இவர்கள் பதவி வகிக்கத் தகுதி பெற்றவர்களல்லர். பெண்களுக்கு இரண்டு இடங்களும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பினர்களுக்கு இரண்டு இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன,

12

ஊராட்சித் தேர்தல் சீர்திருத்தங்கள்

தமிழகத்தில் கிராமப்புற அரசாங்கங்கள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ளதென்பதை அறிவோம். தமிழர்களால் உணர்ந்து அனுபவிக்கப்பட்டு வந்த முறைதான் இந்த கிராமப்புற அரசாங்கங்களாகும். இந்தப்பகுதி தேர்தல் சீர்திருத்தங்களை மட்டும் விளக்க முயற்சிக்கிறது. அதுபற்றிக் காண்போம். ஊராட்சிகளில் நடைபெறும் தேர்தல் முறை குடவோலை சீட்டு முறை என்று கூறலாம். இதன்படி தகுதியுள்ள உறுப்பினர்கள் அனைவரது பெயரையும் ஓலைகளில் எழுதி, மண் பானையில் இட்டு, குலுக்கி, அதில் தேவைப்படுகின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்கேற்ப, ஓலைகளை எடுத்து, தேர்வு செய்வதாகும். குடத்திலிருந்து ஓலைகளை எடுக்க கள்ளங்கபடமில்லாத சிறுவர்களைப் பயன்படுத்தியுள்ளனர். இந்த முறையானது சீரிய முறையில் சோழர் காலத்திலேயே கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த குடவோலைச் சீட்டு முறை படிப்படியாக மாறி, இன்றைய தேர்தல் முறையாக வளர்ந்துள்ளது. ஊராட்சிகளில் பெரும்பான்மையாக வாக்குச் சீட்டு முறை பயன்படுத்தப்பட்டு வந்தாலுமே, குடவோலைச் சீட்டு முறையும் சில இடங்களில் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றது.

இன்றைய மக்களாட்சியை ஏற்படுத்த, செயல்படுத்த தேர்தல்கள் அடிப்படையாக உள்ளன. தேர்தல்களின் மூலம்தான் மக்கள் ஆட்சியை அமைக்கவும், செயல்படுத்தவும் முடியும் என்பதை அறிவோம். கிரேக்க நகர அரசுகளில் மக்கள் பிரதிநிதி

களைத் தேர்ந்தெடுத்த முறை மிகவும் விநோதமான ஒன்றாகும். ஊர் மக்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடி, தங்களது ஓசையினால் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள் என்கின்றபோது வேடிக்கையாகத்தான் உள்ளது. இதனை நாம் ஓசைத்தேர்வு (acclamation) என்று பெயரிடுவோம். தேர்தலில் நிற்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவை, கைதட்டல்களின் ஒலி, மக்களிடும் ஓசை ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. எந்த உறுப்பினருக்கு அதிகமான ஓசையும், கைதட்டல் அதிர்வும் இருக்கின்றதோ அவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மக்களாட்சியின் முக்கியம் பெரும்பான்மை ஆதரவு, இந்தப் பெரும்பான்மை ஆதரவைத் தெரிந்து கொள்வதற்கு 'ஓசையை' ஒரு முறையாக அல்லது வழியாகக் கொண்டிருந்தனர் என்பதை அறியும் பொழுது கிரேக்கர்களின் மக்களாட்சித் தன்மை நமக்கு எளிதாக விளங்குகிறது. இன்றைய சூழ்நிலையில் மக்களாட்சியே இரண்டு விதங்களாக உள்ளன. ஒன்று நேரடி மக்களாட்சி, மற்றொன்று மறைமுக மக்களாட்சி. நேரடி மக்களாட்சி முறையில் மக்கள் அனைவரும் அரசாங்கச் செயல்களில் நேரடியாகப் பங்கு பெறுவதற்கு வழி செய்யப்பட்டு உள்ளது. தீர்மானங்கள் அல்லது முடிவுகள் செய்வது, அவற்றிற்குச் செயலாக்கம் கொடுப்பது ஆகிய அனைவற்றிலும் மக்களது நேரடிப் பங்கேற்பு நடைபெறுகின்றன. மறைமுக மக்களாட்சி என்பதில், மக்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மட்டுமே முடிவுகள் எடுக்கும் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். மக்கள் நேரடியாகப் பங்கேற்பதில்லை. பூர்வாங்க முயற்சித்தல் (Initiative) மக்கள் வாக்கெடுப்பு, (Referendum) பிரதிநிதிகளைத் திருப்ப அழைத்தல் (Recall) ஆகிய மூன்றும் நேரடி மக்களாட்சியின் வழிமுறைகளாக இருக்கின்றன. இம்மூன்று முறைகளைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம். மக்கள் விரும்புகின்ற எண்ணங்களைச் செயல் படுத்துவதுதான் அரசாங்கத்தின் கடமையாகும். மக்களது எண்ணங்கள்தான் அரசாங்கக் கொள்கைகள். ஆகவே மக்கள் விரும்புகின்ற செயல்களை, அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக் கொள்வது பூர்வாங்க முயற்சித்தல் என்று பெயர். மக்கள் தாங்களாகவே இந்த முடிவுகளை எடுப்பது தான் இதன் முக்கிய அம்சம். இரண்டாவதாக, மக்கள் எண்ணங்கள், எல்லோரிடமும் பிரதிபலிக்கின்றதா, பெரும்பான்மையான மக்கள் அந்த எண்ணங்களை ஏற்றுக் கொள்கின்றனரா

என்பதை முடிவு செய்வதே மக்கள் வாக்கெடுப்பு (Referendum) ஆகும். பெரும்பான்மையான ஆதரவு அல்லது பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையேல், முடிவுகள் எடுக்கப்படு வதில்லை. பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கிணங்க முடிவுகள் மாற்றத்திற்கு உள்ளாவதுண்டு. மக்களால் தேர்ந்-தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செம்மையாகச் செயல்படவில்லையேல், பிரதிநிதிகள் தவறுகள் பல செய்கின்றனர் என மக்கள் உணர் கின்றபொழுது, அப்பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ள மக்களுக்கு உரிமை உண்டு. இது பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளுதல் என்று சொல்லப்படுகின்றது. இந்த மூன்று முறைகளும் சிறப்பானவைகளாகக் கருதப்படுவதால், நடை முறையிலும் இருந்து வருகின்றன. இம்முறைகளைச் சிறிய அளவு கொண்ட நாடுகளில் நடைமுறைக்குக் கொண்டு வரலாம், சாத்தியப்படும். இந்தியா போன்ற பரந்த, விரிந்த நாடுகளில் இம் முறைகளைச் செயல்படுத்துவது எளிதான காரியமல்ல. இம்முறை களின் மூலம் இந்தியாவில் ஒருமுடிவும் எடுக்க முடியாது என் பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நடைபெறுகின்ற இடைத்தேர்தல்களே பெரும்பரபரப்பை உண்டு பண்ணுகின்றன என்பதை அறிவோம். ஆகவே பெரிய நாடுகளில் இம்முறைகள் சாத்தியப்படக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை. பெரிய நாடுகளிம் மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, பிரதிநிதிகளின் மூலமாகத்தான் முடிவுகள் எடுக்க முடியும் என்பதோடு, அதுதான் நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய தென்பதையும் தெரிந்து கொள்வோம். இனி, உள்ளாட்சி முறை பற்றிக் காண்போம்.

உள்ளாட்சி அரசாங்கங்களில் அதிலும் கிராமப்புற மன்றங் களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது முக்கியமான ஒன்று. தேர்தல்கள் இந்தியாவிற்குப் புதியதல்ல. அதிலும் தமிழ்நாட்டிற்குப் புதியதே இல்லை. தமிழ்நாட்டில் தேர்தல்கள் எல்லாக் காலங் களிலும் நடைபெற்று வந்துள்ள ஒரு நடைமுறைச் செயல் ஆகும். சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான அகநானூறு தேர்தல் முறை யைச் சிறப்பாக வருணிக்கிறது.

கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டழிக்கும் ஆவண மாக்களின்

என்று பாடல் பகர்கின்றது. இதில் தேர்தல் முறை விளக்கப் பட்டுள்ளது. மண்பானையானது கயிற்றால் சுற்றப்பட்டு, முத்திரை யிடப்பட்டு, அம்முத்திரையைச் சரிபார்த்து நீக்கிவிட்டு, வாக்குகளை எண்ணி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர் என்று கூறப் பட்டுள்ளது. இது குடவோலைச் சீட்டு முறைதான் என்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் குறித்துத் தெளிவாக விளக்கப்படவில் லை. தகுதிவாய்ந்த உறுப்பினர்கள் அனைவரது பெயரையும் எழுதி, மண்பாண்டத்திலிட்டு, பாதுகாத்துப் பின்னர், தேவைப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஓலைகள் எடுக்கப் பட்டனவா? என்பது ஒரு கேள்வி. அடுத்து, தகுதிவாய்ந்த உறுப் பினர்கள் அனைவரும் ஓலைகளில் விரும்பிய நபர்களின் பெயர் எழுதி, அதிகபட்சமாக விரும்பிய நபர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனரா என்பதும் அடுத்த கேள்வி. தேர்தல் நடைபெற்ற முறையில் வித்தியாசம் இருக்கலாமெனினும், தேர்தல் நடை பெற்றுள்ளது என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் சங்க இலக்கியத்தில் ஏராளமாக உள்ளன. குடவோலைச் சீட்டு முறை சங்க இலக்கியத் திலிருந்தே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இம்முறை பல்லவர்கள் சாளுக்கியர்கள் ஆகியோர் காலங்களிலும் பின்பற்றப் பட்டு வந்துள்ளது என்பதை இரண்டு கல்வெட்டுக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. சோழர் காலத்தில் சீராகச் செம்மைப்படுத்தப் பட்டுள்ளது இம்முறை என்பதை உத்தரமள்ளூர் அல்லது உத்தர மேரூர் கல்வெட்டு நமக்கு விளக்குகிறது. உத்தரமள்ளூர் கல் வெட்டின் காலம் கி.பி. 920-921 ஆகும். இது முதலாம் பராந்தக மன்னனின் 14-ஆவது ஆண்டில் செதுக்கப்பட்டுள்ளதென ஆராய்ச்சி யாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். உத்தரமள்ளூர் என்ற கிராமம் செங்கல்பட்டு மாவட்டத்தில்உள்ள மதுராந்தகத்திலிருந்து 10½மைல் வடமேற்கில் அமைந்துள்ளது. இக்கல்வெட்டுக்களில் கிராமப் பிரிவுகள், வாக்காளர்கள், வேட்பாளர்கள் ஆகியோர் தகுதிகள், தேர்தல் முறை போன்றவை நன்றாக விளக்கப்பட்டுள்ளன. இரண்டு கல்வெட்டுக்களின் பொருள் கீழே தரப்பட்டுள்ளது. அதுபற்றிக் காண்போம்:

பரகேசரிவர்ம அரசனின் 14 ஆண்டு ஆட்சியில், 16 ஆம் நாள் உத்தரமேரூர் சதுர்வேதி மங்கலத்தில் நடைபெற்ற தேர்தல் முறையைப்பற்றி முதலிரண்டு வரிகள் குறிப்பிடுகின்றன. தேர்தலின் போது அரசப்பிரதிநிதி ஒருவர் கூட்டத்தைக் கூட்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமமும் 30 வார்டுகள் கொண்டதாகப் பிரிக்கப் பட்டு இருக்கவேண்டும். ஒவ்வொரு வார்டிலுமுள்ள மக்கள் ஓரிடத் தில் குழுமி, குடவோலைகளைத் தயார் செய்ய வேண்டும். குட வோலையில் பெயர் பொறிக்க வேண்டுமாயின், கீழ்க்கண்ட தகுதி கள் பெற்றிருக்க வேண்டும். அவை:

1. கால்வேலி சொந்த நிலம் கொண்டு, வரி செலுத்தக்கூடிய வராக இருக்கவேண்டும்.

2. சொந்த இடத்தில் வீடுகட்டி, வசிப்பவராக இருக்கவேண்டும்.

3. 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் 70 வயதிற்கு மிகாதவராகவும் இருக்கவேண்டும்.

4. கற்றுத் தேர்ந்தவராக, கற்றுத்தரக்கூடியவராக இருக்க வேண்டும்.

இவற்றில் ½ வேலி சொந்த நிலம் கொண்டவர்களையும் ஓலையில் பெயர் பொறிக்கலாம். ஆனால் அவர்கள் ஒரு வேதத் தில் கற்றுத்தேர்ந்தவர்களாகவும், அவற்றைப் பிறருக்கு கற்றுத் தரும் தகுதி கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்தகுதி கள் பெற்று இருப்பவர்கள் அனைவரும் தகுதிபெற்றவர்களாகி விடமாட்டார்கள். அவர்கள் மேலும் சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் உண்மையான வகையில் சம்பாதிப்பவர்களாக வும், மனச்சுத்தம் கொண்டவர்களாகவும், கடைசி மூன்று வருடங் களாக எந்தக் குழுவிலும் உறுப்பினர்களாக இல்லாதவர்களா கவும் இருக்கவேண்டும்.

இது தவிர்த்து, குழுக்களில் இருந்தவர்கள், தங்களது கணக்குகளை ஒப்படைக்காமல் இருந்தாலும், கீழ்க்குறிப்பிட்ட தகுதிகளில் அடங்கப் பெற்றாலும், குடவோலைச் சீட்டில் பெயர் எழுதப்படமாட்டாது.

1. சின்னம்மா, பெரியம்மா ஆகியோர்களின் மகன்கள்
2. அத்தை, மாமா ஆகியோர்களின் மகன்கள்
3. அம்மாவின் மாற்றாந்தாயின் சகோதரன்
4. அப்பாவின் மாற்றாந்தாயின் சகோதரன்

5. மாற்றாந்தாயின் சகோதரன்

6. அவனுடைய மாமா

7. மனைவியோடு கூடப்பிறந்த சகோதரன்

8. தமக்கையின் கணவர்

9. தமக்கையின் மகன்கள்

10. அவனுடைய மருமகன்

11. அவனுடைய அப்பா

12. அவனுடைய மகன்

இவ்வாறு மேற்குறிப்பிட்ட அவனுடைய உறவினர்கள் பெயர்கள் குடவோலைச் சீட்டில் எழுதப்படமாட்டாது. குடத்திலும் இடவும் பெற மாட்டாது, ஒரு குடும்பத்தில் ஒருவர்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்பதற்காக.

சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள், சமூகத்தில் சேர்க்கப்படவில்லையேல் அவர்களுக்கும் குடவோலையில் பெயர் எழுதப்படமாட்டாது.

பிறருடைய சொத்துக்களைக் களவாடியவர்களின் பெயர்கள் குடவோலையில் எழுதப்படமாட்டாது.

பாவச் செயல்கள் செய்தவர்கள் பெயர்கள், மற்றும் பிறர்.

இவ்வாறு முன்னர் கூறப்பட்ட அனைவரையும் விலக்கி, மற்றவர்களின் பெயர்கள் எழுதி, குடத்தில் இடப்படும். உத்தரமேரூரில் உள்ள 12 தெருக்களுக்கும் மொத்தமாக, 30 வார்டுகளுக்கும் தனித்தனியான வகையில் ஓலைகள் கட்டப்பட வேண்டும். இங்ஙனம் கட்டப்பட்ட 30 கட்டுக்களும் குடத்தில் இட வேண்டும். குடத்திலிருந்து ஓலைகள் எடுத்துத் தேர்வு செய்கின்ற பொழுது, பெரியவர்களையும், சிறியவர்களையும் கூட்ட வேண்டும்.

கோவில் குருக்கள் அந்த ஊரில் இருந்தால், அவர்கள் அனைவரையும் அழைக்க வேண்டும். அவர்களுக்கு என்ன வேலை இருந்தாலும். சரி, இதற்குத் தவறாது வருகை தரவேண்டும். கோவில் குருக்களிடையே மூத்தோர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, தேர்தலை நடத்தச் சொல்ல வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்தவர், குடத்தைத் தூக்கி அனைவரும் பார்க்கும் வண்ணம் காட்டவேண்டும். குடத்திலிருந்து ஒரு கட்டை எடுக்குமாறு அருகிலுள்ள ஒரு சிறுவனிடம் கூறவேண்டும். குடத்தில் என்ன இருக்கிறது, ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாத ஒரு சிறுவனைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒவ்வொரு கட்டும் ஒவ்வொரு வார்டைப் பிரதிபலிக்க வேண்டும். அக்கட்டை மற்றொரு குடத்திற்கு மாற்றி, நன்றாகக் கட்டைக் கலக்கிக் குலுக்கவேண்டும். அக்குடத்திலிருந்து ஓர் ஓலையை அந்தச் சிறுவனை எடுக்கும்படிக் கூற வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்ட ஓலையைச் சிறுவன் ஒரு நடுநிலையாளரிடம் கொடுக்கவேண்டும். அந்நடுநிலையாளர் அவ்வோலையைத் தனது ஐந்து விரல்களும் வெளிப்படையாகத் தெரிகின்ற வகையில் பெற்றுக்கொண்டு, அவ்வோலையில் உள்ள பெயரைப் படிக்க வேண்டும். அப்பெயரை மற்ற கோவில் குருக்களும் சேர்ந்து படிக்க வேண்டும். அவ்வாறு படித்து முடிக்கப்பட்டதும், அவ்வோலையிலுள்ளவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக முடிவு செய்யப் படுகின்றது. இவ்வாறாக 30 வார்டுகளுக்கும் ஓலைகள் எடுக்க வேண்டும்.

கிராம ஊராட்சிகள் செயல்பட்ட விதத்தைக் காண்போம். கிராமங்களைச் சிறிய குடியரசுகள் என ஆங்கிலேயர்கள் விவரித்ததிலிருந்து கிராமங்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டன என்பதை அறியலாம். சென்னை கிராம ஊராட்சிகளின் 1920ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ், சென்னை மாகாணத்தில் ஊராட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. ஊராட்சிகளுக்கு முக்கியத்துவமும், முன்னுரிமையையும் 1909ஆம் ஆண்டு அதிகாரப்பரவல் அரசுரிமை ஆணையம் வழங்கியது. ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டுத்தான் இருந்ததாயினும், அதனைப் பயன்படுத்திச் சிறப்பாக்கும் நிலையில் அப்போது மக்கள் இல்லை. ஒன்றிய ஊராட்சிகளைப் பொறுத்த அளவில், வட்ட வாரியத்தின் தலைவர்கள் ஊராட்சி உறுப்பினர்களாக

நியமனம் செய்யும் அதிகாரம் பெற்று இருந்தனர். முதன்முறையாக 1912ஆம் ஆண்டு ஊராட்சி உறுப்பினர்களை மக்கள் தேர்ந் தெடுத்தனர். பின்னர் இம்முறை நடைமுறைக்கு வரலாயிற்று. சென்னையில் 1915ஆம் ஆண்டு சோதனை அடிப்படையில் முறைமையில்லா ஊராட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. இம்முறையை ஒவ்வொரு வருவாய் கிராமமும் கடைப்பிடித்தது. இவ்ஊராட்சியின் உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனர். மக்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடி, தேர்ந்தெடுக்க விரும்பும் உறுப்பினர்களுக்கு ஆதரவாக தங்களது கைகளை உயர்த்தி, பெரும்பான்மையான கைகளுக்கேற்ப உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்முறை பின்னர் சட்டத்துவ அந்தஸ்தைப் பெற்று, பின்பற்றப்பட்டது.

தமிழகத்தில் ஊராட்சிகளின் தன்மைக்கேற்ப, தேர்தல் முறையும் வித்தியாசமாக நடைபெற்று வந்துள்ளது. நகர ஊராட்சி கள் மற்றும் கிராம ஊராட்சிகள் எனஇருவகைஊராட்சிகள் உள்ளன. இந்த இருவகை ஊராட்சிகளின் தேர்தல் முறை வித்தியாசமாக உள்ளது. நகர ஊராட்சிகளின் தேர்தல் நமது பொதுத்தேர்தல் மாதிரியாக இரகசிய வாக்குச் சீட்டு மூலம் நடைபெறுகின்றது எனவே தேர்தல் நடத்துவற்காக, வாக்காளர் பட்டியல் தயாரிக்கப் பட்டு, வெளியிடப்படுகின்றது. தேர்தல் முறைமைகள் அனைத்தும் எல்லாத் தேர்தல்களைப் போல் பொதுவாகவே நடைபெறுகின்றன ஆனால் தேர்தல் முறை வித்தியாசமானதாக உள்ளது. வாக்குகளை இடுவது, வாக்குகளைப் பதிவு செய்யும் முறை ஆகியவை நேரத்திற்கு நேரமாக மாறிக்கொண்டே வந்துள்ளன. 1950ஆம் ஆண்டில், தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகத் தேர்தல் வாக்குப்பெட்டிகள் வைக்கப் பட்டன. எனவே ஒவ்வொரு தேர்தல் சாவடியிலும், அனைத்து வேட்பாளர்களின் வாக்குப் பெட்டிகளும் வைக்கப்பட்டன இதன்மூலம் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு தனித்தேர்தல் பெட்டி ஒதுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பெட்டியிலும் வேட்பாளர்களுக்குச் சின்னமும், வரிசை எண்ணும் இடப்பட்டன. வாக்காளர்களுக்கு அளிக்கப்படும் வாக்குச் சீட்டுக்களிலும் வரிசை எண்கள் இடம்பெற்று இருந்ததோடு, எதிர்ச்சீட்டு (counter foil)

முறையும் அமையப்பெற்று இருந்தது. எனவே வாக்காளர்களது வாக்குகளை மற்றவர்கள் போடமுடியாதபடி தடுக்கப்பட்டு இருந்தது. வாக்காளர்கள் ஒருவருக்குத்தான் வாக்களிக்கும்படி செய்யப்பட்டு இருந்தது. வாக்காளர்கள் வாக்களிக்க விரும்பவில்லையேல், தங்களது வாக்குச்சீட்டைத் திருப்பித்தரவும் வசதி செய்யப்பட்டு இருந்தது. எனவே வாக்காளர்கள் விரும்புகின்ற வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முடிந்தது. வாக்காளர்கள் அனைத்து வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்குப் போட முடியாதபடியும் தடுக்கப்பட்டு இருந்தது. வாக்களித்த பின்னர், பெரும்பான்மையான வாக்குப் பெற்றவர், தேர்ந்தெடுக்கப் பட்டவராக அறிவிக்கப்பட்டார். பொதுத்தேர்தல் முறையிலும்கூட, முதன்முதலாக கலர் பெட்டிகள் முறைமைதான் நடைமுறையில் இருந்தது. பின்னர்தான் வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் ஒதுக்கப் பட்டு இன்றையமாதிரித் தேர்தல் நடைபெற்றது.

கிராம ஊராட்சித் தேர்தல் மிகவும் எளிதாக நடைபெறு கின்றது. தேர்தலுக்கு முன்னதாகத் தேர்தல் அறிக்கை ஒன்று வெளியிடப்படுகிறது. இந்த அறிக்கையில் தேர்தல் நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் அனைவரும் அறிக்கையில் குறிப்பிட்ட தேதி, நேரம் மற்றும் அந்த இடத்தில் கூடுகின்றனர். அக்கூட்டத்தில் தேர்தலுக்கு நிற்கக்கூடியவர்களைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு ஆதரவு உள்ளதா என்பதை முடிவு செய் கின்றனர். மிகுதியான ஆதரவு உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக அறிவிக்கப்படுகின்றனர். மக்கள் தங்களது கைகளை உயர்த்தி, வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும். இம்முறையினால் தேர்தல் நடத்துவது எளிது. மக்களுக்கும் வசதியாக இருப்பதோடு, நேரடியாகவே தேர்தல் முறையில் ஈடுபட வழியுண்டு. இது நேரடியாகச் செயல்படக்கூடிய நேரடி மக்களாட்சி முறையில் ஒன்றாகும். இதிலும் பல இடர்ப்பாடுகள் உள்ளன. மக்கள் தேர்தல் முறைக்கு மதிப்பளித்துப் பின்பற்றினால் எத்தேர்தல் முறையும் சிறந்த ஒன்றாகவே இருக்கும். ஆனால் மக்கள் தனிப்பட்ட முறையில் சில நன்மைகளை, ஆதரவுகளைக் குறுக்குவழியே பெறுவதற்கு முயற்சி செய்வதால், தவறுகளைத் தடுக்கின்ற வகையில் தேர்தல்முறையை அமைக்க வேண்டியுள்ளது.

கூட்டத்தில் கூடியுள்ளவர்கள் ஒருமுறை, ஒரு வேட்பாளருக்கு மட்டும்தான் ஆதரவு தெரிவிக்கின்றார்களா? இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனரா என்பதைத் தெரிந்து கொள்வது இம்முறையில் கடினமான ஒன்று. இரண்டாவதாக, தேர்தல் அதிகாரிகள், ஆதரவுகளைப் பாரபட்சமின்றி எண்ணுகின்றார்களா? அவர்கள் எந்த வேட்பாளருக்காவது சாதகமாகச் செல்கின்றனரா என்பதைத் தெரிந்து கொள்வதும் சிக்கல்களில் ஒன்றாக உள்ளது. மூன்றாவதாக, தேர்தல் நடைபெறுவதற்குக் குறைந்தது ஒரு நாளாவது ஆகும். எனவே அன்று முழுவதும் மக்கள் ஒரே இடத்தில் கூடி இருப்பதும் கடினமான ஒன்றாகும். இதற்கு மேலாக, ஓரிடத்தில் கூடிச்செயல்படுகின்றபொழுது, அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால், அதனைச் தவிர்க்கவோ, தடுத்து நிறுத்தவோ முடியாத சூழ்நிலை கூடி உருவாகிவிட வாய்ப்புண்டு. எனவே இம்முறை பல்வேறு தவறுகள் நிகழ்வதற்குக் காரணமாக இருக்கவே, நகர ஊராட்சியில் செயல்பட்டு வந்த தேர்தல் முறையைச் சில திருத்தங்களுடன் கிராம ஊராட்சியில் புகுத்தினர். ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒரு பெட்டி என்ற முறையை மாற்றி, அனைத்து வேட்பாளர்களுக்கும் பொதுவாக ஒரு பெட்டி மட்டுமே வைக்கப்பட்டது. வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் ஒதுக்கப்பட்டன. வாக்காளர்கள் விரும்புகின்ற வேட்பாளர்களின் சின்னங்களில் குறியிட்டு, தங்களது வாக்குகளைப் பதிவு செய்யலாம். இந்த மாற்றங்கள் அனைத்தும் செய்யப்பட்டபின்னர், கிராம ஊராட்சி மற்றும் நகர ஊராட்சித் தேர்தல் முறைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாக அமைந்தன. இருப்பினும் தேர்தல் அறிக்கை வெளியிடுவது, வேட்பு மனு தாக்கல் செய்வது ஆகியவற்றில் சில வித்தியாசங்கள் உள்ளன. இவ்வாறாகத் தேர்தல் முறையில் ஓர் ஒற்றுமை, ஒருமிப்புத்தன்மை வளரலாயிற்று.

ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் தான் பல்வித மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று நாம் எண்ணவேண்டாம் ஏனெனில் ஊராட்சித்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதிலும், பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. இம்முறை நேரத்திற்கு நேரம் சூழ்நிலைக்கேற்ப மாறியுள்ளது. 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதிக்கு முன்னர், ஊராட்சித் தலைவர், ஊராட்சி

உறுப்பினர்களிடையே, உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஊராட்சி உறுப்பினர்களாக இருக்கவில்லையேல், ஊராட்சித் தலைவராகவும் வரமுடியாதபடி தடுக்கப்பட்டு இருந்தது. 1950 ஆம் ஆண்டு ஊராட்சிகளின் சட்டத்தில் இது மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டு இருந்தது. பின்னர் இது முழுமையாக மாற்றப் பட்டது. ஊராட்சி உறுப்பினராக இருக்கக்கூடியவர் ஊராட்சித் தலைவராக வரமுடியாதபடி கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஊராட்சித்தலைவர் ஊராட்சியின் மொத்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் படியாக மாற்றம் செய்யப்பட்டது. எனவே ஊராட்சிக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றபொழுது, ஊராட்சித்தலைவர் தேர்தலும் நடைபெறலாயிற்று. வாக்காளர் கள் ஒரே நேரத்தில் ஊராட்சி உறுப்பினர்களையும், ஊராட்சித் தலைவரையும் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சித் தலைவரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது குறித்த நன்மைகளையும், மறை முகமாக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால் உள்ள நன்மைகளையும் குறித்துத் தமிழக சட்டமன்றத்தில் அடிக்கடி விவாதம் நடைபெற்றுள்ளது. சூழ்நிலைக்கேற்ப நேரடித்தேர்தல் முறையை அங்கீகரித்துப் பின்னர் அதனையும் மாற்றம் செய்தனர். இதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தலைவரைத் தேர்ந் தெடுப்பதால் உள்ள நன்மைகள் மற்றும் அவசியம் குறித்து முதலில் காண்போம். மறைமுகமாக ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய காரணங்கள் பின்வருமாறு:

1. ஊராட்சி ஒட்டுமொத்தமாக, கூட்டாக இயங்கக்கூடிய அமைப்பு. இதில் ஊராட்சித்தலைவர், மற்ற உறுப்பினர் களைப் போல் ஓர் உறுப்பினராவார். இங்ஙனமிருக்க, ஊராட்சித் தலைவரை ஒரு விதமாகவும் பிற உறுப்பினர் களை வேறுவிதமாகவும் தேர்ந்தெடுப்பதால், ஊராட்சியில் ஒற்றுமைக்கு வழியில்லை. ஆகவே ஒற்றுமையாக, இணைந்து செயல்பட, ஊராட்சித் தலைவர் உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. ஊராட்சியில் திறமைமிக்கவர் ஒருவர் மட்டுமே தேர்ந் தெடுத்தால் இவ்விதமாக இரண்டு விதத் தேர்தல் முறை களினால் பயன் அதிகமாக இருக்காது. ஆனால் அதே நேரத் தில் ஒன்றுக்கு மேற்பட்ட திறமைமிக்கவர் இருந்தால்,

ஊராட்சித்தலைவர் தேர்தலில் கடுமையான போட்டி ஏற்படும். இந்தப் போட்டியில் கட்டாயமாக வாக்காளர்கள் ஏதேனும் ஒரு பிரிவில் சேரவேண்டி ஏற்படும். இதனால் ஊராட்சியில் நிரந்தரமாக இரண்டு பிரிவுகள் ஏற்பட வழி யுண்டு. ஊராட்சி சிறிய அளவு நிலப்பரப்பைக் கொண்டு இருப்பதாலும், மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவராக ஒத்துழைத்து ஒன்றாகச் செயல்படவேண்டுமென்பதாலும் இப்பிரிவினையினால் ஏராளமான பாதிப்பு உண்டாகும். இதனால் மக்களின் வாழ்க்கை மட்டும் பாதிப்பதில்லை. உடைமைகள் மற்றும் பிற சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். சாதாரணமாக இன்றைய அளவில், கோபங்களை வெளியில் காட்டிக் கொள்ளவும், வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவும் தேர்தல்களைப் பயன்படுத்துகின்றனர். ஊராட்சித் தேர்தலின்பொழுது கிராமங்களில் பல வீடுகள், எண்ணற்ற வைக்கோல் போர்கள் தீக்கிரையாகிவிடுவதை நாம் அறியலாம். இந்த மாதிரியான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு உறுப்பினர்களே தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பது முடிவு.

3. ஊராட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் முறை மிகவும் பிரபலமானதாக, அனைத்து நகராட்சிகளிலும் பின்பற்றப்பட்டு வந்ததால், இம்முறை எளிதானதும் ஆகும்.

இருப்பினும் நேரடியாக ஊராட்சித் தலைவரைத் தேர்ந் தெடுப்பதிலும் அதிக நன்மைகள் உள்ளன என்பதைப் பற்றியும் சிறிது காண்போம்.

1. மக்களாட்சி முறையில் நேரடியாக உறுப்பினர்களைப் போல் தலைவரைத் தேர்ந்தெடுப்பது மறைமுகமாகத் தேர் தெடுப்பதைவிடச் சிறப்பு வாய்ந்ததாகும்.

2. ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட, மறைமுகத் தேர்தல் மூலமாகயெனில், குறைந்த அளவு உறுப்பினர்களை தங்கள் வசப்படுத்திக் கொண்டால் போதுமானதாகும். தங்களது செல்வாக்கின்மூலம் குறைந்த அளவு மக்களைக் கைக்குள்

போட்டுக் கொள்ள முடியும். ஆனால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பொழுது, இத்தவறுகள், தில்லுமுல்லுகள் ஆகியவை செல்லு படியாகாது. ஊராட்சி மக்களின் அனைவரது ஆதரவையும் பெற்றால்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடியும். அனைவரது ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய ஊராட்சித் தலைவர், எளிதாக அனைவரது ஒத்துழைப்பையும் பெற்று, செயல்களைச் செவ்வனே செய்ய முடியும்.

3. எல்லாச் சமுதாயங்களின் வாக்குகளையும், வேறுபட்ட வருமான விகிதம் கொண்ட மக்களின் வாக்குகளையும் பெற்றால்தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்ற நிலை உள்ளதால், பாகுபாடின்றி, ஒற்றுமையாகச் செயல்படுகின்ற வகையில் தலைவராக வரக்கூடியவர் அனைவரோடும் பழக அதிக வாய்ப்புக்களை இம்முறை அளிக்கின்றது.

இவ்வாறாக இருவேறு முறைமைகளின் நன்மைகளை ஆராய்ந்த பின்னர் 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து ஊராட்சித் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்கும் படியாகச் சட்டமியற்றப்பட்டது. இச்சட்டம் மறுபடியும் 1957ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, முன்னர் மாதிரியே உறுப்பினர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கும்முறை கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த முறையும் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. ஊராட்சி உறுப்பினர்கள் செம்மையாகத் தலைவருக்கு ஒத்துழைப்பு நல்கவில்லை. ஊராட்சிச் செயல்கள் செய்வதில் ஒத்துழைப்பு இல்லாததால், செயல்கள் செய்வது தாமதத்திற்குள்ளாகியது. உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செயல்படுவதிலிருந்து விலகியதால், ஊராட்சித் தலைவரை நேரடியாகவே மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பது அவசியமாயிற்று. இதன் காரணமாக 1970 ஆம் ஆண்டு சட்டம் திருத்தப்பட்டு, நேரடியாகத் தலைவர் தேர்தலுக்கு வசதி செய்யப்பட்டது. தற்போது இந்த முறை செயலில் உள்ளது. ஊராட்சித்தேர்தலில் அரசியல் கட்சிகளின் சின்னங்கள் ஒதுக்கப்படுவதில்லை. இருப்பினும் போட்டிகள் அரசியல் ரீதியாகத்தான் நடைபெறுகின்றன என்பது கண்கூடு. 1970 ஆம் ஆண்டு நடந்த ஊராட்சித்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் முடிந்த அளவு தனது சக்தியெல்லாம் பயன்படுத்தி, காங்கிரஸை ஆட்சிக்கு வரமுடியாதபடியாக கடுமையான போட்டி, இரண்டு கட்சிக்குமிடையே நடைபெற்றது. இவ்வாறாக

அரசியல் ரீதியாகப் போட்டி நடைபெறுவதைத் தடுக்க முடியாதபடி போட்டிகள் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. இருந்த போதிலும், குடவோலைச் சீட்டு முறையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும் 1970 ஆம் ஆண்டில் சில இடங்களில் நடை பெற்று உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சக்கர சாமந்தம் என்ற கிராமத்தில், ஊராட்சி உறுப்பினர்களும், அதன் தலைவரும் ஒரு பிள்ளையார் கோவில் முன்பாகக் குடவோலைச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை அறியும்போது, மக்கள் தேர்தல் களில் போட்டி வேண்டாம் என்பதை உணர்த்துவதுபோல் உள்ளது. தேர்தலில் ஏற்படுகின்ற போட்டியும், பொறாமையும் ஒற்றுமையைக் குலைக்கக் கூடியன. ஆயினும் மக்களாட்சியின் சாதனமாகத் தேர்தல் இருப்பதால், தேர்தலைப் புறக்கணிப்பதும் நன்று அல்ல

ஊராட்சித் தேர்தல் முறை பல்வேறு சோதனைகளுக். குட்பட்டு, செம்மையான முறையாகப் பரிணமிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அரசாங்கங்களின் தேர்தலை நடத்துவது மாநில அரசாங்கத்தின் விருப்ப அதிகாரத்தில் அடங்கியுள்ளது. தற்போது நாம் வாக்குகளை வேண்டுமென்றே வித்தியாசப்படுத்தியுள்ளோம். ஏனெனில் பாராளுமன்ற வாக்குகளுக்கு அதிக முக்கியத்துவமும், அதற்கு அடுத்தபடியாக சட்டமன்ற வாக்குகளுக்கும், கடைசியாக உள்ளாட்சி வாக்குகளுக்கும்என வேறுபடுத்தியுள்ளோம். மக்களாட்சி யில் தேர்தல் என்பது பொதுவான செயல் முறையாகும். நிறுவனங் கள் அனைத்தும் சமமானவை என்பதை நாம் அறிய வேண்டும். உள்ளாட்சித் தேர்தலை மத்திய தேர்தல் ஆணையம் நடத்தி னால் நலமெனத் தோன்றுகிறது. ஏனெனில் தேர்தல் என்ற செயல்முறையை யார் நடத்தினாலும் பலன் ஒன்றுதான். தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக இயங்கக்கூடிய காரணத்தால், சிறப்பாக வும், திறமையாகவும் தேர்தலை நடத்தும் பக்குவம் பெற்றுள்ளது. சட்டமன்றத் தேர்தலை நடத்துவதற்குக்கூட, அந்த மாநில அரசாங்கத்தின் அனுமதி பெற்று, தேர்தல் ஆணையா ளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன் பின்னர்தான் தேர்தல் நடத்த வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. இம்முறையைத் தேர்தல் ஆணையாளர் கடுமையாக எதிர்த்து உள்ளார். தேர்தலை நடத்துவதற்குச் சட்டம், அமைதியைக் காக்க வேண்டியது மாநில அரசாங்கத்தின் கடமை என்பதில் யாவருக்கும் சந்தேகமில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் ஆணையத்தின் பிரதிநிதியாகச்

செயல்படும் தலைமைத் தேர்தல் அதிகாரி, மாநிலத்தில் தேர்தல் நடைபெறுகின்ற சூழ்நிலையை அறிந்து, திருப்தி கொண்டால் தேர்தல் நடத்தப்பெறலாம் என்று தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் வழங்க வேண்டும். ஏனெனில் தேர்தல், ஆளுங்கட்சிக்குச் சாதகமாகவும்,வசதியாகவும், நடத்துவதாக,பலத்த குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்பதால் இங்ஙனம் செய்ய வேண்டும். மேலும் தேர்தல்கள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்குள்ளுமாக நடத்த வேண்டும். ஊராட்சி அரசு நிறுவனங்கள் மீதாக வெளியிடப்பட்ட திரு. அசோக் மேத்தா குழுவின் அறிக்கையும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஊராட்சி அரசு நிறுவனங்களின் தேர்தலை மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிதலைமைத் தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்துத் தேர்தல் நடத்த வேண்டுமெனக் குழு அறிக்கை கூறுகிறது. ஆனால் தலைமைத் தேர்தல் ஆணையாளர் வெறுமனே ஆலோசனை பெற்று, கலந்தாலோசிப்பதால் மட்டும் பயன் ஏற்படுமெனக் கூற முடியாது என்கிறார். ஆகவே தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பிலும், கட்டுப்பாட்டிலும் வாக்காளர் பட்டியல் தயாரிப்பது மற்றும் பிற செயல்களை ஆணையம் மேற்கொண்டு தேர்தலை நடத்தினால்தான் பலன் ஏற்படுமெனவும் கூறுகிறார்.பாராளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றிற்குத் தேர்தல் நடத்துவது போல், இதற்கும் தேர்தல் நடத்த வேண்டுமெனக் கூறுகிறார். இவ்வாறு செய்தால் குறித்த காலத்தில் தேர்தலை நடத்தமுடியும்என்பதை அறியலாம். ஐந்துவருடங்களுக்கெனத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், ஐந்து வருடங்களுக்கும் மேலாகப் பதவியில் இருப்பதை அறிவுடையவர் எவரும் அனுமதிப்பது இல்லை. மாநில அரசாங்கங்கள் தேர்தலைத் தொடர்ந்து தள்ளிப் போட்டுக் கொண்டே வருகின்றன. கேரளா அரசாங்கம் 22ஆவது தடவையாகத் தேர்தலைத் தள்ளிப்போட்டுள்ளது. 1963ஆம் ஆண்டிற்குப் பிறகு தேர்தல் நடத்தப்படவே இல்லை. இதே மாதிரியாகத்தான் மற்ற மாநிலங்களும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு தேர்தல் நடக்கவில்லை எனவே தேர்தலைக் குறிப்பிட்ட நேரத்தில் நடத்துவதற்கு, தேர்தல் ஆணையத்திடம்விடப்படவேண்டும் என்பது சிறந்த ஒன்றாகும். இதனால் மாநில அதிகாரம் பாதிக்கப்படலாம். எல்லா மாநில அரசாங்கங்களும் ஒன்றுகூடி உள்ளாட்சித் தேர்தலை ஐந்தாண்டிற்கு

ஒருமுறை நடத்த வேண்டுமென முடிவு செய்ய வேண்டும். மாநில அரசாங்கங்களே தேர்தலை நடத்தத் தேர்தல் ஆணையத்தை அணுகினால், மாநில அதிகாரம் பாதிக்காது. ஏனெனில் தேர்தலைப் பாரபட்சமின்றி, நியாயமாகவும், உண்மையாகவும், திறமையுடனும் நடத்த வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் உள்ளாட்சியை நிருவகிக்க வேண்டும். இவர்கள் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில்தான் செயல்பட முடியும். பின்னர் யார் தேர்தலை நடத்தினால் என்ன?

13

சமுதாய வளர்ச்சி

சமுதாய வளர்ச்சி என்பதற்குத் திட்டவட்டமாகப் பொருள் வரையறுப்பது கடினம். அவ்வாறு வரையறுத்தாலும் அதனை அனைவரும் ஏற்றுக் கொள்வது கிடையாது. சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்று கூடித் தங்களது தேவைகளை நன்றாக விவாதித்து முடிவு செய்து, அத்தேவைகளை நிறைவேற்றத் திட்டமிட்டு, ஒன்றாக ஒத்துழைத்து அனைவரும் திருப்தி கொள்ளும் வகையில் செயல்படுவது சமுதாய வளர்ச்சிச் செயல்முறை எனத் தற்போது விவரிக்கப்படுகின்றது. இதில் சமுதாயத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. சமுதாய வளர்ச்சியில் ஈடுபடும் செயலாண்மைகளின் பங்கினை மட்டுமே சிலர் வலியுறுத்திச் சொல்கின்றனர். மக்கள் சமுதாயம் முழுமையும் வளமான வாழ்க்கை வாழவேண்டுமென்பதை வளர்க்கும் ஓர் இயக்கம் இது ஆகும். இதில் சமுதாய மக்களே தங்களது சுயமுயற்சியின் மூலமாக நோக்கங்களில் ஈடுபட்டு,சிறப்பான பங்கேற்பு பெற வேண்டும். அவ்வாறு சுயமுயற்சி சமுதாயத்தில் ஏற்படவில்லையேல், தொழில்நுட்ப இயந்திரங்களைப் புகுத்தி, சுயமுயற்சி ஆர்வத்தை வளர்க்க வேண்டும். அத்தொழில்நுட்ப இயந்திரங்களை எவ்வாறு பயன்படுத்தவேண்டுமென்பதையும், அவற்றை பயன்படுத்துவதற்கு மக்களுக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தைம் ஊட்டக் கூடிய வகையில் அவர்களைமுயற்சி செய்ய வைக்கக்கூடிய இயக்கமாகும் இது என கேம்பிரிட்ஜில் கூடிய ;காலனி நிருவாகிகள் மாநாட்டில் வரையறுக்கப்பட்டது. எனவே மாவட்டம் முழுவதிலும் ஈடுபடுகின்ற வளர்ச்சிச் செயல்களை உள்ளடக்கியதாக, அவற்றை அரசாங்கமாயினும் பிற செயலாண்மைகளால் செய்யப்பட்டாலும் நோக்கம் ஒன்றேதான்,

இந்தியாவில் 80 சதவிகித மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராம மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகச் சமுதாய வளர்ச்சித்திட்டம் இங்குக் கொண்டுவரப்பட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் தாழ்ந்து இருப்பதால், மத்திய, மாநில அரசாங்கங்கள் சமூகச் சீர்திருத்தங்கள் மற்றும் பிற நடவடிக்கைகளின் மூலம், வாழக்கைத்தரத்தை முன்னேற்ற முயற்சி செய்கின்றனர். சமுதாய வளர்ச்சித் திட்டத்தில். கிராமப்புறங்களில் வேலையில்லாமல் தவிக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக உள்ளது. விவசாயத் துறையில் புதிய வகையில் அறிவியல் முறையைப் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராம மக்களுக்குப் போதிய நிதி உதவியை அளிக்கும் வகையில், கிராமப்புறக் கூட்டுறவுகள் நிறுவப்பட்டுள்ளன. கிராமப்புற வறுமை, பிணி மற்றும் அறியாமை ஆகியவற்றைப் போக்குவது சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படைக் காரணம் என்றால் மிகையாகாது, ஏனெனில் மக்களுடைய முயற்சிகள் அனைத்தும் அவர்களே விரும்பி அதிகாரிகளோடு கலந்து, தங்களது பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார நிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது சமுதாய வளர்ச்சித்திட்டத்தின் குறிக்கோள். இவ்வாறு சமூகம் முழுமையும் ஒத்துழைத்துச் செயல்பட்டால், தேசிய வளர்ச்சி பெருகும் என ஐக்கிய நாடுகளின் சங்கம் வரையறுத்துள்ளது. மக்களுடைய முயற்சிகள் தானாகவே ஏற்பட வேண்டுமாயின், மக்களின் அறியாமை அகல வேண்டும். நாட்டு நடவடிக்கைகளில் விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும். பொதுவாக நாட்டு வளர்ச்சியின் மீது அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். மனிதன் தனது அவசியத் தேவைகளையாவது பெற்று வந்தால்தான், மற்றவர்களுடைய தேவைகள், நாடு போன்ற வற்றைப் பற்றி எண்ணமுடியும். எனவே வறுமையை ஒழிக்க வேண்டும். இதேபோல் பிணியையும் அகற்ற வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் திட்டம்

சமுதாய வளர்ச்சித் திட்டம் இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் செயல்படுவதற்கு முன்னரே, சமுதாய

வளர்ச்சித் திட்டத்தின் ஆர்வம் பல்வேறு வகைகளில் நிலவியிருந்தது எனலாம். இத்திட்டத்தின் விரிவான தன்மையை ஆராய்வதற்கு, அதன் வளர்ச்சிமுறை, வரலாற்றுத்தன்மை ஆகியவை பற்றி அறிவது அவசியம். ஏனெனில் வரலாற்றுப் பூர்வமாக ஒரு திட்டத்தின் வளர்ச்சி முறையை ஆராய்வதால், அத்திட்டத்தின் நன்மைகள், அதனால் அடைந்த மாற்றங்கள், மாற்றங்களினால் ஏற்பட்ட நன்மை, தீமைகள் மற்றும் பிற போன்ற விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடியும். ஆகவே இந்தியாவில் சமுதாய வளர்ச்சி முறையைப்பற்றி இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். முதல் பாகத்தில் சமுதாய வளர்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்முன்னர் நடைபெற்ற செயல்கள் பற்றியும், இரண்டாவது பாகத்தில் சமுதாய வளர்ச்சித்திட்டம் கொண்டு வரப்பட்டபின்னர் ஏற்பட்ட செயல்களின் மாற்றங்கள் குறித்தும் காண்போம். இதில் முதல் பாகத்தையும்கூட இரண்டாகப் பிரிக்கலாம். முதன்முதலாக 1921 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரையிலும் செய்யப்பட்ட முன்னோடி முயற்சிகளைப் பற்றியும், பின்னர் 1945 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும் இருந்ததெரிந்தாயும்நிலை விளக்கங்கள் குறித்தும் ஆராய்வோம். தற்போது இயங்கி வரும் சமுதாய வளர்ச்சித் திட்டம் ஏற்கனவே செய்யப்பட்டு வந்த முறைகளின் இலட்சியங்களை நிறைவேற்றுவதன் தொடர்ச்சிதான் என்பதை அறியலாம். இதே மாதிரியாக, 1952 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டத்தையும் மூன்று கட்டங்களாகப் பிரித்து ஆராய்ந்தால் சிறப்பாக இருக்கும். 1952லிருந்து 1955 வரையிலுள்ள காலகட்டத்தை நிருவாகப் பொருத்தக் காலம் என்றும், இரண்டாவது 1956-58 வரையுள்ளதைத் தொழில் நுட்ப ஒற்றுமைக் காலமென்றும், மூன்றாவது கட்டத்தை மக்களாட்சி பரவலாக்கக் காலமென்றும் பிரிக்கலாம். இந்த மூன்றாவது காலம் 1959 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கின்றது.

கிராமப்புற வளர்ச்சியைப் பொறுத்தவரையிலும் 1921 ஆம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டுவரையிலும் ஒரு சிறந்த குறிப்பிடத்தக்க காலமாகக் கூறலாம். ஏனெனில் இந்தச் சமயத்தில் தான் ஸ்ரீ நிகேதன், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் கிராமப்

புறச் சீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிரெய்னி குர்கான் (Brayne's Gurgaon) சோதனையும் செய்யப்பட்டது. நாட்டின் பல்வேறு பாகங்களில் கிராமப்புற வளர்ச்சியின் பொருட்டு, அனைவரது முயற்சியும் பயன்படுத்தப்பட்டன. இதற்கு முக்கிய காரணம் யாதெனில் மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சியாகும். சுதந்திரத்திற்காகப் பாடுபட வேண்டுமென்ற அனைவரது ஆர்வமும் அரசியலில் பங்குபெற முடியாமல் இருந்த காரணத்தால், முயற்சி கிராமப்புற வளர்ச்சிக்கும் செலவிடப் பட்டது.

ஸ்ரீநிகேதன் சீரமைப்பு

வங்காளக் கவிஞர் இரவீந்தரநாத் தாகூரின் பெருமுயற் சியால் 1921 ஆம் ஆண்டு ஸ்ரீநிகேதன் கிராமப்புறச் சீரமைப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. கிராமங்கள் முழு வளர்ச்சி பெற்று விளங்கவும், கிராம மக்கள் தன்னிறைவு கொண்டவர்களாகவும், சுயமரியாதை பெற்றவர்களாகவும் ஆவதற்கு, அவர்கள் கொண்டிருக்கும் பாரம்பரியக் கருத்துக்கள், செயல்முறைகள் போன்றவற்றை அறிந்து தற்கால வளர்ச்சிப் பொருட்களின் மூலம் வெளிப்படையான விளக்கங்கள், அறிவு மற்றும் பொரு ளாதார வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்துவதே இந்த நிறுவனத் தின் நோக்கமென வரையறுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கிடைக்கப்பெறும் நன்மைகள் யாதெனில், மக்களின் தனித்தன்மை முழுமையாக நிறைவு பெறும்படியும், புனிதமான வகையில் அடையும் வண்ணமும் நிறுவனத்தின் முயற்சிகள் இருந்தன. ஏனெனில் சிறிய அளவிலோ, அல்லது ஒரு பகுதியை மட்டுமோ குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தினால், ஏராளமான குறைபாடுகளுக்கு இலக்காகிவிடும். மனிதனுடைய சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசமில்லாத வகையில், மனிதனுடைய மனச்சாட் சிக்கு இயல்பாகக் கிராமப்புற வளர்ச்சியில் ஈடுபடக்கூடிய வகையில் இந்நிறுவனம் விளங்கியது. மனிதனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அளித்தால் மட்டும் மனிதனுடைய முழு வளர்ச்சியையும் பெற்றிடலாம் என்று எண்ணக்கூடாது. அவனுக்குச் சிந்தனை செய்வதிலும் மற்றும் பிறவற்றிலும் தார்மீகச் சுதந் திரம் வழங்கப்பட வேண்டும். எல்லா மக்களின் பொதுத் தேவை

களை நிறைவேற்றும் வண்ணம் மக்களின் கூட்டுறவையும், ஒத்துழைப்பையும், செயலில் ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் இந்நிறுவனம் வசதி செய்து கொடுத்தது. கவிஞர் தாம் மக்களுக்கு உதவவேண்டுமென விரும்பியதை எல்லாம் செயலில், நடைமுறையில், கொண்டுவர முயற்சி செய்தார். சுகாதாரக் கூட்டுறவுகள், விவசாய விளக்கங்கள், தரமிகுந்த விதைகள், உரங்கள், குடிசைத் தொழில்களை கைத்தறித்தொழில் மூலமாக ஊக்குவித்தார். மற்றும் இளைஞர் இயக்கங்கள் ஏற்படுத்தி, இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். இவ்வாறு பலவிதங்களில் உதவக்கூடிய வகையில் ஸ்ரீ நிகேதன் விளங்கியது. இதனால் ஸ்ரீ நிகேதனைச் சுற்றிலும் இருந்த கிராமங்கள் வளர்ச்சி பெற்றன வென்றால் மிகையாகாது. ஆனாலும் நாடு முழுவதிலுமுள்ள குறைகள் தீர்க்கப்படமுடியுமா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சிறிய ஸ்ரீ நிகேதன் நாட்டின் வளர்ச்சிக்குரிய மூலப் பொருட்களையும், பணியாளர்களையும், வழிகாட்டல்களையும் செய்ய முடியவில்லை. எனவே தன்னால் இயன்ற அளவிற்கு நன்மையைச் செய்தது. இதைப் பின்பற்றி அரசாங்கம் நாடு முழுவதற்கும் இதே மாதிரியாகத் திட்டமிடலைத் செய்தால் கிராமப்புற வளர்ச்சி மிகவும் துரிதமாக வளர்ச்சியடையும். இச் செயலை அரசாங்கம் 1952-ஆம் ஆண்டுவரையிலும் செய்யாமல் தாமதம் செய்தது. மேலும் ஸ்ரீ நிகேதன் மூலம் அருகிலுள்ள கிராமங்கள் பொருளாதார வகையில் மட்டுமே வளர்ச்சி பெற்றதோடு தார்மீகத் தன்மையிலும் கிராம மக்கள் வளர்ச்சியடைந்துள்ளனர். கிராம மக்களிடம் புதிய தன்னம்பிக்கையும், ஆர்வமும் தோன்றியுள்ளன என்பது மற்றொரு நன்மையாகும். ஆகவே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தை முதலில் செயலளவில் நடைமுறைக்குக் கொண்டு வந்து, அதன் நன்மைகளைக் கவிஞர் மக்களுக்கு வழங்கியுள்ளார் என்பது மிகவும் பாரட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

மார்த்தாண்டம் சோதனை

மார்த்தாண்டம் சோதனை என்பது 1921 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாகவும், தலைவராகவும் இருந்து நடத்தியவர் டாக்டர் திரு. ஸ்பென்சர் ஹாட்ச்

(Dr. Spencer Hatch) என்பவர் ஆவார். இச்சோதனையின் முக்கிய நோக்கம், கிராமப்புற மக்களைப் பொருளாதார நிலையிலும், சமூக நிலையிலும், தார்மீகமாகவும், வெளிப்படையாகவும். உயரவைக்க வேண்டுமென்பதாகும். மார்த்தாண்டம் ஒரு விளக்க நிலையமாகியது. ஏராளமான கிறிஸ்தவ இளைஞர் சங்கம் (YMCA) மார்த்தாண்டத்தைச் சுற்றி உள்ள கிராமங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு விளக்கமளித்தது. மார்த்தாண்டத்தில் தேனீ வளர்ப்பு, பிற குடிசைத்தொழில்களின் இயந்திரப் பொருட்கள் அனைத்தும் குவித்து வைக்கப்பட்டன. இக்கிராமங்களில் கிறிஸ்தவ இளைஞர் சங்கம் தனது விருப்பச் சமூகப் பணிகளைச் செய்து வந்தது. இந்தப் பணிகளை மேற்பார்வையிட முழுநேரச் செயலர் ஒருவர் மட்டும் நிய மிக்கப்பட்டார். உள்ளூர் மக்களுக்குத் தலைமைத்தன்மை குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. கிராமப்புற மதிப்பீடுகள் செய்யப்பட்டன. நாடகங்கள், விளக்கக் காட்சிகள், சுற்றுலாச் சந்தைகள் பிற போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டன. நெசவு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற தொழில்கள் கூட்டுறவாக நிறுவப்பட்டன இக்கூட்டுறவுகள் முறைமையில்லாத வகையில் நெகிழ்வாக அமைந்து செயல்பட்டன. சுயஉதவியைத் திறமைமிக்க ஆலோசனையோடு செயல்பட வைப்பது இதன் நோக்கமாகும். இத்திட்டத்தில் அமையப்பெற்ற அடிப்படைக் கருத்துக்கள் பற்றிக் காண்போம் :

1 மக்கள் விரும்பி வேலை செய்யத் தயாராக இருக்கும் செயல் களை அறிந்து அவற்றைச் செய்ய வைப்பது

2. சமுதாயத் தொடர்பினை நன்றாக அறிந்து கொள்ளவைப்பது

3. ஒருங்கமைந்த சீரான திட்டத்தை உருவாக்குவது

4. திட்டம் உள்ளூர் மக்களுக்குப் பயன்படும்படியாகவும், உள்ளூர் மக்களால் செய்யப்படும் படியாகவும் செய்வது

5. மக்கள் நன்றாகப் பழக்கப்பட்ட செயல்களைச் செய்கின்ற படியாக அமைப்பது

6. உள்ளூர்த் தலைமையையும், பொறுப்புணர்ச்சியையும் உரு வாக்குவது

7. நீண்டகாலத் திட்டமிட்டு, அதனைச் செயல்படுத்தக்கூடிய பயிற்சி பெற்ற திறமையாளர்கள் கிடைக்கும்படியாகச் செய்வது ஆகியனவாகும்.

டாக்டர் ஹாட்ச் தமது அனுபவத்தில் உணர்ந்த கருத்துக்களைத் தெளிவாக இத்திட்டத்தின் பயன்கள் என்ற வகையில் உணர்த்துகிறார். கிராமச் சீரமைப்புத் திட்டத்தின் அடிப்படை தார்மீக நோக்கங் கொண்டதாக இருக்கக்கூடியதென்றார். இதனால் இனச்சார்பு வேறுபாடுகள்கூட, ஒத்துழைப்பாகச் செயல்படுவதால் மறைந்துவிடுகின்றன. எனவே இத்திட்டத்தை விரிவுபடுத்தி, இந்தியா முழுமையிலும் செயலாக்கினால் நன்மை பயக்கும் என்கிறார். இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களான சுயமதிப்பு, கூட்டுறவு ஆகியவை எளிதாக ஏற்படவும், வளர்க்கவும் உதவுகின்றன என்பதை அறியலாம். மார்த்தாண்டம் சோதனை பற்றி பரோடா, கொச்சி, மைசூர், ஹைதராபாத் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களுக்கு உதவியுள்ளன. இந்நிலையங்கள் அமைக்க இதன் சோதனையாளர்கள் உதவினர். மேலும் இதன் பிரதிபலிப்புக்கள் கொழும்பு, பர்மா, எகிப்து ஆகிய நாடுகளிலும் காட்சியளிக்கின்றன.

குர்கான் சோதனை

திரு. பிராய்ன் (Mr. Brayne) குர்கான் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்தபொழுது 1927ஆம் ஆண்டில் கிராமப்புற வளர்ச்சி குறித்த கருத்தைச் சிந்திக்கலானார். அச்சிந்தனைகளை விரிவுபடுத்தி, விளக்கம் கொடுத்து 'நல்ல கிராமங்கள்' என்ற நூலை எழுதினார். இதில் கடின உழைப்பு, சிக்கனம், தன்னடக்கம், சுய உதவி, பரஸ்பர உதவி, பரஸ்பர மரியாதை ஆகிய பழைய உண்மைகளின் பிரதிபலிப்புக்கள்தான் இந்த கிராமப் புற சீரமைப்புத் திட்டத்தின் சாரமாகும் எனக் கூறியுள்ளார். இவர் கிராமப் புறச் சீரமைப்பிற்கு நான்கு அடிப்படைக் காரணங்களை விளக்கியுள்ளார். அவை:

1. கிராம அமைப்புக்கள் : ஊராட்சி போன்ற அமைப்புக்கள் தானாகவும், நிலையான வளர்ச்சிக்கும் உதவக்கூடியனவாக அமைக்க வேண்டும்.

2. கல்வி — மக்கள் கல்வி. இதிலும் குறிப்பாகப் பெண்கள் கல்வி இன்றியமையாத ஒன்றாகும்.

3. மூத்தோர்கள், செல்வாக்கு உள்ளவர்களின் தலைமை முக்கிய மானது.

4. சேவை நோக்கமும், கடமைப்பற்றும், மக்களுக்காகத் தியாகங் களை ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் கொண்டவர்களாக ஆக்க வேண்டும்.

இந்தச் செயல்திட்டத்தின் பணிகள் கிட்டத்தட்ட இன்றுள்ள வட்டாரச்செயல் திட்டங்களைப்போல், ஒருங்கிணைந்த திட்டமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முழுப்பொறுப்பையும் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். மேலும் ஏராளமான குறைகள் அதிகாரிகளிடையே காணப்படுவதால், அதிகாரிகள் சில சிரமங்களுக்கு ஆளாவதால் கிராம சீரமைப்பைச் செவ்வனே கவனிக்க இயலவில்லை என்கிறார். ஏனெனில் அதிகாரிகள் நிரந்தரமில்லாமல் பணியாற்றி வருகின்றனரென்றும், திறமைக் குறைவாக உள்ளனர் என்றும், அதிகாரிகளிடம் சட்டபூர்வமாகப் பெறக்கூடிய பணிகளைக் காட்டிலும் மிகுதியான பணிகள் எதிர் பார்க்கப்பட்டு மிகுதியான செயல்கள் சுமத்தப்பட்டுள்ளன எனவும் கூறியுள்ளார். எனவே இக்குறைகளை நீக்குகின்ற வண்ணம் சில கருத்துக்களை திரு. பிராய்ன் கூறுகிறார். அவை:

1. சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள முறையான அதிகாரம் கொடுக்க வேண்டும்.

2. அலுவலர்கள் வாரியமொன்று துணை ஆணையாளர் தலைமையில் அமைத்து, முயற்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைப்புச் செய்ய வேண்டும். துறைகளின் மூலப்பொருட்கள், துறைகளின் தகராறுகளைத் தீர்க்கும் வகையில்கடமைகள் இருக்கவேண்டும்.

3. மக்களும் அதிகாரிகளும் சேர்ந்த கூட்டு அமைப்புக்கள் ஏற்படுத்த வேண்டும். இளைஞர் அமைப்புக்களோடு தொடர்பு பெறும் வகையில் அமைப்புக்கள் ஏற்பட ஊக்குவிக்க வேண்டும்.

4. கிராம மட்டத்தில் கிராம வளர்ச்சிக்கெனத் தனியே இயங்கும் அமைப்பு ஒன்று ஏற்படுத்த வேண்டும். கிராம வழிகாட்டி ஒரு

வரை நியமித்து, எல்லாத் துறைகளின் பொது நபராக இருக்க வேண்டும்.

இவர் கிராமப் பொருளாதாரம் மற்றும் அறிவியல் பள்ளி ஏற்படுத்தி உழைப்பின் பெருமை பற்றியும், சுய உதவி குறித்தும் கற்றுத்தந் தார். திரைப்படங்கள், பாடல்கள், நாடகங்கள் போன்றவை மூலம் விளக்கமளித்தார்.

இச்சோதனையின் மூலம் பயன் கிடைக்கப் பெற்றாலும், பஞ் சாப் மாநிலத்தை விட்டு வெளியே செல்லாது, பஞ்சாபிலேயே நின்று விட்டது. இது சிறிது காலத்தில் பஞ்சாபிலும் மறையலாயிற்று. இதன் முக்கியகுறை யாதெனில் அலுவர்களை மையமாகக்கொண்ட கிராம வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டதுதான் எனப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

பரோடா கிராமப்புற வளர்ச்சி

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னர் பரோடா, ஓர் சமஸ்தானமாக அரசரால் ஆளப்பட்டது. இங்குக் கிராமப்புற வளர்ச் சித்திட்டத்தை 1932ஆம் ஆண்டு பரோடா மன்னர் ஆரம்பித்து வைத் தார். இத்திட்டத்திற்கு உறுதுணையாக இருந்தவர்களில் முக்கிய மானவர் திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆவார். இவர் பரோடாவில் திவானாக இருந்தார். மார்த்தாண்டம் சோதனையின் படிப்பினை கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கூட்டுறவு மற்றும் வளர் ச்சிப் பணிகளை ஆராய்ந்து இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தின் நோக்கங்கள் கிராமப்புற மக்களை நன்றாக வாழ வைப்பதும், தன்னம்பிக்கை, சுய உதவி ஆகியவற்றை வளர்ப்பதும் ஆகும். இத்திட்டம் கீழ்க்கண்டவகையான செயல்கள் கொண்ட தாகும். அவை:

1. போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல்
2. குடிதண்ணீர்க் கிணறுகள் வெட்டுதல்
3. மலேரியா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்
4. கால்நடை மேய்ச்சல் நிலங்களை வளர்த்தல்

5. மேம்பட்ட விதைகளை விநியோகம் செய்தல்

6. குடிசைத் தொழில்களுக்குரிய பயிற்சிகள் அளித்தல்

7. ஒவ்வொரு கிராமங்களிலும் ஊராட்சியும், கூட்டுறவும் ஏற்படுத்துதல்

8. கிராமப்புறப் பள்ளிகளை வளர்த்து, விவசாயம் குறித்துக் கற்றுத்தரக்கூடிய மையங்களாகச் செய்தல்

இத்திட்டத்திற்கு ரூ. 1 கோடிவரை செலவிடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 முதல் 25 கிராமங்கள் அடங்கிய மண்டலங்கள் ஏற்படுத்தி, பட்டதாரி உதவியாளர்கள் விவசாயிகளுக்கு விளக்கம் கொடுத்தனர். 1942-43 ஆம் ஆண்டில் 24 மண்டலங்கள் சுமார் 487 கிராமங்களை உள்ளடக்கிச் செயல்பட்டன. இத்திட்டம் முன்னர் கூறிய திட்டங்கள்போல் சிறப்பான ஒன்றுதான். எனினும் பிற திட்டங்கள் போல் இது தேசிய அளவில் செயல்படுத்தப்பட இயலவில்லை.

சென்னை வட்டாரச் செயல்திட்டம்
(The Firka Scheme in Madras)

கிராமப்புற சீரமைப்புத் திட்டத்திற்கு மாநில அரசாங்கத்தின் உதவி அத்தியாவசியமானதாகும். எல்லா வளர்ச்சித் துறைகளையும் ஒருங்கிணைத்துக் கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபடுத்தினால்தான் கிராமப்புறச் சீரமைப்பு ஏற்படுமென்பது உண்மை. சென்னை அரசாங்கம் கிராமப்புற வளர்ச்சிக்கென வட்டாரச் செயல்திட்டத்தை ஆரம்பித்தது. இதன் முக்கிய நோக்கம், கிராம மக்கள் மகிழ்ச்சியோடும், வளமாகவும் வாழ வேண்டுமென்பதாகும். இத்திட்டத்தின் உடனடி நோக்கம் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவது. அதாவது போக்குவரத்து வசதிகள், குடிநீர், சுகாதாரத் திட்டங்கள், ஊராட்சிகள், கூட்டுறவுகள் அமைப்பதற்குரிய வசதிகளும், மூலப்பொருட்களும் அளிக்க வேண்டுமென்பது. ஆனால் படிப்படியாக இவை வளர்ச்சியடைந்து, நீண்ட கால நோக்கமான தன்னிறைவு பெற வேண்டுமென்பதேயாகும். விவசாயம், கால்நடை வளர்ச்சி, கதர் மற்றும் பிற கைத்தொழில்களை வளர்த்து, உணவு, உடை

உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளில் கிராம மக்கள் தன்னிறைவு பெறவேண்டுமென்பதுதான் இத்திட்டத்தின் நோக்க மாகும்.

இத்திட்டம் 1946-ஆம் ஆண்டு 34 வட்டாரங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பின்னர் 1950-ஆம் ஆண்டில் 50 வட்டாரங்களிலும், 1952-ஆம் ஆண்டில் மேலும் 24 வட்டாரங் களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென 4 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. கிராம நல்வாழ்வு இயக்குநர் மாநில அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்புக் கொண்டவரானார். மாவட்ட அளவில் ஆட்சித் தலைவர் இத் திட்டத்தைச் செயலாக்கும் பொறுப்பை மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உதவியாகக் கிராமப்புற நல்வாழ்வு அதிகாரி நியமிக்கப்பட்டார்.இவர் இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களுக்குப் பொறுப்பாகச் செயல்பட்டார். இவருக்கு உதவியாக 5 முதல் 10 வரையிலும் கிராம சேவகர்கள் நியமிக்கப்பட்டனர். 50 கிராமங்கள் ஒரு வட்டமாக உருவாக்கப்பட்டன. இந்த வட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கிராம சேவகர் நியமிக்கப்பட்டார். எனவே ஒவ்வொரு வட்டமும் பல கிராமங்களடங்கியதாக, ஒரு வட்டாரம் பல வட்டங்கள் கொண்டதாக அமைந்து செயல்பட்டன. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் விவசாயம் மற்றும் பொதுப்பணி ஆகியவற்றைச் செய்ய இளநிலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். கிராம சேவகர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்குண்டான நடவடிக்கைகள், வசதிகள் செய்யப்பட்டன. பொதுமக்கள் பங்கேற்பு மிகவும் அத்தியாவசியப்படக்கூடியதாக இருந்ததால், அதற்குரிய முயற்சி களும் மேற்கொள்ளப்பட்டன. மாநிலக் கிராமப்புற நல்வாழ்வு வாரியத்தில் பல துறைகளின் தலைவர்களும், சிறந்த வேலை வல்லுநர்களும் இடம் பெற்றனர். பதவிகளில்லாத விற்பன்னர் உறுப்பினர்களும் செயல்திட்டங்களில் இவ்வாரியத்தின் மூலமாகப் பங்கேற்றனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் வளர்ச்சிக்குழுக்கள் ஏற்படுத்தி, செயல்திட்டங்களைச் செயல்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இச்செயல்திட்டம் கீழ்க்கண்ட பல்வேறு செயல் களைக் கொண்டுள்ளது. அவை:

1. போக்குவரத்து மற்றும் தொடர்புகள்
2. குடிநீர் வசதிகள்
3. சுகாதார வளர்ச்சி
4. விவசாய வளர்ச்சி
5. கிராமத் தொழில்கள், கதர்த்தொழில் வளர்ச்சி
6. முதியோர் கல்வி
7. கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

இவ்வாறு பல்வேறு செயல்கள் செய்ய வட்டார வளர்ச்சிச் செயல் திட்டம் சென்னையில் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் செயல்கள் அனைத்தும் 1953-54 ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய விரிவாக்கத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. எனவே, தேசீய விரிவாக்கத் திட்டத்தையும், சமுதாய வளர்ச்சித் திட்டத்தையும் ஏற்கனவே சென்னை அரசாங்கம் முதலிலேயே செய்துள்ளது என்பதை அறியலாம்.

நீலோகேரி சோதனை

நீலோகேரி என்ற இடத்தில் சமுதாய வளர்ச்சிப் பயிற்சி அளிக்கப்பட்டது. இது ஒரு நகர்ப்பிரிவு. இது 7000 அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளித்தது. இதற்காக 1100 ஏக்கர் நிலம் பயன் பட்டது. பின்னர் இது 1984 ஆம் ஆண்டில் குடியிருப்பு ஆக மாறியது. இந்நகர்ப்பிரிவு கொஞ்ச காலத்திலேயே அருகாமை யிலுள்ள 100 கிராமங்களையும் தன்னுடன் ஒன்றாக இணைத்துக் கொண்டது. இவ்வாறு இணைக்கப்பட்ட கிராமத்து மக்கள் உள் பட அனைவரும் வேலை செய்யாமல் சாப்பிடக்கூடாது என்ற கொள்கையை வலியுறுத்திச் செயல்பட்டனர். இத்திட்டத்தை மஸ்தூர் மன்சில் (Mazdoor Manzil) என்று அழைப்பர். குடியிருப்பில் உள்ள அனைவருக்கும் வாழ்வதற்கு உத்தர வாதம் அளிக்கப்பட்டு, எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டன. கல்வி, மருத்துவ வசதி போன்றவை எல்லோருக்கும் கிடைக்கும்படியாகச் செய்யப்பட்டன. சமத்துவ உரிமை அனை வருக்கும் வழங்கப்பட்டது. மதம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட விஷய மாக மதிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் இந்

நகர்ப்பிரிவிலுள்ள அனைவரும் தன்னிறைவு கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பதுதான் ஆகும். பல்வேறு செயல்களுக்குப் பயிற்சியளிக்கும் பயிற்சி நிறுவனம் இங்கு ஏற்படுத்தப்பட்டது. பால்வளம், கோழிப்பண்ணை, பன்றி வளர்ப்பு, அச்சகம், பொறியியல் வேலைப்பிரிவு, தோல்பதனிடல் மற்றும் பிற தொழில்கள் கூட்டுறவு முயற்சியால் செய்யப்பட்டன. இத்தொழில்களில் ஈடுபடுவதற்குரிய பயிற்சியைப் பயிற்சி நிறுவனம் அளித்தது. 750 ஏக்கர் நிலம் விவசாயத்திற்குப் பண்படுத்தப்பட்டது. தொழிற்சாலைகளில் மொத்தமுள்ள 1400 பேர்களில் 1200 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறு செயல்பட்டதால், இந்நகர்ப்பிரிவு தன்னிறைவு கொண்டு செயல்பட்டு வந்தது.

இந்த நகர்ப்பிரிவு வளர்ச்சியடைய ஆரம்பித்ததால், தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யமுடியவில்லை. பொருளாதாரச் செய்கைகள் மற்றும் அமைப்புக்கள் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்வது மற்றும் பகிர்ந்தளிப்பது ஆகிய செயல்கள் செய்ய இயலவில்லை. மேலும் கூட்டுறவு முறையில் செய்கின்ற தொழில்களுக்கு உரிய திறமை, மேல்நிருவாகம் ஆகியவை பொருத்தமாக இருக்கவில்லை. எனவே தொழில்களுக்குப் பொருத்தமான திறமைகள் தேவைப்படக்கூடியனவாக அமைக்கப் பட்டன. பொருட்கள் உற்பத்தியிலும் எது முதலில் அத்தியாவசியமாகத் தேவைப் படக்கூடியதென்ற பிரச்சனையும் ஏற்படலாயிற்று.இதன்விளைவாக மக்கள் மத்தியில் பலகருத்துக்கள் ஏற்படலாயின. இக்கருத்துக்களை ஒருமைப்படுத்துவது, ஒற்றுமைப் படுத்துவதன் மூலம் தான் உற்பத்திப் பொருட்களைப் பெருக்குவதும் சார்ந்து இருந்தது. எனவே பல்வேறு பிரச்சனைகள் இதனைத் தொடரலாயின. கூட்டுறவு மூலம் செய்யப்படுகின்ற தொழில்கள் அனைத்தும் நகர்ப்பிரிவு மூலம் செய்யும்படி அமைக்கப்பட்டு, இன்றுள்ள அரசுத்தொழில் மேற்கொண்டு நிருவாகம் செய்யும் முறைக்கு அடிகோலியது.

இருப்பினும் இச்சோதனை சுயஉதவி, பரஸ்பர உதவி போன்றவற்றை வலியுறுத்தக் கூடியதாக, சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நேரடியாகச் செயல்படுத்தியது என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

எடவா சிறப்புச் செயல்திட்டம்

(The Etawah Pilot Project)

சமுதாயச் செயல்திட்டங்களுக்கு முன்னோடியாக இந்தச் சிறப்புச் செயல் திட்டம் உள்ளது. 1984 ஆம் ஆண்டில் உள்ள இத்திட்டம், இந்தியாவில், 1952 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கு ஒரு வழிகாட்டியாகும். இத்திட்டத்தை ஏற்படுத்தி, நடத்தித்தந்தவர் திரு. ஆல்பெர்ட் மேயர் (Mr. Albert) Mayer). இவர் உத்தரப்பிரதேச அரசாங்கத்தோடும், மத்திய அரசாங்கத்தோடும் கூட்டாகச் சேர்ந்து இத்திட்டத்தை நடத்தினார். இத்திட்டத்தின் குறிக்கோள், மக்களிடம் தன்னம்பிக்கை, கூட்டுறவு, ஒத்துழைப்பு, விரும்பிப் பணியாற்றல் போன்றவை எவ்வளவு தூரம் உற்பத்தி, சமூக வளர்ச்சியில் பயன்படுகின்றதென்பதைச் சுட்டிக் காட்டுதல் ஆகும். இவ்வாறு இவர்களிடம் ஏற்படுகின்ற இப்பண்புகள் மக்களிடம் நிலையாகவும், மனத்திலும், தார்மீகத்திலும் பதிந்து விடவேண்டும் என்பதும் நோக்கமாகும். மேலும் செயல்களின் தீவிரம், துறைகளின் கூட்டுறவு, மக்களின் கூட்டுறவு, வளர்ச்சிக்குரிய பொருத்தமான பண்புகளை வளர்ப்பது, தீவிரமான குறிக்கோள்களை எடுத்துக் கொள்வது, பணியாளர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுப்பது, உள்ளூர் மக்களிடம் தன்னம்பிக்கை ஏற்படுத்துவது, உள்ளூர் மூலப்பொருட்களை விநியோகம் செய்வது மற்றும் உள்ளூர்த் தலைமைத்தன்மையை வளர்ப்பது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு எடவா மாவட்டத்தில் மகிவா (Maheva) வட்டாரத்தில் உள்ள 97 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கிராம மட்டப் பணியாளர்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, விவசாயம் மற்றும் விரிவாக்கப்பணிகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பும், அலுவலகமற்ற செயலாண்மைகளின் ஒத்துழைப்பும் பெற்று விவசாய விளக்கங்கள், நிலப் பராமரிப்பு, கால்நடை அபிவிருத்திகள், கிராமச் சுகாதாரம் போன்றவை பற்றி விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. மக்கள் பங்கேற்கும் வகையில் சமூகக் கல்வி கொடுப்பதற்கு ஒரு திட்டம் வரையப்பட்டது. கிராம அளவில் பல நோக்கங்கள்

கொண்ட பணியாளர்கள், ஒருங்கிணைந்து, கூட்டாக, திட்டமிட்ட செயல்திட்டங்களை, ஒழுங்காகப் பின்பற்றிச் செயல்பட வைக்க வேண்டுமென்பதை இத்திட்டம் நடைமுறையில் கொண்டுவந்தது. உற்பத்திப்பெருக்கத்தை நோக்கம், கால அளவு, செயல்தன்மை ஆகியவற்றால் அளவிட்டு, மக்கள் ஊக்கத்துடனும், சிறப்பாகவும் வேலை செய்யவேண்டுமென்பதையும் இத்திட்டம் நிரூபித்துள்ளது.

இத்திட்டம் இந்நன்மைகளைச் செய்தாலும், சில குறை பாடுகளும் ஏற்பட்டன. இருப்பினும் பொருளாதாரத் தன்மையைக் காட்டிலும், உண்மையான மதிப்பை இத்திட்டம் வலியுறுத்தியுள்ளது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக நாட்டின் வளர்ச்சியை துரிதப்படுத்த எண்ணியதால், ஏராளமான பொறுப்புக்களைக் கிராமங்களிலும், வட்டாரங்களிலும், மற்றும் மாவட்டத்திலும் விட்டுவிட வேண்டியதாகியது. மாநிலத்தின் வளர்ச்சியில் முக்கியமாகப் பங்குபெறக்கூடியது மாவட்டங்கள் ஆகும். மாவட்டத்திற்குள்ளேயே திட்டம் போட்டு வளர்ச்சியில் ஈடுபட்டால், கிராமப்புறங்களில் வாழும் 360 மில்லியன் மக்களும் வளமாக வாழ வழி பிறக்கும். எனவேதான் மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற திட்டமிடல் முறையை மாற்றவேண்டுமென அதிக உணவு உற்பத்தி விசாரணைக் குழுவும், திட்ட ஆணையமும் 1952 ஆம் ஆண்டில் வலியுறுத்தின. மக்களின் நல்வாழ்வினை மையமாகக் கொண்டு செயல்படும் வகையில் புதிய முறையில் நிருவாக இயந்திரத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமெனக் கூறியது இக்குழு. எனவே கிராமங்கள், வட்டாரங்கள், மாவட்டங்கள் என மக்களாட்சி நிறுவனங்கள் அமைக்க வேண்டுமென வலியுறுத்தின. இதற்கு ஆதரவாக முதல் ஐந்தாண்டுத்திட்டம், இவ்வகை அமைப்புக்கள் ஏற்பட வழி செய்தது. பின்னர் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களாட்சி அமைப்பு மிகத் திறமையாகவும், நன்றாகவும் மாவட்டத்தில் அமைக்க வலியுறுத்தியது.

1) கிராம ஊராட்சிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட உயர்மட்ட அமைப்புக்களோடு நெருங்கிய தொடர்பினைப் பெற்று இருக்கவேண்டும்.

2) மாவட்டத்திற்குள்ளாகச் செயலாக்கப்படவிருக்கும் செயல் திட்டங்களையெல்லாம், சிறிய பரப்பளவில் அமைந்துள்ள வளர்ச்சி வட்டாரங்கள் அல்லது வட்டங்கள் போன்ற அமைப்புக்கள் மூலமாகச் செயல்படவேண்டும்.

3) உருவாக்கவிருக்கும் மக்களாட்சி அமைப்புகள், பிரிவுகளின் பொதுநிருவாகத்திற்கும், வளர்ச்சிக்கும் பொறுப்புக்கொண்டு இருக்கவேண்டும். சட்டம், ஒழுங்கு, நீதி, நிருவாகம் மற்றும் வருவாய் நிருவாகத்தில் உள்ள குறைகளைத் தவிர்த்து, இந்த அமைப்புகள் பொறுப்பாகச் செயல்பட வேண்டும்.

ஊராட்சி அரசு நிறுவனங்களின் அமைப்பு மற்றும் செயல் கள்தான், புதிய முறையில் மாநில, மாவட்ட நிருவாகத்துடன் முக்கிய தொடர்பு கொள்ளக்கூடியனவாக இருக்கின்றன. அரசியலமைப்பிலும், ஐந்தாண்டுத்திட்டங்களிலும் வரையறுக் கப்பட்டுள்ள கொள்கைகளைச் செயலாக்கி, மக்களைப் பொரு ளாதாரத்திலும், சமுகத்திலும் வளர்ச்சி பெற்றவர்களாகச் செய்யக் கூடிய நோக்கம் கொண்டதாக ஊராட்சி அரசு நிறு வனங்கள் திகழ்கின்றன. இன்றுள்ள சூழ்நிலையில் ஊராட்சி, ஊராட்சி சமிதிகள் மற்றும் ஜில்லா அமைப்புக்கள் ஆகியவற்றை மக்களாட்சி நிறுவனங்களாக, அரசு வரையறுத்துள்ள நோக் கங்களை நிறைவேற்றும் வண்ணம் செய்ய வேண்டுமென கூறப் பட்டுள்ளது. இதன் விளைவாக, தேசிய வளர்ச்சி மன்றத்தின் பார்வைக்கு 1958ஆம் ஆண்டு இக்கருத்து வைக்கப்பட்டது, இதனைத் திட்ட ஆணையம் கீழ்க்கண்ட வகையில் விளக்கமளித்துப் பரிசீலனை செய்தது. அவை:

1. மக்களாட்சியில், மக்களாட்சியின் அடிப்படை அமைப்பு கிரா மங்களாக இருக்கின்றன. கிராம ஊராட்சி, கிராமக் கூட்டுறவு ஆகிய இரண்டு நிறுவனங்கள் மக்களாட்சியைக் கிராமத்தில் செம்மையுறச் செய்யக்கூடியனவாக உள்ளன. கிராமப் பள்ளிகளும் சிறப்பான பங்கினைச் செய்து வருகின்றன என் பதையும் அறிந்தது.

2. மாவட்ட, வட்டார மற்றும் கிராமங்களில் அமையப்பெற்றுள்ள அனைத்து நிறுவனங்களும் மக்களாட்சிக்குரிய தனித்த நிறு வனங்களாகும். அனைத்து நிறுவனங்களும் ஒன்றோடொன்று

இணைந்து செயல்படக்கூடியனவாகும். தனித் தனியே அவற்றைப் பிரிக்க முடியாது.

3. மக்களாட்சி நிறுவனங்கள் என்பதற்காக மாநில அரசாங்கம் தனது முழுமையான நிருவாகத்திற்கும், திட்டமிடல், நிதி ஆகியவற்றிலிருந்து விலகாமல், இன்னும் பொறுப்புக் கொண்டதாகவே இருக்கவேண்டும்.

சமுதாய வளர்ச்சி

1952ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் இந்தியாவில் தொடங்கியது. கிராமப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் நிலையை உயர்த்துவதும் அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச்செய்து, அவர்கள் முன்னேற வழிகளமைத்துத் தருவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். மக்களின் முயற்சிகளை அரசின் முயற்சிகளோடு இணைத்து மக்களின் பொருளாதார சமுதாய நிலைகளை மேம்படச் செய்யச் செயல்படும் திட்டங்கள் தாம் சமுதாய நிலத்திட்டமாகும். இத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற முனைப்புச் சக்தி மக்களிடமிருந்தே எழ வேண்டும். கிராமப்புறங்களில் செயலற்றுத் தேங்கி நிற்கின்ற மனித ஆற்றலை ஒன்று திரட்டி, பணிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்குடன் சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பெற்றது.

தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்தவுடன், சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒரு மாற்றத்தை அடைந்தது. ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரமும், ஊராட்சி ஒன்றியமாக மாறியது. ஊராட்சி ஒன்றியங்கள் மக்களுக்கான நல்வாழ்வுப் பணிகளுடன் வட்டார அளவில் நிறைவேற்றக்கூடிய வளர்ச்சிப் பணித் திட்டங்களையும் அரசின் பிரதிநிதிகள் பொறுப்பேற்று நிறைவேற்றினர். இந்தக் கட்டத்தில் ஒரு முக்கியமான மாற்றம் செயலுக்கு வந்தது. கிராம வளர்ச்சித் திட்டத்தை மையமாகக் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளில் கிடைக்கும் நிதிகளனைத்தையும் ஒன்று சேர்த்து ஊராட்சி வளர்ச்சி நிதிநிலைத் திட்டம், ஊராட்சி ஒன்றியங்களுக்காக உருவாக்கப்பட்டது. வளர்ச்சித்திட்டங்களை ஒருமித்த முறையில் நிறைவேற்ற, இம்முறை ஒரு பொருளாதாரக் கட்டுக்

கோப்பைத் தந்தது. இதனால் கிராமப்புற மக்கள் உற்சாகத்துடன் திட்டவேலைகளுக்குத் தங்கள் பங்கினை அளிக்கும் மனப்பாங்கும் அவர்களிடையே வளர உதவியது. சட்டத்தில் வரையறுத்துள்ள இனங்களின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கும் வருவாய், மானியம் மற்றும் இதர இனங்களின் வாயிலாக அரசிடமிருந்து வரும் எல்லா நிதி ஆதாரங்களும் ஊராட்சி வளர்ச்சி நிதி நிலைத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. உள்ளூர் மக்களின் நன்கொடைத் தொகை எந்த அளவு பெருகுகிறதோ அந்த அளவு ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த நிதிநிலையும் அதிகரிக்கும்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கியமான திட்டங்கள் சில:

பயிற்சித் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி இயக்கம் நடத்தும் கீழ்க்காணும் பயிற்சி நிலையங்களில் வெவ்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்களும், ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களும் பயிற்சி பெறுகின்றனர்.

1) மாநில சமுதாய வளர்ச்சி நிலையம், பவானிசாகர்

2) ஊரக வளர்ச்சிப் பணிப்பயிற்சி நிலையம், பவானிசாகர் (பட்டறைப் பிரிவு இணைக்கப்பட்டது), தே. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சை மாவட்டம்), சத்திய விஜயநகரம் (வடஆர்க்காடு மாவட்டம்), கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்)

மாநிலச் சமுதாய வளர்ச்சி நிலையத்தில், மாவட்ட மற்றும் வளர்ச்சி அலுவலர்களுக்கு ஊராட்சிக் கொள்கை பற்றிய பயிற்சியும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்குப் பணிப் பயிற்சியும் மேலும் ஊட்டச் சத்துணவுத் திட்டப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. வேளாண்மை, கால்நடை வளர்ச்சி போன்ற துறைகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்களுக்குப் 'பணிமுன் பயிற்சியும்' இரண்டாண்டுக் காலம் அளிக்கப்படுகிறது. கிராமக் கைவினைஞர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் —ஓராண்டுக் காலத்திற்கு — தொழிற்கூடப்பயிற்சி — தச்சு மற்றும்

கருமார்த் தொழில்களில் பயிற்சி – அளிக்கப்படுகிறது. பெண் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வசதிகள் சத்திய விஜய நகரத்திலும், தே. கல்லுப்பட்டியிலும் அமைந்துள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் உள்ளன. இந்த பயிற்சித் திட்டங்கள் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய பணிகளில் அலுவலர்களுக்கு மேலும் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் பணியைத் திறம்பட ஆற்றுவதற்கும் பெரும் உதவி கின்புரிறன.

பணிகள் பற்றிய திட்டங்கள்

கிராம வேலைத் திட்டங்கள்

இத்திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல், இணைப்புச்சாலை கள், பள்ளிக்கட்டிடங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் அனுமதிக்கப்படுகின்றன.

அனைத்துக் கிராமங்களுக்கும் நல்ல குடிநீர் வசதியை, குறிப்பாக அந்தக் கிராமத்திற்குள்ளோ அல்லது அருகிலோ கொண்டிராத கிராமங்களுக்கு நல்ல குடிநீர் நிரந்தரமாகக், கிடைக்க வகை செய்வதுதான் இந்தத் திட்டத்தின் முக்கியமான, உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய அம்சமாகும். இணைப்புச் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டினைப் புதிய சாலைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தாமல், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபாசன அமைப்புகள் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப் படவும், ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்டபூர்வமாக ஒப்படைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பாசன அமைப்பும் குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையேனும் கவனிக்கப்படும் அடிப்படை யில் அமைந்த பராமரிப்புத் திட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியங் கள் சிறுபாசன அமைப்புகளைப் பராமரித்து வருகின்றன. ‘உள்ளூர்ப் பாசன மானியம்’ என்னும் தலைப்பின்கீழ் அளிக்கப் பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் தொகையைச் செலவிடும். இதற்கென்று ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள தொகைகளை மட்டும் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள்

இப்பாசன அமைப்புக்களைச் சரிவரப் பராமரிக்க இயலவில்லை என்று தெரிய வந்ததால் ஒன்றியங்களின் பளுவைக் குறைக்கும் பொருட்டு, 100 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் உள்ள ஆயக் கட்டைக் கொண்ட எல்லாப் பாசன அமைப்புக்களையும் பொதுப் பணித்துறை எடுத்துக்கொள்ளும் என்று அரசு ஆணை பிறப்பித் துள்ளது. 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டைக் கொண்ட சிறுபாசன அமைப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து பராமரித்து வரும். 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டைக் கொண்ட ஏரிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப் பின்கீழ் விடப்பட்டு விட்டாலும் ஏரிகளைப் பராமரிக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் மானியங்களில் எவ்விதக் குறைப்பும் இன்றி, தற்போதைய அளவிலேயே மானியங்களை அரசு வழங்குகிறது.

உற்பத்தித் திட்டங்கள்

வேளாண்மை

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. அவை,

1. வேளாண்மை டெப்போ — கிடங்கு கட்டுதல்
2. ஊராட்சி மலைத் தோட்டங்களைப் பராமரித்தல்
3. மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் ஆட்சித் தலைவர் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக்கேற்பக் கீழ்க் காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந் தெடுக்கவிருக்கும் ஏனைய திட்டங்கள்.

1) ஊராடசிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாதனங்கள் வழங்குதல்
2) தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்
3) உதவிகள் விரிவாக்குதல் — கிராம விழாக்கள், கண்காட்சிப் போட்டிகள் முதலியன

4) வேளாண்மை விரிவாக்கப் பணி — விளக்கப்பாத்திகள் அமைத்தல்

5) தனிப்பட்டவர்களுக்குப் பசுந்தழை உரவிதைகள் வழங்குதல்

6) தனிப்பட்டவர்களுக்குப் விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல் முதலியன.

கால்நடை வளர்ப்பு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணி இனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்தலும்

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

3. கால்நடைகள், பால்பண்ணை, கோழித்தீவனம் மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் திட்டங்கள்.

மீன்வளம்

வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் துறைகளைப் போன்று ஊராட்சி ஒன்றியங்களின் மீன் வளங்களின் மேம்பாட்டுக்கென்று திட்டவட்டமாக ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பு மேம்பாடு எங்கெங்கு இயலுமோ அந்த ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இவற்றில் இடம் பெறக்கூடியவைகள்:

1. மீன் குஞ்சு வளர்ப்பு — பேணுதல்

2. மீன் குஞ்சுகளை வழங்குதல்

3. ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவைகள் முழுவதற்கும்)

நலப்பணித் திட்டங்கள்

தொடக்கக் கல்வி

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஒன்றியங்கள் அவற்றின் நிதி வசதிக்கேற்றவாறு ஒரு நியாயமான நிதியை ஒதுக்கித் தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி, விரிவுபடுத்தி, மேம்படுத்துவது; மேலும், அப்பகுதிகளில் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவது ஆகிய ஊராட்சி ஒன்றியங் களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது 1958-ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடமையாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளின் தொடக்கக் கல்வியை நிருவகிக்கும் முழுப்பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும்.

மதிய உணவுத் திட்டம்

ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் அமைக்கப்பட்டதன் மூலம் நாட்டு வளர்ச்சிப் பணிகளில் உள்ளாட்சிகளைப் பங்கு பெறச் செய்து மதிய உணவுத் திட்டத்தை அரசு நிலைத்துச் செயல்படச் செய்ய முடிகிறது. இம்மாநிலத்திலுள்ள பெரும் பாலான ஊராட்சி ஒன்றியப்பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் மதிய உணவுக்குழு உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித்தலைமை ஆசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார்கள்.

மக்கள் நால்வாழ்வுப் பணிகள்

ஆரம்ப சுகாதர நிலையங்கள்

ஆரம்ப சுகாதார நிலையம் சமுதாயத்திற்கு நோய்த் தடுப்புச் சிகிச்சை அளிப்பது, நோய்ச்சிகிச்சையளிப்பது மற்றும் மக்களின் உடல் நலன் நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வது ஆகிய பல் நோக்குடன் நிறுவப்பட்டதாகும். 374 வட்டாரங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பத்து வட்டாரங்களில் ஒரு கூடுதல் தொடக்கச் சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

தாய்-சேய்நல நிலையங்கள்

தாய்-சேய் நலப்பணிகளைச் செயல்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் மொத்தச் செலவில் 3ல் 2 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்

மருந்தகங்களை நிறுவுவதும், நிருவகிப்பதும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிருவகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, கிராம மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிருவகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதம் உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. குடும்ப நலத்திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றவும் ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பாக உள்ளன. சீரமைக்கப்பட்ட குடும்ப நலத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன.

சமூகக் கல்வி

கிராமங்களில் வயது வந்தோர், நாட்டு நடப்புச் செய்திகளின் மீது அவர்களுக்குள் விவாதிக்கும் ஒரு நிலையமாக சமூகக் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. உள்ளூர்ப் பள்ளி ஆசிரியர்கள் அல்லது படித்தவர்கள் வேறு யாரேனும் இதன் அமைப்பாளராக நியமிக்கப்படுகின்றார்கள். அவர்கள் செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி வைக்க உதவுகின்றனர். ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் திட்டம் தொடர்ந்து தீவிரமாகச் செயல்பட்டதனால், இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வைக்கப்பட்டுவிட்டன. ஊராட்சித் தலைமையிடங்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுவிட்டன. ஊராட்சிகளில் சிற்றூர்களிலும் இப்பொழுது வானொலிகள் நிறுவப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்களில்

மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும், ஆக்கப்பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு விவாதிக்கும் குழுக்களாகச் செயல் படுகின்றன.

மகளிர், குழந்தைகள் நலம்

1962 - 63-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சிஒன்றியத்துக்குக் குறைந்தது 30 மகளிர் மன்றங்கள் கிராமப்புறங்கள் அனைத்திலும் நிறுவப்பட்டுள்ளன. இம்மன்றங்களின் மூலம் மக்களிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இம்மகளிர் மன்றங்களின் மூலமாகக் கிராமப்புறத்திலுள்ள மகளிர், தையல், ஊட்டச்சத்து உணவு முறைகள் மற்றும் குடும்பநலம் போன்ற குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான எல்லா முறைகளிலும் அனுபவம் பெறுவதற்கு வாய்ப்புகள் பெறுகின்றனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுவதற்கெனத் தற்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மானிய உதவி (ரூ. 4, 000/-) வழங்கப்படுகிறது.

சிறப்புத் திட்டங்கள்

செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்

மத்திய அரசு, யூனிசெப் (UNICEF), மாநில அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1962-63 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் முறையாகச் செயல்முறைஊட்டச்சத்துணவுத்திட்டம்தொடங்கப்பெற்றது. கிராமப்பகுதிகளில் குறிப்பாகத் தயார்மார்களும், குழந்தைகளும் சத்துணவு உட்கொள்ளும் நிலையைப் பழக்கத்தில் கொண்டு வருவதும், பரப்புவதும், சத்துணவுப் பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யக் கிராம மக்களுக்கு உதவுவதும், குறிப்பாகக் கிராமச் சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற மக்களுக்கு அவற்றை கிடைக்கச் செய்வதுமே இத்திட்டத்தின் பொதுவான நோக்க

மாகும். வேளாண்மைத்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை மற்றும் நாட்டு மக்கள் குறிப்பாகக் கிராமப் பகுதிகளிலுள்ள தாய்மார்கள், குழந்தைகளின் சத்துணவு உட்கொள்ளும் நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட பிற முகவர் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையே கல்விப் பணிகளை ஒருங்கிணைக்கும் திட்டமாக இச்சத்துணவுத்திட்டம் விளங்குகிறது. 1962 - 63ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் 61 வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப் பெற்றுள்ளது. இவற்றில் 38 வட்டாரங்களில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத்திட்டம் முடிவுற்றது. 23 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத் தில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட வட்டாரங்களில் இத்திட்டம் 6 ஆண்டுக் காலத்திற்குச் செயலில் இருக்கும். திட்டக் காலத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு மத்திய அரசு, 'யூனிசெப்' மாநில அரசு ஆகியவற்றால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. திடம் செயல்படும் காலத்திற்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பெற்ற நிதி ஒதுக்கங்களைக் கொண்டு, ஒவ்வோராண்டும் என்னென்ன பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டு அந்த வகையில் முன்னைய ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஆண்டுத் திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன. இத்திட்டத்தில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான செலவு முழுவதையும் 'யுனிசெப்' நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது. தவிர, ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 மகளிர் மன்றங்களையும், 5 இளைஞர் மன்றங்களையும் உருவாக்க ரொக்க உதவியும் அளிக்கப்படுகின்றது. சத்துணவுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் இத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

1. மீன்வளம்

2. தோட்டக் கலை

   அ) தலைமையிடத்தில் நாற்றங்கால்

   ஆ) சமுதாயத் தோட்டம்

3. கால்நடை வளர்ப்பு

அ) கால்நடைப் பண்ணைகளை உருவாக்குதல்

ஆ) கோழி முட்டை வளம் பெருக்கும் பிரிவுகள்

இ) புழக்கடைப் பிரிவுகள்

ஈ) தீவன மேம்பாட்டுத் திட்டங்கள்

4. வீட்டுத் தோட்டங்கள்

5. பள்ளித் தோட்டங்கள்

6. சத்துணவுக் கல்வி

அ) மகளிர் மன்றங்களுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் உதவி

ஆ) உணவளிப்பது குறித்துச் செயல்முறை விளக்கத் திட்டம்

7. பொதுச் சுகாதாரப் பணிகள்

அ) ஆய்வு

ஆ) மருத்துவப் பரிசோதனை

இ) தடுப்பு ஊசி போடுதல்

'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்.

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட சிறப்புத் திட்டமாகும்.

இவர்களெல்லாம் எளிதில் நோய்க்கு ஆட்படும் வகையினர். ஆதலால் இன்றியமையாத வளர்ச்சிக் கால கட்டத்தில் இவர்களுக்குச் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தின்கீழ், பயன்பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளுக்கு 80 கிராம் வீதம் பாலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் 7 கிராம் வீதத்தில் எண்ணெயும் 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அளிக்கப்பட்டுப் பயன்பெறுவோரின் உயர்ந்தளவு எண்ணிக்கை 120 ஆகும். அதாவது குழந்தைகள் 80 பேர்; தாய்மார்கள் 40 பேர்.

கிராம முழு வளர்ச்சித் திட்டம்

வேளாண்மையையே பெரிதும் நம்பியிருக்கின்ற, கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் நலனை மேம்படுத்தும் உயரிய நோக்குடன், வேளாண்மையை மேம்படுத்தவும், காலத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் பரிந்துரைகளைச் செய்யும் பொருட்டு இந்திய அரசு வேளாண்மை குறித்த தேசீய ஆணையத்தை நிறுவியது. இந்த ஆணையம் கிராமதானக் கிராமங்களையும், சர்வ சேவா சங்கத்தையும் மேம்படுத்துவதற்காகத் திட்ட ஆணையத்துடன் விவாதம் நடத்தியது. கிராமதானப் பகுதிகளில் கிராம நிலங்களுக்குரிய உரிமை முழுவதும் ஏற்கனவே உள்ளபடியால், குறிப்பாக, அந்தப் பகுதிகளிலெல்லாம் முன்னோடி அடிப்படையில் வேளாண்மையை மேம்படுத்துவது அல்லது காலத்திற்கேற்ப மாற்றியமைப்பது குறித்த பணிகளைத் தேசீய ஆணையம் கருதிற்று. மேலும், கிராமதானப் பகுதிகளில் இத்திட்டத்தைச் செயற்படுத்தினால் இது மக்களிடையே பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதன் மூலம் அண்டையிலுள்ள கிராமங்களும் இத்திட்டத்தில் பங்குகொள்ள முன்வரலாம் என்றும் ஆணையம் கருதியது. வேளாண்மை குறித்த தேசீய ஆணையம் கிராம முழு வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலநீலித நல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னக் கோயிலாங்குளம், பெரிய நடுவக்குறிச்சி, சின்ன நடுவக்குறிச்சி, பட்டடைக்கட்டை ஆகிய நான்கு கிராமங்களைத் தெரிந்தெடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுவுதலும் பேணுதலும்:

வேளாண்மை, பொது சுகாதாரம் மற்றும் பல துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் அவை பற்றிய நுட்பத்தை- யும் ஊர்ப்புற மக்களுக்குப் போதிப்பதற்காகவும், விளம்பரம் செய்வதற்காகவும் சமுதாயத் தொலைக் காட்சிப் பெட்டிகளை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஊராட்சிகளில் நிறுவப்பட் டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளை மட்டுமின்றி, நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சியால் நிறுவப்பட்டுள்ள தொலைக் காட்சிப் பெட்டிகளையும் பராமரிப்பதற்காக ஊராட்சி வானொலிப் பராமரிப்பு நிலையத்தில் 'தொலைக் காட்சிப் பிரிவு' ஒன்றை ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

இவைகளேயன்றி, சில தனித்துவத் திட்டங்களும் சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் அடங்குகின்றன. அவை:
1. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் 2. ஒருங்கி ணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் 3. சிறு, நடுத்தர விவசா யிகளுக்கு வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் உதவித் திட்டங்கள் 4. எரிசாணவாயு (Bio—gas) உற்பத்தித் திட்டம் 5. குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை அளித்தல்.

சத்துணவுத் திட்டம் என்னும் திட்டம் கிட்டத்தட்ட நாள் தோறும் 80 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயனுறும் வகையில் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகின்றது. இவ்வாறு தமிழகம் சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.

தமிழகச் சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர் களுக்கு அளித்த 1984–85ம் ஆண்டின் சமுதாய வளர்ச்சித் திட்டங் கள் பின்வருவனவாகும். தமிழ்நாடு மாநிலத்தில் தற்போது 378 வளர்ச்சி வட்டாரங்களும், 620 பேரூராட்சிகளும், 106 நகராட்சிகளும் உள்ளன. இந்த உள்ளாட்சி மன்றங்களின் தேவைகளை நிறைவு செய்யவும், பிரச்சனைகளைச் சமாளிக்கவும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முனைப்புடனும் ஒருங்கிணைந்த முறையிலும் நிறை-

வேற்றுவது அவசியமாகிறது. கிராமப்புற மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று, பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் வகையில் இந்த மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்பார்கள்.

(1) தன்னிறைவுத் திட்டம்

குறிப்பிட கால அளவுக்குள், கிராமப்புற மக்களின் சமுதாய பொருளாதார வளர்ச்சிக்காக, அவர்களுக்குக் குடிநீர், சாலை, பள்ளிக் கூடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தருவதைத் தலையாய குறிக்கோளாகக் கொண்ட தன்னிறைவுத் திட்டம் அரசினரால் தொடங்கப்பட்டது. இத் திட்டம் மூன்று கட்டங்களாக அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டது ; அதன் விவரங்கள் வருமாறு :

முதல் கட்டம் (1980—81)	..	69 வளர்ச்சி வட்டாரங்கள்
இரண்டாம் கட்டம் (1981—82)	..	150 வளர்ச்சி வட்டாரங்கள்
மூன்றாம் கட்டம் (1982—83)	..	159 வளர்ச்சி வட்டாரங்கள்
மொத்தம்	..	378 வளர்ச்சி வட்டாரங்கள்

(2) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் 1980 அக்டோபர் முதல் மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் செலவினைத் தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:

(1) கிராமப்புறப் பகுதிகளில் வேலை வாய்ப்பற்ற, தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பற்ற ஆண், பெண் இருவருக்கும் பயனுள்ள முறையில் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்படுத்தல்.

(2) கிராமப்புற அடிப்படை வசதிகளைப் பெருக்கு வதற்காகச் சமுதாய பொதுச் சொத்துக்களை நிலையாக ஏற்படுத்தல். அதன் மூலம் கிராமப் பொருளாதாரம் பெருகுவ துடன், கிராம மக்களின் வருமானமும் உயரக் கூடும்.

(3) கிராம மக்களின் சத்துணவு நிலை, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு ரொக்கமாக ரூ. 5.15 குறைந்தளவு ஊதியமும், நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் கொடுக்கப்படுகின்றன. கிராம ஏழை மக்க ளுக்கு இத்திட்டத்தின் முழுப் பயனும் கிடைக்கும் வகையில், ஒப்பந்தக்காரர்கள் இன்றி பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

1979—80 முதல் 1984 ஜனவரி முடிய உள்ள கால அளவில் 1,454.40 இலட்சம் உழைப்பு நாட்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

(3) ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

இந்திய அரசின் முழு உதவியுடன் இவ்வாண்டிலிருந்து 'ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்' என்கிற புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் இரண்டு அடிப்படை நோக்கங்களைக் கொண்டுள்ளது; (1) ஓராண்டில் 100 நாட்கள் வரையில் குறைந்தது ஒவ்வொரு நிலமற்ற தொழிலாளர் குடும்பத்தின் உறுப்பினருக்கும் உத்திர வாதம் அளிக்கும் நோக்குடன் நிலமற்ற கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்தல், விரிவு படுத்தல்; (2) கிராமப் பொருளாதார விரைவான வளர்ச்சிக்கு வகை செய்யக்கூடிய கிராம அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு நிலையான சொத்துக்களை ஏற்படுத்தல்.

சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களின் மூலம் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுவது போன்றே இத்திட்டம் ஏறக்குறையச் செயல்படுத்தப்படவிருக்கிறது. நிலமற்ற கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பும் அதேசமயத்தில் கிராமப் புறத்தில் பெருமளவு அடிப்படை வசதிகளும் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

(4) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

நாடு விடுதலைபெற்ற பின்னர் கடந்த 30 ஆண்டுகளில், நம்முடைய பெருளாதார வளர்ச்சி நவீனப்படுத்தப்பட்டுள்ளது; தற்சார்பு நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது; மக்கள் தொகை பெருகியுள்ளபோதிலும், ஓரளவுக்கு நபர் வாரி வருமானம் உயர்ந்துள்ளது. எனினும், வேலைவாய்ப்பற்றோரின் எண்ணிக்கை இறங்குமுகமான போக்கினைக் காட்டவில்லை ; மக்கள் தொகையில் 40 சதவீதம் பேர் இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். வளர்ச்சிப் பணிகளை ஒரு பக்கம் கிராமப் புறங்களும், மறுபக்கம் கிராமச் சமுதாய மக்களும் பெரிதும் பயன்படுத்திக் கொண்ட விவரங்களை நமக்கு அனுபவம் உணர்த்தியுள்ளது. வேறு வகையில் கூறின், கிராமப்புற ஏழை மக்களுக்குத் துறை அல்லது திட்ட அணுகுமுறைகள் அவர்களுடைய வறுமையினைப் போக்கியதாகத் தெரியவில்லை; வறுமையிலுள்ள மக்களைக் கண்டறிதல், அவர்களுக்குக் கடன் வசதி இடுபொருள் வாங்க உதவி, விற்பனை வசதி முதலியவற்றைச் செய்து கொடுத்தல் ஆகியவைகள் மூலம் நேரிடையாகவே மக்களின் வறுமையினை எதிர்த்தாலன்றி, வேறு எந்த வகையிலும் ஏழைமக்களின் நிலையை உயர்த்த இயலாது. மேலும், வேறு எந்தவகையான முயற்சிகளும் அவர்களுடைய வறுமையினைப் போக்குவதற்கும் பயனளிப்பதாகாது.

பின்வரும் இரண்டு நோக்கங்களை எய்துவதற்கு, புதிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும், செயல்படுத்திவரப்படும் ஏனைய தனித்திட்டங்களும் பெரிதும் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது :

(1) வேலைவாய்ப்பின்மை, தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றைப் போக்குதல்.

(2) மக்கள் தொகையில் மிகவும் ஏழ்மையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பெருமளவிற்கு உயர்த்தல்.

மக்கள் வறுமையிலிருந்து மீளுவதற்கு இந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முக்கியமாக இருப்பதால், வறுமை நிலையிலுள்ள மக்களைக் கண்டறிவதற்கும் மேற்கொள்ளப்படும் அடிப்படைப் பணி அவர்களுடைய வருமானத்தை அறிவதேயாகும். இக் காரியத்திற்காக, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அதாவது நபர் ஒருவருக்கு மாத வருமானமாக ரூ. 62 பெறுகிறவர்கள் கண்டறியப்படுகிறார்கள்.

இத்திட்டம் 1978-79-ல் 161 வளர்ச்சி வட்டாரங்களிலும், 1979-80-ல் 187 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2-10-1980 முதல் இம்மாநிலத்திலுள்ள 376 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக்குழு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வட்டாரத் திட்டப் பணிகளை ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கின்றது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு, வட்டாரத் திட்டப் பணிகளுக்கும் மாவட்டத் திட்டப் பணிகளுக்கும் ஒப்புதல் அளிக்கின்றது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மொத்த ஒதுக்கீட்டில் 10 சதவீதத்திற்கு அடிப்படை வசதிகள் வழங்கப்படுகின்றன. ஒதுக்கீட்டில் 7½ சதவீதம் நிருவாகச் செலவினைச் சரிக்கட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஒதுக்கீட்டில் எஞ்சிய 2½ சதவீதம் பயிற்சி, ஆய்வு முதலிய வகையில் செலவினங்களைச் சரிக்கட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

எஞ்சிய 80 சதவீத ஒதுக்கீடு, வேளாண்மை, சிறுபாசனம், கால்நடை வளர்ப்பு, காடு வளர்ப்பு, மீன்வளம், பட்டுப்புழு வளர்ப்பு

போன்ற துறைகளில் பல்வேறு திட்டங்களை எடுத்துக் கொள்வதற்காக இலக்கிடப்பட்ட பயனீட்டாளர்களுக்கு உதவித்தொகை அனுமதிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

தொழில்பணிகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும், தமிழ்நாடு கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. அடிப்படை வசதிகள் கிடைக்காத போது ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அடிப்படை வசதி நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதி அளிக்க இயலூர்திக் கால்நடை சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கவும், உறைவிந்து சேமிப்பு நிலையங்கள் அமைக்கவும், கால்நடை வளர்ப்பு என்பதன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, இயலூர்தி மண்வளச் சோதனை ஆய்வுக்கூடம் ஏற்படுத்த வேளாண்மை என்பதன் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பட்டு வளர்ப்பு என்பதன் கீழ் ஏராளமான பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படடுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பயனீட்டாளர்களர்களான நெசவாளர்களுக்கு உதவும் பொருட்டுத் தொழில் நெசவாளர் சங்கங்களில் விசைத்தறித் தொகுதிகள் ஏற்படுத்தல், தறிகள் நிறுவுதல் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(5) கிராமப்பகுதி இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்

கிராமப்பகுதி இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றும் முக்கிய நோக்கத்துடன் கிராமப்பகுதி இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் 1979 - இல் தொடங்கப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கென்று கிராமப் பகுதி இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிக்காகும் செலவு முழுவதும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து செய்யப்படுகிறது. ஆண்டொன்றுக்கு, வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு, குறைந்தது 40 இளைஞர்களுக்கேனும் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் ஆறு மாதங்களுக்குப் பயிற்சி உதவித் தொகை கொடுக்கப்படுகிறது.

பயிற்சி முடிந்த பின்னர், பயிற்சியாளர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தக்க உதவி அளிக்கப்படுகிறது.

(6) கிராம எரிசக்தி ஆதாரங்கள்

மத்திய அரசு, இருபது அம்சத் திட்டத்தில் ஓர் அம்ச மாகக் கரிமவாயு உற்பத்தித் தேசியத் திட்டத்தைத் தமிழகத்தில் 1981 - 82 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கியுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 35, 000 யூனிட்டுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிலையான குவிமாடக் கலன், உருக்காலான பீப்பாய் வடிவக் கலன் ஆகிய இருவகைக் கலன்கள் தற்போது பயன் பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதன்பொருட்டுச் சிறு உழவர்களுக்குப் பெருமளவு உதவித் தொகை அளிக்கப்படு கிறது. எஞ்சிய தொகை வங்கிக் கடன் வடிவில் வழங்கப்படு கிறது. தொகை கொடுப்பவர்களுக்கும், கொத்தனார்களுக்கும், மத்திய அரசின் நிதியுதவியுடன் இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதி விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியிலும் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி, பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், கிராமமகளிருக் கென்று பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

நவீன அடுப்புகள்

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முடிவில் நவீன அடுப்புகளை அமைக்க மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இரண்டு வகை அடுப்புகளை உருவாக்கக் கருதப்பட்டுள்ளது. அவை : (1) முழு உதவித் தொகையுடன் அமைக்கப்படும் நிலையான அடுப்பு, (2) 50 சதவீத உதவித் தொகையுடன் தயாரிக்கப்படும் எடுத்துச் செல்லத்தக்க அடுப்பு. 50 கிராமங்களில் 5, 000 நவீன அடுப்புகளை உருவாக்கும் இலக்குடைய இத்திட்டத்தைத் தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்களில் செயலாக்கக் கருதப்பட்டுள்ளது.

(7) ஏனைய திட்டங்கள்

தற்போதுள்ள கிராமப் பகுதியிலுள்ள இணைப்புச் சாலை களைச் சரளைக்கல் பரப்பி, தார் போடுவதன் மூலம் சீரமைக்

கவும், வாடகைக் கட்டிடங்களில் நடைபெறுகின்ற ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குச் சொந்தமாகக் கட்டிடங்கள் கட்டித் தரவும், குடிநீர் வசதி தேவைப்படும் கிராமங்களுக்கு அல்லது புதிதாக ஏற்பட்ட குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பிடங்களுக்குக் குடிநீர் வழங்கவும், கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் கட்டவும், மீன்வளர்ப்புத் திட்டத்தைச் செயலாக்கவும் இந்த நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

II. பேரூராட்சிகள் இயக்கம்

இம்மாநிலத்தில் 71. 68 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 620 பேரூராட்சிகள் உள்ளன. அவற்றின் வகைப்பாடு வருமாறு:

தொடர் எண்	பேரூராட்சிகளின் வகை	எண்ணிக்கை
1	இரண்டாம் நிலை	100
2	முதல் நிலை	302
3	தேர்வு நிலை	205
4	நகரியங்கள்	13
	மொத்தம் ..	620

(1) தன்னிறைவுத் திட்டம்

பேரூராட்சிகளில் உள்ள இன்றியமையா வசதிகளை மேம் படுத்தவும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து இவ்வரசு தன்னிறைவுத் திட்டத்தைப் பேரூ ராட்சிகளில் படிப்படியாகச் செயல்படுத்த அனுமதி வழங்கியுள் ளது.

முதற்கட்டத்தில் 1982-83 ஆம் ஆண்டில் 146 பேரூராட்சி கள் தெரிந்தெடுக்கப்பட்டன.

இத்திட்டம் 1983-84 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 200 பேரூராட்சி கள் தெரிந்தெடுக்கப்பட்டன,

(2) குடிநீர் வழங்குதல்

தற்போது 170 பேரூராட்சிகளில் முறைப்படி பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளது. 43 பேரூராட்சிகளில் இப்பணி நடந்தேறி வருகிறது. எஞ்சிய 407 பேரூராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும். 1982-83 ஆம் ஆண்டில், இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும் நகர்ப் பகுதி குடிநீர் வழங்கும் திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவியளிப்பதை மாற்றியமைத்துள்ளது.

(3) இன்றியமையா வசதிகள்

பேரூராட்சிகள், 1,320 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகளையும், 3,230 கிலோ மீட்டர் நீளமுள்ள கப்பிச் சாலை களையும், 5,650 கிலோ மீட்டர் நீளமுள்ள சரளைக் கல் மண் சாலைகளையும் பராமரித்து வருகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றிடத் திட்டம் வகுக்கப்பட் டுள்ளது.

பேரூராட்சிகள் சுமார் 4,500 கிலோ மீட்டர் நீளமுள்ள தெருக்களையும் அவற்றில் 1,386 கிலோ மீட்டர் நீளமுள்ள கல்கட்டுமான வடிகால்களையும் பராமரிக்கின்றன.

(4) வருமானம் தருகின்ற இனங்கள்

பேரூராட்சிகள் சுமார் 200 பேருந்து நிலையங்களையும், 260 அங்காடிகளையும் பேணி வருகின்றன. பேருந்து நிலையங் கள், அங்காடிகள், கடைத் தொகுதிகள், கட்டணக் கழிப்பிடங் கள் முதலானவற்றைக் கட்ட, பேரூராட்சிகள், மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் பெறுகின்றன.

III. நகராட்சி நிருவாகம்

இம்மாநிலத்தில், நகராட்சிகள் நிருவாக இயக்குநரின் நிரு வாகக் கட்டுப்பாட்டின் கீழ், தற்போது, 98 நகராட்சிகளும்,

8 நகராட்சி நகரியங்களும் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :—

எண்		நகராட்சி களின் எண் ணிக்கை	நகரியக் குழுக்களின் எண்ணிக்கை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)
1	சிறப்பு நிலை ..	7	..	7
2	தேர்வு நிலை ..,	11	5	16
3	முதல் நிலை ..	29	1	30
4	இரண்டாம் நிலை	32	2	34
5	மூன்றாம் நிலை ..	19	..	19
	மொத்தம் ..	98	8	106

அண்மைக் காலமாக, கிராமப் பகுதிகள் தீவிரமாக வளர்ச்சியடைந்து நகரமாக மாறி வருவதால், கிராம மக்கள், நகரங்களில் குடியேறுவது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக நகரப் பகுதிகளில் ஏற்படும் பிரச்சனைகளும் அதிகரித்துள்ளன. பிரச்சனைகளைச் சமாளிப்பதற்காகப் பொது மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கான பணி பன்மடங்காக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

வளர்ச்சித் திட்டங்கள்

(அ) சிறு-நடுத்தர நகரங்களை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்

ஒரு இலட்சத்திற்குக் குறைவாக மக்கள் தொகை கொண்ட சிறு நடுத்தர நகரங்களில், குறிப்பாக மாவட்டத் தலைமையிடங்களில் அமைந்துள்ள நகரங்களில், முன்னுரிமை அடிப்படையில், மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டமான சிறு நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், 1979 - 80 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கம்;

1. வேலை வாய்ப்பை அதிக அளவில் ஏற்படுத்துவது :

2. மக்கள் கிராமப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்குச் செல்வதைக் குறைப்பது அல்லது தடுப்பது;

3. இதுபோன்ற நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்துவதும் ஆகும்.

(ஆ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்:

தற்போது, பல நகராட்சிகளில் நிதிப்பற்றாக்குறை உள்ளது. நிருவாகச் செலவு, பொருட்களின் விலை ஆகியவை பெருமளவு அதிகரித்து வருவதை அவை களால் சமாளிக்க இயல வில்லை. இதன் காரணமாகப் பொது மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க இயலாமல் உள்ளது. நகராட்சிகளின் நிதிநிலையைப் பெருக்குவதற்காகப் பின்வரும் வருவாய் ஈட்டக்கூடிய மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக நகராட்சிகளுக்கு அரசு கடனுதவி வழங்க முன்வந்துள்ளது. அவை யாவன :— கடைகள், சிறுகடைகள், அங்காடிகள், பேருந்து நிலையங்கள், வாடகைக் கார்கள் நிற்குமிடங்கள், டிரக்குகள் நிற்குமிடங்கள், கட்டணக்கழிப்பிடங்கள் முதலியன போன்ற திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியன.

இத்திட்டப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம், இப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ள நகராட்சிகள், புதிதாக சேர்க் கப்பட்டுள்ள சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாயின் மூலம் பெருமளவு வருவாயை ஈட்டுகின்றன.

2) தன்னிறைவுத் திட்டம்

நிதிநிலை பற்றாக்குறையாக உள்ள நகராட்சிகள், மேம் பாட்டுத் திட்டங்களைமேற்கொள்வதற்காகவும், பொதுமக்களுக்குச்

சில அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் வகை செய்யும் பொருட்டு, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அந்நகராட்சிகளுக்கு நிதியுதவியளிக்க அரசு முன்வந்துள்ளது.

(3) சாலைப் பணிகள் (முழுக்கடன்)

நகராட்சிகள், நகரியக் குழுக்கள் ஆகியவை தற்போது 5, 674, 695 கிலோமீட்டர் தொலைவுள்ள சாலைகளைப் பராமரித்து வருகின்றன.

வணிக வண்டிகள் பெருமளவில் சென்றுவருவதன் காரணமாக நகராட்சிச் சாலைகளின் போக்குவரத்து நெரிசல் அதிகமாகியுள்ளது. பருவ மழைக்காலங்களில், இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படக்கூடிய பெருமழை வெள்ளம் ஆகியவற்றின் விளைவாக, நகராட்சிச் சாலைகளில் பெரும் அளவில் சேதம் ஏற்படுவதால், சாலைகளை மோட்டார் வண்டிகள் போக்குவரத்திற்கு ஏற்றதாக மாற்றும் வகையில் செப்பனிடுவதற்கு, நகராட்சிகள், தங்களுடைய வருவாயின் பெரும்பகுதியைச் செலவிட வேண்டியுள்ளது.

பெரும்பான்மையான நகராட்சிகளில், நிதிப்பற்றாக்குறை உள்ளதால், நகராட்சிகள்/ நகரியக் குழுக்களின் நிருவாகத்திலுள்ள சாலைகள் நல்ல நிலையில் பராமரித்து வருவதற்குத் தேவையான நிதியுதவியை, அரசு திட்டப்பணி, திட்டம் சாராத பணி, திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

(4) தூசுபடியாத வகையில் நகராட்சிச் சாலைகள் போடுதல்

(பாதித் தொகை கடன், பாதித் தொகை மானியம் என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது)

திட்டம் சாராப் பணிகள் திட்டத்தின் கீழ் பாதித் தொகை கடன், பாதித் தொகை மானியம் என்ற அடிப்படையில் நகராட்சிச் சாலைகளை மேம்படுத்தப்படுவதற்காக, அரசு வருடத்திற்கு நிதியுதவி வழங்குகிறது.

(5) குடிநீர் வழங்கு திட்டம்

106 நகராட்சிகள் - நகரியக் குழுக்களில், 93 நகராட்சிகள்—6 நகரியக் குழுக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(6) குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்

கழிப்பிடங்களைப் பராமரிப்பது நகராட்சிகளின் கடப்பாடுகளில் ஒன்றாகும். உலர் கழிப்பிடங்களை நன்முறையில் பராமரிக்கவில்லையெனில், நகரத்தின் தூய்மையைக் கெடுப்பதோடல்லாமல், சுகாதாரக்கேட்டையும் விளைவிக்கும். பெருமளவில் நகராட்சிகளின் மக்கள் தொகை, மீள்திறனற்ற வள வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால், நகர்ப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளை முறையாக மேற்கொள்வது அறைகூவலான பிரச்சனையாகும். எனவே, நகர்ப்பகுதிகளின் அவசரத் தேவையான, முறையான துப்புரவுப் பராமரிப்புப் பணி தவிர்க்க முடியாத தேவையாகக் கருதப்பட்டது. எல்லா வகையைச் சேர்ந்த மக்களுக்கும் உதவி செய்யும் நோக்குடன், 'குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்' என்னும் புதிய திட்டம் நகர்ப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறைந்த செலவிலான ஆராய்ச்சி மற்றும் செயல் திட்டத்தின் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(7) விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

12 இலட்சம் மக்கள் தொகையுள்ள 106 நகராட்சிகள், நகரியக் குழுக்களில் சுமார் 1,100 குடிசைப் பகுதிகள் உள்ளன. நகராட்சிகள்—நகரியக் குழுக்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்குப் பின்வரும் பொது வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டி உள்ளன.

1. மழை நீரையும் கழிவுநீரையும் அகற்றுவதற்காகச் சாலை இருமருங்கிலும் மழை நீர் வடிவதற்கான வடிகால்களுடன் சாலைகள் போடுதல்.

2. குடிநீர் வழங்கல்

40—50 குடும்பங்களுக்கு ஒரு பொதுக் குழாய் போடுதல், பொதுக் குழாய் போடமுடியாத இடங்களில் துளைக் கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் தோண்டப்பட வேண்டும்.

3, பொதுக் கழிப்பிடங்கள் : 10 குடும்பங்களுக்கு ஓர் இடம் (One Seat) என்ற வீதத்தில் பொதுக் கழிப்பிடங்களும், சிறுநீர்க் கழிப்பிடங்களும் கட்டப்பட வேண்டும். போதுமான தண்ணீர் வசதியும் அளிக்கப்பட வேண்டும்.

4. தெரு விளக்கு வசதி : குடிசைப் பகுதி முழுவதிலும் வசதியான சந்திப்புகளில் தெரு விளக்குகள் போடப்பட வேண்டும். கோயம்புத்தூர் உட்பட (தற்போது இது மாநகராட்சியாகும்) 46 நகராட்சிகளுக்கு அரசு இதுவரை ரூ 350.00 இலட்சம் வழங்கியுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி 210 குடிசைப் பகுதிகளை மேம்படுத்தியுள்ளது. இதனால் அவற்றில் வாழ்கின்ற 6 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

(8) பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்

நகராட்சிகளிலும், நகரியக் குழுக்களிலும் உள்ள சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கும், சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் 1977-78-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தெரிந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் வாழும் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டுக் குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி, பொதுக் கழிப்பிட வசதி ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன,

(9) ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்,

106 நகராட்சிகள், நகரியக் குழுக்களில், 100 நகராட்சிகள் நகரியக் குழுக்கள் 1026 ஆரம்பப் பள்ளிகளையும், நடுநிலைப் பள்ளிகளையும் பராமரித்து வருகின்றன. இப்பள்ளிகளில் சுமார் 3,42,800 மாணவ மாணவிகள் படிக்கின்றனர். இவற்றின் கீழ் செயல்பட்டு வரும் 1,026 ஆரம்பப் பள்ளிகளில், 302 பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களிலும், 93 பள்ளிகள் கூரைவேய்ந்த கொட்டகைகளிலும் அமைந்துள்ளன. 631 பள்ளிகளில், போதுமான இடவசதி இல்லை. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை யொட்டி, இப்பள்ளிகளில் கூடுதலாக இடவசதியை விரைவில் ஏற்படுத்துவது அவசியமாகியுள்ளது. நகராட்சிக் குழுக்கள் தங்கள் சொந்த நிதி வாயில்களிலிருந்து இத்திட்டத்தை மேற்கொள்வதற்கு அவற்றிடம் போதுமான நிதி இல்லை. எனவே, ஒவ்வொரு வகை நகராட்சிகளையொட்டி, வீதாச்சார அடிப்படையில் வழங்கப்படும் மானிய வடிவில் நிதியுதவி அளிப்பதன் மூலம் நகராட்சிகளுக்கு, நகரியக் குழுக்களுக்கு உதவிபுரிய அரசு முன்வந்துள்ளது.

(10) நகராட்சி உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் கட்டுதல்

106 நகராட்சிகள், நகரியக் குழுக்களில் 30 நகராட்சிகளும், ஒரு நகரியக் குழுவும் 28 உயர்நிலைப் பள்ளிகளையும் 33 மேல் நிலைப்பள்ளிகளையும் பராமரித்து வருகின்றன. இப்பள்ளிகளில் 66,810 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். பல நகராட்சி உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் மிகப் பழமையானவை. அவற்றில் படிக்கும் மாணவ, மாணவிகள் எண்ணிக்கையையொட்டிப்பார்த்தால் அவற்றில் போதுமான இட வசதி இல்லை.

(11) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 2 வயது முதல் 4 வயது முடிய உள்ள குழந்தைகளுக்காக 106 நகராட்சிகளிலும், நகரியக் குழுக்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குழந்தைகளின் மொத்த எண்

ணிக்கை 3, 95, 741 ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2, 12, 3 குழந்தைகள் சத்துணவு பெறுகிறார்கள். இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்காகத் தற்போது செயல்பட்டுவரும் சத்துணவு மையங் களின் மொத்த எண்ணிக்கை 2, 965 ஆகும். இவற்றில் 176 மை யங்கள் வாடகைக் கட்டிடங்களிலும், 2, 579 மையங்கள் இத் திட்டத்தின் கீழ் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களிலும் செயல் பட்டு வருகின்றன. சத்துணவு பெறும் 2, 12, 397 குழந்தைகளில் 1, 05, 155 பேர் சிறுவர்களாவர். 1, 07, 242 பேர் சிறுமிகளாவர். இவர்களில் 65, 825 பேர் ஆதித்திராவிடர் பழங்குடியினராவர்.

பள்ளி உணவுத் திட்டம்

மேற்கூறிய திட்டத்தைப் போன்று. 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள குழந்தைகட்கும், 10 வயது முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகட்கும் சத்துணவு வழங்கும் முதலைமச்சர் திட்டம் நகரங்களில் 15— 9 —1982 முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்த நகராட்சி ஆரம்பப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும் உணவு வழங்கும் பொது உணவுக் கூடங்களும், மைய உணவுக் கூடங்களும் நீக்கப்பட்டு, தனித் தனிச் சமையற் கூடங்கள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. தற்போது 1, 023 உணவு வழங்கும் மையங் கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 256 மையங்களில் நிலையான சமையற்கூடங்கள் உள்ளன. 767 சமையற்கூடங்கள் புதிதாகக் கட்டப்படுள்ளன. பதிவேடுகளின் படி இப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 3. 36 இலட்ச மாகும். இத்திட்டத்தின் கீழ் 1.70 இலட்சம் குழந்தைகளுக்குச் சத் துணவு அளிக்கப்படுகிறது.

இது தவிர, குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுவ தால் பொதுவாக அவர்களுடைய உடல் நலம் முன்னேறி யுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக இத்திட்டம் சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது.

(12) பயிற்சி நிலையம்

நகராட்சி நிருவாகத்தில் முக்கிய பதவிகள் வகிக்கும் அதிகாரிகளும், பணியாளர்களும், நிருவகத்தில் நிபுணத்துவம் பெற

இயலும் வகையில் அவர்களுக்கு உரியவாறு பயிற்சியளிக்க வேண்டியது அவசியம் என்று அரசு கருதியது. இதனைக் கருத்திற் கொண்டு, பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு 1981-82 ஆம் ஆண்டில் ஒப்புதலளித்துள்ளது. இந்நிலையம் 'தமிழ்நாடு நகர்ப்பகுதி ஆய்வு நிலையம்' என்ற பெயரில் 24 — 11 — 1981 முதல் கோயம்புத்தூரில் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

(13) ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டம்

வேலையில்லாப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியின் ஒரு பகுதியாக குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தினை இந்த அரசு ஏற்கனவே ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது. கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் குறித்து மாநில அளவில் ஆய்வு நடத்தியதில் சுமார் 5 இலட்சம் பேர் சுய வேலை வாய்ப்பிற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். என்று தெரியவருகிறது. இத்திட்டம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புப் பணித் துறையினால் நிருவகிக்கப்படுகிறது.

14

8. சென்னை நகர அரசியல்

சென்னை நகர் 1956-ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் ஏற்படுகின்ற வரையிலும், தமிழ்நாடு, ஆந்திரா, மற்றும் கேரளா ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் தலைநகராக இருந்தது. நாட்டின் பல்வேறு பகுதி அரசியல்வாதிகளும் 19-ஆம் நூற்றாண்டில் சென்னையை நோக்கி விரைந்தனர். ஏனெனில் சென்னை நகரில் தான் அனைத்துக் கல்வி நிறுவனங்களும், நிருவாக அலுவலகங்களும் அமைந்து இருந்தன. மேலும், அது அரசியலில் பங்குபெற மிகுந்த வாய்ப்புள்ள இடமாகத் திகழ்ந்தது. எனவேதான் ஏராளமாக அரசியல்வாதிகள் இங்கு வந்து குடியேறினர். இந்தச் சூழ்நிலையில் சங்கங்கள் ஏற்படுத்தி மக்களின் குறைகளை நிவர்த்திக்கலாமென்ற எண்ணம் மக்களிடையே அரும்பியிருந்தது. இதன் பயனாக, 1852ஆம் ஆண்டு ஜூலை மாதம் சென்னை வாழ் மக்களின் சங்கம் (Madras Native Association) ஏற்படுத்தப் பட்டது. வருவாய்த்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் தவறுகளைக் களைய வேண்டுமென்பதற்கும், அரசாங்கச் செலவுகளைக் குறைக்கவும், உள்ளாட்சி நிருவாகம் அமைக்கவும் இது ஏற்படுத்தப்பட்டது. உள்ளாட்சி நிருவாகத்தில் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தால், நாட்டின் முன்னேற்றமும் எளிதில் ஏற்படுமென்பதை அறிந்து கொள்ளவேதான், உள்ளாட்சி நிருவாகத்தை அதிகமாக ஆதரித்தனர். சென்னை வாழ் மக்கள் சங்கம் சென்னையில் முதல் சங்கமெனக் கருதப்படுகிறது. ஆனால் இது மாதிரியாகப் பல சங்கங்கள் சிறிது காலத்திற்குள்ளேயே வளர ஆரம்பித்தன. மக்கள் கூட்டாகச் சேர்ந்து, குறைகளைக் களைய இது பொருத்தமான முறையாக இருந்தது.

சென்னையில் திருவல்லிக்கேணி இலக்கியக் கழகம் ஒன்று (Triplicane Literary Society) 1874 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. சென்னையில் உள்ள சில பட்டதாரிகள் இதனை ஏற்படுத்திய தால் இது மிகவும் திறமையாகச் செயல்பட்டது. இது 1875ஆம் ஆண்டிலிருந்து மிகவும் தீவிரமான அரசியலில் பங்கு பெற்று உள்ளது. இன்று பிரபலமாக வெளிவந்து கொண்டிருக்கும் இந்து ('The Hindu') பத்திரிக்கை தங்கசாலைச் தெருவில் 1878 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம்தேதி ஆரம்பிக்கப்பட்டது.இதனை ஆரம்பித்தவர்கள் திருவல்லிக்கேணி இலக்கியக்கழக உறுப்பினர் கள் ஆவர். இக்கழகத்தில் மிகவும் ஆர்வமாகவும், தீவிரமாகவும் செயல்பட்டு வந்த ஆறு உறுப்பினர்கள் இந்தப் பத்திரிக்கையை ஆரம்பித்தனர். சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு மக்களின் பிரதிநிதியைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென சட்டம் இருந்த போதிலும் அச்சட்டத்திற்கு ஆளுநரின் அனுமதி கிடைக்காமல் போய்விட்டது. இருப்பினும் மக்களிடம் அதிகமான விழிப்புணர்ச்சி தோன்றியிருப்பதை அறிந்து, இன்னும் காலந்தாழ்த்தினால் புரட்சியே உருவாகலாம் என்ற ஐயம் ஆட்சியாளர்களிடம் ஏற் பட்டது. எனவே தான் மாநகராட்சி ஏற்படுத்தி 190 வருடங் களுக்குப் பின்னர் 1878 ஆம் ஆண்டு மாநகராட்சியில் தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வசதி செய்யப்பட்டது. இதற்கு முன்னால் மக்கள் பிரதிநிதிகள் என்று முழுவதும் கூறா விட்டாலும் மாநகரவைக்குழு உறுப்பினர்கள் (Burgesses), மாநக ராட்சி நியமன உறுப்பினர்கள் (Olderman) போன்றோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் செல்வாக்கு மிகுந்த தனிநபர் களையும், செல்வந்தர்களையும், இனத்தலைவர்கள் போன்றவர் களை மட்டுமே தேர்ந்தெடுத்து, நியமனம் செய்தார்கள்.

சென்னை மாநகராட்சியின் 1878ஆம் ஆண்டுச் சட்டம் 32 உறுப்பினர்களில்16பேர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வழி செய்தது. மக்களுடைய அரசியல் விழிப்புணர்ச்சிக்கு ஏற்ப இச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏனெனில் திருவல்லிக்கேணி இலக்கியக் கழகத்தைப் போல் 50 கழகங்கள் 1882ஆம் ஆண்டுக்குள் ஏற் படுத்தப்பட்டன. இவை 1885 ஆம் ஆண்டில் 100ஆக உயர்ந்தன. ரிப்பன் பிரபுவின் 1882ஆம் ஆண்டுத் தீர்மானம் வெளியிட்ட ஓராண்டிற்குள், ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்கள் சென்னை

யில் நடத்தப்பட்டன. இந்தத் துரித வளர்ச்சியைப் பற்றி இந்தப் பத்திரிகை ஆசிரியர், மக்களின் அரசியல் அறிவு வளர்ச்சி பெற்றுள்ளதை காட்டும் அடையாளம் தான் இந்தக் கழகங்களும், கூட்டங்களும் என எழுதியுள்ளார்.

பின்னர் வரிசைக் கிரமமாக ஏராளமான செயல்விளக்கக் கூட்டங்கள் 1883-ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து 1884-ஆம் ஆண்டு ஜனவரிக்குள் சென்னை நகரில் நடைபெற்று உள்ளன. முதல் செயல் விளக்கக் கூட்டம் 1883 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்றது. இச்செயல் விளக்கக் கூட்டத்தின் நோக்கம், ரிப்பன் பிரபுவின் பதவிக்காலத்தை மேலும் 5 வருடங்கள் நீட்டித்துத் தரும்படி இங்கிலாந்து அரசியாரிடம் கோரவேண்டும் என்பதாகும். ரிப்பன்பிரபு இந்திய மக்களிடம் நிலையான ஒரு இடத்தைப் பிடித்ததால், அவர் இந்தியாவிலிருந்து செல்வதை ஒருவரும் விரும்பாததால் அவருடைய பதவிக்காலம் நீட்டித்துத்தர இக்கோரிக்கை விடப்பட்டது. இந்தச் செயல் விளக்கக் கூட்டம் நடைபெற்ற மறுதினம், திருவல்லிக்கேணி இலக்கியக் கழகம் தனது சிறப்புக் கூட்டத்தில் உள்ளாட்சித் தீர்மான ஆண்டு நிறைவு ஒரு செயல் விளக்கக் கூட்டம் நடத்தத் தீர்மானம் நிறைவேற்றயது. பின்னர் அச்செயல் விளக்கக்கூட்டம் சென்னையில் நடபெற்றது. சென்னை தவிர பிற நகரத்திலுள்ளவர்களையும் ஆண்டு நிறைவுத் தீர்மானத்தில் பங்குபெறச் செய்யவேண்டுமென்பதில் தீவிர அக்கறை காட்டிச் செயல் படுத்தினர். தென்னிந்தியாவிற்கு ரிப்பன் பிரபு அவர்கள் விஜயம் செய்வது பற்றி அறிவிக்கப்பட்டது. மக்கள் பெரு மகிழ்ச்சி கொண்டு, அவருடைய கொள்கைகளில் பெரிதும் நம்பிக்கை வைத்திருப்பதைக் காட்டவேண்டி வரவேற்பு ஏற்பாடுகள் மும்மரமாயிருந்தன. எனவே ரிப்பன் பிரபு வரவேற்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதற்கு திரு. ஆனந்த சாரளு (Mr Ananda Charlu) என்பவர் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ரிப்பன் பிரபுவை வரவேற்கத் தேவையான ஏற்பாடுகளைத் திறமையாகச் செய்தார். ரிப்பன் பிரபிற்குக் கோலாகல வரவேற்பு கொடுக்கப்படுகிறது என்பதை அறிந்து அனைவரும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். இந்த மகிழ்ச்சியும் ஆர்வமும் சென்னை நகரில் மட்டுமல்லாமல், மற்றும் பிற வெளிப்புற நகர்களிலும்

பிரதிபலித்தது. சென்னையில் ஏராளமான இலக்கிய, வாசகக் கழகங்கள் தங்களது ஆதரவினை நல்கின. அவற்றுள் திருவல்லிக் கேணி இலக்கியக் கழகம், சிந்தாதிரிப்பேட்டை இலக்கியக் கழகம், நகர சங்கம் போன்றவை அடங்கும். ரிப்பன் பிரபுவின் வரவேற்பின்போது ஏராளமான மக்கள் கலந்து கொண்டார்கள். அரசியல் கல்வி வளர்ச்சியிலும், விசுவாசத்திலும் ஒரு புதிய திருப்பம் என்று இந்து பத்திரிகை இவ்வரவேற்புப் பற்றி கருத்துத் தெரிவித்துள்ளது.

சென்னை மகாஜன சபை ஒன்று இயங்கிக்கொண்டு வந்தாலும், 1884ஆம் ஆண்டு வெளியிட்ட அறிவிப்பிற்குமுன் சிறப்பாக ஏதும் செய்ததாக நமக்குச் செய்திகள் கிடைக்கவில்லை. 1884அம் ஆண்டு மார்ச் மாதம், ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்துவது குறித்து அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இந்த அமைப்பின் நோக்கம், மக்களின் பொது நலன்களைப் பாதுகாப்பது, அவர்களது நலன்களை நேரத்திற்கு நேரம் வளர்ப்பது ஆகியனவென்று வரையறுக்கப்பட்டது. இந்நோக்கங்கள் பொதுக் கூட்டங்கள், விரிவுரைகள், உள்ளூர் மொழிகளில் பிரசுரங்கள் போன்றவை மூலம் அடையவேண்டுமென்று முடிவு செய்தது. இந்த வளர்ச்சி இதற்குமுன் ஏற்படாத ஒன்றாகும். திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர், மாகாணம் முழுவதும் பயணம் செய்து, உள்ளாட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு திரட்டினார். இது மாதிரியாக ஏராளமான அரசியல் கூட்டங்களும், செயல் விளக்கக் கூட்டங்களும் நடைபெற்றன. இவ்வாறு மகாஜன சபை உள்ளாட்சி அரசாங்கம் அமைப்பதற்கான ஆதரவைப் பல்வேறு வகைகளில் கிடைக்க வசதி செய்தது.

ரிப்பன் பிரபு தீர்மானத்தின்படி உள்ளாட்சி மன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் 3 / 4 பகுதி நிரப்பப்பட வேண்டுமென்பதால், மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 18லிருந்து 24 ஆக உயரும்படி 1884-ஆம் ஆண்டுச் சட்டம் வரையறுத்தது. வாக்குரிமைத் தகுதிகள் சிறிது தளர்த்தப்பட்டதால், புதிதாக 4000 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். அதாவது இது மொத்த மக்கள் தொகையில் 1விழுக்காடு மக்கள் வாக்குரிமைத் தகுதியைப்

பெற்றனர். மாநகராட்சித் தேர்தல் விபரத்தை ஆராய்வோமேயானால் கீழ்க்கண்ட முடிவிற்குவர ஏதுவாகும். 1888-ஆம் ஆண்டிலிருந்து 1904-ஆம் ஆண்டு வரையிலும் நடைபெற்ற தேர்தல்களில், 42 விழுக்காடு மக்கள் சராசரியாக வாக்குகளை அளித்துள்ளனர். ஆண்டுதோறும் சராசரியாக 8 இடங்கள் நிரப்பப்பட்டு வந்துள்ளன. அதிகபட்ச இடங்கள் 23 ஆகவும், இதில் 32 விழுக்காடு மக்கள் வாக்குரிமை அளித்து உள்ளனர். குறைந்தபட்ச இடங்கள் 2 ஆகவும், 25. 4 விழுக்காடு 1889-ஆம் ஆண்டும், 33. 42 விழுக்காடு 1902-ஆம் ஆண்டும் வாக்குகளை அளித்துள்ளனர். அதிகபட்சமாக வாக்குரிமை அளித்தது 65. 29 விழுக்காடாகும். இது 1904-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது. குறைந்த பட்சமாக 1901-ஆம் ஆண்டில் 5. 26 விழுக்காடாகும். வாக்காளர்களின் எண்ணிக்கை 1904-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் 11,000 பேர்கள் அதிகமாயிற்று. இது 2½ விழுக்காடு ஆகும். வாக்குரிமைச் சட்டங்கள் தாராளமாக்கப்பட்டு, கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. விலைவாசி கூடியதன் காரணமாக, வரிவிதிப்பு மூலம் செய்யப்பட்ட கட்டுப்பாட்டின் தன்மை பயனளிக்காத காரணத்தால், ஏராளமான வாக்காளர்கள் அதிகரித்தனர்.

சென்னை மாகாணத்தில் கூட்டுச் சேர்ந்த ஒட்டுமொத்த அரசியல் நடவடிக்கை இந்திய தேசியக் காங்கிரஸ் ஏற்படுத்தும் வரையிலும் ஏற்படவில்லை. இந்திய தேசியக் காங்கிரஸ் 1885-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. சென்னையில் உள்ள இந்திய தேசியக் காங்கிரஸில் மகாஜன சபையை அரம்பித்து நடத்தி வந்த உறுப்பினர்களே அதிலும் இடம் பெற்றனர். இவர்கள் இங்கிலாந்து வைஸ்ராயிடமும், மக்கள் சபையிலும் தங்களது கோரிக்கைகளை அவர்கள் முன் சமர்ப்பித்தனர். இவ்வாறு இந்திய தேசியக் காங்கிரஸ் ஏற்பட்ட பின்னர், தேவைகள் அனைத்தும் கோரிக்கைகளாக்கப்பட்டு, அரசாங்கத்திடம் முறையீடு செய்து, கோரிக்கைகளுக்கு ஆதரவு தேடப்பட்டன. சென்னை நகரில் அரசியல் விழிப்பும், ஒட்டுமொத்த அரசியல் நடவடிக்கை நீதிக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டது. நீதிக்கட்சி 1916-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ஆம் தேதி ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் பிராமணரல்லாதவர்களின் வாழ்க்கையை வளப்

படுத்த வேண்டுமென்பதாகும். பிராமணரல்லாதவர்களின் அரசியல், பெருளாதார, சமூக நலன்களைக் காக்கவும், அவற்றை வளர்க்கவும் இக்கட்சி ஏற்படுத்தப்பட்டது. டாக்டர் நாயர், திரு. தியாகராயச் செட்டியார் நீதிக் கட்சியை உருவாக்கிய பெருமையைக் கொண்டவர்களாவர். நீதிக்கட்சியின் வளர்ச்சி பிராமணரல்லாதவர்களது நலத்தைப் பேணக்கூடியதாகவே. அதிகமான ஆதரவு உடனே கிடைத்ததால், பிராமணர்கள் வகித்து வந்த அரசியல் செல்வாக்கிற்கு இது ஓர் சவாலாக அமைந்தது.

மாநகராட்சியில், 67 விழுக்காடு வாக்காளர்கள் தங்களது வாக்குகளைச் சராசரியாக 1904-ஆம் ஆண்டிற்கும் 1916-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட தேர்தல்களில் வாக்களித்து உள்ளனர். அதிக பட்சமான இடங்களுக்குத் தேர்தல்கள் 1916-ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளன. 1916-ஆம் ஆண்டில் 14 இடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன. 84.84 விழுக்காடு மக்கள் வாக்களித்து உள்ளனர். இதுவே அதிகபட்ச வாக்களிப்பாகும். குறைந்தபட்ச வாக்களிப்பு 34. 22 விழுக்காடாக 1909-ஆம் ஆண்டில் இருந்துள்ளது. இதுவரையிலும் மொத்தமாகப் போட்டியிடப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 43 ஆகும். மாண்டேகு தமது கொள்கையை வெளியிடுவதற்கு முன்னரே, அதாவது 1917-ஆம் ஆண்டிற்கு முன்னரே, அரசியல் நடவடிக்கைகள் சென்னையில் அதிகமாக இருந்துள்ளன. 1920-ஆம் ஆண்டுத் தேர்தலின்போது சென்னை அரசியல் கட்சிகளின் மையமாகத் திகழ்ந்தது. சென்னை மற்றும் ஆந்திரப் பிரிவுகளின் காங்கிரஸ் குழுக்கள் சென்னையில்தான் செயல்பட்டன. இதே மாதிரியாக நீதிக் கட்சியின் தலைமைச் செயலகம் சென்னையில்தான் இருந்தது. ஆகவே, 1920-ஆம் ஆண்டுத் தேர்தலின்போது அதிகமான வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். அரசியல் மெக்கா என்று சென்னையைப் பலரும் வருணிக்கத் தொடங்கியதைக் கண்ணுறும்போது சென்னையின் சிறப்பு தானாகவே விளங்குகிறது. காங்கிரஸ் கட்சி தேர்தலைப் பகிஷ்காரம் செய்ததன் விளைவாக, நீதிக்கட்சியின் வெற்றி அதிகரித்தது. இருப்பினும் சுயராஜ்யக் கட்சியினர் சென்னை மாநகராட்சியில் பாதி இடத்தை 1927-ஆம் அண்டு கைப்பற்றினர். நீதிக்கட்சியின் செல்வாக்கு ஐரோப்பிய உறுப்பினர்களின் ஆதரவோடு திரு. தியாகராயச்

செட்டியார் இறக்கும்வரையிலும், 1925-ஆம் ஆண்டு வரை செல்வாக்கு நிலைபெற்று இருந்தது. பின்னர் 1920-ஆம் ஆண்டி லிருந்து 1933-ஆம் ஆண்டு வரையிலும், 75.2 விழுக்காடு வாக்காளர்கள் வாக்களித்து உள்ளனர். அதிகபட்சமாக 85. 01 விழுக்காடு 1933-ஆம் ஆண்டிலும் குறைந்த பட்சமாக 61. 2 விழுக்காடு 1920-ஆம் ஆண்டிலும் வாக்குகளை மக்கள் பதிவு செய்துள்ளனர்.

இந்திய அரசாங்கத்தின் 1935-ஆம் ஆண்டுச் சட்டம் நிறை வேற்றப்பட்டபின்னர் மாநிலங்களில் இயங்கிவந்த இரட்டை யாட்சி முறைமை நீக்கப்பட்டு, அதிகமான பொறுப்புக்கள் மாகாண அரசாங்கங்களிடம் கொடுக்கப்பட்டன. சென்னையில் காங்கிரஸ், நீதிக்கட்சி தவிர, பல்வேறு புதிய கட்சிகள் தோன்றின. மக்கள் கட்சி, சென்னை மாகாண புது முஸ்லீம் முன்னேற்றக் கட்சி, முஸ்லீம் லீக் கட்சி போன்றவைகள் புதி தாக மலர்ந்த கட்சிகள் ஆகும். 1936-ஆம் ஆண்டில் நடை பெற்ற மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும் பான்மையாக 28 இடங்களைக் கைப்பற்றியது. மாநகராட்சியின் அப்போதைய மொத்த எண்ணிக்கை 45. நீதிக்கட்சி 12 இடங்க ளைத்தான் கைப்பற்ற முடிந்தது. மற்ற இடங்களை மாகாணத் தொழிலாளர் கட்சியும் சுயேச்சையாளர்களும் கைப்பற்றினர். உலகப் போரினாலும் பல்வேறு காரணங்களாலும் தேர்தல்கள் தொடர்ந்து தள்ளி வைக்கப்பட்டுக்கொண்டே வந்தன. 1933ஆம் ஆண்டிலிருந்து 1951ஆம் ஆண்டு வரையிலும் 4 தேர்தல்கள் மட்டும் தான் நடைபெற்றன. இதில் பதிவு செய்த வாக்காளர் களின் எண்ணிக்கை மற்ற தேர்தல்களைக் காட்டிலும் சிறிது குறைவாகவே இருந்தது. மொத்தம் 74. 84 விழுக்காடு வாக்காளர்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். இது மற்றைய தேர்தல்களைக் காட்டிலும் 0.36 விழுக்காடு குறைவாகும்.

மாநகராட்சித் தேர்தல் 12 வருடங்களுக்குப் பிறகு 1948ஆம் ஆண்டு நடைபெற்றது. வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. பொதுத் தொகுதிகளில் 32,364 ஆக 1936 ஆம் ஆண்டு இருந்த எண்ணிக்கை 1,40,000 ஆக உயர்ந்தது. இதே மாதிரியாகத் தொழிலாளர் தொகுதியில் 10, 412 ஆனது 20, 852 ஆக உயர்ந்தது. இத்தேர்தலில் 46 விழுக்காடு வாக்காளர்கள்

தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். மாநகராட்சித் தேர்தலானது 1951-ஆம் ஆண்டு வரையிலும் தள்ளிப் போடப்பட்டது. ஏனெனில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கும் முறை கொண்டு வந்ததால், வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் வேலையில் ஈடுபட வேண்டியதாயிற்று. 1952- ஆம் ஆண்டுத் தேர்தலின்போது 5, 75, 144 வாக்காளர்கள் இருந்தனர். இதில் 89, 301 தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாவர். சுமார் 48. 02 விழுக்காடு வாக்காளர்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். இந்தத் தேர்தலில்,

காங்கிரஸ்	33
சுயேச்சைகள்	17
தொழிலாளர் அமைப்பு	5
குடிமக்கள் கூட்டமைப்பு	8

ஆகிய கட்சிகள் மேற்கண்ட இடங்களைப் பிடித்தன. இதுதவிர 10 நிறுவன இடங்களும், 5 மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் மன்றத்தில் இடம் பெற்றனர். 1955 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது 40 . 26 விழுக்காடு வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்தனர். 56 இடங்களுக்குப் போட்டி நடைபெற்றது. இதில் காங்கிரஸின் பலம் 47 லிருந்து 73 ஆக உயர்ந்தது. இவ்வாறாகக் காங்கிரஸின் பலம் உச்ச கட்டத்தில், அதிகச் செல்வாக்குடைய கட்சியாக அப்போது மாநகராட்சியில் இருந்தது.

மாநகராட்சித் தேர்தலில் போட்டி மிகவும் கடுமையாக 1959ஆம் ஆண்டு இருந்தது. 100 இடங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. மாநகராட்சியின் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 9, 36, 314 ஆக உயர்ந்தது. இதில் 5, 02, 046 ஆண்களும் 4, 34, 264 பெண்களும் அடங்குவர். நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். இது மொத்தத்தில் 45 . 08 விழுக்காடு ஆகும். இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது ஒரு திருப்பமாகும். இத்தேர்தலில்,

திராவிட முன்னேற்றக் கழகம்	45
காங்கிரஸ்	37
கம்யூனிஸ்ட்	2
பிரஜா சோசியலிஸ்ட்	2

சோசியலிஸ்ட்	1
சுயேச்சைகள்	13

இதற்கு அடுத்தபடியாக 1964ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. 66 . 4 விழுக்காடு வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர். மொத்தம் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 6, 16, 274 ஆகும். இதில் கட்சிகளின் பலம் வருமாறு :

தி. மு. க.	49
காங்கிரஸ்	40
கம்யூனிஸ்ட்	1
முஸ்லீம் லீக்	5
சுயேச்சைகள்	4

இத்தேர்தலில் தி. மு. க சுமார் 2, 41, 603 வாக்குகள் அதாவது 39 . 3 விழுக்காடு வாக்குகளையும், காங்கிரஸ் 2, 32, 253 வாக்குகள், 37 . 3 விழுக்காடு வாக்குகளையும் பெற்றன.

பின்னர் மாநகராட்சியில் 1968 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் புதிதாக 1, 20, 000 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். இத்தேர்தலில் கட்சியின் நிலவரம் :

தி. மு. க.	54
காங்கிரஸ்	52
முஸ்லீம் லீக்	7
சுதந்தராக்கட்சி	3
தமிழரசுக்கழகம்	1
உழைப்பாளர் கட்சி	1
கம்யூனிஸ்ட் (வலது)	1
கம்யூனிஸ்ட் (இடது)	1

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியைத் தவிர்த்து, அனைத்துக் கட்சிகளும் தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளாகத் தேர்தலில் போட்டியிட்டன.

தமிழகத்தில், சென்னையை மாநகராட்சிக்கு அடுத்தபடியாகத் திகழ்வது மதுரை மாநகராட்சியாகும். மதுரை மாநகராட்சி 1971-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அரசியல் கட்சி

களின் சார்பில் மாநகராட்சித் தேர்தல் கட்சி சார்பில் நடை பெற்றது. தி.மு.க. கட்சி மாநகராட்சியைப் பிடித்தது. 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகளும் இடங்களும் பின்வருவனவாகும்:

கட்சி	வாக்குகள்	கிடைத்த இடங்கள்
I கூட்டணி		
அ. தி. மு. க.	95,079	36
வ. கம்யூ.	10, 060	4
இ. கம்யூ.	22, 155	8
தமிழ்நாடு முஸ்லீம் லீக்	12 587	1
கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி	1, 876	1
II கூட்டணி		
தி. மு. க.	72, 727	5
பார்வர்டு பிளாக்	6, 603	-
முஸ்லீம் லீக்	3, 875	-
சுயேச்சை	2, 283	-
III கூட்டணி		
இந்திரா காங்கிரஸ்	73, 243	9
இந்திய தேசிய பார்வர்டுபிளாக்	5, 029	-
IV ஜனதா	23, 757	-
V சுயேச்சை	4, 231	1
		65

மதுரை மாநகராட்சியில் கட்சி சார்பாகக் கடும்போட்டி நிலவினாலும், சுயேச்சை உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவர் ஒரு சமூக நல ஊழியர்.

1968 ஆம் ஆண்டிற்குப் பிறகு தேர்தல்கள் 1984 ஆம் ஆண்டு வரையிலும் நடைபெறவில்லை. தமிழக அரசியலில் சில மாற் றங்கள் தோன்றியுள்ளன. 1969 ஆம் ஆண்டு இந்திய தேசியக்

காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது. இதனால் தமிழ்நாடு அரசியலும் மாற்றத்திற்குள்ளானது. தமிழகத்தில் தி. மு. க. கட்சியும் 1973 ஆம் ஆண்டு இரண்டாகப் பிரிந்தது. தமிழ்நாட்டில் திரு. காமராஜ் இறந்த பின்னர், தமிழ்நாட்டில் இரண்டு காங்கிரஸ் கட்சிகளும் ஓரளவு இணைந்து உள்ளன. இருப்பினும் ஒரு பிரிவு தனியாகவும் செயல்பட்டு வருகிறது. இந்திய அரசியலில் அவசரக்கால நிலைமை பிறப்பிக்கப்பட்டு, அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டதன் விளைவாக 1977 ஆம் ஆண்டுத்தேர்தலில் ஜனதா கட்சி என்று ஒரு புதிய கட்சி ஆரம்பமாயிற்று. இது பழைய காங்கிரஸ், ஜனசங்கம், பாரதீய லோக்தளம், சோசியலிஸ்ட் கட்சி, ஜனநாயகக் காங்கிரஸ் ஆகியவைகளின் கூட்டாக மே, மாதம் 1-ஆம் தேதி 1977ஆம் ஆண்டில் உதயமாகி உள்ளது. தி. மு. க. கட்சியிலிருந்து பிரிந்து வந்த அ. இ. அ. தி. மு க. கட்சி 1977- ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் ஆளும் கட்சியாகத் திகழ்ந்து வருகின்றது.

தலைமை

மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்ற நல்ல நிருவாகம்தேவைப்படுகிறது. அந்த நல்ல நிருவாகம் திறமை வாய்ந்ததலைமைத்தன்மையால் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது உறுதி. தலைமையாளர்களின் தனிப்பட்ட ஆசைகளை நிறை-வேற்ற நிருவாகம் பயன்படுத்தப்பட்டால், தனிப்பட்ட ஆசைகள் நிறைவு பெறுவதை விடுத்து, அது அதிகமான ஆசைகளைத் தூண்ட ஆரம்பித்து விடும். மனிதன் மட்டும் எதிலும் திருப்தி அடையாமல், அவனுக்கு திருப்தியைக் கொடுக்க ஆண்டவனால் கூட முடியவில்லை என்பதை வரலாற்றுக் கதைகளும், மதசம்பந்-தப்பட்ட புராணக் கதைகளும் தெரிவிக்கின்றன. எனவே எல்லா மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வண்ணம் செய்யக் கூடிய செயல்களை ஒற்றுமைப்படுத்துவதும், ஒன்றாகச் செய்வதுவும் நிருவாகம் ஆகும். இது அனைவரது கூட்டுறவாலும் ஏற்படக்கூடியது. இந்தக் கூட்டுத்தன்மை செயலளவில் ஏற்படக் கூடியது. இதனைச் செய்ய முற்பட வைப்பது தலைமைத் தன்மையெனப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ள படியால், அதனை மக்கள் தலைமை அல்லது நிருவாகத்தலைமை என்று கூறினால்

தவறாகாது. உள்ளாட்சிகளில் தலைமை எப்படிச் செயல்படுகின்றதென்பதைக் காண்போம்.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகியவற்றில் தலைமைத்தன்மை செயல்படுவதைக் காண்போம். மக்களுக்கு உண்மையாக உழைப்பது மட்டுமன்றி, மற்றவர்களையும் நாட்டிற்காக, நன்மைக்காக, உழைக்க வைக்கும் திறமை கொண்டவர்களாகத் தலைவர்கள் இருத்தல் அவசியம். மக்கள் உள்ளாட்சியில் நேரடியாகப் பங்கு பெறுவதால், மக்கள் தொடர்பை அமைக்கும் பாலமாக தலைமையாளர்கள் திகழவேண்டும்.

ஊராட்சித் தலைவர்

ஒவ்வொரு ஊராட்சியும் ஒரு தலைவரையும், ஒரு துணைத்தலைவரையும் கொண்டிருக்கின்றன. ஊராட்சியின் வாக்காளர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்தலின் போது தலைவர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், புதிய தலைவர் தேர்தல் நடத்தப்படுகிறது. தலைவர் தேர்தலுக்கு நிற்கிற ஒருவர், உறுப்பினர் தேர்தலுக்குப் போட்டிபோடத் தகுதியுடையவர் அல்லர். அதே மாதிரியாக, உறுப்பினர் தேர்தலுக்கு நிற்கிற ஒருவர் தலைவர், தேர்தலுக்குப் போட்டியிடத் தகுதியுடையவர் அல்லர். எந்த உறுப்பினரும், தலைவர் தேர்தலுக்குப் போட்டியிடத் தகுதி பெற்றவர்கள் அல்லர். தலைவர் தேர்தல், ஊராட்சி உறுப்பினர்களுக்கான சாதாரணத் தேர்தல் நடக்கும் சமயங்களில் நடைபெறுகிறது. சாதாரணத் தேர்தலின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள் ஆகியோர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சியின் உறுப்பினர்களுக்குப் பொருந்தக் கூடிய வரையறைகள் தலைவருக்கும் பொருந்தும். ஊராட்சியின் தலைவர் பதவியின் அடிப்படையில் உறுப்பினர் ஆவார். மேலும் ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினருக்குள்ள உரிமைகளும், சிறப்புரிமைகளும் தலைவருக்கும் பொருந்தும்.

ஊராட்சித் தலைவர் இல்லாதபோது அவருடைய கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு ஊராட்சியும் ஒரு

துணைத்தலைவரைக் கொண்டிருக்கின்றன. ஊராட்சியின் துணைத்தலைவர் அவ்வூராட்சி உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்தலின்போது துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், புதிய துணைத்தலைவர் தேர்தல் நடத்தப்படுகிறது. தலைவரும் துணைத்தலைவரும் தங்களது பதவிக்காலம் முடிவடைந்ததுமோ அல்லது நீக்கப்பட்டாலோ, பதவியினின்று நீங்கி விடவேண்டும். ஒரு ஊராட்சியின் தலைவர், துணைத்தலைவர் அல்லது உறுப்பினர் அல்லது நகரப்பிரிவு உறுப்பினர் ஒரு ஊராட்சிஒன்றிய துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதால், அவர்கள் தங்களது பதவிகளைவிட வேண்டியதில்லை.

ஊராட்சித் தலைவரின் கடமைகள்

1. ஊராட்சியின் கூட்டங்களைக் கூட்ட வேண்டும்.
2. கூட்டங்களுக்குத் தலைமைதாங்கி, நடத்தவேண்டும்.
3. அவர் ஊராட்சியின் ஆவணங்களைப் பார்க்க முழுஉரிமை கொண்டவர்
4. ஊராட்சிக்கும் அரசாங்கத்திற்குமிடையே எந்தவிதத் தொடர்புகளும் ஊராட்சித் தலைவர் மூலமாகத்தான் செல்ல வேண்டும். ஊராட்சித் தலைவர் மூலமாக நிருவாக அதிகாரி அரசாங்கத்திற்கும் அல்லது அரசாங்க நிருவாக அதிகாரிக்கும் எழுதும் கடிதத் தொடர்புகளை அவரவர்களுக்கு அனுப்பி வைக்க ஊராட்சியத் தலைவர் கடமைப்பட்டவராவார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்

தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டம் 1958-இன் படி, 1970-ஆம் ஆண்டு ஜூலைக்கு முன்னர், ஓர் ஊராட்சியின் தலைவர் அந்த ஊராட்சியின் உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுபோலவே ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் அந்த ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அதாவது ஊராட்சிகளின் தலைவர்கள் அலுவல் முறையில் ஊராட்சி ஒன்றியத்தின் உறுப்பினர்களாயிருக்கின்றனர். இவர்களிடையேயிருந்து ஒருவர் ஊராட்சி

ஒன்றியத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சட்டம் திருத்தப்பட்டு, ஊராட்சியின் தலைவர் பதவிக்கு நேரடியாகத் தேர்தல் நடத்தும் முறை 1970-ஆம் ஆண்டு ஜூலை மாதத் திலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் சம்பந்தப்பட்ட வரையில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

ஊராட்சியின் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை மக்கள் மகிழ்வோடு வரவேற்றனர். மேலும், இந்த முறை நன்கு பிரபலமடைந்துள்ளது. ஊராட்சிகள் அமைதியான முறையில் செயல்பட்டுள்ளன. மேலும் ஊராட்சிகளின் தலைவர் களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில் புதிய சிக்கல் ஏதும் தோன்றவில்லை. ஆனால், ஊராட்சியின் தலைவரை மறைமுக மாகத் தேர்ந்தெடுப்பதில் உள்ள இடர்ப்பாடுகளும், கெடுதல்களும் அதாவது கையூட்டு கொடுத்தல், உறுப்பினர்களைக் கடத்துதல், துன்புறுத்துதல், உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமை நிலவி இறுதியில் சண்டையிட்டுக் கொள்ளுதல், இவை யாவும் இப்புதிய முறையினால் தவிர்க்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்குத் தலைமை வகிக்கும் அலுவலர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை பல நாடுகளில் பின்பற்றப்பட்டு வருவதாக, புது டில்லி, இந்திய ஆட்சி இயல் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆகவே ஊராட்சிகளின் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுவதுபோல ஊராட்சி ஒன்றியத் தலைவரையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டமும் திருத்தப் பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கு நேரடியாகத்தேர்தல் நடத்துவதன் மூலம் மாநிலத் தொகுதியிலிருந்து கூடுதல் செலவு செய்யப்படுகிறது. அவ்வாறு ஏற்படும் செலவைத் துல்லியமாக மதிப்பிடுவது இயலாது என நிதிநிலையைப் பற்றி யும் கூறப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி ஒன்றியத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கும், துணைத் தலைவரைத் தேர்ந் தெடுப்பதற்குமான நடைமுறையை வரையறுக்க அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட்ட

அதிகாரங்கள் தனித்தன்மை கொண்டவையாக இல்லாமல், இயல்பான அதிகாரங்களாக உள்ளன.

ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஓர் ஊராட்சி அல்லது நகரியத்தின் வாக்காளர் பட்டியலில் உள்ளவர் ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்படுகிறார். சாதாரண அல்லது தற்செயலாக நடைபெறும் தேர்தலில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையாயின், புதிய தேர்தல் நடத்தப்படுகிறது. ஆனால் ஓர் ஊராட்சியின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவிக்காகப் போட்டியிடும் ஒருவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலில் போட்டியிடத் தகுதி யுடையவரல்லர். மேலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக் கான தேர்தலில் போட்டியிடும் ஒருவர், ஓர் ஊராட்சியின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவிக்கான தேர்தலில் போட்டி யிடத் தகுதியுடையவரல்லர்.

ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சிகள், நகர்ப்பிரிவுகள் ஆகியவற்றின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வழக்கமாக நடைபெறும் தேர்தல்கள் எப்போது, எந்த இடங்களில் நடைபெறுகின்றதோ, அப்போதே அதே இடங்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கான தேர்தலும் நடைபெற்று வரு- கின்றது. ஊராட்சி ஒன்றியத் தலைவரின் பதவிக்காலம் ஐந்தாண்டு களாகும். தலைவர் பதவி அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினரும் ஆவார். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கு உள்ள உரிமைகள், சிறப்புரிமைகள் யாவும் இவருக்கு உண்டு

1, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களைக் கூட்டுவது, தலைமை தாங்கி நடத்துவது.

2. சட்டத்தின்படி வரையறுக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும் செய்வது. கடமைகளைச் செய்வற்குச் சட்டத்தில் நிருணயிக்கப் பட்ட அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தவும் வேண்டும்.

3. இவர் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆவணங்களைப் பார்க்க முழு உரிமை கொண்டவராவார். அரசாங்கத்திற்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும் தொடர்பு ஊராட்சி ஒன்றியத் தலைவர் மூலமாகத்தான் செல்லவேண்டும். ஆணை-யாளர் அரசாங்கத்திற்கு அனுப்பவிருக்கும் தொடர்புகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மூலமாகத்தான் அனுப்பி வைக்க வேண்டும். எனவே அரசாங்கத்தின் தொடர்பு வழி ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்றால் மிகையாகாது.

நகராட்சித் தலைவர்

ஒவ்வொரு நகராட்சியும் ஒரு தலைவரைக் கொண்டுள்ளன. நகராட்சித் தலைவர், நகராட்சி மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். ஆனால் 1950ஆம் ஆண்டில் ஊராட்சித் தலைவர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை புகுத்தப்பட்டதால், நகராட்சித் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கலாமா என்பது குறித்து 1958ஆம் ஆண்டு விவாதிக்கப்பட்டது. விவாதத்தில் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் உள்ள நன்மைகளையும், தீமைகளையும் ஆய்ந்ததோடு, மறைமுகமாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதால் உண்டான நன்மைகளை, தீமை களைப் பற்றியும் ஆராயப்பட்டன. பொதுவாக உள்ளாட்சியில் போட்டியில்லாமல், ஒரேமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் சிறப்பாக உள்ளாட்சிகள் செயல்படுமென்ற முடிவு அனை வரிடமே இருந்தாலும் நடைமுறையில் அது செயல்படுத்தப் படவில்லை. செயல்படுத்தவும் முடியவில்லை. மேலும் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதால், திறமையானவர்கள் போட்டி-யின் மூலம் தேர்ந்தெடுக்கப்படமுடியும். திறமையற்றவர்கள் புறக்கணிக்கப்படலாம். ஆனால் உறுப்பினர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கலாமென்ற மறைமுகத் தேர்தலில், திறமையைப் பற்றிய பேச்சே இல்லாமல் போய்விடுகிறது. யார் ஒருவர் தமது பக்கத்தில் அதிகமான நகராட்சி உறுப்பினர்களைக் கையில் போட்டுக் கொள்ள முடியுமோ அவர் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட முடியும். தனிப்பட்ட முறையில் ஒரு நகராட்சி உறுப்பினர் தமது செயலால் நகராட்சித் திறமையை வளர்க்க முடியுமேயானால், அவர் நேர்மையானவராக இருந்தால் அடுத்த

தேர்தலில் மக்களின் ஏகமனதான வாக்குகளைப் பெற்றுத் தலைவராக வரமுடியும். அதனால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் காட்டிலும், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற தலைவர் அதிக மரியாதையும், மதிப்பும் பெற்றுத் திகழ்முடியும், நகராட்சியில் மதிப்புமிக்க பெரியவர்கள் ஆட்சிக்கு வருவதால்,நகராட்சிநிருவாகம்சிறப்புப் பெறுவதோடு, நகராட்சியும் சிறப்புப் பெறும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எல்லா மக்களும் நிருவாகத்துடன் ஆர்வமாகவும், அக்கறையாகவும் ஒத்துழைப்பை நல்குவர். மேலும் இன்றைய மக்களாட்சி முறையில் நடைபெறுகின்ற தேர்தலில் பணம், செல்வாக்கு ஆகியவற்றால் பதவிக்கு வரமுடியும் என்ற சூழ்நிலை இருப்பதாகக் கருத்து நிலவுகின்றது. எனவேதான் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை குறித்துக் கவனமாகவும், நுட்பமாகவும் ஆராயப்பட்டு வந்தன. திறமையில்லாதவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், நிருவாகம் முழுவதுமே ஸ்தம்பித்துப் போய் விடும். அதே நேரத்தில் தலைவர், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட நகராட்சி மன்றத்திற்கும் மதிப்பு அளிக்கமாட்டார். ஏனெனில் நகராட்சி மன்றம் அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை. பின்னர் ஏன் அந்த மன்றத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கலாம். தாம் நினைத்த வண்ணம் செயல்படவும் தூண்டலாம். எனவேதான் இம்முறையைச் செயல்படுத்த அரசாங்கம் சிந்தித்துக்கொண்டே வந்தது. வரக்கூடிய தேர்தலில் நகராட்சித்தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் படியாகச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. எனவே தேர்தல் முறையில் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தலைவர், இனிமேல் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

1978ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் திருத்தப்பட்டு, நகராட்சித் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டுள்ளது. ஆகவே நகராட்சி மன்றத்தில் நகராட்சித் தலைவர், உறுப்பினராக இருக்க வேண்டியதில்லை நகராட்சி வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கின்ற அனைவரும் நகராட்சித் தலைவருக்குப் போட்டியிட தகுதிபெற்றவர்களாவர். நகராட்சித் தலைவருக்குப் போட்டியிடுகின்றவர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர் பதவிக்குப்

போட்டியிட முடியாது. இதேபோல், நகராட்சி மன்ற உறுப்பினருக்குப் போட்டியிடுகின்றவர்கள், நகராட்சித் தலைவருக்குப் போட்டியிட முடியாது. நகராட்சி மன்ற உறுப்பினர்களாக உள்ளவர்கள் நகராட்சித் தலைவருக்கு போட்டியிடவே முடியாதபடி சட்டம் திருத்தப்பட்டுள்ளது, இவ்வாறாக நகராட்சி மன்றமும், தலைமையும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்பட்டன. இதனால் நகராட்சித்தலைவர் பரந்த நோக்குடனும், அனைவரது எண்ணங்களுக்கும் மதிப்பளித்துச் செயல்பட முடியும். நகராட்சி மன்ற உறுப்பினர்களையே நம்பி, அவர்கள் சொல்படியே செல்லவேண்டுமென்ற அவசியம் இல்லாமல் போய் விட்டது. இதனால் தலைவர் தன்னிச்சையாகச் செயல்படவல்லவரானார்.

நகராட்சித் தலைவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். தலைவரின் பதவி காலியாக இருந்தால், ஒரு புதிய தலைவர் மக்களால் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பதவியை விட்டு விலகிச் செல்லும் தலைவரும், உதவித் தலைவரும், மறுபடியும் திரும்பத் தலைவராகவும், உதவித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி பெற்றவர்களாவர். தலைவர் அல்லது உதவித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையேல், புதிய தேர்தல் நடத்தப்படுகிறது. தலைவர், உதவித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஊதியம் பெறக் கூடியவர்கள் அல்லர்.

கடமைகள்

நகராட்சித் தலைவர், புதிய உதவித் தலைவரைத் தேர்ந்தெடுக்க வசதி செய்து தருகிறார். மன்றக் கூட்டங்களைக் கூட்டுகிறார். சட்டத்தில் வரையறுக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும்ஒழுங்காகச்செய்வது இவருடைய கடமை. இவர் நகராட்சி மன்றத்தின் அனைத்து ஆவணங்களைப் பார்க்கிறார், நகராட்சி மன்றத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் தொடர்புகள் நகராட்சித் தலைவர் மூலமாகத்தான் செல்கின்றது. இதே மாதிரியாக அரசாங்கத்திலிருந்து பெறப்படும் தொடர்கள்பு

தலைவர் பெற்றுத்தான், ஆணையாளருக்கு அனுப்பப்படுகின்றன. நகராட்சித் தலைவர் தமது பதவியின் அடிப்படையில் மன்றத்தின் உறுப்பினரும் ஒவ்வொரு குழுவிற்கும் உறுப்பினராவார்.

நகராட்சித் தலைவர் தமக்குரிய அதிகாரங்களை எழுத்து மூலமாக உதவித் தலைவரிடம் ஒப்படைக்கிறார்.

மேயர் அலுவலகம் ஏற்பட்ட வரலாறு

மேயர் அலுவலகம் உருவானதுபற்றித் தெளிவான வரலாறு இல்லை. ஏனெனில் இதுபற்றி இருவிதமான கருத்துக்கள் இருக்கின்ற காரணத்தால், எது உண்மை என்பதைத் தீர்மானிப்பது சிக்கலுக்குரியதாக உள்ளது. இருப்பினும் இருவிதக் கருத்துக்களிலும் கூறப்படுகின்ற உண்மைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியானதாகத் தோன்றுகின்ற தன்மையும் இல்லாமல் இல்லை. மேயர் என்ற வார்த்தை இரு வகைகளிலிருந்து வந்ததாகக் கருதப்பட்டு வருகிறது. நார்மன் (Norman) வகையாகவும் மற்றொன்று இலத்தீன் (Latin) வகையாகவும் உள்ளன. நார்மன் வகையில் மேயுர் (maeur), மாயர் (mair) என்ற வார்த்தைகளிலிருந்து வந்ததாகக் கருதப்படுகிறது. மேற்படி வார்த்தைகளுக்குப் பொருளானது மேற்பார்வையாளர், கண்காணிப்பாளர், செயல் முகவர் அல்லது ஒரு வகைப்பட்ட அரசரின் மாவட்டப் பிரதிநிதி என்று கொள்ளலாம். இலத்தீன் வகையில் மாயோர் (maior) என்ற வார்த்தையிலிருந்து மேயர் என்ற சொல் வந்ததெனக் கூறப்படுகிறது. இவ்வார்த்தை மேஜர் டோமுஸ் (major domus) என்ற வார்த்தையின் உச்சரிப்பிற்கு இணையாக ஏற்பட்டது எனக்கூறுவர். மாயோர் என்பது பெரியது என்று பொருள் தருகிறது. மேஜர் டோமுஸ் என்பவர், வளமான பெரிய குடும்பத்தை மேல்நிருவாகம் செய்வதற்குப் பொறுப்புப் பெற்றிருந்தார். மேற்கூறிய இருவகையிலும் பொருத்தமான கருத்துக்களை எடுத்து நாம் ஆராய்வோமேயானால், மேயர் பதவி சிறப்பானது என்பதையும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நாம் உணரமுடியும். மேற்பார்வையாளராயினும் சரி, அரசரின் மாவட்டப் பிரதிநிதியாக இருந்தாலும் சரி, பெரிய வளமான குடும்பத்தை மேல்நிருவாகம் செய்யும் அந்தஸ்து கொண்டவராயினும் சரி, செயலளவில் அதிகமான பொறுப்புக்கள் கொண்டவராகவே அவர் உள்ளார்.

மேயர் அலுவலகம் இந்தியாவிற்கு ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட ஆங்கிலேய நிறுவனமாகும். இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய மாநகராட்சி சென்னை மாநகராட்சி யாகும். இம்மாநகராட்சி 1688ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது இங்கிலாந்திலுள்ள போர்ட்ஸ்மவுத் (Portsmouth) மாநகராட்சியின் அடிப்படையில், அதனை மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டது. சென்னையின் முதன் முதல் மேயர் என்ற பெருமைக்குரியவர் திரு. நத்தானியல் ஹிக்கின்சன் (Mr. Nathaniel Higginson) என்பவராவர். 1687ஆம் ஆண்டுச் சாசனம் இவர் பெயரைக் குறிப்பிட்டுள்ளது. இவருக்கு அடுத்து வரக்கூடிய மேயர்கள் மாநகராட்சி நியமன உறுப்பினர்களிலிருந்து ஆண்டுதோறும் செப்டம்பர் 29ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்படவேண்டுமெனவும் கூறுகின்றது. மேயர் பதவியை ஏற்குமுன் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும். மேயர் அரசனுக்கும், கம்பெனிக்கும், கம்பெனியின் இந்தியத் தலைமையாளர்களுக்கும் உண்மையாகவும் பணிவாகவும் இருப்பேன் எனப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டபின்னர்தான் பதவி ஏற்கவேண்டும். இவ்வாறு பதவிப்பிரமாணம் செய்து கொள்ளும்போது, இந்தியர்களுக்கு, குறிப்பாகச் சென்னை வாழ் மக்களுக்குச் சேவை செய்வேனென்றோ, நன்மைகள் செய்வேனென்றோ கூறப்படாத காரணத்தை இங்கு நாம் உற்று நோக்கவேண்டும். சென்னை அரசாங்கத் தலைவர் மேயருக்கும், மாநகராட்சி நியமன உறுப்பினர்களுக்கும், நகரவைக் குழு உறுப்பினர்களுக்கும் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். மேயரின் முறை மன்றத்திற்கு நீதி வழங்கும் பணியும், மற்றும் நகராட்சிப் பணிகளும் கொடுக்கப்பட்டன. இவ்வாறு முதலில் மாநகராட்சி நீதித்துறையைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

திறமையாகவும், விரைவாகவும் நீதி நிருவாகம் செய்வதற்காக 1726 ஆம் ஆண்டு மாநகராட்சி திருத்தி அமைக்கப்பட்டது. மாநகராட்சியின் பெயரும் 'சென்னை மேயர் மற்றும் மாநகராட்சி நியமன உறுப்பினர்கள்' என்று மாற்றப்பட்டது. சென்னை மேயர் மற்றும் மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் என்பது மேயரையும், ஒன்பது மாநகராட்சி நியமன உறுப்பினர்களையும் கொண்டதாகும். மேயர் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 20 ஆம் தேதி தேர்ந்தெடுக்கும்படியாகத் தேர்தல் தேதி மாற்றப்பட்டது.

இதற்கு முன்னர் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 29ஆம் தேதி தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டு வந்துள்ளன. பின்னர் 1753-ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட சாசனமானது மேயர் தேர்ந்தெடுக்கும் முறையில் சில மாற்றங்களைச் செய்தது. மேயர் மாநகராட்சி நியமன உறுப்பினர்களிடமிருந்து நகரவைக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தார்கள். 1753 ஆம் ஆண்டுச் சாசனத்தின்படி, மாநகராட்சி நியமன உறுப்பினர்களே தங்களுக்குள் இருவரைத் தேர்ந்தெடுத்து, அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும். ஆளுநர்குழு தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தது. இவ்வாறு நகரவைக்குழு உறுப்பினர்களின் மதிப்பு குறைக்கப்பட்டது. 1753-ஆம் ஆண்டுச் சாசனமே திரு. கார்னிலியஸ் குட்வின் (Mr. Cornelius Goodwin) என்பவரை மேயராக நியமனம் செய்தது.

மேயரின் முறை மன்றம் நீதிவழங்கும் செயலுடன் நகராட்சிச் செயல்களையும் 1792ஆம் ஆண்டு வரையிலும் சேர்த்துச் செய்து கொண்டு வந்தது. அதற்குப் பின்னர் நகராட்சிச் செயல்கள் அனைத்தும் அமைதி நேர்மையாளர்களின் (Justices of Peace) கையில் விடப்பட்டது. 1798ஆம் ஆண்டில் ஏற்பட்ட பதிவாளர் முறை மன்றம் மேயர்முறை மன்றத்தின் நகராட்சிச் செயல்கள் போக எஞ்சிய செயல்களையெல்லாம் எடுத்துக் கொண்டது. ஆகவே நீதிச் செயல்களும், நகராட்சிச் செயல்களும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் தனிக்கவனம் செலுத்தப்படலாயிற்று. இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து 1801 ஆம் ஆண்டு, தலைமை நீதி முறைமன்றம் (Supreme Court of Judicature) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இத்தலைமை நீதிமுறை மன்றம் இயங்கிக் கொண்டு வந்த பல்வேறு முறை மன்றங்களைத் தன்னுடன் ஈர்த்துக் கொண்டது. பதிவாளர் முறை மன்றம், கைதிகள் விசாரணை செய்யும் மொத்த விசாரணை மன்றம், உலா முறை மன்றக் கேள்வி முறை ஆணை (Gaol Delivery, Oyer and Terminer) மற்றும் இதுபோன்ற முறைமன்றங்கள் தலைமை நீதி முறை மன்றத்தோடு இணைக்கப்பட்டன. மேயரும் மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் 1798ஆம் ஆண்டு பதிவாளர் முறை மன்றத்தில் மேயர் முறை மன்றம் ஈர்க்கப்பட்டதால், பதிவாளர் நீதிமன்றத்திலேயே இருந்து செயல்படலாயினர். 1792 ஆம் ஆண்டிலிருந்து 1798 ஆம்

ஆண்டு வரையிலும் மேயர் முறைமன்றம் நகராட்சிச் செயல்கள் இல்லாமல், முழுவதும் நீதி வழங்கும் செயலை மட்டும்தான் செய்து வந்துள்ளது. அதற்கடுத்தாற்போல் மூன்று ஆண்டுகள் பதிவாளர் முறை மன்றத்தில் நீதி வழங்கும் செயல்களைச் செய்து வந்தது. மொத்தத்தில் நீதி வழங்கும் செயலில் அதிகமாக மேயர் முறை மன்றம் ஈடுபட்டதென்பதை அறியலாம்.

மேயரின் அலுவலகம் 1792-ஆம் ஆண்டிலிருந்து தனது மதிப்பை இழந்து கொண்டே வந்துள்ளது. மேயரின் முறை மன்றம் 1798-ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டதன் விளைவாக, அதன் செயல்களைப் பதிவாளர் முறைமன்றம் எடுத்துக் கொண்டது. இதனால் மேயரின்தனித்தன்மை குறைக்கப்பட்டுவிட்டது. வேறுவழியின்றி பதிவாளர் முறை மன்றத்தில் மேயரும் அவரைச் சார்ந்த மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் இடம் பெற்றார்கள். மூன்று வருடங்கள் கழித்த பின்னர் 1801-ஆம் ஆண்டு மேயரின் அலுவலகமே நீக்கப் பட்டது. ஆகவே மாநகராட்சிச் செயல்கள் 1792-ஆம் ஆண்டிலிருந்து 1856-ஆம் ஆண்டு வரையிலும் அமைதி நேர்மையாளர்களினால் செய்யப்பட்டன. மாநகராட்சியில் மேயரின் பெயர் 1933-ஆம்ஆண்டு வரை மறைக்கப்பட்டு விட்டது. ஏனெனில் மேயருடைய பணிகள் அனைத்தையும் மேயருக்கு இணையாக ஒருவர் பயன்படுத்திக் கொண்டே வந்துள்ளார். ஆனால் அவரை மேயர் என்று யாரும் சொல்லவில்லை. முதலில் ஒரு பெயரிலும் பிறகு மற்றொரு பெயரிலுமாக அப்பொழுது மேயர் அழைக்கப்பட்டார். மொத்தத்தில் மேயரின் பெயரானது மறைக்கப்பட்டு விட்டது. மேயருக்கு இணையாக வந்த அதிகாரிகளைப் பற்றிச் சிறிது காண்போம். மாநகராட்சிச் செயல்கள் செய்வதற்குத் தலைமையாளராக மேயர் திகழ்ந்தார் என்பதை அறிவோம். மாநகராட்சிச் செயல்கள் செய்யும் பொறுப்பு அமைதி நேர்மையாளர்களிடம் விடப்பட்டதால், அமைதி நேர்மையாளர்கள் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கக் கூடியவர்,ஏறக்குறைய மேயரின் அதிகாரத்தைக்கொண்டிருந்தார். ஏனெனில் முதன்முதலாக உள்ளூர் செயலாக்கக் குழு உறுப்பினர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். அதற்குப் பிறகு அரசாங்கம் மூத்த அரசு அதிகாரி ஒருவர் தான் தலைமை தாங்கவேண்டுமென வழி காட்டியது. இவ்வாறாக தலைமை தாங்கி அமைதி நேர்மையாளர்களை நடத்திச் செல்வது மட்டும் அவர்கள் பொறுப்பாகத் திகழு

மேயானால், தலைமையாளர்கள் பொதுவாகப் பொறுப்புக்கள் ஏதும் எடுத்துக் கொள்ளாமல் தலைமை மட்டும் தாங்கி, நேரத்தைக் கடத்திவிட்டுச் செல்ல ஏதுவாகலாம். ஆனால் தலைமை தாங்கு-கிறவர்கள் அமைதி நேர்மையாளர்களது கருத்துரைகளில் கலந்து கொண்டு, முடிவு எடுப்பதிலும் பங்கு பெறக் கூடியவர்கள் என்ப தையும் ஒவ்வொருவரும் உணர்வார்களே யானால், நிச்சயமாகத் தலைமை தாங்குபவர் மேயர் அதிகாரத்தைக் கொண்டவர் என்பதில் சந்தேகம் வராது.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்-களுக்கும் ஒரே மாதிரியான நிருவாகக் கொள்கையை ஆங்கிலே-யர்கள் கொண்டிருந்தனர். ஒவ்வொரு நகருக்கும் தனித்தனியாகக் கொள்கை வகுப்பதில் சிரமங்களும், சிக்கல்களும் இருப்பதை உணர்ந்து ஒரே மாதிரியான கொள்கையைக் கடைப்பிடித்தனர். மேலும் மூன்று நகரங்களுக்கும் தனித்தனியான கொள்-கைகள் வகுப்பது மிகுதியான நேரம் எடுத்ததென்பதாலும், ஒரே மாதிரியான கொள்கை மூன்று நகரங்களுக்கும் கடைப் பிடிக்கப்பட்டது. ஆனாலும் அதிலும் பல சிக்கல்கள் எழவே, 1856 - ஆம் ஆண்டு ஒரே மாதிரியாகக் கருதும் கொள்கையும் கைவிடப்பட்டது. 1856 - ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் மாநகராட்சியின் நிருவாகத்தை முழுமையாக மாற்றியது. 1792-இல் இயங்கி வந்து கொண்டிருந்த அமைதி நேர்மையாளர்கள் நீக்கப் பட்டனர். அவர்களுக்குப் பதிலாக மூன்று மாநகராட்சி ஆணை யாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் சேர்ந்து கூட்டாக, 'சென்னை நகர மாநகராட்சி ஆணையாளர்கள்' என்ற பெயரில் இயங்கி வந்தனர். இம்மூவரையும் அரசாங்கம் நியமனம் செய்தது. இம்மூவரில் ஒருவர் தலைவராக இருக்க வேண்டியது அவசியமானதாகவே, கர்னல் பௌல்டர்சன் (Col. Boulderson) என்பவர் 1856-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் முதல் தலைவரா-னார். இவர்களுக்குச் செலவுத் தொகைகளும், ஊதியமும் வழங்கப் பட்டன. கர்னல் பௌல்டர்சனுக்கு நகராட்சிச் செயல்களில் பங்கு பெறுவதற்காகச் செலவுத் தொகை சனவரி மாதம் 30-ந் தேதி 1857 - ஆம் ஆண்டிலிருந்து ரூ. 100 விதமாகக் கொடுக்கப்பட்டது. இது 1860-ஆம் ஆண்டில் ரூ 250 ஆக உயர்த்தப் பட்டது. மற்ற இரண்டு ஆணையாளர்களுக்கும் ரூ. 700 விதமாக

மாதாமாதம் வழங்கப்பட்டது. இந்த இரண்டு ஆணையாளர்களும், நகராட்சி ஆணையாளர்கள் என்பதோடு, மாநகராட்சியின் செயலாக்க அதிகாரிகளாகவும் செயல்பட்டனர். இவ்விதமாக மூன்று ஆணையாளர்களும் ஊதியம் அல்லது செலவுத் தொகைகள் பெற்றுச் செயல்பட்டனர்.

மாநகராட்சி நிருவாகம் பகுதிநேரத் தலைவரின் தலைமையினால் சிறப்பாக இயங்க முடியவில்லை என்பதை அரசாங்கம் உணரவே, முழுநேரத் தலைவர் அவசியம் எனத் தீர்மானித்தது. இதனைச் செயலாக்கும் பொருட்டு 1867 - ஆம் ஆண்டு முழுநேரத் தலைவர் பதவி மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது. முழு நேரத் தலைவர் ஆண்டிற்கு ரூ.12,000 வரை ஊதியம்பெறக் கூடியவராக இருந்தார். ஆனால் 1867 - ஆம் ஆண்டுச் சட்டம் ஊதியம் பெற்ற மாநகராட்சி ஆணையாளர்களையும் நீக்கம் செய்தது. ஊதியம் பெற்ற மாநகராட்சி ஆணையாளர்களுக்குப் பதிலாக, அவர்களது இடத்தில் 32 கௌரவ ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். தலைவரின் ஊதியம் மக்களின் வரிப் பணத்திலிருந்து கொடுக்கப்பட்டது. கௌரவ ஆணையாளர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தேர்விற்கு ஆளுநர் குழு ஒப்புதல் அளிக்க வேண்டும். ஆளுநர் குழு சிலர் மீது அதிருப்தி கொண்டிருந்தால் மறுபடியும் வேறு சிலரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தலைவரானவர் கௌரவ ஆணையாளர்களுக்குத் தலைவராக இருந்து, கூட்டங்களை நடத்தித் தரவேண்டும். தலைவரே செயலாக்க அதிகாரியாக இருப்பதால், தீர்மானங்கள், முடிவுகள் ஆகியவற்றைச் செயலாக்கமும் செய்ய வேண்டும். ஆணையாளர் மன்றம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க அதிகாரம் பெற்றிருந்தது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் முடிவான அதிகாரத்தை ஆளுநர் குழு பெற்று இருந்தது. எனவே ஆளுநர் குழு வரவு செலவுத் திட்டத்தை மாற்றவும், திருத்தவும் செய்தது. ஆளுநர் குழு வரையறுக்கின்ற வரவு செலவுத் திட்டம் முடிவான வரவு செலவுத் திட்டமாக இருந்தது. அவ்வரவு செலவுத் திட்டத்தை மாநகராட்சி ஆணையாளர் மன்றமும் அப்படியே நிறைவேற்றியது.

மாநகராட்சியின் செயலாக்க அதிகாரம் முழுவதும் தலைவரிடமும், இரண்டு புதிய துணைத்தலைவர்களிடமும் மற்றும் 32

ஆணையாளர்களிடமும் அமையும்படி 1878-ஆம் ஆண்டுச் சட்டம் வரையறுத்தது. இதில் தலைவரும், துணைத்தலைவரும் ஊதியம் பெற்றனர். இவர்களை அரசாங்கம் நியமனம் செய்தது. இவர்கள் பதவியின் அடிப்படையில் ஆணையாளர்களாகவும் இருக்க வழி செய்யப்பட்டது. ஆணையாளர்கள், அதிகாரம் கொண்டவர்களென்பதை இச் சட்டம் கூறுகிறது. தலைவரிடமோ அல்லது துணைத்தலைவர்களிடமோ ஆணையாளர்கள் தவறு கண்டு அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று மொத்த ஆணையாளர்களில் பாதிப்பேர் கருத்துத் தெரிவித்தால், தலைவரும், துணைத் தலைவர்களும் பதவியிலிருந்து நீங்கிவிட வேண்டும். அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டு, செயல்புரியும் தலைவரையும், துணைத்தலைவரையும் நீக்க, ஆணையாளர்கள் கொண்டிருக்கும் அதிகாரம் அதிகமானதல்லவா? ஆனால் இந்த மாதிரிச் செயல் நிகழா வண்ணம் தடுப்பதற்காக அல்லது வேறு காரணங்களுக்காகவோ, 32 ஆணையாளர்கள் முழுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களாக இல்லை. 16 ஆணையாளர்கள் மட்டுமே மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களாக, எஞ்சிய 16 ஆணையாளர்கள் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படக்கூடியவர்களாக இருந்தனர். எனவே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொள்ளக்கூடியவர்களாக இருந்ததால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து தலைவரையும் துணைத்தலைவரையும் நீக்குவது சிக்கலான ஒன்றாக இருந்தது.

ரிப்பன் பிரபு ஏற்படுத்திய சீர்திருத்தத்தின் விளைவாக, தேர்ந்தெடுக்கும் ஆணையாளர்களின் எண்ணிக்கை 16 லிருந்து 24 ஆக, 1884-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி கொண்டு வரப்பட்டது. தலைவரின் ஊதியம் மாநகராட்சி நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது. முதன்முதலாக ஊதியம் ரூ, 1200 அளிக்கப்பட்டது, பின்னர் இது ரூ. 2000 ஆக ஆளுநர் குழுவினால் உயர்த்தப்பட்டது மாநகராட்சித் தலைவருக்கு அதிகமான மதிப்பும், மரியாதையும் அளிப்பதோடு ஏராளமான பொறுப்புக்களும் தலைவர்மீது புகுத்தப்பட்டதால், இயற்கையாகவே ஊதியமும் அதிகமாக அளிக்கப்பட்டது. தலைவரை நியமனம் செய்த ஆளுநர் குழுவே, அவரை நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தது. ஆளுநர் குழுவின் விருப்ப அதிகாரமாகவே நீக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. இது தவிர்த்து, மாநகராட்சி ஆணையாளர்கள் அனைவரும் கூடி, சிறப்புப் பொதுக் கூட்டத்தில்

25 ஆணையாளர்களுக்குக் குறையாமல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி, அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தால் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கலாம். இதுவரையிலும் தலைவருக்கு உதவியாகச் செயல்பட்டு வந்த இரண்டு துணைத்தலைவர்கள் 1892-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நீக்கப்பட்டார்கள். இவர்களுக்குப் பதிலாக மூன்று அதிகாரிகள் முறையே வருவாய் அதிகாரி, சுகாதார அதிகாரி, பொறியியலார் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். செயலாக்க அதிகாரங்கள் செயலின் தன்மையில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொருவரிடமும் விடப்பட்டன.

உள்ளாட்சி அரசாங்கங்களே தலைவரை நியமனம் செய்யவும் தலைவரை நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தன. தலைவரை நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலமாகவும் நீக்க வழி செய்யப்பட்ட முறை நீடித்தது. மாநகராட்சி ஆணையாளர்கள் 28 பேர்களுக்குக் குறையாமல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி, அரசாங்கத்திற்கு அனுப்பினால், தலைவர் நீக்கப்படலாம். உள்ளாட்சி அரசாங்கம் நேரத்திற்கு நேரம் நிர்ணயம் செய்யும் ஊதியத்தை, தலைவர் மாநகராட்சி நிதியிலிருந்து பெறும் வகையில் வசதி செய்யப்பட்டது. இது தவிர, தலைவருக்கு ஓய்வு ஊதியம் அல்லது சன்மான ஊதியம் போன்றவைகள், உள்ளாட்சி அரசாங்கத்திற்கு உள்ள விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவை தலைவருக்கும் பொருந்தும்படி செய்யப்பட்டது. அத்துடன் ஓய்வு ஊதியங்கள் வழங்கவும் 1904 ஆம் ஆண்டுச் சட்டம் வழி செய்தது. தலைவர் முழுநேரத்தையும் மாநகராட்சியின் பணிக்காகச் செலவிடவேண்டும். தலைவராக இருப்பவர் வேறு எந்தத் தொழிலிலும், வியாபாரத்திலும், செயலிலும் ஈடுபடக் கூடியவராக இருக்கக் கூடாது. ஏனெனில்முழுநேரத்தையும் மாநகராட்சிப் பணிக்குச்செலவிட்டாலும் நேரம் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தாலும், மாநகராட்சி தலைவர்பதவி ஒரு கௌரவ பதவியாக மாறிவிடக் கூடாது என்பதற்கும் இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இருப்பினும், தலைவருக்குச் சில விதிவிலக்குகளும் அளிக்கப்பட்டன. அவை:

1. தலைவர், சென்னைத் துறைமுக அறக்கட்டளை 1885-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, அறங்காவலராகப் பதவியில் இருக்கலாம்.

2. சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள ஆளுநர் குழுவில் உறுப்பினராக இருந்து, சட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் வரையறுக்கலாம்.

3. நிலைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில், பொது நிறுவனங் களில் தலைவர் பதவியையோ அல்லது பிற கௌரவ பதவி களையோ வகிக்கலாம்.

இந்த விதிவிலக்குகள் நிரந்தரமில்லாமல் தற்காலிகமாகத் தலைவர் பதவி வகிக்கும் உறுப்பினர்களுக்கு பொருந்தாது. மூன்றுமாதங்களுக்கு மிகாமல், நிரந்தரத் தலைவர் விடுப்பு முதலிய வற்றில் செல்வாரேயாயின், இந்த விதிவிலக்குகள் பொருந்தாது எனவும் வரையறுக்கப்பட்டது.

அதிகாரப் பரவலின் மீதாக 1907-ஆம் ஆண்டு அமைக்கப்-பட்ட அரசுரிமை ஆணையத்தில் சாட்சியமளித்தவர்கள், தலைவரை மாநகராட்சியே தேர்ந்தெடுக்கும் உரிமையைத் தரவேண்டு மென வலியுறுத்தினார்கள். மாநகராட்சிச் சார்பில் சாட்சியமளித் தவர்கள், நியமனத் தலைவர்களினால் ஏற்பட்டுள்ள குறைபாடு களைக் கூறினார்கள். அரசாங்கம் நியமனம் செய்கின்ற தலை வர்கள், அவர்களது பதவி உயர்வு மற்றும் பிற வளர்ச்சிகளுக்கு அரசாங்கத்தின் தயவையே நாடிச் செயல்படுவதால், அவர்களால் மாநகராட்சிச் செயல்களில் முழுமையாகக் கவனம் செலுத்த முடிய வில்லை என்று புகார் செய்தனர். மாநகராட்சியின் பணியில் செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாமல், அரசாங்கத்திற்கு ஆத ரவாகச் செயல்பட எண்ணுகிறார்கள் என்று கூறினார்கள். மேலும் தலைவர் நியமனம் செய்யப்படுகின்ற பொழுது, மாநகராட்சி யைக் கலந்து ஆலோசனை செய்தபின்னர் நியமனங்கள் செய்தால் பயனளிக்குமென்ற கருத்தையும் கூறினார்கள், அரசாங்கமே அனைத்துமாக இருக்க நேரிடும்போது, மாநகராட்சி என்று ஏன் ஓர் அமைப்பு தேவை என்று கூடக் குற்றம் சாட்டினர். இதனால் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மாநகராட்சி கோரியது.

மாநகராட்சியில் பெரிய மாற்றம் 1919-ஆம் ஆண்டுச் சட் டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது வரையிலும் தலைவர்,

வகித்து வந்த செயலாக்க அதிகாரமும் கூட்டத்திற்கு தலைமை தாங்கும் அதிகாரமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. இப்புதிய சட்டத்தின் கீழ் தலைவரிடம் தலைமை தாங்கும் அதிகாரம் மட்டுமே கொடுக்கப்பட்டது. செயலாக்க அதிகாரத்திற்கெனத் தனியே ஆணையாளர் என்று ஒரு புதிய பதவி உருவாக்கப்பட்டது. ஆணையாளர் அரசாங்கத்தால் நியமனம் செய்யக் கூடியவர். இவர் முழுநேர ஊழியராக மாநகராட்சிப் பணியில் செயல்படக் கூடியவராக மாறினார். மாநகராட்சி மன்றம் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாத முதல் கூட்டத்தில், உறுப்பினர்களில் ஒருவரை மேயராகவும், மற்றும் மேயரைத் தவிர்த்துப் பிற உறுப்பினர்களில் ஒருவரைத் துணைமேயராகவும் தேர்ந்தெடுக்கும் வகையில் 1919-ஆம் ஆண்டுச் சட்டம் வழி செய்தது. துணைமேயர் மேயருக்கு உதவியாக, மேயர் இல்லாத சமயங்களில் மாநகர் மன்றக் கூட்டங்களை நடத்த அதிகாரம் பெற்றார்.

சென்னை மாநகராட்சி ஏற்படுத்தப்பட்டு 245 ஆண்டுகட்குப் பிறகு, 132 ஆண்டுகள் மேயர்பதவி மறைக்கப்பட்டபிறகு, 1933-ஆம் ஆண்டு மறுபடியும் 'மேயர்' என்ற பெயர் மீண்டும் தலைவருக்குக் கொடுக்கப்பட்டது. இதுவரையிலும் 1858-ஆம் ஆண்டிலிருந்து 1933-ஆம் ஆண்டு வரையிலும் 'தலைவர்' என்றுதான் மேயர் பதவி அழைக்கப்பட்டு வந்தது. மாநகராட்சி அமைப்புக்களில், இங்கிலாந்து மாநகராட்சித் தலைவர்களும், பம்பாய், கல்கத்தா ஆகிய மாநகரத் தலைவர்களும் மேயர் என்று அழைக்கப்பட்டு வருகின்ற பொழுது, இந்தியாவிலேயே முதல் மாநகராட்சியாக உருவாகிய சென்னை மாநகராட்சியிலும் 'மேயர்' என்ற பெயரே விளங்க வேண்டுமென மசோதா கொண்டுவரப்பட்டது. பெயர் மாற்றுவதற்கு ஏராளமான காலதாமதங்கள் ஏற்பட்டதை அனைவரும் கண்டிக்கலாயினர். எனவே 1933-ஆம் ஆண்டு முதலமைச்சருக்குப் பதிலாக, உள்ளாட்சி அமைச்சர் மசோதாவிற்குப் பொறுப்பு ஏற்று, பெயர் மாற்றும் மசோதா சட்டமாக்கப்பட்டது. இதற்கு முழுப் பொறுப்பும் குமாரராஜாவைச் சேர்ந்ததென, அவருக்குப் பாராட்டுக்களை ஏனைய அமைச்சர்கள் நல்கினர். இங்ஙனமாக 1933-ஆம் ஆண்டு 'மேயர்' என்ற பெயர் மறுபடியும் வந்தது. ஆனால் மேயரின் பணிகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

16

மேயர் தேர்தலும் மரபுகளும்

மேயர், மாநகராட்சியின் தலைவராக இருக்கின்றவர் என்பதை அறிவோம். அவர் எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதைப் பார்ப்போம். சென்னை மாநகராட்சி மேயர் தேர்ந்தெடுக்கும் முறையைக் காண்போம். மாநகராட்சி மேயர் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார். மாநகராட்சி தோன்றிய 1688-ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும் ஒரு மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டே வருகின்றார். முதல் சென்னை மேயரைக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனமே நியமித்தது. அதற்குப் பிறகு மேயர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். தேர்தல் முறை ஒவ்வொரு மாநகராட்சிச் சீரமைப்பின் பொழுதும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டே வந்துள்ளது.

மாநகராட்சி நியமன உறுப்பினர்களில் ஒருவரை மாநகரவைக்குழு உறுப்பினர்கள் மேயராகத் தேர்ந்தெடுக்கும் முறையை 1687-ஆம் ஆண்டுச் சாசனம் கொண்டு வந்தது. இது தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறவேண்டுமென்பதில் பல்வேறு செயல்முறைகளையும் அமைத்து இருந்தது. தேர்தல் முறையாவன :- எல்லா மாநகரவைக்குழு உறுப்பினர்களுக்கும் தேர்தல் அதிசாரிகள் ஒரேமாதிரியான வெள்ளைத் தாள்களை முதலில் வழங்குவர். அத்தாள்களில் மாநகரவைக்குழு உறுப்பினர்கள் விரும்பும் மாநகராட்சி நியமன உறுப்பினர்களில் ஒருவர் பெயரை எழுதி, தேர்தல் அதிகாரிகளிடம் கொடுக்க வேண்டும். மாநகராட்சி நியமன உறுப்பினர்களில் யார்

அதிகமான வாக்குகள் அல்லது ஆதரவு பெற்று இருக்கின் றாரோ, அவர் மேயராகப் பிரகடனம் செய்யப்பட்டு விடுவார். இவ்வாறு முதல் சாசனத்திலேயே தேர்தலுக்கு வசதிகள் செய்யப் பட்டு இருந்தன. மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பதவிப் பிரமாணம் பெற்றுப் பதவியில் அமர்வார். பதவிப் பிரமாணத்தை அரசாங்கத் தலைவர் செய்து வைத்தார்.

முதல் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் தேர்தலுக்கு வழிவகுத்துக் கொடுத்தது என்பது உண்மை. ஆனால், அன்று வரையறுத்துள்ள தேர்தல் முறையில் ஏராளமான குறைபாடுகள் இருந்தன. இக்குறைபாடுகளைச் சாதகமாகச் சிலர் பயன்படுத்தி மேயராகத் தேர்வு பெற்றுள்ளார்கள். இக்குறைபாடுகளைச் சாதகமாகப் பயன்படுத்திய மேயர் ஒருவரே, இக்குறைபாடுகளைத் தெரிவித்தார். இவ்வாறு தவறுகள் நடைபெற்றமையால், அத் தவறுகளைக் களையும் வண்ணம் புதிய தேர்தல்முறை அவசிய மென உணரப்பட்டது. தேர்தல் அதிகாரிகள்தான் தேர்தல் தில்லுமுல்லுகளுக்குக் காரணமாக, தவறுகளைக் கண்டிப்பதற்குப் பதில், அவற்றை வளர்க்கக் கூடியவர்களாக இருந்துள்ளனர். மேயர் தேர்தலுக்கு வெள்ளைத்தாள்களை மாநகரவைக்குழு உறுப் பினர்கள் அனைவருக்கும் கொடுக்கவேண்டும். இவ்வேலையைச் செய்பவர்கள் தேர்தல் அதிகாரிகள். இவர்கள் சில மாநகராட்சி நியமன உறுப்பினர்களுக்குச் சாதகமாக, முன்கூட்டியே குறிப் பிட்ட உறுப்பினரின் பெயரை எழுதி வைத்துக்கொள்வார்கள். தேர்தல் ஒன்று நடைபெற்றது என்பதை வெளியில் காட்டிக் கொள்ளும் வகையில் சில மாநகரவைக்குழு உறுப்பினர்களுக்கு மட்டுமே வெள்ளைத்தாள்கள் வழங்குவார்கள். அவர்கள் தங்களது விருப்பத்திற்கேற்பச் சிலரது பெயர்களை எழுதிக் கொடுப்பார்கள். ஆனால் பெரும்பான்மையான வெள்ளைத்தாள்களில் குறிப்பிட்ட உறுப்பினரின் பெயர் இருப்பதால், அவர் மேயராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு விடுவார். மாநகரவைக்குழு உறுப்பினர்களில் பெரும்பாலோனோருக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தால், இவ்வுறுப்பினர்கள் தேர்தல் அதிகாரிகளை அணுகவேண்டி இருந்தது. தேர்தல் அதிகாரிகள் தங்களது விருப்பத்திற்கேற்ற பெயர்களை மாநகரவைக்குழு உறுப்பினர்களின் சார்பாக அளிக்கவும் செய்தனர். இது சிறிது காலத்திற்குள் கண்டுபிடிக்கப்

பட்டது. கண்டுபிடிக்கப் பட்டதுவும் அரசாங்கத் தலைவர் புதிய தேர்தல் முறையைக் கொண்டு வந்தார். பழைய தேர்தல் முறையில் தில்லுமுல்லுகள் நடைபெறாவண்ணம் மாற்றங்கள் சில செய்யப்பட்டது தான் இப்புதிய தேர்தல் முறையாகும். இத்தேர்தல் மேயர் முறைமன்றத்தில் வைத்து நடைபெறவேண்டுமெனக் கூறியது. எனவே புதிய தேர்தல் முறையின்படி மேயரையும், மாநகராட்சி நியமன உறுப்பினர்களையும் மாநகரவைக்குழு உறுப்பினர்கள் மேயர் முறைமன்றத்தில் வைத்துத் தேர்வு செய்யவேண்டும். இந்த மாற்றத்திற்கு ஏராளமான எதிர்ப்புக்களும், குற்றச்சாட்டுக்களும் புயலெனக் கிளம்பின. அரசாங்கத் தலைவர் தேர்தல் முறையை வரையறுக்க அதிகாரம் பெற்றவர் அல்ல என்றும், சட்டத்திற்குப் புறம்பாகத் தலையீடு செய்கிறார் என்றும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. நடைமுறையில் இருந்த தேர்தல் முறை சமுகப்பழக்கவழக்கங்களுக்குப் பொருத்தமாக இருந்ததெனவும், அது மீறப்பட்டு விட்டதோடு, பழக்க வழக்கங்களையும், நடைமுறை மரபுகளையும் மீறிச் சீர்திருத்தங்கள் செய்துள்ளனரெனவும் கூறப்பட்டது. மாநகரவைக் குழு உறுப்பினர்கள் எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்ததோடு நில்லாமல் 1/5 பங்குக்குக் குறையாத உறுப்பினர்கள் கூட்டத்தை விட்டே வெளியேறி விட்டனர்.

புதிய தேர்தல் முறையின் முலமாக வெற்றிபெற்ற திரு. ஜோஸிவா டிராபர் (Mr. Joshua Draper) புதிய மேயராக நியமனம் செய்யப்பட்டார். ஆனால் இவரது பதவி நீண்ட காலம் டிக்கவில்லை. ஏனெனில் ஜோஸிவா டிராபர் நியமனத்திற்கு பெரும்பான்மை ஆதரவாளர்கள் நீண்ட நாட்கள் வரை ஆதரவு கொடுக்காத காரணத்தால், நியமனத்திற்குப் பெரும்பான்மை ஆதரவு இல்லாத காரணத்தால், ஜோஸிவா டிராபரை மேயர் பதவியிலிருந்து நீக்கி விட்டு, அந்த இடத்தில் திரு. கேட்ஸ்பை ஒடம் (Mr. Catesby Oadham) என்பவரை நியமித்தார் அரசாங்கத் தலைவர். மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் மாநகரவைக்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையான ஆதரவும் அரசாங்கத்தின் ஆதரவும் இருந்தால் தான் மேயரின் பதவிக்காலமான குறிப்பிட்ட ஓராண்டைச் சமாளிக்க முடியும். அரசாங்கத் தலைவர் பொதுவாகப் பெரும்பான்மைக்கு ஆதரவு கொடுத்து, அதற்கு மதிப்பளித்த காரணத்தினால்தான், ஜோஸிவா டிராபரை நீக்கிவிட்டு, அவரது இடத்தில் கேட்ஸ்பை ஒடமை நியமனம் செய்யமுடிந்தது.

நீதி நிருவாகத்தைச் சிறப்பாகவும், திறம்படவும் நிருவகிப்பதற்காக 1726-ஆம் ஆண்டுச் சாசனம் பிறப்பிக்கப்பட்டது. இச்சாசனம் ஆங்கிலேயர்களுக்கு மாநகராட்சியில் அதிகமான முக்கியத்துவம் கொடுத்தது. மாநகராட்சியில் பிரதிநிதித்துவம் பெற்ற இந்தியர்கள், யூதர்கள், போர்ச்சுக்கீசியர்கள் போன்ற பல்வேறு இனத்தவர்களுக்கு இரண்டு இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தன. ஏனெனில் மேயரும், ஏழு மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் ஆங்கிலேயர்களாக இருக்கவேண்டுமென வரையறுக்கப்பட்டிருந்தது. மேயர் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் 20-ஆம் தேதி தேர்ந்தெடுக்கப் படவேண்டுமெனவும் அச்சாசனம் கூறியது. மேயரை இதுவரை தேர்ந்தெடுத்து வந்த மாநகரவைக்குழு உறுப்பினர்களின் அதிகாரம் குறைக்கப்பட்டது. மாநகராட்சி நியமன உறுப்பினர்களே தங்களுக்குள் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுக்கும் வகையில் தேர்தல்முறை மாற்றத்திற்குள்ளாகியது. ஆனால் ஒரு தடவை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மறுபடியும் மேயராகத்தேர்ந்தெடுக்கத் தகுதி பெறாதவர் என்பதைச்சாசனமே விளக்கியது. இதனைச் செயலாக்குவதில் அரசாங்கமும் மிகவும் கவனமாக இருந்தது. ஏனெனில் 1734-ஆம் ஆண்டு திரு. ஹ்க் நாய்ஸ் (Mr. Hugh Naish) என்பவர் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்ய தலைவர் மறுத்ததால், தேர்தலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே தான் திரு. ஜான் சாண்டர்ஸ் (Mr. John Saunders) என்னும் ஒரு வியாபாரி 1735-ம் ஆண்டு சனவரி மாதம் 30-ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தல் முறையும் தேர்தல் நாளும் ஒவ்வொரு சாசனத்தின் கீழும் மாற்றப்பட்டு வந்துள்ளன. 1753-ஆம் ஆண்டுச் சாசனத்தின்படி, மாநகராட்சி நியமன உறுப்பினர்களே தங்களுக்குள் இரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்து, அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும். அரசாங்கம் தேர்ந்தெடுத்து அனுப்பிய இரண்டு பேர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கவேண்டும். ஆகவே அரசாங்கத்தின் முடிவே இறுதியானதாகக் கருதப்பட்டு வந்தது. தேர்தல் நாள் இதுவரையிலும் இயங்கியதற்கு மாறாக, டிசம்பர்

மாதத்தின் முதல் செவ்வாயன்று ஒவ்வொரு வருடமும் தேர்ந்தெடுக்கும் வகையில், தேதி மாற்றப்பட்டது. இவ்வாறாக 1687 ஆம் ஆண்டுச் சாசனத்தின்படி ஒரு தேர்தல் முறையும், 1726-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி ஒரு தேர்தல் முறையும், 1753-ஆம் ஆண்டுச் சாசனத்தின்படி பிறிதொரு தேர்தல் முறையுமாக, மூன்று சாசனங்களிலும் மூன்று தேர்தல் முறைகள் விளக்கப்பட்டுள்ளன.

மேயரின் முறை மன்றம் 1792-ஆம் ஆண்டு நீக்கப்பட்டு, அமைதி நேர்மையாளர்களிடம் மாநகராட்சிச் செயல்கள் விடப்பட்டன. பின்னர் 1801-ஆம் ஆண்டு மேயரின் அலுவலகமே நீக்கப்பட்டுவிட்டது. எனவே 1801-ஆம் ஆண்டிலிருந்து 1919-ஆம் ஆண்டு வரையிலும் மேயரின் பெயர் மாற்றப்பட்டு பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது. அமைதி நேர்மையாளரின் கூட்டங்களுக்குச் சென்று தலைமை தாங்குவதோடு, கூட்ட நடவடிக்கைகளிலும் பங்கு பெற்றவர்கள் மேயரின் பெயரை மறைமுகமாகப் பயன்படுத்தியவர்களாவர். முதன்முதலில் உள்ளூர் ஆளுநர் மன்றப் பிரதிநிதியும், பின்னர் மூத்த அரசு அதிகாரியும் இப்பெயர்களைப் பெற்றவர் வரிசையில் அடங்குவர். இவர்களை அடுத்து, மாநகராட்சி ஆணையாளர்கள் என்ற கூட்டமைப்பு 1856-ஆம் ஆண்டிலிருந்து 1878-ஆம் ஆண்டு வரையும் செயல்பட்டது. இதில் மூத்த மாநகராட்சி ஆணையாளர் தலைமை தாங்கி நடத்திக் கொண்டு வந்துள்ளார். பின்னர் 1878ஆம் ஆண்டிலிருந்து தலைவர் என்ற பெயருடன் மேயரின் அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டன. தலைவரானவர் 1919-ஆம் ஆண்டு வரையிலும் செயலாக்க அதிகாரம் நிறைந்தவராக, கணிசமான ஊதியங்கள் பெற்றுக்கொண்டு வந்துள்ளார். மேயரின் பெயர் 1933-ஆம் ஆண்டு மீண்டும் கொண்டு வந்து மதிப்பளிக்கப்பட்டது. தலைவரை அரசாங்கம் தான் இதுவரை நியமனம் செய்து வந்தது. தலைவர்கள் அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்பவே சென்றதால் மாநகராட்சியின் செயல்களில் தேக்க மேற்பட்டது. இதனால் மாநகராட்சியின் குறைகள் சரியாகக் கவனிக்கப்படவில்லை.

அரசாங்கத்தால் நியமனம் பெற்ற தலைவர் மாநகராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வண்ணம் 1919 - ஆம்

ஆண்டுச் சட்டம் திருத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதம் முதல்தேதியன்று மேயர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென நிருணயிக்கப்பட்டது. மேயர் தேர்ந்தெடுக்கப்படும் முறையும் வரையறுக்கப்பட்டது. அம்முறை:

1. மேயர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை ஒருவர் முன்மொழியவும், மற்றொருவர் வழிமொழியவும் வேண்டும்.
2. இவ்வாறு முன்மொழிந்தும், வழிமொழிந்தும் உள்ள அனைத்து வேட்பாளர்களின் பெயர்களும் தெளிவாக அச்சிட்டோ அல்லது தெளிவாகக் கீழ்க்கண்ட வகையில் எழுதப்பட்டோ இருக்கும்.

எண்.	வேட்பாளரின் பெயர்	வாக்கு
1		
2		
3		

வாக்களிக்க விரும்பும் உறுப்பினர்கள், அந்தந்த வேட்பாளர்களுக்கு எதிராக ஒரு குறி [X] செய்ய வேண்டும். பின்னர் வாக்குகள் எண்ணி, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும்.

3. ஒரே ஒரு வேட்பாளராக இருந்தால், வாக்குச் சீட்டுக்களை எண்ண வேண்டிய அவசியமில்லை. அந்த ஒரு வேட்பாளரே வெற்றிபெற்றவராக அறிவித்துவிடலாம்.

தலைவர் அல்லது மேயர் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்படும் முறை ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டு மென்ற எண்ணம் மாநகராட்சி உறுப்பினர்களிடையே நிலவத் தொடங்கியது. தலைவர் தேர்தலில் போட்டி ஏற்படுகின்ற காரணத்தால், மாநகராட்சியின் ஒற்றுமை குலைக்கப்படுவதை உணர்ந்தனர். மாநகராட்சியில் கருத்துவேறுபாடுகள் இருக்க நேரிட்டால் மாநகராட்சிப் பணிகள் சீராகச் செயல்பட முடியாது என்பதையும் உணர்ந்தனர். தேர்தல் என்றாலே பணம் சக்திவாய்ந்த ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதாக அனைத்து அரசியல் கட்சிகளும் குற்றம் சாட்டின. அதே தன்மையில் மாநகராட்சி மன்றத்திலேயே உறுப்பினர்களுக்கிடையே இது குறித்து பலத்த வாக்குவாதங்கள்

நடைபெறலாயின. இருப்பினும் தலைவரைப் போட்டியில்லாமல், ஒன்றாகச் சேர்ந்து தேர்ந்தெடுக்கும் கருத்து அனைவரது மத்தியிலும் வேரூன்றத் தொடங்கியது. போட்டியில்லாமல் தலைவரைத் தேர்ந்தெடுக்க ஆதரவு அனைவரது மத்தியிலும் நீடிக்கத் தொடங்கியது. கூடுமான வரையிலும் போட்டிகள் தவிர்க்கப்படுவதால், அதற்காகச் செலவிடப்படும் பிரச்சாரங்கள் இல்லாமல் போய்விடுகின்றன. இவ்வாறு செய்வதால், உறுப்பினர்களுக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டு, அனைத்து இனங்களும் தலைவர் பதவியைப் பெறுவதற்கு வசதி செய்யப்படலாம். இது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக, பொதுநோக்கத்திற்காக செயல்படக்கூடியதாக மாறும் தன்மை கொண்டதாகும். இதன் உண்மையான நோக்கம் ஒற்றுமையை ஏற்படுத்தவும், அனைவரும் ஒத்துழைப்பாகச் செயல்படவும், சமத்துவம், திறமை போன்வற்றைக் கட்டிக் காக்கும் வண்ணமும் ஒரு மரபு தேவைப்படலாயிற்று. எனவே மரபு அமைக்கும் முயற்சியை 1920-ஆம் ஆண்டிலிருந்தே ஆராயத் தொடங்கினர்.

பல்வேறு இனத்திலுள்ள திறமைமிக்க அனைவருக்கும் தலைவர் பதவி சுழற்சி முறையில் தரவேண்டுமென 1924-ஆம் ஆண்டில் ஓர் உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார். மாநகர் மன்றம் அரசியல் பிரச்சனைகளில் ஈடுபட்டு, அரசியலைப் பேசித் தீர்த்துக் கொள்வதற்காக ஏற்பட்ட இடமல்ல. மக்களின் நலன்கருதி, அனைவரது ஒத்துழைப்போடு கூட்டாகச் செயல்பட்டால்தான் மக்களின் நலம் காக்கப்படும் என்பதை எடுத்துரைத்தார். இதற்குப் பிற உறுப்பினர்களும் ஆதரவு அளித்ததோடு, நடைமுறைப்படுத்தும் விதத்தில் பம்பாய் மாநகராட்சியில் இயங்கிக் கொண்டு வந்த சுழற்சி முறையை உதாரணம் காட்டிப் பேசினார்கள். இதே கருத்து ஆண்டுதோறும் மாநகர் மன்றத்தில் பேசப்பட்டதால் மரபு கொண்டுவர ஆதரவு கிடைத்தது. இவ்வாறு பொதுவான மரபமைக்கும் முறை முதலில் விவாதிக்கப்பட்டது. பின்னர் சிறுபான்மையோர்களின் நலன் குறித்து மரபமைக்கும் விவாதம் தொடரலாயிற்று. ஆங்கிலோ-இந்திய உறுப்பினர் ஒருவர், தங்களது இனத்திற்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கோரினார்.

நகரத்திலுள்ள மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப அனைத்து இனங்களுக்கும் சுழற்சி முறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகின்ற மரபினைக் கொண்டு வர வேண்டுமென ஓர் உறுப்பினர் 1926-ஆம் ஆண்டு கருத்துத் தெரிவித்தார். தலைவர் பதவி சுழற்சி முறையின்படி ஓர் இனத்தை அடுத்து மற்றொரு இனமாகச் சுழன்று கொண்டு இருக்க வேண்டுமெனக் கூறினார். 1927-ஆம் ஆண்டில் மெயில் (The Mail) பத்திரிகை பதவி முதன்மைப்படி தலைவர் பதவி கொடுக்கலாமென்ற கருத்தைக் கூறியது. திரு. சத்தியமூர்த்தி, நகரத்தின் பொறுப்பும், மரியாதையுமிக்க தலைவர் பதவியைப் போட்டியின் காரணமாக அனைவரது கண்டனத்திற்குரிய பதவியாக இழிநிலைப்படுத்தி விடக்கூடாது என்றும், இதனால் மாநகராட்சி உறுப்பினர்களின் வாழ்வைக் குலைத்து விடக் கூடாதெனவும் கருத்துக் கூறினார். 1928, 1929-ஆம் ஆண்டுகளில் இக்கருத்து அதிகமாக வேரூன்ற ஆரம்பித்தது. ஆனால் ஆண்டுதோறும் மரபு ஏற்படுத்த வேண்டுமென மாநகராட்சி மன்றத்தில் கருத்துத் தெரிவிப்பதோடு கடமை முடிந்து விட்டதென எண்ணி அனைவரும் வாளா இருந்தமை குறித்து ஆச்சரியப்பட வேண்டியது உள்ளது. ஏனெனில் ஒருவர் கூட மரபு அமைக்க முன்வராதது குறித்து, விளக்கங்கள், காரணங்கள் அறிய முடியாமல் உள்ளன. இதனால் மாநகர் மன்றத்தில் மிகுதியான, பலத்த கேள்விக் கணைகள் வீசப்பட்டன.

1930-ஆம் ஆண்டு சனவரி மாதம், அப்போது தலைவராக இருந்த இராமசாமி மரபு அமைக்க முற்பட்டார். இவர் இங்கிலாந்தில் உள்ள பல்வேறு நகரங்களில் மேயர்கள் தேர்ந்தெடுக்கும் முறை குறித்து, அனைத்து நகர மேயர்களுக்கும் கடிதத் தொடர்பு கொண்டார். இலண்டன் மாநகர மேயர், மான்செஸ்டர் நகரமேயர், பிரிமிங்காம் நகரமேயர், லீடுஸ் நகர (Leeds) மேயர், எடின்பர்க் நகரத் தலைமையாளர் (Provests) மற்றும் இதுபோன்று கிளாஸ்கோ (Glasgow), அபர்டீன்(Aberdeen), தண்டி (Dundee) ஆகிய நகரத் தலைமையாளர்களிடம் தொடர்பு கொண்டார். அவர்களிடம் மேயர்கள் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும், அதற்கு நடைமுறைப் பழக்கவழக்கங்கள் மரபாக ஏற்படுத்தப் பட்டுள்ளனவா என்பதையும், அதற்கு மன்றமானது எவ்வாறு இடமளித்து மதிப்பளிக்கின்றது என்பது போன்ற அடிப்படைக் கேள்விகளைக் கேட்டு இருந்தார். ஏனெனில் இங்கிலாந்-

தில் ஒவ்வொரு நகரும்,ஒவ்வொரு மாதிரியான மரபுகள் கொண்டு இருப்பதுடன், அனைத்து நகரங்களும் ஏறக்குறைய மேயர் தேர்தலுக்குச் சில மரபுகள் கொண்டிருக்கின்றன என்பதை அறிவார்.

அரசியல் கட்சிகள் மாறி மாறி மேயர் பதவியைப் பெறு-கின்ற சுழற்சி முறைமையை லீடுஸ் (Leeds) மற்றும் பிரிஸ்டல் (Bristol) ஆகிய நகரங்கள் கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் மூலம் தேர்வுக் குழுக்கள் அமைத்து, மேயர் தேர்ந்தெடுக்கும் முறையை பிரிமிங்காம் கொண்டு இருந்தது. இலண்டன் மாநகரில் மேயர் பதவி முதன்-மையில் மன்றத்தில் அனுபவமும், வயதும் முதிர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறையைக் கொண்டு இருந்தது. நகராட்சித் தேர்தல்களில் அரசியலே குறுக்கிடக் கூடாது என்று கிளாஸ்கோ நகரத்தலைவர் இராமசாமிக்குப் பதில் அளித்து இருந்தார். எனவே பல்வேறு நகரங்களின் மேயர் தேர்தல்களில் மரபுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை உணர்ந்து, சென்னைக்கும் ஒரு மரபினை ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதோடு, முடிவும் எடுக்கப்பட்டது. ஏனெனில் ஆண்டுதோறும் தலைவர் தேர்தலின் போது ஏற்படும் போராட்டமும், போட்டியும், அதிகரிக்-கக்கூடாது என்றும் எண்ணவே, மரபு ஏற்படுத்த விழைந்தனர்.

மேயர் தேர்தலுக்கு மரபு ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கி-யது நீதிக்கட்சி என்றால் தவறாகாது. அரசாங்கம் வெளியிட்டுள்ள இனச்சார்பு ஆணைகள் தான் இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்-தன எனலாம். நீதிக்கட்சியின் தீர்மானம் தான் முதன்முதலாக மரபு ஏற்படுத்த தற்செயலாகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டம் 1930-ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் நீதிக்கட்சியின் தீர்மானத்-தை திரு. ஜேம்ஸ் அவர்கள் கொண்டு வந்து, விவாதத்தைத் தொடங்கிவைத்தார் அனைத்துக் கட்சியையும் சார்ந்த ஏராளமான மாநகராட்சி உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஆனால் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கிறித்தவர்களும், பிரா-மணர்களும் நீதிக்கட்சியில் கூறப்பட்ட சுழற்சி முறை வரிசையை

ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் நீதிக்கட்சி அமைத்துள்ள இனங்களின் சுழற்சி முறை வரிசையில் அதிருப்தி கொண்டதால், அக்கூட்டத்தில் மரபு ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் கிறித்தவர்களும், பிராமணர்களும் 1930-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி கூடி, சுழற்சி முறை வரிசையில் சில மாற்றங்கள் குறித்த கருத்துக்களை வெளியிட்டனர். முதலில் பிராமணரல்லாத இந்துக்களுக்கும், இரண்டாவது பிராமணர்களுக்கும், மூன்றாவது பிராமணரல்லாத இந்துக்களுக்கும், பின்னர் கிறித்தவர்களுக்கும் மேயர் பதவி கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டனர். அக்கருத்துக்கள் யாவும் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டன. எனவே மரபு அமைக்கும் வேலை ஆரம்பமானது. கீழ்க்கண்ட வகையில் முதல்படி (draft) தயாரிக்கப்பட்டது. அது :-

1. தலைவரை (மேயரை)த் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு மரபு ஏற்படுத்தவேண்டும். இது 1930-ஆம் ஆண்டுத் தேர்தலிலிருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.
2. பல்வேறு இனத்தவர்களிலிருந்தும் மாநகராட்சியின் மேயர் கீழ்க்கண்ட வரிசையின் படியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:
    1. பிராமணரல்லாத இந்து
    2. பிராமணர்
    3. பிராமணரல்லாத இந்து
    4. கிறித்தவர்
    5. பிராமணரல்லாத இந்து
    6. முஸ்லீம்
    7. பிராமணரல்லாத இந்து
    8. தாழ்த்தப்பட்டோர்.
3. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து இனத்தவர்களில், ஓர் இனத்தவரில் எப்போதாவது வேட்பாளர் கிடைக்கவில்லையானால், அந்த இனத்தில் உறுப்பினரே இல்லாமல் இருந்தால், அந்த இனத்திற்கு அடுத்து உள்ள வரிசையிலுள்ள இனத்தவருக்குப் பதவி போய்ச்சேரவேண்டும்.
4. ஓர் இனத்திலுள்ள தலைவர் (மேயர்) தற்காலிகமாகப் பதவியில் இல்லாமல், பதவி காலியாக இருக்குமேயானால், அந்த

குறிப்பிட்ட பதவிக் காலத்திற்கு அதே இனத்திலுள்ள மற்ற ஒருவரை நியமனம் செய்யலாம்,

5. தலைவர் (மேயர்) தேர்ந்தெடுக்கப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், தலைவராக வீற்றிருப்பவர் மரபு வரிசையில் அடுத்துத் தலைவராக வரக்கூடிய இனத்தவர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அக்கூட்டத்தில் தலைவராக வர விரும்புகின்றவர்கள் முன்வருவதோடு அப்பொழுது உள்ள தலைவருக்கும் தெரியப்படுத்தவேண்டும். அவ்வாறு தலைவராக வரவிரும்புகின்றவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு பேர்களாக இருக்க நேரிடுகின்ற சமயங்களில், தலைவர் கூட்டத்தைக் கூட்டவேண்டும். இக்கூட்டம் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் நடைபெறவேண்டும். இதில் அப்பொழுது உள்ள தலைவர் அனைத்து உறுப்பினர்களையும் அழைக்க வேண்டும். இக்கூட்டத்தில் வாக்குச் சீட்டுக்களின் மூலமாக வேட்பாளர்களின் ஆதரவைக் கண்டு கொள்ள வேண்டும். அதிகமான வாக்குக்கள் பெற்றவர் தலைவராக (மேயராக) நியமனம் செய்யப்படுவார் என முதல் படியில் வரையப்பட்டது. இவ்வாறாக மரபின் வரைவு வரையப்பட்டது.

வரையப்பட்டுள்ள மரபு முறைமையை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டதோடு அதனைப் பின்பற்றவும் செய்தனர். இம்மரபினை ஏற்படுத்துவதற்கு அரும்பாடுபட்டவர்கள் இராமசாமி, ஜேம்ஸ் ஆகியோர் ஆவர் இவ்வாறாக மரபு ஏற்படுத்தப்பட்டதால், மக்களின் பொதுக்கருத்து இதற்கு உறுதுணையாக இருந்ததால் மரபினை மீற, எந்த ஒரு தனி மனிதனுக்கும், அரசியல் கட்சிக்கும் துணிவு வராது அப்படித் துணிவே வந்தாலும், மரபினைப் பாதிக்கும் வகையில் அவர்களால் எதுவும் செய்ய முடியாது என்பதும் உணரப்பட்டது. இருப்பினும் மரபு ஏற்படுத்தப்பட்ட முதல் ஆண்டுத் தேர்தலிலே, போட்டி வேட்பாளராக முஸ்லீம் இனத்திலிருந்து ஒருவர் போட்டியிட்டார். இவர் ஆறு வாக்குகள்தான் பெற்றாரெனினும், போட்டியில்லாமல் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நோக்கம் மீறப்பட்டு விட்டது. முஸ்லீம் உறுப்பினர்கள், இந்த மரபு வரைவில்

போதுமான மதிப்பு முஸ்லீம் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படாத காரணத்தாலும், திடீரென ஏற்படுத்தப்பட்ட இம்மரபிற்கு எதிராகத்தான் வேட்பாளரை நிறுத்தினோமே தவிர, மரபு ஏற்படுத்துவதற்கு எதிர்ப்பு ஏதுமில்லை என விளக்கம் தந்தனர். சிறுபான்மையினருக்கு, குறிப்பாக முஸ்லீம்களுக்குத் தலைவர் சுழற்சி மரபில் போதுமான மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் மரபினை உருவாக்கிய திரு. ஜேம்ஸ் இப்போட்டி பற்றிக் குறிப்பிடுகையில், மரபின் நோக்கம் நடைமுறையில் நிறைவேறிவிட்டாலும், முழுமையானதாகச் சொல்ல இயலாது என்றார்.

1931-ஆம் ஆண்டு, மேயர் பதவிக்குப் பிராமண வரிசையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இரண்டுபேர் போட்டியிட்டாலும் பிராமண உறுப்பினரே தேர்ந்தெடுக்கப்பட்டதால், மரபானது காப்பாற்றப்பட்டது. ஆனாலும் தேர்தலில் போட்டி இருந்த காரணத்தால், அல்லது தேர்தலில் போட்டிகள் ஏற்பட்ட காரணத்தால் மரபு புறக்கணிக்கப்பட்டு விட்டது என அனைவரும் கண்டனம் செய்தனர். எனவே மரபினைக் கட்டிக்காப்பதற்கு முன்னெச்சரிக்கையாகச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தனர். மரபின் பெயரால் வேறுபட்ட கருத்துக்கள், விவகாரங்களைப் புகுத்தக்கூடாது எனவும் கூறினர். மரபை அனைத்து உறுப்பினர்களும் பின்பற்றி, மதிப்பளிக்கும் வகையில் சில ஏற்பாடுகள் செய்தால்தான், மரபானது தொடர்ந்து செயல்பட முடியுமென நம்பினர். மரபு ஏற்படுத்தப்பட்ட நோக்கம் தேர்தல்களில் போட்டியில்லாமல் செய்வது ஆகும் பிரச்சாரங்களைத் தவிர்ப்பதும், மேயர் தேர்வு அரசியலுக்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டுமென்பதற்குமேயாகும். இப்போட்டிகள் ஏற்பட்டதை வருணித்து, மரபு குலைந்து விட்டது, மரபு நீடூழி வாழ்க என வருணித்தனர். முஸ்லீம் உறுப்பினர்களுக்கிடையே, அவர்களுக்கு மரபில் பொருத்மான பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை என 1932-ஆம் ஆண்டு அதிருப்தி கொண்டார்கள். 1933-ஆம் ஆண்டில் கிறித்தவர் வரிசைப்படி, கிறித்தவர் வெற்றி பெற்றாரே எனினும், அந்த ஆண்டு கடுமையான போட்டி ஏற்பட்டது. குறைந்த வித்தியாசமாக 13 வாக்குகள் வித்தியாசத்தில்தான் கிறித்தவ உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருப்பினும் கிறித்தவர்களுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை எனவும், சமமாக நடத்தப்படவில்லை,

எனவும் குறைபட்டுக்கொண்டனர். ஏனெனில் கிறித்தவர் என்று கொடுக்கப்படுகின்ற மரபு வரிசையில், ஐரோப்பியர்கள், இந்தியக் கிறித்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள் ஆகிய மூன்று பிரிவினர்களும் இடம்பெறுகின்றனர் என்பதை முன்னிட்டு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக மரபில் இடம்வேண்டுமெனக்கோரினார்கள். ஆனால் இதில் ஏற்றுக்கொள்வதற்கு எந்த நியாயமும் தெரியவில்லை. இதே மாதிரியாக மற்ற இனத்தவர்களும் தங்களது இனத்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்த ஆரம்பித்து விட்டனர். 1933 - ஆம் ஆண்டின் மாநகர் மன்றத்தில் இதுபற்றிக் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. ஏனெனில் பிராமணரல்லாதஇந்துக்கள் என்ற வரிசையில், ஒரேஇனமோ, பிரிவோ, ஒற்றுமைப்பட்டது என்று சொல்லமுடியாது. ஏராளமான இனத்தவர்கள் அதில் உள்ளனர். அதாவது முதலியார்கள், நாயக்கர்கள், வன்னியர்கள், நாடார்கள், பிள்ளைகள் போன்றவர்கள் தங்களுக்கும் தனித்தயே இடம்வேண்டுமெனக் கூறலாயினர். அதே ஆண்டில் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, போட்டியில்லை என்றாலும், லால்தாஸ் கோவிந்தாஸ் (Mr.Laldass Govindas) என்பவர் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்து, திரும்பப்பெற்றுக்கொண்டார். அவருடைய அரசியல் கட்சியைச்சேர்ந்தவர்கள் வேட்புமனுவைத் திரும்பப் பெறவேண்டுமென வற்புறுத்தியதன்பேரிலே திரும்பப் பெற்றுக் கொண்டார். பின்னர் தலைவர் தேர்தலுக்கான மரபு 1935-ஆம் ஆண்டிலிருந்து 1940-ஆம் ஆண்டு வரை சீராக இயங்கியது. ஆனால் கிறித்தவர்களின் கோரிக்கை தொடர்ந்து வற்புறுத்தப்பட்டது.

மேயரைப் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற மரபு பின்பற்றி வந்த சமயத்தில், துணை மேயர் பதவி ஏற்படுத்தப்பட்டதால், மாநகர் மன்றத்தில் மறுபடியும் போட்டியும் பிரச்சாரமும் தொடர்ந்து வீசின. மேயர் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர்,துணை மேயருக்கு ஏராளமான போட்டிகள் ஏற்பட்டன. 1941-ஆம் ஆண்டிலிருந்து1954-ஆம் ஆண்டு வரையிலுமாக, மேயர் பதவிக்கு ஒரே ஒரு தடவை, 1946 - ஆம் ஆண்டில் மட்டுமே போட்டி இருந்தது. மற்ற ஆண்டுகளில் மரபு காப்பாற்றப்பட்டது.

சுதந்திரம் பெற்று, மக்களாட்சியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது இனச்சார்புள்ள மரபு முறைகள் நீக்கப்பட வேண்டுமென்ற எழுச்சி, மக்களிடையே பரவிற்று. இம்மரபை நீக்கித் திறமையான நபர் நகரின் மேயராக வரவேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே மலர்ந்தது. 1955-ஆம் ஆண்டில் மரபினை நீக்க வேண்டுமென மாநகர் மன்றத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றது. இம்மரபு ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர்களின் வசதிக்காக ஏற்பட்டது என்றும், இனச் சார்புள்ள தன்மைகளை வளர்த்து, நம்மிடையே பிரிவினையை ஏற்படுத்தி, ஆங்கிலேய ஆட்சி சீராக நடைபெறுவதற்காக அமைக்கப்பட்ட ஒன்றுதான் மரபாகும் என்று உறுப்பினர்கள் கூறினார்கள். மதச் சார்பின்மை, சமத்துவம் ஆகியவற்றிற்கு இந்திய அரசியலமைப்புப் பாடுபடுகின்றபோது, இனச் சார்பு மரபு முறை இந்திய அரசியலமைப்பிற்கு எதிரானதாகும் என்று குற்றம் சாட்டினார்கள். மரபு ஓர் ஒப்பந்தம் தானே தவிர, சட்டப்படியாகச் செல்லும்படியாகக் கூடியதல்ல என்று இதற்குப் பதில்கள் அளிக்கப்பட்டன. மரபு அறநெறித் தன்மையில் அனைவரையும் இணைத்ததே தவிர, சட்டப்படியாக ஏதும் செய்யக்கூடியது அல்ல எனவும் கூறப்பட்டது. மேலும் மரபு மாநகராட்சி மன்றத்திற்கு வெளியில் தான் செயல்படுகின்ற தன்மையைக் கொண்டு இருப்பதால், மாநகராட்சி மன்ற அலுவல்களில் குறுக்கீடு செய்யாது எனவும் காரணம் சொல்லப்பட்டது. இவ்வாறு மரபினைக் கட்டிக் காக்கும் காரணங்கள் கூறப்பட்டாலுமே, மரபிற்கு எதிராகப் போட்டி ஏற்பட்டது. போட்டியினால் மரபு மீறப்பட்டது என்று கொள்வதே சாலவும் பொருந்தும். 1960-ஆம் ஆண்டிலும் போட்டி ஏற்பட்டது. 1961 - ஆம் ஆண்டிலும் 1963-ஆம் ஆண்டிலும் மேயர் தேர்தலுக்குப் போட்டிகள் ஏற்பட்டன. மக்களாட்சி செம்மையுற வேண்டுமானால், நிச்சயமாகப் போட்டி அவசியமென உணரப்பட்டது. பின்னர் 1963-ஆம் ஆண்டில் ஒரு வேட்பாளருக்கு முன்மொழிய ஆதரவில்லாமல் அவருடைய வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது, இல்லையேல் போட்டி இருந்திருக்கும்.

1966 - ஆம் ஆண்டில் மேயர் தேர்தலின் போது மாநகராட்சி மன்றத்தில் கூச்சல், குழப்பம் ஏற்படவே, பார்வையாளர்கள்,

பத்திரிகையாளர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். தேர்தலை நடத்தும் மேயர், வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர், வேட்பாளர்களின் சம்மதத்தைக் கேட்ட பின்னரே, வாக்கெடுப்பிற்கு விடவேண்டுமெனக் கூறியதால் இக்கூச்சல், குழப்பம் ஏற்பட்டன. சில உறுப்பினர்கள் மேயரின் பதவியைக் கூட துச்சமாக மதித்து, இழிவுபடுத்தப்படுமென்ற மிரட்டல்கள் கூடச் செய்தனர். மேயரின் அதிகாரத்தைக் கூட மீறுவதற்கும் தயங்க மாட்டோமென உறுதியாகவும் நின்றனர். இறுதியில் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் போட்டியும் இருந்தது. கடைசியில் மரபு முறை வரிசையில் வரக்கூடிய உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பட்டு, மேயரானார். ஆனால் போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்களுமே ஒரே இனவரிசையில் அடங்கப் பெறவே, ஒருவர் அங்கனம் வரமுடிந்தது. இத்துடன் நில்லாமல், போட்டி என்பது மக்களாட்சியை இயங்க வைக்கக் கூடியதென்ற புதிய கருத்தையும் வலியுறுத்தினர். மரபு முறை 1968 - ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

மரபினைக் கண்டித்து 1968-ஆம் ஆண்டு மாநகராட்சித் தேர்தலின் போது ஜனசங்கக் கட்சி தனது தேர்தல் அறிக்கையில் மரபு கைவிடப்பட்டு விடவேண்டுமெனவும், இனச் சார்புத்தன்மைகளைப் பேசுவது காலத்திற்கு ஒவ்வாதது எனவும் வருணித்தது. பின்னர் 1971-ஆம் ஆண்டு மாநகராட்சிக் கட்டிடத்திற்கு முன்னர், மரபை நீக்க வேண்டுமெனப் போராட்டம் ஒன்றை ஜனசங்கக்கட்சி நடத்தியது. இக்கட்சி மேயரின் பதவிக்காலத்தை மூன்றாண்டுகளாக உயர்த்த வேண்டுமெனவும் கோரி போராட்டம் செய்தது.

மரபுகள் ஏற்பட்டதைக் காப்பதற்கு மேயர் தேர்தல்கள் அமைகின்றபோது, துணைமேயர்களுக்குப் போட்டி அதிகமாக இருந்துள்ளதை நாம் கண்ணுறும்போது துணைமேயர் தேர்தலுக்கும் ஒரு மரபு தேவை என்பதை உணர வேண்டியுள்ளது.

17

மேயருடைய அதிகாரங்கள்

இங்கிலாந்தில் முதல் மேயர் 1191 - ஆம் ஆண்டு உருவாகி யிருக்கலாமெனக் கருத்து உள்ளது. முதன்முதல் மேயராக திரு. ஹென்ரி பிட்ஜ் ஆல்வின் (Henry Fitz A'lwin) என்பவர் பதவி வகித்துள்ளார். அதற்குப் பின்னர் இங்கிலாந்தில் உள்ளாட்சி அரசாங்கங்களின் வளர்ச்சி அதிகமான அளவில் ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்தின் அரச பிரபுக்களே, உள்ளாட்சியின் மாநகராண்மைத்தலைவரான மேயரின் அலுவலகத்திற்கு மதிப்பளித்து விட்டுத் தான் நகருக்குள்ளேயே நுழையக் கூடிய நிலை பின்னர் உருவாக்கப் பட்டது. மேயர்கள் தேர்ந்தெடுக்கப்பட மரபுகள் பல ஏற்படுத்தப்பட்டன என்பதையும் முன்னர்க் கண்டோம். இங்கிலாந்து கூட்டாட்சி நாடாக இல்லாமல், ஒற்றையாட்சி (unitary) நாடாக இருக்கின்றதால், மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பும், மரியாதையும் உள்ளாட்சிக்குக் கொடுத்துள்ளது.

சென்னையில் 1688 - ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாநகராட்சி மேயரின் முறை மன்றம் என்றே அழைக்கப்பட்டது. இதற்கு அதிகார எல்லை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து 10 மைல்களுக்குள் என வரையறுக்கப்பட்டது. இந்த அதிகார எல்லைக்குள் நீதிப்பணியையும் நகராட்சிச் செயலையும் செய்யக் கூடிய பொறுப்பினை மேயர் முறை மன்றம் பெற்றது. பொதுப் பள்ளிகள், வியாபார இடங்கள், சிறைச்சாலைகள் போன்றவைகளைக் கட்டுவதற்கு வேண்டிய நிதியினைப் பெறுவதற்கு வரிவிதிக்கும் அதிகாரத்தை மேயரின் முறை மன்றம் பெற்று இருந்தது. மேயரின் முறை மன்றம் கூட்டாக மேயரின் தலைமையில் இயங்கக்

கூடியதாகும். இதில் 12 மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் 60 ம் அதற்கு மேற்பட்ட நகரவைக்குழு உறுப்பினர்களும் இடம் பெற்றனர். எனவே மேயரின் முறை மன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தும் மேயரையே சாரக்கூடியது அல்லவா? மேயரின் முறை மன்றம் அரசுப்பிரிவு மற்றும் குற்ற வியல் பிரிவு ஆகிய வழக்குகளை விசாரிக்க அதிகாரம் பெற்று இருந்தது. அரசுப் பிரிவு வழக்குகளில், 9 ரூபாய்களுக்கு மிகாத, அதாவது 3 பகோடாக்களுக்கு மிகாத மதிப்புள்ள வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியபின் மேல்முறையீடு செய்ய வசதி செய்யப்பட்டு இருந்தது. இதே மாதிரியாக, குற்றவியல் வழக்கு களில், குற்றவாளிகளின் கால், கை எதையாவது எடுக்கக் கூடியதாகவோ, மரணதண்டனையாகவோ இருக்குமாயின், மேல் முறையீடு செய்யலாமெனக் கூறப்பட்டது. மேயரின் முறை மன்றம் தண்டனைகள் கொடுக்கவும், மரண தண்டனைகள், சிறையிலிடல் போன்ற தண்டனைகள் வழங்கவும் அதிகாரம் பெற்று இருந்தது.

மேயரின் அதிகாரம் மேயரின் முறை மன்றத்தோடு நின்று விடவில்லை. இவர் நிருவாகத்தில் பல பிரிவுகளிலும் பங்கு ஏற்றுச் செயல்படவும், அவற்றை நிருவகிக்கவும் அதிகாரம் பெற்று இருந்தார். மேயரும் சில மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டு, பதிவாளர் முறை மன்றத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இப்பதிவாளர் முறை மன்றம் மேயர் மற்றும் மாநகராட்சி நியமன உறுப்பினர்களின் வேலைகளுக்கு உதவி செய்யக் கூடியதாக அமைந்தது. பதிவாளர் பதவிக்கு நியமனம் செய்வதற்கு மேயர் அதிகாரம் பெற்று இருந்தார். மேயரும் மற்றும் மூன்று மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, அக்குழு திறமை வாய்ந்த, தகுதி யான பதிவாளரை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்று இருந்தது. பதிவாளருக்கு உதவியாக நகர எழுத்தர் என்ற ஓர் அலுவலர் இருந்தார். இவர் மேயர் மற்றும் மாநகர நியமன உறுப்பினர்கள் ஆணையிடும் செயல்களைச் செய்யக் கூடியவர். இதுதவிர்த்து மேயரும் மற்றும் மாநகராட்சியிலுள்ள மூன்று மூத்த நியமன உறுப்பினர்களும் சேர்ந்து அமைதி நேர்மையாளர்களாகவும் பணி புரிந்தனர். மாநகராட்சியின் பணத்தைப் பாதுகாக்க

வும், அதற்குப் பொறுப்பாக ஒருவரை நியமிக்கவும் மேயர் அதிகாரம் பெற்று இருந்தார். மாநகர நியமன உறுப்பினர்களுள் இருவரை தனியான தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்து, இவ்விருவரும் மேயருடன் சேர்ந்து தேர்வுக்குழுவாக அமைந்தது. இக்குழு கருவூலத்தைக் காக்கும் கருவூலர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தது. கருவூலம் மாநகராட்சிப் பணிக்குக் கருவாக இருப்பதால், தகுதியானவர்களையும், நேர்மையானவர்களையும் தான் தேர்ந்தெடுத்தது என்பதில் சந்தேகமில்லை.

வரி விதிக்கும் அதிகாரம் 1687-ஆம் ஆண்டுச் சாசனத்தின் படி கொடுக்கப்பட்டு இருந்தாலும், அதனைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையில் சென்னை மாநகராட்சி திகழவில்லை. தக்காணத்தில் ஔரங்கசீப் ஆக்கிரமிப்புச் செய்ததாலும், மொகலாயர்களுடன் போர் நடைபெற்றுக் கொண்டு வந்ததாலும், நேரடியாக வரிகளை விதிக்கமுடியவில்லை. எனவே மாநகராட்சி செய்ய வேண்டிய பொதுப்பணிகள், நிதியில்லாமல் செய்யமுடியவில்லை. எனவே மேயரும் மாநகராட்சி நியமன உறுப்பினர்களும் அரசாங்கத் தலைவருக்குக் கோரிக்கைகள் கொடுத்து, அதிகமான நிதிகளுக்கு வழிசெய்யும்படி வேண்டிக் கொண்டனர். இவர்கள் 1689-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி அரசாங்கத் தலைவரிடம், சில வரிகள் விதித்து மேலும் வருமானத்தைப் பெருக்கும் அதிகாரம் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். நெல் மீது விதிக்கப்பட்டுள்ள சுங்கவரி, அளவிடுவதற்கு விதிக்கப்படும் தீர்வை, தரகு, எடைபார்ப்பதற்கு அளிக்கப்படும் தீர்வை மற்றும் போன்ற வரிகளை வசூலிக்க மாநகராட்சிக்கு அதிகாரம் வழங்கக்கோரினார்கள். இதற்குத் தலைவரும் அவரது குழுவும் அங்கிகாரம் அளித்தனர்.

புதிய வருவாய் இனங்கள் 18 மாதங்களுக்குப் பிறகு, தலைவரே தம்முடைய குழு அனுமதியின்றி மாநகராட்சிக்கு வழங்கினார். எனவே மாநகராட்சி, அதாவது மேயரின் முறை மன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் மோதல்கள் எழ ஆரம்பித்தன. மேயரின் முறைமன்ற உறுப்பினர்கள் அரசாங்கக் குழுவிலும் இடம் பெற்று இருந்ததால், இச்சிக்கல் எழ ஆரம்பித்தது. இவ்வாறாக வருவாய் இனங்கள் கொடுக்கப்பட்டதில், அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை கிளம்பியது. இதே நேரத்தில்

கப்பற்படை முறை மன்றத்தோடும், எது உயர்ந்தது என்ற சிக்கலிலும் மேயர் முறை மன்றம் சிக்கித் தவித்தது. ஏனெனில் 1691-ஆம் ஆண்டு திரு. ஜான் பிக்ஸ் (Mr. John Biggs) என்பவர் உயிரோடு இருந்தவரையிலும் கடற்படை முறை மன்றம் மேயரின் முறை மன்றத்திற்கு மேலாக அதிகாரம் பெற்று இருந்தது. மேயரின் முறை மன்றம் கடற்படை முறைமன்றத்திற்குக் கீழ், அதன் கட்டுப்பாட்டிற்குள் இயங்கிக்கொண்டு வந்தது. அரசாங்கத் திற்கும் மேயரின் முறை மன்றத்திற்கும் இடையே கீழ்க்கண்ட இரண்டு காரணங்களால் மோதல்கள் ஏற்பட்டன. முதலாவதாக, ஆங்கிலேய மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் குறைவாகப் பிரதிநிதித்துவம் பெற்று இருந்ததை வன்மையாகக் கண்டித்தனர். ஏனெனில் 1690-ஆம் ஆண்டிலிருந்தே எட்டு ஆங்கிலேய மாநகராட்சி நியமன உறுப்பினர்கள் இருந்து வந்துள்ளார்கள் என்றும், அதற் குப் பிறகு குறைவுபட்டதற்குச் சரியான காரணங்கள் இல்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்தது. பல்வேறு இனத்தவர்களான இந்துக்கள், மூரியர்கள் (Moors), போர்த்துக்கீசியர்கள், எமேரேயர் (Hebrews) மற்றும் அருமேனியர்கள் (Armenians) ஆகியோர்களுக் கெல்லாம் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்ட பின்னரும் கூட, ஆங்கிலேயர்களின் பிரதிநிதித்துவம் அதிகமாக இருந்தது என்ப தற்கு ஆதாரமாக எடுத்துக் கூறினார்கள். இது முதல் மோதலா கும். இரண்டாவது மோதல் 1702-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இம்மோதல் பதிவாளரை நியமனம் செய்வதில் ஏற்பட்டதாகும். அரசாங்கமும் மாநகராட்சியும் தனித்தனியாக ஒவ்வொரு பெயர் களைப் பதிவாளர் பதவிக்குப் பரிந்துரைத்தன. இறுதியில் மாந கராட்சி பரிந்துரைத்த பெயர் நீக்கப்பட்டு அரசாங்கம் பரிந்துரைத்த நபர் பதிவாளராக நியமனம் பெற்றார். பதிவாளரை நியமனம் செய்யும் அதிகாரம் மாநகராட்சியைச் சார்ந்ததாக இருப்பினும், அரசாங்க நியமனத்தை மாநகராட்சி ஏற்றுக்கொண்டதால், அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தைத் திறமையாகப் பயன் படுத்தியது.

அரசாங்கத்துடன் மோதலுக்கு உண்டான காரணத்தை விலக்கும் வகையில், அரசாங்கமே 1726-ஆம் ஆண்டுச் சாசனத் தில் ஆங்கிலேயேர்கள் அதிகமாக மாநகராட்சியில் இருக்கும் வகையில் திருத்தி அமைத்தது. மாநகராட்சி நியமன உறுப்

பினர்களில் ஒன்பது பேர்களில் ஏழுபேர்கள், மேயருடன் சேர்த்து ஆங்கிலேயர்களாக இருக்கவேண்டுமென வரையறுத்தது. பதி- வாளர் முறை மன்றம் மேயருடன் சில நகராட்சி நியமன உறுப் பினர்களோடு சேர்ந்து அமைக்கப்பட்டது. இது 3000 ரூபாய்- களுக்குக் குறையாத மதிப்புள்ள வழக்குகளை விசாரிக்க அதிகாரம் பெற்றது. இருப்பினும் 3000ரூபாய்களுக்கு மேலான வழக்குத் தீர்ப்புக்களை, மறுபரிசீலனை செய்ய, முறையீடு செய்ய வசதி யளித்தது. முறையீடு ஆளுநர் குழுவிற்கு முதலிலும், அதற்கு அடுத்து அரசர் குழுவிற்கும் முறையிடலாமெனக் கூறப்பட்டது. ஷெரிப் என்ற அலுவலகம் கொண்டுவரப்பட்டது. இவரை ஆளுநர் குழுவே நியமனம் செய்தது. இவர் நீதிப்பணிகளைச் செயல் படுத்த, மேயர் முறைமன்றத்தின் வழக்குத் தீர்ப்புக்களைச் செயல்படுத்தும் அதிகாரியாகத் திகழ்ந்தார். ஆனால் மேயரின் பொறுப்பு இந்தச் சாசனத்தினால் குறையலாயிற்று. இதுவரை யிலும் அமைதி நேர்மையாளர்களாகப் பணியாற்றி வந்த பணியை, ஆளுநரும் அவரது குழுவும் ஏற்றுக் கொண்டது. இவ் வாறாக 1726-ஆம் ஆண்டுச் சாசனம் மாற்றங்களை ஏற்படுத்தி யது.

மேயரின் முறைமன்றத்தின் செயல்கள் சிக்கலற்றன வாகவோ, தொந்தரவுகளிலிருந்து விடுபட்டனவாகவோ இல்லை. இதன் செயல்கள் ஒழுங்குபடுத்தும் தன்மையைக் கொண்டுள்ள தால், சில சமயங்களில் வரைமுறைகளையும், பழக்கவழக்கங்களை யும் மீறிச் செயல்படுத்த வேண்டி இருந்தன. இது மக்களிடையே கொந்தளிப்பை உண்டுபண்ணியது. இவ்வாறு மேயரின் செயல்கள் சிக்கலானவையாக, இடையூறுகள் அதிகமாக உள்ளவையாக விளங்கின. இந்த இடையூறுகளை உணர்த்தும்வண்ணம் ஒரு நிகழ்ச்சி மாநகராட்சியில் நடைபெற்றது. சத்தியப் பிரமாணங்கள், சாட்சிசொல்வதற்கு முன்னர் எடுக்கக்கூடிய நடைமுறைச் செயலா கும். சத்தியப்பிரமாணங்கள் எப்படி எடுக்கலாம் என்பது பற்றித் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. இந்துக்கள் சத்தியப்பிரமாணங்கள், வாக்குறுதிகள் அனைத்தையும் பகவத்கீதையின்மேல் வைத்துத் தான் எடுப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் அரசாங் கம் பணத்தின்மீது வைத்து வாக்குறுதி அளிக்கப்படவேண்டு மெனக் கட்டாயப்படுத்தியது. ஆனால் இரண்டு வியாபாரிகள்

1736-ஆம் ஆண்டு பணத்தின் மீது சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள மறுத்துவிட்டனர். எனவே அவர்கள் கைது செய்யப் பட்டு, சிறையிலடைக்கப்பட்டனர். சிறையிலடைக்கும் படியாக மேயரின் முறைமன்றம்தான் தீர்ப்பு வழங்கியது. இதனால் ஆத்திரமுற்ற இந்துக்கள், மற்றும் வியாபாரிகள் போன்ற அனை வரும் கோட்டையை முற்றுகையிட்டு, போராட்டமும், சத்தியாக் கிரகமும் செய்தனர். கூட்டத்தினர்கள் இரண்டு வியாபாரிகளை உடனே விடுதலை செய்யும்படியும், பணத்தின்மீது வாக்குறுதி, சத்தியப்பிரமாணம் செய்யும்முறை தவிர்க்கப்படவேண்டுமெனவும் கோரலாயினர். இச்சூழ்நிலை மிகவும் நெருக்கடியாக, கூட்டம் கட்டுக்கடங்காமலும் இருந்த காரணத்தை உத்தேசித்து, இரண்டு வியாபாரிகளையும் நன்னம்பிக்கை உறுதிமொழியின் பேரில் ஷெரிப் விடுதலை செய்து, அனுப்பி வைத்தார். வியாபாரிகள் சிறையிலிருந்து வெளியே வந்ததும், கூட்டத்தினர்கள் திருப்தி ஏற்பட்டு, வீடுகள் திரும்பலாயினர். இவ்வாறு கூட்டம் உயிரையே பணயமாகக் கேட்கும் தன்மையை யுடைத்ததாக இருந்ததால், மேயரின் பணிகள் சிக்கலானவையாக, சிரமமான ஒன்றாக உள்ளன.

மேயரின் அதிகாரம் அமைதி நேர்மையாளர்கள் பணி யிலிருந்து 1726-ஆம் ஆண்டு நீக்கப்பட்டதோடு, அதனை அடுத்து வந்த 1753-ஆம் ஆண்டுச் சாசனத்தின் கீழும் அதிகாரம் குறைக் கப்பட்டது. பதிவாளர் முறைமன்றம் பிரச்சனைகள் ஏற்படுகின்ற போது வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை இதுவரையிலும் கொண்டு இருந்தது. ஆனால் 1753-ஆம் ஆண்டுச் சட்டத்தில், பிரச் சனையாக உள்ள இரண்டு தரப்பினர்களும் ஒத்துக் கொண்டால் தான், பிரச்சனைகளை அல்லது வழக்குகளை விசாரிக்க அதிகாரம் பெற்றது என வரையறுக்கப்பட்டது.

நகராட்சிச் செயல்கள் அனைத்தும் மேயரின் முறைமன்றத்தி லிருந்து பிரிக்கப்பட்டு அமைதி நேர்மையாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டன என்பதை 1792-ஆம் ஆண்டுச்சட்டம் கூறுகிறது. பின்னர் மேயரின் முறைமன்றம் 1798-ஆம் ஆண்டில் பதிவாளர் முறைமன்றத் திலும், பின்னர் 1801-ஆம் ஆண்டு பதிவாளர் முறை மன்றமே தலைமை முறை நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டதென்பதை அறிவோம். அமைதி நேர்மையாளர்களை ஆளுநர் குழு உறுப்பினர் தலைமையேற்று முதலில் நடத்தி வந்துள்ளார். அமைதி நேர்மை

யாளர்கள் மாநகராட்சிச் செயல்களுக்கு முழுப்பொறுப்பு வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் பதிவாளர்களை, மதிப்பீட்டாளர்களை, பொறியியலாளர்களை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்று இருந்தனர். இவர்களனைவரும் அமைதி நேர்மையாளர்கள் வரையும் திட்டங்களைச் செயலாக்கும் செயலாக்க அதிகாரிகளாக விளங்கினர். இம்முறை 1856-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து செயல்பட்டு வந்தது. 1792-ஆம் ஆண்டிலிருந்து மேயரின் அதிகாரம் குறைந்தது. தவிர, மேயரின் பதவியே 1801-ஆம் ஆண்டு நீக்கப்பட்டுவிட்டதென்பதையும் அறியலாம். இருப்பினும் பதவியை மட்டும் நீக்கிவிட்டு, அச்செயல்களைப் பிறிதொரு பெயர் கொண்ட அதிகாரியினால் செய்யப்பட்டதால், அப்பதவி முழுமையாக நீங்கி விட்டது, நீக்கப்பட்டு விட்டது என்று சொல்ல முடிவதில்லை.

அமைதி நேர்மையாளர்களின் ஆட்சி 1856-ஆம் ஆண்டு நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக மாநகராட்சி ஆணையாளர்களின் கையில் மாநகராட்சி நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. மூன்று மாநகராட்சி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். மூவரையும் அரசாங்கம் நியமனம் செய்தது. இவர்கள் ஊதியம் பெறுகிறவர்கள். மாநகராட்சியின் செயலாக்க அதிகாரங்கள்முழுவதும் இந்த ஆணையாளர்களிடம் விடப்பட்டன. பின்னர் 1865-ஆம் ஆண்டில், மற்றும் மூன்று கௌரவ ஆணையாளர்கள், ஊதியம் பெறுகின்ற ஆணையாளர்களுக்கு உதவியாக நியமிக்கப்பட்டார்கள். மாநகராட்சியின் வருவாய் இனங்கள் பல்வேறு சட்டங்களால் அதிகரிக்கப்பட்டன. இன்றைய மாநகராட்சியின் நிருவாகம் 1867-ஆம் ஆண்டில் தெளிவாக வரையறுக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி நிருவாகம் தலைவரிடமும் மற்றும் 32 கௌரவ ஆணையாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. இந்த 32 ஆணையாளர்களும் மக்களால் (வரி செலுத்துவோர்களிடமிருந்து) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இச்சட்டத்தின்கீழ் தலைவர் செயலாக்க அதிகாரத்துடன், கொள்கைகள் உருவாக்கும் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும் உரிமை பெற்று இருந்தார். சிறுவேலைகள், பழுது பார்ப்பது மற்றும் பிற வேலைகளைச் செய்ய, ரூபாய் 100க்கு மிகாத அவசர வேலைகளைச் செய்ய அதிகாரம் பெற்று இருந்தார். ரூபாய் 100க்கு மேல் செலவிடப்படுகின்ற வேலைகளுக்கெல்லாம் நிலைக்குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டுமெனவும் கூறப்பட்டது. வேலைகள் ரூ 1,00,000 மேல் மதிப்பீடு செய்யப்பட்டால், அவற்றிற்கு

உள்ளாட்சி அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். இவ்வாறு செயலாக்க அதிகாரத்தைப் பயன்படுத்த உரிமை பெற்றிருந்தார்.

செயலாக்க அதிகாரம் தலைவரிடம் அதிகமாக இருந்த காணத்தால், அவரால் அவற்றை முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. எனவே இவருக்கு உதவியாக இரண்டு துணைத் தலைவர்கள் 1878-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் பொறியியலராக இருக்கவேண்டும். தலைவர் ஆணையாளர்கள் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கியும், அக் கூட்ட நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். ஆணையாளர்கள் வருடாந்தர வரவு செலவுத்திட்டத்தைத் திருத்தவும், மாற்றவும், நிறைவேற்றவும் அதிகாரம் பெற்று இருந்தனர். ரிப்பன்பிரபுவின் முயற்சியால், மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. தவிர, இரண்டு துணைத்தலைவர் களுக்குப் பதிலாக, அவ்விடத்தில் மூன்று செயலாக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர், சுகாதார அதிகாரி, பொறியியலர் மற்றும் வருவாய் அதிகாரி ஆகிய மூவர், அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டனர். இதில் தலைவர் முழுநேர அதிகாரி யாகப் பணியாற்றும் பொறுப்பினைப் பெற்றார். தலைவர் நேரத் திற்கு நேரம் தேவைப்படுகின்ற சமயங்களில் மாதம் ரூ. 400க்கு மிகாத ஊதியம் பெறுகின்ற துணைஅலுவலர்களை நியமிக்க அதிகாரம் பெற்று இருந்தார். நானூறு ரூபாய்க்கு மிகுந்த ஊதி யம் பெறுகின்றவர்களை அரசாங்கத்தின் அனுமதியுடன்தான் நியமனம் செய்ய வேண்டுமென்ற வரையறை செய்யப்பட்டது. தலைவர் துணைஅதிகாரிகளுக்கு விடுப்பு வழங்கும் அதிகாரம் பெற்று இருந்தார். தலைவர் ஒப்பந்தங்கள் எடுத்து, வேலை செய்யும் அதிகாரத்தையும் பெற்றார். ரூ. 1000க்கு மிகாமல் உள்ள வேலைகளைச் செய்வதற்கு ஒப்பந்தங்கள் செய்து, வேலை செய்யப்படலாம் எனக் கூறப்பட்டது. மாநகர் மன்றம் ஒப்புதல் அல்லது அனுமதியளித்துள்ள வேலைகளை மட்டும் தான் தலை வர் செயலாக்கம் கொடுக்க வேண்டுமென்றும் சட்டம் வரையறுத் துள்ளது. எடுக்கக்கூடிய ஒப்பந்தங்கள் அந்தந்த நிதி ஆண்டிற்குள் செயல்படுத்தப் படவேண்டுமெனவும் சட்டம் கூறுகிறது. இது ரூ. 1000க்குக் குறைவாக இருந்தால் தான் செல்லுபடியாகக் கூடியது ஆகும்.

சென்னை மாநகராட்சி ஆணையாளர்கள் என்ற முத்திரை தலைவரின் பாதுகாப்பில் வைத்து பராமரிக்கப்படக்கூடியதாகக் கருதப்பட்டது. இம்முத்திரை மாநகராட்சியின் செயல்நடைமுறையில், தொடர்புகள் போன்றவற்றில் மாநகராட்சியைச் சுட்டிக் காட்டும் வகையில் பயன்படுத்தப்பட்டது. இதைத் தலைவர் மட்டுமே பயன்படுத்திக் கொண்டு வந்தார். பொறியியலார் இதனைப் பயன்படுத்த எண்ணிய போது அனுமதிக்கப்படாததோடு, தலைவர் மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும் உறுதி செய்யப் பட்டது. தலைவர் ஒப்பந்தங்கள் செய்யும் போது, ரூ. 500க்கு மிகுந்ததாக இருப்பின், நிலைக்குழுவிற்கு ஒப்பந்தம் செய்த 15 நாட்களுக்குள் தெரியப்படுத்தவேண்டுமெனவும் சட்டம் கூறியது. தலைவர், மாதம் ரூ. 500 வரையிலும் பெறக்கூடிய துணை அலுவலர்களை நியமிக்கலாமென 1899-ஆம் ஆண்டுச் சட்டம் திருத்தப்பட்டதால், தலைவரின் அதிகாரம் சிறிது கூடியது.

தேர்தல்களை நடத்துவதற்கு மாநகரத் தலைவர் அதிகமான அதிகாரங்கள் கொண்டு இருந்தார். தேர்தல் பற்றிய செய்திகளை, ஒழுங்கு விதிகளை நேரத்திற்கு நேரம் அரசாங்கம், அதாவது ஆளுநர்குழு வெளியிடுவதற்கு அதிகாரம் பெற்று இருந்தது. ஆனால் தேர்தலை நடத்தி வைக்க வேண்டியது தலைவரின் பொறுப்பாகும். தேர்தலுக்குத் தகுதிபெற்ற வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டியது இவருடைய கடமையாகும்.

வரவு செலவுத்திட்டம் தயாரிக்கும் அதிகாரத்தையும் மாநகரத் தலைவரே கொண்டு இருந்தார். ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாத இறுதிக்குள்ளாக, வரவினங்களையும், செலவுத் தொகைகளையும், மற்றும் விதிக்கப்படும் வரிகள் போன்ற முழு-விபரங்களையும் நிலைக்குழுவிற்குத் தலைவர் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, சுற்றுக்கு விடுவார். நிலைக்குழு தீவிரமாக ஆராய்ந்து மாற்றங்கள், கருத்துரைகள் ஆகியன வழங்கியது. நிலைக்குழுவின் அனுமதி கிடைத்ததும் வரவு செலவுத் திட்டம் அரசாங்க பதிவுத்தாள்களில் வெளியிடப்பட்டது, பின்னர் வரவு செலவுத் திட்டம் ஆணையாளர்களின் சிறப்புக் கூட்டத்தில் சமர்ப்-பிக்கப்படும். பொதுவாக இது ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் நடைபெறக்கூடியதாகஇருந்தது. ஆணையாளர்கள் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், அல்லது சில இனங்களைத்

தள்ளுபடி செய்யவும், மதிப்பீடுகளை மாற்றுவதற்கும் அதிகாரம் பெற்று இருந்தனர். இது அவர்களின் விருப்பத்தன்மையைப் பொறுத்ததாகும். ஆணையாளர்களால் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டமானது, ஆளுநர் குழுவின் அனுமதியைப் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்படும். இதனை மாநகராட்சித் தலைவர்தான் சமர்ப்பிக்கவேண்டும். ஆளுநர் குழு வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்து அப்படியே ஏற்றுக் கொள்ளலாம், அல்லது மாற்றங்கள், திருத்தங்கள் போன்றவற்றைச் செய்யலாம் ஆனால் ஆளுநர்குழு விரும்பிய வண்ணம் வரவு செலவுத் திட்டம் அமைக் கப்பட்டது. ஆளுநர் குழு பரிந்துரைத்த மாற்றங்கள் போன்ற வற்றைக் கட்டாயமாக மாநகராட்சி ஆணையாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலையில் இருந்தனர். தேவைப் படுகின்ற சமயத்தில் துணை வரவு செலவுத் திட்டம் தயாரிக்க தலைவர் அதிகாரம் கொண்டவர் ஆவார். ஆனால் நிலைக்குழுவின் அனுமதி யின் பேரில்தான் துணை வரவு செலவுத் திட்டம் தயாரிக்க வேண்டும்.

மாநகராட்சியின் ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் அதிகாரம் தலைவரிடம் விடப்பட்டது. தலைவர்தான் ஆண்டறிக்கையைத் தயாரித்து, அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டும். ஆணையாளர் களின் கூட்டங்களைக் கூட்டவும், அவற்றை நடத்தவும், கூட்டங் களுக்குத் தலைமை ஏற்கவும் தலைவர் அதிகாரம் கொண்டவ ராவார். மாநகராட்சி ஆணையாளர்களது கூட்டங்களைப்போல், நிலைக்குழுவின் கூட்டங்களைக் கூட்டவும், தலைமை ஏற்று நடத்தவும் அதிகாரம் பெற்றவராவார். ஆணையாளர்கள் சிறப்புக் கூட்டங்களைக் கூட்ட வேண்டுமென்று தெரிவித்தால், போதுமான எண்ணிக்கையுடைய ஆணையாளர்கள் விரும்பினால், தலைவர் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டலாம். குடிநீர்வசதி, வடிகால்வசதி, கட்டிட ஒழுங்குமுறைகள், பொதுச் சுகாதாரம், தனியார் மற்றும் பொதுச்சந்தைகள், கட்டாய நோய்த்தடுப்பு, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பது, பிறப்பு மற்றும் இறப்பு கணக்கெடுப்புகள், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆகிய பணிகளைச் செய்யும் செயலாக்க அதி- காரத்தைத் தலைவர் கொண்டு இருந்தார். இவர்தான் இப் பணிகளுக்கு முழுப்பொறுப்பு வாய்ந்தவர்.

வங்காள மாநகராட்சியின் 1899-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் சென்னை மாநகரச்சட்டம் 1904-ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. இதனால் தலைவரின் அதிகாரத்திலும் சிறிது மாற்றங்கள் ஏற்பட்டன. மாநகராட்சியின் முழுச் செயலாக்க அதிகாரமும் தலைவரிடம் அமையும்படி செய்யப்பட்டது. இச்சட்டம் பல்வேறு அதிகாரிகளின் கடமைகளைப் பற்றி வரையறுக்கவில்லை. எனவே தலைவர் பல்வேறு அதிகாரிகளுக்கும் கடமைகளை ஒதுக்கீடு செய்ய அதிகாரம் பெற்றார். இவர் கடமைகளை வரையறுப்பதோடு, ஒழுங்காகக் கடமைகளைச் செய்கின்றார்களா என்பதையும் கண்காணித்து, ஒழுங்குபடுத்தித் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டார். அவர்களின் ஊதியம், சிறப்புரிமைகள், பணிக்கட்டுப் பாடுகள், செலவுத் தொகைகள் மற்றும் பல்வேறு நடவடிக்கைகளைச் செய்யவேண்டியவரானார். இவ்வாறாகப் பணியாளர் முறைமையைப் பொறுத்த அளவில், அனைத்துச் செயல்களையும் செய்யக்கூடிய பொறுப்பினைப் பெற்றார்.

மாநகராட்சிப்பணிகளைச் செய்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் அதிகாரம் மேயருக்கு இதுவரையிலும் ரூ. 500 ஆகத்தான் இருந்து வந்தது. இது ரூ. 2000 மாக உயர்ந்தப்பட்டது ரூ. 2000க்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு நிலைக்குழுவின் அனுமதியைப் பெறவேண்டுமென வரையறுத்தது. மாநகராட்சித் தலைவர், மாநாகரட்சியில் நடைபெறும் அனைத்துச் செயல்களையும் செய்யக் கூடியவராக இருப்பதோடு, நடைபெறுகின்ற அனைத்துச் செயல்களையும் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவசியமானது. இதற்காகப் பொதுத்துறை ஒன்று உருவாக்கப்பட்டது. இத்துறைக்கு மேலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவர் மாநகராட்சியில் நடைபெறும் அனைத்துச் செயல்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி மாநகரத் தலைவருக்குச் சமர்ப்பிப்பது இவரது கடமை. நகராட்சியின் முத்திரை தலைவர் மட்டுமே பயன்படுத்தும் வகையில் ஒதுக்கப் பட்டது. இம்முத்திரையைப் பயன்படுத்த எண்ணிய பொறியியலாரின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. சட்டம் மாற்றத்திற்குள்ளாயினும், வரவு செலவுத்திட்டம் ஆண்டறிக்கை ஆகியன தயாரிக்கும் அதிகாரங்கள் யாவும் தலைவரிடமே இருந்தன.

காரப்பரவல் அரசுரிமை ஆணையத்தின் முன் சாட்சியமளித்தனர். இதே மாதிரியாக, சென்னை மகாஜன சபையும் அரசாங்கத் திற்கு அளித்த 1916-ஆந் ஆண்டு நினைவூட்டில், மாநகராட்சி தனது தலைமைச் செயலாக்க அதிகாரியை நியமிக்க அதிகாரம் பெறவேண்டு மென்றும், அரசாங்கம் நியமனம் செய்யும் முறை தவிர்க்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது. செயலாக்க அதிகாரிகளை நியமனம் செய்வும், மாநகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற பம்பாய் மாநகராட்சி முறையை அதிகாரப்பரவல் அரசுரிமை ஆணையம் பரிந்துரைத்தது. நியமனம் செய்யும் மாநகராட்சித் தலைவருக்குப் பதிலாக, தேர்ந்தெடுக்கப்படுகின்ற மாநகராட்சித் தலைவர் சிறந்தவரென எண்ணப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் 1919ஆம் ஆண்டுச் சட்டம் அரசுரிமை ஆணையக் கருத்துக்களை உள்ளடக்கிய வண்ணம் நிறைவேற்றப்பட்டது. செயலாக்க அதிகாரமும், சட்டமியற்றும் அதிகாரமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. மாநகரத் தலைவர் சட்டமியற்றும் அதிகாரத்திற்கு மட்டுமே தலைமையாளரானார். செயலாக்க அதிகாரம் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட ஆணையாளர் என்ற அதிகாரியிடம் செயலாக்க அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இவர் வரவுசெலவுத் திட்டம், ஆண்டறிக்கைகள், ஒப்பந்தங்கள் மேற்கொள்ளல் ஆகிய அதிகாரங்களைப் பெற்றார். இதுவரையிலும், இப்பொறுப்புக் கள் தலைவரிடம் இருந்து வந்தன. தலைவர், வரிவிதிப்பு முறையீட்டு நிலைக்குழுவைத் தவிர்த்து மற்ற அனைத்து நிலைக்குழுவிலும் உறுப்பினரானார். ஆனால் இவர் நிலைக் குழுக்களின் தலைவராக வரமுடியாதபடி சட்டம் வரையறுத்தது.

தலைவரிடமிருந்த அனைத்தை செயலாக்க அதிகாரங்களையும் ஆணையாளர் பெற்ற பின்னர், தலைவருடைய பதவி பெயரளவில் உயர்பதவியாகத் திகழ்ந்தது. அரசாங்கத்திற்கும், மாநகராட்சிக்குமிடையே நடைபெறுகின்ற தொடர்புகள் இவரது மூலம் தான் நடைபெறுகின்றன. தலைவரைத் தேர்ந்தெடுப்பது மாநகராட்சியின் சிறப்புரிமையாக மதிக்கப்பட்டது. பின்னர் தலைவரின் பெயர் 'மேயர்' என்று 1933 - ஆம் ஆண்டு மாற்றப்பட்டதும், மாநகராட்சி மன்றத்தில் மேயரை மிகவும் சிறப்பாக மரியாதையும், மதிப்பும் கொடுத்து ஆடம்பரமாக வரவேற்புக் கொடுத்து அமர வைத்தனர். திரு. முத்தையா செட்டியார் முதன் மேயராக இருந்தார் என்ற பெருமையைக் கொண்டவரானார். இவர்தான் தலைவராகவும், மேயராகவும் பதவி வகித்த நபர் அவார். மேயர் என்ற பதவி மேயர் அலுவலகம் 1801-ஆம் ஆண்டு நீக்கப்பட்டதிலிருந்து 132 வருடங்கள் கழித்து, 1933-ஆம் ஆண்டு மீண்டும் மேயரென அழைக்கப்பட்டதென்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

மேயருடைய சிறப்பு உரிமைகளாகக் கீழ்கண்டன மதிக்கப்படுகின்றன. அவை,

1. மாநகராட்சியின் நிருவாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆணையாளர்களிடமிருந்து அறிக்கைகளாகப் பெறுவதற்கும், அனைத்துப் பதிவுகளைப் பெறுவதற்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

2. அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமிடையே தொடர்புகள் மேயரின் மூலமாகத்தான் நடைபெற வேண்டும். இல்லையேல் அவை செல்லாதவையாகிவிடும்.

3. ஆணையாளர்கள் சமர்ப்பிக்கும் கடிதத்தொடர்புகளை மேயரின் மூலமாகத்தான் அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும். இவ்வாறு கடிதத் தொடர்புகள் அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகின்ற பொழுது, மேயர் விரும்பினால் அவரது கருத்துக்களை அத் தொடர்பில் கூறலாம்.

4. மேயரின் பதவி அடிப்படையில் அனைத்து நிலைக்குழுக்களிலும் உறுப்பினராக இருக்கலாம். ஆனால் வரிவிதிப்பு மற்றும் முறையீட்டுக்குழுவிற்கு உறுப்பினராக முடியாது.

5. நிலைக்குழுக்களின் தலைவர் பதவி காலியாக இருக்குமே யானால், மேயர் நிலைக்குழுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க நிலைக்குழுவைக் கூட்ட அதிகாரம் பெற்றவராவார்.

உதவிமேயர் என்ற பதவி 1963-ஆம் ஆண்டு ஏற்பட்டது. இவர் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படக் கூடியவராவார். மேயர் பதவி காலியாக இருக்குமாயின், மேயருடைய அதிகாரங்களைத் தற்காலிகமாக உதவிமேயர் பயன் படுத்திக் கொள்ளலாம். புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அந்த அதிகாரங்கள் புதிய மேயரிடம் சென்று விடுகின்றன. மேயர் மாநகராட்சி மன்றக் கூட்டங்களுக்குத் தலைமைதாங்கி நடத்திச் செல்கின்றவராக மட்டுமே இன்று செயல்பட்டு வருகிறார். மேய ருடைய பதவி உயர்ந்த மரியாதை கொண்டதாக மட்டுமே இருந்து வருகிறது.

மதிப்பும், மரியாதையும் பெற்ற மேயரின் அலுவலகமானது 1801-ஆம் ஆண்டில் நீக்கப்பட்டு விட்டது. பின்னர் நெடுநாட்கள் கழித்து,1933 ஆம்ஆண்டில் மீண்டும் கொண்டுவரப்பட்டது.சென்னை நகரைத் தவிர்ந்து, சென்னைக்குப் பிறகு தோன்றிய கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் மேயர் அலுவலகம் இருக்கின்ற பொழுது, சென்னையில் இல்லாமல் இருந்தது பெரிய குறையென உணர்ந்தனர். அக் குறையைக் களையும் வகையில் மீண்டும் 'மேயர்'பதவி 1933-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டு விட்டது. இங்ஙனம் மீண்டும் 'மேயர்' பதவி கொண்டு வரப்பட்டதையொட்டி, கோலாகல, குதூகல வரவேற்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. 1933-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் தேதி மேயருக்குவரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பிற்கு உரியவராகியவர், இதுவரையிலும் தலைவராக இருந்துவந்த திரு. இராமசாமி முதலியார் அவர்களாவார். இவர்தான் இன்றைய முறைமையில் முதன்முதல் மேயராகக் காட்சியளித்தார். இராமசாமி முதலியார் மேயராக மாநகராட்சிக்கு வந்த உடன், அனைத்து உறுப்பினர்களும் எதிர்கொண்டழைத்து, மரியாதையுடன், ஓசை முழக்கங்களுடன் அவரைப் பதவியில் அமர்த்தினார்கள். இங்ஙனம் வரவேற்பு செய்வதற்கென்த் தனியே ஒரு குழு அமைக்கப்பட்டு இருந்தது.

இக்குழுவானது வரவேற்பைத் தெளிவாகச் செய்து முடித்தது என்பதை இராமசாமிமுதலியார் தம் நன்றியுரையில் கூறியுள்ளார். பின்னர் மேயர் பதவிக்கு உரிய ஆடை, மேயர் பதவிக்குரிய ஆடம்பர அணிகலன்கள், அணிகள், கௌரவச்சின்னங்கள் போன்றவற்றைத் தீர்மானிக்க ஒரு குழுவை மாநகராட்சி அமைத்தது. இக்குழு முன்னர் நடைபெற்று வந்த மேயர் அலங்கார அணி வகுப்பு, மேயரின் பவனி போன்றவற்றை ஆராய்ந்து, பல்வேறு பரிந்துரைகளைச் செய்தது. அவற்றில் பெரும்பாலான பரிந்துரைகளை மாநகராட்சி மன்றம் ஏற்றுக் கொண்டது. 1933-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் மாநகராட்சி மன்றம் இக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது. அவை:

1. மேயர் பொதுநோக்கோடும், பாரபட்சமின்றியும் செயல்படுவதைக் காட்டுவதற்கும், உயர்ந்த நிலையில் கருதப்படுவதற்கும், மேயரின் பெருமையைக் காப்பதற்கு அடையாளமாகவும், மேயர் அனைத்துக் கட்சிகளின் செல்வாக்குகளிலும், அமைப்புகளிலிருந்தும் விடுபட்டு, சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென மாநகர் மன்றம் தீர்மானிக்கிறது.

2. மேயர் நகரத்தின் முக்கியமானவராக, முதல் குடிமகனாக இருப்பதாலும், மிகவும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரப் பட்டவராக இருக்கின்ற காரணத்தாலும், அரசியல் குழப்பத்திலும், குழுக்களின் வேறுபாடுகளிலிருந்து பிரிந்து சென்று செயல்படக் கூடியவராக இருக்கவேண்டுமென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுஉள்ளது. அவருக்கு வரையறுத்து தீர்மானிக்கப்பட்டுள்ள இரண்டுவித அங்கிகள் கொடுக்கவேண்டும். ஒன்று சாதாரண அங்கியாக, மாநகராட்சி மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றபோது அணியக் கூடியதாகவும், மற்றொன்று விசேஷ சமயங்களில் அணியக் கூடியதாக, சிறப்பு அங்கியாக இருக்கவேண்டும். வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திக்கும்போது, உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்களை வரவேற்கும்போது, அரசாங்கப் பொதுக் கூட்டங்களில் அணியக்கூடிய சிறப்புத்தன்மை பெற்று இருக்கும் பொழுது, இந்த அங்கியைப் பயன்படுத்த வேண்டும். சாதாரண அங்கி

கறுப்புநிறப் பட்டுத் துணியாகவும், அதில் ஓர் அங்குல அகலத்தில் வெள்ளைக் கோடுகளுடன் பொருந்திய தங்கச் சரிகையினால் வேலையமையப்பட்ட பட்டையும் இருக்க வேண்டும். சிறப்பு அங்கி, வெல்வெட் துணியினால் இரண்டு அங்குல அகலத்தில் தங்கப்பட்டை தீட்டப்பட்டதாக இருக்கவேண்டும். மேயரின் தலையணி மூன்றுவகை மூலைக் கூம்பு கொண்ட கறுப்புநிறத் தொப்பியாக இருக்கவேண்டும். இது கறுப்புநிற வெல்வட் துணியுடன் தங்கநிறப் பின்னல் கொண்ட அலங்காரத்துடன் இருக்கவேண்டும். கல்லூரிகளில், கல்வி நிறுவனங்களில் பயன்படுத்தும் தொப்பியை பெண் மேயர்கள் பயன்படுத்தலாம். ஒவ்வொரு மேயருக்கும் தொப்பி செய்து கொள்ளும் வண்ணம் மாநகராட்சி ரூ. 500 வழங்கத் தீர்மானித்தது. மேயர் மாநகராட்சி முடிவு செய்கின்ற அரசுக் கூட்டங்கள், வரவேற்புகள் ஆகிய சமயங்களில் இந்த ஆடையணிகளுடன் கலந்து கொள்ளவேண்டும். மேயரின் சட்டைக் காலருக்குக் கீழ், மேயர் அலுவலகச் சின்னத்தைச் சிறிய அளவில் பொறித்து வைக்கவேண்டும்.

மேயர் அணிந்துகொள்ளும் தங்கச்சங்கிலியும் எப்படி இருக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. மாநகராட்சி தங்கச் சங்கிலியும், மேயர் சின்ன முத்திரைப் பொறிப்பு ஒன்றும் வழங்கியது. இந்தச் சங்கிலி சிறப்புக் கூட்டங்களிலும், பொதுவிழா போன்ற ஆடம்பரச் சமயங்களிலும் மட்டும் பயன்படுத்தும் வண்ணம் கொடுக்கப்பட்டது. மாநகராட்சியின் கவசம் சென்னை நகர மேயர் என்ற வார்த்தைகள் கொண்ட முத்திரையாக மேயரின் தங்கச் சங்கிலியுடன் இருக்கும். இத்துடன் மாநகராட்சிக் கட்டிடத்தின் வரைபடமும், ரிப்பன் கட்டிடம், சென்னை மாநகராட்சி என்ற வார்த்தைகளுடன் தங்கச் சங்கிலியில் இடம் பெறும். மேயரின் முத்திரைக் கோல் பற்றித் தீர்மானிக்கும் போது, காரசாரமான விவாதம் நடைபெற்றது. சில உறுப்பினர்கள் இதை வன்மையாகக் கண்டித்தனர், இது இடைக் காலத்தில் இருந்த படைமானிய முறைமையின் போது, பணியாளர்களை அடித்து வேலைசெய்ய வைக்கும் ஆயுதமாக இருந்தது எனவும், பீமரின்(கதை) கதாயுதமாதிரியாக உள்ளதெனவும் கண்டித்தனர். இறுதியில் மேயரின்

முத்திரைக் கோலுடன் கவசமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ரூ. 2000க்கு மிகாத வகையில் தங்கச்சங்கிலி, முத்திரைக்கோல் ஆகியவற்றிற்கு மாநகராட்சி அனுமதி வழங்கியது. மேயருக்கு உதவியாளராக, முத்திரைக் கோலை ஏந்திச் செல்பவராக ஜமேதார் (Jamadar) என்னும் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மேயர், தேர்ந்தெடுக்கப்பட்ட அன்று இரவில் நாட்டுமக்களுக்கு, சென்னை நகர மக்களுக்கு அகில இந்திய வானொலியின் மூலம் வேண்டுகோள்கள் விடுவார். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மேயர், தமது பேச்சில், மாநகராட்சி எதிர்நோக்கியிருக்கும் அன்றைய சீரிய பிரச்சனைகள் குறித்தும், அவற்றை எங்ஙனம் தீர்வு காணலாம் என்பதையும், என்னென்ன செயல்களை மாநகராட்சி செய்யவிருக்கிறது என்பதையும் அவற்றுக்கு மக்களது ஆதரவைத் தரக் கோரியும் பேசுவார். இவ்வாறு ஆண்டுக்கு ஒரு முறையாகப் புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், மக்களுக்கு மேயர்கள் கொடுக்கும் பேச்சுக்களினால், மக்கள் மாநகராட்சியின் பிரச்சனைகளையும், மேயர்களது திறமைகளையும், எப்படிப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவலாம் என்பதையும் மக்களே தெரிந்து கொள்ள வாய்ப்பு இருப்பதால், ஏராளமான பிரச்சனைகளை எளிதில் தீர்க்க வழியுண்டு. அதே சமயம் ஏராளமான பிரச்சனைகளை மக்களே தீர்வு செய்ய, ஒத்துழைப்புக்களை நல்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறாக மேயரின் பேச்சு பயனுள்ள ஒன்றாக உள்ளது. மாநகராட்சியில் அரசாங்கத்தின் குறுக்கீட்டில் நடைபெறாமல் தேங்கியிருக்கும் ஏராளமான பணிகளை விரைவாகச் செயல்படுத்தும் வண்ணம், மேயர் தாமாகவே அரசாங்கத்தை அணுகி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம். இவ்வாறு அரசாங்கத்தை மேயர் அணுகுவதால், அரசாங்கத்தின் ஒத்துழைப்பு அதிகரிப்பதோடு, வளர்ச்சித் திட்டங்களுக்கு ஏராளமான நிதி உதவிகளை அரசாங்கம் நல்குமென்பதில் சந்தேகமேயில்லை. திரு. சத்தியமூர்த்தி மேயராக இருந்தபோது, இரண்டு தடவைகள் அரசாங்கத்தை நேரடியாகத் தாமாகவே அணுகியதால் ஏராளமாகத் தேங்கிக் கிடந்த பணிகள் விரைவாகச் செய்யப்பட்டன.

கராச்சியில் 1939-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெற்ற அகில இந்தியா, பர்மா மேயர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஆராய்ந்து, பரிந்துரை செய்ய ஒரு குழுவைசென்னை மாநகராட்சி 1939-ஆம் ஆண்டு அக்டோபர் 24 - ஆம் தேதி அமைத்தது. இக்குழுவில் கீழ்கண்ட உறுப்பினர்கள் இடம்பெற்று இருந்தனர்:

1. திரு. S. சத்தியமூர்த்தி (மேயர்)
2. திரு. P.M. ஆதிகேசவலு நாயக்கர் (உதவி மேயர்)
3. திரு. K. வெங்கடசாமி நாயுடு
4. திரு. அப்துல் ஹமீது கான்
5. திரு. W.W. லாடன்
6. டாக்டர் ப. கிருஷ்ணராவ்
7. திரு K. ஸ்ரீராமுலு நாயுடு
8. திரு. N. இராஜகோபாலன்
9. திரு. C. பாசுதேவ்.

இக்குழு கராச்சியில் நடைபெற்ற மேயர்களின் மாநாட்டுத் தீர்மானத்தை நன்றாக ஆய்வு செய்தது. 1939-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதியும், டிசம்பர் மாதம் 4-ஆம் தேதியும் குழு கூடிப் பரிசீலனை செய்தது. பின்னர் குழுவின் பரிந்துரைகள் பல மாநகராட்சி மன்றத்தில் வைக்கப்பட்டன. குழுவின் பரிந்துரைகள் மீது, மாநகராட்சி மன்றம் பரிசீலனை செய்தது. சில பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, பிறவற்றை நீக்கிவிட்டது. மாநகராட்சி மன்றம் ஏற்றுக் கொண்ட பரிந்துரைகள் கீழ்கண்டவை ஆகும்:

1. நகரத்தின் அரசாங்க அலுவலக விழாக்களுக்கும், மற்றும் பிற சிறப்பு விழாக்களுக்கும், பதவியின் அடிப்படையில் மேயரை அழைக்க வேண்டும். ஆளுநருக்கு அடுத்தபடியாக மேயருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மாநகரத் தலைவராக மேயர் இருப்பதால் கட்டாயம் மேயருக்கு ஆளுநருக்கு அடுத்தபடியாக முன்னுரிமை வழங்கல் அவசியம்.

2. மேயரை மாநகராட்சி உறுப்பினர்கள் மன்றக் கூட்டங்களின் பொழுது, *மேன்மைமிகு மேயர்* என்றழைக்கவேண்டும். சட்ட மன்றத்தில் சபாநாயகருக்குக் கொடுக்கும் சிறப்புக்கள் மேயருக்கும் வழங்கப்பெற வேண்டும். சட்டமன்றத்தில் சபாநாயகர் சபையில் நுழைகின்றபொழுதும், வெளியேறுகின்ற பொழுதும் தலைவணங்கி மரியாதை கொடுக்கப்பட்டு வருவதோடு, கட்சி மாறுதல் போன்றவற்றை சபாநாயகர் அனுமதியின்றி செய்யாமல் இருப்பது போன்ற கௌரவ மதிப்புக்கள் மேயருக்கும் கொடுக்கப்படவேண்டும்.

3. மேயருக்குஅமைதிநேர்மையாளர் அல்லது அதற்கொத்த பதவிக்குச் சமமான அதிகாரங்கள்கொடுக்கப்படவேண்டும். ஏனெனில் மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய இது தேவையானது. நன்னடத்தை ஒப்புதல் அளிக்கவும், ஓய்வூதிய வரைவுகள், அனுமதிகள் (passports) மற்றும் இதுபோன்ற பத்திரங்கள் வழங்க மேயர் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

4. மாநகராட்சிக் கவசத்துடன் கூடிய வகையில், மேயருக்கு ஒரு மோட்டார் கார்வழங்கப்பெற வேண்டும். இது மேயர் மட்டுமே பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

5. நீதிமன்றங்களில் மேயர் சென்று சாட்சியளிக்காமல், விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

6. சிறைச்சாலைக்கும், மருத்துவமனைகளுக்கும் பதவியின் அடிப்படையில் மேயர் அல்லது துணைமேயர் பார்வையாளராகச் சென்று வரவேண்டும்.

7. பேச்சுக்களின் பொழுதும் மற்ற சமயங்களிலும் மேயரை அழைக்கவேண்டுமாயின் '*வணக்கத்திற்குரிய மேயர்*' என்றழைக்கவேண்டும்.

8. மாநகராட்சி மன்ற உறுப்பினர்களையும், அவர்கள் ஒருவரையொருவரை அழைத்துக் கொள்ளும்போது '*மாண்புமிகு உறுப்பினர்கள்*' என்று அழைக்க வேண்டும். மேயரும் '*மாண்புமிகு உறுப்பினர்*' என்றுதான் அவர்களைக் குறிப்பிடவேண்டும்.

1941-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ஆம்தேதியன்று அகில இந்தியா, பர்மா மற்றும் கொழும்பு மேயர்களின் மாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது. மாநகராட்சி சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சனைகளை ஆராய்ந்தபின்னர் மேயரின் பெருமைகளைப் பாதுகாக்கும் வகையில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை:

1. மாநகராட்சியைப் பாதிக்கக் கூடிய சட்டங்களை நிறைவேற்றும் மாநிலச்சட்டங்களின் அதிகாரம் நீக்கப்பட வேண்டும். இந்தியா, பர்மா, கொழும்பு ஆகிய பகுதி நகரங்களின் மாநகராட்சி பற்றிய அதிகாரங்களை மாநிலச் சட்டசபைகளிடமிருந்து நீக்க வேண்டும். மாநகராட்சியின் அமைப்பு, அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்களை நிருணயிக்க எதிர்காலத்தில் ஒரு கூட்டம் கூட்டி, அவற்றை வரையறுக்க வேண்டும். இக்கூட்டத்திற்கு நகரின் பிரதிநிதிகளையும், மாநில அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் அழைக்கவேண்டும். எந்தவிகிதாச்சாரத்தில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதை முதலில் தீர்மானம் செய்யவேண்டும். இக்கூட்டத்தின் முடிவுகள் முடிவானதாக இருக்கவேண்டும். இன்று செயல்பட்டுவரும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் நீக்கப்படவேண்டும். அரசாங்கத்தின் கடமைகள், நோக்கங்கள் மற்றும் குடிமக்களின் உரிமைகள், கடமைகள், நோக்கங்கள் போன்றவைகளைப் பாதுகாக்க இக்கூட்டம் வழி வகுக்கிறது. ஏனெனில் இரண்டுபக்கங்களையும் நன்றாக ஆலோசித்து, பரஸ்பர முடிவுகள் எடுப்பதன் மூலமே கூட்டத்தின் முடிவுகள் அமையும். இதனை நகரத்தின் சாசனம் என்று சொல்லலாம். இதில் கருத்து வேறுபாடு மற்றும் வழக்குகள், சிக்கல்கள் ஏதேனும் ஏற்படுமாயின், கூட்டு நீதிமன்றத்தின் முடிவிற்கு விட்டுவிடவேண்டும். கூட்டு நீதிமன்றத்தின் முடிவே இறுதியானதாகவும், அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். நகரச் சாசனத்தில் மாற்றங்கள், திருத்தங்கள் போன்றவைகள் செய்ய வேண்டி இருந்தால், பரஸ்பர ஒத்துழைப்புடன் இரண்டு பகுதியினரும் கலந்து ஆலோசித்து முடிவு செய்து கொள்ளலாம். எனவே இம்முறை சிறந்த ஒன்றாக இருப்பதால், இந்திய அரசாங்கம் இயங்கிக் கொண்டுவரும் பல்வேறு சட்டங்களையும்

திருத்தி, மேற்படி முறைக்கு வழி காணுமாறு வற்புறுத்தியது இத்தீர்மானம்.

2. வரி செலுத்தக்கூடிய மக்களின் உரிமைகளை, பணிகளைப் பாதிக்கின்ற வகையில் பிறப்பிக்கின்ற கட்டளைகள், சட்டத் துவ ஆணைகள்போன்றவற்றைக் காவல் ஆணையாளர் மேயரைக் கலந்த பின்னர்தான் பிறப்பிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எல்லா நகர்களிலும் காவல் ஆணையாளர்கள்,சட்டம் ஒழுங்கைப்பராமரிக்கும் நடவடிக்கைகள் மக்களைப் பாதிப்பதாயிருந்தால், மேயரைக் கலந்த பின்னர்தான் பிறப்பிக்க வேண்டும்.

நகரில் அமைந்திருக்கும் பல்வேறு பொது அமைப்புக்களில் மேயர் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். சென்னையில் விக்டோரியா பொதுமன்றம், நகர வளர்ச்சிக் கட்டளை போன்ற பொது அமைப்புக்களில் மேயர் இடம் பெற்று இருந்தார். சென்னையில் நகர வளர்ச்சிக் கட்டளையை மாநகராட்சி மன்றம் 1940-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம்தேதி மன்றத்தின் தீர்மானம் மூலமாக நிறைவேற்றியது. இக்கட்டளையின் முக்கிய நோக்கம், சேரிப்பகுதியை ஒழிக்கவும், நகரத்தின் நெருக்கடியைக் குறைத்து, காற்றோட்டமாகத் திறந்த வெளியில் பல்வேறு வசதிகளுடன் கூடிய வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடுவது ஆகும். இக்கட்டளையை நிருவகிக்கக் கூடியவர்கள் மேயர், ஆணையாளர், மாநகராட்சியின் நான்கு மன்ற உறுப்பினர்களும் மற்றும் பல்வேறு துறைகளிலிருந்து 6 பேர்களுமாக ஒரு குழு ஆகும். மாநகராட்சியின் உறுப்பினர்கள் மாநகராட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களாவர். மற்ற ஆறுபேர்கள் வெவ்வேறு துறையைச் சேர்ந்தவர்களாக, நியமனம் செய்யப்படக் கூடியவர்கள். இவ்வமைப்பின் தலைவரை அரசாங்கம் நியமனம் செய்யும். இவர் முழுநேர ஊழியராகப் பணியாற்றக் கூடியவர். இவருக்கு ஊதியம் வழங்கப்படும். மாநகர்ப் பொது அமைப்புக்களில் மாநகராட்சித் தலைவருக்குப் பங்கு கொடுத்து, பெருமைப்படுத்துவது சிறப்பான ஒன்று ஆகும்.

பல்வேறு வகைப்பட்ட நிவாரண வேலைகள் அனைத்தும் மேயரின் பெயரால் செய்யப்படுகின்றன. சேதங்களினால் பாதிக்-

கப்பட்ட மக்களின் துயர்களைத் துடைப்பது ஒவ்வொருவரின் கடமையாயினும், தனிப்பட்ட நபர்களினால் மிகுதியான பணி-களைச் செய்ய முடியாது என்பதால், அனைவரும் சேர்ந்து மொத்தமாக நிவாவரண வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நிவாரணங்கள் செய்வதற்கு வேண்டிய நிதிகள் மேயரின் பெய-ரால் திரட்டப்பட்டு வருகின்றன. தீயணைப்பு நிவாரண நிதி, வெள்ள நிவாரண நிதி, ஏழைகள் மறுவாழ்வுத் திட்டம் போன்ற நிவாரண நிதிகள் திரட்டப்பட்டு சேவைகள் செய்யப்பட்டு வரு-கின்றன. மேயர் பொதுமக்களுக்கு வேண்டுகோள்கள் விடுவதன் மூலமாக, மக்களிடமிருந்து நிவாரண நிதிகள் குவிகின்றன. இந் நிதிகள் தனித்தனியான நிதிகளாகச் சேர்க்கப்பட்டு தேவைப்படு-கின்ற பொழுது செலவு செய்யப்படுகின்றன.

முதன்முதலாக மேயரின் வெள்ள நிவாரண நிதி 1937-ஆம் ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி மேயரின் வெள்ள நிவாரணக் குழு ஏற்படுத்தப்பட்ட பின்னர் அமைக்கப்பட்டது. இக்குழுவின் நோக்கம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதேயாகும். வெள்ளத்தினால் வீடு, வாசல் இழந்து தவிப்பவர்களுக்கு உதவி செய்யும் எண்ணத்தில் மாநகராட்சி மன்றம் ரூ.5000அளித்தது. இது தவிர்த்து, மாநகர் மன்றம் விடுவிக்கும் வேண்டுகோள்களை மக்-களிடமும், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்றவற்-றிடமும் தாராளமாக நிதிவழங்கும்படி கேட்டுக்கொண்டு, நிதியை நிவாரணப் பணிக்குச் செலவிட்டது.

தீயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் தீயணைப்பு நிவாரண நிதி ஏற்படுத்தப்பட்டது. 1940-ஆம் ஆண்டில் 28-ஆவது வார்டில் தீயினால் பாதிக்கப்பட்ட முகம்மது தோட்டத்தில் உள்ள 70 குடும்பங்களுக்காகவும், 37-ஆவது வார்டில் தீ பரவியதால் பாதிக்கப்பட்ட பல்லுமானியத்திலுள்ள 8 குடும்பங்-களுக்குமாக முதலில் ஏற்படுத்தப்பட்டது. இந்நிதி ஜூலைமாதம், 7-ஆம் தேதி 1940-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். இந்நிதிக்கு மாநகராட்சி ரூ. 1000ஐ வழங்கியது.

ஏழைக் குழந்தைகளுக்கு ஆடைகள் வழங்கவும், மதிய உணவு அளிக்கவும் மேயரின் பெயரால் ஒரு நிதி திரட்டப்பட்-

டது. இரண்டு தனித்தனியான செயல்களுக்கு ஒரே நிதியாக இருப்பதைத் தணிக்கையாளர்கள் அனுமதிக்க மறுக்கவே, இரண்டு தனித்தனியான நிதிகள் திரட்டப்பட்டு வருகின்றன. மேயரின் ஏழை குழந்தைகள் ஆடை வழங்கும் நிதி மற்றும் மதிய உணவு நிதிஆகிய நிதிகள் 1960-ஆம் ஆண்டு மார்ச் மாதம்3-ஆம்தேதி ஏற்பட்டன. இந்நிதியை ஒரு குழு நிருவகித்து வருகிறது. இக்குழுவில் மேயர், ஆணையாளர், உதவி மேயர், பழைய மேயர்கள் மற்றும் தலைமைக் கணக்கு அதிகாரி ஆகியோர்கள் இடம்பெற்று இருக்கிறார்கள். இதில் மேயர் தலைவராகவும், கருவூலராகவும் இருக்கிறார். மத்திய கணக்கு அதிகாரி பதவியின் அடிப்படையில் செயலாளராகச் செயல்படுகிறார். இக் குழு நேரத்திற்கு நேரம் கூடி, நிதியை நன்றாகவும், திறமையாகவும் பயன்படுத்த, ஆலோசனைகளும், கருத்துரைகளும் வழங்குவதோடு, அதிகமான குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில் விஸ்தரிப்புக் கருத்துக்களும் கூறப்படுகின்றன. முதலாவதாக அமைக்கப்பட்ட குழுவில் பழைய மேயர்கள் மூன்று பேர்கள் இடம் பெற்று இருந்தனர். அவர்கள் திரு M.A. சிதம்பரம், திருமதி. தாரா செரியன் மற்றும் திரு. K கமலக்கண்ணன் ஆகியோர்களாவர்.

மேலும் நிவாரண நிதிகள் மக்கள் அளிக்கும் தாராள நிதி உதவிகளைக் கொண்டுதான், நிவாரண வேலைகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். மாநகராட்சி கூடிய மட்டும் ஓர் அளவுத் தொகையை மக்களுக்கு ஒதுக்கினாலும், பணப்பற்றாக்குறைக்கு மக்களிடமே வரி விதிக்கவேண்டி இருப்பதால், மக்களே நேரடியாக, தாரளமாக தந்து உதவினால்தான் சிறப்பாக இருக்கும். மேயரின் பெயரால் நிவாரண வேலைகள் நடைபெறுமாயின், நகரத்தின் முதல்வர் என்ற விதத்தில் உளவியல் தன்மையில் பெருமை பெறக் கூடியவராக, மக்களது குறைகளைத் தீர்க்கக் கடமைப் பட்டவராக உள்ளார் எனலாம்.

மேயர், நகரத்தின் முதல் குடிமகனாக இருக்கின்ற காரணத்தால், வரக்கூடிய பெருமைமிகு நபர்களை வரவழைத்து, மரியாதை கொடுக்கும் தார்மீகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியது உள்ளது, எனவே அவர்களைக் கௌரவிக்க, விருந்து

கள் நடைபெறுவதுமுண்டு. மேயர் விருந்து என்பது எல்லா நாடுகளிலும் இருக்கின்ற ஒரு நடைமுறையாக இருப்பதால், சென்னையும் அதற்கு விலக்கல்ல. இதற்காக ரூ. 2000, பொது விழாக்கள் என்ற தலைப்பில் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இந்நிதியளவிற்குள்ளாக அல்லது தேவைப்பட்டால் மிகுதியாகச் செலவழிக்க மேயர் அதிகாரம் பெற்று இருக்கிறார்.

மேயரின் தனிச்சிறப்பைவெளிப்படுத்தும் வகையில் மேயருக்கென ஒரு கொடிநிருணயிக்கப்பட்டு உள்ளது. இக்கொடி 1955-ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 2-ஆம் தேதி மாநகராட்சித் தீர்மானத்தின் மூலமாகச் செயல்பட்டு வருகிறது. இக்கொடி தேசியக் கொடிக்குக் கீழாகப் பறக்கவிடப்படுகிறது. மேயர் நகரத்தில் இருக்கின்ற நேரத்தில் மட்டுமே கொடி பறக்கவிடப்படும். மேயர் நகரத்தை விட்டு வெளியே சென்று இருந்தால், கொடி பறக்காது. இவ்வாறு சிறப்பான சில விதிமுறைகள் மிகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மேயருக்குப் பெருமைகள் கொடுக்கப்படுகின்றன.

17

உள்ளாட்சியில் குழுக்கள் செயல்படும் விதம்

ஊராட்சி, நகராட்சி மன்றம் ஆகியன பணிகள் குறைவாக இருந்தால் அவற்றைச் செய்து முடித்துவிடும். ஆனால் பணிகள் மிகுதியாக இருந்தால் மன்றங்கள் அப்பணிகளைச் செய்ய முடியாது. ஒவ்வொரு பணி பற்றியும் கூட்டங்களில் விவாதித்து முடிவு செய்ய வேண்டும். இரண்டாவதாக, ஒவ்வொரு பணியையும் விவாதித்தால், பணிகள் பற்றி முழுமையாக விவாதிக்க நேரம் இருக்காது. எனவே பணிகள் செய்வது தாமதமாகும், தடைப்படும். தொழில் நுணுக்கப்பிரச்சனைகள் போன்றவற்றைத் தீரஆராயாமல் முடிவெடுத்தால், ஊராட்சி, நகராட்சிகளின் நிதி விரயமாகும். இந்த வீண் செலவுகள் தவிர்க்கப்படவேண்டும். இங்ஙனம் செலவுகள் மிகுதியாகவும், விரயமாகவும் செலவழித்தால் மக்களிடையே அதிருப்தி வளரும். எனவே பணிகளைப் பற்றித்தீர்க்கமாக ஆலோசித்து, முடிவு செய்யக் குழுக்கள் தேவையான ஒன்று. மன்றமே பணிகளைச் செய்வதால் ஏற்படும் திறமைக் குறைவினைத் தடுத்துத் திறமையாகக் குழுக்களின் மூலம் பணிகள் செவ்வனே செய்ய முடியும். உள்ளாட்சியில் குழுக்களின் பணி அளவிடற்கரியது. பாராளுமன்ற அரசாங்கத்தில் குழுக்கள் ஏற்படுத்திச் செயல்படுவது மக்களாட்சியின் முறையென்றாலும், உள்ளாட்சியில் குழுக்கள் சிறப்பான பங்கினைச் செய்து வருகின்றன. உள்ளாட்சிப் பணிகளை இக்குழுக்கள்தான் பெரும்பாலும் செய்து வருகின்றன. ஏனெனில் நகராட்சி மன்றம் செய்யக் கூடிய பணிகளைக் குழுக்கள் செய்து வருகின்றன. இருப்பினும் முடிவான அதிகாரம் மன்றத்தில் இருக்கின்ற காரணத்தால், குழுக்களின் செல்வாக்கு மன்றத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அல்லது குறிப்பிட்ட பணி களுக்காக உள்ளாட்சிகள் குழுக்கள் அமைத்துக் கொள்ளலா மென்ற அம்சம் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த வகையாக அமைக்கப்படுகின்ற குழுக்களுக்குச் சட்டத்துவக் குழுக்கள் (Statutory Committees) என்று பெயர். அனைத்து உள்ளாட்சிகளிலும் பொதுவாக இருக்கின்ற குழுக்களில் முதன்மையானது நிதிக் குழுவாகும். இக்குழுக்கள் அனைத்து உள்ளாட்சிகளிலும் இடம் பெற்று உள்ளன. கல்வி, சுகாதாரம், காவல் பிறபோன்ற வற்றிற்குக் குழுக்கள் பொதுவாக அமைக்கப்படுகின்றன. இக்குழுக்கள் அமைப்பது குறித்து வரையறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, நிதிக்குழுக்களைப் பொறுத்த வரையில் எல்லா உறுப்பினர்களும் மன்றத்தின் உறுப்பினர்களாகவே இருப்பர். நிதிக்குழுவில் பெரும்பாலும் கூட்டு நியமன (Co-option) உறுப் பினர்கள் இடம் பெறுவது கிடையாது. கல்விக் குழுக்களில் அனுபவம் வாய்ந்த கல்விச் சான்றோர்கள், கல்வி வல்லுநர்கள் மற்றும் பிறரும் இடம் பெறுவது உண்டு. பொதுவாக கல்விக் குழுக்களில் மன்றத்தைத் தவிர்த்து வெளியில் உள்ளவர்கள் அதிகமாகக் கூட இடம் பெற வாய்ப்பு உண்டு. அங்ஙனம் கல்விக் குழுவில் வெளியாட்கள் அதிகமாக இடம் பெற்றுவிட்டால், உள்ளாட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் குறைவாக இடம் பெற் றால், கல்விப்பணி குறித்த செயல்களில் உள்ளாட்சிக்கு அதி காரம் ஏதுமில்லாமல் போய்விடும். எனவே உள்ளாட்சி தனது அதிகாரத்தையும் தன்னிடத்தே தக்க வைத்துக் கொள்ளவேண்டும். அதே நேரத்தில் தன்னால் இயன்ற அளவு உள்ள பணிகளைத் தான் செய்ய வேண்டும். எனவே குழுக்களின் அமைப்பில், மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, கூட்டு நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை அல்லது வெளிப் பிரதி நிதித்துவம் போன்றவற்-றைப் பற்றியும் முடிவு செய்ய வேண்டும். இங்கிலாந்தில் உள்ள உள்ளாட்சிக் குழுக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் உள்ளாட்சி மன்றத்தின் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமெனத் நிருணயித் துள்ளது. முன்னர் கூட்டு நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே இருந்தது. தற்போது கூட்டு நியமன உறுப்பினர்கள் பாதியளவு இடம்பெற்று உள்ளனர் என்பது அறியத்தக்கதாகும்.

உள்ளாட்சி மன்றங்கள் தங்களது நோக்கங்களை நிறை வேற்றுகின்ற வகையில் குழுக்களை அமைத்துக் கொள்கின்றன. இக்குழுக்களில் உள்ளாட்சி மன்றத்தின் உறுப்பினர்களே முழுவதும் இடம்பெறுமாறு அமைக்கப்பட்டுள்ளன. சில சமயங்களில் தொழில்

நுட்ப ஆலோசனைகள் பெறுவதற்காக, அந்தந்தத் துறைகளின் வல்லுநர்களைக் கூட்டுநியமன உறுப்பினர்களாக நியமிக்கப்படுவது உண்டு. இந்தக் கூட்டு நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை எக்காரணத்தைக் கொண்டும் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமல் இருத்தல் நல்லது. குழுக்கள் ஒரே மாதிரியாக அமைக் கப்பட வேண்டுமா? வித்தியாசமான வகைகளில் அமைக் கப்பட வேண்டுமா? என்பது குறித்த கேள்விகளுக்கு, உள்ளாட்சி தான் பதில் வழங்கவேண்டும். குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மன்றங்கள் தான் நிருணயிக்க வேண்டும்.

குழுக்கள் நிரந்தரமாக அமைக்கப்படவேண்டுமா? அல்லது தற்காலிகமாக அமைக்கப்படவேண்டுமா? என்பதைப் பற்றியும் சட்டத்துவமாக அமைகின்ற நிலைக்குழுக்களுக்கும் தற்காலிகமாக அமைகின்ற சட்டத்துவமற்ற தற்காலிகக் குழுக்களுக்கும் உள்ள வேறுபாடு பற்றியும்காண்போம். நிலைக்குழுக்கள் உள்ளாட் சிகளில் தொடர்ந்து செய்கின்ற பணிகளின் மீதாக அமைகின்ற குழுக்கள் ஆகும். இப்பணிகளை உள்ளாட்சி தொடர்ந்து செய்யும். உதாரணமாக நிதி, கல்வி மற்றும் இது போன்ற பணிகளுக்கு நிரந்தர நிலைக்குழுக்கள் அமைப்பதற்கு வழிசெய்யப்பட்டுள்ளன. தற்காலிகக்குழுக்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு மட்டுமே அமைக்கப்படக் கூடியனவாகும். அமைக்கப்பட்ட நோக்கம் நிறைவேறியதும் குழு கலைக்கப்பட்டு விடும். எனவேதான் தற்காலிகக் குழுக்களை அமைக்கும் அதிகாரமும் உள்ளாட்சி மன்றங்களிலேயே விடப்பட்டு உள்ளது. உள்ளாட்சிகளில் வர வேற்புக் குழுக்கள் அமைப்பதுஓர் உதாரணமாகும். இதேபோல் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்ய மதிப்பீடுகள், எழும் பிரச்சனைகள், சமாளிக்கப்பட வேண்டிய விஷயங்கள், சமாளிப்பதற்குரிய அணுகு முறைகள் மற்றும் பிற ஆலோசனைகளைப் பெறும் வகையில் குழுக்கள் அமைக்கப்படுவது உண்டு. இங்ஙனம் அமைக்கப்படுகின்ற குழுக்களும் தற்காலிகக் குழுக்கள் தாம். இக் குழு நீண்டநாட்கள் பணியாற்றினாலும் அதன் தன்மை ஒன்றே ஒன்றுதான் ஆகும்.

குழுக்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை, உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பன பற்றி முடிவு செய்யவேண்டும். உள்ளாட்சிகள் ஆற்றுகின்ற பணிகளின் தன்மைகளைப் பொறுத்து குழுக்களின் எண்ணிக்கை அமைந்துள்ளது. குழுக்களில் உறுப்பினர் எண்ணிக்கை அது மேற்கொள்ளும் பணியினைப் பொறுத்து அமைகின்றது. சில பணிகளில் சிக்கல், சிரமம் ஏதுமில்லாமல் இருந்தால் ஒரிருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுச் செயல்படுவர். சில சமயங்களில் பணியில் சிரமங்கள் அதிகரிக்க நேர்ந்தால், அக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதிருக்கும். இதே மாதிரியாக உள்ளாட்சிகள் மிகுதியான பணியை மேற்கொள்ள வேண்டி இருந்தால், குழுக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டியிருக்கும். எனவே இவ்வாறு நிகழ்கின்ற பிரச்சனைகளை ஆராய, பொது நோக்கங்களின் குழுவென ஒரு குழு அமைக்கப்படுவதுண்டு. இக்குழு அனைத்துப் பிரச்சனைகளையும் ஆராய்ந்து முடிவுகளை வழங்கும். அரசாங்கம் உள்ளாட்சிக்கு அதிக அதிகாரம் வழங்கத் தீர்மானித்து இருந்தால், உள்ளாட்சியின் பொது நோக்கங்களின் குழுவிடம் கலந்தாலோசித்து புதிய அதிகாரங்களை வழங்கவேண்டும். புதிய பணிகள் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்தால், பொதுநோக்கங்களின் குழு புதிய நிலைக்குழுக்கள் அமைப்பதற்கு ஆலோசனை கூறும். ஏனெனில் நிலைக்குழுக்கள் சட்டத்துவமாக அமைக்கப்படுவனவாகும்.அதனை அரசாங்கம்தான் சட்டமியற்றித் தீர்மானிக்க வேண்டும்.

உள்ளாட்சிப் பணிகளைச் செய்வதற்கு உதவி செய்யக் கூடியனவாகக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. எனவே குழுக்களும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளைச் செய்வதற்கு பிறரது உதவியையும் கோரலாம். உள்ளாட்சி ஒருங்கிணைந்து தொடர்ச்சியாகச் செயல்பட இதர அமைப்புக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும். உதாரணமாக மன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் தான் இடம்பெறுகின்றனர் ; அவர்கள் மட்டும்தான் குழுவில் இடம்பெறவேண்டுமென்றால் சிறப்பாகச் செயல்பட முடியாது. குழுக்களில் கூட்டுநியமன உறுப்பினர்கள் இருந்தால் சிறப்பாகச் செயல்படலாம். ஆனாலும் எக்காரணத்தைக் கொண்டும் ஒவ்வொரு குழுவும் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாத கூட்டு-

நியமன உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பது பொது விதியாகும். உள்ளாட்சிகள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக, பிற அமைப்புக்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகின்றது.

குழுக்களில் வெளியாட்கள் இடம் பெறுவது மக்களாட்சிக்கு எதிரானது என வாதிட வழியுண்டு. ஏனெனில் உள்ளாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் அதிகாரம், குழுக்களில்இடம்பெறுகின்ற உறுப்பினர்களுக்கும் அளிக்கப்படுகின்றது. இருப்பினும் மக்களாட்சியில் அனைவரும்தேர்ந்தெடுக்கப்பட வழியேதுமில்லை. அங்ஙனமிருக்க வெளியாட்கள் பங்கு பெறுவதிலும் தவறில்லை. இருப்பினும் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுப்பதால்தான், கூட்டுநியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமல் போகக் கூடாது என வரையறுத்துள்ளோம். தொழில் நுணுக்கப் பிரச்சனைகளைத் தீர்க்க வல்லுநர்கள் தான் முக்கியமே தவிர, மக்கள் பிரதிநிதிகளான பொதுத்தன்மையாளர்கள் முக்கியமில்லை என்பதையும் அறியவும்.

மேலும் குழுக்களில் பதவியின் அடிப்படையில் உறுப்பினர்களாக இடம்பெறக் கூடிய அம்சங்கள் அடங்கியுள்ளன. ஒரு குழுவின் தலைவர் மற்றொரு குழுவின் உறுப்பினராக, பதவியின் அடிப்படையில் இடம்பெற வழி செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சிகளின் மன்றத்தலைவர்கள் பதவியின் அடிப்படையில் அனைத்துக் குழுக்களிலும் உறுப்பினர்களாக இருப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த மாதிரியான பிரதிநிதித்துவம் உள்ளாட்சிகள் செயல்களை விவாதித்து, ஒருங்கிணைந்து செய்வதற்கு வழிகோலும். கூட்டுறவால், ஒத்துழைப்பால் உள்ளாட்சிகள் செயல்படவேண்டுமென்பதற்காக இங்ஙனம் செய்யப்பட்டுள்ளது.

குழுக்களில் உறுப்பினர்கள் எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது பற்றிக் காண்போம். குழுக்களில் இடம் பெறுகின்ற உறுப்பினர்கள் தங்களது விருப்பத்தோடு உறுப்பினராக இருந்தால்தான், குழு ஆர்வமாகச் செயல்படும். எனவே விருப்பமுள்ள உறுப்பினர்கள் குழுக்களில் இடம்பெற வழி செய்ய வேண்டும். முதலில் குழுக்கள் இந்த மாதிரியாகத்தான் அமைக்கப்பட்டன,

உறுப்பினர்கள் அனைவருக்கும், குழுக்களின் மொத்த எண்ணிக்கை, இடம்பெற விரும்பும் குழுக்கள் குறித்துச் சொல்லும்வகையில், பட்டியல் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும். பட்டியலில் விரும்பும் குழுக்களில் அடையாளம் அல்லது குறியிட்டு மன்றத்திற்கு அனுப்ப வேண்டும். விரும்புகின்ற உறுப்பினர்கள் குழுக்களில் இடம்பெறுமாறு மன்றம் முடிவு செய்யும். இதனைத் தொடர்ந்து மற்றொரு பிரச்சனையும் எழுகின்றது. ஓர் உறுப்பினர் ஒரு குழுவில் தான் இடம்பெறவேண்டுமா அல்லது ஏராளமான குழுக்களில் இடம் பெறலாமா என்பது பற்றியும் ஆலோசித்து, முடிவு செய்யவேண்டும். எல்லா உறுப்பினர்களும், எல்லாக் குழுக்களிலும் இடம்பெற விரும்பினால், அதனைச் செயல்படுத்த முடியுமா என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டும். ஆகவே உறுப்பினர்கள் குழுக்களில் பிரதிநிதித்துவம் பெறுவதில் சில வரையறைகள் செய்யவேண்டுமென்பதில் இருவிதக் கருத்துக்களுக்கு இடமே இல்லை. ஓர் உறுப்பினர் அதிகப்பட்சமாக நான்கு குழுக்களில் இடம்பெறலாமென ஒரு குறிப்பிட்ட வரையறை செய்யவேண்டும். உறுப்பினர்கள் அதிகக் குழுக்களில் இடம்பெறுவதால், சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அதிகமாகின்றது. உறுப்பினர் தம்முடைய நேரத்தைத் திட்டமிட்டு, அனைத்துக் குழுப் பணிகளையும் செய்கின்றவாறு திட்டமிடலாம். இருப்பினும் இதன் மூலமாகக் கிளம்புகின்ற பிரச்சனைகள் அதிகமாகின்றன. உதாரணமாக ஓர் உறுப்பினர் நான்கு குழுக்களில் உறுப்பினராகஇருந்தால், மற்றொரு உறுப்பினர் மூன்று குழுக்களில் மட்டுமே உறுப்பினராக இருந்தால், இந்த இரண்டு உறுப்பினர்களுக்கிடையே போட்டி ஏற்படுகின்றது. இவர்களின் செல்வாக்கும் வித்தியாசமாகின்றது. இவர்கள் ஒத்துழைப்பாகச் செயல்படுவர் என்பது கேள்விக்கிடம். எனவே உள்ளாட்சிகளில் போட்டி ஏற்படாவண்ணம், ஒத்துழைப்பாக இயங்கும்வண்ணம், முயற்சிகள் செய்யவேண்டும்.

அரசியல் கட்சிகள் உள்ளாட்சியில் பங்கு பெறுவதில் மிகுதியான அக்கறை காட்ட ஆரம்பித்ததால், மக்களாட்சித் தன்மை சிறப்பாயிற்று. அதிகமான அளவு பங்கேற்பு நிகழ்ந்தது. மேலும், போட்டியின் மூலம் யாருக்கு வாய்ப்பு உள்ளதென்பதை அரசியல் கட்சிகள் சார்பில் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குழுக்களில் விருப்பமாக உறுப்பினர்கள் பதவி பெறும் தன்மை மாறி, அரசியல் கட்சிகளின் போட்டியின் மூலமாகக் குழு இடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் எப்படி அமைய-வேண்டுமென்பதைப் பற்றியும் ஆராய வேண்டும். ஏனெனில் பதவிக்காலம் மட்டுமன்றி பதவி வகிக்கக்கூடியவர்களைப் பற்றிய பிரச்சனையும் இதில் இடம்பெறுகின்றது. குழு உறுப்பினர்களின் பதவிக்காலத்தை மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்திற்கு இணையாகச் செய்யலாமா என விவாதம் நடைபெற்றது. இவ்-வாறு இணையாகச் செய்தால் மன்றம் மற்றும் குழு ஆகியன ஒருங்கிணைந்து செயல்பட வழியுண்டு. அதே நேரத்தில் குறிப்-பிட்ட எண்ணிக்கை கொண்ட நபர்கள் மட்டுமே குழுவில் இடம் பெறுவதால், மற்ற உறுப்பினர்களின் செல்வாக்குக் குறைய நேரி-டலாம். இதனால் மற்ற உறுப்பினர்கள் அதிருப்தியும் அடையக் கூடும். எனவே பதவிக்காலத்தை ஓராண்டு மட்டுமென குறுகிய காலமாகச் செய்யலாம். இவ்வாறு செய்தால், அனைத்து உறுப்-பினர்களும் குழுவில் இடம்பெற ஒரு வாய்ப்பு கிடைக்கும். அனைவரும் சமத்துவமாக நடத்தப்படுவர். இதனால் அனைவ-ரிடையேயும் ஒற்றுமை நிலவும். அனைவருக்கும் குழுவில் இடமளிக்-கும் வகையில், பதவிக்காலம் ஓராண்டு எனப் பல்வேறு உள்ளாட்சி-கள் கொண்டுள்ளன. பதவியை விட்டு வெளியேறும் உறுப்பினர் கள், அதாவது ஓராண்டுக்கால பதவி முடிந்த பின்னர், உடனேயே அவர்கள் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட முடியாமல் கட்டுப்பாடும் செய்யப்பட்டுள்ளது. இதனால் மற்ற உறுப்பினர்களும் குழுவில் உறுப்பினர்களாக வரமுடியும். உறுப்பினர்கள் மாறிக் கொண்டே வருவதால், திறமையும் வித்தியாசமாக அமைவதால், குழுக்கள் மாற்றங்களுக்கேற்பத் திறமை பெறுவதோடு, சிறப்பாகவும் செயல் படமுடியும்.

குழுவும் மன்றமும் ஒரே நேரத்தில் இணையாகக் கலைக்-கப்பட்டால், மக்களாட்சியின் தொடர்ச்சி இருக்காது. எனவே புதிய குழுக்கள் அமைக்கப்படுகின்றவரையிலும், இந்தச் செயல்படுகின்ற குழுக்களைத் தொடர்ந்து செயல்பட வைக்கலாமா என்பது பற்றிச்

சிந்திக்கப்பட்டது. இதற்கு ஆதரவைக் காட்டிலும் எதிர்ப்புக்கள் தான் அதிகமாக இருந்தன. ஏனெனில் மக்களாட்சித் தொடர்ச்சி இருக்காதெனினும், ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றமே கலைக்கப்பட்ட பிறகு, மன்றத்தால் உருவான குழு எங்ஙனம் செயல்படலாமென விவாதிக்கப்பட்டது. இன்றுள்ள சூழ்நிலையில் ஒழுங்காக ஊராட்சி, நகராட்சித் தேர்தல்களை நடத்துவதே சாதனையாக உள்ளது. அப்படியிருக்க மூன்று வருடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உறுப்பினர்கள், மன்றம் கலைக்கப்பட்ட பின்னர் மூன்று வருடங்களையும் தாண்டி, ஆறு ஏழு வருடங்கள் செயல்படுவது என்பது விரும்பத்தக்கது அல்ல. அந்த மாதிரியாக இருக்கக் கூடாது. ஆனாலும், மூன்று வருடங்கள் மக்களாட்சி நிறுவனமான மன்றங்கள் செயல்படுவது, பின்னர் தொடர்ந்து ஆறு, ஏழு வருடங்கள் அதிகார வருக்கம் செயல்படுவது மக்களாட்சிக்கு உகந்ததாக இருக்குமா? அதிகார வருக்கம் செயல்படுவதைக் காட்டிலும், மக்கள் பிரதிநிதிகள் குழுவில் இடம் பெறுவது விரும்பத்தகாத செயல் அல்ல. இருப்பினும் மக்களாட்சி அமைப்புக்கள் தொடர்ந்து செயல்படுகின்ற வகையில் அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும்.

குழுத் தலைவர்களை எப்படி நியமனம் செய்வது என்பது மற்றொரு சீரிய பிரச்சனையாகும். உள்ளாட்சி மன்றங்கள் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் கொண்டனவாக இருக்கவேண்டுமென எண்ணப்பட்டது. ஏனெனில் குழுக்களை எந்த மாதிரியும் அமைப்பதற்கு மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது. அப்படியிருக்க குழுத்தலைவர்களை மன்றம் நியமிப்பதில் குறையொன்றும் இல்லை, குழு உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பதும் ஒரு சிறந்த முறைதான். ஆனாலும் இன்றைய முறையில் அரசியல் உள்ளாட்சியில் ஆதிக்கம் செலுத்துவதால், குழு உறுப்பினர்கள், தலைவர்கள் போன்றவர்களையெல்லாம்ஆளும் அரசியல் கட்சி அதாவது மன்றத்தின் பெரும்பான்மை அரசியல் கட்சி அல்லது கட்சிகள் முடிவு செய்கின்றன, குழுத்தலைவரைப் போல், குழுவின் உதவித் தலைவரையும் நியமிக்கவோ, தேர்ந்தெடுக்கப்படவோ செய்யலாம். குழுத் தலைவர்களின் பதவிக்காலம் ஓராண்டு

ஆகும், ஓராண்டு பதவிக்காலம் முடிந்த பின்னரும், மறுபடியும் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி பெற்றவர்கள். எல்லோருக்கும் தலைவர் பதவி கிடைக்கின்ற வகையில் செய்யப்படுவது இயலாத காரியமாகும். ஒவ்வொரு ஆண்டும் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், குழு உறுப்பினர்கள் காட்டும் ஒற்றுமைகூட வித்தியாசமாக, வேறுபட்டதாக அமைகின்றது.

உள்ளாட்சிப் பணிகளைச் செய்வதற்குப் பல்வேறு குழுக்கள் அமைத்ததோடு பிரச்சனை நின்று விடுவதில்லை. குழுக்கள் ஒழுங்காகப் பணிகளைச் செய்யக் கூட்டப்படவேண்டும். குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை பணிகளைப் பொறுத்து அமையக் கூடியது. சில குழுக்கள் அதிகமான கூட்டங்களை நடத்த வேண்டி இருக்கும். சில குழுக்களுக்கு அதிகமான கூட்டங்கள் அவசியமில்லாமல் இருக்கும். எனவே கூட்டங்களின் எண்ணிக்கை குழுக்களைப் பொறுத்து வித்தியாசமாக இருக்கும். குழுக்கள் குறைந்த பட்சக் கூட்டங்களை நடத்த வேண்டுமெனவும் வரையறுக்க வேண்டும். குழுக் கூட்டங்கள் தனிப்பட்ட முறையில் நடைபெற வேண்டும். பொதுமக்களைக் குழுக்கூட்டங்களில் அனுமதிக்கக் கூடாது. விஷயங்களைத் தெளிவாக விவாதிக்க வேண்டும். குழுக் கூட்டங்களுக்குக் குழுத்தலைவர்கள் தலைமைதாங்கி நடத்திச் செல்லவேண்டும். தலைவர் என்ற முறையில் கூட்டங்களில் மிகுதியான மதிப்பு, மரியாதை, அதிகாரம் ஆகியன கொண்டவர்களாக இருக்கவேண்டும். குழுக் கூட்ட நடவடிக்கைகளின்போது பணி தொடர்பான அதிகாரிகள் கலந்துகொள்ள வேண்டும். பிரச்சனைகளைத் தெளிவுபடுத்துவதற்கு இந்த அதிகாரிகள் விளக்கம் கொடுக்க உரிமை கொண்டவர்களாக திகழ வேண்டும்.

குழுக்கள் தங்களுக்கு உதவி பெறத் துணைக் குழுக்களை நியமித்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு நகர் மன்றத்தின் அனுமதி பெறவேண்டும். குழுக்களுக்கு மன்றம் அதிகாரத்தை ஒப்படைப்புச் செய்து இருப்பதுபோல், குழுக்கள் துணைக்குழுக்களுக்கு அதிகாரத்தை ஒப்படைப்பு செய்யக் கூடாது. துணைக் குழுவின் அறிக்கைகளைக் குழுவில் சமர்ப்பிக்கவேண்டும். இவ்

வாறு குழுக்கள் செயல்படுவதிலேயே, துணைக்குழுக்களின் பங்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும் குழுக்கள் உள்ளாட்சியில் செயல்பட வேண்டிய அவசியத்தைப் பற்றியும், குழுக்களின் பங்கு, குழுக்களின் தன்மை, குழுக்களின் அமைப்பு, குழுத்தலைவர், குழு செயல் படுகின்றவிதம் ஆகியவை குறித்தும் பார்த்தோம். அவை நடை முறையில் ஊராட்சியில், நகராட்சியில் எப்படியுள்ளன என்பதை யும் காண்போம்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கீழ்க்கண்ட குழுக்கள் உள்ளன. அவை:

1. நியமனக் குழு
2. வேளாண்மை உற்பத்திக் குழு
3. கல்விக் குழு
4. பொதுக் குழு

நியமனக் குழுவில் ஊராட்சி ஒன்றியத் தலைவரும், ஆணை யாளரும் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களும் இடம் பெறுகிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவரே இக்குழுவின் தலைவரும் ஆவர். ஊராட்சி ஒன்றிய ஊதியம் பெறுகின்ற, அனைத்துப் பணியாளர் களையும் நியமனம் செய்ய இக்குழு அதிகாரம் பெற்றுள்ளது. வேளாண்மை உற்பத்திக் குழு தலைவரையும், ஆணையாளரை யும் கொண்டதோடு, மற்றும் மன்றத்தின் கூட்டு நியமன உறுப் பினர்களாக மூவரையும் கொண்டுள்ளது. இவர்கள் வேளாண்மை பற்றிய திறமை கொண்டவர்களாக, வல்லுநர்களாக இருக்கி றார்கள்.

இந்த நான்கு குழுக்களைத் தவிர்த்து, அரசாங்கம் விரும் பினால் எத்தனைக் குழு வேண்டுமானாலும் ஏற்படுத்திக் கொள் ளலாம். ஆனால் அக்குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக் கையை ஒன்றிய மன்றம் தான் முடிவு செய்கிறது. இதில் ஒன்றியத் தலைவர் பதவியின் அடிப்படையில் உறுப்பினராக இருக்கிறார். மற்றைய உறுப்பினர்கள் மன்றத்தில் தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள்.

ஊராட்சி பொதுவான ஒரு நோக்கை நிறைவேற்ற மற்ற ஊராட்சிகளோடு, செயலாண்மைகளோடு சேர்ந்து, கூட்டுக் குழுக்கள் அமைத்துச் செயல்படலாம்.

நகராட்சி மன்றம் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு செயல்படுகின்றது. நகராட்சி விஷயங்களை ஆராய, அறிக்கைகளைப் பரிசீலனை செய்ய தனி நபர் அதாவது ஒரு நகராட்சி உறுப்பினர்கொண்ட குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் ஒழுங்கு முறைகள், அமைப்பு, அதிகாரம், செயல்முறை ஆகியவற்றை நகராட்சி மன்றம் தான் முடிவு செய்கின்றது. இது தவிர்த்து, நகராட்சி மன்றத்தின் பாதிப் பேர்கள் ஆதரவால், தீர்மானம் கொண்டு வந்து சிறப்புக் குழுக்களும் அமைக்கலாம். இக்குழுவில் நகராட்சி உறுப்பினர்களும், வெளியிலுள்ள திறமை மிக்கவர்களும் இடம் பெறுகிறார்கள். ஆனால் வெளியாட்களின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்குக்குமேல் இருக்கக் கூடாது.

கூட்டுக் குழுக்களை ஏற்படுத்தவும் நகராட்சி மன்றத்திற்கு உசிமை அளிக்கப்பட்டுள்ளது.

18

மேயர், ஆணையாளர் மற்றும் நிலைக்குழு

மாநகராட்சியின் செயலாக்க அதிகாரங்களை உண்மையிலேயே கொண்டிருப்பது நிலைக்குழு என்றால் மிகையாகாது. இது செயலாக்கத் தலைமையாளர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக்கொண்டு உள்ளது. செயலாக்கத் தலைமையாளர்கள் மேயர், தலைவர், மற்றும் ஆணையாளர் ஆகிய எந்த ஒரு பெயரைத் தாங்கியிருந்தாலும், அவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நிலைக்குழுவிற்கு உண்டு. மக்கள் மாநகராட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவது போல் மாநகராட்சி மன்றம் குழுக்களைக் கட்டுப்படுத்துகிறது, இதே போல் குழுக்கள் செயலாக்கத் துறைகளைக் கட்டுப்படுத்துகின்றன என்று சொல்லலாம். செயலாக்க அதிகாரம் எல்லை மீறாது தடுக்கும் முதல் கட்டுப்பாடு இதுவாகும். ஆனால் முழுப்பொறுப்பும் மாநகர மன்றத்திடம் தான் விடப்பட்டு உள்ளது. நிலைக்குழுக்கள் சட்டத்திலேயே அங்கீகரிக்கப்பட்டு, சட்டமே நிலைக்குழு அமைக்க வழி செய்து உள்ளது. ஆனால் குழுக்களின் அதிகாரம், பணி போன்றவற்றை நிருணயிப்பது மாநகர் மன்றமாகும். எனவே நிலைக்குழுக்களை உருவாக்குவது மாநகர் மன்றம் ஆகும்.

1878-ஆம் ஆண்டில் ஆணையாளர்களின் முதல் பொதுக்கூட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் நிலைக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவருடன் சேர்த்து ஏழு பேர் கொண்டதாக நிலைக்குழு அப்போது அமைக்கப்பட்டது. தலைவர் நிலைக் குழுக்களைக் கூட்டவும் தலைமை தாங்கி நடத்திச் செல்லவும் அதிகாரம் பெற்று இருந்தார். நிலைக்குழு உண்மையான செயலாக்க அதிகாரங்கள் கொண்டு உள்ளதென்பதைப் பற்றிச் சிறிது காண்போம். செயலாக்கத் தலைவர் சட்டத்தின் அம்சப்படியே

கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு உள்ளார். மாநகராட்சித் தலைவர் மாநகராட்சிப் பணிகளைச் செய்ய, ஒப்பந்தங்கள் செய்ய அதிகாரம் பெற்று இருந்தார். அந்த அதிகாரம் குறிப்பிட்ட அளவு தொகைக்கு மட்டுமே அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்குக் குறிப்பிட்ட தொகைக்கு மேல் அதிகமாக இருக்குமாயின், நிலைக்குழுவின் ஒப்புதலைத் தலைவர் கோர வேண்டும். ஒப்பந்தங்கள் செய்ததும், 15 நாட்களுக்குள் அவை பற்றி நிலைக்குழுவிற்குத் தெரியப்படுத்தவேண்டும். நிலைக்குழு முறையீடுகளை விசாரிக்கும் மேல்விசாரணைக் குழுவாகவும் செயல்படுகிறது. மாநகராட்சிப் பணியில் 50ரூபாய்களுக்கு மிகாமல் பெறும் பணியாளர்களின் முறையீடுகளை விசாரிக்க இது அதிகாரம் பெற்றுள்ளது. பணியாளர்களின் முறையீடுகள், பணிகள் சம்பந்தப்பட்ட அரசுப் பணி ஒழுங்கு முறைகள் மற்றும் பணிக்கட்டுப்பாடுகளான பதவி நீக்கம், பதவியிலிருந்து வெளியேற்றியது போன்றவற்றை விசாரிக்கும் தன்மையைப் பெற்றுள்ளது. மாநகராட்சித் தலைவர் பணியாளர்களின் பணிக்கட்டுப்பாடுகளைப் பராமரிக்கும் பொறுப்புக் கொண்டவர். அவர் பணியாளர்களை நீக்கம் செய்ய அதிகாரம் கொண்டவர். அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டது குறித்து விசாரணை செய்யும் அதிகாரத்தை நிலைக்குழு கொண்டுள்ளது. ஆகவே நிலைக்குழு தலைவரது செயலைக் கண்டிக்கும் கட்டுப்பாட்டு இயந்திரமாக உள்ளது.

நிலைக் குழுவின் நிதி அதிகாரங்கள் அதிகமானவை. ஒவ்வோர் ஆண்டும் மாநகராட்சித் தலைவர், ஜனவரி மாதத்திற்கு முன்னர் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து நிலைக்குழுவின் பார்வைக்கு வைக்கிறார். இந்த வரவு செலவுத் திட்டம் வருமானம், செலவினங்கள் மற்றும் வரிவிதிப்புக்கள் போன்ற விபரங்களைக் கொண்டிருக்கும். நிலைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் அனுமதி பெற்ற பின்னர் அரசுப் பதிவுத்தாளில் இது பிரசுரிக்கப்படுகின்றது. நிலைக்குழு அனுமதி கிடைத்ததுவும், மாநகர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் மாநகர் மன்றத்திற்கு உள்ளது. இது அதன் விருப்ப அதிகாரத்தைப் பொறுத்ததாகும். நிலைக்குழு வரவு செலவுத் திட்டம் முடிந்ததுவும், நிதி நிருவாகத்தைக் கண்காணிக்கும் பொறுப்பினைச் செய்கின்றது. மாநகராட்சிச் செலவினங்கள், தணிக்கைகள், கணக்குகள் போன்ற

வற்றை நுண்ணாய்வு செய்யும் அதிகாரம் நிலைக்குழுவிற்கு உள்ளது. மாநகராட்சித் தலைவர் செய்து கொள்ளும் ஒப்பந்தம் ரூ 500க்கு மேலாக இருக்குமாயின், தலைவர் நிலைக்குழுவிற்கு 15 நாட்களுக்குள் தெரியப்படுத்துகிறார். இவ்வாறு ஆரம்ப முதல், இறுதி வரையிலும் அனைத்துச் செயல்களிலும் நிலைக் குழு தனது செயலைச் செய்து கொண்டே வருகின்றது. மதிப்பீடுகளை நுண்ணாய்வு செய்ய வசதியாக முதலில் வரவு செலவுத் திட்டம் பரிசீலனை செய்யப்படுகிறது. செலவுகள் ஒழுங்காகச் செய்யப்பட்டுள்ளனவா, தவறுகள் ஏதேனும் நிகழ்ந்துள்ளனவா என்பதைக் கண்காணிக்கத் தணிக்கை முறை பயன்படுகிறது. அதிகமான அளவில் பணத்தைச் செலவிடக் கூடாது என்பதற்காக, குறிப்பிட்ட தொகைகளுக்கு மேலாக இருப்பின் நிலைக்குழுவின் அனுமதி கோரப்படுகிறது. எனவே நிலைக்குழுவின் நிதி அதிகாரம் மிகுதியானது.

நிலைக்குழு குறித்து எந்தவித மாறுதலையும் 1884-ஆம் ஆண்டுச் சட்டம் செய்யவில்லை. வங்காள மாநகராட்சி 1899-ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில் 1904-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது நிலைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஏழிலிருந்து எட்டாக உயர்த்தியது. நிலைக்குழு உறுப்பினர்கள் கீழ்க்கண்ட வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்:

1) நான்கு உறுப்பினர்கள், மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டனர்.
2) இரண்டு உறுப்பினர்கள், மாநகராட்சியில் அரசாங்கம் நியமனம் செய்த உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
3) இரண்டு உறுப்பினர்கள், அரசாங்கம் நியமனம் செய்த வணிக அமைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிலைக்குழு எப்பொழுதும் மாநகர் மன்ற உறுப்பினரைக் கொண்டதாகவே இருந்துள்ளது. சென்னை மாநகராட்சியில் விருப்பக்குழுக்கள் மற்ற செயல்களுக்கு அமைக்கப்படவில்லை. சட்டத்துவக் குழுக்களுக்கும், விருப்பக்குழுக்களுக்கும் வெளியிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றுச் செயல்படும் முறை சென்னை மாநகராட்சியில் இடம் பெறவில்லை. பம்பாய் மாநகராட்சியில் இது செயலில் உள்ளது.

நிலைக்குழுக்களின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து நான்காக 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி உயர்த்தப்பட்டது. அந்த நிலைக்குழுக்கள் பின்வருமாறு :-

1. வரிவிதிப்பு மற்றும் நிதி
2. வேலைகள்
3. சுகாதாரம்
4. கல்வி

ஒவ்வொரு நிலைக்குழுவும்ஏழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. இவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆவர். ஓர் உறுப்பினர் ஒரே நேரத்தில் இரண்டு நிலைக்குழுக் களில் அங்கம் வகிக்கக் கூடாது. இவர்களின் பதவிக்காலம் மாநக-ராட்சி மன்றத்தையொத்துச் செல்லக் கூடியதாகும். ஒவ்வொரு நிலைக்குழுவும் தலைவர் ஒருவரைத்தேர்ந்தெடுக்கின்றன. இவரது பதவிக்காலம் ஓராண்டு ஆகும். ஒவ்வொரு ஆண்டின் முதல் பொதுக் கூட்டத்தில் நிலைக்குழு உறுப்பினர்களில் ஒருவரைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். தலைவர் அடுத்த தலைவர் தேர்ந்தெடுக்-கப்படுகின்ற வரையிலும் பதவியில் இருப்பார். தலைவர் பதவி காலியாக இருக்குமாயின், காலியான உடன் அடுத்த பொதுக் கூட்டத்தில் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இவரது பதவிக் காலம் அடுத்த தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வரையில் உள்ள இடைக்காலம்தான் ஆகும். பதவியை விட்டுச் செல்கின்ற தலைவர்கள் மறுபடியும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைவர்கள் அவர்களது நிலைக்குழுவைத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல உரிமை பெற்றவர்களாவர். நிலைக்குழுவின் ஒழுங்கினைப் பராமரிப்பதுவும், ஒழுங்குப் பிரச்சனைகளில் கருத்-தூன்றுவதுவும் தலைவர்களின் கடமையாகும். நிலைக்குழு உறுப் பினர்கள் தங்களதுபதவியை தலைவருக்குத் தெரிவித்துவிட்டு பதவி விலகுகிறார்கள். நிலைக்குழுவின் அதிகாரங்களையும், செயல்களை யும் நகர் மன்றம் நேரத்திற்கு நேரம் தனது ஒழுங்கு முறைகளின் வழியாக நிருணயிக்கின்றது. இவ்வாறு நிலைக்குழு மாநகராட்சி நிருவாகத்தில் சிறப்பானதொரு பங்கினைச் செய்து வருகிறது.

செயலாக்க அதிகாரங்களைப் பயன்படுத்தும் வகையில், செயலாக்கஅதிகாரங்களைத் தலைவரிடம் இருந்து பிரித்து,ஆணை யாளர் என்ற பதவியை ஏற்படுத்தி அவரிடம் செயலாக்க அதிகாரங் கள் ஒப்படைக்கப்பட்டன.இம்முறை 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின்

கீழ் கொண்டுவரப்பட்டது. ஆணையாளரை மூன்று வருட காலங்களுக்கு அரசாங்கம் நியமனம் செய்கின்றது. ஆணையாளர்கள் திறமையாகச் செயல்பட்டால் அவர்களது பதவிக்காலம் நீடிக்கப்படுகிறது. எல்லாச் செயலாக்க அதிகாரங்களும் ஆணையாளரிடம் விடப்பட்டு இருந்தன. இவரை அரசாங்கமும், மாநகராட்சி மன்றமும் பதவி நீக்கம் செய்ய அதிகாரம் பெற்று இருந்தன. மாநகராட்சிமன்றம் 33 உறுப்பினர்களுக்குக் குறைவில்லாமல் பதவி நீக்கம் கோரித் தீர்மானத்தை நிறைவேற்றி, அரசாங்கத்திற்கு அனுப்பினால் தாமாகவே பதவி விலகும் நிலைக்கு வந்து விடுவார் ஆணையாளர். அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய பணி ஒழுங்கு முறைகள் இவருக்கும் பொருந்தும். இவருக்கு அரசாங்கம் தான் விடுப்புக்கள் கொடுக்கின்றது. மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியமும் செலவுத் தொகைகளும் ரூ. 2500க்கு மிகாமல் அளிக்கப்படுகின்றன. இதனை அரசாங்கம் நிருணயிக்கிறது.

மாநகராட்சியின் பதிவுகள், கூட்டப்பதிவேடுகள், கூட்டச் செயல்முறைக் குறிப்புக்கள் போன்ற பதிவுகளைக் காக்கும் புரவலராக ஆணையாளர் திகழ்கிறார். மன்ற உறுப்பினர்கள் பார்க்க விரும்பும் பதிவுகள் ஆணையாளர்களால் வழங்கப் படக்கூடியவைகள். ஆணையாளர் பொது நன்மையை உத்தேசித்து, சில பதிவுகளைப் பார்க்க அனுமதி மறுப்பதும் உண்டு அச்சமயங்களில் அவர் இந்த விஷயத்தை மேயருக்குத் தெரிவிக்கிறார். மேயரின் முடிவே இறுதியானதாகும். ஆணையாளர் செயலாக்க அதிகாரம் மட்டுமன்றி, கூட்ட நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும் அதிகாரத்தையும் கொண்டு உள்ளார் ஆணையாளர் மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்: செயல் நடவடிக்கையில் ஈடுபடுகிறார். ஆனால் வாக்குரிமைகளைப் பயன்படுத்த அவருக்கு உரிமை அளிக்கப்படவில்லை. இதே மாதிரியாக, மேயர் விரும்பினால் நிலைக்குழுவின் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார். அவசரமான சமயங்களில் வேலைகளைச் செய்வதற்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவசர வேலைகளைச் செய்துவிட்டு அச்செயல்களைக் குறித்து நிலைக்குழுவிற்கும் மன்றத்திற்கும் அறிவிக்க வேண்டும். மாநகராட்சியின் நிருவாகப் பணிகள் ஆணையாளர் மற்றும் நிலைக்குழுவின் கட்டுப்பாட்டிற்குள்தான் இயங்கிக்

கொண்டு வருகின்றன. சுகாதாரஅதிகாரி,பொறியியலார், வருவாய் அதிகாரி போன்றோர்களை மன்றமே நியமனம் செய்கின்றது. இவர்கள் துறைகளின் தலைவர்களாக இயங்கி வருகின்றனர். இவர்களனைவரும்ஆணையாளரின் கட்டுப்பாட்டிற்குள்தான்செயல் பட்டு வருகின்றனர். சுகாதாரம், பொது வேலைகள் மற்றும் வருவாய் போன்ற செயல்களைச் செய்வதற்குச் சிறப்பு அதிகாரிகளை நியமனம் செய்ய மன்றம் அதிகாரம் பெற்று உள்ளது பணி ஒழுங்கு முறைகள், ஊதியம், தகுதிகள் போன்றவைகள் நிலைக் குழுவினால் வரையறை செய்யப்படுகின்றன. மாநகராட்சியில் மாதம் ரூ. 500க்குக் குறைவாக உள்ள பணியாளர்களை நியமனம் செய்ய ஆணையாளர் அதிகாரம் பெற்று உள்ளார். ஆணையாளர் நிலைக்குழுவிடம் பணியாளர்கள், அதிகாரிகள் போன்றவர்களின் படிநிலைகளையும், பதவிநிலைகளையும் வரையறுத்து, அவற்றைச் சமர்ப்பிக்கிறார். நிலைக்குழு அவ்வரையறுப்பை மாற்றவும் அது பற்றிக் கருத்துரைகள் கூறவும் அதிகாரம் பெற்று உள்ளது. மாநகர் மன்றம் அவ்வரையறுப்பை ஏற்றுக்கொள்ளும் முடிவான அதிகாரத்தைக் கொண்டு உள்ளது. ஆணையாளர் மாநகராட்சியின் நிருவாகப் பிரிவிற்குக் கடமைகளை வரையறுக்க அதிகாரம் பெற்றவர். கடமைகள் வரையறுக்கப்பட்டதோடு, அவைகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்று உள்ளார். பணியாளர்களின் நடத்தை, பணி, ஊதியம், செலவுத் தொகை, விடுப்பு, ஓய்வூதியம், பிற்கால சிறப்புரிமைகள் போன்ற அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்க ஆணையாளர் அதிகாரம் பெற்று உள்ளார்.

நிலைக்குழுவும் ஆணையாளரும் சேர்ந்து மாநகராட்சி மன்றத் தீர்மானங்களுக்குச் செயலாக்கம் கொடுக்கின்றனர். அரசாங்கம் தீர்மானங்களை ஒரு பகுதியையோ முழுவதுமாகவோ தள்ளுபடி செய்து விட்டால் அப்படிப்பட்ட தீர்மானங்களை செயலாக்க முடியாது. நிலைக்குழு கீழ்க்கண்ட விஷயங்களில் ஆணையாளரை வழிநடத்துகின்றது:

1. ஆணையாளரின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பதிவுகளை, கடிதங்களை, திட்டங்கள் மற்றும் பிறவற்றை நிலைக் குழுவிடம் சமர்ப்பிக்கும்படி வழிகாட்டுகின்றது.

2. மாநகராட்சி நிருவாகம் சம்பந்தப்பட்ட வகையில், ஆணையாளரிடம் அறிக்கை பெறவும், ஆணையாளருக்குக் கீழ் இயங்குகின்ற துறைத் தலைவர்களிடம் அறிக்கைகளை நிலைக்குழு கேட்கலாம். துறைத்தலைவர்களிடமிருந்து பெறக்கூடிய அறிக்கைகள் மீது ஆணையாளர் தமது குறிப்புக்களை எழுதி நிலைக்குழுவிற்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளலாம். ஆணையாளர் வேண்டுகோள்களுக்கு செவிமடுத்து, அறிக்கைகளுக்குக் குறிப்புஎழுதி அனுப்புகிறார். ஆனால் விஷயங்கள் மாநகராட்சியைப் பாதிக்கும் வகையிலோ, பொதுமக்களைப் பாதிக்கும் வகையிலோ இருந்தால் அவ்விஷயங்கள் மேயரிடம் விடப்படுகின்றன. அவரது முடிவே இறுதியானது. ரூ 10,000க்கு மிகாத ஒப்பந்தங்களுக்கு அனுமதி தரும் அதிகாரம் கொண்டுள்ளார். ரூ 10,000க்கு மேல் உள்ள ஒப்பந்தங்களுக்கு நிலைக்குழுவின் ஒப்புதலையும் ரூ 50,000க்கு மேல் சென்றால், அரசாங்கத்தின் ஒப்புதலையும் பெறவேண்டும்.

கணக்குகள் மீது அமைக்கப்பட்டுள்ள நிலைக்குழு மன்றம் ஒதுக்கீடு செய்துள்ள செயல்களோடு, கீழ்க்கண்ட செயல்களையும் செய்து வருகின்றது. அவை.

1. வரவு செலவுத் திட்ட மானியங்கள் பயன்படுத்தப்பட்ட தன்மையைக் கண்காணிக்கின்றது.

2. மாநகராட்சியின் அனைத்துக் கணக்குகளையும் நுண்ணாய்வு செய்கின்றது. அங்ஙனம் செய்யும் பொழுது, தேவைப்படுகின்ற சமயங்களில் ஆணையாளரிடம் விளக்கம் கோரும்படியும் கேட்டுக் கொள்கிறது.

3. மாதாந்தர தணிக்கைகளை மாநகரக் கணக்குகளில் செய்கின்றது.

4. குழு திரும்பப் பெற முடியாது என்று கருதுகின்ற மாநகராட்சியின் சொத்து இழப்புக்களைத் தள்ளுபடி செய்கின்றது.

இதே மாதிரியாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவும், மாநகராட்சிச் கணக்குகளைப் பரிசீலனை செய்து, விவரங்கள் கேட்கின்றது. இது கூடுதல் அதிகாரமாகும்.

சென்னை மாநகராட்சி 1934-ஆம் ஆண்டுச்சட்டம் சில மாற்றங்களைச் செய்தது. இது நிலைக்குழுவின் எண்ணிக்கையை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தியது. மாநகர் மன்றம் கூடுதல் நிலைக் குழுக்களை அரசாங்க அனுமதியோடு அமைக்க அதிகாரம் பெற்றது. நிலைக்குழுக்கள் பின்வருவன.

1. கணக்கு
2. கல்வி
3. சுகாதாரம்
4. வரிவிதிப்பு மற்றும் நிதி. (விரிவிதிப்பு முறையீடுகள் தவிர)
5. நகரத்திட்டம் மற்றும் வளர்ச்சி
6. வேலைகள்

வரிவிதிப்பு முறையீடுகளைச் செய்வதற்குத் தனியே ஒரு குழு அமைக்கப்பட்டது. இது மூன்று உறுப்பினர்களைக் கொண்டது. இரண்டு உறுப்பினர்கள் மன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்; ஒருவரை அரசாங்கம் நியமனம் செய்தது. மற்ற ஒவ்வொரு நிலைக்குழுவும் 11 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்கள் ஆண்டுதோறும் முதல் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேயர் தேர்தலுக்குப் பின்னர், நிலைக்குழுவின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஓர் உறுப்பினர் ஒரே நிலைக் குழுவில் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியுமென வரையறை செய்யப்பட்டுள்ளது. தலைவர் பதவியை விட்டுச் செல்லும் தலைவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கத் தகுதியில்லாதவராக மாற்றப்பட்டது. மேயர் அனைத்து நிலைக்குழுக்களிலும் பதவியின் அடிப்படையில் உறுப்பினராவார். ஆனால் அவர் வரிவிதிப்பு முறையீட்டுக் குழுவில் உறுப்பினராக இருக்க முடியாது. நிலைக்குழுவின் தலைவராகவும் வர முடியாது.

நிலைக்குழுக்கள் செயல்படும் விதத்தில் பெரிய மாற்றத்தை 1962-ஆம்ஆண்டுச் சட்டம் கொண்டு வந்தது. சென்னை மாநகராட்சியை உள்ளிட்டு சென்னை மாநில உள்ளாட்சிச் சீர்திருத்தங்கள் குறித்து வெள்ளைத்தாள் ஒன்று 1958இல் வெளியிடப்பட்டது. இது, மன்றத்தின் செயல்களைப் பரவலாக்கிச் செயல்படுத்தல்வேண்டுமெனக் கருத்துக் கூறியது. பரவல் செயல்களை நிலைக்குழு மூலமாகச் செய்வதால், மாநகராட்சியினுடைய திறமை அதிகரிக்குமெனவும் கூறியது. இன்று செயல்பட்டு வருகின்ற 5 நிலைக்குழுக்களுக்குப் பதிலாக, ஒரு மத்திய குழுவும் மற்றும் பிற வட்டாரக் குழுக்களும் அமைக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இன்று ஒவ்வொரு நிலைக்குழுவும் மாநகர் முழுவதற்கும் அதனுடைய பணியைப் பொறுத்து, பொறுப்புப் பெற்றதாக உள்ளது. ஆனால் பரிந்துரைக்கப்பட்ட முறையில், மாநகர் முழுவதற்கும் ஒரு மத்திய குழு மட்டுமே பொறுப்பாகத் திகழும். மற்ற வட்டாரக்குழுக்கள் அந்தந்த பரப்பைச் சுற்றிலும் அந்தந்த இடங்களுக்கு மட்டுமே பொறுப்பு வாய்ந்ததாக இருக்கும். எனவே வட்டாரம் முழுவதும் குழுவின் பார்வையில் உள்ளதால் எளிதாகச் செயல்பட முடியுமென எண்ணினார்கள். வளர்ந்து கொண்டே வந்த மாநகராட்சியின் பணிகளைச் செய்வதற்கு, இயங்கி வந்த ஆறு நிலைக்குழுக்களினால் சமாளிக்க முடியவில்லை என்றும் உணரப்பட்டது. எனவே இம்முறையை நீக்கிவிட்டு, புதியமுறை கொண்டு வரப்பட்டது. இதன்படி ஒரு மத்திய குழுவும் மற்றும் பிற 10 வட்டாரக் குழுக்களும் அமைக்கப்பட வேண்டும்.

அரசாங்க வெள்ளைத்தாளின் பரிந்துரைகளுக்கு 1962-ஆம் ஆண்டு சட்டம் உயிர் கொடுத்தது. இது கீழ்க்கண்ட குழுக்களை அமைக்க வசதி செய்தது. அவை:

1. மத்திய குழு
2. வட்டாரக் குழு
3. கணக்குக் குழு
4. ஒப்பந்தங்கள் குழு
5. முறையீட்டுக் குழு

மத்தியக் குழு

இது நகர் முழுமைக்கும் பொதுவான குழுவாகும். இது ஒவ்வொரு மாதமும் கூடியது. இது மேயர், துணைமேயர் மற்றும் ஒவ்வொரு வட்டாரக் குழுவிலிருந்தும் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால் ஆனது. மேயர் இதில் பதவியின் அடிப்படையில் உறுப்பினராகவும், குழுவின் தலைவராகவும் இருந்தார். இக்குழு மாநகராட்சிப் பணியாளர்கள், நிறுவனங்கள், பணிகள் ஆகிய அனைத்தையும் பராமரிக்கக் கூடிய அதிகாரம் கொண்டு உள்ளது. இக்குழு நகர்முழுமைக்கும் பொதுவானதாக இருக்கின்ற காரணத் தால், வட்டாரங்களின் நலன்களைப் பூர்த்தி செய்வது இதன் இதன் கடமையாகும். வட்டாரக் குழுக்களை ஒருங்கிணைப்புச் செய்வது முக்கிய கடமையாகும். மத்திய குழுவிற்கும் மன்றத்திற் கும் உள்ள தொடர்பு இன்று இருக்கும் நிலைக்குழுவிற்கும் மன்றத்திற்கும் உள்ள தொடர்புதான்.

வட்டாரக் குழுக்கள்

சென்னை மாநகரை வட்டாரமாகப் பிரித்த பின்னர் வட்டாரத்திற்குள் அமையப் பெற்ற அனைத்து மன்ற உறுப்பினர்களும், நியமன உறுப்பினர்களும் வட்டாரக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆனார்கள். இவர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மாதம் இரண்டு முறை இக்குழுக்கள் கூடின. வட்டாரத்திற்குள் செயல்பட வேண்டிய அனைத்துச் செயல்களுக்கும் இக்குழுக்கள் பொறுப்பு வாய்ந் தனவாகும்.

கணக்குக் குழு

இதில் மேயரும் மற்றும் ஏழு உறுப்பினர்களும் இடம் பெற்றார்கள். இந்த ஏழு உறுப்பினர்களும் மாநகர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களின் பதவிக்காலம் மாநகர் மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலங்கள் வரையிலுமாக, இரண்டும் ஒரே அளவு கொண்டன. இதில் காலியிடங்கள் ஏற்பட்டால், மாநகர் மன்றம் நிரம்பும்.

கணக்குக் குழுவின் பணிகள் :

1. வரவுசெலவுத் திட்ட மானியங்கள் செலவிடப்பட்டதைக் கண்காணிப்பது.

2. மாநகராட்சி கணக்குகளைப் பரிசீலனை செய்து, வரவு செலவுகள் குறித்த மாநகர் நிதியில் ஏதாவது தவறெனத் தெரிந்தால், சந்தேகம் கொண்டால், ஆணையாளரிடம் விளக்கம் கேட்பது.

3, மாதாந்திரத் தணிக்கையும், மாதாந்திர வரவுசெலவுகளைக் கணக்குப் பார்ப்பது. ஆணையாளர் சமர்ப்பிக்கும் மாதாந்திர வரவுசெலவுகளை சோதனை செய்து கணக்குப் பார்ப்பதும் மாதாந்திரத் தணிக்கைகள் மேற்கொள்வதுவும்

3. மாநகர் சொத்துக்கள், இழப்பு மற்றும் பிறவிதங்களில் சேதப்பட்ட நிதி திருப்பப்பெற முடியாதென்கின்ற போது, அதனைத் தள்ளுபடி செய்வது இதன் செயலாகும்.

ஒப்பந்தங்கள் குழு :

ஒப்பந்தங்கள் குறித்த பிரச்சனைகளை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. இதில் மேயரும், ஆணையாளரும் உறுப்பினர்களாக இருந்தனர். மேயர் இக்குழுவிற்குத் தலைவராக இருந்தார்.

முறையீட்டுக் குழு

மக்களின் குறைகளை நேரடியாக நிவர்த்தி செய்கின்ற வகையில் இக்குழு அமைக்கப்பட்டது, உரிமம் கோரி கிடைக்கப் பெறாத மக்கள், உரிமத்தைத் தவறுதலாகப் பெற்றது, மற்றும் பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்து தீர்க்கும் வகையில் இக்குழுவின் பணிகள் அமைந்துள்ளன. இக்குழு 5 உறுப்பினர்களைக் கொண்டது. ஐவரும் மாநகர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இவைகளேயன்றி, கூடுதல் குழுக்களை அமைக்கச் சட்டம் வழி செய்தது. கூடுதல் குழுக்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்படுகின்ற குழுக்களுக்கு வேண்டிய பணியாளர்களை மன்றம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பல்வேறு குழுக்கள் அமைந்து, 1971-ஆம் ஆண்டு வரை செயல்பட்டன. ஒரே செயலைப் பல்வேறு வட்டாரங்களில் செய்தால் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற கருத்திற்கு மாறாக இக்குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் எல்லாப் பணிகளையும் ஒன்றாக எண்ணி ஒத்துழைத்துச் செயல்படும் முறையை விடுத்து, தனித்தனியாகப் பிரிந்து செய்தால் சிறப்பாக இருக்க முடியாது என்பது உண்மையாயிற்று. இவ்வாறு பல்வேறு சிக்கல்கள் எழ ஆரம்பித்தன. படிப்படியாகச் சிக்கல்கள், பிரச்சனைகள் ஆகியன அதிகரித்தன. வட்டாரங்களைத் தனித்தனியாகக் கருதி இயங்கியதால், ஒட்டுமொத்த ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. எனவே இம்முறை 1971-ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. அதற்குப் பின்னர் மறுபடியும் பழைய நிலைக் குழு முறை மீண்டும் கொண்டு வரப்பட்டது. இம்முறை இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

19

உள்ளாட்சிப் பணிகள்

உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளூர் மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லையெனில், உள்ளாட்சி அரசாங்கங்களால் பயனேதும் இல்லாமல் போய்விடும். ஆகவே உள்ளாட்சி உள்ளூர் மக்களது தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். மக்களுடைய குடிமைப் பணிகளான பாதுகாப்பு, நீதி, கூட்டுறவு ஆகியன உள்ளாட்சி அரசாங்கங்கள் செய்ய வேண்டிய பணிகளாகும். நல்வாழ்வுப் பணிகளான மாநில அரசாங்கத்தோடும், தன்னால் இயன்ற அளவிலும் உள்ளாட்சிகள் செய்யவேண்டும். மாநில அரசாங்கத்திற்கும் உள்ளாட்சி அரசாங்கத்திற்கும் பொருத்தமாகப் பணிகளை ஒதுக்கி அவற்றைச் செயல்படுத்த வேண்டும். பணிகளை எந்த அடிப்படையில் ஒதுக்க வேண்டும் என்பது ஒரு சிக்கலான கேள்வி. இதற்கு விடை காணுவதன் மூலமே உள்ளாட்சி அரசாங்கத்தின் திறமையைக் கணிக்க முடியும்.

உள்ளாட்சி அரசாங்கத்திற்கு மிகுதியான பணிகள் ஒதுக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அந்தப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குரிய மூலப்பொருட்கள், பணியாளர்கள், நிதி போன்றவை உள்ளாட்சியில் இருக்க வேண்டும். இவை நிரந்தரமான பணிகளாக இருக்கின்ற காரணத்தால், இந்த மூலப் பொருட்கள் பிற போன்றவை நிரந்தரமாகக் கிடைக்க வேண்டும். இரண்டாவதாக, உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் அனைத்தையும் செய்வதற்கு வேண்டிய உதவிகள், வழிகாட்டுக்கள், ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மாநில அரசாங்கம் செய்யு

வேண்டும். மக்கள் உள்ளாட்சி அரசாங்கங்களில் முனைப்பாக இறங்கி, ஆர்வமாகச் செயல்பட்டால்தான் இப்பணிகளைச்செய்ய முடியும். எனவே மாநில அரசுக்கும் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கும் உள்ள தொடர்பினை வரையறுக்கவேண்டும், எந்த மாதிரியான அதிகாரங்களை மாநில அரசாங்கம் வைத்திருக்கவேண்டும், எந்த மாதிரியான உதவிகள், கட்டுப்பாடுகள், வழிகாட்டல்கள் போன்ற வற்றை மாநில அரசாங்கம் செய்ய வேண்டுமென்பது குறித்து வரையறுக்கவேண்டும்.

வளர்ச்சிப் பணிகளை உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல் படுத்த வேண்டும். இந்த வளர்ச்சிப் பணிகள் பல்வேறு வகைப் பட்டவையாகும். சாலைகள் அமைத்தல், போக்குவரத்துப்பணி களைச் செய்தல் ஆகியன சில வளர்ச்சிப்பணிகளாகும். இவற்றை உள்ளாட்சி அரசாங்கம் நிரந்தரமாக நிறைவேற்றவேண்டும். மக் களுடைய ஆதரவோடும், ஒத்துழைப்போடும் இப்பணிகளைச்செய்ய வேண்டும். உள்ளாட்சி அரசாங்கம் ஆர்வமுள்ள மக்களைத் தெரிந்து கொண்டு, அவர்களது உழைப்பைப் பயன்படுத்துவதோடு நின்று விடாமல் அம்மக்களின் பங்கேற்பு அதிகரிக்கக் கூடிய வகையில் விருப்ப உழைப்பையும் ஊக்குவிக்கவேண்டும். இவை தவிர்த்து, உள்ளூர்களில் அமைந்துள்ள சங்கங்கள், கூட்டுறவுகள் போன்ற வைகளை நாடியும் இப்பணிகளைச் செயல்படுத்தலாம். உள்ளாட்சி அரசாங்கங்களுக்குப் போதுமான நிதிவசதி இல்லாமல் இருந்தால், இந்த முறைகளின் மூலமாகப் பணிகளைச் செய்யலாம். இவ்வாறு மக்களது தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். அவற்றை உள்ளாட்சி அரசாங்கங்கள் செய்தால் மக்கள் முழுநிறைவுபெறுவர்.

இன்றைய நாளில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உள்ளாட்சிப் பணிகளின் தரமும் உயர்ந்ததாக, அனைவருக்கும் கிடைக்கும்படியும் செய்ய ஏராளமான நிதி தேவைப்படுகிறது. இதனால் விருப்ப உழைப்பை ஊக்குவிப்பதோடு விட்டுவிடாமல், உள்ளாட்சிகள் தன்னிச்சையாக இயங்குகின்ற வண்ணம் வருவாய் இனங்களை அமைக்க வேண்டும். உள்ளாட்சிகள் குடிமைப் பணி கள், வளர்ச்சிப்பணிகள் ஆகியன செய்வதற்கு, வருவாய்ப் பணி களையும் மேற்கொள்ளவேண்டும்.

உள்ளாட்சிகளே நீதிவழங்கும் பணிகளையும் வளர்ச்சிப் பணிகளையும் செய்யவேண்டுமென்பது பலருடைய கருத்தாக இருந்து வந்துள்ளது. ஏனெனில் உள்ளாட்சியில் வழக்குகள் பல ஏற்படு-வதால் வளர்ச்சிப் பணிகளின் ஓட்டம் தடைப்படுகின்றது. ஆகவே வழக்குகளைத் தீவிரமாக விசாரித்து, உடனுக்குடன் நீதி வழங்-கினால், வளர்ச்சிப்பணிகளைச் செம்மையாகச் செய்யமுடியும் என்று எண்ணப்பட்டது. ஆனால்அதிலும் ஏராளமான சிக்கல்கள் உள்ளன. உள்ளாட்சிகளில் பல்விதப் பிரிவு மக்கள் இருப்பதாலும், பல்விதக் கருத்துக்கள் கொண்டிருப்பதாலும், நீதி வழங்குகின்ற செயல்களை வைத்து பிரிவினைகளை அதிகமாக்க ஏராளமான வழிகள் உள்ளன. வழக்குகளை விசாரித்து, தண்டனைகள், அபராதங்கள் போன்ற பிற கட்டாய நடவடிக்கைகள் எடுக்கின்றபோது உள்ளூரில் நிரந்தரப் பல பிரிவுகள் ஏற்பட வழியுண்டு. ஆகவே தான் நீதி வழங்கும் பணிகள் உள்ளாட்சிகளிடம் விடப்படவில்லை.

உள்ளாட்சிகள் நேரடியாகச் சில பணிகளையும் மறைமுகமாகச் சில பணிகளையும் செய்கின்றன. சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி, வடிகால் வசதி,தெரு விளக்குகள் போன்ற பணிகளை உள்-ளாட்சிகள் நேரடியாகச் செய்கின்றன. நில நிருவாகம், கடன்வசதி போன்றவை உள்ளாட்சிகளின் மறைமுகப் பணிகளாகும். மாநில அரசாங்கத் திட்டப் பணிகளும் உள்ளாட்சிகளில் செயல்படுத்தப் படுகின்றன.

ஊராட்சிப் பணிகள்

ஊராட்சிப் பணிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று கட்டாயப் பணி, மற்றொன்று விருப்பப்பணி. கட்டாயப் பணியை ஊராட்சி கட்டாயமாகச் செய்யவேண்டும். அங்ஙனம் செய்யவில்லையென்றால் ஊராட்சிகள் மீது அரசாங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும். கட்டாயப் பணிகளைச் செய்யாத காரணத்தால் ஊராட்சிகளைக் கலைக்கலாம்; தள்ளி வைக்கலாம். ஆனால் விருப்பப்பணிகள் ஊராட்சிகளின் விருப்பத்தைப் பொறுத்தது. ஊராட்சிகளின் நிதிநிலைக்கேற்ப, இப்பணிகள் செய்யப்படுகின்றன. இப்பணிகளைச் செய்யவில்லை என்ற காரணத்திற்காக ஊராட்சிகள் மீது ஒழுங்கு நடவடிக்கையை மாநில அரசாங்கம் எடுக்கமுடியாது.

ஊராட்சிகள் செய்ய வேண்டிய பணிகள்:

1. கிராமச் சாலைகள், ஓடு பாலங்கள், சிறு பாலங்கள், சாலை அணைகள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

2. கட்டிடம் உள்ள பகுதிகளிலுள்ள பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் விளக்குகள் அமைத்தல்.

3. சாக்கடைகள் கட்டுதலும், கழிவுகளை அப்புறப்படுத்துதலும்.

4. தெருக்களைத் துப்புரவாக்குதல், குப்பை குவியல்களையும், புதர்ச் செடிகளையும், முட்செடிகளையும் அகற்றுதல், பாழுங் கிணறுகளையும், சுகாதாரக் கேடான குளங்களையும், குட்டை களையும், ஏரிகளையும், பள்ளங்களையும் அல்லது பொந்து களையும் மூடுவது. மேலும் அந்தக் கிராமம் அல்லது நகரத் தின் சுகாதாரமான நிலைமைக்கு வேண்டிய மற்றச் சீர்-திருத்தங்கள் செய்தல்.

5. பொதுக்கழிப்பிடம் ஏற்படுத்துதல் அல்லது தனிப்பட்ட கழிப்பிடங்களைத் துப்புரவாக்க ஏற்பாடுகள் செய்தல்.

6. இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் ஏற்படுத்துதல், பேணல்.

7. கிணறுகளை வெட்டுதலும், பழுதுபார்த்தலும், குட்டைகள் அல்லது குளங்கள் வெட்டுதலும், பழுதுபார்த்தலும், பேணு-தலும், குளிப்பதற்காகக் குளியல் இடங்களும், குடிநீர்க்காகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேக்க வேலைகளைக் கட்டுதலும், பேணுதலும்.

இந்த ஏழும் ஊராட்சியின் கடமைகள் ஆகும். இவை கட்டா யமாக ஊராட்சி செய்ய வேண்டிய பணிகள் ஆகும்.

கட்டாயப் பணிகள் எங்ஙனம் செய்யப்பட்டன, அவை பற்றிக் கிராம மக்கள் என்ன கருத்துக் கொண்டிருந்தனர் என்பதை ஆசிரி-யர் மேற்கொண்ட கிராம நுண்ணாய்வின் சில முடிவுகளால் அறிய-லாம்.

கிராமச் சாலைகள்

இன்றைய நாளின் போக்குவரத்தின் அத்தியாவசியத்தால், கிராமச் சாலைகளை ஊராட்சிகள் அமைப்பதுடன், வேலைக்கு உணவுத் திட்டம் (Food for Work Scheme), வறட்சி நிவாரணப்பணி மற்றும் அவசரகால வேலைகள் ஆகியவற்றின் மூலமும் கிராமச் சாலைகள் போடப்படுகின்றன. இருப்பினும் எல்லாக் கிராமங்களும் சாலை வசதி பெற்றுள்ளனவா என்பது கேள்விக்குறி. வெயில் காலச் சாலைகள்தான் போடப்பட்டுள்ளனவே தவிர, மழைக் காலச் சாலைகள் இன்னும் போடப்படவில்லை. மழைக் காலங்களில் சாலையே தெரியாத அளவிற்கு மழைத் தண்ணீர் அரித்துச் செல்வதும் உண்டு. அப்படியில்லையேல் அச்சாலை செல்ல முடியாத அளவிற்குச் சகதியாக இருப்பதுண்டு. களிமண்ணால் சாலைகள் போடுவதால் ஏற்படுகின்ற பிரச்சனை இது. கிராம அரசாங்கமென்ற ஆசிரியர் ஆய்வில் தேர்ந்தெடுத்த பெரும்பான்மையோர்கள் இவ்வசதியை ஊராட்சிகள் முழுமையாகச் செய்ய அக்கறை காட்டவில்லை என்று கருத்துக் கூறியுள்ளனர்.

சிறு பாலங்களும் ஓடு பாலங்களும் (Small Bridges and Culverts)

இப்பணியைக் கிராமச் சாலைகளைக் காட்டிலும் திருப்தியாக ஊராட்சிகள் செய்கின்றன. ஏனெனில் இவற்றை எளிமையாகச் செய்ய முடியும். செய்ய இயலவில்லையேல், இயற்கையாகவே இவை அமைந்துவிடும். மாறாக, இவை அத்தியாவசியமானவையாக இருப்பதால், ஊராட்சிகள் அக்கறை காட்டுகின்றன.

தெரு விளக்கிடல்

எல்லாக் கிராமங்களும் மின் இணைப்புப் பெற வேண்டுமென்பது மாநில அரசின் நோக்கமாக இருப்பதால், இப்பணி வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிகள்தான் எத்தனை விளக்குகள் போட வேண்டும், எந்தெந்த இடங்களில் போட வேண்டுமென்பதை முடிவு செய்ய வேண்டும். இந்த விளக்குகளுக்கு உரிய மின் கட்டணத்தை ஊராட்சிகள் கட்ட வேண்டும். பராமரிப்புப் பணியை மின்சார வாரியம் செய்ய வேண்டும். ஆனால் விளக்குகள் போடப்-

பட்டிருப்பினும் விளக்குகள் எரிந்தனவா? என்றால் கேள்விக்குறி. ஊராட்சிகள் மின் கட்டணத்தை முறையாகக்கட்டாததாலும், பராமரிப்புப் பணியை ஊராட்சியும், மின்சார வாரியமும் மாறிமாறிச் செய்து வந்ததாலும், தெருவிளக்கிடல் சீராகச் செய்யப்படவில்லை. எளிதாகச் செய்யக்கூடிய இப்பணி, நிருவாக நிலையில்லாக் கொள்கையால் பிரச்சனையாக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வசதி

கிராமங்கள் கிணறுகளையும், குளங்களையும் குடிநீருக்குப் பயன்படுத்தி வந்த காலம் மாறி, கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்ற அரசாங்கக் கொள்கையால், ஏராளமான குழாய்க்கிணறுகள் வெட்டப்பட்டு, குடி தண்ணீர் குழாய்மூலம் வீடுகளுக்கு வழங்கப்படுகின்றது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏராளமான ஆழ்கிணறுகள், குழாய்க் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இப்பணி திருப்திகரமாகச் செயல்படுகின்றது. இருப்பினும் நிருவாகக் குறைகள் ஒரு சில இருப்பது களையப்பட வேண்டும்.

கழிவுநீர் அகற்றல்

இப்பணியைப் பெரும்பாலான ஊராட்சிகள் செய்யவேண்டுமா? இயற்கையிலேயே கழிவுநீர் போய்விடும் அல்லவா? என்ற அளவில் உள்ளது. ஆரம்பச் சுகாதாரத் தடுப்பு நடவடிக்கைகள் கூட எடுக்க இயலாத நிலையில் ஊராட்சிகள் உள்ளன. எனவேதான் தமிழக நிருவாகச் சீர்திருத்த ஆணையம் 2000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு ரூ. 1500 ஒவ்வொரு ஆண்டும் இப் பணிக்காக அளிக்கப்படவேண்டுமெனப்பரிந்துரைத்துள்ளது. 2000க் கும் குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு ரூ. 1000 மும் கொடுக்க வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது. இதனைத் தமிழக அரசு தனது பரிசீலனையில் வைத்துள்ளது.

தெருச் சுத்தம்

கிராமப்புறங்களில் பெண்கள் தங்கள் வீட்டையும், முற்றத் தையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டுமென்ற முயற்சியிலேயே

இப்பணி நிறைவேற்றப்படுகின்றது. ஊராட்சிகளும் ஒரு சில துப்புரவுப் பணியாளர்களை நியமித்து, இப்பணியைச் செய்துவருகின்றன. மொத்தத்தில் இப்பணி பற்றி ஏராளமானவர்களுக்குத் தெரியவில்லை.

பொதுக் கழிவறைகள்

இப்பணி தேவையற்றதென்ற நிலை தற்போது மாறிக் கொண்டு வருகின்றது. கிராமங்களில் தொழிற்சாலைகள் வளருவதாலும், நெருக்கமாக எல்லா இடங்களிலும் வீடுகள் கட்டப்பட்டதாலும் இப்பணி தற்போது தீவிரமாகச் செய்யப்படுகின்றது.

இடுகாடுகள்

ஊராட்சி அதிகமாக இப்பணிக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

ஊராட்சிகளின் விருப்பப்பணிகள்

1. கிராமம் அல்லது நகரத்திலுள்ள எல்லாப் பொதுச்சாலைகளின் இரு பக்கங்களிலும் மரங்கள் நடுதலும், பாதுகாத்தலும்.
2. பொதுச் சாலைகளுக்கும், கட்டிடங்கள் இருக்கும் பகுதிகளுக்கு அப்பால் உள்ள பொதுவிடங்களுக்கும் விளக்கிடல்.
3. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளென வகைப்படுத்தப் படுபவை தவிர்த்து, பொதுச் சந்தைகள் ஏற்படுத்துதலும், நடத்துதலும்.
4. ஊராட்சி ஒன்றியச் சந்தைகள், விழாக்கள் என வகைப்படுத்தப்படுபவை தவிர்த்த சந்தைகளையும், விழாக்களையும் கட்டுப்படுத்துதல்.
5. வண்டி நிலையங்கள், பொதுக்கால்நடைத் தொழுவங்களை ஏற்படுத்துதலும் நடத்துதலும்.
6. பொது ஆடு, மாடறுப்பு நிலையங்களை ஏற்படுத்துதலும், பேணுதலும்.

7. படிப்பகங்கள் ஏற்படுத்துதலும், நடத்துதலும்.

8. வானொலிப் பெட்டிக் கருவிகளும், விளையாட்டு மைதானங்களும், பூங்காக்களும், விளையாட்டு மன்றங்களும், உடற்பயிற்சி நிலையங்களும் ஏற்படுத்துதலும் நடத்தலும்.

9. எழுத்தறிவிக்கும் நிலையங்கள், சமூகக் கல்வி புகட்டுவதற்கான நிலையங்கள் ஏற்படுத்துதலும் நடத்துதலும்.

10. பொது வசதிக்கான கட்டிடங்களைக் கட்டுதலும் அந்தக் கிராமம் அல்லது நகரத்தில் வாழ்வோரின் பாதுகாப்பு, சுகாதாரம், சுகம், வசதி, பண்பாடு, பொழுதுபோக்கு ஆகியவற்றிற்கான பற்ற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

விருப்பப் பணிகளை நிறைவேற்றுவதில் ஊராட்சிகள் குறைந்த ஆர்வத்தைத்தான் காட்டியுள்ளன. விருப்பப் பணிகளின் வளர்ச்சி மிகவும் குறைவாகத்தான் உள்ளது. 1957-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கம் ஊராட்சியில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து வெள்ளைத்தாளை வெளியிட்டது. இதில், ஊராட்சிகள் 1950ஆம் ஆண்டிற்கு முன்னர் செய்த பணிகளைக் கூடச் செம்மையாகச் செய்யவில்லையென்றும், பொதுநிதியைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளன என்றும் குற்றம் சாட்டியுள்ளது. கிராமப்புற வளர்ச்சியைத் திருத்தியமைக்கவும், ஊராட்சிகள் ஏராளமான பணிகள் செய்யவேண்டுமென்றும் இரு வகைப் பட்டியலையும் கொடுத்து உள்ளது. சில ஊராட்சிகள்தான் இப்பணிகளைச் செய்துள்ளன. ஆனாலும், ஊராட்சிகள் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளதென்பதை, அவை செலவழித்த நிதியின் அளவைக் கொண்டு கணக்கிட முடிகிறது.

மருத்துவ வசதி அளிப்பதிலும், குடிசைத் தொழில்களை வளர்ப்பதிலும் ஊராட்சிகள் ஆர்வம் அதிகம் காட்டியதாகத் தெரியவில்லை. இரண்டு ஊராட்சிகள் சேர்ந்து கூட்டாக ஒரு மருத்துவமனையும் நடத்தியதாகத் தெரியவில்லை.

ஊராட்சி ஒன்றியப் பணிகள்

ஊராட்சிகளைப் போல் ஊராட்சி ஒன்றியமும் இரண்டு வகையான பணிகளைச் செய்து வருகின்றன. ஊராட்சிகளின் மேலான அமைப்பாக இது இருப்பதால், ஊராட்சிகளை ஒருங்கிணைக்கக்கூடிய பணிகளைச் செய்வனவாக இது விளங்குகிறது. தவிர, இன்றைய வளர்ச்சிப் பணிகளைச் செய்ய அளவுகோலாக அடிப்படை அலகாக இருக்கக்கூடியது இந்த ஊராட்சி ஒன்றிய மாகும். எனவே மாநில அரசாங்கத்தின் வளர்ச்சித் திட்டங்கள், மத்திய அரசாங்கத்தின் ஊக்குவிப்புத் திட்டங்கள் ஆகியன இதன் மூலம் செய்யப்படுகின்றன. எனவேதான் ஒருங்கிணைந்த வளர்ச் சிக்கு வித்திடக்கூடியதாக இது உள்ளது. இதன் பணிகள் குறித் துச் சிறிது காண்போம்.

சென்னை மாவட்ட வாரியங்களின் 1920-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, மாவட்ட வாரியங்கள் செய்து வந்த பணிகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட வேண்டுமென 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2,3 ஆகிய தேதிகளில் கூடிய சட்ட மன்றக்குழு முடிவு செய்தது. இருப்பினும் ஊராட்சி ஒன்றிய அதிகார வரையறையிலிருந்து கீழ்க்கண்ட பணிகளைத் தள்ளுபடி செய்தது. அவை,

1. பயணிகள் விடுதி, ஓய்வு இல்லங்கள் போன்றவற்றை ஏற் படுத்துவது, பராமரிப்பது.

2. நடுத்தரப் பள்ளிகள், தொழில் பள்ளிக்கூடங்கள், மாணவர் விடுதிகள் போன்றவை திறப்பது.

3. போக்குவரத்துப் பணிகள் செய்வது போன்றவையாகும்.

ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள்

1. ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட எல்லாப் பொதுச்சாலைகள், அச்சாலைகளின் எல்லாப் பாலங் கள், சிறுபாலங்கள், சாலை அணைகள் ஆகியவற்றைக் கட்டுதலும், பழுதுபார்த்தலும், பேணுதலும்,

2. மருந்தகங்கள் ஏற்படுத்தலும், பேணுதலுடன், கிராம மருத்துவத் தொழில் புரிவோருக்கு உதவித் தொகை அளித்தல்.

3. தாய்-சேய் நல விடுதிகள் ஏற்படுத்துதல், தாய்மைப்பணி குறித்து விளக்குதல், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் தாய்மார்களுக்கு அறிவுரையும் உதவியும் அளித்தல்.

4. ஏழைகள் விடுதிகள், அனாதை இல்லங்கள், கடைகள், விற்பனை மேடைகள், மறைப்புத் திட்டுகள் (Plinth) கட்டுதலும் பேணுதலும், அம்மை குத்துபவர்களைப் பயிற்றுவிப்பதும் அமர்த்துவதும், மக்கட் கூட்டத்தின் நெருக்கத்தை அகற்றுதலும், வீட்டுமனைகளை ஏற்பாடு செய்தலும்

5. தொடக்கப்பள்ளிகள் ஏற்படுத்துதலும், பேணுதலும், விரிவாக்கலும், தொடக்கப் பள்ளிகளுக்காகத் தனியார் நிருவாகத்திற்கு உதவித் தொகை வழங்குதல் உட்பட முன்னேற்றத்திற்கு ஏற்பாடு செய்தலும்

6. தொத்துநோய் அல்லது மலேரியா தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்

7. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டுமென ஒதுக்கப்பட்ட சந்தைகளையும், விழாக்களையும் கட்டுப்படுத்தல்.

8. கால்நடை நோய் நிவாரணம்.

9. கிராம நத்தங்களை விரிவாக்கலும் கட்டிடங்களுக்கு ஒழுங்குத் திட்டம் செய்தலும்

10. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளென வகைப்படுத்தப்பட்ட, பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதலும் பேணுதலும்.

11. பிறப்பு, இறப்புக்கள் தொடர்பான புள்ளி விவரங்களை வைத்திருத்தல்.

12. சத்திரங்கள் ஏற்படுத்துதலும் நடத்துதலும்.

13. விவசாயத்தையும் விவசாயக் கருவிகளையும் சீர்திருத்தலும், விவசாயப் பொருட்காட்சிகளை நடத்துதலும்.

14. குடிசைத் தொழில்களை முன்னேற்றுதலும் ஊக்குவித்தலும்.

சாலைகள் மற்றும் கட்டிடங்கள்

ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிக்கக் கூடிய வகையில், மாவட்ட வாரியங்களின் அதிகாரத்தில் இருந்த சாலைகள் அனைத்தும் இதற்கு மாற்றம் செய்யப்பட்டன. ஆனால் மாவட்ட சாலைகளின் பெரிய சாலைகள் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கப் பெற்றால், அவை மாநில அரசாங்கக் கண்காணிப்பிற்கு மாற்றப் பட்டன. பெருஞ்சாலைகள், மாவட்டப் பெரிய சாலைகள் அனைத் தும் மாநில அரசாங்கம் பராமரிக்கக்கூடியனவாக மாற்றப்பட்டன. இதே மாதிரியாக மாவட்ட வாரியங்கள் பராமரித்து வந்த கட்டிடங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப் பட்டன. ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள சாலைகளை, சாலைவளர்ச்சித் திட்டத்தின்படி ஊராட்சி ஒன்றியங்கள்தான் செயல்படுத்த வேண்டுமெனக் கூறியுள்ளது. மாநில அரசாங்கம் இச்செலவை ஏற்றுக் கொண்டு, நிதி வழங்க வேண்டும்.

சுகாதாரப் பணிகள்

தாய்சேய் நல விடுதி, குழந்தைகள் நலவிடுதி போன்ற வைகள் ஊராட்சி ஒன்றியத்தின் அதிகார வரையறைக்குள் வந்தன. இதற்குமுன் மாவட்ட வாரியம் இவற்றைச் செயல் படுத்தியது.

ஆரம்பப் பள்ளிகள்:-

மாவட்ட வாரியங்கள் பராமரித்து வந்த பள்ளிகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப் படவேண்டு மென்றும் இதே மாதிரியாக ஊராட்சிகள் நிருவகித்து வந்த பள்ளிகளையும் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றவேண்டுமெனவும் கூறப்பட்டன. ஏனெனில் பள்ளிகள் அனைத்திற்கும் ஒரே மாதிரி

யான கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்றும், ஆசிரியர்களின் நியமனமுறை, பணிக்கட்டுப்பாடுகள், மாற்றங்கள் போன்றவையும் ஒரே மாதிரியாகச் செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப் பட்டன. ஆனால் ஆசிரியர்களின் ஒழுங்கு நடவடிக்கை குறித்த கட்டுப்பாடுகள் ஊராட்சி ஒன்றியத்தில் அமையும்படி செய்யப் பட்டன. பள்ளிகளின் வருகை, பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்த்தல், பராமரித்தல் போன்றவை ஊராட்சிகளிடமே அமையும்படி இருக்கவேண்டுமெனக் கூறப்பட்டன. இவைகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சந்தைகள் :

தனியார், பொதுச் சந்தைகள் போன்றவற்றை மாவட்ட வாரியங்கள் நகராட்சியில்லாத பகுதிகளில் நிருவகித்து வந்தன. ஊராட்சிகளும் சந்தைகளை நிருவகித்து வந்துள்ளன. எனவே மாவட்ட வாரியங்கள் நடத்துகின்ற சந்தைகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றவேண்டுமென்றும், ஊராட்சிகள் தொடர்ந்து தங்களது சந்தைகளை நடத்த வேண்டுமென்றும் முடிவு மேற் கொள்ளப்பட்டது. ஆனால் உரிமம் வழங்கும் உரிமை மட்டும் ஊராட்சிகளுக்குக் கொடுக்கக் கூடாது என வலியுறுத்தப்பட்டது.

சமுதாய வளர்ச்சியின் தேசீய விரிவாக்கப் பணித்திட்டத்தை நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியத்திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் கட்டுப்பாடுகளுக்கும் வரையறைகளுக்குமுட்பட்டு அந்த ஊராட்சி வளர்ச்சித் தொகுதியின் சமுதாய வளர்ச்சியின் தேசீய விரிவாக்கப் பணித்திட்டத்தின் எல்லா நடவடிக்கைகளையும் முக்கியமாக, தனியார், கூட்டுறவு அடிப்படையில் ஏற்படுத்தப்படும் விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கிராமத் தொழில்கள், வளர்ச்சி தொடர்பான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதையும் ஊராட்சி ஒன்றியத்திடம் அரசாங்கம் ஒப்படைத்துள்ளது.

இவைகளேயன்றி, ஊராட்சி ஒன்றியத்தின் பொது உபயோகமுள்ள தேவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை

களின்பொருட்டு, ஊராட்சி ஒன்றியத்தில்வாழ்வோரின் பாதுகாப்பு, சுகாதாரம், வசதி ஆகியவற்றை முன்னேற்றக் கருதி ஊராட்சி ஒன்றியம் தான் தகுதியெனக் கருதி, அவற்றில் ஈடுபடலாம். இவையே ஊராட்சி ஒன்றியத்தின் விருப்பப்பணிகளாகும்.

இந்திய அரசியலமைப்பில் அதிகாரப் பங்கீடு செய்யப் பட்டதுபோல், அதாவது மத்திய வரிசை, மாநில வரிசை, இணைந்த பொது வரிசை போல், இங்கும் ஊராட்சிகள் செய்ய வேண்டிய பணிகள், ஊராட்சி ஒன்றியங்கள் செய்ய வேண்டிய பணிகள், இரண்டும் சேர்ந்து செய்ய வேண்டிய பொதுப்பணி களெனப் பிரிக்க வேண்டும். உதாரணமாக ஊராட்சி ஒன்றியங் கள் ஆரம்பக் கல்விக் கூடங்களைத் திறப்பது, அவற்றைப் பரா மரிப்பது, கிராமங்களிடையே மற்றும் மாவட்ட சாலைகளைப் பராமரிப்பது, மருந்தகங்கள், தாய்-சேய் விடுதிகள், குழந்தை நல்வாழ்வு நிலையங்கள் போன்றவற்றில் முழு அதிகாரம் கொண்டனவாக இருக்கவேண்டும். கிராமத் தெருக்கள், சாலைகள் போன்றவற்றைப் பராமரிப்பது, தெரு விளக்கிடல், தெருச் சுத்தம் மற்றும் சுகாதாரம் போன்றவற்றை வசதி செய்யும் பொறுப்பு ஊராட்சியைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். சந்தை-கள் ஏற்படுத்துவது, பராமரிப்பு மற்றும் வண்டி நிலையங்கள், இறைச்சிக் கொட்டில்கள் போன்றவை ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் இணைந்து செய்யக் கூடிய செயல்களாக இருத்தல் வேண்டும்.

நகராட்சிப் பணிகள்

நகராட்சிகள் மக்களுக்கு வேண்டிய அடிப்படையான குடிமைப் பணிகளை வழங்கப் பொறுப்புக் கொண்டனவாக இருக்கின்றன. இவற்றில் கீழ்க்கண்ட ஐந்து பணிகளைக் குறிப்பாகச் செய்ய வேண்டும். அவை,

1. சாலைகள் அமைத்தல், பராமரித்தல்
2. தெரு விளக்கிடல்
3. பொதுச் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல்
4. குடிநீர் வசதியும், வடிகாலும்
5. கல்வி

இப்பணிகள் ஒரே மாதிரியாகப் பல்லாண்டுகளாக விளங்கினாலும், அவற்றிற்குச் செலவழிக்கப்பட்ட தொகையும், வேலைகளும் மிகுதியாக விரிவடைந்துள்ளன. நகராட்சிகள் செயல்படுத்தவிருக்கும் பணிகள் குறித்து 1920-ஆம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தில் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று கட்டாயப் பணிகள், மற்றொன்று விருப்பப் பணிகள். அவற்றைப் பற்றிக் காண்போம்.

கட்டாயப் பணிகள்

1. தெருக்கள், பாலங்கள், சாலைவழிகள், சிறுபாலங்கள் போன்றவற்றை அமைத்தல், பராமரித்தல்.
2. துப்புரவு
3. தெருக்களுக்கு விளக்கிடல்
4. குடிநீர் வசதி
5. வடிகால் வசதி, பேணுதல்
6. கழிவு நீரோட்டம்
7. சுகாதாரப் பணிகள்
8. அம்மை குத்துதலும், நோய்த் தடுப்பு முறையும்
9. கல்வி
10. பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்தல்
11. இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் பராமரித்தல்
12. மருத்துவ உதவி
13. நகராட்சி அலுவலகத்தையும், ஆவணக் காப்பகத்தையும் பராமரித்தல்.
14. நகராட்சியில் அமையப் பெற்றுள்ள பொதுச்சொத்துக்கள், புராதனச் சின்னங்களைப் பராமரித்தல்.
15. நகராட்சியின் சொத்துக்களைக் காத்தல்.
16. உணவுப் பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்துதல்.

17. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், வாசக நிலையங்கள் போன்றவை அமைத்தல்.

18. பொதுப் பாதுகாப்பு மற்றும் வசதிகள்.

a) உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற வியாபாரங்களையும், ஆபத்துக்களையும் கட்டுப்படுத்துதல்.

b) கட்டிட ஒழுங்குமுறைச் செயல்கள்

c) நகராட்சிச் சாலைகளிலும், நிலங்களிலும் ஆக்கிரமிப்புச் செய்வதைக் கட்டுப்படுத்துதல்.

விருப்பப் பணிகள்

1) மத்திய தரக் கல்வி நூலகங்கள், தொல்பொருள் நிலையங்கள்

2) ஏழை மறுவாழ்வு இல்லங்கள்

3) வீட்டு வசதி

4) கால்நடை மருத்துவமனை

5) நுழைவழிகளைப் பராமரித்தல்

மாநகராட்சிப் பணிகளில் ஊராட்சி, நகராட்சிகள் போல் கட்டாயப் பணி, விருப்பப்பணி என்ற வகைபாடு கிடையாது. மாநகராட்சி மன்றம் தான் மேற்கொள்ள முடிவெடுக்கும் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்ற அதிகாரம் கொண்டுள்ளது.

சில முக்கியப் பணிகளாவன :

1. ஆரம்பக்கல்வி
2. பொதுச் சுகாதாரம்
3. பிறப்பு-இறப்புக்களைப் பதிவு செய்தல்
4. குடிநீர் வசதி
5. வடிகால் வசதி
6. தெரு விளக்கு
7. இறைச்சிக் கொட்டில்கள்
8. பொதுச் சந்தை
9. பூங்காக்கள்
10. இடுகாடுகள்
11. விளையாட்டு மைதானங்கள்
12. நூலக வசதி

20

உள்ளாட்சிப் பணியாளர் குழாம் நிருவாகம்

ஊராட்சிச் செயலாக்க அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர், ஊராட்சியின் ஏனைய பணியாளர் குழாமை நியமிக்கும் பொறுப்பினை ஊராட்சித் தலைவரும், உறுப்பினர்களும் கொண்டிருந்தனர். செயலாக்க அதிகாரி நியமிக்கப்பட்ட பின்னர், பணியாளர் குழாமை நியமிக்கும் பொறுப்பினை இவரே செய்ய வேண்டியதாயிற்று. இவர் துறைகளின் தலைவர்களைக் கலந்தாலோசித்து பணியாளர்களை நியமித்து வந்தார். ஊராட்சியின் பணியாளர்களை ஊராட்சி உறுப்பினர்களும் தலைவரும் நியமித்தால், பணியாளர்களுக்கு பணிப்பாதுகாப்பு இருப்பது அரிது. ஊராட்சி உறுப்பினர்களின் தயவும், கருணையும் தான் பணியாளர்களைக் காப்பாற்றும். அங்ஙனம் பணியாளர்கள் இரக்கத்திற்கே உரியவர்களாகவே இருந்தால், எங்ஙனம் அவர்கள் தங்களது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியும்? ஆகவேதான் பணியாளர்களை நியமிக்கும் பொறுப்பினைச் செயலாக்க அதிகாரி பெற்றார். தற்போது ஊராட்சிப் பணியாளர்கள் ஓர் ஊராட்சியிலிருந்து மற்றொரு ஊராட்சிக்கு மாறுதல் (transfer) செய்யக் கூடிய வகையில் ஊராட்சிப் பணி அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய சட்டத்தின்படி, ஒவ்வொரு நகர ஊராட்சிக்கும் ஒரு நிருவாக அதிகாரி நியமிக்கப்படுகிறார். இவர் முழுநேரப் பணியாளராக இருந்து வருகிறார். கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை நிருவாக அதிகாரி செய்கின்ற பணிகளை அந்-

தந்த ஊராட்சித் தலைவர்களே செய்து வருகின்றனர். அரசாங்கத்தால் அவ்வப்போது நிருணயிக்கப்படுகின்ற சம்பளம், செலவுத் தொகைகள் நிருவாக அதிகாரிக்கு வழங்கப்படுகின்றன. நிருவாக அதிகாரி அரசாங்கப்பணியில் இருந்தால், அவருடைய விடுப்புக் காலப் படிகள், ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றிற் கான உதவித்தொகையை அவருக்காவது, அவர் சார்பிலாவது ஊராட்சி செலுத்தி வருகிறது. நிருவாக அதிகாரி அரசாங்கப் பணியில் இல்லாதவர் என்றால் அவரது விடுப்புக் காலப்படிகள், ஓய்வூதியம், வருங்கால வைப்புநிதி ஆகியவற்றிற்கான உதவித் தொகையையும் ஊராட்சி செலுத்தி வருகிறது. நிருவாக அதிகாரி களின் பதவித் தரங்களைப் பிரித்தல், நியமன முறைகள், பணிக் கட்டுப்பாடுகள், சம்பளம், படிகள், ஒழுங்கு, நடத்தை ஆகிய வற்றை ஒழுங்குபடுத்த அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு.

நிருவாக அதிகாரி ஊராட்சி மன்றம், அதன் குழுக்கள் ஆகியவற்றின் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்; விவாதங்களில் பங்கு கொள்கிறார். ஆனால் தீர்மானம் கொண்டுவருவதற்கும், வாக்களிப்பதற்கும் அவருக்கு உரிமை இல்லை. மேலும் அவரைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி தலைவர் கேட்டுக் கொண் டால் கலந்து கொள்கிறார். நிருவாக அதிகாரியின் கடமை கள், நிருவாக அதிகாரி செய்ய இயலாத போது ஊராட்சித் தலைவரே இப்பணிகளை மேற்கொள்கிறார். நிருவாக அதிகாரி ஊராட்சியின் தீர்மானங்களைச் செயல்படுத்தி வருகிறார். தீர்மானம் சட்டப்படியாகத் தீர்மானிக்கப்படாமல் இருக்கின்ற தென எண்ணினால், சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்திற்கு மேலாக இருக்கிறதென்றோ, மக்களின் பொதுநலனிற்கோ, பொது மக்கள் பாதுகாப்பிற்கோ ஆபத்து விளைவிக்கும் என்று ஊராட்சித் தலைவர் கருதினால் நிருவாக அதிகாரி தீர்மானங்களை அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கிறார். அரசாங்கம் செய்யும் முடிவே இறுதியானதாகும். ஊராட்சியின் எல்லா அலுவலர்களும், பணியாளர்களும் நிருவாக அதிகாரியின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி யவராவர். நிருவாக அதிகாரி சட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள அனைத்துச் செயல்களையும் செய்து வரக்கூடியவராவார்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்

ஒவ்வோரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் ஓர் ஆணையாளரை அரசாங்கம் நியமனம் செய்து வருகிறது. இவர் சாதாரணமாக சமுதாய வளர்ச்சிக்கான தேசீய விரிவாக்கப்பணித் திட்டத்தின்படி அந்த ஊராட்சி வர்ளச்சி வட்டாரத்திற்கு நியமிக்கப்படும் வளர்ச்சி அதிகாரியாகவும் இருக்கிறார். ஆணையாளருக்கு வழங்கப்படும் சம்பளம், செலவுத்தொகைகள், அவரது விடுப்புப்படிகள், ஓய்வுச்சம்பளம், வருங்கால வைப்புநிதி மற்றும் யாதொரு பணமும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடமிருந்து வசூல் செய்யக்கூடாது. ஆணையாளர்களைத் தரம் பிரிப்பது, தேர்ந்து எடுத்து நியமிக்கும் முறைகள், பணி விதிகள், சம்பளம், செலவுத் தொகைகள், ஒழுங்குமுறை, நடத்தை போன்றவற்றை ஒழுங்கு படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டு.

ஆணையாளர் ஊராட்சி ஒன்றிய மன்றக்கூட்டங்களிலும், அதன் குழுக்களின் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, விவாதங்களில் பங்குபெற உரிமையுண்டு. ஆனால் எந்தத் தீர்மானத்தையும் கொண்டு வருவதற்கோ, வாக்களிக்கவோ அவருக்கு உரிமை கிடையாது. ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டங்களிலும், குழுக்களின் கூட்டங்களிலும் கலந்து கொள்ளும்படி ஊராட்சி ஒன்றியத் தலைவர் கேட்டுக் கொண்டால், அவர் கலந்து கொள்கிறார். ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டியது அவரது முக்கிய கடமையாகும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதையும், வரி வசூலிப்பதிலும் அதில் உள்ள முன்னேற்றத்தைப் பற்றியும் நேரத்திற்கு நேரம் அறிக்கைகளை, மன்றம் கட்டளையிடும்போது அவர் அனுப்பி வைக்கின்றார் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எல்லா அலுவலர்களும், பணியாளர்களும் ஆணையாளரின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியவர்களாவர். ஊராட்சி ஒன்றிய மன்றம் தனக்குத் தக்கதெனத் தோன்றும் கடமைகளை ஆணையாளரிடம் ஒப்படைக்க அதிகாரம் பெற்றுள்ளது. அவர் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்துக் கடமைகளையும் செய்யக் கூடியவராவார்.

ஆனாலும், சமுதாய வளர்ச்சிக்கான தேசீய வளர்ச்சித் திட்டத்திற்கு அல்லது அரசாங்கத்தால் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குத் தனியாக ஒப்படைக்கப்பட்ட திட்டத்திற்கு, மன்றத்தால் இடப்படும் கட்டளைகள் எவையேனும் தொடர்பானவையாக இருந்தால், அக்கட்டளைகள் ஒப்படைப்புக்குக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் பொருந்தும்படியாக இருக்கவேண்டும். ஆணையாளர் தமது அதிகாரங்களை எழுத்துமூலமான தம் உத்தரவால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எந்த அதிகாரியிடமாவது, பணியாளரிடமாவது, அரசாங்கத்தின் எந்தப் பணியாளரிடமாவது ஒப்படைக்கலாம். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட எந்தக் கடமையாற்றலும், ஆணையாளரால் வகுக்கப்படும் வரையறைகள், வரம்புகள், கட்டுப்பாடுகளுக்கு உட்படுவதுடன் அவருடைய கட்டுப்பாட்டிற்கும் மாற்றுதலுக்கும் உட்பட்டதாகும்.

ஒரு வேலையை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனுமதி பெறவேண்டியிருப்பினும், அவசரச் சந்தர்ப்பங்களில் அந்த வேலையை உடனே நிறைவேற்றுவது பொதுமக்கள் நலனிற்கும், பாதுகாப்பிற்கும் அவசியமென்று தொடர்புடைய நிருவாக அதிகாரி மற்றும் ஆணையாளர் கருதினால், அப்படிப்பட்ட பணிகளை நிறைவேற்றும்படி கட்டளையிடுகின்றனர். மேலும் அப்பணிகளைச் செய்வதற்கு ஏற்படும் செலவை தொடர்புடைய ஊராட்சி நிதியிலிருந்தோ, ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தோ கொடுக்கும்படியாகக் கட்டளையிடுகின்றனர். ஆனால் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் குறிப்பிட்ட பணியைச் செய்யக் கூடாது என்றால் அப்பணியை ஆணையாளர் செய்யக் கூடாது. பணிகளை நிறைவேற்றிய பின்னர், பணியைச் செய்ததற்குரிய காரணங்களை விளக்கித் தொடர்புடைய ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அனுமதி பெறவேண்டும்.

வட்டார வளர்ச்சி அதிகாரி

இவர் ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்கள் (Panchayat Development Head Clerks) களின் பதவி உயர்வின் மூலமும், கீழ்க் கண்ட பணிகளிலிருந்து பணிமாற்றம் செய்யப்படுவதன் மூலமாகவும்

நியமிக்கப்படுகிறார். சென்னை வருவாய்ப் பணியிலுள்ள வட்டாட்சித் தலைவர்கள், வேளாண்மைப்பணியின் உயர் சார்நிலைப் பணியாளர்கள்(Upper Subordinates), கூட்டுறவு துணைப் பதிவாளர்கள் (Co-operative Sub-Resistrars), செயலகப்பணி மேற்பார்வையாளர்கள் (Superintendents) போன்றவர்கள் தங்களது பதவிமாற்றுத்தால் வட்டார வளர்ச்சி அதிகாரியாகப் பணியாற்றலாம். ஆகவே பதவி உயர்வு, பணிமாற்றம் ஆகியவற்றின் மூலம் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களை இணை வளர்ச்சி ஆணையாளர் (Joint Development Commissioner) நியமனம் செய்கிறார். பணிமாற்றத்தால் வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக வருபவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாது ஒப்பந்த (tenure) முறையில் பணியாற்றி வருகிறார்கள். வட்டார வளர்ச்சி அதிகாரிகளை மாவட்டத்திற்குள்ளாக எந்த இடத்திலும் பணியமர்த்தபணி மாற்றம் செய்ய அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகாரம் பெற்றுள்ளனர். மாவட்டத்தை அடுத்து பிற மாவட்டங்களுக்கு மாற்றம் செய்ய இணை வளர்ச்சி ஆணையாளர் அதிகாரம் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு ஊராட்சிகளின் 1958-ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைமை எழுத்தர்கள் கீழ்க்கண்ட மூன்று வகைப் பணியாளர்களுள் ஒருவகையில் இடம் பெறுவர். அவை,

1. முந்தைய மாவட்ட வாரியங்களின் பணியாளர்கள்.

2. ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் எழுத்தர்களாக இருந்து பதவி உயர்வு பெற்றவர்கள்.

3. மற்ற அலுவலகங்களிலிருந்து வந்தவர்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள் மூன்று தடவைகளாக அமைக்கப்பட்டன. 1960-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆந் தேதி, 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆந் தேதி மற்றும் அக்டோபர் 1-ஆந் தேதி ஆகிய மூன்று தேதிகளில், ஒவ்வொரு தடவையாக அமையப்பெற்றன. இவ்வாறு ஒவ்வொரு தேதியிலும் அமையப் பெற்ற ஊராட்சி ஒன்றியங்களின்

தலைமை எழுத்தர்கள், அன்றைய தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியாளரமைப்பு உறுப்பினர்களாக மாற்றப் பட்டனர்.

ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்கள் ஊராட்சி விரிவாக்கப் பணியாளர்களின் பதவி உயர்வினாலும் கீழ்க்கண்ட பணியாளர்களின் பதவிமாற்றங்களினாலும் நியமிக்கப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றிய மேலாளர்கள், வருவாய்க் கோட்டம், ஊராட்சி வளர்ச்சி அலுவலகக் கணக்கர்கள், கல்வித்துறை விரிவாக்க அதிகாரிகள் ஆகியோர்களின் பதவி மாற்றங்களாலும் நிரப்பப் படுகின்றனர்.

ஊராட்சி விரிவாக்க அதிகாரிகள்

இவர்கள் நேரடியாகவும் சில பணிகளின் பணியாளர்களது பதவிமாற்றங்களாலும் நியமிக்கப்படுகின்றனர். கிராம சேவகர் முதல்நிலை, நகர ஊராட்சிகளின் நிருவாக அதிகாரிகள், இணை வளர்ச்சி ஆணையாளர் அலுவலக உதவியாளர்கள் போன்றோர் பதவிமாற்றங்களால் ஊராட்சி விரிவாக்க அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர். நேரடியாக நியமனம் செய்யப்படுபவர்கள் 25 வயது நிறைந்தவர்களாகவும், பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவும் இருக்க வேண்டும்.

கிராம சேவகர் முதல்நிலை

இப்பதவிகள் இரண்டாம் நிலை கிராம சேவகர்களின் பதவி உயர்வால் நிரப்பப்படுகின்றன. இவர்கள் பள்ளியிறுதிப் படிப்பு முடித்திருக்கவேண்டும்.

கிராம சேவகர் இரண்டாம் நிலை

இவர்கள் நேரடி நியமனம் பெறுகிறார்கள். இவர்கள் பள்ளியிறுதிப்படிப்பு முடித்திருக்க வேண்டும்.

பதவி மாற்றங்கள் ஒரு வட்டாரத்திலிருந்து அடுத்த வட்டாரத்திற்கு வட்டார வளர்ச்சி அதிகாரியும், ஒரு கோட்டத்திலிருந்து அடுத்த கோட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரும், ஒரு மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டத்திற்கு வட்டார வளர்ச்சி இயக்குநரும் பொறுப்புக் கொண்டுள்ளனர்.

நகராட்சிப் பணியாளர் குழாம்

நகராட்சி ஏராளமான வகைப் பணிகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. உடல் உழைப்புத் தொழிலாளர்கள் முதல், தொழில் நுணுக்க வல்லுநர்களான மருத்துவ அதிகாரிகள், பொறியியலர்கள் மற்றும் பிறரைக் கொண்டுள்ளது. நகராட்சி மன்றங்கள், தொழில்நுட்பப் பதவிகள் மற்றும் தொழில்நுட்பமற்ற பதவிகள் போன்றவற்றை உருவாக்க நகராட்சி ஆய்வாளரிடமும், அரசாங்கத்திடமும் அனுமதியைப் பெறவேண்டுமென ஒழுங்கு விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பொதுச் சுகாதாரப் பணியாளர்களைப் பொறுத்தவரையிலும், சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலத்திட்ட கூடுதல் இயக்குநரின் அனுமதியுடன் பதவிகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் பதவிகளை உருவாக்க, குறிப்பிட்ட அடிப்படை நியதிகள் வரையறுக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால், நகராட்சிகள் நேரத்திற்கேற்பப் பதவிகளை உருவாக்கிக் கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் சில நகராட்சிகளில் பணியாளர்கள் தேவைக்கு மேல் மிகுதியாகவும், சில நகராட்சிகளில் குறைந்த எண்ணிக்கையுடன் பற்றாக் குறையாகவும் செயல்பட்டு வருகின்றனர். சில அடிப்படை நியதிகள் பொதுவாக வரையறுக்கப்பட்டு இருந்தாலுமே, அவை பல்லாண்டுகளுக்கு முன்பாக வரையறுக்கப்பட்டனவாகும். அவைஇன்று பொருத்தமாகவும், செயல்படக் கூடிய வகையில் இல்லாமலும் உள்ளன. எனவே காலத்திற்கேற்ற மாற்றங்களுக்கு ஏற்றவகையில், நாராட்சிகள் பொருத்தமாகவும், திறமையாகவும் செயல்படும் வகையில் அடிப்படை நியதிகள் வரையறுக்கப்பட வேண்டும். தற்போது நகராட்சிகளின் மொத்த செலவுத் தொகையில் 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடு வரையிலும் அதன் பணியாளர்களின் சம்பளத் தொகையாக உள்ளது.

மக்கள் மத்தியிலும், நகராட்சி மன்றத்திலும் ஓர் அதிருப்தி நிலவுகின்றது. மக்களின் வரிப்பணங்களில் பெரும்பான்மை பணியாளர்களின் சம்பளத் தொகைக்கே செல்வது என்பதுதான் அந்த

அதிருப்தியாகும். ஆகவே பணியாளர்கள் மிகவும் அதிகரிக்காத அளவில், புதிய பதவிகள் முன் அனுமதியுடன், சீரிய பரிசீலனைக்குப் பிறகு தான் அனுமதிக்கப்படவேண்டும்.

நகராட்சியில் செய்கின்ற வேலைகளை அரசுத் துறையிலுள்ள அலுவலகத்தில் நடைபெறுகின்ற வேலைகளோடு ஒப்பிடு செய்யமுடியாது. ஓர் எழுத்தர், கணக்குகள் மற்றும் கடிதத்தொடர்பு போன்ற வேலைகளைச் செய்ய வேண்டியது இருக்கின்றது. அடிப்படை நியதிகள் நகராட்சிக்குப் பொருந்தும்படியாக அமைக்கப்படுகின்றன. வேலைகளின் தன்மை, வேலைகளின் அளவு போன்றவற்றைக் கணக்கிட்டு இவை முடிவு செய்யப்படுகின்றன.

இன்று ஏராளமான தேவையில்லாத செயல்முறைகள், காலத்திற்கு ஒவ்வாத வகையில் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதனால் எழுத்துவேலை மிகுதியாக உள்ளது. எனவே வேலையை எளிதாகச் செய்யவும், சிறப்பாகவும், சிக்கனமாகவும் செய்யவும் செயல்முறைகளை எளிதாக்க வேண்டும். வருவாய்ப்பிரிவு, கணக்கு, பொறியியல் போன்ற பிரிவுகளில் ஏராளமான மாற்றங்கள் செய்யப்படவேண்டும். வருவாயில் ஒவ்வொரு பிரிவு வருவாய் இனத்தையும் பல்வேறு பதிவுகளில் பதிவு செய்யவேண்டி உள்ளது. பதிவு செய்யப்பட்டதும், பராமரிக்கப்பட பல்வேறு பதிவுகளில் மறுபடியும் பதிவு செய்யப்படுகின்றது. இதனால் ஏராளமான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இச் செயல்முறைகளை எளிதாக்கினால், பணியாளர்களையும் குறைக்க வழியுண்டு. இது குறித்து ஆராய, ஒரு வல்லுநர்குழு அமைக்க வேண்டுமென்பது அனைவரின் விருப்பமாகும்.

ஆணையாளர் பதவி உருவாக்கப்படுதல்

சென்னை மாகாணத்தில், 1933-ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்திற்கு உண்டான நோக்கங்கள் மற்றும் காரணங்களாவன: நகராட்சித் தலைவர், நகராட்சி மன்றத்தின் முன்னர் வைக்கப்படுகின்ற ஆவணங்களைப் படித்து, முடிவு எடுக்க மிகுதியான நேரம் தேவைப்படுகின்றது. இவர் நகராட்சியில் தீர்மானம் கொண்டுவர பிரச்சனைகளை அறியவும், பிரச்சனை குறித்துப் பிற

உறுப்பினர்களோடு கலந்து பேசி, விவாதித்து முடிவிற்கு வந்து தீர்மானம் நிறைவேற்றவும் அதிகமான நேரம் ஆகிறது. இச் சூழ்நிலையில் நகராட்சித் தலைவரால் தமக்குள்ள பல்வேறு அலுவல்களின் காரணமாகத் தமது முழு நேரத்தையும் நகராட்சிக்குச் செலவழிக்க முடியவில்லை. நகராட்சிகளில் வரி ஒழுங்காக வசூலிக்கப்படாமல் ஒவ்வோர் ஆண்டும் ஏராளமான பாக்கித் தொகை உள்ளது. வரி வீதங்களை மாற்றுவதற்கு உண்டான கோரிக்கை விண்ணப்பங்கள் ஏராளமாகக் குவிந்து, அவற்றின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தேங்கியுள்ளன. நிருவாகச் செலவுகள் வீணாக செலவிடப்பட்டுள்ளதாக, தணிக்கை ஏராளமான குற்றச்சாட்டுக்களைப் பணியாளர்கள் மீது சுமத்தியுள்ளது. எனவே இந்தக் குறைகளைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கை அவசியம். ஆணையாளர் தவிர மாநகராட்சி உறுப்பினர்களை மக்களே தேர்வு செய்ய வேண்டும். நகராட்சித் தலைவர், தாம் தலைவராக வருவதற்கு உறுப்பினர்களையே சார்ந்திருக்க வேண்டும். வரிமதிப்பீடு, வரி வசூல், உரிமம் வழங்கல் ஆகியவற்றில் ஒரு சார்பாகவும் செயல்பட்டு, பல தவறுகளுக்கு இலக்காகியுள்ளார். இத்தவறுகள் விளைவது செயலாக்க அதிகாரம் நகராட்சித் தலைவரிடம் இருக்கின்ற காரணத்தினால்தான் ஆகும்.

எனவே செயலாக்க அதிகாரத்தை வெளியிலுள்ள அதிகாரியிடம் கொடுப்பது விரும்பத்தக்கது என்று அரசாங்கம் முடிவு செய்தது. இவ்வாறு செய்தால், நகராட்சி மன்றங்களைக் கலைப்பது, தள்ளுபடி செய்வது போன்ற செயல்கள் தவிர்க்கப்படும். ஏனெனில் நகராட்சி மன்றங்கள் சரியாக நிருவாகம் செய்யாததாலும் தவறுதலாக நிருவகிக்கப்பட்டதாலும், திறமைக் குறைவாக இயங்கியதாலும் புறக்கணிக்கப்பட்டன. இவற்றிற்கு மூலகாரணம் நகராட்சித் தலைவர் ஆவார். இதனால் 1933-ஆம் ஆண்டுச் சட்டம் திருத்தப்பட்டது.

நகராட்சித் தலைவர் செயலாக்க அதிகாரியாக இருப்பதால் சில நன்மைகள் உண்டென்றும் விளக்கப்பட்டன. நகராட்சித் தலைவர் செயலாக்க அதிகாரியாக இல்லாவிட்டால், மக்களது குறைகளை நேரடியாகக் கவனிக்க முடியாது. நகராட்சித் தலை

வரும் மற்ற உறுப்பினர்களும் நேரடியாக நிருவாகத்தில் பங்கு பெறுகின்ற காரணத்தினால் தான், நிருவாக விஷயங்களில் அக்கறை எடுக்கின்றனர்; ஊதியமில்லாமல் கௌரவமாகச் செயல்படுவதில் பெருமை கொள்கின்றனர். அப்படியிருக்க அந்த அதிகாரத்தையும் பறித்துக் கொள்வதால், உறுப்பினர்களிடையே எந்தவித ஆர்வமும் இருக்காது. மக்களது குறைகளைக் கேட்டுப் பின்னர், அவற்றை அதிகாரிகளிடம் கூறி, குறைகளைக் களைய வேண்டும். அதிகாரிகள் இச்செயல்களைச் செய்யத் தவறினால், குற்றச் சாட்டுக்கள் முழுவதும் மக்கள் பிரதிநிதிகளிடமே வந்து சேரும். மக்களாட்சியில் மக்கள் பிரதிநிதியிடம் அதிகாரமில்லாமல், அதிகார வர்க்கத்தை நம்புவதில் பயனில்லை என்பதும் விளக்கப்பட்டது.

மேலும் நகராட்சி அனுபவமே இல்லாத அதிகாரிகளை நகராட்சி ஆணையாளர்களாக நியமிக்கின்றனர் என்பது மற்றொரு குற்றச்சாட்டு. ஏனென்றால் இவர்கள் வெளியிலிருந்து வரக்கூடியவர்கள்; நகரத்தில் எழுகின்ற பிரச்சனைகளைப்பற்றியும் நகராட்சி நிருவாக அனுபவம் இல்லாதவர்களாவர் இவர்கள். மக்களின் பிரச்சனைகளையும், நகரப் பிரச்சனைகளையும் நன்கு தெரிந்தவர் நகராட்சித் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் ஆவர். எனவே இவர்கள் பிரச்சனைக்கேற்ப தீர்வு காணும் பக்குவம் பெற்றவர்களாவர். மேலும் ஆணையாளர்கள் தொடர்ந்து ஒரே நகராட்சியில் இருக்கக் கூடியவர்கள் அல்ல. அவர்கள் மாறுதலாகிக் கொண்டே இருப்பார்கள். எனவே இவர்கள் பிரச்சனைகளில் அதிக ஆர்வமெடுத்து முடிவெடுக்க எண்ணமாட்டார்கள். நல்ல திட்டங்களை நகராட்சித் தலைவரும், உறுப்பினர்களும் கொண்டுவந்தால், நடைமுறைப்படுத்த இயலாத திட்டம் என்றும், நிதி வசதி போதுமானதாக இல்லையென்றும் காரணங்கள் கூறி ஆணையாளர்கள் தள்ளுபடி செய்ய முயலலாம். இதனால் நகராட்சித் தலைவருக்கும் பிற உறுப்பினர்களுக்கும் ஆர்வம் குன்றத் தொடங்கிவிடும். ஆணையாளர்கள் கோட்பாட்டளவில் நகராட்சியின் பணியாளர்களாக விளங்குகின்றனர். அவர்கள் நகராட்சிக்கு வந்ததும், அங்ஙனம் நினைப்பதில்லை. ஏனெனில் அரசாங்கம் தான் அவர்களை நியமனம் செய்கிறது. பதவி உயர்வுகள் அளிக்கிறது. நகராட்சிகள் எந்த விதத்திலும் பங்கு பெறுவது கிடையாது.

எனவே இயற்கையாகவே பணியாளர் என்ற தன்மை மாறி விடுவதுண்டு. மொத்தத்தில் நகராட்சியின் பார்வையில், ஆணையாளர்களை அரசாங்கம் நியமிப்பது மக்களாட்சிக்குப் புறம்பானதென்றும், நகராட்சித்தலைவர் வெறுமனே கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் நபராக, அதிகாரமில்லாதவர்களாகச் செய்யப்பட்டால், மக்களது குறைகள் எளிதில் தீராது என்று எதிர்த்தபோதிலும் 1933-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேறியது.

ஆணையாளர்களைச் செயலாக்க அதிகாரிகளாக நியமித்த பின்னர் நகராட்சிகளின் அன்றாடச் செயல்முறைகள் முன்னைக் காட்டிலும் மிக நன்றாகச் செயல்பட்டன. ஆணையாளர் நிருவாகத்தின் கண்காணிப்பாளராக இருந்ததால் வரிவசூல் ஒழுங்காகச் செய்யப்பட்டது. பிற வருமானங்கள் அதிகரித்தன. வரி மாற்றங்கள் குறித்த கோரிக்கை விண்ணப்பங்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வீண் செலவுகள், அதிகாரமற்ற செலவுகள் அனைத்தும் குறைந்தன. தணிக்கை எதிர்ப்புகள் குறைந்தன. பணியாளர்கள் மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டு, கண்காணிப்பு செம்மையாக்கப்பட்டது. எனவே புதிய முறைக்கு எதிர்ப்புக்கள் இருந்த போதிலும், சிறப்பான முறையென்று ஏற்றுக்கொள்ளப் பட்டது.

ஆணையாளர்களைச் செயலாக்கத் தலைமை அதிகாரியாக நியமித்ததால் நகராட்சி நிருவாகம் செம்மைப்பட்டதென முழுமையாகக் கூற முடியாது. ஏனெனில் பணிகள் அனைத்தும் மாநிலப் பணிகளாக மாற்றப்பட்டன. முதன்முதலாக சுகாதாரப் பணிகள் மாநிலப் பணியாக்கப்பட்டன. பின்னர் பொறியியல் பணியை மாநிலப் பணியாக்கியது. நகராண்மைப் பொறியியலார்கள் மற்றும் நகராட்சி மின்பொறியாளர்கள் போன்றோர் இதில் அடங்கக் கூடியவர்களாவர். இப்பணிக்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி, தேர்வு முறை, தன்டனை மற்றும் பிற பணிக் கட்டுப்பாடுகள் போன்றவை ஒழுங்கு முறைகளினால் நிருணயம் செய்யப்பட்டன. நகராட்சிப் பணியாளர்களுக்கு இந்த மாதிரியான கட்டுப்பாடுகள் விதித்த காரணத்தால், பொது நிருவாகம் சீரடைந்தது. இவ்வாறு மாநில அளவில் பணிகள் அமையப் பெறுகின்ற முறை தொடர வேண்டுமென ஆதரவும் வழங்கப்பட்டது. இருப்பினும் மாநில அரசாங்கம்

நகராட்சி மன்றத்தின் அதிகாரத்தைப் பறிப்பது மக்களாட்சிக்கு விரோதமான ஒன்று என்பதில் சந்தேகமே இல்லை. ஏனெனில் இங்கிலாந்து போன்ற நாடுகளில், நகராட்சி மன்றம்தான் பொறியியலர்களை நியமிக்கும் அதிகாரம் கொண்டுள்ளது. நகராட்சி மன்றம் விளம்பரம் செய்து, பணிக்கு ஆள்சேர்க்கிறது. ஆனால் இந்தியாவில் அந்தமாதிரியாகச் செய்யவாய்ப்புகுறைவு. ஏனெனில் மாநில அரசாங்கத்தில் கூட சில பதவிகள் திறமையான பணியாளர்கள் கிடைக்கவில்லை என்ற வகையில் காலியாக உள்ளன என்கின்ற பொழுது, உள்ளாட்சிகள் எங்ஙனம் திறமையான பணியாளர்களை நியமிக்க முடியும்? மேலும் மாநிலங்களின் மூலமாக இப் பணிகளைக் கண்காணிப்புச் செய்தால், பணிகளும் வளர்ச்சியடையும், நகராட்சிகளும் பயனடையும். எனவே இப்படிப்பட்ட தொழில்நுணுக்கப் பணிகளைக் கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் சாதாரண மக்களிடம் அதாவது தேர்ந்தெடுக்கப்படுகின்ற நகராட்சித் தலைவரிடம் விடப்படாமல்,ஆணையாளரிடம் அமையும்படி செய்தல் வேண்டும். எனவே ஆணையாளரின் பணி அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒத்துழைப்பாகச் செயல்பட வைக்க வேண்டும்.

நகராட்சி ஆணையாளர்

ஒவ்வொரு நகராட்சியிலும் ஓர் ஆணையாளர் இருக்கின்றார். அரசாங்கம் இவர்களை நியமிக்கின்றது. இவர்கள் முழுநேரப் பணியாளர்களாகப் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் பிற செலவுத் தொகைகளை நகராட்சிகளிடமிருந்து முழுவதுமோ பகுதியையோ அரசாங்கம் பெற்றுக் கொள்கின்றது. நகராட்சி மன்றத்தின் தீர்மானங்களுக்குச் செயலாக்கம் கொடுக்க வேண்டியது ஆணையாளரின் முக்கிய கடமையாகும். நகராட்சி மன்றத் தீர்மானம், சட்டத்திற்குப் புறம்பாகவோ, விதிகள், குறிப்பீடு, துணைச்சட்டங்கள் மற்றும் பிற அரசாங்க விதிகளுக்குப் புறம்பாக இருக்கிறதென ஆணையாளர் எண்ணினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஏழு தினங்களுக்குள் அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டுவரவேண்டும். தீர்மானங்கள் செயலாக்கப்படுவது குறித்த முன்னேற்றங்களையும், வரி வசூல் செய்வது வரவினங்கள் பற்றியும் நேரத்திற்கு நேரம் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

அரசாங்கம், நகராட்சி மன்றம் ஆகியன வேண்டுகின்றபொழுதும் அறிக்கைகள் தயாரித்துக் கொடுக்கவும் வேண்டும்.

நகராட்சியின் அவசர வேலைகளைச் செய்ய, தடுத்துநிறுத்த ஆணையாளர் அதிகாரம் பெற்று உள்ளார். இவ்வேலைகளுக்கு நகராட்சி நிதியிலிருந்தே ஊதியம் வழங்கவும் வசதி செய்யப்பட்டு உள்ளது. ஆனால் அவசர வேலைகள், நகராட்சி மன்றம் தள்ளுபடி செய்த வேலைகளைச் செய்யக் கூடாது. நிருவாகத்திற்கு ஏற்படும் சிறிய செலவுகளை அனுமதிக்கவும் ஆணையாளர் அதிகாரம் பெற்று உள்ளார்.

ஆணையாளர் நகராட்சி மன்றத்தின் கூட்டங்களிலும், குழுக் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார்; விவாதங்களிலும் பங்கு பெறலாம்; ஆனால் தீர்மானம் கொண்டு வரவும், வாக்களிக்கவும் உரிமை பெற்றவரல்ல. நகராட்சித்தலைவரின் வேண்டுக்கோளுக் கிணங்க, அவர் கூறுகின்ற நகராட்சி மன்ற, குழுக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார். நகராட்சியின் பணியாளர்கள் அனைத்தும் அவருக்குக் கீழ் பணிபுரியக்கூடியவர்களாவர். அவர் தமது கடமைகளை எழுத்து மூல உத்தரவின் மூலமாக நகராட்சியின் ஒரு பணியாளரிடமோ அல்லது அரசாங்கப் பணியாளரிடமோ ஒப்படைப்புச் செய்யலாம்.

நகராட்சி ஆணையாளர் நியமிக்கப்படும் முறை:

நகராட்சி ஆணையாளரின் பதவி நேரடி நியமனத்தின் மூலமும், பதவி மாற்ற நியமனங்களின் மூலமாகவும் நிரப்பப்படுகின்றன. நேரடி நியமனத்தில் இரண்டு வகையான நியமன வகைகள் உள்ளன. ஒன்று திறந்த வெளித் தேர்வு, மற்றொன்று நகராட்சி அலுவலகங்களில் மூன்று வருடங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்தோர் நியமனம் பெறுவது. நகராட்சி அலுவலக மேலாளர்கள், முதல்நிலை வகுப்பு கணக்கர் மற்றும் வருவாய் அதிகாரிகள், நகரிய மேலாளர்கள் ஆகியோர்கள் மூன்று ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர், நகராட்சி ஆணையாளர்களாக

நியமிக்கத் தகுதிபெற்றவர்கள். திறந்தவெளி நியமனத்தில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களும், 30 க்கு மிகாத வயதுடையவர்களும் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி பெற்ற வர்கள். மேலும் நகராட்சி அலுவலர்களும் ஆணையாளர்களும் நியமிக்கப்படுவதற்குப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருப்ப தோடு, 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். இந்த இருமுறையைத் தவிர்த்து பதவி மாற்ற நியமனங்களும் உண்டு. இதில் ஊராட்சிகளின் விரிவாக்க அதிகாரிகள் செயலகப் பணியில், அதாவது கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையில் உதவியாளர்களாக இரண்டு வருடங்கள் பணியாற்றி யவர்கள், நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகத்தில் கண் காணிப்பாளர்களாகப் பணியாற்றியவர்கள் போன்றோர் ஆணை யாளர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதி பெற்றவர்களாவர். மேலும் பதவிமாற்ற நியமனத்தவர்கள், கணக்குத் தேர்வின் முதல் பாகத்திலோ அல்லது ஊராட்சி வளர்ச்சி கணக்குத் தேர்விலோ வெற்றி பெற்றவர்களாக இருக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணையாளரின் பதவியானது காலியிடங்களைப் பொறுத்து 20க்கு ஒன்றாக நிரப்பப்பட்டு வருகிறது. இந்த வரிசையின் படியாகத்தான் நியமனம் நடைபெற்று வருகிறது. அந்த வரிசை யைக் காண்போம்.

1. நகராட்சி மேலாளர்கள், நகரிய மேலாளர்கள், கணக்கு, வருவாய் அதிகாரிகள் (முதல்நிலை நகராட்சி)
2. திறந்தவெளித் தேர்வில் பட்டதாரிகள்
3. விரிவாக்க அதிகாரி (ஊராட்சி)
4. செயலகப் பணி உதவியாளர்
5. நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகக் கண்காணிப்பாளர்
6. நகராட்சி, நகர்ப்பிரிவு மேலாளர்கள், கணக்கு வருவாய் அதிகாரிகள் (முதல்நிலை)

7. திறந்த வெளி — பட்டதாரிகள்
8. விரிவாக்க அதிகாரி (ஊராட்சி)
9. செயலகப் பணி உதவியாளர்
10. நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகக் கண் காணிப்பாளர்கள்
11. நகராட்சி, நகரிய மேலாளர், மற்றும் பிறர்
12. பட்டதாரி
13. விரிவாக்க அதிகாரி
14. செயலகப் பணி உதவியாளர்
15. மேலாளர்
16. பட்டதாரி
17. விரிவாக்க அதிகாரி
18. செயலகப்பணி உதவியாளர்
19. திறந்தவெளி பட்டதாரி
20. விரிவாக்க அதிகாரி

இந்த வரிசைப் படிதான் நியமனம் செய்யப்பட்டு வருகின்றன.

நகராட்சி ஆணையாளர்களைத் தவிர்த்து, சுகாதார அதிகாரி, பொறியியலர்கள் முறையே நகராண்மை மற்றும் மீன் சாரம் ஆகிய பதவிகள் அரசாங்கத்தில் நியமனம் செய்யப்படுகிறது. இவர்களின் ஊதியம் மற்றும் பிற செலவுகளில் முழுத் தொகையையோ ஒரு பகுதியையோ மாநில அரசாங்கம் பெற்று வருகின்றது. நகராட்சி ஆணையாளர்களின் முழு ஊதியத்தொகையையும், விடுப்பு ஊதியம், ஓய்வு ஊதியம் ஆகிய அனைத்துத் தொகையையும் நகராட்சியிடமிருந்து அரசாங்கம் பெறுகிறது. நகராட்சி பொறியியலருக்கு வழங்கப்பட்ட ஊதியத்தொகையில் 50 விழுக்காட்டையும், விடுப்பு ஊதியம் மற்றும் ஓய்வு ஊதியத் தொகைகளையும் பெறுகிறது. சுகாதார அதிகாரியைப் பொறுத்த அளவில், விடுப்பு ஊதியத்தையும், ஓய்வு ஊதியத்தை மட்டும்தான் பெற்று வருகிறது.

நகராட்சிக்கெனக் கீழ்கண்ட ஆறுபணிகளை அரசு அமைத்துள்ளது:

1. தமிழ்நாடு நகராட்சிப் பொதுப்பணி
2. தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் மற்றும் குடிநீர்ப் பணி
3. தமிழ்நாடு நகராட்சி நகர்த்திட்டமிடல் பணி
4. தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி
5. தமிழ்நாடு நகராட்சிக் கல்விப்பணி
6. தமிழ்நாடு நகராட்சிப் பொதுச் சுகாதாரப் பணி

நகராட்சிகளின் ஆய்வாளர், நகராட்சித் தலைவர்களின் பிரதிநிதி மற்றும் பணித் துறைத்தலைவர்கள் அடங்கிய மாநில மட்டக் குழு, ஐந்து பணிகளுக்கு உள்ள உயர் அதிகாரிகளை நியமனம் செய்கின்றது. பிற பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க அந்தந்த நகராட்சி மன்றங்கள் நியமிக்கும் நியமனக் குழுக்கள் தேர்வு செய்கின்றன. நகராட்சி ஆய்வாளர் தேர்வுக் குழுவால் நியமனம் செய்யப்படுகிறார். மற்ற நியமனங்களை, ஆணையாளர்கள் செய்ய அதிகாரம் கொண்டுள்ளனர். தமிழ்நாடு நகராண்மை பொதுச் சுகாதாரப் பணியைப் பொறுத்தவரை, கூடுதல் சுகாதாரப் பணிகளின் இயக்குநரும், நகராண்மை சுகாதார அதிகாரிகளும் நியமனம் செய்யும் அதிகாரம் கொண்டவர்களாக உள்ளனர்.

செயலாக்கத் தலைமை அதிகாரியாக யாரை நியமிக்கலாம் என்பது ஒரு கேள்வி. நகராட்சித்தலைவரை செயலாக்கத் தலைமை அதிகாரியாக நியமித்தால், மக்களாட்சியின் உண்மையான நோக்கம் நிறைவேறியது போல் இருக்கும். அதிகாரிகளும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றவகையில் செயல்படுவர் என்பதுவும் உண்மைதான். ஆனாலும் செயலாக்கத் தலைமையாளருக்கு உதவி செய்யக் கூடிய பணியாளர்கள் நகராட்சி மன்றத்தின் வெளிக் கட்டுப்பாட்டுக் கண்காணிப்பால்தான் திறமையாகச் செயல்பட முடியும். பணியாளர்களின் நியமனம், பதவிக்காலம், பதவி உயர்வுகள், மாற்றங்கள் போன்றவற்றில் நகராட்சித்தலைவர் தொடர்பில்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் நகராட்சித் தலைவர் நடைமுறையில் செயலாக்கத் தலைமையாளராக இருப்பதும் கடினமாகும்.

நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை, பதவித்தரங்கள், படிநிலை வரிசைகள் போன்றவற்றை அமைப்பது, அதற்குரிய ஊதியங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுத் தொகைகள் ஆகியவற்றிற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் நகராட்சி மன்றத்திடம் உள்ளது. இச்செயலை ஆணையாளர் செய்கிறார். ஆணையாளர் தயாரித்ததை நகராட்சி மன்றம் ஏற்றுக் கொள்கிறது.

மின்சார உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றை நகராட்சி மன்றம் மேற்கொண்டால், அரசாங்க அனுமதியுடன் மின்சாரப் பொறியியலர் பதவியை நகராட்சி மன்றம் உருவாக்கும். பின்னர் தனித்தீர்மானம் மூலம் உதவி மின்சார பொறியியலர் பதவிகளையும் உருவாக்கலாம்.

ஆணையாளர், ஆணையாளரின் தனி உதவியாளர், சுகாதார அதிகாரி, பொறியியலர், மின்சாரப் பொறியியலர், உதவிப் பொறியியலர்கள் ஆகிய பதவி நியமனங்களைத் தவிர்த்து, பிற நியமனங்களை எல்லாம் நகராட்சி மன்றம் நியமிக்கும் அதிகாரம் கொண்டுள்ளது. உயர்ந்த பட்சம் ரூ.100 வரையிலும் மாதச்சம்பளம் உள்ள பதவிகளை நகராட்சி மன்றம் நியமிக்கின்றது. ஆனால் இப்பதவிகள் தமிழ்நாடு அரசுப்பணி ஆணையத்துடன் கலந்து தான் நிரப்பப்படுகின்றன. நகராட்சிகள் அத்தியாவசிய, அவசர நியமனங்களைச் செய்யவும் வழி செய்யப்பட்டுள்ளது. தற்காலிகமாக மூன்றுமாதங்கள் மட்டுமே இருக்கக்கூடிய பதவிகள் நிரப்பப்படுவதற்கு அரசுப்பணி ஆணையத்துடன் ஆலோசிக்க வேண்டியதில்லை.

ஆணையத்திற்கும் நகராட்சி மன்றத்திற்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால். அவற்றை ஒழுங்கு படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கம் கீழ்க்கண்ட ஒழுங்குமுறைகளை சில குறிப்பிட்ட செயல்களுக்காக நிருணயித்துள்ளது. அவை:

1. ஆணையம் பின்பற்றுகின்ற பணியாளர்குழாம் விதிகளை அரசாங்கம் நிருணயித்துள்ளது. பதவிகளுக்கு விளம்பரம் செய்தல், விண்ணப்பங்களைப் பெறுதல், விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், நேர்முகத் தேர்விற்கு விண்ணப்ப

தாரர்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியன குறித்த செயல் முறைகளை அரசாங்கம் வரையறுத்துள்ளது. இவற்றை ஆணையம் பின்பற்றி வருகின்றது.

2) நியமனங்களுக்கு விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறையை ஆணையத்திற்கும், மன்றமானது ஆணையத்தோடு கலந்து கொள்ளும் செயல்முறை ஆகியவற்றையும் நிருணயித்துள்ளது.

3) அவசியமாகத் தேவைப்படுகின்ற காரியங்களுக்கு, ஆணையத்துடன் கலந்து கொள்ளும் செயல்முறை ஆகியவற்றையும் நிருணயித்துள்ளது.

ஆணையத்திற்கும் மன்றத்திற்கும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அவ்விஷயம் அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அரசாங்கம் செய்யும் முடிவே இறுதியானதாகும்.

நகராட்சி மன்றம் பணியாளர்களுக்குரிய ஒழுங்கு முறைகளை ஏற்படுத்த அதிகாரம் கொண்டுள்ளது. அவற்றில் சில :

1. கல்வி மற்றும் பிற தகுதிகள்
2. விடுப்பு வழங்கல், விடுப்புப் படிகள், பொறுப்புப் படிகள், பிரயாணப் படிகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல்.
3. ஓய்வூதியம் வழங்குதல், பணிக்கொடைகள்
4. வருங்கால வைப்புநிதிகள் நிறுவுவது, நடத்துவது, அதற்கு உதவித் தொகையைக் கட்டாயமாக்குவது
5. நடத்தையை ஒழுங்குபடுத்துதல்
6. பொதுவான பணிக்கட்டுப்பாடுகள் செய்தல்

21

உள்ளாட்சி நிதி

உள்ளாட்சிப் பணிகளைச் செய்வதற்கு நிதி அவசியம். ஆரம்பத்தில் பணிகள் மூலம் உள்ளாட்சி நிதி திரட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. உள்ளாட்சிகளில் சாலைகள் அமைக்க, சாலைவரி விதிக்கப்பட்டு, அதன் மூலமாகச் சாலைகள் அமைக்கும்பணி செயல்பட்டு வந்துள்ளது. இது மாதிரியாகப் பல்வேறு பணிகளுக்கும் தனித்தனியாக வரிகள் விதிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. இம்முறை சிறிது காலத்திற்குள் மாற்றத்திற்குள்ளாகி, மொத்தமாக நிதியினைப் பெற்று, ஒவ்வொரு பணிக்கும் தனித் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டன. இவ்வாறு நிதியை ஒதுக்கீடு செய் கின்றபொழுது, உள்ளாட்சியின் வருவாய் இனங்கள் குறித்தும் பார்க்கப்பட்டன. இவ்வாறு வரவும் செலவும் கணக்கிடப்பட்டு, செயல்கள் செய்யப்பட நேர்ந்த காரணத்தினால்தான், வரவு செலவுத்திட்ட முறை தொடங்கப் பெற்றது.

வரவு செலவுத் திட்டம் இங்கிலாந்தில் ஏற்பட்ட வரலாறு எப்படியிருப்பினும், இங்கு வரவு செலவுத் திட்டம் இந்த மாதிரியாகத்தான் தோன்றலாயிற்று. மொத்தமாக நிதியினைத் திரட்டிப் பாதுகாக்கவும், செலவிற்கேற்ப நிதிகளை வழங்கவும், நிதியை மேல் நிருவாகம் செய்யவும் உள்ளாட்சிகளில் ஒருவர் பொறுப்பாக இருக்க, கட்டாயச் செயலாக்க அதிகாரி ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பிலும் அமையலானார். இவர் அந்த உள்ளாட்சி அமைப்பின் வரவுகளை அறிந்து, பணிகளுக்குத் திட்டமிட்டு, அவைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, செயல்படலானார். இது ஆண்டுதோறும் செய்யப்படவேண்டிய செயலாகப் பின்னர் மாறியது. உள்ளாட்சியின் பொறுப்பு அதிகாரி இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கும் அதிகாரம் பெற்றவராக இருந்தார். இந்த வரவு செலவுத்திட்டம் சில வரையறைகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட

வேண்டுமென மாநில அரசாங்கம் வரையறுத்துள்ளது. அந்த வரையறைக்கேற்ப வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படுகிறது.

வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளாட்சியின் நிதி வரவினங்கள் முதலில் குறிப்பிடப்பட்டு இருக்கும். உள்ளாட்சிகள் தங்களது வருவாயைக் கீழ்க்கண்ட மூன்று விதங்களால் பெருக்கிக்கொண்டு வருகின்றன. அவை வருமாறு :

1. வரிவிதிப்பு மற்றும் வரி திரட்டல்
2. மானிய உதவித் தொகைகள்
3 கடன் பெறுதல்

வரிவிதிப்பு மற்றும் வரி திரட்டல் ஆகிய இனங்கள் உள்ளாட்சிகளுக்கு நிரந்தரமான வருவாய் இனங்களாகும். உள்ளாட்சி மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளதால், எந்தெந்த வரிகள் விதிக்கப்படவேண்டுமென்பதை மாநில அரசாங்கமே முடிவு செய்கின்றது தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகியவற்றின் சட்டங்களில் தெளிவாக வரிவிதிக்கும் அதிகாரங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி அச்சட்டங்களைப் பின்பற்றி நடக்கவேண்டும்; தவறினால் அல்லது மீறினால் தண்டனைக்கு உள்ளாகும். எனவே உள்ளாட்சிகள் வரையறுக்கப்பட்டுள்ள சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இச்சட்டங்களில் நிருணயிக்கப்பட்டுள்ள வரிகள் உள்ளாட்சிகள் செம்மையாக இயங்கும் வண்ணம், பணிகளை நிறைவேற்றப் போதுமான அளவில் பற்றாக்குறை இல்லாதவாறு இருக்க வேண்டும். இதுபற்றிப் பலர் பலவிதக் கருத்துக்கள் கூறியுள்ளனர். உள்ளாட்சிகள் தங்களது பணிகள் செய்யப்படுவதற்குப்போதுமான மூலப்பொருட்கள், நிதி போன்றவை ஒழுங்காக அளிக்கப்படவில்லையேல், உள்ளாட்சிகளிடமிருந்து பயனேதும் எதிர்பார்க்கக்கூடாது.

உள்ளாட்சிகள் வரிவிதிப்பது சிறப்பான ஒரு செயல்தான் ஆகும். இவ்வரிவிதிப்பு அதிகாரம் உள்ளாட்சி அமைப்புக்களிடம் இருக்கும். ஆகவேவரிவிதிப்பு உள்ளாட்சி அமைப்புக்களுக்கிடையே

பல்வேறு வித்தியாசங்கள் அதாவது வரிவீதங்கள் வித்தியாசமாக இருக்கும். வரிவீதங்கள் உள்ளாட்சியின் தன்மையைப் பொறுத்து, உள்ளாட்சியின் தேவையைப் பொறுத்து, உள்ளாட்சி நிருவாகத்தினரைப் பொறுத்து விதிக்கப்படக்கூடியதாகும். ஆகவேதான் பல்வேறு வித்தியாசங்கள் உள்ளன. இதில் மாநில அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட வரியின் வீதத்தின் உயர்ந்த பட்ச அளவிற்கு மேலாகச் செல்லாத வகையில் நிருணயம் செய்யும். ஏனெனில் உள்ளாட்சிகள் தான்தோன்றித்தனமாகச் செயல்படக்கூடாது என்பதற்காக அங்ஙனம் நிருணயம் செய்கின்றது. மேலும் உள்ளாட்சி அமைப்புக்கள் வரி விதித்தால், மக்கள் நேரடிப் பாதிப்பிற்குள்ளாகலாம். ஆகவே இதன் மூலம் பலத்த எதிர்ப்பு ஏற்பட வாய்ப்புக்கள் பல உள்ளன. எனவே உள்ளாட்சிகள் வரி விதிப்பது சிறந்தமுறையென்று சொல்வதற்கில்லை. ஆனாலும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு வரி விதிக்கப்படுகிறதென்றால் மக்கள் அனைவரும் ஆர்வமாக அவ்வரியைச் செலுத்துவதோடு, அந்நோக்கமும் நிறைவேற முழு ஒத்துழைப்பு நல்கத் தவறமாட்டார்கள் என்பதும் உறுதி. மேலும் ஒரு சில குறிப்பிட்ட வரி விதிப்பு உள்ளாட்சிகளின் விருப்பத்திற்கு விடப்பட்டு உள்ளது அவற்றை உள்ளாட்சிகள் பயன்படுத்துவதும் கிடையாது. அவை பற்றி எண்ணுவதும் கிடையாது; ஆனால் அவ் விருப்பவரி செலுத்தும் இனங்களைக் கட்டாயப்படுத்தி மாநில அரசாங்கம் சட்டமியற்றினால், அவை செம்மையாக செயலுக்கு வந்து விடுகின்றன. எனவே உள்ளாட்சி அமைப்புக்கள் வரிவிதிப்பது பற்றிய சில பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படவேண்டும்.

உள்ளாட்சியின் நிதி வருவாயில் மாநில, மத்திய அரசாங்கங்களின் மானியத் தொகைகள் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ளன. இந்த மானியங்கள் உள்ளாட்சிப் பணிகளைச் செய்ய வழங்கப்படுகின்ற உதவித் தொகைகளாகும். ஒரு குறிப்பிட்ட பணியைமட்டும் செய்வதற்காக மானியங்கள் அளிக்கப்படுகின்றன. அங்ஙனம் வழங்கப்படுகின்ற பொழுது, அப்பணியை முற்றிலும் நிறைவேற்ற ஆகும் முழுச்செலவுத் தொகையும் மானியமாக அளிக்கப்படுவதுண்டு. மானியங்கள் இரண்டு விதங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. ஒன்று, ஒரு குறிப்பிட்ட பணியைச் செயவதற்குச் செலவுத் தொகையில் குறிப்பிட்ட விழுக்காட்டுச் செலவுத் தொகையை

மட்டும் வழங்குவது. இப்பேர்ப்பட்ட பணிகள் சம்பந்தமாக வழங்கு-வதற்கு, மானியம் வழங்கும் செயலாண்மை மொத்தச் செலவை ஆராய அதிகாரம் பெற்றுள்ளது. மொத்தச் செலவுத் தொகை நிருணயம் செய்யப்பட்ட பின்னர், ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுத் தொகையில் குறிப்பிட்ட விகிதாச்சார அளவுத் தொகை வழங்கப்-படும். இரண்டாவதாக, ஒரு திட்டத்தில் பங்கு பெறும் தனிநபர்-களின் எண்ணிக்கைக்கு உகந்தவகையில், ஒரு தனி நபர் அடிப்-படையில் மானியம் வழங்கப்படுவது உண்டு. ஊராட்சிகளுக்கு (Matching grants) இணை மானியங்கள் சிலவற்றை மாநில அரசு வழங்கி வருகின்றது இதுவும் ஒரு வகைப்பட்ட மானியம்தான் ஆகும்.

மானியம் வழங்கப்படுவது எந்த நேரத்திலும் ஒரே வகைப்-பட்ட நோக்கத்திற்காக இருக்கவேண்டும் என்பது அவசியமல்ல. மானியங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகின்றன. உள்ளாட்சிகள் செயல்படுத்தத் தயங்கும் சில குறிப்பிட்ட வகைப் பணிகளை மேற்கொள்ளவும், அப்பணிகளை ஏற்றுநடத்தி ஊக்கப்-படுத்தவும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. உள்ளாட்சிகள் பொதுவாக மிகுதியான செலவுகள் ஆகும் பணிகள் செய்வதற்குத் தயக்கம் காட்டும். அப்படிப்பட்ட பணிகள் செய்வதற்கு இது ஒரு வாய்ப்பாகும். அதாவது உள்ளாட்சிகளின் பழுவானது குறைவதற்கு இவ்வகை மானியங்கள் மிகவும் பயனுள்ளவை. மேலும், அரசாங்கம் சில குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்கு மானியம் வழங்குவ-தால், அப்பணிகளைச் செய்ய உள்ளாட்சி அமைப்புக்கள் ஆர்வம் காட்டும். அரசாங்கம் குறிப்பிட்ட ஒரு பணிக்கு மானியம் வழங்கு கிறதென்றால், அது மக்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடிய-தாக, நல்வாழ்வுப் பணியாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்கு மட்டும் மானியங்கள் வழங்குவதோடு, பிறபணிகளைச் செய்வதற்கும் உதவித் தொகை-கள் அளிக்கப்படுகின்றன. பணிகள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகச் செய்ய இந்த உதவித் தொகைகள் பயன்படுகின்றன. ஒரே சீரான அளவு பணிகள் அனைத்து இடங்களிலும் செய்ய வேண்டுமென்பதே இந்த உதவித் தொகைகளின் நோக்கமாகும்.

கடன்கள் பெறுவதன் மூலமாகவும் உள்ளாட்சிகள் தங்களது நிதிநிலைமையை உறுதிபடுத்திக் கொள்ளவேண்டியதுள்ளது. ஏனெனில் உள்ளாட்சியின் வருவாயினங்களும் செலவுகளும் சமமாக இருந்தால் உள்ளாட்சியில் பெரிய செயல் திட்டங்கள் செய்ய மூலதனம் போட இயலாது. இதனைக் கடன்கள் திரட்டுவதன் வாயிலாகச் சமாளிக்கலாம். கடன்கள் மாநில அரசாங்கத்திடமிருந்தும் மக்களிடமிருந்தும் பெறப்படுகின்றன.

உள்ளாட்சிகளுக்குப்போதுமான அளவு நிதிவசதி இருந்தால்தான் உள்ளாட்சிப்பணிகளைச்செவ்வனேசெய்யமுடியும். உள்ளாட்சிகள் தங்களது நிதியை வரிவிதிப்பு மூலமாகவும், உதவித் தொகைகள், கடன்கள் ஆகியவற்றின் மூலமாகவும் திரட்டி வருகின்றன. உள்ளாட்சிகள் போதுமான நிதிவசதி பெற்றுள்ளனவா? என்ற கேள்விக்கு அனைத்துத் தரப்பிலுமிருந்து இல்லையென்ற பதில்தான் வருகின்றது. இதனைச் சரிக்கட்டும் முகமாகப் பல்வேறு நிதி ஆலோசனைக் குழுக்களை - நேரத்திற்கு நேரமாகப் பல குழுக்களை அரசாங்கம் நியமித்துள்ளது. அவற்றின் ஆலோசனைகளுக்கேற்ப அரசாங்கம் தனது நிதிக்கொள்கையை மாற்றி வந்துள்ளது.

உள்ளாட்சிகள் வரிவிதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன. ஆனால் அவை மாநில,மத்திய அரசாங்கங்களைப்போல் இறைமை அதிகாரம் கொண்டவை அல்ல. மத்திய, மாநில அரசாங்கங்கள் தங்களது வரிவிதிக்கும் அதிகாரங்களை அரசியலமைப்பிலிருந்து பெற்றுள்ளன. உள்ளாட்சிகள் அரசியலமைப்பிலிருந்து அதிகாரத்தைப் பெறவில்லை. மாநிலங்கள்தான் உள்ளாட்சிகளுக்கு வரிவிதிக்கும் அதிகாரத்தைத் தந்துள்ளன. மாநில அரசாங்கம் வரையறுக்கின்ற சட்ட திட்டங்களுக்கேற்பத்தான் வரிவிதிக்கும் அதிகாரத்தை உள்ளாட்சிகள் பெறுகின்றன. சில வரிகளைக் கூட மாநில அரசாங்கமே உயர்த்துகின்றது. ஏனெனில் உள்ளாட்சிகள் சில வரிகளை உயர்த்தினால், பலத்த எதிர்ப்பும், கண்டனமும் தலைதூக்கலாம். இந்த மாதிரியான எதிர்ப்புக்கள் வரலாமென எதிர்பார்த்து உள்ளாட்சிகளும் வரியை உயர்த்துவதற்கு அஞ்சலாம். மேலும் ஒரே மாதிரியான வரியை மாநில முழுவதும்

கொண்டுவர, மாநில அரசாங்கத்தால் தான் முடியும். உள்ளாட்சிகள் அனைத்தும் ஒரே சீராகவும், ஒரே நேரத்திலும் உயர்த்தும் என்றும் கூறமுடியாது. ஆகவே மாநில அரசாங்கம்தான் பொருத்தமானதாகச் செயல்படுகிறது. தற்போது உள்ளாட்சிகள் வரிவிதிக்கும் அதிகாரத்தை அரசியலமைப்பு வரையறுக்கவில்லை என்பது உண்மை.

உள்ளாட்சிகள் வரிவிதிக்கும் அதிகாரத்தை அரசியலமைப்பின் மூலமாகப் பெற வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வந்துள்ளது. அரசியலமைப்பு இதற்காகத் திருத்தப்படவேண்டும் எனவும் கோரியுள்ளனர். மத்திய அரசாங்க அதிகாரங்கள் மாநில அரசாங்க அதிகாரங்கள், பொது அதிகாரங்கள் என மூன்று பிரிவாக அரசியலமைப்பு அதிகாரங்களைப் பிரித்துள்ளனர் என்பது உண்மை. இது மாதிரி உள்ளாட்சிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனக் கோருகின்றனர். இது நடைபெறக் கூடிய செயலா? என்பதைச் சிந்திக்க வேண்டும். மாநிலங்களுக்கே போதுமான அதிகாரங்கள் இல்லையென்று, மாநிலங்கள் மிகுதியான அதிகாரங்கள் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு இருக்கின்றபொழுது, உள்ளாட்சிக்கு எங்ஙனம் மிகுதியான அதிகாரங்கள் கொடுக்க முடியும்? அங்ஙனம் சட்டபூர்வமாக அரசியலமைப்பிலேயே அதிகாரத்தை உள்ளாட்சிக்குக் கொடுத்து விட்டால், உள்ளாட்சிகளை மாநில அரசாங்கங்கள் கட்டிக் காப்பதில் சிக்கல்களும், சிரமங்களும் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. உள்ளாட்சிகள் மாநில அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருப்பதால், மாநில அரசாங்கங்களுக்கேற்ப, உள்ளாட்சிகள் அதிகாரம் பெற்று உள்ளன. உள்ளாட்சிகள் தன்னிச்சையான வருவாய்களை ஏற்படுத்த, அரசியலமைப்பு திருத்தப்படவேண்டுமென கோரி வருகின்றனர். இது நடைமுறையில் சாத்தியப்படக் கூடியதா? என்று பார்த்தால், முடியாத ஒன்றாகவே தோன்றுகிறது. இருப்பினும் அனைத்து அரசாங்கங்களும், ஒருமனதாகச் சில தன்னிச்சையான வருவாய்களை உள்ளாட்சிகளுக்கு ஏற்படுத்தித்தர முடியும். இது சட்டபூர்வமாகச் செயல்படாவிட்டாலும், உடன்பாட்டின்படி, இணக்கத்தின்படி செய்யலாம்.

ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி வரிகள் தெளிவாக தமிழக ஊராட்சி, நகராட்சி மற்றும் அந்தந்த மாநகராட்சிச் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன கீழ்க்கண்ட சில வரிகளின் மூலம் இந்த உள்ளாட்சி அமைப்புக்கள் நிதிபெறுகின்றன. ஊராட்சி திரட்டும் முக்கிய வரிகள் வீட்டுவரி, தொழில்வரி, வாகனவரி, நிலசெஸ் ஆகியனவாகும். நகராட்சிகள் சொத்துவரி, தொழில் வரி, வண்டிவரி, பத்திரிகையில்லா விளம்பரவரி, சொத்துமாற்ற வரி, பிரயாணவரி ஆகியனவாகும். நகராட்சி வரிகளில் சொல்லப் பட்டதுடன் கம்பெனி வரி போன்ற சில வரிகளை மாநகராட்சி விதிக்கின்றது.

மாநகராட்சி நிதி குறித்து உயர்மட்டக் குழு ஒன்று 1971ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அது தனது அறிக்கையை 1972ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. அதில் குறிப்பிட்டுள்ள சில முக்கிய பரிந்துரைகளைப் பற்றிப் பார்ப்போம்:

1. மாநகராட்சியின் நிதி குறித்த சிக்கலுக்கு முக்கிய காரணம் தவறான வகையில் வரவு செலவுத் திட்டம் தயாரித்துச், செயல் படுத்துவது ஆகும்.

2. அரசாங்க அனுமதி பெறுகின்ற சில இனங்களைத் தவிர்த்து, பிற இனங்களின் மீதாகத் தயாரிக்கப்படுகின்ற வரவு செலவுத்திட்டம் மிகவும் துல்லியமாகத் தயாரித்து மன்றத்தைவிட்டு விலகிச் செல்லாதவாறு அமைக்க வேண்டும். அரசாங்க அனுமதி பெறுகின்ற இனங்கள் மன்றத்தை விட்டு விலகிச் செல்லக் கூடியன.

3. மாநகராட்சிக்கு அரசாங்கத் துணைச் செயலர் அந்தஸ்தில் ஒரு நிதி ஆலோசகரை நியமிக்க வேண்டும். இவர் வரவு செலவுத்திட்டத்தைக் கட்டுப்படுத்தி, கண்காணிப்புச் செய்ய வேண்டும். பல்வேறு நோக்கங்களுக்கு நிதியளிப்பு செய்வதைக் கண்காணிக்க வேண்டும்.

4. சென்னை மாநகராட்சியின் வரவு செலவுத் திட்டம் 10 வருடங்களுக்கு அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

5. வரி பாக்கிகளை வசூலிக்க உடனடியாக ஆணையாளர் பூர் வாங்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதற்காக ஆணையாளரின் கட்டுப்பாட்டிற்குள் நின்று நேரடியாகச் செயல்படும்படியாக வருவாய் அதிகாரிகளை தனியே நியமனம் செய்ய வேண்டும். இவர்கள் வரி பாக்கிகளை வசூலிக்க வேண்டும்.

6. மதிப்பாய்வு மாற்றங்கள் செய்வதற்கு மத்திய மதிப்பாய்வு செயலாண்மை ஏற்படுத்தப்படவேண்டும். இதில் தலைமை மதிப்பாய்வாளரை நியமித்து, பொது மதிப்பாய்வு, மாற்றங்கள் செய்ய வேண்டும்.

7. மதிப்பீடுகள் ஒழுங்காகச் செய்வதற்கு, அனைத்துத்துறைகளிலும் சீரான ஒருங்கிணைப்பு அமைய வேண்டும்.

8. வரிவிதிப்பு முறையீட்டுக் குழுவில் கட்டிடங்களை மதிப்பாய்வு செய்யும் வல்லுநர் ஒருவர் கூடுதல் உறுப்பினராக இருக்க வழி செய்ய வேண்டும்.

9. ஆணையாளர் நிருணயிக்கின்ற வரி மதிப்பீட்டைக் கூட்டவும், குறைக்கவும் செய்யக் கூடிய முடிவான அதிகாரம் பெற்றதாக வரி விதிப்பு முறையீட்டுக் குழு இருக்கக்கூடாது.

10. ஆரம்பக் கல்விச் சட்டத்தில் நிருணயிக்கப்பட்டுள்ள உயர்ந்த பட்சக் கல்வி வரியை உயர்த்த வேண்டும்.

மாநகராட்சியின் வருவாய்த்துறை, வரி விதிக்கும் மதிப்பாய்வைச் செய்வதுடன், வரி வசூலையும் செய்து வருகின்றது. தலைமை வருவாய் அதிகாரி இத்துறைக்குத் தலைவராகவும், உதவி வருவாய் அதிகாரிகள் இவருக்கு உதவியாகவும் இருந்து செயல்படுகின்றனர். மக்களது குறைகளைக் கேட்டறிய வரிவிதிப்பு முறையீட்டுக்குழு செயல்படுகின்றது. இது மாதிரியாக அரசாங்கம் நேரத்திற்கு நேரம் உயர்மட்டக் குழுக்களை நியமித்து, உள்ளாட்சி திறம்படச் செயல்பட வழிவகுக்கின்றது.

22

உள்ளாட்சி மீதான மாநில அரசாங்கக் கட்டுப்பாடுகள்

உள்ளாட்சி தன்னிச்சையாகச் செயல்படவேண்டுமென்பது குறித்து இருவிதக் கருத்து வேறுபாடுகள் ஏதும் இல்லை. இருப்பினும் தனி ஆட்சியாகச் செயல்படக் கூடாது எனக் கட்டுப்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மக்களாட்சிக்கு மக்களைப் பக்குவப்படுத்தக் கூடிய அடிப்படை அமைப்புக்களாக உள்ளாட்சிகள் விளங்குகின்றன. அரசின் பெரிய அமைப்பிற்குள் சிறிய அளவில் தன்னிச்சையாகவும்,திறமையாகவும் செயல்படவல்லனவாக இவை விளங்குகின்றன. இவை அரசின் கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் ஒரே சீராக எல்லாப்பகுதிகளிலும் செயலாக்கக் கூடிய கருவிகளாக விளங்குகின்றன என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு உள்ளாட்சிகள் பரந்த அளவில் செயல்படக் கூடியனவாகவும், தன்னிச்சையாகவும், திறமையாகவும் செயல்பட்டு வருகின்றன. இவைகளுக்குக் கட்டுப்பாடும், கண்காணிப்பும் அவசியம்தானா?

ஆற்றுவெள்ளமாயினும் கட்டுப்படுத்தி நீரை வாய்க்கால் மூலமாக அனைத்து இடங்களிலும் பாய்ச்சுகின்றதன் தத்துவத்தை நாம் அறிவோம். மழை பெய்தால், நீரைத்தேக்கிக் கட்டுப்பாடு செய்து பயன்படுத்துகிறோம். இல்லையேல் அந்நீரை முறையாகப் பயன்படுத்தமுடியாது. ஆகவேதான் உள்ளாட்சிகளைத்தான்தோன்றித்தனமாகத் தனி ஆட்சியாகச் செயல்படாமல், கட்டுப்படுத்தி, தன்னிச்சையாகச் செயல்பட மாநில அரசாங்கம் ஒழுங்குபடுத்தி

வருகிறது. மேலும் நாட்டின் ஒருமித்த வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய பொறுப்பினை மாநில அரசாங்கம் பெற்றுள்ளது. சில உள்ளாட்சிகள் அதிகமான வருவாயைக் கொண்டிருக்கலாம், சில உள்ளாட்சிகள் குறைந்த வருவாய் கொண்டனவாக இருக்கலாம். இவற்றைத் தனியாக செயல்பட வைத்தால், உள்ளாட்சிகளின் வளர்ச்சியில் மிகுதியான ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுவிடும். இதனால் உள்ளாட்சிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு, நாடு பல பிரிவுகளாக மாறக் கூடிய சூழ்நிலை கூட உருவாக நேரிடும். அங்ஙனம் உருவாவது மக்களாட்சிக்கு ஊறு. ஒருமித்த பரந்த அளவு முன்னேற்றம் ஏற்படும் பொருட்டுத்தான், உள்ளாட்சிகள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி எனப் பிரிக்கப்பட்டுள்ளன. நகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றை பல வகைகளாக அரசாங்கம் வகைப்படுத்தி, கட்டுப்பாடு செய்கின்றது. மாநில அரசாங்கம் உள்ளாட்சிகளைச் சீராக ஒழுங்குபடுத்தவும், ஒருமித்த முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் இந்தக் கட்டுப்பாடுகள் அவசியமாகின்றன. உள்ளாட்சிகளின் வகைகளுக்கேற்ப மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளும், கண்காணிப்பும் வேறுபடுகின்றன.

மக்களாட்சியில் அதிகாரப்படிநிலைகள் நாடுகளின் அரசியலமைப்புகளைப் பொறுத்து வித்தியாசம் கொண்டனவாக உள்ளன. கூட்டாட்சி அரசியலமைப்புக் கொண்ட நாடுகளில் மத்திய ஆட்சி, மாநில ஆட்சி மற்றும் உள்ளாட்சி என மூன்று பிரிவுகள் உள்ளன. இவற்றில் உள்ளாட்சிகள் மாநில ஆட்சியின் கீழ் அமையும். மத்திய அரசின் கட்டுப்பாடுகள் அதிகமிருக்காது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா ஆகியவை கூட்டாட்சி அரசியலமைப்புக் கொண்ட நாடுகள். சில அரசியலமைப்புக்கள் ஒருமுக ஆட்சி (Unitary) வகையைச் சேர்ந்தனவாக இருக்கலாம். இவற்றில் அதிகாரங்கள் மத்திய ஆட்சி மற்றும் உள்ளாட்சி என இரண்டு பிரிவாக மட்டுமே பிரிக்கப்பட்டு இருக்கும். உள்ளாட்சி மத்திய ஆட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். இங்கிலாந்தில் இந்த விதமான ஆட்சி நடைபெற்று வருகிறது. எப்படிப்பட்ட அரசியலமைப்பாயினும், உள்ளாட்சிகளுக்கு மேலாக ஓர் உயர் அட்சி இருக்கத்தான் செய்கிறது. உயர்ஆட்சியை அமைக்கும் பொறுப்பும், உள்ளாட்சியை அமைக்கும் பொறுப்பும் மக்களிடமே தான் உள்

என. உயர் ஆட்சி அதிக அதிகாரம் கொண்டு இருந்தால்தான், உள்ளாட்சியைக் கட்டுப்படுத்தி செயல்பட வைக்க முடியும். உயர் ஆட்சி அமைக்க உள்ளாட்சி ஒரு பயிற்சி நிறுவனமென்று கூறு கின்றபோது, பயிற்சிக்களம் மிகுதியான சக்திவாய்ந்ததாக இருந்தால், தவறுகள் பல நடைபெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இவ்வாறு தவறுகள் மிகுதியாக நடைபெறுவதைத் தடுக்கும் முக மாக, உள்ளாட்சிகள் உயர் ஆட்சியின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

உயர் ஆட்சியானது நாடு முழுவதும் சீராக முன்னேற வேண்டுமென்ற நோக்குடன் செயல்படக் கூடியதென்பதை அறி-வோம். ஓர் உள்ளாட்சியின் வருவாய் அந்த உள்ளாட்சியின் செயல் திட்டங்களுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. உயர் ஆட்சியிட-மிருந்து உதவித் தொகைகள் பெற்றுத்தான் உள்ளாட்சிகள் தங்க-ளது செயல் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகின்றன. அங்ஙனமிருக்கின்ற பொழுது, நிதிகள் ஒழுங்காகச் செலவிடப்படு கின்றனவா என்பதைக் கண்காணிப்புச் செய்யவேண்டியது உயர் ஆட்சியின் தலையாய கடமையாகும்.

உள்ளாட்சி மீதான மாநில அரசாங்கக் கட்டுப்பாடுகள்

உள்ளாட்சிகளின் செயல்களைக் கட்டுப்படுத்தி மாநில அரசாங் கம் இயங்குகின்றது. உள்ளாட்சிகளுக்கு வழிகாட்டல், உள்ளாட்சி களின் பணிகளைச்செய்யவைத்தல் ஆகியன மாநில அரசாங்கத்தின் பொறுப்புக்கள். மாநில அரசாங்கக் கட்டுப்பாடுகள் அனைத்தும், எல்லா உள்ளாட்சிகளுக்கும் பொருந்தும் பொது நடவடிக்கைகளா கும். உள்ளாட்சி மன்றங்கள் அதிகச் செயல் திறன் கொண்டவையா கவும், திறமை வாய்ந்தவையாகவும் திகழவே மாநில அரசாங்கம் கட்டுப்பாடு செய்கின்றது. உள்ளாட்சிகளின் குற்றங்களைக் கண்டு பிடித்துத் திருத்தவும், பணிகளைச் செய்ய ஊக்குவிப்பதும் மாநில அரசாங்கம் செய்து வருகின்ற செயல்கள் ஆகும். நிருவாகத்தை ஆய்வுசெய்தல், கணக்குகளைத் தணிக்கை செய்தல், பணிகளைப் பற்றிய அறிக்கைகள் பெறுதல் ஆகியவற்றின் மூலமாக அரசாங்-கம் கட்டுப்படுத்துகின்றது. பணிகளுக்குரிய வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை மாநில அரசாங்கம் நேரத்திற்கு

நேரம் பிறப்பித்து உள்ளாட்சிகளின் செயல்திறன் தரத்தைக் காக்கின்றது. இன்றைய நாளில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே வருகின்ற காரணத்தால், மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற விதத்தில் உள்ளாட்சிகளின் திட்டமிடல் மற்றும் பிற குடிமைப் பணிகள் அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் உள்ளாட்சி அமைப்புக்களிடம் இவற்றை நிறைவேற்றப் போதுமான மூலதனம், நிதி, மூலப்பொருட்கள் வசதி இல்லை. இவற்றை மாநில அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தான், உள்ளாட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

உள்ளாட்சிகளின் கண்காணிப்பினை உள்ளாட்சிகளின் ஆய்வாளர்கள், வட்டார (Regional) ஆய்வாளர்கள் மற்றும் பிற செயல் துறைகள் செய்து வருகின்றன. இருப்பினும், கண்காணிப்பு, ஆய்வு முதலியன செய்யும் நோக்கத்திற்காக ஆய்வாளர்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும். ஏராளமான அதிகாரங்களை மாநில அரசாங்கம் இந்த ஆய்வாளர்களுக்கு அளித்துள்ளது.

நகராட்சிகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் மாநில அரசாங்கத்தின் செயலாண்மை தேவையான ஒன்றாகும். இது மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலகத்தில் அமைந்து செயல்படவேண்டுமா அல்லது மாவட்ட அளவில் அமைந்து செயல்படவேண்டுமா என்பது ஒரு சிக்கல். இச்சிக்கலைத் தீர்க்கு-முகமாகத் தமிழக அரசாங்கம் இந்த இரண்டு இடங்களிலும் செயலாண்மையை அமைத்து செயல்படுத்தியது. இந்த இருமுறை-களுமே வெற்றியைக் கொடுக்கவில்லை. ஏனெனில் தலைமைச் செயலகம் ஏராளமான பணிகள் நிறைந்ததாக உள்ளது. இதற்கு-மேல் கண்காணிப்புப் பொறுப்பைக் கொடுத்ததால், வேலைப்-பளு அதிகமாகி, செயல்கள் செம்மையாகச் செய்யப்பட முடிய-வில்லை. மேலும் நிருவாகக் கொள்கைகளை வகுக்கின்றதலைமைச் செயலகத்தில், செயலாக்கும் கடமைகளையும் கொடுத்ததால் அவைசெம்மையாகச் செய்யப்பட இயலவில்லை. மாவட்ட அளவிலும் கூட இதே வேலைப்பளு தான். ஏனெனில் மாவட்ட ஆட்சித் தலைவர்ஏராளமான கடமைகளைச் செய்யக் கூடியவராகஇருக்கின் றார். மாவட்டத்தின் அமைதி, ஒழுங்கு மற்றும் கிராம வளர்ச்சி

ஆகிய கடமைகளைச்செய்யவேண்டி இருந்ததால், நகராட்சிகளைக் கண்காணிக்க இயலாமல் போய்விட்டது. இந்த இருமுறைகளிலும் தோல்வியைத் தழுவிய பின்னர், மூன்றாவது முறை ஒன்று கண்டு-பிடிக்கப்பட்டது. அக் கண்டுபிடிப்புத்தான் நகராட்சிகளின் ஆய்வக மாகும். இந்த ஆய்வகத்தின் மூலமாக, அரசாங்கத்தின் கொள்கை களைச் செயலாக்க முடியுமென நம்பியதால், இந்த ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள் மற்றும் உள்ளாட்சி வாரியங்களின் ஆய்வாளர் ஒருவர் 1964-ஆம் ஆண்டிற்கு முன்னர் நியமிக்கப்பட்டு, செயல்படலானார். இவர் நகராட்சிகள், ஊராட்சி-கள் மற்றும் மாவட்ட வாரியங்கள் ஆகியவற்றைக் கவனித்து வந்-தார். ஊராட்சி நிருவாகம் சீராக வளரவே, நகராட்சி மன்றங்கள் மற்றும் உள்ளாட்சி வாரியங்களின் ஆய்வாளர் அலுவலகம் வளர்ச்சி இணைஆணையாளர் அலுவலகமாக மாறியது. இவர் ஊராட்சி நிருவாகத்தையும், நகராட்சி நிருவாகத்தையும் கவனித்து வந்தார். பின்னர் 1965-ஆம் ஆண்டு வளர்ச்சி இணை ஆணையாளர் அலுவல கம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இதில் ஒன்று ஊரக வளர்ச்சி இயக்குநரகமும், மற்றொன்று நகராட்சிகளின் ஆய்வகமும் ஆகும்.

நகராட்சிகளின் ஆய்வினைத் தலைமைச் செயலக அதிகாரி-களும், மாவட்ட ஆட்சித்தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்-களின் தனி உதவியாளர்களும் செய்து வந்தனர். இவ்வாறு இந்த அதிகாரிகள் அனைவரும் ஆய்வினைச் செய்து வந்ததால், திருப்தி-கரமாகச் செயல்படவில்லை. இதனால் 1967-ஆம் ஆண்டு நகராட்சி களின் ஆய்வாளர் என்று ஒரு புதுப்பதவி உருவாக்கப் பட்டது. பின்னர் இப்பதவி இருமுறை பெயர்மாற்றம் செய்யப்படலாயிற்று. நகராட்சி நிருவாக இயக்குநர் என 1970-ஆம் ஆண்டும், நகராட்சி-களின் ஆய்வாளர் என 1975-ஆம் ஆண்டிலும் பெயர் மாற்றப்பட் டது. இந்திய நிருவாகப்பணியில் அனுபவம் பெற்ற மூத்த அதிகாரி-கள் ஆய்வாளராக நியமிக்கப்பட்டனர். இவருடன் இணை ஆய்வாளர் ஒருவரும், மூன்று தனி உதவியாளர்களும் நியமிக்கப்-பட்டு, செயல்பட்டனர். இணை ஆய்வாளராக அனுபவமுள்ள சிறப்புப் படிநிலை ஆணையாளர்களில் மூத்தோர் நியமிக்கப்-பட்டனர். முதல்படிநிலை ஆணையாளர்கள் தனி உதவியாளர்-களாக நியமிக்கப்பட்டனர்,

தமிழக அரசாங்கம் உள்ளாட்சிகள் மீது செலுத்தும் கட்டுப்பாடுகள் பற்றிக்காண்போம். இக்கட்டுப்பாடுகள் ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றிற்குப் பொருந்தும். உள்ளாட்சிகளை உருவாக்கும் பொறுப்பு தமிழக அரசாங்கத்தைச் சார்ந்தது. அது தமிழக ஊராட்சிகள் சட்டம், தமிழக நகராட்சிகள் சட்டம் என ஊராட்சிகள், நகராட்சிகள் அமைப்பது குறித்து பொதுவான சட்டங்கள் இயற்றுகின்றது. ஒவ்வொரு மாநகராட்சியும் தனித்தனிச் சட்டங்களால் ஏற்படுத்தப்படுகின்றது. உள்ளாட்சிகள் அமைக்கும் முறை, உள்ளாட்சி மன்றங்கள், குழுக்கள், நிருவாகமுறை, கணக்கு வைப்பு, தணிக்கை, கண்காணிப்பு முறை போன்றவை குறித்துச் சட்டம் விளக்கம் அளிக்கின்றது,

உள்ளாட்சிகளின் எல்லைகளை நிருணயிக்க, எல்லைகளைக் கூட்டுவது, குறைப்பது ஆகியவற்றை மாநில அரசாங்கம்தான் செய்யவேண்டும். உள்ளாட்சிகளின் தேர்தல்களை நடத்துவது, தள்ளிப்போடுவது ஆகியவற்றை மாநில அரசாங்கம்தான் செய்கின்றது. எனவே உள்ளாட்சிகளை ஏற்படுத்தி, இயங்கவைப்பது மாநில அரசாங்கம் உள்ளாட்சிகள் செயல்படும் விதத்தை அறிய நேரத்திற்கு நேரம் அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு கேட்பதும் மாநில அரசாங்கம். உள்ளாட்களின் தீர்மானங்கள், ஆணைகள், உரிமங்கள் போன்றவற்றை நீக்க, நிறுத்தி வைக்க மாநில அரசாங்கம் அதிகாரம் கொண்டுள்ளது. உள்ளாட்சிகளில் உயர் நியமனங்களான ஆணையாளர்கள், நிருவாகத் தலைவர்கள் போன்றோர்களை மாநில அரசாங்கம் நியமனம் செய்கின்றது.

உள்ளாட்சிகள் செயல்பட்ட விதம் பற்றியும், அவை செய்த பணிகள் குறித்தும் ஆண்டறிக்கையை ஒவ்வோர் உள்ளாட்சியும் மாநில அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும். இவற்றை வைத்து மாநில அரசாங்கம் உள்ளாட்சிகள் பணியாற்றிய விதம்பற்றி அறிந்து கொள்ளும். உள்ளாட்சிகள் சீராகப் பணியாற்றவில்லையெனில், சீராகப் பணியாற்றத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்; உள்ளாட்சிகள் செம்மையாக இயங்கவில்லையாயின் அதற்குரிய காரணங்களைக் கண்டறிய விசாரணைக்குழுக்ளை நியமிக்கும்; விசாரணைக் குழுக்களின் பரிந்துரைக் கேற்ப, தக்க நடவடிக்கைகள் எடுத்து உள்ளாட்சிகளைச் செம்மைப்

படுத்தும். உள்ளாட்சிகளுக்கிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைப்பதும் மாநில அரசாங்கம்தான்.

உள்ளாட்சிகள் தங்களது வரவு-செலவுத் திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் தவறாது அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். ஏனெனில் மாநில அரசாங்கம் உள்ளாட்சிகளின் நிதி நிலைமையைக் கண்டறிந்து, நிதிநிலைமை நலிவுற்றால் அந்நலிவைச் சமாளிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும். தற்போது ஊராட்சிகளின் நிதிநிலைமையைப் பரிசீலிக்கத் தமிழக அரசாங்கம் 30 பேர்களடங்கிய உயர்மட்டக்குழு ஒன்றை நியமித்துள்ளது. சில சமயங்களில் உள்ளாட்சிகளின் சில அவசியப் பணிகளை மாநில அரசாங்கம் உள்ளாட்சியைக் கட்டாயப்படுத்திச் செய்ய வைக்கும்; அதற்குரிய செலவை உள்ளாட்சியே ஏற்றுக் கொள்ளும்படி செய்யும்; தவிர, மானியங்களை அளித்து உள்ளாட்சிகளுக்கு உதவும். தன்னிறைவுத் திட்டம் போன்ற திட்டங்களின் வாயிலாக உள்ளாட்சிகளின் கட்டாயப் பணிகளைக் கூட மாநில அரசாங்கம் செய்ய உதவுகின்றது. உள்ளாட்சிகளின் கணக்குகளைத் தணிக்கை செயவதும் மாநில அரசாங்கம்தான்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம், பணிகள், செயல்கள் ஆகியவற்றைப் பார்வையிட, கண்காணிக்க, பரிசீலிக்க மாநில அரசாங்கம் பொறுப்புக் கொண்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவர்கள், நிருவாக அதிகாரிகள் போன்றோர் தங்களது கடமையிலிருந்து தவறினால் அவர்களைத் தண்டிக்க மாநில அரசாங்கம் அதிகாரம் கொண்டுள்ளது; அவர்களை நீக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. உள்ளாட்சி அமைப்புக்களின் மன்றங்கள், குழுக்கள் போன்றவை செம்மையாகச் செயல்படவில்லையேல் அவற்றை நீக்கிவிட்டு, தனி அதிகாரிகளை நியமித்து அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புக்களை நிருவகிக்கும். எனவே உள்ளாட்சிகளைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல, அவசியம் ஏற்பட்டால் உள்ளாட்சிகளைத் தன்னகத்தே வைத்துக் கொள்ளும் பொறுப்பும் மாநில அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்.

23

நிறைவுரை

உள்ளாட்சி அரசாங்கங்கள் தன்னிறைவுடன் செயல்பட வேண்டுமெனில், அவை தன்னிச்சையான அதிகாரங்கள் கொண்டவையாக இருத்தல் வேண்டும். உள்ளாட்சி நிருவாகத்தை ஒழுங்குபடுத்தவும், அவற்றின் வரையறை எல்லையை மீறினால் கட்டுப்பாடு செய்யவும் மாநில அரசாங்கத்தின் அதிகாரங்கள் இருக்க வேண்டும். மக்களாட்சி என்று சொல்லிப் பெருமைப்படுகின்றபொழுது, அரசாங்கத்தில், நிருவாகத்தில் பங்கு ஏதும் வகிக்காமல் இருந்தால், உரிமை, சுதந்திரம் என்ற வார்த்தைகளுக்கு பொருள் இல்லாமல் போய்விடும். மக்களாட்சிக் கொள்கைகள் என்று சொல்லிக் கொண்டு மக்களாட்சி அமைக்கப்பட்டபோதிலும், மக்கள் பிரதிநிதிகள் செய்ய வேண்டிய கடமைகளை, அரசாங்க அதிகாரிகளே செய்து கொண்டு வருவது எந்த வகையிலும் நியாயமானதல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்தும் 1973, 1974-ஆம் ஆண்டு முதல்அரசாங்க அதிகாரிகள் மூலம் நிருவகிக்கப்படுகின்றன. மதுரைக்கு 1978-ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று, உள்ளாட்சி தமிழ்நாட்டில் உயிர்பெற்றுள்ளதெனக் கூறலாம். தற்போதுமதுரை மாநகராட்சி கலைக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய மேயர்களின் மாநாடு ஒவ்வோர் ஆண்டும் மாநில அரசாங்கங்கள் மாநாகராட்சிகளைத் தான்தோன்றித்தனமாகக் கலைத்து வருகின்றனஎன்றகுற்றச்சாட்டினைப் புதுப்பித்துக் கொண்டே வருகின்றது. 1966-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ஆம்தேதி நடைபெற்ற ஆறாவது அகில இந்திய மேயர் மாநாடு

ஏராளமான நகராட்சி அமைப்புக்களை மாநில அரசாங்கங்கள் கலைத்தது மக்களாட்சிக்கு விரோதமானது எனத் தீர்மானம் நிறைவேற்றியது. மாநில அரசாங்கங்கள் கூறிய காரணங்களை மேயர்கள் மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. தேர்தல்களை மாநகராட்சியில் நடத்தச் சரியான நேரம் இல்லை என்றும், மாநகராட்சியின் பதவிக்காலம் முடிவுற்றதால் கலைக்கப்பட்டது என்றும் மாநில அரசாங்கங்கள் கூறிய கருத்துக்கள் யாவும் மறுக்கப்பட்டன. எனவே கலைக்கப்பட்ட மாநகராட்சி மேயர்கள் அந்தந்த மாநில முதலமைச்சர்களிடம் பிரச்சனையைக் கொண்டு செல்ல வேண்டு-மெனத் தீர்மானம் நிறைவேற்றியது. 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 2-ஆம்தேதி அகமதாபாத்தில் நடந்த மேயர் மாநாடு கல்கத்தா மாநகராட்சி கலைக்கப்பட்டது குறித்து மேற்கு வங்காள அரசின் மீது கடுமையாகக் குற்றம்சாட்டியது; இந்நடவடிக்கை மக்களாட்சிக்கு விரோதமான நடவடிக்கை எனக் கூறியது.

மாநில அரசாங்கங்கள் மாநகராட்சியைக் கண்காணிக்க அதிகாரம் பெற்றவைதான் என்றாலும், மாநகராட்சியைக் கலைப்பதை விடுத்து மற்ற நடவடிக்கைகளில் இறங்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளது. ஏனெனில் மாநகராட்சியைக் கலைப்பதன் மூலம் உள்ளாட்சி முறைமையின் அடிப்படையே அகற்றப்பட்டு விடுகிறது என ஹைதராபாத் மாநாட்டில் கூறப்பட்டது. மாநில அரசாங்கங்களின் தயவால் மாநகராட்சிகள் செயல்படாதவண்ணம், தன்னிச்சை அதிகாரங்கள்கொண்டு செயல்பட நகரச் சாசனம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென 1941-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18, 19 ஆகிய தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய, பர்மா மற்றும் இலங்கை மேயர்களின் மாநாடு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இருப்பினும் மாநில அரசாங்கங்கள் உள்ளாட்சி அமைப்புக்களைக் கலைப்பதற்கு அதிகாரம் கொண்டிருக்கவேண்டும். தேர்தல்கள் வைத்து, மாநகர் மன்றங்கள் நிரப்பப்படவேண்டுமென்பது மக்களாட்சிச் செயல்முறையாகும். மாநில அரசாங்கம் உள்ளாட்சி அரசாங்கத்தை ஒழுங்குபடுத்தி, நிர்வாகத்தைக் கண்காணிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

மாநகரத்தின் தலைவரானவர், அதாவது மேயர் உண்மை யிலேயே தம்முடைய கடமைகளைச் செய்வதற்கு அதிகாரங்கள் கொண்டவராக இருக்கவேண்டுமென்பதில் இருவிதக் கருத்துக் களுக்கு இடமே இல்லை. அதிகாரப்பரவல் ஏற்பட்டுக் கொண்டு வருகின்ற காரணத்தால் அதிகமான அதிகாரங்கள் மேயருக்குக் கொடுக்கவேண்டுமென்பதும், அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் குறைக்கப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. முதல் அகில இந்திய மேயர்களின் மாநாடு 1958-ஆம் ஆண்டு ஜுன் 7-ஆம் தேதி ஹைதராபாத்தில் நடைபெற்றது. மாநில அரசாங் கங்கள் அனைத்தும் மாநகராட்சிச் சட்டங்களைத் திருத்தி, அதன் மூலம் மேயருக்கு உண்மையான செயலாக்க அதிகாரமும், ஆணையாளர்களின் நிருவாக அதிகாரங்களும் மேயரிடம் அமை யும்படி செய்தல் வேண்டுமென இது தீர்மானம் நிறைவேற்றியது. மேயருக்கு முறையீடுகளை விசாரிக்கும் உயர்அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டது. ஆணையா ளர்களின் செயல்களால் பாதிக்கப்பட்ட மக்கள், மேயரிடம் முறை யீடு செய்து குறைகள் நீக்கப்படலாமெனக் கூறப்பட்டது. ஆனால் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகத் தோன்றவில்லை. ஏனெனில் மேயர் செயலாக்க அதிகாரங்களில் குறுக்கீடு செய்யவேண்டியதா கவும், செயல்களில் குழப்பங்கள் ஏற்படக் கூடியதாகவும் தோன்று கின்ற காரணத்தாலும், மாநகராட்சித் திறமை குறைந்துவிடக் கூடாது என்பதாலும் இந்த அதிகாரம் கொடுக்கப் படவில்லை. 1960-ஆம் ஆண்டுத் தீர்மானம் மேயர்கள் பெயரளவில் தலைவராக இருக்கக்கூடாது, செயலாக்க அதிகாரம் கொண்டிருந்தால்தான், தலைமைப் பண்புகளைச் செயல்படுத்த முடியும், மக்களாட்சி உருவங்களின் உண்மைச் சின்னங்களாக இருக்க முடியும் என்று விளக்கியது. மக்கள் மேயரை அணுகினால் குறைகள் தீர்க்கப்படும் என்று நம்புகின்ற பொழுது அவரே அக்குறைகளை நிவர்த்தி செய்யும்படி ஆணையாளரைக் காட்டினால் மேயரின் அதிகார மின்மையைத் தான் காட்டும் என்று அத்தீர்மானம் கூறியது.

மேயருக்கு முன்னுரிமை வழங்குவதால் மேயரின் கௌர வமும் மரியாதையும் அதிகரிக்க வழி உள்ளது. மேயருக்குச் சட்ட மன்றத்தலைவர் மற்றும் பேரவைத் தலைவர்களுக்கு அடுத்த

படியாக முன்னுரிமை கொடுக்கவேண்டுமென 1958-ஆம் ஆண்டில் ஹைதராபாத் மாநாடு கோரியது. அகில இந்திய மேயர்களின் மன்றச்செயற்குழு, மேயர்களுக்குப் பொருத்தமான மரியாதை கொடுக்காவிட்டால் அரசாங்க விழாக்களைப் புறக் கணிக்கவேண்டுமெனவும், மேயர்களுக்கு மத்திய அரசாங்க மானால் காபினட் அமைச்சருக்கு அடுத்தும், மாநிலங்களானால் முதலமைச்சருக்கு அடுத்தபடியாகவும் முன்னுரிமைகள் வழங்க-வேண்டுமெனவும் கூறியுள்ளது. மேயர்கள் கொள்கைகளை உருவாக்கவும், செயல்களைச் செய்வதற்கும் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமெனக் கூறுவது பொருந்தும்.

மாநகராட்சியில், அமைச்சரவை மாதிரி (Cabinet Model) நிருவாகத்தைக் கொண்டு வரவேண்டுமென்பது நீண்டகாலக் கருத்தாகும். மக்களாட்சியின் அடிப்படை அமைச்சரவையாகும். இதற்கு மேயர் தலைவராகவும், நகர நிருவாகத்திற்கு முழுப் பொறுப்பும் கொண்டவராகவும் இருக்கக் கூடியவர் என விவாதிக் கப்பட்டுள்ளது. முக்கியமான ஐந்து அல்லது ஆறு துறைத்தலைவர் களை ஒருங்கிணைத்து மாநகராட்சி அமைச்சரவை அமைக்கப்பட வேண்டும். இவர்கள் மாநகர் மன்றத்திற்குப் பொறுப்பு வாய்ந் தவர்கள். மக்களின் குறைகளை அறிந்து, தீர்த்து வைக்கக் கூடியவர்கள். மாநகராட்சியின் திறமை மக்களின் விழிப் புணர்வைச் சார்ந்து இருக்கக் கூடியதெனக் கூறிவிடமுடியும். இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைபெறுகின்ற ஆணைய வகை நிருவாகத்தைப் போல் முற்றிலும் இல்லாவிட்டாலும், கிட்டத் திட்ட அதன் பண்புகள் சில உள்ளன. அமைச்சரவை அரசாங் கத்திற்குக் கூட்டுப் பொறுப்பும், தனிப்பட்ட பொறுப்பும் இன்றியமையாத ஒன்றாகும். மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கள் அரசியல் பாகுபாடு இல்லாமல் செயல்படக்கூடிய னவாகும். அமைச்சரவை அரசாங்கம் கொண்டு வந்தால், நிச்சய மாக அரசியலின் ஆக்கிரமிப்பு அதிகமாகும். போட்டி பொறாமை, மோதல்கள் ஆகியன ஏற்படும். மாநகராட்சியில் அனைவருடைய ஒருமித்த ஒத்துழைப்பு அவசியம். சென்னையில் 1961ம் ஆண்டு சென்னை மாநகராட்சி அமைச்சரவை மாதிரி அரசாங்கம் கொண்டு வர முயன்று வெற்றிபெற முடியவில்லை.

மேயரின் பதவிக் காலம் ஓராண்டாக இருப்பது பெரிய குறையாகும். ஏனெனில் மேயர் தம்முடைய கடமைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ளும் சமயத்தில், அவரது பதவிக்காலம் முடிவடையும் தருவாயிற்கு வந்துவிடுகிறது. எனவே மேயரின் பதவிக் காலத்தை அதிகரிக்க வேண்டுமென ஜனசங்கக் கட்சி போராட்டம் நடத்தியது. மேயரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாக உயர்த்த வேண்டுமென அது கோரியது. இதே மாதிரியாகக் கேரள முதல் மந்திரி திரு. அச்சுதமேனன் மற்றும் உள்ளாட்சித்துறை மந்திரி திரு சந்திரமௌலி ஆகியோர்களும் பதவிக் காலத்தை நீட்டக் கோரினர். பதவிக் காலம் நீட்டப்படுவதன் நோக்கம், மாநகராட்சி நிருவாகத்தில் திறமையை அதிகரிக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஆகும். ஒவ்வோர் ஆண்டும் நிருவாகம் மாற்றத்திற்குள்ளாகக் கூடாது. இதனால் குழப்பம்தான் ஏற்படுமே தவிர, திறமை வளராது.

எனவே மேயரின் பதவிக்காலத்தை 2½ ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்று கூறுவோம். தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஐந்து ஆண்டுகளில், இரண்டு மேயர்கள் பதவி வகிக்கலாம். தமிழ்நாடு அரசாங்கம் தற்போது மேயரின் பதவிக்காலத்தை இரண்டு ஆண்டுகளாக உயர்த்தியுள்ளது.

இன்று சென்னை மாநகராட்சி கடைப்பிடித்து வரும் மரபு, இந்திய அரசியலமைப்பிற்கு எதிரானதாகும். மதச் சார்பில்லாத, இனச் சார்பில்லாத சமத்துவம் கொண்டுவர வேண்டுமென அரசியலமைப்புக் கூறும்போது, மேயர் பதவி இனவரிசையின்படி செயல்படுவது முறையா? என்பது கேள்வி. இம்மரபு முதன்முதலில் தேவைப்படக்கூடியதாக இருந்திருக்கலாம். இப்போது இருப்பது பொருளற்ற ஒன்று. எல்லா இனங்களும் மேயர் பதவியை அடைய மரபு ஏற்பட்டது. ஆனால் மரபில் எல்லா இனங்களும் உள்ளடக்கப் படவில்லை. மரபு பற்றி முஸ்லீம் உறுப்பினர்களும் கிறிஸ்தவ உறுப்பினர்களும் தொடர்ந்து குறைகளைக் கூறிக்கொண்டே வந்துள்ளனர். பிராமணரல்லாத இந்துக்கள் என்பதில் அனைத்து மக்கள் தொகையும் அடங்கியதெனக் கூறலாம். ஏனெனில் இவர்கள் பிராமணர், முஸ்லீம்,

கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய மொத்தத் தொகைகளுக்குமேல் அதிகமானவர்கள். ஆனால் பிரதிநிதித்துவமோ குறைவு. ஏனெனில் பிராமணரல்லாத இந்துக்கள் என்பதில் நாடார், நாயுடு, முதலியார், வேளாளர், மறவர், பிள்ளை, வன்னியர் எனப் பல்வேறு இனங்கள் உள்ளன. அவ்வகுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. மரபு தேர்தலையும், பிரச்சாரத்தையும் தடுத்து, போட்டியில்லாமல் மேயரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்காக அமைக்கப்பட்டது. ஆனால் ஒவ்வோர் ஆண்டும் மேயர் தேர்தலில் போட்டி நடைபெறுவதைக் காணும்போது மரபினால் பயன் ஒன்றுமில்லை. இனச் சார்புச் சுழற்சிமுறை சென்னை மாநகராட்சிக்குச் சிறப்பான முறைமையாயினும், தகுதிபெற்றவர்களை மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்காக, அம்முறை நீக்கப்பட வேண்டும். எனவே மேயர் அலுவலகம் அனைத்து இனங்களுக்கும் கட்டுப்பாடு இன்றித் திறந்து விடப்படவேண்டும். இருப்பினும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்து, குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை மேயராக வருவதற்கு வழி செய்யப்படலாம்.

உள்ளாட்சிகள் போதுமான நிதி ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை. எனவே எல்லா நேரத்திலும் அனைத்துத் தலைவர்களும் உள்ளாட்சிகளுக்குப் போதுமான வருவாயினங்களைப் பெருக்க ஏற்பாடு செய்தால் தான், உள்ளாட்சிகள் சுதந்திரமாகச் செயல்பட முடியும் என்று வற்புறுத்தி வருகின்றனர். ஆனால் எவ்வாறு நிதி அளவினை உயர்த்தலாம் என்பது பற்றி அவர்கள் மிகுதியாகச் சிந்திக்கவில்லை. உதாரணமாக, தமிழகத்தில் 102 நகராட்சிகள் உள்ளன. இவை கிட்டத்தட்ட 75 கோடி ரூபாய்களைப் பணிகள் செய்வதற்குச் செலவு செய்கின்றன. இச்செலவில் மிகுதியான தொகை பணியாளர்களுக்கு ஊதியமாகப் போய்விடுகின்றது. உள்ளாட்சி வழங்கும் பணிகளில் திருப்தி அடைகின்றீர்களா? என்று ஓர் கேள்வி எழுப்பினால், பெரும்பான்மையோர் 'திருப்தி இல்லை' என்றே சொல்கின்றனர். நகராட்சியிலிருந்து மாநகராட்சியானால் அதிக வரிக்கு இலக்காகி விடுவோமே என்று உள்ளாட்சியின் உயர் அமைப்பைப் பெறுவதற்கே அஞ்சக் கூடிய நிலையில் உள்ளனர் மக்கள். இது உடனடியாக கவனிக்கப்பட

வேண்டும். தவிர, தமிழக அரசு (ஏப்ரல் 83) அறிவித்துள்ள நகராண்மை நிதி ஆணையம் (Municipal Finance Commission) வந்தால், பெரிய செலவுத் தொகைகளை இவ்வாணையத்தின் மூலம் பெற்றால், ஓரளவு உள்ளாட்சிப் பணிகளைச் செம்மையாகச் செய்ய முடியும்.

குறைந்த வருவாய், மிகுதியான செலவு இரண்டையும் சரிக்கட்ட முடியவில்லை என்று சுதந்திரத்திற்கு முன்னரே பாட்னா நகராட்சித் தலைவர் பதவியை விட்டு வந்தார் டாக்டர் இராஜேந்திர பிரசாத். ஏனெனில் மக்களுக்குப் பணியாற்ற உள்ளாட்சிகளைத் தேர்ந்தெடுத்து, பணி செய்தனர் நம்முடைய தலைவர்கள். சி. ஆர். தாஸ் கல்கத்தா மாநகராட்சித்தலைவராகவும் ஜவஹர்லால் நேரு அலகாபாத் நகராட்சியிலும், சர்தார் பட்டேல் அஹமதாபாத் நகராட்சியிலும், பெரோஜ் மேத்தா, கோகலே, விதல்பாய் பட்டேல் போன்றோர்கள் பம்பாய் மாநகராட்சியிலும் பணியாற்றியுள்ளனர். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் போதுமான நிதி வாய்ப்பு இருக்கவேண்டும், அப்படியில்லையேல் உள்ளாட்சி வேண்டியதில்லை என்று சொன்னார்கள் நமது தேசீயத் தலைவர்கள். ஆனால் இன்று உள்ளாட்சி புறக்கணிக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தோடு, அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அதிகமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ள போது, இதே மாநிலங்கள் ஏன் உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்களை வழங்க மறுக்கின்றன என்பது விடைகாண முடியாத புதிர். மாநிலங்கள் உள்ளாட்சிகள் போல் நடத்தப்படுகின்றன என்று உள்ளாட்சிகளை இழுக்காகப் பேசக்கூடிய நிலையும் இன்று உள்ளது. இந்த நிலையும் மாற வேண்டும். மக்களுக்குப் பணியாற்றுவது எந்நிலையினாலும் சமம், சிறந்தது என்ற எண்ணம் வளரவேண்டும்.

அனைத்து உள்ளாட்சிகளுக்கும் தேர்தல்கள் பல காலமாக நடத்தப்படவேயில்லை. அரசியலமைப்பில் மத்திய-மாநில அதிகாரங்கள் என்பதுபோல் உள்ளாட்சி-மாநில அதிகாரங்கள் எனச் சட்டபூர்வ அதிகாரங்களை உள்ளாட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஏனெனில் அரசியலமைப்பின்படி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தேர்தல்களைத்தள்ளிப் போடக்கூடாது என்று இருந்ததால்தான்

அஸ்ஸாமில் தேர்தல் நடந்தது. இது உள்ளாட்சிகளுக்கு அப்படியே பொருந்தாவிட்டாலும், உள்ளாட்சித் தேர்தல்கள் கட்டாயம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டுமென இருந்தாலென்ன?

உள்ளாட்சிப் பணிகள் செய்வதில் சில மாநில அரசாங்கத் துறைகளின் தொடர்பு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. ஆனால் அத்தொடர்புகள் நெருக்கமாக இல்லாமல் உள்ளன. உள்ளாட்சிகளுக்கும் அரசுத்துறைகளுக்குமிடையே போதுமான ஒருங்கிணைப்பு இல்லாமல் உள்ளது. உதாரணமாக, குடிநீர் வழங்கல், வடிகால் போன்ற பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தோடு செய்ய முழுமையான ஒருங்கிணைப்பு தொடரவில்லை. இதே போல் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், கிராமப்புறப்பணிகள் போன்ற துறைகள் உள்ளாட்சிகளின் ஒத்துழைப்பை நல்கி பொறியியல் பணிகளைக் கட்டுப்படுத்தி வருகின்றன. இவை சீரானனால்தான், உள்ளாட்சிப் பணிகளைச் செம்மையாக செய்யமுடியும். பொதுமக்களும் சீரான ஒத்துழைப்பை அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும். இதுவும் முக்கியமான அம்சமாகும்.

அசோக்மேத்தா குழு

ஊராட்சி அரசு நிறுவனங்கள் பற்றி ஆராய, 1977-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 12-ஆம் தேதி மத்திய அமைச்சரவைச் செயலகத் தீர்மானத்தின்படி ஒரு குழு அமைக்கப்பட்டது. இத்தீர்மானம் கிராமப்புற வளர்ச்சிக்கு அரசாங்கம் உயர்ந்த முன்னுரிமை வழங்க இணங்கி இருப்பதால், விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும், வறுமையை ஒழிக்கவும், கிராமப்புற பொருளாதாரத்தை வளப்படுத்தவும் அரசாங்கம் விரும்புகின்றது. இந்நோக்கங்களை அடைவதற்கு, திட்டமிடல் மற்றும் செயலாக்கம் போன்றவற்றில் உயர்ந்த அளவு அதிகாரப் பரவல் கொடுக்க அரசாங்கம் தீர்மானிக்கின்றது. மாநில அரசாங்கங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆசியவற்றின் ஆலோசனைக்குப் பின்னர், ஊராட்சி அமைப்புக்கள் செயல்படும் விதங்களை ஆராய்ந்து, அவ்வமைப்புக்களைப் பலப்படுத்தும் வகையில் கருத்துக்கள் கூற ஒரு குழு அமைக்கப்படும். இதன் மூலம் அதிகாரப்பரவல் முறைமையினால், திட்டமிடலும், வளர்ச்சியும் செம்மையாக அமையுமென நம்புகின்றது. இக் குழுவில் உள்ளவர்கள் பின்வருமாறு :-

1. திரு. அசோக் மேத்தா — தலைவர்
2. திரு. கர்பூரி தாகூர் — பீகார் முதல்வர்
3. திரு. பிரகாஷ் சிங் பாதல் — பஞ்சாப் முதல்வர்
4. திரு. எம். ஜி. இராமச்சந்திரன் — தமிழ்நாடு முதல்வர்
5. திரு. பி. சிவராமன், திட்ட ஆணைய உறுப்பினர்

6. திரு. மாங்கால் டியோ, பாராளுமன்ற உறுப்பினர்

7. திரு. குன்வார் முகம்மது அலி கான், பாராளுமன்ற உறுப்பினர்

8. திரு. அன்னசாஹிப் பி. ஷிண்டே, பாராளுமன்ற உறுப்பினர்.

9. திரு ஈ.எம்.எஸ் நம்பூதிரிபாடு, திருவனந்தபுரம்

10. திரு. எஸ். கே. டே, புதுடில்லி

11. திரு சித்தாராஜ் தாடா, ஜெய்பூர்

12. பேராசிரியர் இக்பால் நாராயண், இராஜஸ்தான் பல்கலைக் கழகம், ஜெய்பூர்.

13. திரு. வல்லபாய் பட்டேல், ஜில்லா பஞ்சாயத்துத் தலைவர், இராஜ்காட்.

இக்குழு கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. அவை வருமாறு:

1. ஊராட்சி அமைப்புக்கள் மாவட்டத்திலிருந்து கிராம மட்டம் வரையிலும் செயல்படுகின்ற விதத்தைப் புனராய்வு செய்து, குறைபாடுகளையும், தவறுகளையும் அறிந்து தெரியப்படுத்த வேண்டும். மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்படுகின்ற இந்த மக்களாட்சி அதிகாரப் பரவல் குறித்து ஆராயவேண்டும். இது குறிப்பிட்ட வகையில்,

   அ) மூலப் பொருட்களைப் பயன்படுத்துதல்

   ஆ) கிராமப்புற வளர்ச்சியின் நோக்கங்களுக்காகத் திட்டமிடலும், இத்திட்டங்களைச் செயல்படுத்துவதும், சமுதாயத்தின் நலிந்த மக்களின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு ஆராயவேண்டும்.

2. இது ஊராட்சி அமைப்புக்கள் அமைக்கும் விதம் பற்றி ஆராய அமைக்கப்பட்டது. இது தேர்தல் முறை பற்றியும், ஊராட்சி அரசு முறைமை திறமையாகச் செயல்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்யவேண்டும்.

3. ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சியை எதிர்காலத்தில் செயல்படுத்தும் வகையில், ஊராட்சி அமைப்புக்களின் வேலைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும்,

4. ஊராட்சி அமைப்பு முறைமையைத் திருத்தி அமைக்கவும், இவற்றில் காணப்படுகின்ற குறைகளையும், தவறுகளையும் நீக்கி, எதிர்காலத்தில் தங்களுடைய நோக்கங்களைச் செம்மையாகச் செயல்படுத்தும் வகையில் அமையவும்,

5. ஊராட்சி அமைப்புக்களும் மற்றும் பிற நிருவாக அமைப்புகளுக்கும், கூட்டுறவு, தன்னிச்சை நிறுவனங்கள் போன்றவற்றில் அமைக்கவிருக்கும் தொடர்புகள் குறித்துப் பரிந்துரைகள் கூறவும்,

6 ஊராட்சி அமைப்புக்கள் தங்களது கடமைகளை, பொறுப்புக்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்குப் போதுமான நிதிவகை சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் குறித்துமாக, பரிந்துரைகள் கூறவும் இக்குழு அமைக்கப்பட்டது.

இக்குழு ஆகஸ்ட் மாதம் 1978-ஆம் ஆண்டில் தனது அறிக்கையை மத்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அதன் பரிந்துரைகள் பற்றிச் சிறிது காண்போம்.

வளர்ச்சிப் பணிகள் அதிகரித்துக் கொண்டு வருவதால், அவற்றைச் செய்வதற்குரிய தொழில் நுட்பத் திறமை மாநிலங்களின் பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் கிடைக்கும்படியாகச் செய்ய, மாவட்டம் பொருளாதாரத் திட்டமிடலுக்கு அடிப்படையாக அமைய வேண்டும். மாவட்டத்திற்குக் கீழ், பல கிராமங்களை ஒன்றாக இணைந்து குழுவாக இயங்கும் மண்டல ஊராட்சிகள் ஏற்படுத்த வேண்டும். எனவே மாவட்ட அளவில் மாவட்ட அமைப்பும், அதற்குக் கீழ் மண்டல ஊராட்சிகள் என்ற இரண்டு படிநிலை முறையைப் பரிந்துரைத்துள்ளது. மண்டல ஊராட்சிகளில் 15,000 பேர்கள் முதல் 20,000 பேர்கள் இருக்க முடியும். செயல்திட்டங்கள் முழுமையாகக் கிராமங்களை நம்பித் தீட்ட வேண்டியதில்லை. பல கிராமங்களுக்குப் பொதுவான செயல் திட்டங்களைத் தீட்டலாம். மக்கள் பிரதிநிதிகள் இச்செயல் திட்டங்

களைச் சீராகக் கண்காணிக்க முடியும். இதனால் வளர்ச்சிப் பணிகளைத் திறமையாகச் செய்யலாம்.

ஊராட்சி அமைப்புக்களின் தேர்தல்கள் மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியால் தலைமைத் தேர்தல் ஆணையாளர் ஆலோசனையுடன் நடத்தப்படவேண்டும். மாநில அரசாங்கங்கள் ஊராட்சி அமைப்புக்களைப் பட்சபாதகமாகத் தள்ளுபடி செய்யக் கூடாது. அவ்வாறு தள்ளிவைத்தால், ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஊராட்சித் தேர்தல்களைக் காலந்தாழ்த்த வோ, தள்ளி வைக்கவோ கூடாது. ஊராட்சித் தேர்தல்களில் அரசியல்கட்சிகள் பங்கு ஏற்றால், வளர்ச்சித் திட்டங்கள் அரசியல் கட்சிகளின் ஆர்வங்களுக்கேற்பச் செம்மையாகச் செயல்படுத்தப் படும். இதனால் செயல்திட்டங்களால் தேசீய அளவில் அமையக் கூடிய தொடர்பு ஏற்படும். செயல் திட்டங்களின் அடிப்படையில் நேரடித் தேர்தல்கள் நடைபெறுமாயின், நலிந்த சமுதாயம் வளர வாய்ப்புக்கள் அதிகமாகும்.

மாவட்டங்கள் சில மிகப்பெரியதாக இருப்பதால் திட்டங்கள் வரையறுக்கமுடியாத நிலையில் உள்ளன. எனவே சிறிய அளவு மாவட்டங்கள் விரும்பத்தக்கன. மாவட்ட அமைப்பிற்கு நிருவாகத் தலைவர் தலைமைச் செயலாக்க அதிகாரியாக இருக்க வேண்டும். இவருக்குக் கீழ் எல்லா வளர்ச்சிப் பணியாளர்களும் இருக்கவேண்டும். இவர் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர்ந்து சட்டம், ஒழுங்கு மற்றும் வருவாய் ஆகிய பணிகளுக்கும் மாநில அரசாங்கம் நேரத்திற்கு நேரம் ஒதுக்கும் பணிகளைச் செய்யும் பொறுப்புப் பெற்றவராகவும் இருக்கவேண்டும். ஊராட்சி அமைப்புகளுக்கென தனியாக ஓர் அமைச்சர் நியமிக்கப்படவேண்டும். ஊராட்சி அமைப்புக்களின் மொத்தத் தொகுப்பு நிதிக் கணக்குகளை சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்க ஒவ்வொரு மாநிலமும் முயற்சி செய்ய வேண்டும்.

கிராமப்புற வளர்ச்சி, ஊராட்சி அரசாங்கம் ஆகியவை குறித்து அசோக் மேத்தா குழு கூறியுள்ள பரிந்துரைகளைக் கண்டோம். இவை குறித்து 1979-ஆம்ஆண்டு ஏப்ரல்மாதம் 23-ஆம்தேதி

வரையிலுமாக, 9 மாநிலங்களும், 2 யூனியன் பிரதேசங்களும் அனுப்பியுள்ள கருத்துக்களிலிருந்து இந்த அறிக்கையை அவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிய வருகிறது. 6 மாநிலங்களும் ஒரு யூனியன் பிரதேசமும் இப்போதுள்ள மூன்றடுக்கு ஊராட்சி முறையை ஆதரிக்கின்றன. மொத்தத்தில் எட்டு மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் வட்டார ஊராட்சியை அதாவது நடு அடுக்கு (middle tier) ஊராட்சி ஒன்றியத்தை ஆதரிக்கின்றன; ஊராட்சியின் தேர்தல்கள் அரசியல் கட்சி அடிப்படையில் நடைபெறுவதை ஆதரிக்கின்றன. மாவட்ட மன்றங்களுக்கு மட்டுமே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஒரு மாநிலம் கூறியிருக்கிறது. கட்சி அடிப்படையில் தேர்தல்கள் நடத்துவதை நான்கு மாநிலங்களும் ஒரு யூனியன் பிரதேசமும் எதிர்த்துள்ளன. இரண்டு மாநிலங்களும் ஒரு யூனியன் பிரதேசமும் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. வருவாய் ஆதாரங்களை ஊராட்சி அமைப்புக்களிடம் ஒப்படைப்பதையும் மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் ஆதரிக்கின்றன. குழுவின் அறிக்கையில் பரிந்துரைத்துள்ளபடி பொறுப்புக்களை ஊராட்சி அமைப்புக்களிடம் மாற்றவேண்டும் என்று நான்கு மாநிலங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

பின்னர் 1979-ஆம் ஆண்டு மே மாதம் 20,21 ஆகிய தேதிகளில் மாநில முதலமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் அசோக்மேத்தா குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப் பட்டன. இம்மாநாட்டினைப் பிரதம அமைச்சர் கூட்டினார். ஊராட்சி அமைப்பு. நியாய ஊராட்சிகள், ஊராட்சிகளுக்கு உரிய அந்தஸ்தையும், அங்கிகாரத்தையும் வழங்குவதற்காக அரசியலமைப்பைத் திருத்துவது ஆகியவை பற்றி குழு செய்திருந்த சில முக்கிய பரிந்துரைகளை மாநாடு ஒப்புக் கொள்ளவில்லை, ஊராட்சித் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் கலந்து கொள்வது பற்றியும் முதலமைச்சர்களிடம் கடுமையான கருத்து வேற்றுமை காணப்பட்டது. ஊராட்சிகளுக்கு அந்தஸ்தையும், அங்கீகாரத்தையும் அளிக்க அரசியலமைப்பைத் திருத்துவது பற்றிய குழுவின் பரிந்துரையை மாநாடு புறக்கணித்தது. இதற்காக மாதிரி மாநிலச் சட்டத்திற்கு வழிமுறைகளை வகுப்பதற்காக முதலமைச்சர்களடங்கிய ஒரு சிறிய குழுவை அமைப்பது என்று

மாநாடு முடிவு செய்தது. குழுவின் அறிக்கை மீது விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய பிரதமர், ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்களும், போதுமான நிதி வசதிகளும் அளிக்கப்படவேண்டும் என்று கூறினார். திறமையான ஊராட்சி முறை கிராமங்களுக்கு நம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்று பிரதமர் கூறினார். இரண்டு மாநிலங்களில் நிலம், நிலவரி ஊராட்சிகளுக்கு மாற்றப் பட்டுள்ளது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். ஊராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்று அரசியல் கட்சிகள் உடன் பாட்டுக்கு வரவேண்டுமென்றும், கோஷ்டிப்பூசல் இல்லாத ஊராட்சி முறை கிராமத்தின் ஒருமைப்பாட்டுக்கும், இறுதியில் நாட்டின் ஒருமைப் பாட்டுக்கும் வழிகோலும் என்று அவர் கூறினார். கைகளைத் தூக்கி விருப்பத்தைத் தெரிவிக்கும் முறையில் தேர்தல்கள் நடத்துவது இதற்கான வழிகளில் ஒன்று என்றும், தேர்தல் முறையைச் செலவில்லாததாக்குமெனவும் அவர் கூறினார்.

ஊராட்சி அரசு நிறுவனங்களின் அமைப்பு பற்றிக் கடுமையான கருத்து வேற்றுமை காணப்பட்டது. அசோக் மேத்தா குழு இரட்டை அடுக்கு முறையைப் பரிந்துரைத்து உள்ளதென்பதை அறிவோம். இதைப் பெரும்பாலான முதலமைச்சர்கள் எதிர்த்தனர். இப்போது இருப்பது போல் கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சி ஒன்றியம், மாவட்ட வளர்ச்சி மன்றம் ஆகியவை இருப்பதை ஆதரித்தனர். இரண்டு அடுக்கு முறைமை நல்லது என்று கருதும் மாநில்ங்கள் அவற்றை வைத்துக் கொள்ளலாம்-என்று மாநாடு கருத்துத் தெரிவித்தது. ஊராட்சித் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் கலந்து கொள்வது பற்றியும் கருத்து வேற்றுமை கடுமையாயிருந்தது. மேற்கு வங்காளம், கேரளா, திரிபுரா, இராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் இத்தேர்தல்களில் அரசியல் கட்சிகள் கலந்து கொள்வதை ஆதரித்தன. ஓரளவு கலந்து கொள்வதை ஆந்திரப்பிரதேசம், குஜராத் ஆகியவை ஆதரித்தன. அரசியல் கட்சிகள் கலந்துகொள்வதை ஹரியானா, பஞ்சாப், கர்நாடகம், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ஹிமாசலப் பிரதேசம், கோவா, சிக்கிம், டில்லி ஆகியவை எதிர்த்தன. நியாய ஊராட்சிகள் பற்றி குழு கூறிய பரிந்துரைகளை மாநாடு நிராகரித்தது. பஞ்சாப், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், காஷ்மீர் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்-

களைத் தவிர பிற மாநிலங்களின் முதல்மந்திரிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர். இம்மாநிலங்களின் சார்பாக இவற்றின் நிதிமந்திரிகள் கலந்து கொண்டனர்.

சிறுபான்மையோர்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டுமென்பதை எல்லா மாநில முதலமைச்சர்களும் ஏற்றுக் கொண்டனர்; அதே நேரத்தில், இதற்கு முன்னதாக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்ற காரணத்தால், இந்த விஷயத்தில் விழிப்பாக இருக்க வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொண்டனர்.

தற்போது கர்நாடக மாநிலம் இரண்டு அடுக்குமுறையை நடைமுறைப் பயன்படுத்தியுள்ளது.

தமிழக உள்ளாட்சித் தேர்தல்

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் 1970-ஆம் வருடத்திற்குப் பிறகு 16 வருடங்களுக்குப் பின்னர் 1986-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் தேதி நடைபெற்றது. மூன்று கோடி வாக்காளர்கள் இத்தேர்தலில் பங்குபெற்றனர். அரசாங்கம் வாக்களிக்கும் வயதினை 21-லிருந்து 18 ஆகக் குறைத்ததால், ஏராளமான புதிய, இளம் வாக்காளர்கள் இத்தேர்தலில் பங்குபெற முடிந்தது. 65 விழுக்காடு வாக்காளர்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். மாநகராட்சிகள் நீங்கலாக, நகராட்சிகள், நகர ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றிற்கான தேர்தல் நடைபெற்றது. 12610 ஊராட்சிகளுக்கும், 97 நகராட்சிகளுக்கும், 380 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், 626 நகர ஊராட்சிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. அரசியல் கட்சிகள் நேரடியாகப் பங்குபெறுகின்ற வகையில், கட்சிச்சின்னங்கள் மூலமாகத் தேர்தல் நடைபெற்றது. நகராட்சித் தலைவர், நகர ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆகியோர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையும் கொண்டு வரப்பட்டது. எனவே அரசியல் கட்சிகளும் தங்களது செல்வாக்கினை நிலைநாட்டும் வகையிலும், செல்வாக்கை வெளிப்படுத்தும் வகையிலும் போட்டி கடுமையாக இருந்தது.

மத்திய ஆளும் கட்சியான இந்திரா காங்கிரசு கட்சியும் தமிழக ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் கூட்டாக 32 விழுக்காடு 68 விழுக்காடு என்ற அளவில் தேர்தல் ஒப்பந்தங்கொண்டு இடங்களைப் பகிர்ந்து போட்டியிட்டனர். தமிழக முக்கிய எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம், வலது கம்யூனிஸ்டு, முஸ்லீம் லீக், இ.கம்யூனிஸ்டு. ஆகிய கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டது. ஜனதா கட்சி எந்தக் கட்சியுடனும் சேராமல் தனித்து போட்டியிட்டது. தமிழகத்திலுள்ள 382 ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு ஒன்றியங்களுக்குத் தேர்தல்

ஆடு 24&3 ஆ

நடைபெறவில்லை. திராவிட முன்னேற்றக்கழகம் 320, அ.தி.மு.க. 234, இ.காங். 141 ஆகிய இடங்களில் போட்டியிட்டன. இப்போட்டியில் திமுக 138, அதிமுக 129, இ காங் 68 ஆகிய இடங்களிலும், ஜனதா கட்சி 3, இ.க. 6, வ.க. 7, சுயேட்சைகள் 29 இடங்களிலும் வெற்றி பெற்றன. ஊராட்சித் தலைவர் பதவிக்கும் 3628 இடங்களில் நேரடிப் போட்டி நடைபெற்றது. 1611 இடங்களில் ஊராட்சித் தலைவர்கள் போட்டியில்லாமலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது ஒரு சிறப்பு அம்சம். ஊராட்சித் தலைவர் பதவிக்கு 266 பெண்களும், ஊராட்சி உறுப்பினர் பதவிக்கு 9652 பெண்களும் போட்டியிட்டனர். 73, 604 ஊராட்சி உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்வு பெற்றனர். 1.46 இலட்ச உறுப்பினர்கள் மொத்தம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். அதே சமயம் 1105 வார்டுகளில் எவருமே வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவில்லை. 192 இடங்களில் அ.தி.மு.க. ஊராட்சித் தலைவர் பதவிக்கு நேரடியாகப் போட்டியிட்டது.

நகராட்சித் தலைவர் தேர்தலில் 97 நகராட்சிகளில், 85 நகராட்சிகளில் போட்டியிட்ட தி.மு.க. 64 இடங்களையும், 59 இடங்களில்போட்டியிட்ட அதிமுக 11 இடங்களிலும், 39 இடங்களில் போட்டியிட்ட இ. காங்கிரசு 11 இடங்களையும், ஜனதா 2 இடங்களையும், இ. கம் 4, முஸ்லிம் லீக் 1 இடத்தையும், சுயேட்சைகள் 4 இடங்களையும் கைப்பற்றின. 582 பேர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டனர். இதில் 11 பேர்கள் பெண்களாவர். 2676 நகராட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள்.

நகர ஊராட்சிகளைப் பொறுத்தவரை 626 இல் அதிமுக 359 இ. காங் 236, திமுக 427 நகர ஊராட்சிகளிலும் போட்டியிட்டன. இதில் 2531 பேர்கள் போட்டியிட்டனர். திமுக 184, அதிமுக 120, இ. காங் 89, இ.கம் 23, வ. கம் 11, பி. ஜே. பி. 2, சுயேட்சைகள் 181 ஆகிய இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

நகராட்சியின் பதவிக்காலத்தையும் ஐந்தாண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைத்துள்ளது தமிழக அரசாங்கம்.

நியமன உறுப்பினர்கள் சம்பந்தமாக தற்போது ஒரு பிரச்சனை எழுந்துள்ளது. இது அரசியல்கட்சி அடிப்படையில் தேர்தல்

நடந்ததால் எழுந்த பிரச்சனையெனலாம். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை, 12 ஊராட்சிகள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குள் இருந்தால் 1 பெண் உறுப்பினரையும், 1 தாழ்த்தப்பட்ட/ பழங்குடி உறுப்பினரையும் கூட்டு நியமன உறுப்பினர்களாக நியமிக்கப் படலாம். 12லிருந்து 20 ஊராட்சிகளெனில், மூன்று பெண்களுக்கும் மூன்று தாழ்த்தப்பட்ட / பழங்குடி உறுப்பினர்களும் கூட்டு நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்படலாம். 20க்கு மேற்பட்ட ஊராட்சிகளிருந்தால் 5 பெண்களும், 5 தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களும் நியமிக்கப்படலாம். இவ் உறுப்பினர்களில் சிலரை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிப்பாரென அரசு முடிவு செய்துள்ளது. இது ஊராட்சி ஒன்றிய உதவித்தலைவர் தேர்தலில் பெரும் விளைவை ஏற்படுத்தக் கூடியதாக அமையுமென்று எதிர்ப்புக்கள் தோன்றியுள்ளன. இது தொடர்பாக, நீதிமன்றமும் இடைக்காலத்தடை விதித்துள்ளது. ஏனெனில் பலமிகுந்த ஊராட்சி ஒன்றியங்கள், நியமன உறுப்பினர்களால் பலமிழந்து விடலாமென அஞ்சப்படுகிறது. எனவே இதுவும் அரசியல் கட்சிகள் சார்பாக தேர்தல் நடைபெற்றதால் உள்ள விளைவு. மக்களாட்சியில் மக்களுக்கு டணியாற்றக் கூடிய அடிப்படை அலகான உள்ளாட்சியில் அரசியல் கட்சி பங்கேற்பு இருக்கக்கூடாதென்பதை மக்கள் இப்போது உணர்ந்துள்ளனர்.

கலைச் சொற்கள்

Appeal Committee	—	முறையீட்டுக் குழு
Associate member	—	சார்பு உறுப்பினர்
Block	—	வட்டாரம்
Block Development Officer	—	வட்டார வளர்ச்சி அதிகாரி
Board	—	வாரியம்
Casting vote	—	முடிவு செய்யும் வாக்குரிமை
Centralisation	—	அதிகாரக் குவியல்
Cess	—	தீர்வை
Commissioner	—	ஆணையாளர்
Community development	—	சமுதாய வளர்ச்சி
Co-option	—	கூட்டு நியமனம்
Corporation	—	மாநகராட்சி
Council	—	மன்றம்
Decentralisation	—	அதிகாரப்பரவல்
Delegation	—	ஒப்படைப்பு
Discretionary service	—	விருப்பப்பணி
Ex-officio	—	பதவி அடிப்படையில் அல்லது தன்மையில்
Federal	—	கூட்டாட்சி
Governor-in council	—	ஆளுநர்குழு
Initiative	—	பூர்வாங்க முயற்சி
Matching grant	—	இணை மானியம்
Memorandum	—	நினைவூட்டு
Municipality	—	நகராட்சி
Non-official	—	அலுவலர் அல்லாத
Obligatory service	—	கட்டாயப்பணி
Panchayat	—	ஊராட்சி
Panchayat union	—	ஊராட்சி ஒன்றியம்
Personnel administration	—	பணியாளர் குழாம் நிர்வாகம்
Recall	—	திரும்ப அழைத்தல்
Referendum	—	மக்கள் வாக்கெடுப்பு
Royal Commission	—	அரசுரிமை ஆணையம்
Standing committee	—	நிலைக் குழு
Statutory	—	சட்டரீதியான
Taluk Boards	—	வட்ட வாரியங்கள்
Town Panchayat	—	பேரூராட்சி
Townships	—	நகரியங்கள்
Union of Panchayats	—	ஒன்றிய ஊராட்சிகள்
Unitary	—	ஒருமுக ஆட்சி.

(பக்.11. சேலம் நகராட்சி 1857ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.)